VĀGBHAṬA'S

# AṢṬĀÑGA HṚDAYAM

(TEXT, TAMIL TRANSLATION NOTES, APPENDIX AND INDICES)



CENTRAL COUNCIL FOR RESEARCH IN AYURVEDA AND SIDDHA

VĀGBHAṬA'S

# AṢṬĀÑGA HṚDAYAM

(With Commentaries and Tamil Translation)

# CIKITSĀ STHĀNAM

# [PART - 2] &

# KALPA STHĀNAM


Translators :

Dr. V. S. VENKATASUBRAMANYA SASTRI

Dr. T. P. SUNDARESAN

Pulavar Thiru. RAMALINGAM PILLAI

Editors :

Dr. T. V. VARADARAJAN

Dr. P. P. N. BHATTATHIRI



Central Council for Research in Ayurveda and Siddha

(J. N. B. C. H. Anusandhan Bhavan)

61-65, Institutional Area,

Opp. 'D' Block,

Janak Puri, New Delhi - 110 058

First Edition : 2002

All Rights Reserved

Copies : 1000

Central Library of Indian Medicines &

**Price : Rs.**

Printed at :

**Elango Achukoodam,**
166, Royapettah High Road,
Mylapore, Chennai - 600 004.
Phone : 499 1821

வாக்படரின்

# அஷ்டாங்க ஹ்ருதயம்

(தமிழ் மொழிப் பெயர்ப்பும், உரையும்)

## சிகித்ஸா ஸ்தானம்

[ இரண்டாம் பாகம் ] &

## கல்ப ஸ்தானம்

VOL-IV

மொழிப் பெயர்ப்பாளர்கள் :

Dr. V. S. வேங்கடசுப்ரமண்ய சாஸ்திரி

Dr. T. P. சுந்தரேசன்

புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை

பதிப்பாசிரியர்கள் :

Dr. T. V. வரதராஜன்

Dr. P. P. N. பட்டத்திரி

கேந்திரீய ஆயுர்வேத - சித்த அனுஸந்தான் பவன்

(ஜ. நே. பா. சி. - ஹோ. அனுஸந்தான் பவன்)

61-65, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா,

(D. பிளாக் எதிரில்)

ஜனக்புரி, புது தில்லி - 110 058.

முதல் வெளியீடு : 2002

உரிமை : பதிவு பெற்றது.

பிரதிகள் : 1000

விலை. ரூ. 220/-

அச்சிட்டோர் :

இளங்கோ அச்சுக்கூடம்
166, இராயப்பேட்டை ஹைரோடு,
மைலாப்பூர், சென்னை - 600 004.
தொ. பே. எண் : 499 1821

# பொருளடக்கம்

## சிகித்ஸா ஸ்தானம் - இரண்டாம் பாகம்

முகவுரை ஆங்கிலம் & தமிழ்

பதிப்புரை ஆங்கிலம் & தமிழ்

### அத்தியாயம் - 12


| எண் : | | பக்கம் |
|---|---|---|
| 1. | கபப் பிரமேகம், பித்தப் பிரமேகம், உணவு | 406,407 |
| 2. | தான்வந்தர கிருதம், லோத்ராஸவம் | 410,411 |
| 3. | அயஸ்க்ருதி, பிரமியக்கட்டிகளுக்குச் சிகித்ஸை | 413,416 |


### அத்தியாயம் - 13


| | | |
|---|---|---|
| 4. | வாத வித்ருதி விரணத்திற்குச் சிகித்ஸை | 419 |
| 5. | பித்த, கப வித்ருதி விரணத்திற்குச் சிகித்ஸை | 420 |
| 6. | உட்புறக் கட்டிக்கு சிகித்ஸை | 421 |
| 7. | திராயந்த்யாதி கஷாயம், திராயந்த்யாதி கிருதம் | 422,423 |
| 8. | ரத்தம் வெளியேற்றுதல் | 424 |
| 9. | கோஷ்டத்தில் உண்டான வித்ருதிக் கட்டி | 425 |
| 10. | குக்கில் உபயோகம், மார்பக வித்ருதி | 427,428 |
| 11. | வாயுவால் உண்டான அண்ட விருத்தி | 428 |
| 12. | பித்தம் - ரத்தம் இவற்றால் அண்ட விருத்தி | 430 |
| 13. | கபத்தால் உண்டான அண்ட விருத்தி | 430 |
| 14. | கொழுப்பால் உண்டான அண்ட விருத்தி | 431 |
| 15. | சிறுநீரால் உண்டான அண்ட விருத்தி | 432 |
| 16. | குடல் இறக்கம் காரணமான அண்ட விருத்தி | 432 |
| 17. | சுகுமார கிருதம் | 433 |


### அத்தியாயம் - 14


| | | |
|---|---|---|
| 18. | வாதகுன்ம சிகித்ஸை, வியர்வை உண்டாதல் | 436 |
| 19. | இடத்திற்கேற்ப சிகித்ஸை | 437 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 20. | குன்ம நோயில் பஸ்தியின் சிறப்பு | 438 |
| 21. | ஹிங்க்வாதி, ஹபுஷாதி கிருதம் | 438,439 |
| 22. | தாதிகம், லகனாதி கிருதம் | 440,442 |
| 23. | ஷட்பல கிருதம் | 443 |
| 24. | வாத குன்மத்தில் வாந்தி செய்வித்தல் | 444 |
| 25. | ஹிங்குவசாதி, வைச்வாநர சூர்ணம் | 445,446 |
| 26. | ஹிங்க்வஷ்டக, சார்தூல, நாராச சூர்ணம் | 446,447 |
| 27. | ஹிங்குத்திரிகுண தைலம், நீலினீ கிருதம் | 448,453 |
| 28. | உணவும்-பானமும், பித்த குன்மத்தில் விரேசனம் | 454 |
| 29. | பித்த குன்மத்தில் உணவும்-பானமும் | 458 |
| 30. | கப குன்மம், சேங்கொட்டை நெய் | 459,460 |
| 31. | மிச்ரக ஸ்னேஹம், தந்தீஹரீதகி லேஹம் | 463,464 |
| 32. | க்ஷாராகதம், க்ஷாரத்தின் பெருமை | 467 |
| 33. | உணவு-பானம், ரத்த குன்மம் | 468,471 |
| 34. | ரத்தம் வெளியேறும் நிலையில் | 473 |

## அத்தியாயம் - 15

| | | |
|---|---|---|
| 35. | விரேசனங்கள், கிருத பானம், கிருத யோகம் | 475,476 |
| 36. | படோலாதி, நாராயண சூர்ணம் | 479,480 |
| 37. | ஹபுஷாதி சூர்ணம் | 482 |
| 38. | உதர நோயில் மேல் பூச்சு, நனைத்தல் | 489 |
| 39. | வாதோதர, பித்த உதர சிகித்ஸை | 490,493 |
| 40. | கப உதர, ஸன்னிபாத உதர சிகித்ஸை | 495,498 |
| 41. | மண்ணீரல் உதர சிகித்ஸை | 501 |
| 42. | மலவழித்தடை உதர, ஜலோதர சிகித்ஸை | 506,508 |
| 43. | உதர நோயாளி நீக்க வேண்டியவை | 514 |
| 44. | உதர நோயில் மோர் பருகும் முறை | 515 |
| 45. | மோரின் தன்மை | 516 |

எண் | பக்கம்

## அத்தியாயம் - 16


46. நவாயஸம், மண்டூர வடகம் 521,522
47. யோகராஜ வடகம் 523
48. வஜ்ர வடகம் - சிலாஜது வடகம் 525
49. திராக்ஷாதி லேஹம், பத்யா கிருதம் 526,530
50. காமாலைக்கு அஞ்ஜனம், 532
51. கும்பகாமாலை, ஹலீமக சிகித்ஸை 534


## அத்தியாயம் - 17


52. தசமூல ஹரீதகி, உணவும், பானமும் 542,543
53. தனி உறுப்பு சம்பந்தப்பட்ட வீக்கம் 546
54. வாயுவால் உண்டான வீக்கத்திற்குச் சிகித்ஸை 546
55. பித்தத்தால் உண்டான வீக்கத்திற்குச் சிகித்ஸை 547
56. கபத்தால் உண்டான வீக்கத்திற்குச் சிகித்ஸை 549
57. தனி உறுப்பு வீக்கத்திற்குச் சிகித்ஸை 550
58. ஸன்னிபாத வீக்கத்திற்குச் சிகித்ஸை 551
59. வீக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை 552


## அத்தியாயம் - 18


60. வாந்தி, விரேசனம் செய்வித்தல், சமன ஔஷதம் 553,554
61. ரத்த வெளியேற்றம், நெய் உபயோகம் 555,556
62. வாத, பித்த, கப விஸர்ப்பத்தில் லேபம் 557,559
63. அக்னி, கிரந்தி விஸர்ப்பச் சிகித்ஸை 561


## அத்தியாயம் - 19


64. வாத குஷ்டத்திற்குச் சிகித்ஸை 567
65. திக்த கிருதம், மகாதிக்தம் 568,570
66. கப குஷ்ட சிகித்ஸை, வஜ்ரக கிருதம் 571,573

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 67. | மஹாவஜ்ரக கிருதம், ஏற்ற-ஏற்கா உணவும் | 573,575 |
| 68. | மாணிபத்ரம், நிசோத்தமாதி கஷாயம் | 577,579 |
| 69. | ஸப்தஸம குளிகை, சந்த்ர சகலாதி வடகம் | 581 |
| 70. | நிம்பாதி சூர்ணம் | 588 |
| 71. | வஜ்ரக் தைலம், மகாவஜ்ரக தைலம் | 593 |


## அத்தியாயம் - 20


| | | |
|---|---|---|
| 72. | பால் பக்குவம் செய்யும் முறை | 603 |
| 73. | கிருமி நோய்க்குச் சிகித்ஸை | 607 |


## அத்தியாயம் - 21


| | | |
|---|---|---|
| 74. | வாத நோய்ச் சிகித்ஸை | 613 |
| 75. | வியர்ப்பித்தலின் குணம் | 615 |
| 76. | அபதானகச் சிகித்ஸை, தில்வக கிருதம் | 623,626 |
| 77. | ஆயாமச் சிகித்ஸை | 628 |
| 78. | தாடை நழுவிய நோய், தொடை தம்பித்தல் | 629,631 |
| 79. | ராஸ்னாதி, குக்கிலுதிக்த கிருதம் | 635 |
| 80. | பிரஸாரிணி, ஸஹஸராதி தைலம் | 638,639 |
| 81. | பலா தைலம் | 642 |


## அத்தியாயம் - 22


| | | |
|---|---|---|
| 82. | வாத ரக்தச் சிகித்ஸை, ரத்தம் வெளியேற்றுதல் | 644,645 |
| 83. | ரத்த வெளியேற்றம் தவிர்க்க வேண்டிய நிலை | 645 |
| 84. | பித்தவாத ரத்தச் சிகித்ஸை | 648 |
| 85. | கபம் அதிகரித்த வாதரத்த நோய்ச் சிகித்ஸை | 650 |
| 86. | ஆரனாள, பிண்ட தைலம் | 652,653 |
| 87. | கபம் அதிகரித்த வாத ரத்த நோய் | 658 |
| 88. | மதுயஷ்டி, பலா தைலம் | 660,661 |
| 89. | ஆவரண சிகித்ஸை, உள்ளிப் பிரயோகம் | 664,671 |


*****

# பொருளடக்கம்

## கல்பஸ்தானம்

### அத்தியாயம் - 1


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | மலங்காரைக் காயை சேமித்தல், பிரயோக முறை | 675,677 |
| 2. | விசேஷமாக வாந்தி செய்விக்க வேண்டிய நோய் | 677 |
| 3. | தேவதாளிப் பீர்க்குக் கல்பம் | 682 |
| 4. | கசப்புச்சுரை கல்பம், யானைப்பீர்க்கு கல்பம் | 684,687 |
| 5. | கசப்புப் பீர்க்கு, வெட்பாலையரிசி கல்பம் | 689,690 |


### அத்தியாயம் - 2


| | | |
|---|---|---|
| 6. | சிவதை கல்பம், சிவதையின் இரு வகை | 692,693 |
| 7. | சேகரிக்கும் முறை | 694 |
| 8. | வாத நோயில் உபயோகிக்கும் முறை | 694 |
| 9. | பித்த நோயில் உபயோகிக்கும் முறை | 695 |
| 10. | கப நோயில் உபயோகிக்கும் முறை | 695 |
| 11. | சிவதை லேஹம், கல்யாண குடம் | 695,698 |
| 12. | அவிபத்தி குளிகை | 699 |
| 13. | மழைக் காலத்தில் உபயோகிக்கும் முறை | 700 |
| 14. | இலையுதிர் காலத்தில் உபயோகிக்கும் முறை | 700 |
| 15. | முன்பனிக் காலத்தில் உபயோகிக்கும் முறை | 700 |
| 16. | முதுவேனிற் காலத்தில் உபயோகிக்கும் முறை | 700 |
| 17. | எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற விரேசனம் | 701 |
| 18. | வறட்சியுள்ளவருக்கும் விரேசனம் | 701 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 19. | கொன்றைக் கல்பம் | 702 |
| 20. | சரக்கொன்றையைச் சேகரிக்கும் முறை | 703 |
| 21. | லோத்திக் கல்பம், கள்ளி | 704,706 |
| 22. | சங்கு வெள்ளி துராய் இவற்றின் கல்பம் | 707 |
| 23. | நாகதந்தீ-எலியால் இவற்றின் கல்பம் | 709 |
| 24. | கடுக்காய் கல்பம், அபயாமோதகம் | 710 |
| 25. | கல்பனையின் சிறப்பு | 711 |


## அத்தியாயம் - 3


| | | |
|---|---|---|
| 26. | ஜீவரத்த பரிசோதனை | 722 |


## அத்தியாயம் - 4


| | | |
|---|---|---|
| 27. | உடலை பருக்கச் செய்தல் | 725 |
| 28. | கப நோய்களுக்கு நிரூஹம், மாது தைலிகம் | 731,735 |
| 29. | யாபன பஸ்தி, யுக்தரத பஸ்தி | 736,737 |
| 30. | தோஷஹர பஸ்தி, யாபன ராஜ பஸ்தி | 738,739 |


## அத்தியாயம் - 6


| | | |
|---|---|---|
| 31. | கஷாய கல்பனைகள் | 771 |
| 32. | (ஸ்வரசம்) சாறு | 772 |
| 33. | கல்க்கமும், சூர்ணமும், க்வாதம், சீத கஷாயம் | 773 |
| 34. | நெய்ப்புப் பொருள் பக்குவ நிலைக் குறி | 777 |
| 35. | நெய்ப்புப் பொருளின் மூவகைப் பாகம் | 777 |
| 36. | அளவை | 778 |
| 37. | நெய்ப்புப் பொருள் பக்குவம் செய்யும் விதம் | 779 |
| 38. | அளவு விவரம் | 780 |


*****

# PREFACE

"Aṣṭāṅga Hṛdayam", published now, is in six volumes containing Sanskrit verses, their Tamil translation, and the commentaries of many scholars. This work was commenced based on the recommendations by the committee formed in 1969 comprising Padmasri Dr. V. Narayanaswamy Iyer, and Dr. V. Raghavan as members. At that time, the translation work was undertaken by Dr. Venkata Subramanya Sastri, Dr. T.P. Sundaresan and Pulavar Thiru. Ramalingam Pillai. The Council wishes to thank them for their valuable contribution.

This work provides detailed information about eight types of treatment such as Kaya Cikitsa, Bala Cikitsa, Graha Cikitsa, Urdhvanga Cikitsa, Salya Cikitsa, Visha Cikitsa, Jara Cikitsa and Vajikarana Cikitsa. The book will be very much useful for Students, Teachers, Research Scholars and Physicians.

In order to get it published, the translated work was entrusted to Dr. A.L.R. Centre for Ayurveda and therein under the supervision of Dr. T.V. Varadarajan,

Assistant Research Officer Chennai and under the guidance of Dr. P.P.N. Bhattathiri, Assistant Director, the Printing work was completed successfully. Their services are thankfully acknowledged.

The Council is thankful to Dr. T.G. Veeraraghavan, Project Officer, Dr. A. Lakshmipathi Research Centre for Ayurveda, Chennai for his kind co-operation.

The services rendered by M. S. Maniyavan of M/s. Elango Achukoodam, a popular press, specializing in Sanskrit, Hindi, English and Tamil for about three decades for printing with meticulous care, and neat and timely execution of Aṣṭāṅga Hṛdaya are thankfully acknowledged.

New Delhi
13.05.2002

**G. VELUCHAMY**
(Director)

# A BRIEF NOTE ABOUT THE BOOK

This work 'Vāgbhaṭa's Aṣṭāṅga Hṛdayaṃ' has eight limbs. This Sanskrit work has been translated in almost all the Indian languages.

In 1935, the learned Sri Duraiswamy Iyengar had published this work in Tamil, but without Sanskrit slokas.

At present, this work is published with Sanskrit verses endowed with a Tamil translation. It is to be noted that none has published like this so far.

There is no doubt that this work will be very useful for the Medicos and Students of Ayurvedic College. Further, in order to enlighten those who do not know Sanskrit, this work is published in Tamil, in an understandable and beautiful old Tamil style.

The manuscript of this work was written many years ago. The style of the Tamil sentences is old. It was not possible to effect much change in the olden style. However, as far as possible, changes have been effected. For eg. the word 'Vidai' has been used in many places. This word, in some places means 'thirst' and in other places as 'burnings'. There are many words, with similar uses.

Moreover, Vagbhata says that whichever Sanskrit sloka contains the word 'Param', that serves as the indication to denote that that particular treatment is superior.

This work is pioneering publication. Commentaries of many Acharyas are included in it. The names of the commentaries are given below.

1. Indu Vyakhyana
2. Hemadri Vyakhyana
3. Kairali Vyakhyana
4. Arunadatta Vyakhyana
5. Dalhana Vyakhyana
6. Cakrapani Vyakhyana
7. Vangasena Vyakhyana
8. Sarangadhara Tippani
9. Caraka Tippani
10. Susruta Tippani

With the above, some more commentaries are also included in this publication.

When I had been to Delhi to discuss the publication work, I had an occassion to discuss about this work with Dr. G. Veluchamy, the Director, CCRAS, Dr. K. D. Sharma, the Deputy Director (Tech), and Dr. V. Ravishankar, Asst. Director (Siddha). This

manuscript was entrusted to me along with the order to publish this under my supervision. Hence, I brought this manuscript to Chennai and re-wrote the pages that were in dilapidated condition with the help of Dr. P.P.N. Bhattathiri, Assistant Director.

This work was commenced at Chennai in 1969 (when CCRIMH was started) on the recommendation of the committee members, Padmasri Dr. V. Narayanaswamy Iyer, HPIM, eminent scholar and Dr. V. Raghavan, M.A. Ph.D., the former Prof. of Sanskrit, Madras University.

After a few years, this work was again continued in Literary Research unit of CCRAS that was started in the premises of Saraswati Mahal Library, Tanjore. That was the time when, the Tamil translation of this work was done by the learned Dr. V. S. Venkata subramanya Sastri, Senior Research Officer (the Chief Vaidyar in the Venkataramana Ayurveda College and also the Asthana Vidwan of Sri Kanchi Kamakoti Peetam), assisted by Pulavar Ramalingam Pillai. Later on, with the help of Dr. T. P. Sundaresan, Research Officer this work was completed and sent to Delhi.

The special feature of this work is the current addtion of the pictures of the instruments for surgery, pictures of instruments and bandages for bone fractures etc. used in the ancient days.

**There are totally Six volumes.**

| | |
|---|---|
| Sutrasthana | One volume |
| Sarira & Nidhanasthana | One volume |
| Cikitsa & Kalpasthana | Two volumes |
| Uttarasthana | Two volumes |

Each volume contains the contents and the index.

Cikitsasthāna and Kalpasthana have been combined and brought out in two volumes. Similarly, Sarirasthana and Nidhanasthana have also been combined and brought out in one volume.

There are 40 Adhyayas in the Uttarasthana. Hence, in order to facilitate readers this has been segregated into two volumes.

The students, Doctors and Research scholars of all the Ayurvedic Colleges in Tamilnadu would be thankful to Dr. G. Veluchamy, Director, CCRAS and Dr. K. D. Sharma, Deputy Director, (Technical) CCRAS for having published this laudable work.

Chennai.
13.05.2002

**Dr. T. V. VARADARAJAN,**
Assistant Research Officer, (AY)
Dr. A.L.R. Centre for Ayurveda,
V.H.S. Campus, Chennai - 600 113.

# முகவுரை

வாக்படரின் அஷ்டாங்க ஹ்ருதயம் என்ற இந்நூல், ஸம்ஸ்கிருத மொழி ஸ்லோகங்களும், அவற்றின் தமிழாக்கமும், பல பண்டிதர்களுடைய வ்யாக்யானங் களும் சேர்த்து, ஆறு பாகங்களாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூல், ஆயுர்வேத சிகித்ஸை செய்பவர்களுக் கும், ஆயுர்வேதம் பயிலுகின்றவர்களுக்கும், ஒளி விளக்காய்த் திகழுகின்ற ஒரு அறிவு பொக்கிஷமாகவும், ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

இந்நூலில், எட்டு அங்கங்களுக்கும், எட்டு விதமான சிகித்ஸைகள் பற்றியும், மற்றும் பல விவரங்கள்-குறிப்புகள் பற்றியும் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக் கின்றன. அவை காய சிகித்ஸை, பால சிகித்ஸை, கிரஹ சிகித்ஸை, ஊர்த்வாங்க சிகித்ஸை, சல்ய சிகித்ஸை, விஷ சிகித்ஸை, ஜரா சிகித்ஸை, வாஜீகரண சிகித்ஸை ஆகிய எட்டு சிகித்ஸைகள் ஆகும்.

இந்நூலை, ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது மிக அவசியமாகும்.

1969-ம் ஆண்டு அமைக்கப்பட்ட கமிட்டி அங்கத்தி னர்களான, பத்மஸ்ரீ டாக்டர் வி. நாராயண சுவாமி அய்யர், டாக்டர் V. ராகவன் ஆகியோரின் பரிந்துரை யின் பேரில், இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டது.

ஆகவே, அவர்களுக்கும், அப்போது மொழிபெயர்ப்பு பணி ஆற்றிய டாக்டர் வேங்கடசுப்ரமண்ய சாஸ்த்ரி, டாக்டர் T. P. சுந்தரேசன், புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சியில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள டாக்டர் வரதராஜன் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய, டாக்டர் லக்ஷ்மிபதி ஆயுர்வேத ஆராய்ச்சி மையத்தின் துணை இயக்குநர், டாக்டர் P.P.N. பட்டத்திரி அவர்கள், டாக்டர் வரதராஜனுக்கு முழு ஒத்துழைப்பு நல்கியதற்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக. அந்த மையத்தின் Project Officer, டாக்டர் T. G. வீரராகவன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

மூவாயிரத்திற்கும் மேலான பக்கங்களில், ஆறு பாகங்களாக அச்சிடப்பட்ட இந்நூல், மிகவும் தெளி வாகவும், பிழைகளின்றியும், அழகாகவும், குறுகிய காலத்தில் மிகவும் சிரத்தையுடன், முழு ஈடுபாட்டுடன், அச்சிட்டுத் தந்த, இளங்கோ அச்சுக்கூட உரிமையாளர் திரு. எம்.எஸ். மணியவன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக!

G. வேலுச்சாமி
(இயக்குநர்)

புது தில்லி,
*13.05.2002*

# பதிப்புரை

ஆசார்ய வாக்படருடைய அஷ்டாங்க ஹ்ருதயம் என்ற இந்நூல், எட்டு அங்கங்களைக் கொண்டது. ஸம்ஸ்கிருத மொழியில் உள்ள இந்நூல், இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிப் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலை 1935-ம் ஆண்டு, பண்டிதர் ஸ்ரீ துரைசாமி அய்யங்கார் அவர்கள், ஸம்ஸ்கிருத மொழி ஸ்லோகங்கள் இல்லாமல் தமிழ் மொழியில் மட்டும் வெளியிட்டார்.

ஆனால், தற்போது இந்நூல் ஸம்ஸ்கிருத மொழியிலும், அதன் தமிழ் உரையுடனும் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதுமாதிரி இதுவரை யாரும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல், தமிழ் நாட்டில் உள்ள ஆயுர்வேத கல்லூரி மாணவர்களுக்கும், வைத்தியர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்களும்கூட, ஆயுர்வேதத்தை பற்றி நன்றாக தெரிந்துக் கொள்வதற்காகவே, பழைய தமிழ் நடையிலேயே, மிக அழகாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த நூலின் கையெழுத்துப் பிரதி, பல வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்டது. அதில் தமிழில் உள்ள வாக்கியங்கள் பழங்கால தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. அதை அதிகமாக மாற்ற இயலவில்லை. முடிந்தவரை மாற்றப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு 'விடாய்' என்ற சொல் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. விடாய் என்றால் சில இடங்களில் 'தாகம்' என்றும், சில இடங்களில் 'எரிச்சல்' என்றும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபோல் பல சொற்கள் உள்ளன.

மேலும், ஸம்ஸ்கிருத ஸ்லோகத்தில் எந்த ஸ்லோகம் 'பரம்' என்று முடிகிறதோ அந்த ஸ்லோகத்தில் கூறப்பட்ட சிகித்ஸை முறை மிகவும் உயர்ந்தது என்று ஆசார்ய வாக்படர் கூறுகிறார்.

மேலும், இந்நூல் ஒரு விசேஷமான வெளியீடாகும். இதில் பல ஆசார்யர்களுடைய உரைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. அவர்களுடைய பெயர்கள் வருமாறு:

1. இந்து வ்யாக்யானம்
2. ஹேமாத்ரி வ்யாக்யானம்
3. கைரளி வ்யாக்யானம்
4. அருணதத்தர் வ்யாக்யானம்
5. டல்ஹணர் வ்யாக்யானம்
6. சக்ரபாணி வ்யாக்யானம்
7. வங்கசேனர் வ்யாக்யானம்
8. சார்ங்கதரர் குறிப்புகள்
9. சரகர் குறிப்புகள்
10. சுச்ருதர் குறிப்புகள்

இவைகளோடு இன்னும் பலருடைய வ்யாக்யானங் களுடன் இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நான், பதிப்புப் பணி விஷயமாக டெல்லிக்கு சென்றிருந்த போது, டைரக்டர், டாக்டர் G. வேலுசாமி அவர்களையும், டெப்டி டைரக்டர், டாக்டர் K.D. சர்மா அவர்களையும், அஸிஸ்டெண்ட் டைரக்டர், டாக்டர் V. ரவிசங்கர், அவர்களையும் சந்தித்து இந்நூலைப் பற்றி பேசினேன். அவர்களுடைய ஆலோசனைப்படி இந்த எழுத்துப் பிரதியானது, என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, என்னுடைய மேற்பார்வையில் இதை பிரசுரிக்கும்படி

உத்தரவும் அளிக்கப்பட்டது. ஆகவே, அந்த எழுத்து பிரதிகளை நான், சென்னைக்குக் கொண்டுவந்து, அதில் கிழிந்து போன பிரதிகளை தமிழில் திரும்ப எழுதி ஸம்ஸ்கிருத மொழியில் உள்ளதை நானும், Dr. P.P.N.பட்டத்திரி, அஸிஸ்டெண்ட் டைரக்டர் அவர்களும் சேர்ந்து புதுப்பித்து இதை ஆறு பாகங்களாக வெளியிடத் தீர்மானித்தோம்.

இந்நூல் பல வருடங்களுக்கு முன்பு, அதாவது (1969-ம் ஆண்டு) CCRIMH தொடங்கப்பட்ட போது, அப்போதுள்ள கமிட்டி அங்கத்தினரான பத்மஸ்ரீ டாக்டர் வி. நாராயண சுவாமி அய்யர் HPIM அவர்கள், டாக்டர் V. ராகவன், MA. Ph.D. (முன்னாள் ஸம்ஸ்கிருத மொழி பேராசிரியர், சென்னை பல்கலைக்கழகம்) அவர்கள், ஆகியோரின் சிபாரிசின் பேரில் இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, தஞ்சை சரஸ்வதி மஹால் வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட நமது ஆய்வுக்கூட மையத்தில் இந்த வேலை தொடரப்பட்டு, அப்போது அங்கு பணியில் இருந்த பண்டிதர் டாக்டர் V. வேங்கடசுப்ரமண்ய சாஸ்திரி, Senior Research Officer, (வேங்கடரமணா ஆயுர்வேத கல்லூரியின் முன்னாள் பிரதான வைத்தியர், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வான்) அவர்கள், மற்றும் புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை ஆகியவர்களால் மொழிப் பெயர்க்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் T.P. சுந்தரேசன், Research Officer அவர்கள் மூலம், இந்த வேலை தொடர்ந்து செய்து முடிக்கப் பட்டு, டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும், இந்நூலில் முற்காலத்தில் அறுவை சிகித்ஸைக்கு உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களின் வரைபடங்கள், எலும்பு முறிவுக்கு போடப்பட்டுள்ள கட்டுகள் மற்றும் இயந்திரங்களின் உருவப்படங்கள்,

(சஸ்திரங்களின் உருவப்படங்கள்) பலவிதமான பந்தன முறைகள் ஆகியவை தற்போது சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், இந்நூல் ஆறு பாகங்களாக வெளியிடப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஸூத்ர ஸ்தானம் | 1 பாகம் |
| சாரீரம் - நிதான ஸ்தானம் | 1 பாகம் |
| சிகித்ஸா - கல்ப ஸ்தானம் | 2 பாகம் |
| உத்தர ஸ்தானம் | 2 பாகம் |

ஆக மொத்தம் ஆறு பாகங்கள்.

ஒவ்வொரு பாகத்திலும் பொருளடக்கமும், நூலின் கடைசியில் அட்டவணையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிகித்ஸா ஸ்தானமும், கல்ப ஸ்தானமும் ஒன்று சேர்க்கப்பட்டு, இரண்டு பாகங்களாகவும், சாரீர ஸ்தானமும், நிதான ஸ்தானமும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு பாகமாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் உத்தர ஸ்தானத்தில் மட்டும் 40 அத்தியாயங் கள் உள்ளன. ஆகவே, இது வாசகர்களின் வசதிக்காக இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரிய நூலை, அச்சிட்டு C.C.R.A.S. மூலமாக வெளியிட்டிருப்பதற்கு, டைரக்டர் டாக்டர் G. வேலுசாமி அவர்களுக்கும், டெப்டி டைரக்டர் (ஆயுர்வேதா) டாக்டர் K.D. சர்மா அவர்களுக்கும், தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஆயுர்வேத கல்லூரி மாணவர்களும், டாக்டர்களும், ஆராய்ச்சியாளர்களும் நன்றி கூறி பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

**Dr. T. V. வரதராஜன்,**
**Assistant Research Officer, (AY)**
**Dr. A.L.R. Centre for Ayurveda V.H.S. Campus ,**
**Chennai - 600 113.**

## ।। चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ।।

### द्वादशोऽध्यायः - அத்தியாயம் - 12

अथाऽतो प्रमेहचिकित्सितं व्याख्यास्यामः ।

इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து பிரமிய சிகித்ஸை கூறுகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

मेहिनो बलिनः कुर्यादादौ वमनरेचने ।
स्निग्धस्य सर्षपारिष्टनिकुम्भाक्षकरंजकैः ।। १ ।।

तैलैस्त्रिकण्टकाद्येन यथास्वं साधितेन वा ।
स्नेहेन मुस्तदेवाह्वनागरप्रतिवापवत् ।। २ ।।

सुरसादिकषायेण दद्यादास्थापनं ततः ।
न्यग्रोधादेस्तु पित्तार्तं रसैः शुद्धं च तर्पयेत् ।। ३ ।।

பிரமியநோய் உள்ளவர் பலசாலியாக இருப்பின் முதலில் கடுகு, வேம்பு, நேர்வாளம், தான்றி, புங்கு இவற்றின் எண்ணெய்களாலாவது, [1]நெருஞ்சில் முதலியவை சேர்த்து பக்குவம் செய்த நெய்ப்புப்

பொருளாலான தோஷங்களுக்கு ஏற்ற பொருள் சேர்த்து நெய்ப்பு உண்டாக்க வேண்டும். பிறகு வாந்தி செய்வித்தல், விரேசனம் செய்வித்தல் ஆகிய சிகித்ஸைகளைக் செய்ய வேண்டும். [2]சுரஸாதாதி கஷாயத்தில் கோரைக்கிழங்கு, தேவதாரு, சுக்கு, இவற்றின் கல்க்கம் சேர்த்து கஷாயபஸ்தி செய்விக்க வேண்டும். பித்த பிரமேகம் உள்ளவருக்கு [3]ந்யக்ரோதாதிகண கஷாயத்தால் பஸ்தி செய்விக்க வேண்டும். சோதனம் செய்தபின் [4]மாம்ஸ ரஸத்தால் திருப்தி (புஷ்டி) செய்விக்க வேண்டும்.

**குறிப்பு:** 1. நெருஞ்சில் முதலியவை, இவ்வத்தியாயம் 17-ம் சுலோகத்தில் கூறப்படவிருக்கின்றன.

2,3. சுரஸாதிகணம் - ந்யக்ரோதாதிகணம் ஆகியவை ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 15-ல் கூறப் பட்டுள்ளன.

4. சதுப்பு நிலப்பிராணியின் மாம்ஸ ரஸம் தோஷங் களை அதிகரிக்கச் செய்யுமாதலால் வறண்ட பிரதேசப் பிராணிகளின் மாம்ஸ ரஸமே ஏற்றதென அருணதத்தர் விளக்குகிறார்.

मूत्रग्रहरुजागुल्मक्षयाद्यास्त्वपतर्पणात् ।
ततोऽनुबन्धरक्षार्थं शमनानि प्रयोजयेत् ॥ ४ ॥

(அபதர்ப்பண சிகித்ஸையால்) இளைப்பதற்காகச் செய்யப்படும் சிகித்ஸையால் சிறுநீர்தடை (பஸ்தி, குறி ஆகியவற்றில்) வலி, குன்மம், க்ஷயம் முதலியவை உண்டாகும்.

ஆகையால் நோயின் தொடர்பிலிருந்து காப்பதற்காக சமன ஔஷதங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

असंशोध्यस्य तान्येव सर्वमेहेषु पाययेत् ।

சோதன சிகித்ஸை தவிர்க்கப்படவேண்டியவர்களுக்கு உண்டாகும் எல்லாப் பிரமிய நோய்களிலும் சமன ஔஷதங்களையே பருகச் செய்யவேண்டும்.

धात्रीरसप्लुतां प्राह्णे हरिद्रां माक्षिकान्विताम् ॥ ५ ॥

दार्वीसुराह्वत्रिफलामुस्ता वा क्वथिता जले ।
चित्रकत्रिफलादार्वीकलिंगान् वा समाक्षिकान् ॥ ६ ॥

मधुयुक्तं गुडूच्या वा रसमामलकस्य वा ।

நெல்லிக்காய்ச் சாற்றில் மஞ்சள் பொடியும் [1]தேனும் சேர்த்து காலையில் பருகவேண்டும். அல்லது மரமஞ்சள், தேவதாரு, த்ரிபலை, [2]கோரைக்கிழங்கு, ஆகியவற்றை கஷாயமிட்டுப் பருகவேண்டும். அல்லது கொடிவேலி, த்ரிபலை, மரமஞ்சள், வெட்பாலையரிசி-இவற்றை கஷாய மிட்டு தேன் கலந்து பருகவேண்டும். சீந்தில் சாற்றையாவது, நெல்லிக்காய்ச் சாற்றையாவது தேன் கலந்து பருக வேண்டும்.

குறிப்பு: 1. இனிப்புப் பொருள்கள் பிரமிய நோயில் தவிர்க்கப்பட வேண்டியவையேயெனினும், தேன் இதற்கு விதிவிலக்காகும். ஏனெனில், துவர்ப்புச் சுவையுள்ள மலர்களிலிருந்து உருப்பெற்று

இனிமையாவதால் இது பிரமிய நோயாளிக்கு ஏற்றதாகும்.

2. வேங்கையும் சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

रोध्राभयातोयदकट्फलानां पाठाविडंगार्जुनधन्वकानाम् ।
गायत्रिदार्वीकृमिहृद्वचानां कफे त्रयः क्षौद्रयुताः कषायाः ॥ ७ ॥

**கபப்பிரமேகம் :**

வெள்ளிலோத்தி, கடுக்காய், கோரைக்கிழங்கு, சிறு குமிழ், இவற்றின் கஷாயம், வட்டத்திருப்பி, வாய் விளங்கம், மருது, தன்வனம் இவற்றின் கஷாயம், கருங்காலி, மரமஞ்சள், வாய்விளங்கம், ஞமவிருக்ஷம் இவற்றின் கஷாயம் என மூவகைக் கஷாயங்களும் கபப்பிரமியத்தில் தேன் கலந்து பருக ஏற்றவை.

**குறிப்பு:** தன்வனம் - இலந்தையின் இலைபோன்ற இலை கொண்ட மகாவிருக்ஷ இனத்தைச் சேர்ந்தது.

उशीररोध्रार्जुनचन्दनानां पटोलनिम्बामलकामृतानाम् ।
रोध्राम्बुकालीयकधातकीनां पित्तेत्रयः क्षौद्रयुताः कषायाः ॥ ८ ॥

**பித்தப்பிரமேகம் :**

இலாமிச்சை, வெள்ளிலோத்தி, மருது, சந்தனம் இவற்றின் கஷாயம், பேய்ப்புடல், வேம்பு, நெல்லி, சீந்தில் இவற்றின் கஷாயம், வெள்ளிலோத்தி, வெட்டிவேர்,

மஞ்சள், சந்தனம், காட்டாத்திப்பூ இவற்றின் கஷாயம் என மூவகைக் கஷாயங்களும் மற்றும் தேன் கலந்து பித்தப் பிரமேகத்தில் பருகுவது ஏற்றவை.

यथास्वमेभिः पानान्नं यवगोधूमभावनाः ॥ ९ ॥

वातोल्बणेषु स्नेहांश्च प्रमेहेषु प्रकल्पयेत् ।

வாயு அதிகரித்த நிலையில், இங்கு கூறப்பட்ட பொருள்களால் ஏற்றவாறு, யவை, கோதுமை இவற்றிற்கு பாவனைகளையும், பானத்தையும், உணவையும், நெய்ப்புப் பொருள்களையும் அமைக்க வேண்டும்.

अपूपसक्तुवाट्यादिर्यवानां विकृतिर्हिता ॥ १० ॥

गवाश्वगुदमुक्तानामथवा वेणुजन्मनाम् ।
तृणधान्यानि मुद्गाद्याः शालिर्जीर्णः सषष्टिकः ॥ ११ ॥

श्रीकु क्कुटोऽम्लः खलकस्तिलसर्षपकिट्टजः ।
कपित्थं तिन्दुकं जम्बूस्तत्कृता रागषाडवाः ॥ १२ ॥

तिक्तं शाकं मधु श्रेष्ठा भक्ष्याः शुष्काः ससक्तवः ।
धन्वमांसानि शूल्यानि परिशुष्काण्ययस्कृतिः ॥ १३ ॥

मध्वरिष्टासवा जीर्णाः सीधुः पक्वरसोद्भवः ।
तथाऽसनादिसाराम्बु दर्भाम्भो माक्षिकोदकम् ॥ १४ ॥

**உணவு வகை :**

பசு, குதிரை ஆகியவற்றின் சாணத்திலிருந்து எடுத்த யவை அல்லது மூங்கிலரிசியின் மாவினால் அப்பம், ஸத்துமா கஞ்சி முதலியவை தயாரித்து உண்ணலாம். (சாமை முதலிய) த்ருணதான்யங்கள், பயறு முதலிய

தான்யங்கள், பழகிய சாலி நெல், பழகிய அறுபதாங் குறுவை, மற்றும் எள், கடுகு இவற்றின் புண்ணாக்கு சேர்த்து தயாரித்த ஸ்ரீ குக்குடம் என்னும் புளிப்புச் சுவை உள்ள களம், விளா, பனச்சி, நாவல், ஆகியவை ஏற்றவையாகும். விளா முதலியவை சேர்த்து தயாரித்த [3]ராகம், ஷடாவம், ஆகியவை ஏற்றனவாகும். கசப்பான கீரைகள், தேன், திரிபலை, ஸத்துமா கலந்தவையும் ஈரம் நீங்கியவையுமான பக்ஷணங்கள், சூலத்தில் குத்தி பக்குவம் செய்யப்பட்டதால் ஈரம் நீக்கப்பெற்ற ஜாங்கல (வறண்ட பிரதேச பிராணிகளின், மாமிஸம், [4]அயஸ்க்ருதி கருப்பஞ்சாற்றால் காய்ச்சித் தயாரிக்கப்பட்ட மது, நாட்பட்டவைகளான மது, அரிஷ்டம், ஆஸவம் ஆகிய இவை ஏற்றவையாகும். வேங்கை முதலிய மரங்களின் வைரத்தின் கஷாயம், தர்ப்பை நீர், தேன் கலந்த நீர் ஆகியவையும் ஏற்றவையாகும்.

குறிப்பு: 2. பசு, குதிரை ஆகியவற்றிற்கு மூங்கிலரிசி அல்லது யவையை கொடுத்த பின்னர், அதன் சாணத்திலிருந்து அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. ராகம் - ஷாடவம் இவற்றின் விளக்கம், ஸூத்ர ஸ்தானம், அத்தியாயம் 3-ல் கூறப்பட்டுள்ளது.

4. அயஸ்க்ருதியின் விளக்கம், சுலோகம் 29-32ல் கூறப்படவிருக்கிறது.

களம் - இஞ்சித்துண்டு, உமி நீக்கிய கோதுமை இவை சேர்த்தும் தயாரிப்பது வழக்கம்.

वासितेषु वराकवाथे शर्वरीं शोषितेष्वहः ।
यवेषु सुकृतान् सक्तून् सक्षौद्रान् सीधुना पिबेत् ॥ १५॥

இரவில் த்ரிபலா கஷாயத்தில் ஊறவைக்கப்பட்டதும், பகலில் உலர்த்தப்பட்டதுமான யவையின் சத்துமாவை, தேன் கலந்து கரும்புச் சாற்றில் தயாரிக்கப்பட்ட மதுவில் கலக்கிப் பருக வேண்டும்.

शालसप्ताह्वकम्पिल्लवृक्षकाक्षकपित्थजम् ।
रोहीतकं च कुसुमं मधुनाऽद्यात्सुचूर्णितम् ॥ १६ ॥

कफपित्तप्रमेहेषु पिबेद्धात्रीरसेन वा ।

கபபித்த பிரமியம் உள்ளவர் தேக்கு, ஏழிலம்பாலை, கம்பிப்பாலை, வெட்பாலை, தான்றி, விளா, செம்மரம், இவற்றின் புஷ்பத்தை நன்கு சூர்ணம் செய்து தேன் அல்லது நெல்லிச்சாறு கலந்து உட்கொள்ள வேண்டும்.

त्रिकण्टकनिशारोध्रसोमवल्कवचार्जुनैः ॥ १७ ॥

पद्मकाश्मन्तकारिष्टचन्दनागुरुदीप्यकैः ।
पटोलमुस्तमंजिष्ठामाद्रीभल्लातकैः पचेत् ॥ १८ ॥

तैलं वातकफे पित्ते घृतं मिश्रेषु मिश्रकम् ।

நெருஞ்சில், மஞ்சள், வெள்ளிலோத்தி, வெண்காலி, வசம்பு, மருது, பதிமுகம், மலையமுக்கி, வேம்பு, சந்தனம், அகில், ஜீரகம், பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, அதிவிடயம், சேங்கொட்டை இவற்றின் கல்க்கம் சேர்த்து, வாதப்பிரமேகம், கபப்பிரமேகம் இவற்றில் தைலமும், பித்தப்பிரமியத்தில் நெய்யும், கூட்டு தோஷங்களால் உண்டான பிரமியத்தில் தைலம், நெய் இரண்டும் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க வேண்டும்.

**குறிப்பு:** சம அளவு நீரும் சேர்த்து பக்குவம் செய்ய வேண்டும் என இந்து கூறுகிறார்.

दशमूलशठीदन्तीसुराह्वं द्विपुनर्नवम् ॥ १९ ॥

मूलं सुगर्कयोः पथ्यां भूकदम्बमरुष्करम् ।
करंजो वरुणान्मूलं पिप्पल्याः पौष्करं च यत् ॥ २० ॥

पृथग् दशपलं प्रस्थान् यवकोलकुलत्थतः ।
त्रींश्चाष्टगुणिते तोये विपचेत्पादवर्तिना ॥ २१ ॥

तेन द्विपिप्पलीचव्यवचानिचुलरोहिषैः ।
त्रिवृद्विडंगकम्पिल्लभार्गीबिल्वैश्च साधयेत् ॥ २२ ॥

प्रस्थं घृताज्जयेत्सर्वांस्तन्मेहान् पिटिका विषम् ।
पाण्डुविद्रधिगुल्मार्शःशोषशोफगरोदरम् ॥ २३ ॥

श्वासं कासं वमिं वृद्धिं प्लीहानं वातशोणितम् ।
कुष्ठोन्मादावपस्मारं धान्वन्तरमिदं घृतम् ॥ २४ ॥

***தான்வந்தர கிருதம் :***

தசமூலம், பூலாங்கிழங்கு, நாகதந்தீ, தேவதாரு, செஞ்சாறடை, வெண்சாறடை, கள்ளிவேர், எருக்குவேர், கடுக்காய், [1]நிலக்கடம்பு, சேங்கொட்டை, [2]புங்கு, மணிப் புங்கு, மாவிலிங்கைவேர், கண்டதிப்பிலி, புஷ்கரமூலம், ஆகியவை வகைக்கு 10 பலம், யவை, இலந்தை, கொள் இவை வகைக்கு 1 பிரஸ்தம், இவற்றை 8 மடங்கு நீர் சேர்த்து காய்ச்சி நாலில் ஒன்றாய் வற்றச் செய்ய வேண்டும். அந்த கஷாயத்துடன் திப்பிலி, யானைத்திப்பிலி, செவ்வியம், வசம்பு, நீர்நொச்சி, நான்முகப்புல், சிவதை, வாய்விளங்கம், கம்பிப்பாலை, சிறுதேக்கு, சுக்கு இவற்றின் கல்க்கமும், ஒரு பிரஸ்தம் [3]நெய்யும் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க எல்லாவித பிரமிய

நோய்கள், கட்டிகள், விஷங்கள், பாண்டு, சீழ்கட்டி, குன்மம், மூலம், இளைப்பு, வீக்கம், இடுவிஷம், மகோதரம், ச்வாஸம், காஸம், வாந்தி, அண்டகோச வீக்கம், மண்ணீரல் நோய், வாதரத்தம், குஷ்டம், பைத்தியம், வலிப்பு ஆகியவற்றைப் போக்கும். இதற்கு தான்வந்தர கிருதம் என்று பெயர்.

குறிப்பு: 1. ஜீரகம் என இந்து கூறுகிறார்.

2. புங்கு, மணிப்புங்கு இவற்றின் வேர் என அருணதத்தரும் பழம் என சிவதாஸர், ஸ்ரீகண்டர் முதலியோரும் கருதுகின்றனர்.

3. 32 பலம் நெய் சேர்க்க வேண்டுமென இந்து குறிப்பிடுகிறார்.

रोध्रमूर्वाशठीवेल्लभार्गीनतनखप्लवान् ।
कलिंगकुष्ठक्रमुकप्रियंग्वतिविषाग्निकान् ॥ २५ ॥

द्वे विशाले चतुर्जातं भूनिम्बं कटुरोहिणीम् ।
यवानीं पौष्करं पाठां ग्रन्थिं चव्यं फलत्रयम् ॥ २६ ॥

कर्षांशमम्बुकलशे पादशेषे सुते हिमे ।
द्वौ प्रस्थौ माक्षिकात्क्षिप्त्वा रक्षेत्पक्षमुपेक्षया ॥ २७ ॥

रोध्रासवो यं मेहार्शःश्वित्रकुष्ठारुचिकृमीन् ।
पाण्डुत्वं ग्रहणीदोषं स्थूलतां च नियच्छति । २८ ॥

### லோத்ராஸவம் :

வெள்ளிலோத்தி, பெருங்குரும்பை, பூலாங்கிழங்கு, வாய்விளங்கம், சிறுதேக்கு, தகரை, புலிநகம், சிறு கோரை, வெட்பாலையரிசி, கோஷ்டம், பாக்கு, ஞாழல்,

அதிவிடாய், கொடிவேலி, பேய்த்தும்மட்டி, ஆற்றுத் தும்மட்டி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், சிறுநாகப்பூ, நிலவேம்பு, கடுகரோஹிணீ, ஓமம், புஷ்கர மூலம், வட்டத்திருப்பி, கண்டதிப்பிலி, செவ்வியம், த்ரிபலை ஆகியவற்றை வகைக்கு கால் பலம் எடுத்து, 16 பிரஸ்தம் ஜலத்திலிட்டு, நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடிக்கட்டி, ஆறியபின், தேன் 2 பிரஸ்தம் சேர்த்து (சீலை மண் செய்து) 15 நாட்களுக்குப் பாதுகாத்து, பின் உபயோகிக்க வேண்டும். இது லோத்ராஸவம் எனப்படும். இது பிரமியம், மூலம், வெண்குட்டம், குஷ்டம், ருசி யின்மை, கிருமி, பாண்டு, க்ராணீ, உடற்பருமன் ஆகிய வற்றைப் போக்கும்.

**குறிப்பு:** இங்கு திரவங்களை இரட்டிப்புப் பரிபாஷையை அனுசரித்து பிரயோகிக்கும்படி இந்து கூறுகிறார்.

1. ஆஸவங்களுக்கான பொது பரிபாஷையை அனு ஸரித்து காட்டாத்திப்பூ 2 பலம் சேர்ப்பது ஸம்பிரதாயம்.

साधयेदसनादीनां पलानां विंशतिं पृथक् ।
द्विवहेऽपां क्षिपेत्तत्र पादस्थे द्वे शते गुडात् ॥ २९ ॥

क्षौद्रादढकार्धं पलिकं वत्सकादिं च कल्कितम् ।
तत्क्षौद्रपिप्पलीचूर्णप्रदिग्धे घृतभाजने ॥ ३० ॥

स्थितं दृढे जतुसृते यवराशौ निधापयेत् ।
खदिरांगारस्तप्तानि बहुशोऽत्र निमज्जयेत् ॥ ३१ ॥

तनूनि तीक्ष्णलोहस्य पत्राण्यालोहसङ्क्षयात् ।
अयस्कृतिः स्थिता पीता पूर्वस्मादधिका गुणैः ॥ ३२ ॥

## அயஸ்க்ருதி :

[1]அஸனாதிகணச் சரக்குகளை வகைக்கு இருபது பலம் எடுத்து, 128 பிரஸ்த ஜலத்திலிட்டு காய்ச்சி, நாலில் ஒன்றாய் வற்றச் செய்து கொள்ள வேண்டும். 200 பலம் வெல்லமும், 2 பிரஸ்தம் தேனும் சேர்க்க வேண்டும். வத்ரகாதிகணச் சரக்குகள் வகைக்கு ஒரு பலம் எடுத்து கல்கமாக்கிக் கலக்க வேண்டும். தேன், திப்பிலிச் சூர்ணம், இவற்றால் உள்ளே பூசப்பட்டதும், உறுதியானதும், உருக்கப்பட்ட அரக்கால் பூசப்பட்டதும் நெய் வைத்திருந்ததுமான பாண்டத்தில், இதை ஊற்றி வைத்து, யவை, தான்யக குவியலில் வைக்க வேண்டும். மெல்லிய இரும்பு [3]தகடுகளை கருங்காலித் தணலால் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சி நனைக்கவேண்டும். இவ்வாறு இரும்புத் தகடு கரையும் வரை செய்ய வேண்டும். தானில் புடமிட்டு சில நாட்களுக்குப்பின் பருகலாம். இது அயஸ்க்ருதி எனப்படும். லோத்ராஸவத்தைக் காட்டிலும் அதிக குணமுள்ளது.

குறிப்பு: 1.2. அஸனாதிகணம், வத்ரகாதிகணம் ஆகியவை ஸூத்ரஸ்தானம் 15-ம் அத்தியாயத்தில் கூறப் பட்டுள்ளன.

3. இரும்புத் தகட்டின் அளவு கூறப்படவில்லை. 16 பலம் வரை எடுத்துக் கொள்ளலாமென அருணதத்தர் குறிப்பிடுகிறார்.

4. இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வைத்திருந்து பிறகு உபயோகிக்குமாறு சங்க்ரஹத்தில் கூறப்படு கிறது.

रूक्षमुद्वर्तनं गाढं व्यायामो निशि जागरः ।
यच्चान्यच्छ्लेष्ममेदोघ्नं बहिरन्तश्च तद्धितम् ॥ ३३ ॥

வறட்சியான பொருள்களால் உடம்பை அழுத்தித் தேய்த்தல், தேகப்பயிற்சி, இரவு கண் விழித்தல் ஆகியவையும் மற்றும் இவ்வாறே கபத்தையும் கொழுப்பையும் குறைக்கும் தன்மையுள்ள உட்பிரயோகங்களும் வெளிப் பிரயோகங்களும் ஏற்றவையாகும்.

सुभावितां सारजलैस्तुलां पीत्वा शिलोद्भवात् ।
साराम्बुनैव भुंजानः शालीन् जांगलजै रसैः ॥ ३४ ॥

सर्वानभिभवेन्मेहान् सुबहूपद्रवानपि ।
गण्डमालार्बुदग्रन्थिस्थौल्यकुष्ठभगन्दरान् ॥ ३५ ॥

कृमिश्लीपदशोफांश्च परं चैतद्रसायनम् ।

(வேங்கை, கருங்காலி முதலியவற்றின்) வைரக்கட்டைக் கஷாயத்தில் பாவனை செய்த 100 பலம் சிலாஜதுவை முற்கூறப்பெற்ற வைரக்கட்டைக் கஷாயத்துடன் உட்கொள்ள வேண்டும். ஜாங்கல மாமிஸ ரஸம் கலந்து சாலியன்னம் உட்கொள்ள மிக்க உபத்ரவமுள்ள எல்லா பிரமியங்களும் நீங்கும். [1] கண்டமாலை, [2] அற்புதம், (கிரந்தி) முடிச்சு நோய், உடற்பருமன், குஷ்டம், பவுத்ரம், கிருமி, யானைக்கால், வீக்கம், ஆகியவை நீங்கும். இது ஒரு சிறந்த ரசாயனமாகும்.

**குறிப்பு:** 1. கழுத்தில் உண்டாகும் கட்டி வகை.

2. அற்புதம்-விரைவில் பழுக்காத கட்டி.

अधनश्छत्रपादत्ररहितो मुनिवर्तनः ॥ ३६ ॥

योजनानां शतं यायात्खनेद्वा सलिलाशयान् ।
गोशकृन्मूत्रवृत्तिर्वा गोभिरेव सह भ्रमेत् ॥ ३७ ॥

बृंहयेदौषधाहारैरमेदोमूत्रलैः कृशम् ।

வசதியற்றவர், முனிவர் வாழ்க்கையை மேற்கொண்டு குடை, பாதரட்சை இவை இன்றி, 100 யோஜனை தூரம் (800-900 மைல்கள்) நடக்க வேண்டும். அல்லது நீர் நிலைகளைத் தோண்டவேண்டும். அல்லது பசுவின் சாணம், மூத்ரம் இவற்றையே உட்கொண்டு பசுக்களுடன் *அலைய வேண்டும்.

இளைத்த பிரமிய நோயாளியை, கொழுப்பையும், மூத்ரத்தையும் அதிகரிக்கச் செய்யாத மருந்து உணவு ஆகியவற்றால் பருக்கச் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** இத்தகைய புனிதச் செயல்களால் நோய்க்குக் காரணமான பாவம் நீங்குவதுடன், கபமும் கொழுப்பும் குறைவது காரணமாக நோய் நீங்கும்.

शराविकाद्याः पिटिकाः शोफवत्समुपाचरेत् ॥ ३८ ॥

अपक्वा व्रणवत्पक्वाः तासां प्राग्रूप एव च ।
क्षीरिवृक्षाम्बु पानाय बस्तमूत्रं च शस्यते ॥ ३९ ॥

तीक्ष्णं च शोधनं, प्रायो दुर्विरेच्या हि मेहिनः ।
तैलमेलादिना कुर्याद्गणेन व्रणारोपणम् ॥ ४० ॥

उद्वर्तने कषायं तु वर्गेणारग्वधादिना ।
परिषेकोऽसनाद्येन पानान्ने वत्सकादिना ॥ ४१ ॥

पाठाचित्रकशार्ङ्गेष्टासारिवाकण्टकारिकाः ।

सप्ताह्वं कौटजं मूलं सोमवल्कं नृपद्रुमम् ॥ ४२ ॥
संचूर्ण्य मधुना लिह्यात्तद्वच्चूर्णं नवायसम् ।

**பிரமியக் கட்டிகளுக்கு சிகித்ஸை:**

பழுக்காத நிலையில் உள்ள சராவிகா முதலிய (பத்து விதக்) கட்டிகளுக்கும் வீக்கத்துக்கு கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்ய வேண்டும். இவை பழுத்த நிலையில் இருந்தால் விரண சிகித்ஸை செய்ய வேண்டும். இக்கட்டிகளின் முற்குறிகள் கண்ட நிலையில் பால்மரப் பட்டைக் கஷாயமும், செம்மறியாட்டு நீரும் பருகுவதற்கு ஏற்றனவாகும். தீக்ஷ்ணமான சோதனம் செய்விக்க வேண்டும். ஏனெனில் பெரும்பாலும் பிரமிய நோயாளிக்கு எளிதில் [1]விரேசனம் செய்விக்க முடியாது. [2]ஏலாதிகணச் சரக்குகள் சேர்த்து தைலம் தயாரித்து விரணம் ஆற உபயோகிக்க வேண்டும். [3]ஆரக்வதாதி கணச்சரக்குகள் சேர்த்து தயாரித்த கஷாயத்தை [4]தேய்த்து குளிக்க உபயோகிக்க வேண்டும். [5]அஸனாதிகணச் சரக்குகளின் கஷாயத்தை பருகுவதற்கும், உணவு பக்குவம் செய்வதற்கும் உபயோகிக்க வேண்டும். வட்டத்திருப்பி, கொடிவேலி, குன்றி, நன்னாரி, கண்டங்கத்திரி, ஏழிலம்பாலை, வெட்பாலைவேர், வெண்காலி, கொன்றை இவற்றின் சூர்ணத்தை, தேன் கலந்து உட்கொள்ள வேண்டும். [7]நவாயஸ சூர்ணத்தையும் தேன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** 1. இங்கு விரேசனம் என்ற சொல், வமனத்தையும் குறிப்பிடுவதாகும் என இந்து கருதுகிறார். உடலில் உள்ள திரவப்பொருள் பெரும்பாலும் சிறுநீர் மார்க்கமாகவே வெளியேறுவதால், மலமார்க்

கத்திற்கு தேவையான நீர் குறைவு காரணமாக மலம் வறண்டு போகும். ஆதலால் விரேசனம் செய்விப்பது கடினம்.

2,3,5,6. ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 15-ல் காண்க.

4. பூசித் தேய்ப்பதற்கேற்றவாறு இந்த கஷாயத்தை சிறிது தடிப்பாகத் தயாரித்துக் கொள்ளவேண்டும் என இந்து கூறுகிறார்.

7. நவாயஸ சூர்ணத்தின் விளக்கத்தை - சிகித்ஸா ஸ்தானம் - அத்தியாயம் 16 - சுலோகம் 14-ல் காண்க.

मधुमेहित्वमापन्नो भिषग्भिः परिवर्जितः ॥ ४३ ॥

शिलाजतुतुलामद्यात्प्रमेहार्तः पुनर्नवः ॥

மதுமேக நிலையை அடைந்தது காரணமாக, வைத்யர் களால் கைவிடப்பட்டவர், 100 பலம் சிலாஜதுவை உட்கொள்ள; உடல் புதுமை அடைவர்.

**குறிப்பு:** ⋆பிரமிய நோய்க்கு கூறப்பட்ட பல்வேறு கஷாயங்களுள், ஏற்ற கஷாயங்களால் பாவனை செய்த சிலாஜதுவை உட்கொள்ள வேண்டும் என்று இந்து உரை கூறுகிறார்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने प्रमेहचिकित्सितं नाम द्वादशोऽध्यायः ॥ १२ ॥

சிகித்ஸாஸ்தானம் - பன்னிரெண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

## त्रयोदशोऽध्यायः - அத்தியாயம் - 13

अथाऽतो विद्रधिवृद्धिचिकित्सितं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து [1]வித்ருதிக்கட்டி, அண்டகோச வித்ருதி ஆகியவற்றின் சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

**குறிப்பு:** விரைவில் பழுக்கும் கட்டி வித்ருதி எனப்படும்.

विद्रधिं सर्वमेवामं शोफवत्समुपाचरेत् ।
प्रततं च हरेद्रक्तं पक्वे तु व्रणवत्क्रिया ॥ १ ॥

ஆம நிலையில் உள்ள எல்லா வித்ருதிக் கட்டிகளுக்கும் [1]வீக்கத்திற்குரிய சிகித்ஸை செய்ய வேண்டும். அடிக்கடி ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். பக்குவமான நிலையில் விரணத்திற்குரிய (பிளத்தல் முதலிய) சிகித்ஸையை செய்ய வேண்டும்.

**குறிப்பு:** 1. தோஷங்களுக்கேற்ப வீக்கத்திற்கு கூறிய சிகித்ஸை செய்ய வேண்டும்.

पंचमूलजलैर्धौतं वातिकं लवणोत्तरैः ।
भद्रादिवर्गयष्ट्याह्वतिलैरालेपयेद्व्रणम् ॥ २ ॥

वैरेचनिकयुक्तेन त्रैवृतेन विशोध्य च ।
विदारीवर्गसिद्धेन त्रैवृतेनैव रोपयेत् ॥ ३ ॥

## வாதவித்ருதி விரணத்திற்குச் சிகித்ஸை :

வாத வித்ருதி விரணத்தில் [1]பஞ்சமூல நீரால் கழுவி, [2]பத்ரதால்வாதிகணச் சரக்குகள், அதிமதுரம், [3]எள், இவற்றின் கல்க்கத்துடன் அதிக அளவு உப்புக் கலந்து பூசவேண்டும். [4]விரேசனப்பொருள் [5]சேர்த்த த்ருவிருதத் தால் சோதனம் செய்வித்து விதாரிகணச் சரக்குகள் சேர்த்து தயாரித்த த்ருவிருதத்தால் ஆறச் செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. பஞ்சமூலமென்று பொதுவாக எல்லா உரைகளிலும் குறிப்பிடப்படுகிறது. எனினும் மகா பஞ்சமூலம் விசேஷப் பொருத்தம் உள்ளதெனக் கொள்ளலாம்.

2. பத்ரதார்வாதிகணத்தின் விளக்கத்தை ஸூத்ர ஸ்தானம் 15-ஆம் அத்தியாயத்தில் காண்க.

3. பத்ரதார்வாதிகணச் சரக்குகள், அதிமதுரம், அதிக அளவு உப்பு ஆகியவை கலந்த எண்ணெயால் விரணத்தை நிரப்ப வேண்டும் என, ஸுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

4. விரேசனத் திரவியங்களை ஸூத்ரஸ்தானம் 15-ஆம் அத்தியாயத்தில் காண்க.

5. நெய், தைலம், மாம்ஸ எண்ணெய் இவற்றின் கூட்டுக்கு 'திருவிருதம்' அல்லது முக்கூட்டு என்பது பெயர்.

क्षालितं क्षीरितोयेन लिम्पेद्यष्ट्यमृतातिलैः ।
पैत्तं घृतेन सिद्धेन मंजिष्ठोशीरपद्मकैः ॥ ४ ॥

पयस्याद्विनिशाश्रेष्ठायष्टीदुग्धैश्च रोपयेत् ।

न्यग्रोधादिप्रवालत्वक्फलैर्वा-

### பித்த வித்ருதி விரணத்திற்கு சிகித்ஸை :

பித்த வித்ருதி விரணத்தை பால் மரங்களின் கஷாயத்தால், அலம்பியபின் அதிமதுரம், சீந்தில், எள் இவற்றின் கல்க்கத்தால் பூசவேண்டும். மஞ்சிட்டி, விளாமிச்சை, பதிமுகம், பால்முதுக்கன் கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், திரிபலை, அதிமதுரம், பால், இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்த கிருதத்தால் ஆற்றவேண்டும். அல்லது *ந்யக்ரோதாதிகணச் சரக்குகளின் துளிர், பட்டை, பழம், இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப் பட்ட கிருதத்தால் ஆறச் செய்யலாம்.

குறிப்பு: ★ ந்யக்ரோதாதிகணத்தின் விளக்கத்தை ஸூத்ர ஸ்தானம் அத்தியாயம் 15-ல் காண்க.

சரக்குகள், நீர், நெய் ஆகியவற்றை பொது பரி பாஷைப்படி சேர்க்கவேண்டும். பால், நெய்க்கு சம அளவு சேர்க்க வேண்டும்.

-कफजं पुनः ॥ ५ ॥

आरग्वधाम्बुना धौतं सक्तुकुम्भनिशातिलैः ।
लिम्पेत्कुलत्थिकादन्तीत्रिवृच्छ्यामाग्नितिल्वकैः ॥ ६ ॥

ससैन्धवैः सगोमूत्रैस्तैलं कुर्वीत रोपणम् ।

### கப வித்ருதி விரணத்தில் சிகித்ஸை :

கபத்தால் உண்டான வித்ருதி விரணத்தை [1]ஆரக்வதாதி கணச் சரக்குகளின் கஷாயத்தால் அலம்பி ஸத்துமா, சிவதை, மஞ்சள், எள் இவற்றால் பூசவேண்டும். கொள்,

நாகதந்தி, சிவதை, கருஞ்சிவதை, [2]கொடிவேலி, லோத்தி, இந்துப்பு, இவற்றுடன், பசுமூத்ரம் சேர்த்து காய்ச்சப் பட்ட தைலத்தை உபயோகித்து ஆறச்செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. ஆரக்வதாதிகணத்தின் விளக்கத்தை ஸூத். அத்தியாயம் 15-ல் காண்க.

2. (अर्क) எருக்கு என்றும் பாடம் காணப்படுகிறது.

रक्तागन्तूद्भवे कार्या पित्तविद्रधिवत्क्रिया ॥ ७ ॥

ரத்தம் வெளிக்காரணம் ஆகியவற்றால் உண்டான வித்ருதி விரணங்களுக்கு, பித்த வித்ருதிக்கு செய்வது போன்று சிகித்ஸை செய்ய வேண்டும்.

वरुणादिगणक्वाथमवकेऽभ्यन्तरोत्थिते ।
ऊषकादिप्रतीवापं पूर्वाह्णे विद्रधौ पिबेत् ॥ ८ ॥

घृतं विरेचनद्रव्यैः सिद्धं ताभ्यां च पाययेत् ।
निरूहं स्नेहबस्तिं च ताभ्यामेव प्रकल्पयेत् ॥ ९ ॥

## உட்புறக் கட்டிக்கு சிகித்ஸை :

உட்புறம் உண்டான கட்டி, பழுக்காத நிலையில் [1]வருணாதிகணச் சரக்குகளின் கஷாயத்தில் [2]ஊஷகாதிகணச் சரக்குகளின் சூரணம் கலந்து காலையில் பருக வேண்டும். விரேசனம் உண்டாக்கும் பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட கிருதம் வரணாதிகணமும், ஊஷ காதிகணமுமாக சேர்த்துப் பக்குவம் செய்த கிருதம் ஆகியவற்றையும் பருகச் செய்யலாம். வரணாதிகணச் சரக்குகள், ஊஷகாதி கணச்சரக்குகள் இவற்றைச் சேர்த்து, நிரூஹ பஸ்தியும் அனுவாசன பஸ்தியும் செய்விக்க வேண்டும்.

**குறிப்பு:** வரணாதிகணம், ஊஷகாதிகணம் இவற்றின் விளக்கத்தை ஸூத்ரஸ்தானம் அத்தியாம் 15-ல் காண்க.

पानभोजनलेपेषु मधुशिग्रुः प्रयेजितः ।
दत्तावापो यथादोषमपक्वं हन्ति विद्रधिम् ॥ १० ॥

தோஷங்களுக்கேற்ற கல்கப் பொருள்களுடன் செம் முருங்கையை பானம், உணவு, பூச்சு ஆகிய வகையில் உபயோகிக்க; பக்குவமடையாத வித்ருதி நீங்கும்.

त्रायन्तीत्रिफलानिम्बकटुकामधुकं समम् ।
त्रिवृत्पटोलमूलाभ्यां चत्वारोंऽ शाः पृथक् पृथक् ॥ ११ ॥

मसूरान्निस्तुषादष्टौ तत्क्वाथः सघृतो जयेत् ।
विद्रधीगुल्मवीसर्पदाहमोहमदज्वरान् ॥ १२ ॥

तृण्मूर्च्छाच्छर्दिहृद्रोगपित्तासृक्कुष्ठकामलाः ।

**திராயந்த்யாதி கஷாயம் :**

[1]துராய்ப்பூண்டு, திரிபலை, வேம்பு, கடுகரோஹிணீ, அதிமதுரம், இவை வகைக்கு 1 பங்கு, சிவதைவேர் 4 பங்கு, பேய்ப்புடல் வேர் 4 பங்கு, உமி நீக்கிய காராமணி 8 பங்கு, இவற்றை கஷாயமாக்கி நெய் சேர்த்து உட்கொள்ள; வித்ருதி, குன்மம், விஸர்ப்பம், எரிச்சல், மயக்கம், வெறி, ஜ்ாரம், தாகம், மூர்ச்சை, வாந்தி, இருதயரோகம், ரத்தபித்தம், குஷ்டம், காமாலை ஆகியவை நீங்கும்.

**குறிப்பு:** 1. இங்குள்ள त्रायन्ती-(துராய்) என்ற மூலச் சொல், பிராம்மீயைக் குறிப்பிடுவதாக சிலர் கூறுவர்.

2. கஷாயத் திரவத்தின் அளவும், நெய்யின் அளவும் இங்கு கூறப்படவில்லை.

3. கஷாயத்துக்கு சம அளவு நெய் கலந்து மத்தித்து பிரயோகிக்க வேண்டுமென்பது (சிகித்.அத்.5. சு. 111-ல்) கூறப்படுகிறது.

4. சங்க்ரஹத்தில் திராயந்தீ என்ற துராய், பேய்ப் புடல் இவற்றின் விகிதம் மாறுபடுகிறது.

कुडवं त्रायमाणायाः साध्यमष्टगुणेऽम्भसि ॥ १३ ॥

कुडवं तद्रसाद्धात्रीस्वरसात्क्षीरतो घृतात् ।
कर्षांशं कल्कितं तिक्तात्रायन्तीधन्वयासकम् ॥ १४ ॥

मुस्तातामलकीवीराजीवन्तीचन्दनोत्पलम् ।
पचेदेकत्र संयोज्य तद्घृतं पूर्ववद्गुणैः ॥ १५ ॥

## திராயந்த்யாதி கிருதம் :

4 பலம் துராயப் பூண்டு எடுத்து எட்டு மடங்கு நீரிலிட்டு முறைப்படி காய்ச்சி எடுத்த கஷாயம் 4 பலம், நெல்லிக் காய்ச்சாறு, பால், நெய் ஆகியவை வகைக்கு 4 பலம், இவற்றுடன் கடுகரோஹிணீ, துராயப்பூண்டு, காஞ்சொறி, கோரைக்கிழங்கு, கீழாநெல்லி, கோவை, கீரிப்பாலை, சந்தனம், நீலோத்பலம் ஆகியவை வகைக்கு ¼ பலம் எடுத்து கல்கம் செய்து கலந்து பக்குவம் செய்து பருக; முற்கூறப்பெற்ற பலன் உண்டாகும்.

**குறிப்பு:** திரவப்பொருள்கள் யாவும் இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்து 8 பலமாகக் கொள்ள வேண்டுமென இந்து கூறுகிறார்.

द्राक्षा मधूकं खर्जूरं विदारी सशतावरी ।
परूषकाणि त्रिफला तत्काथे पाचयेद्घृतम् ॥ १६ ॥

क्षीरैक्षुधात्रीनिर्यासप्राणदाकल्कसंयुतम् ।
तच्छातं शर्कराक्षौद्रपादिकं पूर्ववद्गुणैः ॥ १७ ॥

திராக்ஷை, இலுப்பைப்பூ, பேரீச்சை, பால்முதுக்கன் கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, சிற்றீஞ்சு, த்ரிபலை, இவற்றின் கஷாயத்துடன் *பால், கருப்பஞ்சாறு, நெல்லிச் சாறு ஆகியவற்றையும் கடுக்காய் கல்க்கமும் சேர்த்து, நெய் பக்குவம் செய்து கொள்ள வேண்டும். குளிர்ந்தபின் சர்க்கரை, தேன் ஆகியவற்றை நெய்யின் அளவில் ¼ பங்கு சேர்த்து உபயோகிக்க முற்கூறிய குணம் உண்டாகும்.

**குறிப்பு:** *பால் முதலிய திரவங்கள் யாவும் சேர்ந்து நெய்க்குச் சம அளவு என இந்துவும், பால் முதலிய திரவங்கள் ஒவ்வொன்றும் நெய்க்குச் சம அளவு என்று சிலரும் கூறுவர்.

हरेच्छृंगादिभिरसृक् सिरया वा यथान्तिकम् ।

**ரத்தம் வெளியேற்றுதல் :**

கொம்பு *முதலியவற்றின் உபயோகத்தின் மூலமாவது சமீபப் பகுதிக்கு ஏற்றவாறு ஸிரையைக் குத்தியாவது கெட்ட ரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** *கொம்பு முதலிய என்பதால் அட்டை, சுரைக் குடுக்கை ஆகியவை கூறப்படுகின்றன.

विद्रधिं पच्यमानं च कोष्ठस्थं बहिरुन्नतम् ॥ १८ ॥

ज्ञात्वोपनाहयेत् शूले स्थिते तत्रैव पिण्डिते ।
तत्पार्श्वपीडनात्सुप्तौ दाहादिष्वल्पकेषु च ॥ १९ ॥

पक्वः स्याद्विद्रधिं भित्वा व्रणवत्तमुपाचरेत् ।

## கோஷ்டத்தில் உண்டான வித்ருதி கட்டிக்கு சிகித்ஸை :

ஆமாசய பக்குவாசயங்களில் உண்டானதும், வெளிப் புறம் உயர்ந்ததுமான கட்டி பாகமடைவதை அறிந்து, (மாவுப் பிண்டங்களால்) கட்டவேண்டும். கோஷ்டத்தில் வலி நின்று, திரண்டு உருண்ட நிலையில், பக்கங்களில் அமுக்கினால் உணர்ச்சியற்று, *எரிச்சல் முதலியவை குன்றி இருப்பின் கட்டி பாகமடைந்துவிட்டது என அறிய வேண்டும். அந்நிலையில் கட்டியைப் பிளந்து விரணத்திற்கு உரியவாறு சிகித்ஸை செய்ய வேண்டும்.

**குறிப்பு:** *எரிச்சல் முதலிய என்பதால் குத்துவலி முதலியவை கூறப்படுகின்றன.

अन्तभागस्य चाप्येतच्चिह्नं पक्वस्य विद्रधेः ॥ २० ॥

இங்கு கூறிய அடையாளங்களே உட்புறம் உண்டாகும் கட்டிகள் பழுத்த நிலையிலும் காணப்படும்.

पक्वः स्रोतांसि सम्पूर्य स यात्यूर्ध्वमधोऽथवा ।
स्वयं प्रवृत्तं तं दोषमुपेक्षत हिताशिनः ॥ २१ ॥

दशाहं द्वादशाहं वा रक्षन् भिषगुपद्रवान् ।
असम्यग्वहति क्लेदे वरुणादिं सुखाम्भसा ॥ २२ ॥

पाययेन्मधुशिग्रुं वा यवागू तेन वा कृतान् ।
यवकोलकुलत्थोत्थयूषैरन्नं च शस्यते ॥ २३ ॥

உட்புறம் உண்டான வித்ருதிக்கட்டி பழுத்துவிடின், தோஷமானது ஸ்ரோதஸ்களை நிரப்பி கீழ் அல்லது மேல் மார்க்கமாக வெளியேறும். நோயாளி ஏற்ற உணவை உட்கொள்ள வேண்டும். தானாகவே வெளியேறுகின்ற

தோஷத்தை பொருட்படுத்த வேண்டியதில்லை. (வேறு சிகித்ஸை செய்யக்கூடாது) இவ்வாறு உபத்ரவங்களுக்கு மட்டும் சிகித்ஸை செய்து கொண்டு, 10 அல்லது 12 நாட்களைக் கழிக்க வேண்டும். சீழ் உரிய முறையில் வெளியேறாவிடில் வருணாதிகணச் சரக்குகளையாவது, செம்முருங்கையையாவது வெந்நீரில் கலந்து உட்கொள்ளச் சொல்ல வேண்டும். அல்லது *செம்முருங்கையால் தயார் செய்யப்பட்ட கஞ்சியைப் பருகச் செய்ய வேண்டும். யவை, இலந்தை, கொள் இவற்றால் தயாரிக்கப்பட்ட கஞ்சியுடன் உணவும் ஏற்றதாகும்.

**குறிப்பு:** (तेन) என்ற மூலச் சொல்லால் செம்முருங்கை மட்டுமின்றி வருணாதிகணச்சரக்குகளும் கூறப் படுவதாக இந்து கருதுகிறார்.

ऊर्ध्वं दशाहात्त्रायन्तीसर्पिषा तैल्वकेन वा ।
शोधयेद्बलतः शुद्धः सक्षौद्रं तिक्तकं पिबेत् ॥ २४ ॥

பத்து நாட்களுக்குப் பிறகு [1]துராய்ப்பூண்டு கிருதத்தால் அல்லது [2]தில்வக கிருதத்தால் பலத்திற்கேற்ப சோதனம் செய்ய வேண்டும். சோதனத்திற்குப் பின் தேன் கலந்து [3]திக்தக கிருதத்தைப் பருகவேண்டும்.

**குறிப்பு:** 1. துராய்ப்பூண்டு கிருதம் - இவ்வத்தியாயம் - 13-ஆம் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

2. தில்வக கிருதம் - சிகித். அத்யா. 3. சு. 152-ல் கூறப் பட்டுள்ளது.

3. திக்த கிருதம் - சிகித். அத். 19-ல் கூறப்பட விருக்கிறது.

सर्वशो गुल्मवच्चैनं यथादोषमुपाचरेत् ।

குன்ம நோயில் கூறியவாறு தோஷங்களுக்கேற்ப எல்லா விதத்திலும் வித்ருதிக்கட்டிக்கு சிகித்ஸை செய்ய வேண்டும்.

सर्वावस्थासु सर्वासु गुग्गुलुं विद्रधीषु च ॥ २५ ॥

कषायैर्योगिकैर्युञ्ज्यात्स्वैः स्वैस्तद्वच्छिलाजतु ।

**குக்கில் உபயோகம் :**

எல்லா வித்ருதிக் கட்டிகளிலும் எல்லாவித நிலைகளிலும், ஏற்றவாறு கஷாயங்களுடன் குக்கில் சேர்த்து உபயோகிக்க வேண்டும். அவ்வாறே கஷாயங்களுடன் சிலாஜதுவையும் உபயோகிக்க வேண்டும்.

पाकं च वारयेद्यत्नात्सिद्धिः पक्के हि दैविकी ॥ २६ ॥

अपि चाशु विदाहित्वाद्विद्रधिः सोऽभिधीयते ।

கட்டி பாகமடைவதை மிகக் கவனமாக தவிர்க்க வேண்டும். பக்குவமடைந்த நிலையில் தெய்வச்செயல் காரணமாகவே குணம் உண்டாகிறது. மேலும் விரைவில் பழுப்பதால் இந்நோய் வித்ருதி என்று கூறப்படுகிறது.

सति चालोचयेन्मेहे प्रमेहाणां चिकित्सितम् ॥ २७ ॥

வித்ருதியுடன் பிரமேக நோயும் காணப்பட்டால் பிரமேக *சிகித்ஸையும் செய்ய வேண்டும்.

ஏனெனில் பிரமியத்தில் கூறப்பட்ட கட்டிகளுள் வித்ருதியும் ஒன்றாகும்.

**குறிப்பு:** *பிரமேக சிகித்ஸையும் என்பதால் வித்ருதி சிகித்ஸையும் செய்ய வேண்டுமென்று குறிப்பிடப் படுகிறது.

स्तनजे व्रणवत्सर्वं न त्वेनमुपनाहयेत् ।
पाटयेत्पालयन् स्तन्यवाहिनीः कृष्णचूचुकौ ॥ २८ ॥

सर्वास्वामाद्यवस्थासु निर्दुहीत च तत्स्तनम् ।
इति विद्रधिचिकित्सा-

**(ஸ்தன வித்ருதி) மார்பக வித்ருதி :**

மார்பகத்தில் உண்டாகும் வித்ருதிக் கட்டிகளுக்கு, கட்டுப் போடுதல் நீங்கலாக, மற்ற விரண சிகித்ஸை யாவற்றையும் செய்ய வேண்டும். (பக்குவமான நிலையில்) பாலை எடுத்துச் செல்லும் ஸிரைகள், முலைக்காம்பு ஆகிய இடங்களைக் காப்பாற்றி, மார்பக வித்ருதியை பிளக்கவேண்டும். மார்பகக் கட்டியில் பழுக்காத நிலை முதலிய எல்லா நிலைகளிலும் (கட்டி உண்டான) மார்பகத்திலிருந்து பாலை வெளியேற்ற வேண்டும்.

-अथ वृद्धिचिकित्सा ।
शोधयेत्त्रिवृता स्निग्धं वृद्धो स्नेहैश्चलात्मके ॥ २९ ॥

कौशाम्रतिल्वकैरण्डसुकुमारकमिश्रकैः ।

**வாயுவால் உண்டான அண்ட விருத்தி சிகித்ஸை:**

வாயுவால் உண்டான அண்ட விருத்தியில் நோயாளிக்கு [1]த்ருவிருத ஸ்னேஹ பானத்தால் [2]நெய்ப்பு உண்டாக்கிய பின்னர் காட்டு மாங்காய் எண்ணெய், லோத்தி எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், [3]சுகுமார கிருதம், [4]மிச்ரக ஸ்னேஹம் இவற்றால் விரேசனம் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: 1. திருவிருதம்-நெய், எண்ணெய், மாம்ஸ எண்ணெய் இவற்றின் கலவை.

திருவிருதத்தை பக்குவம் செய்யாமல் உபயோகிப்பது சிறந்ததல்ல என்ற கருத்தில் மூன்றாவது சுலோகத்தில் கூறப்பட்டவாறு விதார்யாதி கணச்சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகிக்கவேண்டும் என சிலர் கருதுவதாக அருணதத்தர் கூறுகிறார்.

2. வியர்ப்பித்தலும் செய்விக்க வேண்டுமென இந்து கூறுகிறார்.

3. சுகுமாரம் - இந்த அத்தியாயத்தில் 41-வது சுலோகம் தொடங்கி கூறப்படவிருக்கிறது.

4. மிச்ரக ஸ்னேஹம் - அத்.14. சு.89-ல் கூறப்பட இருக்கிறது.

ततोऽनिलघ्ननिर्यूहकल्कस्नेहैर्निरूहयेत् ॥ ३० ॥

रसेन भोजितं यष्टितैलेनान्वासयेदनु ।
स्वेदप्रलेपा वातघ्नाः पक्के भित्वा व्रणक्रियाम् ॥ ३१ ॥

சோதனத்துக்குப் பிறகு வாயுவைக் கண்டிக்கும் குணமுள்ள கஷாயம், கல்க்கம், நெய்ப்புப்பொருள் ஆகியவற்றைச் சேர்த்து நிரூஹபஸ்தி செய்விக்க வேண்டும். அடுத்து மாம்ஸரஸம் உண்ணச் செய்து மதுயஷ்டி தைலத்தால் அனுவாஸனம் செய்விக்க வேண்டும். வாயுவைக் கண்டிக்கக் கூடிய வியர்வைச் சிகிச்சை பூச்சுக்கள் ஆகியவை ஏற்றவையாகும். பக்குவமடைந்த நிலையில் அண்டவிருத்தியைக் கீறி விரண சிகித்ஸை செய்ய வேண்டும்.

पित्तरक्तोद्भवे वृद्धावामपक्के यथायथम् ।
शोफव्रणक्रियां कुर्यात् प्रततं च हरेदसृक् ॥ ३२ ॥

## பித்தம் ரத்தம் இவற்றால் உண்டான அண்ட விருத்திக்குச் சிகித்ஸை :

பித்தம், ரத்தம் ஆகியவை காரணமாக உண்டான அண்ட விருத்திக்கு ஆமபக்குவ நிலைகளில் முறையே பித்தவீக்கம், பித்தவிரணம் ஆகியவற்றின் சிகித்ஸையைச் செய்ய வேண்டும். அடிக்கடி ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

गोमूत्रेण पिबेत्कल्कं श्लैष्मिकै पीतदारुजम् ।
विम्लापनादृते चास्य श्लेष्मग्रन्थिक्रमो हितः ॥ २३ ॥

पक्वे च पाटिते तैलमिष्यते व्रणशोधनम् ।
सुमनोरुष्करांकोल्लसप्तपर्णेषु साधितम् ॥ २४ ॥

पटोलनिम्बरजनीविडंगकुटजेषु च ।

## கபத்தால் உண்டான அண்ட விருத்திக்கு சிகித்ஸை:

கபத்தால் உண்டான அண்ட விருத்தியில் [1]மரமஞ்சள் கல்க்கத்தை பசு நீரில் கலந்து பருகவேண்டும். மேலும் கபக்ரந்திக்கு [2]கூறப்படவிருக்கிற சிகித்ஸைகளில் துவணச் செய்தல் நீங்கலாக மற்றவற்றைச் செய்விக்க வேண்டும்.

பழுத்த நிலையில் கீறியபின் ஜாதி மல்லிகை, சேங்கொட்டை, அழிஞ்சில், ஏழிலம்பாலை, பேய்ப்புடல் வேம்பு, மஞ்சள், வாய்விளங்கம், வெட்பாலை ஆகிய வற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலத்தை உபயோகிக்க விரணம் சுத்தியாகும்.

குறிப்பு: 1. தேவதாரு எனச் சிலர் கூறுவதாக இந்து கூறுகிறார்.

2. கபக்ரந்தியில் சிகித்ஸை உத். அத்தி. 30-ல் காண்க.

मेदोजं मूत्रपिष्टेन सुस्विन्नं सुरसादिना ॥ ३५ ॥

शिरोविरेकद्रव्यैर्वा वर्जयन् फलसेवनीम् ।
दारयेद्वृद्धिपत्रेण सम्यङ्मेदसि सूद्धृते ॥ ३६ ॥

व्रणं माक्षिककासीससैन्धवप्रतिसारितम् ।
सीव्येदभ्यंजनं चास्य योज्यं मेदोविशुद्धये ॥ ३७ ॥

मनः शिलैलासुमनोग्रन्थिभल्लातकैः कृतम् ।
तैलामाव्रणसन्धानात्स्नेहस्वेदौ च शीलयेत् ॥ ३८ ॥

**கொழுப்பால் உண்டான அண்ட விருத்திக்கு சிகித்ஸை :**

கொழுப்பால் உண்டான அண்ட விருத்தியில் பசு நீர் சேர்த்து அரைக்கப்பட்ட சுரஸாதிகணச் சரக்குகளாலாவது, சிரோ விரேசனத் திரவியங்களாலாவது வியர்வை உண்டாக்க வேண்டும். பீஜம் குறித் தையல் ஆகியவற்றிற்கு தீங்கு ஏற்படாதவாறு, அண்டகோசத்தை விருத்திபத்ரம் என்னும் சஸ்திரத்தால் பிளக்கவேண்டும். கொழுப்பை முற்றிலும் வெளியேற்றிய பின் தேன், அன்னபேதி, இந்துப்பு ஆகியவற்றைத் தூவி விதைக்க வேண்டும். கொழுப்பு சுத்தியடைவதற்காக அப்பியங்கம் செய்விக்க மனோசிலை, ஏலம், ஜாதிமல்லிகையின் கணு, சேங்கொட்டை, ஆகியவற்றைக் கலந்து பக்குவம் செய்யப் பட்ட தைலத்தை உபயோகிக்க வேண்டும். விரணம் ஆறும் வரை நெய்ப்புச் சிகித்ஸையையும், வியர்வைச் சிகித்ஸை யையும் தொடர்ந்து செய்விக்க வேண்டும்.

मूत्रजं स्वेदितं स्निग्धैर्वस्त्रपट्टेन वेष्टितम् ।
विध्येदधस्तात्सेवन्याः स्रावयेच्च यथोदरम् ॥ ३९ ॥

व्रणं च स्थगिकाबद्धं रोपयेत्-

**சிறுநீரால் உண்டான அண்ட விருத்தி சிகித்ஸை:**

சிறுநீர் காரணமாக உண்டான அண்டவிருத்தியில் நெய்ப்புப் பொருள்களால் (அப்பகுதியில்) வியர்வை உண்டாக்கியபின் துணியால் அண்டகோசத்தைச் சுற்ற வேண்டும். ஆண் குறித் தையலுக்குக் கீழ்புறம் [1]குத்தி உதர நோயில் [2]கூறியவாறு நீரை வெளியேற்ற வேண்டும். விரணத்திற்கு ஸ்தகிகா என்ற முறையில் கட்டுப்போட்டு ஆற்ற வேண்டும்.

**குறிப்பு:** வ்ரீஹி முக சஸ்திரத்தில் குத்தவேண்டும்.

2. இரண்டு துவாரங்கள் உள்ள குழாயினாலாவது, மயில் இறகாலாவது நீரை வெளியேற்ற வேண்டும்.

-अन्त्रहेतुके

फलकोशमसम्प्राप्ते चिकित्सा वातवृद्धिवत् ॥ ४०॥

**குடல் இறக்கம் காரணமான அண்ட விருத்திக்கு சிகித்ஸை :**

குடல் இறக்கம் காரணமாக ஏற்பட்ட அண்ட விருத்திக்கு, விதைகளை அடையாத நிலையில், வாயுவால் உண்டான அண்டவிருத்திக்கு கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

पचेत्पुनर्नवतुलां तथा दशपलाः पृथक् ।
दशमूलपयस्याश्वगन्धैरण्डशतावरीः ॥ ४१ ॥

द्विदर्भशरकाशेक्षुमूलपोटगलान्विताः ।

वहेऽपामष्टभागस्थे तत्र त्रिंशत्पलं गुडात् ॥ ४२ ॥
प्रस्थमेरण्डतैलस्य द्वौ घृतात्पयसस्तथा ।
आवपेद् द्विपलांशं च कृष्णातन्मूलसैन्धवम् ॥ ४३ ॥

यष्टीमधु(चित्र)कमृद्वीकायवानी नागराणि च ।
तत्सिद्धं सुकुमाराख्यं सुकुमारं रसायनम् ॥ ४४ ॥

वातातपाध्वयानादिपरिहार्येष्वयन्त्रणम् ।
प्रयोज्यं सुकुमाराणामीश्वराणां सुखात्मनाम् ॥ ४५ ॥

नृणां स्त्रीवृन्दभर्तृणामलक्ष्मीकलिनाशनम् ।
सर्वकालोपयोगेन कान्तिलावण्यपुष्टिदम् ॥ ४६ ॥

वर्ध्मविद्रधिगुल्मार्शोयोनिमेढ्रानिलार्तिषु ।
शोफोदरखुडप्लीहविड्विबन्धेषु चोत्तमम् ॥ ४७ ॥

*சுகுமார கிருதம் :*

*100 பலம் மூக்கிரட்டை, தசமூலம், கீரைப்பாலை, அமுக்கிராக்கிழங்கு, ஆமணக்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, தர்ப்பை. ஆற்றுத்தர்ப்பை, ஆமை, நாணல்வேர், கரும்பின் வேர், கொட்டைக் கரந்தைவேர் இவை வகைக்கு 10 பலம். இவற்றை 64 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ள வேண்டும். அந்த கஷாயத்தில் 30 பலம் வெல்லம், 1 பிரஸ்தம் ஆமணக்கெண்ணெய், 2 பிரஸ்தம் நெய், 2 பிரஸ்தம் பால் ஆகியவற்றையும் திப்பிலி, கண்டதிப்பிலி, இந்துப்பு, அதிமதுரம், இலுப்பைப்பூ, திராக்ஷை, ஓமம், சுக்கு இவற்றை வகைக்கு 2 பலம் எடுத்து கல்க்கமாக்கியும் சேர்த்துப் பக்குவம் செய்ய வேண்டும். மென்மை பொருந்திய இந்த கிருதம் சுகுமாரம் எனப்படும். இது ஒரு*

வகை ரஸாயனமாகும். மென்மையான உடற்கூறு உள்ளவர்களுக்கும் ஏற்றது. வாயு, வெயில், வழிநடத்தல், சவாரி செய்தல் முதலியவற்றைத் தடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. மென்மையான உடற்கூறு உள்ள சுகஜீவிகளுக்கும் தனவந்தர்களுக்கும் பெண் கூட்டங்களின் நாயகர்களுக்கும் ஏற்றது. செல்வமின்மை, கலி, ஆகியவற்றைப் போக்கும். எப்பொழுதும் உப யோகிக்க தேக காந்தி, அழகு, உடல் புஷ்டி, ஆகியவற்றை உண்டாக்கும். அண்ட விருத்தி, வித்ருதிக்கட்டி, குன்மம், மூலம், யோனி நோய், குறிநோய், வாதநோய், வீக்கம், உதரம், வாத ரத்தம், மண்ணீரல் வீக்கம், மலத்தடை ஆகிய நோய்களிலும் மிக ஏற்றதாகும்.

குறிப்பு: கஷாயத்தில் பாலும் வெல்லமும் கலந்து பாகுவைத்து கல்க்கச் சரக்குகளைச் சூரணமாக்கிக் கலந்து நெய்யும் ஆமணக்கெண்ணெயும் சேர்த்து லேஹிய பாகமாக செய்து கொள்வதும் உண்டு.

यायाद्वर्ध्मे न चेच्छान्तिं स्नेहरेकानुवासनैः ।
बस्तिकर्म पुरः कृत्वा वङ्क्षणस्थं ततो दहेत् ॥ ४८ ॥

अग्निना मार्गरोधार्थं मरुतः अर्धेन्दुवक्रया ।

நெய்ப்புப் பொருள் பருகுதல் விரேசனம், அனுவாஸன பஸ்தி இவற்றால் அண்ட விருத்தி நோய் நீங்காவிடில் முன்னதாக பஸ்திப் பிரயோகம் செய்து வாயுவிற்குத் தடை உண்டாவதற்காக பாதி சந்திரன் போன்ற சலாகை யால் தொடை இடுக்கில் சூடு இடவேண்டும்.

अंगुष्ठस्योपरि स्नाव पीतं तन्तुसमं च यत् ॥ ४९ ॥

उत्क्षिप्य सूच्या तत्तिर्यग्देहेच्छित्वा यतो गदः ।

ततोऽन्यपार्श्वेऽन्ये त्वाहुर्दहेद्वाऽनामिकाङ्गुलेः ॥ ५० ॥

गुल्मेऽन्येर्वातकफजे प्लीह्नि चायं विधिः स्मृतः ।
कनिष्ठिकानामिकयोर्विश्वाच्यां च यतो गदः ॥ ५१ ॥

[1]கட்டைவிரலுக்கு மேல்புறம் (பின்புறம்) உள்ளதும், மஞ்சள் நிறமானதும், நூல் போன்றதுமான தசை நாரை ஊசியினால் மேலே தூக்கி வெட்டிய பின் குறுக்காகச் சூடு இடவேண்டும். நோய் பீடிக்கப்பட்டதின் மறு புறத்தில் உள்ள கட்டை விரலில் சூடு (மேற்கண்டவாறு) இட வேண்டுமென்று சில ஆசார்யர்களும், அவ்வாறே மோதிர விரலில் சூடு இடவேண்டும் என்று சில ஆசார்யர்களும் கூறுகின்றனர்.

வாத கபங்களால் உண்டான குன்மத்திலும், மண்ணீரல் நோயிலும் இவ்வாறு சூடிட வேண்டுமென சில ஆசார்யர்கள் கூறுகின்றனர்.

[1]விச்வாசி என்னும் வாத நோய் உண்டான பக்கத்தில் உள்ள சுண்டுவிரல், மோதிர விரல் இவற்றின் இடையில் உள்ள நரம்புகளில் சூடு இடவேண்டும்.

குறிப்பு: 1. கைக்கட்டை விரல் என இந்து கூறுகிறார்.

2. விசவாசி-அக்குள் தொடங்கி கை விரல் நுனிவரை நரம்பைப் பற்றி தீவிரமான வலி உண்டாக்கும் நோய்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने विद्रधिवृद्धिचिकित्सितं नाम त्रयोदशोऽध्यायः ॥ १३ ॥

சிகித்ஸாஸ்தானம் - பதின்மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

# ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

## चतुर्दशोऽध्यायः - அத்தியாயம் - 14

अथाऽतो गुल्मचिकित्सितं व्याख्यास्यामः।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து குன்ம சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறுகின்றனர்.

गुल्मं बद्धशकृद्वातं वातिकं तीव्रवेदनम् ।
रूक्षशीतोद्भवं तैलैः साधयेद्वातरोगिकैः ॥ १ ॥

पानान्नान्वासनाभ्यंगैः स्निग्धस्य स्वेदमाचरेत् ।
आनाहवेदनास्तम्भविबन्धेषु विशेषतः ॥ २ ॥

स्रोतसां मार्दवं कृत्वा जित्वा मारुतमुल्बणम् ।
भित्वा विबन्धं स्निग्धस्य स्वेदो गुल्ममपोहति ॥ ३ ॥

**வாதகுன்ம சிகித்ஸை :**

மலம், வாயு ஆகியவை தடைப்பட்ட நிலையில் தோன்றியதும், மிக்கவேதனை உள்ளதும், வறட்சி, குளிர்ச்சி ஆகியவை காரணமாக உண்டானதுமான வாத குன்ம நோய்க்கு [1]வாத நோய் சிகித்ஸையில் கூறப்படவிருக்கிற தைலங்களால் சிகித்ஸை செய்ய வேண்டும்.

**வியர்வை உண்டாக்குதல் :**

பானம், உணவு, அனுவாசன பஸ்தி, அப்யங்கம் ஆகியவற்றால் உடலில் நெய்ப்பு உண்டாக்கி வியர்வை உண்டாக்க வேண்டும். பொருமல், வேதனை, தம்பிதம், மலத்தடை ஆகியவை உள்ளவர்களுக்கு விசேஷமாக

வியர்வை உண்டாக்க வேண்டும். நெய்ப்பு உள்ளவருக்குச் செய்யப் பட்ட வியர்வை உண்டாக்கும் சிகித்ஸையானது ஸ்ரோதஸ்களை மென்மையாக்கி, அதிகரித்த வாயுவை அடக்கி, தடைகளை உடைத்து குன்ம நோயைப் போக்குகிறது.

குறிப்பு: 1. வாத நோய் சிகித்ஸை 21-வது அத்தியாயத்தில் கூறப்படவிருக்கிறது.

स्नेहपानं हितं गुल्मे विशेषेणोर्ध्वनाभिजे ।
पक्वाशयगते बस्तिरुभयं जठराश्रये ॥ ४ ॥

## இடத்திற்கேற்ப சிகித்ஸை :

நாபிக்கு மேலாக உண்டான குன்மத்திற்கு நெய்ப்புப் பொருள் பருகுதலும் பக்குவாசயத்தில் குன்மம் உண்டாகி இருந்தால் பஸ்தி செய்விப்பதும் வயிற்றில் குன்மம் உண்டாயிருப்பின் நெய்ப்புப் பொருள் பருகுதலும் பஸ்தி ப்ரயோகமும் விசேஷமாக ஏற்றவையாகும்.

दीप्तेऽग्नौ वातिके गुल्मे विबन्धेऽनिलवर्चसोः ।
बृंहणान्यन्नपानानि स्निग्धोष्णानि प्रदापयेत् ॥ ५ ॥

पुनःपुनः स्नेहपानं निरूहाः सानुवासनाः ।
प्रयोज्या वातजे गुल्मे कफपित्तानुरक्षिणः ॥ ६ ॥

வாத குன்மத்தில் ஜாடராக்னி பலமடைந்திருப்பதுடன், வாயுவும், மலமும் தடைப்பட்டும் இருந்தால் நெய்ப்பும், உஷ்ணமும் உள்ளதும், உடலைப்பருக்கச் செய்வதுமான உணவு, பானம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும்.

வாத குன்மத்தில் கபத்திற்கும் பித்தத்திற்கும் தீங்கு ஏற்படாதவாறு அடிக்கடி நெய்ப்புப்பொருள் பருகுதலும்

நிரூஹ பஸ்திகளும், அனுவாஸன பஸ்திகளும், பிரயோகிக்க வேண்டும்.

बस्तिकर्म परं विद्याद्गुल्मघ्नं तद्धि मारुतम् ।
स्वस्थाने प्रथमं जित्वा सद्यो गुल्ममपोहति ॥ ७ ॥

तस्मादभीक्ष्णशो गुल्मा निरूहैः सानुवासनैः ।
प्रयुज्यमानैः शाम्यन्ति वातपित्तकफात्मकाः ॥ ८ ॥

**குன்ம நோயில் பஸ்தியின் சிறப்பு :**

பஸ்தி செய்வித்தல், முக்கியமாக குன்ம நோயைப் போக்கும். இது முதலில் வாயுவை அதன் ஸ்தானமாகிய பக்குவாசயத்தில் சென்று உடனடியாக குன்மத்தைப் போக்கும். ஆகையால், அனுவாஸனத்துடன் கூடிய நிரூஹ பஸ்தியை அடிக்கடி செய்விப்பதால் வாதம், பித்தம், கபம், ஆகியவை காரணமாக உண்டான குன்ம நோய்கள் நீங்குகின்றன.

हिंगुसौवर्चलव्योषबिडदाडिमदीप्यकैः ।
पुष्कराजाजिधान्याम्लवेतसक्षारचित्रकैः ॥ ९ ॥

शठीवचाजगन्धैलासुरसैर्दधिसंयुतैः ।
शूलानाहहरं सर्पिः साधयेद्वातगुल्मिनाम् ॥ १० ॥

**ஹிங்க்வாதி கிருதம் :**

பெருங்காயம், சௌவர்ச்சல உப்பு, திரிகடு, வளையலுப்பு, மாதுளை, ஓமம், புஷ்கரமூலம், ஜீரகம், மல்லி, புளிவஞ்சி, யவக்ஷாரம், கொடிவேலி, பூலாங்கிழங்கு, வசம்பு, நாய்வேளை, ஏலம், துளசி இவற்றுடன் தயிரும், நெய்யும் கலந்து பக்குவம் செய்து உட்கொள்ள வேண்டும்.

இது வாதகுன்மம் உள்ளவர்களின் சூலை, பொருமல் ஆகியவற்றை நீக்கும்.

**குறிப்பு:** காயம் முதலியவற்றைக் கல்க்கமாக்கி உபயோகிக்க வேண்டும். நெய்க்கு ¼ பங்கு கல்க்கப் பொருள்களும் சமனளவு தயிரும், 4 மடங்கு நீரும் கலந்து பக்குவம் செய்ய வேண்டும்.

हपुषोषणपृथ्वीकापंचकोलकदीप्यकैः ।
साजाजीसैन्धवैर्दध्ना दुग्धेन च रसेन च ॥ ११ ॥

दाडिमान्मूलकात्कोलात्पचेत्सर्पिर्निहन्ति तत् ।
वातगुल्मोदरानाहपार्श्वहृत्कोष्ठवेदनाः ॥ १२ ॥

योन्यर्शोग्रहणीदोषकासश्वासारुचिज्वरान् ।

**ஹபுஷாதி கிருதம் :**

கொட்டக்கரந்தை, மிளகு, பெருஞ்சீரகம், பஞ்சகோலம், ஓமம், ஜீரகம், இந்துப்பு, இவற்றுடன் தயிர், பால், மாதுளைச் சாறு, முள்ளங்கிச் சாறு, இலந்தைச் சாறு ஆகியவற்றைக் கலந்து நெய் பக்குவம் செய்து உபயோகிக்க; வாத குன்மம், உதரம், பொருமல், விலாப் பக்கவலி, இருதய வலி, வயிற்றுவலி, யோனிநோய், மூலம், கிராணி நோய், காஸம், ச்வாஸம், ருசியின்மை, ஜுரம் ஆகியவை நீங்கும்.

**குறிப்பு:** திரவங்கள் ஒவ்வொன்றும் நெய்க்கு சம அளவு.

दशमूलं बलां कालां सुषवीं द्वौ पुनर्नवौ ॥ १३ ॥

पौष्करैरण्डरास्नाश्वगन्धभार्ग्यमृताशठीः ।

पचेद्ग्रन्थपलाशं च द्रोणेऽपां द्विपलोन्मितम् ॥ १४ ॥

यवैः कोलैःकुलत्थैश्च माषैश्च प्रास्थिकैः सह ।
क्वाथे स्मिन्दधिपात्रे च घृतप्रस्थं विपाचयेत् ॥ १५ ॥

स्वरसैर्दाडिमाम्रातमातुलुंगोदूमवैर्युतम् ।
तथा तुषाम्बुधान्यम्लयुतैः श्लक्ष्णैश्च कल्कितैः ॥ १६ ॥

भार्गीतुम्बुरुषड्ग्रन्थाग्रन्थिरास्नाग्निधान्यकैः ।
यवानकयवान्यम्लवेतसासितजीरकैः ॥ १७ ॥

अजाजीहिंगुहपुषाकारवीवृषकोषकै : ।
निकुम्भकुम्भमूर्वेभपिप्पलीवेल्लदाडिमैः ॥ १८ ॥

श्वदंष्ट्रात्रपुसैर्वारुबीजहिंस्राश्मभेदकैः ।
मिसिद्धिक्षारसुरससारिबानीलिनीफलैः ॥ १९ ॥

त्रिकटुत्रिपटूपेतैर्दाधिकं तद्व्यपोहति ।
रोगानाशुतरान् पूर्वान् कष्ठानपि च शीलितम् ॥ २० ॥

अपस्मारगरोन्मादमूत्राघातानिलामयान् ।

***தாதிகம் கிருதம் (தயிராலனவை) :***

*தசமூலம், சிற்றாமுட்டி, அவுரி, பெருஞ்சீரகம், மூக்கிரட்டை, சிவப்பு மூக்கிரட்டை, புஷ்கரமூலம், ஆமணக்கு, சிற்றரத்தை, அமுக்கிரா, சிறுதேக்கு, சீந்தில், பூலாங்கிழங்கு, பெரும்பூலாங்கிழங்கு இவை வகைக்கு 2 பலம்; யவை, இலந்தை, கொள், உளுந்து ஆகியவை வகைக்கு 1 பிரஸ்தம்; இவற்றை 16 பிரஸ்த ஜலத்திலிட்டு கஷாயமாக்கி அதில் 4 பிரஸ்தம் தயிரும், நெய்*

மாதுளைச்சாறு, காட்டுமாம்பழச் சாறு, துருஞ்சிச்சாறு, தோல் நீக்காத யவைக்கள், தான்யாம்லம் என்ற காபி சுக்தக்காடி ஆகியவையும் (வகைக்கு 1 பிரஸ்தம்), சிறு தேக்கு [1]தூம்பூனி வசம்பு, கண்டதிப்பிலி, சிற்றரத்தை, கொடிவேலி, மல்லி, ஓமம், குரோசானி ஓமம், புளிவஞ்சி, கருஞ்சீரகம், ஜீரகம், காயம், கொட்டக்கரந்தை, பெருஞ் சீரகம், ஆடாதோடை, உவர்மன், நாகதந்தி, சிவதை, பெருங்குரும்பை, யானைத்திப்பலி, வாய்விடங்கம், மாதுளை, நெருஞ்சில், கக்கரிவிதை, வெள்ளரிவிதை, சடா மாஞ்சில், கல்லூர்வஞ்சி, சதகுப்பை, ஸர்ஜக்ஷாரம், யவ க்ஷாரம், துளசி, நன்னாரி, அவுரிக்காய், த்ரிகடு, இந்துப்பு, சௌவர்ச்சல உப்பு, வளையலுப்பு இவற்றின் கல்க்கமும் சேர்த்து பக்குவம் செய்ய வேண்டும். இது தாதிகம் (தயிராலானது) எனப்படும். இந்த கிருதத்தை தொடர்ந்து உட்கொள்ள, முற்கூறப்பட்ட கஷ்டமான நோய்களும் நீங்கும். மேலும் வலிப்பு, இடுவிஷம், பைத்தியம் சிறு நீர்க்கட்டு, வாத நோய்கள் ஆகியவற்றையும் நீக்கும்.

**குறிப்பு:** சிறுதேக்கு முதலியவையாவும் நெய்ப்புப் பொருளுக்கு ¼ பங்கு.

1. தும்புரு என்ற மூலச்சொல்லுக்கு மல்லி என இந்து உரை கூறுகிறார். எனினும் மல்லியும் தனியாகக் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

त्र्यूषणत्रिफलाधान्यचविकावेल्लचित्रकैः ॥ २१ ॥

कल्कीकृतैर्घृतं पक्वं सक्षीरं वातगुल्मनुत् ।

த்ரிகடு, த்ரிபலை, மல்லி, செவ்வியம், வாய்விளங்கம், கொடிவேலி இவற்றைக் கல்க்கமாக்கி பால் சேர்த்து,

நெய்யைப் பக்குவம் செய்து உட்கொள்ள; வாத குன்மம் நீங்கும்.

குறிப்பு: நெய்க்கு சம அளவு பால், 4 மடங்கு நீர் ஆகிய வற்றைச் சேர்த்து பக்குவம் செய்ய வேண்டும்.

तुलां लशुनकन्दानां पृथक्पञ्चपलांशकम् ॥ २२ ॥

पंचमूलं महच्चाम्बुभारार्थे तद्विपाचयेत् ।
पादशेषं तदर्धेन दाडिमस्वरसं सुराम् ॥ २३ ॥

धान्याम्लं दधि चादाय पिष्टांश्चार्धपलांशकान् ।
त्र्यूषणत्रिफलाहिंगुयवानीचव्यदीप्यकान् ॥ २४ ॥

साम्लवेतससिन्धूत्थदेवदारून् पचेद्घृतात् ।
तैः प्रस्थं तत्परं सर्ववातगुल्मविकारजित् ॥ २५ ॥

லசுனாதி கிருதம் :

100 பலம் உள்ளிப்பூண்டு, மகாபஞ்சமூலச் சரக்குகள் வகைக்கு 5 பலம். இவற்றை 1000 பலம் நீரிலிட்டுக் நாலில் ஒன்றாய் காய்ச்ச வேண்டும். மாதுளைச் சாறு, கள், தான் யாம்லம், தயிர் ஆகியவற்றைக் கஷாயத்தின் பாதியளவு சேர்ப்பதுடன் த்ரிகடு, திரிபலை, காயம், ஓமம், செவ்வியம், ஜீரகம், புளிவஞ்சி, இந்துப்பு, தேவதாரு ஆகியவை வகைக்கு ½ பலம் எடுத்து கல்க்கமாக்கி கலந்து 1 பிரஸ்தம் நெய் சேர்த்து பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இந்தக் கிருதம் எல்லா வித வாத குன்மத்தையும் போக்கும்.

குறிப்பு: *மாதுளைச்சாறு முதலியவை ஒவ்வொன்றும் கஷாயத்தின் பாதியளவாகும் என இந்து கூறுகிறார்.

இரட்டித்தல் பரிபாஷைப்படி நெய்யின் அளவு 32 பலம் ஆகும்.

षट्पलं वा पिबेत् सर्पिर्यदुक्तं राजयक्ष्मणि ।
प्रसन्नया वा क्षीरार्थः सुरया दाडिमेन वा ।। २६ ।।

घृते मारुतगुल्मघ्नः कार्यो दध्नाः सरेण वा ।

**ஷட்பல கிருதம் :**

க்ஷய நோய் சிகித்ஸையில் கூறப்பட்ட ஷட்பல கிருதமும் இந்நோயில் பருக ஏற்றது. அல்லது இந்த கிருதத்தில் பாலுக்குப் பதிலாக கள் தெளிவு, கள், மாதுளைச்சாறு, தயிர்த் தெளிவு இவற்றுள் ஒன்றை உபயோகிக்கலாம். இது வாத குன்மத்தைப் போக்கும்.

**குறிப்பு:** ஷட்பல கிருதத்தின் செய்முறைப்படி பால் சேர்த்து தயாரித்தது ஒத்துக்கொள்ளாத நிலையில் பாலுக்குப் பதிலாக கள் முதலியவற்றை ஏற்றவாறு சேர்த்து ஷட்பல கிருதம் பக்குவம்செய்து பிரயோகிக்கலாம் என அருணதத்தர் கூறுகிறார்.

வாதகுன்மத்திற்கான கிருதங்கள் எல்லாவற்றிலும் இவ்வாறே பாலுக்கு பதிலாக, கள் முதலியவற்றுள் ஒன்று சேர்த்து தயாரித்து உட்கொள்ளலாம் என இந்து கூறுகிறார். பாலைக்காட்டிலும் இவற்றுள் ஒன்றின் பிரயோகம் விசேஷமாக ஏற்றது எனக் கருதினால் இது ஏற்றதாகும்.

वातगुल्मे कफो वृद्धो हत्वाऽग्निमरुचिं यदि ।। २७ ।।

हृल्लासं गौरवं तन्द्रां जनयेदुल्लिखेत्तु तम् ।

**வாத குன்மத்தில் வாந்தி செய்வித்தல்:**

வாத குன்மத்தில் கபம் அதிகரித்து ஜாடராக்னியைக் குலைத்து ருசியின்மை, குமட்டல், உடல்பாரம், சோம்பல் ஆகியவற்றைத் தோற்றுவித்தால் அந்தக் கபத்தை வாந்தி மூலம் வெளியேற்றவேண்டும்.

शूलानाहविबन्धेषु ज्ञात्वा सस्नेहमाशयम् ॥ २८ ॥

निर्यूहचूर्णवटकाः प्रयोज्या घृतभेषजैः ।
कोलदाडिमघर्माम्बुतक्रमद्याम्लकांजिकैः ॥ २९ ॥

मण्डेन वा पिबेत्प्रातश्चूर्णान्यन्नस्य वा पुरः ।

சூலை, பொருமல், மலக்கட்டு ஆகியவை காணப் பட்டால் ஆமாசயம் நெய்ப்புள்ளதாக இருக்கும் நிலையை அறிந்து இங்கு கூறப்பட்ட க்ருத யோகங்களின் சரக்கு களால் கஷாயம், சூர்ணம், வடகம் ஆகியவற்றைச் செய்து உட்கொள்ளவேண்டும். இலந்தைச்சாறு, மாதுளைச்சாறு, வெந்நீர், மோர், மது, புளித்தகாடி, கஞ்சித் தெளிவு, இவற்றுள் ஒன்றின் அனுபானத்துடன் சூர்ணத்தைக் காலையில் அல்லது உணவிற்கு முன்னதாகப் பருக வேண்டும்.

चूर्णानि मातुलुंगस्य भावितान्यसकृद्रसे ॥ ३० ॥

कुर्वीत कार्मुकतरान् वटकान् कफवातयोः ।

இந்தச் சூர்ணங்களை துருஞ்சிச்சாற்றில் பலமுறை ஊற வைத்து நன்கு வலிமையூட்டி வடகம் செய்து கபவாத குன்மங்களில் உபயோகிக்கவேண்டும்.

हिंगुवचाविजयापशुगन्धादाडिमदीप्यकधान्यकपाठाः ।
पुष्करमूलशठीहपुषाग्निक्षारयुगत्रिपटुत्रिकटूनि ॥ ३१ ॥

साजाजिचव्यं सहतित्तिडीकं सवेतसाम्लं विनिहन्ति चूर्णम् ।
हृत्पार्श्वबस्तित्रिकयोनिपायुशूलानि वायुवामकफोद्भवानि ॥ ३२ ॥

कृच्छ्रान् गुल्मान् वातविण्मूत्रसंगं कण्ठे बन्धं हृद्ग्रहं पाण्डुरोगम् ।
अन्नाश्रद्धाप्लीहदुर्नामहिध्मावर्ध्माध्मानश्वासकासाग्निसादान् ॥ ३३ ॥

**ஹிங்குவசாதி சூர்ணம் :**

காயம், வசம்பு, கடுக்காய், நாய்வேளை, மாதுளை, ஓமம், மல்லி, வட்டத்திருப்பி, புஷ்கரமூலம், பூலாங்கிழங்கு, கொட்டக்கரந்தை, சித்ரமூலம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், இந்துப்பு, ஸௌவர்ச்சல உப்பு, வளையலுப்பு, த்ரிகடு, ஜீரகம், செவ்வியம், புளி, புளவஞ்சி இவற்றின் சூரணத்தை உட்கொள்ள இருதயம் விலாப்பக்கங்கள், சிறுநீர்ப்பை, முள்ளந்தண்டு, யோனி, அபானம் ஆகிய இடங்களில் வாயு, ஆமதோஷம், கபம் ஆகியவை காரணமான உண்டாகும் வலியைப் போக்கும். சிகித்ஸைக்கு கஷ்டமான குன்மம், வாயுத்தடை, மலத்தடை, சிறுநீர்த்தடை, தொண்டையில் தடை, இருதயப்பிடிப்பு, பாண்டு, உணவில் விருப்ப மின்மை, மண்ணீரல் நோய், மூலம், விக்கல், விரைவீக்கம், பொருமல், ச்வாஸம், காஸம், அக்னிமந்தம் ஆகியவையும் நீங்கும்.

குறிப்பு: சரகத்தில் வளையலுப்பு கூறப்படவில்லை. இந்தச் சூர்ணத்தை துருஞ்சிச் சாற்றில் பல தடவை பாவனை செய்து வடகமாகவும் உபயோகிக்கலாம். சரக. சி.5-79-83.

लवणयवानीदीप्यककणनागरमुत्तरोत्तरं वृद्धम् ।
सर्वसमांशहरीतकिचूर्णं वैश्वानरः साक्षात् ॥ ३४ ॥

**வைச்வாநர சூர்ணம் :**

இந்துப்பு, ஓமம், ஜீரகம், திப்பிலி, சுக்கு ஆகியவற்றை அடுத்தடுத்து ஒரு பங்கு அதிகமாக இருக்கும்படி எடுத்து அவைகளுக்குச் சம அளவு கடுக்காய்ச் சூரணம் கலந்து உட்கொள்ள இது அக்னி போன்று செயல் புரியும்.

**குறிப்பு:** இதை வைச்வாநர சூர்ணமென்பர்.

त्रिकटुकमजमोदा सैन्धवं जीरके द्वे ।
समधरणधृतानामष्टमो हिंगुभागः ।
प्रथमकवलभोज्यः सर्पिषा सम्प्रयुक्तो
जनयति जठराग्निं वातगुल्मं, निहन्ति ॥ ३५ ॥

**ஹிங்க்வஷ்டக சூர்ணம் :**

திரிகடு, ஓமம், இந்துப்பு, ஜீரகம், கருஞ்ஜீரகம், ஆகிய வற்றை சம அளவு எடுத்து அவற்றின் மொத்த எடைக்கு எட்டில் ஒரு பங்கு காயம் சேர்த்து சூரணித்து உணவு உண்ணும் காலத்தில் முதல் கவளத்துடன் நெய் சேர்த்து உட்கொள்ள ஜாடராக்னி பலப்படும் வாதகுன்மம் நீங்கும்.

**குறிப்பு:** எட்டாவது பங்கு பெருங்காயத்தினுடையதாகும் என உரை கொண்டு பெருங்காயம் சம அளவு சேர்ப்பதும் உண்டு. இந்த யோகத்தில் உள்ள धरण என்ற மூலச்சொல் பலத்தின் 1/10 பங்கு அல்லது 1/16 பங்கு என்ற அளவைக் குறிப்பிடு வதாகவும் கூறுவதுண்டு.

हिंगूग्राबिडशुण्ड्यजाजिविजयावाट्याभिधानामयै -
श्चूर्णः कुम्भनिकुम्भमूलसहितैर्भागोत्तरं वर्धितैः ।

पीतः कोष्णजलेन कोष्ठजरुजो गुल्मोदरादीनयं
शार्दूलः प्रसभं प्रमथ्य हरति व्याधीन् मृगौघानिव ॥ ३६॥

**சார்தூல சூர்ணம் :**

காயம், வசம்பு, வளையலுப்பு, சுக்கு, ஜீரகம், கடுக்காய், சிற்றாமுட்டி, கோஷ்டம், திருவிருத் வேர், நாகதந்தி வேர், இவை அடுத்தடுத்து ஒரு பங்கு அதிகரித்த அளவில் எடுத்து சூரணித்துச் சிறிது சூடான நீருடன் பருக புலி யானது மான்களை வாட்டுவதுபோல குன்மம், உதரம் முதலிய வயிற்று நோய்களை பலவந்தமாக தகர்த்து நீக்கும்.

सिन्धूत्थपथ्याकणदीप्यकानां चूर्णानि तोयैः पिबतां कवोष्णैः।
प्रयाति नाशं कफवातजन्मा नाराचनिर्भिन्न इवामयौघः ॥ ३७॥

**நாராச சூர்ணம் :**

இந்துப்பு, கடுக்காய், திப்பிலி, ஓமம், இவற்றின் சூரணத்தைச் சிறிது சூடான நீருடன் பருகுபவர்களுக்கு கபவாதங்களால் உண்டான நோய்க் கூட்டங்கள், நாராச என்ற அம்பினால் பிளக்கப்படுவது போல் நீங்கும்.

पूतीकपत्रगजचिर्भटचव्यवह्निव्योषं च संस्तरचितं लवणोपधानम् ।
दग्ध्वा विचूर्ण्य दधिमस्तुयुतं प्रयोज्यं गुल्मोदरश्वयथुपाण्डुगदोद्भवेषु ॥ ३८ ॥

மணிப்புங்கு இலை, பேய்த்தும்மட்டி, செவ்வியம், கொடிவேலி, த்ரிகடு இவைகளை பானையில் பரத்தி எல்லாவற்றிற்கும் மேலே இந்துப்பு வைத்து எரித்து சூரணித்து குன்மம், உதரம், வீக்கம், பாண்டு, மூலம் ஆகியவற்றில் தயிர்த் தெளிவுடன் உபயோகிக்கலாம்.

हिंगुत्त्रिगुणं सैन्धवमस्मात्त्रिगुणं च तैलमैरण्डम् ॥ ३९ ॥

तत्त्रिगुणरसोनरसं गुल्मोदरवर्ध्मशूलघ्नम् ।

**ஹிங்குத்திரிகுண தைலம் :**

பெருங்காயத்துக்கு மூன்று மடங்கு இந்துப்பு, இதற்கு மூன்று மடங்கு ஆமணக்கெண்ணெய், இதற்கும் மூன்று மடங்கு உள்ளிச்சாறு கலந்து உபயோகிக்க குன்மம், உதரம் விருத்தி, சூலை ஆகியவை நீங்கும்.

**குறிப்பு:** உள்ளிச்சாற்றில் காயம் கல்கத்துடன் ஆமணக் கெண்ணெய் கலந்து பக்குவம் செய்து இந்துப்பைப் பாத்ரபாகமாகக் கலந்து தயாரிப்பதும் ஸம்பிர தாயம்.

मातुलुंगरसो हिंगु दाडिमं बिडसैन्धवम् ॥ ४० ॥

सुरामण्डेन पातव्यं वातगुल्मरुजापहम् ।

துருஞ்சிச்சாறு, காயம், மாதுளை, வளையலுப்பு, இந்துப்பு, ஆகியவற்றை சுரைத் தெளிவுடன் பருக; வாத குன்மம், சூலை ஆகியவை நீங்கும்.

शुण्ठ्याः कर्षं गुडस्य द्वौ धौतात्कृष्णतिलात्पलम् ॥ ४१ ॥

खादन्नेकत्र संचूर्ण्य कोष्णक्षीरानुयोजयेत् ।
वातहृद्रोगगुल्मार्शोयोनिशूलशकृद्ग्रहान् ॥ ४२ ॥

¼ பலம் சுக்கு, ½ பலம் வெல்லம், [1]கழுவி சுத்தம் செய்யப்பட்ட கறுப்பு எள் 1 பலம், இவற்றைச் சூரணித்து உட்கொள்வதுடன் இளஞ்சூடான பாலைப் பருக; வாயுவால் உண்டான இருதயரோகம், குன்மம், மூலம், யோனிசூலை, மலக்கட்டு ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. தோல் நீக்கப்பட்ட எள் என உரையாசிரியர் கூறுகிறார்.

पिबेदेरण्डतैलं तु वातगुल्मी प्रसन्नया ।
श्लेष्मण्यनुबले वायौ पित्ते तु पयसा सह ॥ ४३ ॥

வாத குன்மம் உள்ளவர்க்கு கபம் தொடர் தோஷமாக இருந்தால் ஆமணக்கு எண்ணெயை கள் தெளிவுடனும், பித்தம் தொடர் தோஷமாக இருந்தால் பாலுடனும் கலந்து பருக வேண்டும்.

विवृद्धं यदि वा पित्तं सन्तापं वातगुल्मिनः ।
कुर्याद्विरेचनीयोऽसौ सस्नेहैरानुलोमिकैः ॥ ४४ ॥

तापानुवृत्तावेवं च रक्तं तस्याऽवसेचयेत् ।

வாதகுன்மம் உள்ளவருக்கு அதிகரித்த பித்தமானது எரிச்சல் உண்டாக்குமாயின் வாயுவை கீழ்நோக்கச் செய்யும் பொருள்களை நெய்ப்புப் பொருள்களுடன் கலந்து பிரயோகித்து விரேசனம் செய்விக்க வேண்டும். பின்வரும் எரிச்சல் தொடர்ந்து இருந்தால் [1] ரத்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.

குறிப்பு: 1. குன்மஸ்தானத்திலிருந்து ரத்தத்தை வெளிப் படுத்த வேண்டும் என்று இந்து கூறுகிறார்.

साधयेच्छुद्धशुष्कस्य लशुनस्य चतुष्पलम् ॥ ४५ ॥

क्षीरोदकेऽष्टगुणिते क्षीरशेषं च पाचयेत् ।
वातगुल्ममुदावर्तं गृध्रसीं विषमज्वरम् ॥ ४६ ॥

हृद्रोगं विद्रधिं शोषं साधयत्याशु तत्पयः ।

சுத்தமானதும், உலர்ந்ததுமான உள்ளியை 4 பலம் எடுத்து [1]நீர்கலந்த பால் எட்டு பங்கு சேர்த்து பாலளவு மீதி இருக்கும்படி காய்ச்ச வேண்டும். இத்தகைய பால் வாத குன்மம், [2]உதாவர்த்தம் [3]க்ருத்ரஸீ முறை ஜ்வரம், இருதய நோய், சிழ்க்கட்டி, இளைப்பு ஆகியவற்றை விரைவில் போக்கும்.

குறிப்பு:1. பாலுக்கு சமனளவு நீர் கலந்தது குறிப்பிடப் படுகிறது.

2. உதாவர்த்தம்-மலத்தடையால் வாயு மேல் நோக்கி உண்டாகும் நோய்.

3. க்ருத்ரஸீ-புட்டத்திலிருந்து பாதம்வரை பரவு கின்ற வாத சம்பந்தமான நோய்.

तैलं प्रसन्ना गोमूत्रमारनालं यवाग्रजः ॥ ४७ ॥

गुल्मं जठरमानाहं पीतमेकत्र साधयेत् ।

தைலம், சுரைத்தெளிவு, பசுமூத்ரம், காடி, யவக்ஷாரம், இவற்றை கலந்து பருக குன்மம், உதரம், பொருமல் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: இங்கு தைலம் என்பதால் ஆமணக்கு எண்ணெய் குறிப்பிடப்படுகிறதெனச் சிலர் கூறுவர்.

चित्रकग्रन्थिकै रण्डशुण्ठीकाथः परं हितः ॥ ४८ ॥

शूलानाहविबन्धेषु सहिंगुबिडसैन्धवः ।

கொடிவேலி, கண்டதிப்பிலி, ஆமணக்குவேர், சுக்கு இவற்றின் கஷாயத்தை காயம், வளையலுப்பு, இந்துப்பு

ஆகியவற்றுடன் கலந்து பருகுவது சூலை, பொருமல், மலத்தடை ஆகியவற்றில் மிகவும் ஏற்றதாகும்.

पुष्करैरण्डयोर्मूलं यवधन्वयवासकम् ॥ ४९ ॥

जलेन क्वथितं पीतं कोष्ठदाहरुजापहम् ।

புஷ்கரமூலம், ஆமணக்குவேர், யவை, காஞ்சொறி, இவற்றை நீரிலிட்டுக் கஷாயமாக்கிப் பருக வயிற்றில் உண்டாகும் எரிச்சல், வலி ஆகியவை நீங்கும்.

वाट्याह्वैरण्डदर्भाणां मूलं दारु महौषधम् ॥ ५० ॥

पीतं निःक्वाथ्य तोयेन कोष्ठपृष्ठांसशूलजित् ।

சிற்றாமுட்டி, ஆமணக்குவேர், தர்ப்பைவேர், தேவதாரு, சுக்கு ஆகியவற்றை நீரிலிட்டுக் கஷாயமாக்கிப் பருக வயிறு, புட்டம், தோள்பட்டை ஆகிய இடங்களில் உண்டாகும் வலி நீங்கும்.

शिलाजं पयसाऽनल्पपञ्चमूलशृतेन वा ॥ ५१ ॥

वातगुल्मी पिबेत् -

அல்லது, வாத குன்மம் உள்ளவர் மகாபஞ்சமூலம் சேர்த்துக் காய்ச்சிப் பாலுடன் சிலாஜதுவை பருகவேண்டும்.

-वाट्यमुदावर्ते तु भोजयेत् ।

स्निग्धं पैप्पलिकैर्यूषैर्मूलकानां रसेन वा ॥ ५२ ॥

உதாவர்த்தத்தில் திப்பிலி கலந்த பருப்புக்கஞ்சியுடனாவது முள்ளங்கிச் சாற்றுடனாவது நெய்ப்புள்ளயவைக் கஞ்சியை உட்கொள்ள வேண்டும்.

बद्धविण्मारुतोऽश्नीयात्क्षीरेणोष्णेन यावकम् ।
कुल्माषान् वा बहुस्नेहान् भक्षयेल्लवणोत्तरान् ॥ ५३ ॥

மலம், வாயு, ஆகியவை தடைப்பட்டிருந்தால் உஷ்ண மான பாலுடன் யவை அரிசிச்சாதம் உண்ண வேண்டும். அல்லது நெய்ப்பு உப்பு ஆகியவை அதிகம் உள்ள குல் *மாஷம் உண்ண வேண்டும்.

குறிப்பு: *குன்மாஷம்-தான்யங்களாலான சுண்டல் வகை.

नीलिनीत्रिवृतादन्तीपथ्याकम्पिल्लकैः सह ।
समलाय घृतं देयं सबिडक्षारनागरम् ॥ ५४ ॥

மலம் அதிகரிக்கப்பெற்றவருக்கு, அவுரி, சிவதை, நாக தந்தீ, கடுக்காய், கம்பிப்பாலை, இவற்றுடன் வளை யலுப்பு யவக்ஷாரம், சுக்கு ஆகியவை சேர்த்து *நெய் கொடுக்க வேண்டும்.

குறிப்பு: *இங்கு நெய் என்பது முன் சொல்லப்பட்ட கிருத யோகங்களைக் குறிப்பதாக இந்து கூறு கிறார்.

नीलिनीं त्रिफलां रास्नां बलां कटुकरोहिणीम् ।
पचेद्विडंगं व्याघ्रीं च पालिकानि जलाढके ॥ ५५ ॥

रसेऽष्टभागशेषे तु घृतप्रस्थं विपाचयेत् ।
दध्नः प्रस्थेन संयोज्य सुधाक्षीरपलेन च ॥ ५६ ॥

ततो घृतपलं दद्याद्यवागूमण्डमिश्रितम् ।
जीर्णे सम्यग्विरिक्तं चभोजयेद्रसभोजनम् ॥ ५७ ॥

गुल्मकुष्ठोदरव्यंगशोफपाण्ड्वामयज्वरान् ।

श्वित्रं प्लीहानमुन्मादं हन्त्येतन्नीलिनीघृतम् ॥ ५८ ॥

**நீலினீ கிருதம்: (அவரிநெய்)**

அவுரி, திரிபலை, அரத்தை, சிற்றாமுட்டி, கடுகரோஹிணீ, வாய்விளங்கம், கண்டங்கத்திரி, ஆகியவை வகைக்கு 1 பலம் எடுத்து 4 பிரஸ்தம் நீரிலிட்டு எட்டிலொரு பங்காகக் காய்ச்சி, அந்தக் கஷாயத்துடன் 1 பிரஸ்தம் நெய், 1 பிரஸ்தம் தயிர், 1 பலம் கள்ளிப்பால் ஆகியவை சேர்த்து பக்குவம் செய்து கொள்ள வேண்டும். கஞ்சித் தெளிவுடன் இந்த க்ருதம் 1 பலம் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இந்த நீலினி கிருதம் நன்கு ஜீரணித்து விரேசனமாகிய பின் [1]மாம்ஸரஸம் கலந்து உணவு கொடுக்க; குன்மம் குஷ்டம், உதரம், வியங்கம் என்ற வங்கு, வீக்கம், பாண்டு, ஜ்ஶரம், வெண்குட்டம், மண்ணீரல் நோய், பைத்தியம் ஆகியவை நீங்கும்.

**குறிப்பு:** 1. இங்கு உள்ள பிரஸ்தம் என்ற சொல்லுக்கு இரட்டிப்பு பரிபாஷையை அனுசரித்து 32 பலம் எனப்பொருள் கொள்ள வேண்டும் என இந்து கூறுகிறார்.

कुक्कुटाश्च मयूराश्च तित्तिरिक्रौञ्चवर्तकाः ।
शालयो मदिरा सर्पिर्वातगुल्मचिकित्सितम् ॥ ५९ ॥

கோழி, மயில், தித்திரி, க்ரௌஞ்சபக்ஷி, வர்த்தகபக்ஷி ஆகியவற்றின் மாமிஸம், சாலிவகை நெல், மதிரை என்னும் மது, நெய் ஆகியவை வாதகுன்மம் உடையவர்களுக்கு ஏற்றவையாகும்.

मितमुष्णं द्रवं स्निग्धं भोजनं वातगुल्मिनाम् ।
समण्डा वारुणी पानं तप्तं वा धान्यकैर्जलम् ॥ ६० ॥

**உணவும்-பானமும் :**

வாதகுன்மம் உள்ளவர்களுக்கு உஷ்ணமானதும், திரவ மானதும், நெய்ப்பு உள்ளதுமான உணவு மித அளவில் ஏற்றதாகும். தெளிவுடன் கூடிய வாருணீ என்னும் மது அல்லது மல்லி சேர்த்துக் காய்ச்சிய நீரைப் பானமாகக் கொள்ளலாம்.

स्निग्धोष्णेनोदिते गुल्मे पैत्तिके स्रंसनं हितम् ।
द्राक्षाऽभयागुडरसंऽकम्पिल्लं वा मधुद्रुतम् ॥ ६१ ॥

कल्पोक्तं रक्तपित्तोक्तं-

**பித்த குன்மத்தில் விரேசனம் :**

நெய்ப்பு, உஷ்ணம் ஆகியவை காரணமாக உண்டான பித்த குன்மத்தில் திராக்ஷை ரஸம், கடுக்காய் ரஸம், வெல்லம் ஆகியவற்றைக் கலந்தாவது, கம்பிப்பாலை யுடன் தேன் கலந்தாவது, கல்பஸ்தானத்தில் கூறப்பட இருக்கும் முறையிலாவது ரக்தபித்த சிகித்ஸையில் கூறப் பட்ட விதத்திலாவது விரேசனம் செய்விக்கவேண்டும்.

-गुल्मे रूक्षोष्णजे पुनः ।
परं संशमनं सर्पिस्तिक्तं वासाघृतं भृतम् ॥ ६२ ॥

வறட்சி, உஷ்ணம் ஆகியவை காரணமாக உண்டான பித்த குன்மத்தில் திக்தக கிருதத்தாலாவது, வாஸா கிருதத்தாலாவது சமனம் செய்வது சிறந்தது.

குறிப்பு: விரேசனம் கூடாது.

तृणाख्यपञ्चककाथे जीवनीयगणेन वा ।
भृतं तेनैव वा क्षीरं न्यग्रोधादिगणेन वा ॥ ६३ ॥

த்ருணபஞ்சமூல கஷாயத்திலாவது, ஜீவனீய கணச் சரக்குகள் சேர்த்தாவது, [1]தயாரான கிருதம் கொடுக்கலாம். அல்லது,

[2]ஜீவனீய கணச்சரக்குகள் சேர்த்து பால் பக்குவம் செய்து கொடுக்கலாம். அல்லது [3]ந்யக்ரோதாதி கணச்சரக்கு களுடன் பால் பக்குவம் செய்து கொடுக்கலாம்.

குறிப்பு: 1. த்ருணபஞ்சமூல கஷாயத்தில் ஜீவனீய கணச் சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட கிருதம் என இந்து கூறுகிறார்.

2. ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 15-ல் காண்க.

3. இங்கு तैनैव என்ற மூலச்சொல்லால் ஜீவனீய கணச்சரக்குகளுக்கு பதிலாக த்ருணபஞ்சமூலச் சரக்குகள் குறிப்பிடப்படுவதாக இந்து கூறுகிறார்.

இதில் பொதுவாக சமன சிகித்ஸையே ஏற்றது. சோதனம் அவசியம் இல்லை என்பது கருத்து.

तत्रापि स्रंसनं युंज्याच्छीघ्रमात्ययिके भिषक् ।
वैरेचनिकसिद्धेन सर्पिषा पयसाऽपि वा ॥ ६४ ॥

(வறட்சி, உஷ்ணம் ஆகியவை காரணமாக உண்டான) பித்த குன்மத்திலும் ஆபத்தான நிலை ஏற்பட்டால் விரேசனத்திற்காகக் கூறப்பட்ட திரவியங்களால் பக்குவம் செய்யப்பட்ட கிருதத்தையாவது, பாலையாவது உப யோகித்து விரைவில் சோதனம் செய்விக்க வேண்டும்.

रसेनामलकेक्षूणां घृतप्रस्थं विपाचयेत् ।
पथ्यापादं पिबेत्सर्पिस्तत्सिद्धं पित्तगुल्मनुत् ॥ ६५ ॥

पिबेद्वा तैल्वकं सर्पिर्यच्चोक्तं पित्तविद्रधौ ।

[1]நெல்லிக்காய், [2]கரும்பு இவற்றின் சாற்றுடன் 1 பிரஸ்தம் நெய், 4 பலம் கடுக்காய்க் கல்க்கம், ஆகியவற்றைச் சேர்த்து முறைப்படி பக்குவம் செய்து உபயோகிக்க பித்தகுன்மம் நீங்கும். பித்த வித்ருதிக்கு கூறப்பட்ட கிருதங்களையும் தில்வக க்ருதத்தையும் பருகலாம்.

குறிப்பு: தில்வக கிருதம் சிகித்.அ.21 சு.32ல் கூறப்பட விருக்கிறது.

1,2. பொது பரிபாஷையை அனுசரித்து நெல்லிக் காய், கரும்பு இவற்றின் சாற்றை நெய்க்கு 4 மடங்கு சேர்க்க வேண்டும்.

द्राक्षां पयस्यां मधुकं चन्दनं पद्मकं मधु ॥ ६६ ॥

पिबेत्तण्डुलतोयेन पित्तगुल्मोपशान्तये ।

திராட்சை, க்ஷீரகாகோலீ, அதிமதுரம், சந்தனம், பதிமுகம் இவற்றின் சூரணத்தை தேன், கழுநீர், ஆகியவற்றுடன் கலந்து பருக பித்தகுன்மம் நீங்கும்.

द्विपलं त्रायमाणाया जलद्विप्रस्थसाधितम् ॥ ६७ ॥

अष्टभागस्थितं पूतं कोष्णं क्षीरसमं पिबेत् ।
पिबेदुपरि तस्योष्णं क्षीरमेव यथाबलम् ॥ ६८ ॥

तेन निर्हृतदोषस्य गुल्मः शाम्यति पैत्तिकः ।

2 பலம் [1]துராய்ப்பூண்டை 32 பலம் நீரிலிட்டு எட்டி லொரு பாகமாகக் காய்ச்சி வடிக்கட்டி, சம அளவு பால் கலந்து சிறிது சூடாக இருக்கும்பொழுது பருகவேண்டும். பிறகு உஷ்ணமான பாலையே (ஜாடராக்னி) பலத்திற்கேற்ப

பருக வேண்டும். இதனால் தோஷங்கள் வெளியேறு வதால் பித்த குன்மம் நீங்கும்.

குறிப்பு: 1. त्रायमाणा என்ற மூலச்சொல்லுக்கு பிரம்மி என சிலர் உரை கொள்வர்.

दाहेऽभ्यंगो घृतैः शीतैः साज्यैर्लेपो हिमोषधैः ॥ ६९ ॥

स्पर्शः सरोरुहां पत्रैः पात्रैश्च प्रचलज्जलैः ।

பித்த குன்மத்தில் எரிச்சல் காணப்பட்டால் சீதவீர்ய திரவியங்கள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்டதும் பரிசிக்க குளிர்ச்சியானதுமான க்ருதங்களால் அப்பியங்கம் செய்ய வேண்டும். சீதவீர்ய ஔஷதங்களின் சூரணத்துடன் நெய் கலந்து பூசவேண்டும். தாமரை இலைகளாலும் அசையும் படியான தண்ணீர் உள்ள பாத்திரங்களாலும் பரிசிக்கலாம்.

विदाहपूर्वरूपेषु शूले वह्नेश्च मार्दवे ॥ ७० ॥

बहुशोऽपहरेद्रक्तं पित्तगुल्मे विशेषतः ।

பாகமடைவதற்கான முற்குறிகள் ஏற்படும் காலத்தில் குலையும், அக்னி மந்தமும் தோன்றிய நிலையிலும் முக்கியமாக பித்த குன்மத்திலும் பலதடவை ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

छिन्नमूला विदह्यन्ते न गुल्मा यान्ति च क्षयम् ॥ ७१॥

रक्तं हि व्यम्लतां याति तच्च नास्ति न चास्ति रुक् ।

ரத்த வெளியேற்றம் காரணமாக அடிப்படைக் காரணம் நீங்குவதால் குன்மம் பழுப்பதில்லை. குன்ம நோய்

நீங்கும். ஏனெனில் ரத்தம் தான் பாகத்தை அடைகிறது. அது அகற்றப்பட்டதால் குன்ம நோய் அகலுகிறது.

हृतदोषं परिम्लानं जांगलैस्तर्पितं रसैः ॥ ७२ ॥

समाश्वस्तं सशेषार्तिं सर्पिरभ्यासयेत्पुनः ।

விரேசனம், ரத்தவெளியேற்றம் ஆகியவற்றால் தோஷங்கள் வெளியேற்றப்பட்டதால் இளைக்கப் பெற்ற வருக்கு ஜாங்கலமாம்ஸ ரஸத்தால் திருப்தி உண்டாக்கி தேற்றி, மீதியுள்ள நோய் நீங்குவதற்காக, மறுபடியும், நெய் பருகும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

रक्तपित्तातिवृद्धत्वात्क्रियामनुपलभ्य वा ॥ ७३ ॥
गुल्मेपाकोन्मुखे सर्वा पित्तविद्रधिवत्क्रिया ।

ரத்த பித்தம் அதிகரித்தாலாவது, சிகித்ஸை கிடைக் காததன் காரணமாகவாவது குன்மம் பாகமடைய ஆரம் பித்தால் பித்தவித்ருதிக்கு கூறப்பட்ட சிகித்ஸை யாவற்றையும் செய்ய வேண்டும்.

शालिर्गव्याजपयसा पटोली जांगलं घृतम् ॥ ७४ ॥

धात्री परूषकं द्राक्षा खर्जूरं दाडिमं सिता ।
मोज्यां पानेऽम्बु बलया बृहत्याद्यैश्च साधितम् ॥ ७५ ॥

**பித்த குன்மத்தில் உணவும், பானமும் :**

சாலியன்னம், பசுவின்பால், ஆட்டுப்பால், பேய்ப்புடல், ஜாங்கலமாமிஸம், நெய், நெல்லி, சிற்றீஞ்சு, திராட்சை, பேரீச்சை, மாதுளை, சர்க்கரை ஆகியவற்றை உணவாக உட்கொள்ளலாம். சிற்றாமுட்டி, சிறுபஞ்சமூலம் ஆகியவை சேர்த்துக் காய்ச்சப்பட்ட நீரைப் பருகலாம்.

குறிப்பு: சிற்றாமுட்டி அல்லது சிறுபஞ்சமூலம் சேர்த்துக் காய்ச்சிய நீரைப் பருகலாம் என அருணதத்தர் கூறுகிறார்.

श्लेष्मजे वामयेत्पूर्वमवम्यमुपवासयेत् ।
तिक्तोष्णकटुसंसर्ग्या वह्निं सन्धुक्षयेत्ततः ॥ ७६ ॥

हिंग्वादिभिश्च द्विगुणक्षारहिंग्वम्लवेतसैः ।

**கபகுன்மம் :**

கபத்தால் உண்டான குன்ம நோய் உள்ளவருக்கு முதலில் வாந்தி செய்விக்க வேண்டும். வாந்தி செய்விக்கத் தகாதவரை உபவாஸமிருக்கச் செய்ய வேண்டும். கசப்பு, காரம் ஆகிய சுவைகளும், உஷ்ணவீர்யமும் உள்ள கஞ்சி முதலிய உணவு வரிசையாலும் க்ஷாரம், காயம், புளிவஞ்சி இவற்றை இரண்டு மடங்கு கலந்து தயாரிக்கப்பட்ட ஹிங்க்வாதி ([1]க்ருத- [2]சூர்ணம்) யோகங்களாலும் அக்னியைத் தூண்ட வேண்டும்.

குறிப்பு: 1,2. இவை முறையே 9-வது, 31வது சுலோங்களில் கூறப்பட்டுள்ளன.

निगूढं यदि वोन्नद्धं स्तिमितं कठिनं स्थिरम् ॥ ७७ ॥

आनाहादियुतं गुल्मं संस्वेद्य विनयेदनु ।
घृतं सक्षारकटुकं पातव्यं कफगुल्मिनाम् ॥ ७८ ॥

கபகுன்மம் உள்ளவருக்கு ஆழத்திலிருப்பது, உயரத்திலிருப்பது, திமிர்த்தது, கடினமானது, அசையாதது, மற்றும் பொருமல் முதலியவற்றுடன் கூடியது ஆகிய நிலைகளிலுள்ள குன்மத்தை, வியர்வை உண்டாக்கும்

சிகித்ஸையை நன்கு செய்வித்து சமனம் செய்ய வேண்டும். பிறகு நெய்யுடன் யவக்ஷாரம், திரிகடு கலந்து பருக வேண்டும்.

सव्योषक्षारलवणं सहिंगुबिडदाडिमम् ।
कफगुल्मं जयत्याशु दशमूलशृतं घृतम् ॥ ७९ ॥

திரிகடு, யவக்ஷாரம், இந்துப்பு, காயம், வளையலுப்பு, மாதுளை இவற்றுடன் தசமூல கஷாயம் சேர்த்து பக்குவம் செய்யப்பெற்ற நெய், கப குன்மத்தை விரைவில் நீக்கும்.

भल्लातकानां द्विपलं पंचमूलं पलोन्मितम् ।
अल्पं तोयाढके साध्यं पादशेषेण तेन च ॥ ८० ॥

तुल्यं घृतं तुल्यपयो विपचेदक्षसम्मितैः ।
विडंगहिंगुसिन्धूत्थयावशूकशठीबिडैः ॥ ८१ ॥

सद्वीपिरास्नायष्ट्याह्वषड्ग्रन्थाकणवानागरैः ।
एतद्भल्लातकघृतं कफगुल्महरं परम् ॥ ८२ ॥

प्लीहपाण्ड्वामयश्वासग्रहणीरोगकासजित् ।

**(பல்லாதக கிருதம்) சேங்கொட்டை நெய் :**

2 பலம் சேங்கொட்டை, சிறுபஞ்சமூலம் வகைக்கு 1 பலம். இவற்றை 64 பலம் ஜலத்திலிட்டு நாலில் ஒன்றாகுமாறு காய்ச்சி, நெய், பால் ஆகியவற்றை ஒவ்வொன்றும் கஷாயத்துக்கு சம அளவும், வாய்விளங்கம், காயம், இந்துப்பு, யவக்ஷாரம், பூலாங்கிழங்கு, வளையலுப்பு, கொடிவேலி, சிற்றரத்தை, அதிமதுரம், வசம்பு, திப்பிலி, சுக்கு ஆகியவை வகைக்கு 1/4 பலம் எடுத்து கல்க்கமாக்கியும், கலந்து முறைப்படி பக்குவம் செய்ய

வேண்டும். இது பல்லாதகக் கிருதம் எனப்படும். இதனால் மண்ணீரல் நோய், பாண்டு, ச்வாஸம், க்ராணி, காஸம் ஆகியவையும் விசேஷமாக கபகுன்மமும் நீங்கும்.

ततोऽस्य गुल्मे देहे च समस्ते स्वेदमाचरेत् ॥ ८३ ॥

நெய் பருகிய பிறகு, குன்மம் உள்ள இடத்திலும் மற்றும் உடல் பூராவும் வியர்வை உண்டாக்க வேண்டும்.

सर्वत्र गुल्मे प्रथमं स्नेहस्वेदोपपादिते ।
या क्रिया क्रियते याति सा सिद्धिं न विरूक्षिते ॥ ८४ ॥

எல்லாவித குன்ம நோயிலும் முதலில் நெய்ப்பு உண்டாக்குதல், வியர்ப்பித்தல் ஆகிய சிகித்ஸைகளைச் செய்த பிறகு மற்ற சிகித்ஸைகளை செய்தால்தான் பலனளிக்கும். வறண்ட நிலையில் செய்யப்படும் சிகித்ஸை பலன் அளிக்காது.

स्निग्धस्विन्नशरीरस्य गुल्मे शैथिल्यमागते ।
यथोक्तां घटिकां न्यस्येद्गृहीतेऽपनयेच्च ताम् ॥ ८५ ॥

वस्त्रान्तरं ततः कृत्वा छिन्द्याद्गुल्मं प्रमाणवित् ।
विमार्गाजपदादर्शैर्यथालाभं प्रपीडयेत् ॥ ८६ ॥

प्रमृज्याद्गुल्ममेवैकं न त्वन्त्रहृदयं स्पृशेत् ।

நெய்ப்பு சிகித்ஸை, வியர்வை உண்டாக்குதல் ஆகிய வற்றால் குன்மம் தளர்ச்சியடைந்த நிலையில் யந்திர விதி அத்தியாயத்தில் கூறப்பட்ட (குட) கடிகா யந்திரத்தை நீக்கவேண்டும். குன்மத்தை வஸ்த்திரத்தால் பிடித்துக் கொண்டு அதன் அளவை நன்கு அறிந்து கொண்டவர் *விமார்க்கம், ஆட்டுக்கால், கண்ணாடித்துண்டு ஆகிய வற்றுள் ஒன்றால் குன்மத்தைப் பிளக்க வேண்டும்.

குன்மம் உள்ள இடத்திலேயன்றி, குடல் பகுதி, இருதயப் பகுதி ஆகியவற்றை பரிசிக்கக்கூடாது.

குறிப்பு: ★விமார்க்கம் - தோலில் கோடிடுவதற்கு உபயோகிக்கிற மரத்தாலான கருவி.

तिलैरण्डातसीबीजसर्षपैः परिलिप्य च ॥ ८७ ॥

श्लेष्मगुल्ममयस्पात्रैः सुखोष्णैः स्वेदयेत्ततः ।

கபகுன்மத்தில் எள், ஆமணக்கு விதை, ஆளிவிதை, கடுகு இவற்றை அரைத்துப் பூசி, பொறுக்குமளவு சூடு உள்ள இரும்புப் பாத்திரத்தால் ஒத்தடம் இட்டு வியர்வை உண்டாக்க வேண்டும்.

एवं च विसृतं स्थानात् कफगुल्मं विरेचनैः ॥ ८८ ॥

सस्नेहैर्बस्तिभिश्चैनं शोधयेद्दशमूलकैः ।

இதன் மூலம் நிலை பெயர்ந்த குன்மத்தை நெய்ப்புப் பொருள் கலந்த விரேசனம், *தசமூல கஷாயம் கலந்த பஸ்தி பிரயோகம் ஆகியவற்றால் வெளியேற்றவேண்டும்.

குறிப்பு: ★தசமூல கஷாயம் கலந்த பஸ்தி பிரயோகத்தின் விளக்கத்தை கல்பஸ்தானம் அத்தியாயம்-4, சுலோகம் 4-ல் காண்க.

पिप्पल्यामलकद्राक्षाश्यामाद्यैः पालिकैः पचेत् ॥ ८९ ॥

एरण्डतैलहविषोः प्रस्थौ पयसि षड्गुणे ।
सिद्धोऽयं मिश्रकः स्नेहो गुल्मिनां स्रंसनं हितम् ॥ ९० ॥

वृद्धिविद्रधिशूलेषु वातव्याधिषु चामृतम् ।

**மிச்ரக ஸ்னேஹம் :**

திப்பிலி, நெல்லி, திராக்ஷை, *ச்யாமாதிகணச்சரக்குகள் ஆகியவை வகைக்கு 1 பலம், ஆமணக்கு எண்ணெய், நெய் ஆகியவை வகைக்கு 1 பிரஸ்தம், பால் 12 பிரஸ்தம் ஆகியவற்றை சேர்த்து பக்குவம் செய்யவேண்டும். இது மிச்ரக ஸ்னேஹம் எனப்படும். இது குன்ம ரோகிகளுக்கு விரேசனம் உண்டாக்கும். அண்ட விருத்தி, வித்ருதிக் கட்டி, சூலை, வாத வியாதி ஆகியவற்றில் உபயோகிக்க அம்ருதம் போன்றது.

குறிப்பு: *ச்யாமாதிகணம் - ஸூத். அத். 15-ல் காண்க.

पिबेद्वा नीलिनीसर्पिर्मात्रया द्विपलीनया ॥ ९१ ॥

तथैव सुकुमाराख्यं घृतान्यौदरिकाणि वा ।

அல்லது [1]நீலினி கிருதம் இரண்டு பலம் பருக வேண்டும். [2]சுகுமார கிருதத்தையாவது உரை நோயில் கூறப்படவிருக்கிற கிருதங்களையாவது [3]அவ்வாறே பருகலாம்.

குறிப்பு: 1. நீலினி கிருதம் இவ்வத்தியாயத்தில் 55-ஆம் சுலோகத்தில் கூறப்பட்டது.

2. சுகுமார கிருதம் - 13-ஆம் அத்தியாயம் 41-ஆவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

3. அவ்வாறே என்பதால் இரண்டுபலம் உட்கொள்ளப்பட வேண்டுமென்பது கூறப்படுகிறது.

द्रोणेऽम्भसः पचेद्दन्त्याः पलानां पचंविशतिम् ॥ ९२ ॥

चित्रकस्य तथा पथ्यास्तावतीस्तद्रसे सुते ।

द्विप्रस्थे साधयेत्पूते क्षिपेद्दन्तीसमं गुडम् ॥ ९३ ॥

तैलात्पलानि चत्वारि त्रिवृतायाश्च चूर्णतः ।
कणाकर्षौ तथा शुण्ठ्याः सिद्धे लेहे तु शीतले ॥ ९४ ॥

मधु तैलसमं दद्याचतुर्जातचतुर्थिकाम् ।
अतोहरीतकीमेकां सावलेहपलामदन् ॥ ९५ ॥

सुखं विरिच्यते स्निग्धो दोषप्रस्थमनामयः ॥
गुल्महृद्रोगदुर्नामशोफानाहगरोदरान् ॥ ९६ ॥

कुष्ठोत्क्लेशारुचिप्लीहग्रहणीविषमज्वरान् ।
घ्नन्ति दन्तीहरीतक्यः पाण्डुतां च सकामलाम् ॥ ९७॥

**தந்தீ ஹரீதகிலேஹம் :**

நாகதந்தி 25 பலம், கொடிவேலி 25 பலம். [1]கடுக்காய் 25 பலம் இவற்றை 16 பிரஸ்தம் ஜலத்திலிட்டுக் காய்ச்சி, 2 பிரஸ்தமாக வற்றவைத்து வடிகட்டி, கடுக்காயையும் 25 பலம் வெல்லத்தையும் சேர்க்க வேண்டும். 4 பலம் எண்ணெய், 4 பலம் சிவதைச் சூரணம், ½ பலம் திப்பிலி, ½ பலம் சுக்கு இவற்றைக் கலந்து லேஹம் தயாரிக்க வேண்டும். ஆறவைத்து தேன் நான்கு பலம் சேர்க்க வேண்டும். லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம் இவை வகைக்கு ¼ பலம் சேர்க்க வேண்டும். இதிலிருந்து ஒரு கடுக்காயும், 1 பலம் அவலேஹமும், உட்கொள்ள வேண்டும். நெய்ப்பு உள்ளவருக்கு சுகமாக [2]பிரஸ்த அளவு விரேசனம் ஆகும். குன்மம், இருதய ரோகம், மூலம், வீக்கம், பொருமல், இடுவிஷம், உதரம், குஷ்டம், தோஷக்கிளர்ச்சி, ருசியின்மை, மண்ணீரல் நோய், கிராணி, முறை ஜுரம், பாண்டு, காமாலை ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. கடுக்காய் எண்ணிக்கையில் 25 எனவும் கொள்வதுண்டு.

கடுக்காய்களை நெருக்கமில்லாத துணியில் தளர்த்திக்கட்டி கஷாயச் சரக்குகளுடன் சேர்த்து பக்குவம் செய்வது சம்பிரதாயம்.

2. வமனம், விரேசனம், ரத்தவெளியேற்றம், ஆகியவற்றில் பிரஸ்தம் என்பது 13½ பலத்தைக் குறிப்பிடுவதாகக் கொள்வதுண்டு.

सुधाक्षीरद्रवं चूर्णं त्रिवृतायाः सुभावितम् ।
कार्षिकं मधुसर्पिर्भ्यां लीढ्वा साधु विरिच्यते ॥ ९८ ॥

கள்ளிப்பாலில் பாவனை செய்யப்பட்ட ¼ பலம் சிவதைச் சூரணத்தை தேன், நெய் ஆகியவற்றுடன் கலந்து உட்கொள்ள நன்கு விரேசனமாகும்.

कुष्ठश्यामात्रिवृद्दन्तीविजयाक्षारगुग्गुलुम् ।
गोमूत्रेण पिबेदेकं तेन गुग्गुलुमेव वा ॥ ९९ ॥

கோஷ்டம், சிவதை, கருஞ்சிவதை, நாகதந்தீ, கடுக்காய், யவக்ஷாரம், குக்கில் இவற்றை பசுமூத்திரத்துடன் பருக வேண்டும். அல்லது குக்கிலை மட்டும் பசுநீருடன் பருக வேண்டும்.

निरूहान् कल्पसिध्युक्तान् योजयेद्गुल्मनाशनान् ।

கல்பஸ்தானத்தில் கூறப்படும் குன்ம நோயைப் போக்கும் நிருஹபஸ்திகளைப் பிரயோகிக்கவேண்டும்.

कृतमूलं महावास्तुं कठिनं स्तिमितं गुरुम् ॥ १०० ॥

गूढमांसं जयेद्गुल्मं क्षारारिष्टाग्निकर्मभिः ।

एकान्तरं द्व्यन्तरं वा विश्रमय्याऽथ वा त्र्यहम् ॥ १०१॥

शरीरदोषबलयोर्वर्धनक्षपणोद्यतः ।

வேர் ஊன்றியது, மிகப்பரந்தது, கடினமானது, திமிர்த்தது, பாரமானது, ஆழத்தில் உள்ளது என்றவாறு உள்ள குன்மத்தில் உடல்பலம் அதிகரிப்பதற்கும், தோஷங்கள் குறைவதற்கும் முயற்சி செய்வதுடன் ஒன்று, இரண்டு அல்லது மூன்று நாட்கள் இடைவெளியிருக்கும்படி க்ஷாரம், அரிஷ்டம், தீயால் சூடிடல் இவற்றால் சிகித்ஸை செய்யவேண்டும்.

अर्शोऽश्मरीग्रहण्युक्ताः क्षारा योज्याः कफोल्बणे ॥ १०२॥

மூலம், கல்லடைப்பு, க்ராணி ஆகிய நோய்களுக்கு கூறப்பட்ட க்ஷாரத்தை கபகுன்மத்தில் உபயோகிக்க வேண்டும்.

देवदारुत्रिवृद्दन्तीकटुकापञ्चकोलकम् ।
स्वर्जिकायावशूकाख्यौ श्रेष्ठापाठोपकुंचिकाः ॥ १०३ ॥

कुष्ठं सर्पसुगन्धां च द्व्यक्षांशं पटुपंचकम् ।
पालिकं चूर्णितं तैलवसादधिघृताप्लुतम् ॥ १०४ ॥

घटस्यान्तःपचेत्पक्वमग्निवर्णे घटे च तम् ।
क्षारं गृहीत्वा क्षीराज्यतक्रमद्यादिभिः पिबेत् ॥ १०५ ॥

गुल्मोदावर्तवर्ध्माशोंजठरग्रहणीकृमीन् ।
अपस्मारगरोन्मादयोनिशुक्रामयाश्मरीः ॥ १०६ ॥

क्षारागदोऽयं शमयेद्विषं चाखुभुजंगजम् ।

**க்ஷாராகதம் :**

தேவதாரு, சிவதை, நாகதந்தீ, கடுகரோஹிணீ, பஞ்ச கோலம், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், திரிபலை, வட்டத் திருப்பி, ஜீரகம், கோஷ்டம், ஸர்ப்பசுகந்தா இவை வகைக்கு ½ பலம், ஐவகை உப்புக்கள் வகைக்கு 1 பலம் இவற்றை சூர்ணமாக்கி *தைலம், மாம்ஸஎண்ணெய், தயிர், நெய் இவற்றுடன் கலந்து குடத்தில் வைத்து எரிக்க வேண்டும். குடம் அக்கினி வர்ணமானபின் இறக்கி உள்ளே உள்ள க்ஷாரத்தை எடுத்து பால், நெய், மோர், மதுவகை முதலியவற்றுடன் கலந்து பருக வேண்டும். இதனால் குன்மம், உதாவர்த்தம், அண்ட விருத்தி மூலம், உதரம், கிராணி, கிருமி, காக்கைவலி, இடுவிஷம், பைத்தியம், யோனி நோய், சுக்ர நோய், கல்லடைப்பு, ஆகியவை நீங்கும். இது [2]க்ஷாராகதம் எனப்படும். எலி விஷம், பாம்பு விஷம், ஆகிய வற்றையும் நீக்கும்.

குறிப்பு: *சூர்ணங்கள் நன்கு கலந்து ஒன்றுபடத் தேவை யான அளவு தைலம் முதலியவற்றைக் கலக்க வேண்டும்.

2. விஷத்திலும் உபயோகிக்கப்படுவதால் அகதம் எனப் பெயர் பெறுகிறது.

श्लेष्माणं मधुरं स्निग्धं रसक्षारघृताशिनः ॥ १०७ ॥

च्छित्वा भित्वाऽऽशयं क्षारः क्षरत्वात्यधः पातयः ।

**க்ஷாரத்தின் பெருமை :**

அறுக்குந் தன்மையுள்ள க்ஷாரமானது மாம்ஸ ரஸம், பால், நெய் ஆகியவற்றை உணவாகக் கொள்பவருக்கு

இனிப்பு, நெய்ப்பு ஆகிய குணமுள்ள கபத்தை ஸ்தானத்திலிருந்து அறுத்து உடைத்துக் கீழே தள்ளுகிறது.

मन्देऽग्नावरुचौ सात्म्यैर्मद्यैः सस्नेहमश्नताम् ॥ १०८ ॥

योजयेदासवारिष्टान्निगदान् मार्गशुद्धये ।

அக்னிமந்தமும் அருசியும் ஏற்பட்டிருப்பின் பழக்கப் பட்ட மதுவகைகளுடன் நெய்ப்புக் கலந்து உணவு உட்கொள்பவருக்கு மார்க்க சுத்திக்காக நாட்பட்ட ஆஸவ அரிஷ்டங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

शालयः षष्टिका जीर्णाः कुलत्था जांगलं पलम् ॥ १०९॥

चिरिबिल्वाग्नितर्कारीयवानीवरुणांकुराः ।
शिग्रुस्तरुणबिल्वानि बालं शुष्कं च मूलकम् ॥ ११० ॥

बीजपूरकहिंग्वम्लवेतसक्षारदाडिमम् ।
व्योषं तक्रं घृतं तैलं भक्तं पानं तु वारुणी ॥ १११ ॥

धान्याम्लं मस्तु तक्रं च यवानीबिडचूर्णितम् ॥
पंचमूलशृतं वारि जीर्णं मार्द्वीकमेव वा ॥ ११२ ॥

**உணவு-பானம் :**

நாட்பட்ட சாலிவகை, நாட்பட்ட அறுபதாங்குறுவை, கொள், வறண்ட பிரதேசப் பிராணியின் மாம்ஸம், *ஆவில், சித்ரமூலம், முன்னை, ஓமம், மாவிலிங்கத்தின் துளிர், முருங்கை, பில்வப்பிஞ்சு, இளம்முள்ளங்கி, காய்ந்த முள்ளங்கி, துருஞ்சி, காயம், புளிவஞ்சி, க்ஷாரம், மாதுளை, த்ரிகடு, மோர், நெய், தைலம் இவை உணவுப் பொருள்களாகும். வாருணீ என்னும் மது,

தான்யமாம்ஸம் என்னும் காடி, தயிர்த்தெளிவு ஓமமும், வளையலுப்பும் தூவப்பட்ட மோர், பஞ்சமூலம் சேர்த்துக் காய்ச்சிய நீர், நாட்பட்ட திராட்சை மது ஆகியவற்றை பருகலாம்.

குறிப்பு: ★ஆவில் முதல் மாவிலிங்கை ஈறாகக் கூறப் பட்ட ஐந்து ஓஷதிகள் விஷயத்திலும் துளிரையே இங்கு உபயோகிக்க வேண்டும் என்றும் சிலர் கூறுவர்.

पिप्पलीपिप्लीमूलचित्रकाजाजिसैन्धवैः ।
सुरा गुल्मं जयत्याशु जांगलश्च विमिश्रितः ॥ ११३ ॥

திப்பிலி, கண்டதிப்பிலி, கொடிவேலி, ஜீரகம், இந்துப்பு ஆகியவை கலந்த கலவையானது விரைவில் குன்மத்தைப் போக்கும். திப்பிலி முதலியவற்றின் சூர்ணம் கலந்த ஜகலம் என்ற ★சுரைக்குழம்பும் கப குன் மத்தைப் போக்கும்.

குறிப்பு: ★நாட்பட்ட சுரை என சங்க்ரஹத்தில் குறிப்பிடப் படுகிறது.

वमनैर्लङ्घनैः स्वेदैः सर्पिः पानैर्विरेचनैः ।
बस्तिक्षारासवारिष्टगुल्मिकापथ्यभोजनैः ॥ ११४ ॥

श्लैष्मिको बद्धमूलत्वाद्यदि गुल्मो न शाम्यति ।
तस्य दाहं हृते रक्ते कुर्यादन्ते शरादिमिः ॥ ११५ ॥

நன்கு வேரூன்றியதன் காரணமாக, கப குன்மம், வாந்தி உண்டாக்குதல், உபவாஸம், வியர்ப்பித்தல், நெய் பருகுதல், விரேசனம், பஸ்திப் பிரயோகம், க்ஷாரம், ஆஸவம், அரிஷ்டம், குளிகை மற்றும் பத்தியமான உணவு ஆகிய

வற்றாலும் நீங்காவிடில்; ரத்தத்தை வெளியேறியபின் *சரம் முதலியவற்றால் சுடவேண்டும்.

குறிப்பு: *சூடு இடும் ஒரு வகை சலாகை 'சரம்' எனப்படும்.

अथ गुल्मं सपर्यन्तं वाससाऽन्तरितं भिषक् ।
नाभिबस्त्यन्त्रहृदयं रोमराजीं च वर्जयन् ॥ ११६ ॥

नातिगाढं परिमृशेच्छरेण ज्वलताऽथवा ।
लोहेनारणिकोत्थेन दारुणा तैन्दुकेन वा ॥ ११७ ॥

ततोऽग्निवेगे शमिते शीतैर्व्रण इव क्रिया ।

வைத்தியர் குன்மத்தை துணியால் மூடப்பட்டதாகவும், சுற்றுப்புறங்களுடன் சேர்ந்ததாகவும் இருக்கும்படி பிடித்துக் கொண்டு, நாபி, பஸ்தி, குடல், இருதயம், ரோமவரிசை ஆகியவற்றில் பரிசிக்காதவாறு, அக்னியில் காய்ச்சப்பட்ட சரம், இரும்புக்கு, முன்னைக்கட்டை, பனச்சிக்கட்டை இவற்றால் அதிக ஆழமின்றி பரிசிக்க வேண்டும். அக்னி வேகங் குறைந்தபின் விரணத்திற்குக் கூறியவாறு குளிர்ச்சி உள்ளவற்றால் சிகித்ஸை செய்ய வேண்டும்.

आमान्वये तु पेयाद्यैः सन्धुक्ष्याग्निं विलंघिते ॥ ११८ ॥

स्वं स्वं कुर्यात्क्रमं मिश्रं मिश्रदोषे च कालवित् ।

ஆமங்கலந்திருப்பின், லங்கன சிகித்ஸைக்குப் பின் *பேயா முதலிய உணவு வரிசையில் உணவு உட்கொள்ளச் செய்து, ஜாடராக்னிக்கு பலமுண்டாக்கி, தோஷத்திற்கு ஏற்றவாறு சிகித்ஸை செய்யவேண்டும். தோஷக் கலப்பில், அவற்றிற்கேற்ற சிகித்ஸையைக் கலந்து செய்யவேண்டும்.

**குறிப்பு:** ⋆பேயா கஞ்சி முதலிய உணவு வரிசை ஸூத்ர ஸ்தானத்தில் 18-வது அத்தியாயத்தில் கூறப் பட்டுள்ளது.

गतप्रसवकालायै नार्यै गुल्मेऽस्रसम्भवे ॥ ११९ ॥

स्निग्धस्विन्नशरीरायै दद्यात्स्नेहविरेचनम् ।

**ரத்தகுன்மம் :**

ஸ்த்ரீகளுக்கு உண்டான ரத்தகுன்மத்தில் பிரஸவகால மான பத்து மாதம் [1]கடந்த பின்பு நெய்ப்புப் பொருள் பருகுதல், வியர்வை உண்டாக்குதல் ஆகியவற்றைச் செய்வித்து நெய்ப்புப் பொருள்களால் விரேசனம் செய்விக்கவேண்டும்.

**குறிப்பு:** நாட்பட்ட நிலையில்தான் ரத்தகுன்ம நோய் சிகித்ஸைக்கு ஏற்றது.

तिलक्वाथो घृतगुडव्योषभार्गीरजोन्वितः ॥ १२० ॥

पानं रक्तभवे गुल्मे नष्टे पुष्पे च योषितः ।

எள் கஷாயத்துடன் நெய், வெல்லம், த்ரிகடு, சிறுதேக்குத் தூள், இவற்றைக் கலந்து ரத்தகுன்மத் திலும், மாதவிடாய்க் குறைவிலும் பருகவேண்டும்.

भार्गीकृष्णकरंजत्वग्ग्रन्थिकामरदारुजम् ॥ १२१ ॥

चूर्णं तिलानां क्वाथेन पीतं गुल्मरुजापहम् ।

சிறுதேக்கு, திப்பிலி, புங்கம்பட்டை, கண்டதிப்பிலி, தேவதாரு, இவற்றின் சூரணத்தை எள் கஷாயத்துடன் கலந்து பருக குன்மவேதனை நீங்கும்.

पलाशक्षारपात्रे द्वे द्वे पात्रे तैलसर्पिषोः ॥ १२२ ॥

गुल्मशैथिल्यजननीं पक्त्वा मात्रां प्रयोजयेत् ।

8 பிரஸ்தம் புரசக்ஷாரநீர், எண்ணெய், நெய் இவை சேர்த்து 8 பிரஸ்தம் இவற்றை பக்குவம் செய்து அளவுடன் பருக குன்மம் தளர்ச்சியுறும்.

**குறிப்பு:** 4 மடங்கு நீர் சேர்த்துப் பக்குவம் செய்ய வேண்டும் என அருணதத்தர் கூறுகிறார்.

न प्रभिद्येत यद्येवं दद्याद्योनिविरेचनम् ॥ १२३ ॥

இவ்வாறு சிகித்ஸை செய்தும் ரத்த குன்மம் உடையாவிடில் யோனி மார்க்க சோதனம் செய்யவேண்டும்.

क्षारेण युक्तं पललं सुधाक्षीरेण वा ततः ।
ताभ्यां वा भावितान्दद्याद्योनौ कटुकमत्स्यकान् ॥ १२४॥

वराहमत्स्यपित्ताभ्यां नक्तकान् वा सुभावितान् ।
किण्वं वा सगुडक्षारं दद्याद्योनौ विशुद्धये ॥ १२५ ॥

रक्तपित्तहरं क्षारं लेहयेन्मधुसर्पिषा ।
लशुनं मदिरां तीक्ष्णां मत्स्यांश्चास्यै प्रयोजयेत् ॥ १२६॥

बस्तिं सक्षीरगोमूत्रं सक्षारं दाशमूलिकम् ।

யோனி மார்க்கம் சுத்தியடைவதற்காக, வறுத்த எள்ளுப் பொடியுடன் க்ஷாரம் அல்லது கள்ளிப்பால் கலந்து யோனியில் வைக்கவேண்டும். க்ஷாரம், கள்ளிப்பால் ஆகியவற்றில் ஊறிய மீன் வற்றலை யோனியில் வைக்க வேண்டும். அல்லது பன்றி, மீன் இவற்றின் பித்தத்தில் நன்கு ஊறவைக்கப்பட்ட பஞ்சுத் துண்டை யோனியில்

வைக்கலாம். அல்லது சுரையின் வண்டலுடன் கள்ளிப் ஹபால் க்ஷாரம் ஆகியவை கலந்து வைக்கலாம். ரத்த பித்தத்தைப் போக்கும் *க்ஷாரத்தை தேன், நெய் ஆகியவை சேர்த்துப் பருக வேண்டும். தீக்ஷ்ணமான மதிரை என்னும் மது, மீன் இவற்றை உட்கொள்ளச் செய்யவேண்டும். பால், பசு மூத்ரம், க்ஷாரம் ஆகியவை கலந்த [2]தசமூல கஷாயத்தால் பஸ்தி [3]செய்விக்கவேண்டும்.

**குறிப்பு:** *1. ரத்தபித்தத்தைப் போக்கும் க்ஷாரம் சிகித். அத்தி. 2. சுலோ. 45-ல் கூறப்பட்டுள்ளது.*

2. தசமூலக் கஷாய பஸ்தி - கல்ப. அ.4 சு. 4-ல் கூறப்படவிருக்கிறது.

3. ஜீவனீய க்ருதத்தால் உத்தரபஸ்தியும் செய்விக் கலாம் என சரகர் கூறுகிறார்.

अवर्तमाने रुधिरे हितं गुल्मप्रभेदनम् ॥ १२७ ॥

ரத்தப்பெருக்கு உண்டாகாவிடில் குன்மத்தை கீறுவதும் ஏற்றதாகும்.

यमकाभ्यक्तदेहायाः प्रवृते समुपेक्षणम् ।
रसौदनस्तथाऽऽहारः पानं च तरुणी सुरा ॥ १२८ ॥

## ரத்தம் வெளியேறும் நிலையில் :

(இவ்வாறு செய்வித்தால்) ரத்தம் வெளியேறினால் நெய், எண்ணெய், இவற்றை உடலில் தடவிக்கொண்டு வாளாவிருத்தல் வேண்டும். மாம்ஸ ரஸ உணவு கொண்டு நாட்படாத மதுவைப் பருகவேண்டும்.

**குறிப்பு:** இந்த நிலையில் வெளியேறும் ரத்தத்தை தடை செய்யக்கூடாது.

रुधिरेऽतिप्रवृत्ते तु रक्तपित्तहराः क्रियाः ।
कार्या वातरुगार्तायाः सर्वा वातहराः पुनः ॥ १२९ ॥

आनाहादावुदावर्तबलासघ्न्यौ यथायथम् ॥

ரத்தம் அதிகம் வெளியேறினால் ரத்தபித்த சிகித்ஸை செய்யவேண்டும். வாயுவினால் வலி உண்டானால் வாயுவைப் போக்கும் சிகித்ஸை யாவும் செய்யவேண்டும். பொருமல் *முதலியவற்றில் உதாவர்த்தம், கபம், இவற்றைப் போக்கும் சிகித்ஸை முறைகளை உரியவாறு பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: *முதலிய என்பதால் அஷ்டீலா முதலியவை குறிப்பிடப்படுகின்றன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने गुल्मचिकित्सितं नाम चतुर्दशोऽध्यायः ॥ १४ ॥

சிகித்ஸாஸ்தானம் - பதினான்காம் அத்தியாயம்

முற்றிற்று.

## ।। चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ।।

### पंचदशोऽध्यायः - அத்தியாயம் - 15

अथाऽतो उदरचिकित्सितं व्याख्यास्यामः ।

इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து உதர நோய் சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை விவரிக்கிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

दोषातिमात्रोपचयात्स्रोतोमार्गानिरोधनात् ।
सम्भवत्युदरं तस्मान्नित्यमेनं विरेचयेत् ।। १ ।।

தோஷங்கள் அதிக அளவில் சேமிக்கப்பெறுதல் காரணமாகவும், ஸ்ரோதஸ்களுக்கு வழித்தடை ஏற்படுவதாலும் உதரநோய் உண்டாகிறது. ஆகையால் உதர நோயாளிக்கு எப்பொழுதும் விரேசனம் செய்விக்கவேண்டும்.

पाययेत्तैलमैरण्डं समूत्रं सपयोऽपि वा ।
मासं द्वौ वाऽथवा गव्यं मूत्रं माहिषमेव वा ।। २ ।।

पिबेद्गोक्षीरभुक् स्याद्वा करभीक्षीरवर्तनः ।
दाहानाहातितृण्मूर्च्छापरीतस्तु विशेषतः ।। ३ ।।

**விரேசனங்கள் :**

ஆமணக்கு [1] எண்ணெயுடன் பசு மூத்ரம் அல்லது பால் கலந்து ஒன்று அல்லது இரண்டு மாதம் பருகச் செய்ய வேண்டும். அல்லது பசுவின் பாலை உணவாகக் கொள்வதுடன் (தோஷங்களுக்கேற்ப) பசு அல்லது எருமையின் நீரைப் பெருகவேண்டும். ஒட்டகத்தின் பாலை

யாவது உணவாகக் கொள்ளலாம். பொருமல், அதிக விடாய், மூர்ச்சை ஆகியவை உள்ள உதர நோயாளி ஒட்டகத்தின் பாலை விசேஷமாக உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. இந்நோயில் வாயு முக்கியமாக இருப்பதால் நெய்ப்பு உள்ள விரேசனங்களே கூறப்படுகின்றன.

रूक्षाणां बहुवातानां दोषसंशुद्धिकाङ्क्षिणाम् ।
स्नेहनीयानि सर्पींषि जठरघ्नानि योजयेत् ॥ ४ ॥

**கிருதபானம் :**

வறட்சியால் பீடிக்கப்பட்டவர், வாயு அதிகரிக்கப் பெற்றவர், தோஷங்களின் சோதனத்தை விரும்புகிறவர், ஆகியோருக்கு நெய்ப்பு உள்ளவையும் உதர நோயைப் போக்குபவையுமான நெய் வகைகளை பிரயோகிக்க வேண்டும்.

षट्पलं दशमूलाम्बुमस्तुद्व्याढकसाधितम् ।

**கிருதயோகங்கள் :**

[1]தசமூல கஷாயம், தயிர்த்தெளிவு இவை 8 பிரஸ்தம் கலந்து ஷட்பல கிருதம் தயாரித்துப் பருகவேண்டும்.

குறிப்பு: 1. தசமூலத்தில் விளக்கத்தை ஸூத்.6-ஆம் அத்தியாயத்தில் காண்க.

2. ஷட்பலகிருதம் சிகித்.அ.5. சுலோ. 22-ல் விளக்கப்பட்டுள்ளது.

கல்க்கப் பொருள்கள், - தசமூல கஷாயம், தயிர்த் தெளிவு, நெய் இவற்றின் அளவு சரகத்தில் மாறு படுகிறது.

नागरत्रिपलं प्रस्थं घृततैलात्तथाऽढकम् ॥ ५ ॥
मस्तुनः साधयित्वैतत्पिबेत्सर्वोदरापहम् ।
कफमारुतसम्भूते गुल्मे च परमं हितम् ॥ ६ ॥

3 பலம் சுக்கை கல்க்கமாக்கி அதனுடன் நெய்யும், தைலமும் சேர்த்து 1 பிரஸ்தம், தயிர்த்தெளிவு 4 பிரஸ்தம் ஆகியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்து உட்கொள்ள எல்லா விதமான உதர நோய்களும் நீங்கும். கபம், வாயு ஆகியவை காரணமாக உண்டான குன்மத்திலும் இந்த கிருதம் சிறந்ததாகும்.

குறிப்பு: नागरत्रिफलप्रस्थ என பாடத்தைக் கொண்டு, சுக்கு, த்ரிபலை இவை மொத்தம் 1 பிரஸ்தம் என்று சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

चतुर्गुणे जले मूत्रे द्विगुणे चित्रकात्पले ।
कल्के सिद्धं घृतप्रस्थं सक्षारं जठरी पिबेत् ॥ ७ ॥

உதரநோய் உள்ளவர், நீர் 4 பிரஸ்தம், பசுமூத்ரம் 2 பிரஸ்தம், கொடிவேலியின் கல்க்கம் 1 பலம், நெய் 1 பிரஸ்தம் இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்து யவ க்ஷாரம் கலந்து பருகவேண்டும்.

குறிப்பு: யவக்ஷாரத்தின் அளவு 1 பலம் என சக்ர தத்தர் கூறுகிறார்.

यवकोलकुलत्थानां पञ्चमूलस्य चाम्भसा ।
सुरासौवीरकाभ्यां च सिद्धं वा पाययेद्घृतम् ॥ ८ ॥

அல்லது யவை, இலந்தை, கொள், பஞ்சமூலம் இவற்றின் கஷாயத்துடன் சுரை என்னும் மது, உமி நீக்கிய

யவைக்காடி ஆகியவற்றையும் கலந்து பக்குவம் செய்த கிருதத்தையும் பருகச் செய்யலாம்.

**குறிப்பு:** யவை முதலியவற்றின் கஷாயம் 1 பங்கு, மது, யவையின் காடி இவை கலந்து 1 பங்கு, நெய் 1 பங்கு என இந்து அளவு கூறுகிறார். ஆனால் இவை மொத்தம் சேர்ந்தும் நெய்க்கு இரண்டு மடங்கே திரவம் ஆகிறது. சாதாரணமாக நெய்க்கு 4 மடங்கு திரவம் சேர்ப்பது வழக்கம். மேலும் இதில் கல்க்கம் கூறப்படவில்லை. எனவே முந்திய யோகத்தில் கூறப்பட்டவாறு 1 பலம் கொடிவேலியை கல்க்கமாகச் சேர்ப்பதுடன் அதில் கூறியவாறே 4 மடங்கு நீரும் சேர்ப்பது பொருத்தமாகும்.

एभिः स्निग्धाय संजाते बले शान्ते च मारुते ।
स्रस्ते दोषाशये दद्यात्कल्पदृष्टं विरेचनम् ॥ ९ ॥

இவ்வித கிருதபானத்தால் உடலில் நெய்ப்பும், பலமும் உண்டாகி, வாயு குறைந்து தோஷஸ்தானம் தளர்வுற்ற நிலையில் கல்பஸ்தானத்தில் கூறப்படவிருக்கிற விரேசனங்களை உபயோகிக்கவேண்டும்.

पटोलमूलं त्रिफलां निशां वेल्लं च कार्षिकम् ।
कम्पिल्लनीलिनीकुम्भभागान् द्वित्रिचतुर्गुणान् ॥ १० ॥

पिबेत्संचूर्ण्य मूत्रेण पेयापूर्वं ततो रसैः ।
विरिक्तो जांगलैरद्यात्ततः षड्दिवसं पयः ॥ ११ ॥

भृतं पिबेद्व्योषयुतं पीतमेवं पुनः पुनः ।
हन्ति सर्वोदराण्येतच्चूर्णं जातोदकान्यपि ॥ १२ ॥

## படோலாதி சூர்ணம் :

பேய்ப்புடல்வேர், த்ரிபலை, மஞ்சள், வாய்விளங்கம் இவை வகைக்கு ¼ பலம், கம்பிப்பாலை ½ பலம், அவுரி வேர் ¾ பலம், சிவதை 1 பலம், இவற்றைச் சூரணித்துப் பசுமூத்ரத்துடன் கலந்து பருகவேண்டும். விரேசனம் ஆனபிறகு கஞ்சி தொடங்கி ஜாங்கல மாமிஸ ரஸத்துடன் உண்ணவேண்டும். அடுத்து 6 நாட்களுக்கு காய்ச்சியபாலை *த்ரிகடு சேர்த்து பருகவேண்டும். இவ்வாறு அடிக்கடி உட்கொள்ளுவதால் நீர் வைத்த நிலையில் இருப்பினும் எல்லா உதர நோயும் நீங்கும்.

**குறிப்பு:** *த்ரிகடு கலந்த பால் சேர்த்து உணவு உண்ண வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

गवाक्षीं शंखिनीं दन्तीं तिल्वकस्य त्वचं वचाम् ।
पिबेत्कर्कन्धुमृद्वीकाकोलाम्भोमूत्रसीधुभिः ॥ १३ ॥

பேய்க்கொம்மட்டி, கிரிவள்ளி, நாகதந்தீ, லோத்திப் பட்டை, வசம்பு, இவற்றின் சூரணத்தை இலந்தைச் சாறு, திராக்ஷைச்சாறு, பேரிலந்தைச்சாறு பசுநீர், கரும்புச் சாற்றினால் தயாரிக்கப்பட்ட மது (இவற்றுள் ஒன்றுடன்) கலந்து பருகவேண்டும்.

यवानी हपुषा धान्यं शतपुष्पोपकुंचिका ।
कारवी पिप्पलीमूलमजगन्धा शठी वचा ॥ १४ ॥

चित्रकाऽजाजिकं व्योषं स्वर्णक्षीरी फलत्रयम् ।
द्वौ क्षारौ पौष्करं मूलं कुष्ठं लवणपञ्चकम् ॥ १५ ॥

विडंगं च समांशानि दन्त्या भागत्रयं तथा ।
त्रिवृद्विशाले द्विगुणे सातला च चतुर्गुणा ॥ १६ ॥

एष नारायणो नाम चूर्णो रोगगणापहः ।
नैनं प्राप्याभिवर्धन्ते रोगा विष्णुमिवासुराः ॥ १७ ॥

तक्रेणोदरिभिः पेयो गुल्मिभिर्बदराम्बुना ।
आनाहवाते सुरया वातरोगे प्रसन्नया ॥ १८ ॥

दधिमण्डेन विट्संगे दाडिमाम्भोभिरर्शसैः ॥
परिकर्ते सवृक्षाम्लैरुष्णाम्बुभिरजीर्णके ॥ १९ ॥

भगन्दरे पाण्डुरोगे कसे श्वासे गलग्रहे ।
हृद्रोगे ग्रहणीदोषे कुष्ठे मन्देऽनले ज्वरे ॥ २० ॥

दंष्ट्राविषे मूलविषे सगरे कृत्रिमे विषे ।
यथार्हं स्निग्धकोष्ठेन पेयमेतद्विरेचनम् ॥ २१ ॥

[1]**நாராயண சூர்ணம் :**

குரோசானி, ஓமம், கொட்டக்கரந்தை, மல்லி, சதகுப்பை, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், கண்டதிப்பிலி, நாய்வேளை, பூலாங்கிழங்கு, வசம்பு, கொடிவேலி, ஜீரகம் த்ரிகடு, எருமைக்கள்ளி, த்ரிபலை, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், புஷ்கரமூலம், கோஷ்டம், ஐவகை உப்புக்கள், வாய்விளங்கம் இவை எல்லாம் சம அளவு (ஒவ்வொரு பங்கு) நாகதந்தீ 3 பங்கு, சிவதை 2 பங்கு, பேய்க்கொம்மட்டி 2 பங்கு, [2]துராய் நான்கு பங்கு ஆகியவற்றின் சூரணம் நாராயண சூர்ணம் எனப்படும். இது நோய்க் கூட்டங்களை ஒழிக்கும். விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போல் இச்சூர்ணத்தைக் கண்டு நோய்கள் அழிகின்றன. உதர நோயாளி மோருடனும், குன்ம நோயாளி இலந்தைச் சாற்றுடனும், பொருமல், வாயு ஆகியவற்றால் பீடிக்கப் பட்டவர் ஸுரை என்னும் மதுவுடனும், வாத நோயாளி

சுரைத்தெளிவுடனும், மலத் தடையில் தயிர்த்தெளிவுடனும், மூலநோயாளி மாதுளைச் சாற்றுடனும், கத்தரிப்பது போன்ற சூலைநோயில் புளிவஞ்சியுடனும். அஜீர்ணத்தில் வெந்நீருடனும் இதை உட்கொள்ள வேண்டும். பவுத்ரம், பசு, பாண்டு, காஸம், ச்வாஸம், தொண்டைப் பிடிப்பு, இருதயநோய், கிராணி தோஷம், குஷ்டம், பசிக்குறைவு, ஜ்ுரம், பிராணிகளின் விஷம், தாவரவிஷம், இடுவிஷம் , செயற்கை விஷம், ஆகிய வற்றில் உரியவாறு கோஷ்டத்திற்கு நெய்ப்புச் சிகித்ஸை செய்துகொண்டபின் இந்த சூர்ணத்தை விரேசனத் திற்காக உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: 1. இந்த யோகத்திற்கு நாராசக சூர்ணம் என்றும் பெயர் கூறுவர்.

2. துராய் என்ற மூலச் சொல்லுக்கு பூவந்தி அல்லது சீயக்காய் என்றும் சிலர் உரை கூறுவதுண்டு.

हपुषां कांचनक्षीरीं त्रिफलां नीलिनीफलम् ।
त्रायन्तीं रोहिणीं तिक्तां सातलां त्रिवृतां वचाम् ॥ २२॥

सैन्धवं काललवणं पिप्पलीं चेति चूर्णयेत् ।
दाडिमात्रिफलामांसरसमूत्रसुखोदकैः ॥ २३ ॥

पेयोऽयं सर्वगुल्मेषु प्लीह्नि सर्वोदरेषु च ।
श्वित्रे कुष्ठेष्वजरके सदने विषमे नले ॥ २४ ॥

शोफार्शःपाण्डरोगेषु कामलायां हलीमके ।
वातपित्तकफांश्चाशु विरेकेण प्रसाधयेत् ॥ २५ ॥

**ஹபுஷாதி சூர்ணம் :**

கொட்டைக்கரந்தை, எருமைக்கள்ளி, த்ரிபலை, *அவுரிப் பழம், துராய்ப்பூண்டு, கடுகரோஹிணீ, துராய், சிவதை, வசம்பு, இந்துப்பு, கறுப்பு உப்பு, (அல்லது வளையலுப்பு), திப்பிலி இவற்றைச் சூரணித்து மாதுளைச் சாறு, திரிபலைக் கஷாயம், மாம்ஸரஸம், பசுநீர் வெந்நீர் ஆகியவற்றுடன் எல்லாவித குன்ம நோய்கள், மண்ணீரல் நோய், உதர நோய்கள், வெண் குட்டம், குட்டம், அஜீரணம், ஓய்ச்சல், சமநிலையற்ற அக்னி, வீக்கம், மூலம், பாண்டு, காமாலை, ஹலீமகம் என்னும் பாண்டு நோய்வகை ஆகியவற்றில் பருகலாம். இது விரேசனத் தின்மூலம் வாயு, பித்தம், கபம் ஆகியவற்றை நீக்கும்.

**குறிப்பு:** சரகஸம்ஹிதையில் அவுரி என்றே கூறப் பட்டுள்ளது.

नीलिनीं निचुलं व्योषं क्षारो लवणपञ्चकम् ।
चित्रकं च पिबेच्चूर्णं सर्पिषोदरगुल्मनुत् ॥ २६ ॥

அவுரி, நீர்நொச்சி, த்ரிகடு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐவகை உப்புக்கள், கொடிவேலி இவற்றின் சூரணத்தை நெய்யுடன் பருக உதரம், குன்மம் ஆகியவை நீங்கும்.

पूर्ववच्च पिबेद्दुग्धं क्षामः शुद्धोऽन्तराऽन्तरा ।
कारभं गव्यमाजं वा-

விரேசனம் ஆனவுடன் இளைத்தவர் இடையிடையே முன்பு *கூறியதுபோல ஒட்டகம், பசு, ஆடு இவற்றுள் ஒன்றின் பாலைப் பருக வேண்டும்.

**குறிப்பு:** *பத்தாவது சுலோகத்தில் கூறப்பட்டவாறு த்ரிகடு கலந்து பருகவேண்டும்.

-दद्यादात्ययिके गदे ॥ २७ ॥

स्नेहमेव विरेकार्थे दुर्बलेभ्यो विशेषतः ।

அபாயகரமான நோயில் பொதுவாகவும் இளைத்த வருக்கு விசேஷமாகவும், விரேசனத்திற்காக நெய்ப்பு பொருளையே கொடுக்கவேண்டும்.

हरीतकीसूक्ष्मरजः प्रस्थयुक्तं घृताढकम् ॥ २८ ॥

अग्नौ विलाप्य मथितं खजेन यवपल्लके ।
निधापयेत्ततो मासादुद्धृतं गालितं पचेत् ॥ २९ ॥

हरीतकीनां क्वाथेन दध्ना चाम्लेन संयुतम् ।
उदरं गरमष्ठीलामानाहं गुल्मविद्रधीम् ॥ ३० ॥

हन्त्येतत्कुष्ठमुन्मादमपस्मारं च पानतः ।

1 பிரஸ்தம் கடுக்காயின் நுண்ணிய தூள், 4 பிரஸ்தம் நெய் இவற்றைப் பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி காய்ச்சி இளக்கி ஒன்றாக்கி மத்தினால் கடைந்து பாத்திரத்தை யவைக்குவியலில் வைக்கவேண்டும். ஒரு மாதத்திற்குப் பிறகு எடுத்து துணியால் வடிக்கட்டி [1]கடுக்காய்க் கஷாயம், [2]புளித்த தயிர் ஆகியவை சேர்த்து பக்குவம் செய்து பருக உதரம், இடுவிஷம், [3]அஷ்டீலாக்கட்டி, பொருமல், குன்மம், வித்ருதிக்கட்டி, குஷ்டம், பைத்தியம், காக்கை வலிப்பு ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: 1. கடுக்காய் கஷாயம், புளித்த தயிர் இவற்றிற்கு அளவு கூறப்படவில்லை. பொது பரிபாஷைப்படி அவற்றைக் சேர்க்குமாறு அருணதத்தர் கூறுகிறார்.

2. நெய்க்குச் சமஅளவு கடுக்காய்க் கஷாயமும், அவ்வாறே புளித்த தயிரும் சேர்க்கவேண்டும் என்பது இந்துவின் கருத்தாகும்.

3. அஷ்டீலா - வயிற்றில் உண்டாகும் சிறு குழவி விக்கல் போன்ற அமைப்புள்ள கட்டி.

स्नुक्क्षीरयुक्ताद्गोक्षीराच्छृतशीतात् खजाहतात् ॥ ३१ ॥

यज्जातमाज्यं स्नुक्क्षीरसिद्धं तच्च तथागुणम् ।

கள்ளிப்பால் சேர்த்த பசும்பாலைக் கெட்டியாகும் வரை காய்ச்சி குளிர்ந்தபின் மத்தால் கடைந்து எடுத்த வெண்ணெயின் நெய்யை *கள்ளிப்பால் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகிக்க முற்கூறிய பலன் கிட்டும்.

குறிப்பு: *நெய்க்கு சமஅளவு கள்ளிப்பால் சேர்த்துப் பாகம் செய்ய வேண்டுமென இந்து கூறுகிறார்.

क्षीरद्रोणे सुधाक्षीरप्रस्थार्थसहितं दधि ॥ ३२ ॥

जातं मथित्वा तत्सर्पिस्त्रिवृत्सिद्धं च तद्गुणम् ।

16 பிரஸ்தம் பசுவின்பால், 8 பலம் கள்ளிப்பால் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி தயிராக்கிய நிலையில் கடைந்து எடுத்த வெண்ணெயை சிவதைவேர் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகித்தால் முற்கூறிய குணம் உண்டாகும்.

तथा सिद्धं घृतप्रस्थं पयस्यष्टगुणे पिबेत् ॥ ३३ ॥

स्नुक्क्षीरपलकल्केन त्रिवृताषट्पलेन च ।

இவ்வாறு எடுக்கப்பட்ட நெய் 1 பிரஸ்தம், பால் 8 பிரஸ்தம், கள்ளிப்பால் 1 பலம், சிவதை 6 பலம் ஆகியவற்றைக் கலந்து பக்குவம் செய்து பருகவேண்டும்.

एषां चानु पिबेत्पेयां रसं स्वादु पयोऽथवा ॥ ३४ ॥

இவற்றிற்கு பிறகு அனுபானமாக கஞ்சி, மாம்ஸரஸம் அல்லது இனிப்பான பால் பருகவேண்டும்.

घृते जीर्णे विरिक्तश्च कोष्णं नागरसाधितम् ।
पिबेदम्बु ततः पेयां ततो यूषं कुलत्थजम् ॥ ३५ ॥

கிருதம் ஜீரணித்த நிலையில் விரேசனமானபின் சுக்கு சேர்த்துக் காய்ச்சியதும், இளஞ்சூடான நீரையும் பிறகு, அரிசிக்கஞ்சியும், அடுத்து கொள் கஞ்சியும் பருக வேண்டும்.

पिबेद्रूक्षस्त्र्यहं त्वेवं भूयो वा प्रतिभोजितः ।
पुनः पुनः पिबेत्सर्पिरानुपूर्व्याऽ नयैव च ॥ ३६ ॥

இவ்வாறு 4 நாட்கள் வறட்சியாக இருக்கவேண்டும். மறுபடியும் அளவுடன் உட்கொண்டு இம்முறையிலேயே அடிக்கடி க்ருதபானம் செய்யலாம்.

घृतान्येतानि सिद्धानि विदध्यात्कुशलो भिषक् ।
गुल्मानां गरदोषाणामुदराणां च शान्तये ॥ ३७ ॥

கைதேர்ந்த வைத்தியர் கைகண்ட பலனுள்ள இந்த கிருதங்களை குன்மம், இடுவிஷ தோஷங்கள், உதர நோய் ஆகியவை நீங்க உபயோகிக்கவேண்டும்.

पीलुकल्कोपसिद्धं वा घृतमानाहभेदनम् ।
तैल्वकं नीलिनीसर्पिः स्नेहं वा मिश्रकं पिबेत् ॥ ३८ ॥

உகா கல்க்கம் சேர்த்துக் காய்ச்சிய நெய், பொருமலைப் போக்கும். [1]தில்வக கிருதம், [2]நீலினி கிருதம், [3]மிச்ரக ஸ்னேஹம் இவற்றுள் ஒன்றைப் பருகவேண்டும்.

குறிப்பு: 1. தில்வக கிருதம் - சிகித். அத். 21. சுலோ. 32-ல் கூறப்படவிருக்கிறது.

2. நீலினி கிருதம் - சிகித். அத். 14. சுலோ. 55-ல் கூறப்பட்டுள்ளது.

3. மிச்ரக ஸ்னேஹம் - சிகித். அத். 14. சுலோ. 89-ல் கூறப்பட்டுள்ளது.

हृतदोषः क्रमादश्नन् लघुशाल्योदनंप्रति ।
उपयुंजीत जठरी दोषशेषनिवृत्तये ॥ ३९ ॥

हरीतकीसहस्रं वा गोमूत्रेण पयोनुपः ।
सहस्रं पिप्पलीनां वा स्नुक्क्षीरेण सुभावितम् ॥ ४० ॥

पिप्पलींवर्धमानं वा क्षीराशी वा शिलाजतु ।
तद्वद्वा गुग्गुलं क्षीरं तुल्यार्द्रकरसं तथा ॥ ४१ ॥

தோஷம் நீங்கியபின் படிப்படியாக எளிதில் ஜீரணிக்கும் குணமுள்ள சாலியன்னத்தை சிறிதளவாக உண்ணவேண்டும். எஞ்சியுள்ள தோஷங்கள் நீங்குவதற்காக [1] பசு மூத்ரத்தில் பாவனை செய்யப்பட்ட ஆயிரம் கடுக்காயை பால் அனுபானத்துடனாவது, திருகு கள்ளிப் பாலில் பாவனை செய்யப்பட்ட ஆயிரம் திப்பிலியை யாவது, (ரஸாயன விதிப்படி) வர்த்தமான திப்பிலியை யாவது, பாலுணவுடன் சிலாஜது அல்லது குக்கிலை யாவது, சம அளவு இஞ்சிச்சாறு சேர்த்த பாலையாவது உட்கொள்ள வேண்டும்.

1. கோ மூத்ரத்துடன் கலந்து கடுக்காயை உட்கொண்டு அனுபானமாக பாலைப் பருகவேண்டுமென இந்து கூறுகிறார்.

चित्रकामरदारुभ्यां कल्कं क्षीरेण वा पिबेत् ।
मासं युक्तस्तथा हस्तिपिप्पलीविश्वभेषजम् ॥ ४२ ॥

அல்லது கொடிவேலி, தேவதாரு இவற்றின் கல்க்கத்தை பாலுடன் பருகவேண்டும். அல்லது புலனடக்கத்துடன் இருந்துக்கொண்டு, யானைத்திப்பிலி, சுக்கு இவற்றின் சூரணத்தைப் பால் கலந்து ஒரு மாதம் பருகவேண்டும்.

**குறிப்பு:** முற்கூறிய கல்க்கமும் ஒரு மாதம் உபயோகிக்க வேண்டுமென இந்து கூறுகிறார்.

विडंगं चित्रको दन्ती चव्यं व्योषं च तैः पयः ।
कल्कैः कोलसमैः पीत्वा प्रवृद्धमुदरं जयेत् ॥ ४३ ॥

வாய்விளங்கம், கொடிவேலி, நாகதந்தி, செவ்வியம், த்ரிகடு இவற்றை வகைக்கு 1/8 பலம் எடுத்து கல்க்கமாக்கி பாலுடன் பருக முதிர்ந்த உதர நோயும் நீங்கும்.

भोज्यं भुंजीत वा मासं स्नुहीक्षारघृतान्वितम् ।
उत्कारिकां वा स्नुक्क्षीरपीतपथ्याकणाकृताम् ॥ ४४ ॥

அல்லது கள்ளிப்பால் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட நெய் சேர்ந்த உணவை ஒருமாதம் உட்கொள்ளவேண்டும். அல்லது கள்ளிப்பாலில் பாவனை செய்யப்பட்ட கடுக்காயும், திப்பிலியும் சேர்த்து தயாரிக்கப்பட்ட *உத்காரியை உண்ண வேண்டும்.

**குறிப்பு:** உத்காரிகை - புட்டு வகை.

पार्श्वशूलमुपस्तम्भं हृद्ग्रहं च समीरणः ।
यदि कुर्यात् ततस्तैलं बिल्वक्षारान्वितं पिबेत् ॥ ४५ ॥

पक्वं वा टिण्डुकबलापलाशतिलनालजैः ।
क्षारैः कदल्यपामार्गतर्करीजैः पृथक्कृतैः ॥ ४६ ॥

வாயுவானது பக்கவலி, [1]ஆவரணம், இருதயப் பிடிப்பு ஆகியவற்றை உண்டாக்குமாயின் [2]பில்வக்ஷார ஜலம் கலந்து பக்குவம் செய்த தைலத்தை பருக வேண்டும். அல்லது பெருவாகை, சிற்றாமுட்டி, புரசு, எள்ளுச்செடி, வாழை, நாயுருவி, முன்னை இவற்றுள் ஒவ்வொன்றின் க்ஷாரம் கலந்த தைலம் பக்குவம் செய்து பருகவேண்டும்.

குறிப்பு: 1. தோஷம் முதலியவை ஒன்றை ஒன்று சூழ்ந்து கொண்டு ஆக்ரமித்தல் ஆவரணம் எனப்படும்.

2. பில்வ மரத்தின் க்ஷாரம் எனச் சிலரும் பில்வப் பழத்தின் க்ஷாரம் எனச் சிலரும் கூறுகின்றனர்.

कफे वातेन पित्ते वा ताभ्यां वा प्यावृते निले ।
बलिनः स्वौषधयुतं तैलमेरण्डजं हितम् ॥ ४७ ॥

கபம் அல்லது பித்தமானது வாயுவினாலும், அல்லது வாயுவானது அவ்விரண்டினாலும் ஆவரணம் செய்யப் பட்டிருந்தால் [1]பலசாலியான நோயாளிக்கு உரியவாறு மருந்துப் பொருள் சேர்க்கப்பட்ட ஆமணக்கு [2]எண்ணெய் பருகுவதற்கு ஏற்றதாகும்.

குறிப்பு: 1. பலமுள்ளவருக்கு என கூறப்பட்டதால் பல மற்றவருக்கு இம்முறை உசிதமல்ல என்பது இந்துவின் கருத்து.

2. சிகித். அ. 14. சு. 43. வாத - குன்ம சிகித்ஸையில் கூறியவாறு ஆமணக்கு எண்ணெய் பருக வேண்டும் என இந்து கூறுகிறார்.

देवदारुपलाशार्कहस्तिपिप्पलिशिग्रुकैः ।
साश्वकर्णैः सगोमूत्रैः प्रदिह्यादुदरं बहिः ॥ ४८ ॥

**உதர நோயில் மேல் பூச்சு :**

தேவதாரு, புரசு, எருக்கு, யானைத்திப்பிலி, முருங்கை, ஆச்சாமருது, இவற்றை பசு நீருடன் கலந்து வயிற்றின் மீது பற்றுப்போட வேண்டும்.

குறிப்பு: 1. अश्वगन्धा அமுக்கறாக்கிழங்கு என சரகத்தில் பாடம் காணப்படுகிறது.

वृश्चिकालीवचाशुण्ठीपञ्चमूलपुनर्नवात् ।
वर्षाभूधान्यकुष्ठाश्च क्वाथैर्मूत्रैश्च सेचयेत् ॥ ४९ ॥

**(ஸேகம்) நனைத்தல் :**

தேட் கொடுக்கு, வசம்பு, சுக்கு, பஞ்சமூலம், மூக்கிரட்டை, வெள்ளை மூக்கிரட்டை, மல்லி, கோஷ்டம், இவற்றின் கஷாயங்களாலும், சிறுநீர் வகையாலும் வயிற்றை நனைக்கவேண்டும்.

विरिक्तम्लानमुदरं स्वेदितं साल्वलादिभिः ।
वाससा वेष्टयेदेवं वायुर्नाऽऽध्मापयेत्पुनः ॥ ५० ॥

விரேகம் செய்விக்கப்பட்டால் வயிறு வாடிய நிலையில் *ஸால்வனம் முதலியவற்றால் வியர்ப்பித்து, வாயு மறுபடியும் வயிற்றைப் பருக்கச் செய்யாதவாறு வஸ்திரத்தால் சுற்றிக் கட்டவேண்டும்.

குறிப்பு: *ஸால்வன ஸ்வேதம் - ஸூத். அத். 17. சு. 3-ல் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளது.

सुविरिक्तस्य यस्य स्यादाध्मानं पुनरेव तम् ।
सुस्निग्धैरम्ललवणैर्निरूहैः समुपाचरेत् ॥ ५१ ॥

நன்கு விரேசனமாகியும் திரும்பவும் வயிறு பருத்தால் அவருக்கு மிகவும் நெய்ப்பு உள்ளவையும் உப்பு, புளிப்பு ஆகியவற்றைக் கொண்டவையுமான கஷாய பஸ்தி களால் சிகித்ஸை செய்யவேண்டும்.

सोपस्तम्भोऽपि वा वायुराध्मापयति यं नरम् ।
तीक्ष्णाः सक्षारगोमूत्राः शस्यन्ते तस्य बस्तयः ॥ ५२ ॥

வாயுவானது ஆவரணம் செய்யப்பட்ட நிலையிலும் பொருமலை உண்டாக்கினால் அவருக்கு க்ஷாரம், கோமூத்ரம் ஆகியவை கலந்த தீக்ஷ்ணமான பஸ்திகள் ஏற்றன வாகும்.

इति सामान्यतः प्रोक्ताः सिद्धा जठरिणां क्रियाः ।

இவ்வாறு உதர நோயாளிக்கு பலமுறை பயனளித்த பொது சிகித்ஸை முறைகள் கூறப்பட்டது.

वातोदरेऽथ बलिनं विदार्यादिशृतं घृतम् ॥ ५३ ॥

पाययेत ततः स्निग्धं स्वेदितांगं विरेचयेत् ।
बहुशस्तैल्वकेनैनं सर्पिषा मिश्रकेण वा ॥ ५४ ॥

**வாதோதர சிகித்ஸை :**

வாயுவால் உண்டான உதர நோயால் பீடிக்கப்பட்டவர் பலசாலியாக இருப்பின் [1]விதார்யாதிகணச் சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்த நெய்யைப் பருகச் செய்ய வேண்டும். நெய்ப்பு உண்டான பிறகு வியர்ப்பித்து

[2]தில்வக கிருதம் அல்லது [3]மிச்ரக மூல தோஷத்தால் பல தடவை விரேசனம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: 1. விதார்யாதிகணச் சரக்குகளை சூத். அத். 15-ல் காண்க.

2. தில்வக கிருதம் - அத். 21-ல் சு.32-ல் கூறப்பட இருக்கிறது.

3. மிச்ரக ஸ்னேஹ கிருதம் - அத். 14. சு. 89-ல் விளக்கப்பட்டுள்ளது.

कृते संसर्जने क्षीरं बलार्थमवचारयेत् ।
प्रागुत्क्लेशान्निवर्तेत बले लब्धे क्रमात्पयः ॥ ५५ ॥

★ஸம்ஸர்ஜன க்ரியை முடிந்தபின் பலம் உண்டாவதற்காக பால் பருகவேண்டும். பலம் உண்டானதும் கபம் கிளர்ச்சியுறுவதற்கு முன்பாகவே படிப்படியாகப் பால் பருகுவதை நிறுத்தவேண்டும்.

குறிப்பு: சோதனம் செய்தபின் உட்கொள்ளப்படும் கஞ்சி தொடங்கியுள்ள உணவு வகை ஸம்ஸர்ஜனம் எனப்படும்.

यूषै रसैर्वा मन्दाम्ललवणैरेधितानलम् ।
सोदावर्तं पुनः स्निग्धस्विन्नमास्थापयेत्ततः ॥ ५६ ॥

तीक्ष्णाधोभागयुक्तेन दाशमूलिकबस्तिना ।

உதாவர்த்தம் உள்ளவருக்கு சிறிதே புளிப்பு, உவர்ப்பு ஆகியவை கலந்த பருப்புக்கஞ்சி, அல்லது மாம்ஸரஸ உணவு உட்கொள்ளச் செய்து ஜாடராக்னி பலத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். மறுபடியும் நெய்ப்பு சிகித்ஸை, வியர்வைச் சிகித்ஸை, ஆகியவற்றைச் செய்வித்து

தீக்ஷ்ணமான [1]விரேசனப் பொருள்கள் கலந்த [2]தசமூல கஷாய பஸ்தியால் ஆஸ்தாபனம் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: 1. விரேசனத் திரவியங்கள் ஸூத். அத். 15-ல் கூறப்பட்டுள்ளன.

2. தசமூல கஷாய பஸ்தியின் விளக்கத்தை கல்ப ஸ்தானம் 4-ம் அத்தியாயத்தில் காண்க.

तिलोरुबूकतैलेन वातघ्नाम्लभृतेन च ॥ ५७ ॥

स्फुरणाक्षेपसन्ध्यस्थिपार्श्वपृष्ठत्रिकार्तिषु ।
रूक्षं बद्धशकृद्वातं दीप्ताग्निमनुवासयेत् ॥ ५८ ॥

अविरेच्यस्य शमना बस्तिक्षीरघृतादयः ।

வறட்சியுள்ள மலம், வாயு இவற்றின் தடையுள்ளவர், அக்னி பலம் உள்ளவர் ஆகியோருக்கு துடிப்பு, உதறல், பூட்டுக்களில் வலி, எலும்புவலி, பக்கவலி, புட்டவலி, முள்ளந்தண்டுவலி ஆகியவை இருப்பின், வாயுவைப் போக்கும் பொருள்களும், புளிப்புக் கலவைப் பொருள்களும் சேர்த்து காய்ச்சிய நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் இவைகளால் அனுவாஸனம் செய்ய வேண்டும். விரேசனம் செய்யத்தகாத நிலையில் இந்நோயாளிக்கு தோஷங்களை அடக்கும் தன்மையுள்ள பஸ்தி, பால், நெய் [1]முதலியவற்றை பிரயோகிக்கலாம்.

குறிப்பு: 1. முதலிய என்பதால் பருப்புக் கஞ்சி, மாம்ஸ ரஸம், அப்பியங்கம், மருந்து கலந்த உணவு முதலியன கூறப்படுகின்றன.

2. விதார்யாதிகணச் சரக்குகளின் கஷாயத்துடன் ஆமணக்கு எண்ணெய் கலந்து உபயோகிக்குமாறு சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

बलिनं स्वादुसिद्धेन पैत्ते संस्नेह्य सर्पिषा ॥ ५९ ॥
श्यामात्रिभण्डीत्रिफलाविपक्वेन विरेचयेत् ।

सितामधुघृताढ्येन निरूहोऽस्य ततो हितः ॥ ६० ॥
न्यग्रोधादिकषायेण स्नेहबस्तिश्च तच्छृतः ।

**பித்த உதர சிகித்ஸை :**

பித்த உதர நோயாளி பலசாலியாக இருப்பின், அவருக்கு இனிப்புப் பொருள்கள் சேர்த்து பக்குவம் செய்யப்பெற்ற கிருதத்தால் நெய்ப்பு உண்டாக்குவதுடன் கருஞ்சிவதை, வெண்சிவதை, திரிபலை ஆகியவை சேர்த்து பக்குவம் செய்யப்பெற்ற கிருதத்தால் விரேசனம் செய்யவேண்டும். சர்க்கரை, தேன், நெய் ஆகியவை அதிகம் கலந்த ★ந்யக்ரோதாதிகணச் சரக்குகளின் கஷாயத்தினால் நிரூஹபஸ்தியும் ந்யக்ரோதாதிகணச் சரக்குகள் சேர்த்து காய்ச்சப்பெற்ற ஸ்னேஹத்தால் அனுவாஸன பஸ்தியும் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: ★ந்யக்ரோதாதிகணத்தின் விளக்கத்தை அத்.15-ல் காண்க.

दुर्बलं त्वनुवास्यादौ शोधयेत्क्षीरबस्तिभिः ॥ ६१ ॥

பித்த உதர நோயாளி பலங்குன்றியவராயின் முதலில் அனுவாஸனம் செய்வித்து ★பால் கலந்த பஸ்திகளால் சோதனம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: ★பால் கலந்த பஸ்திகள் கல்பஸ்தானத்தில் கூறப்படவிருக்கின்றன.

जाते चाग्निबले स्निग्धं भूयो भूयो विरेचयेत् ।
क्षीरेण सत्रिवृत्कल्केनोरुबूकभृतेन वा ॥ ६२ ॥

सातलात्रायमाणभ्यां भृतेनाऽऽरग्वधेन वा ।
सकफे वा समूत्रेण सतिक्ताज्येन सानिले ॥ ६३ ॥

पयसाऽन्यतमेनैषां विदार्यादिभृतेन वा ।
भुंजीत जठरं चास्य पायसेनोपनाहयेत् ॥ ६४ ॥

அக்னிபலம் ஏற்பட்டவுடன் நெய்ப்பு உண்டாக்கி சிவதைக் [1]கல்க்கத்துடனாவது, ஆமணக்குவேர் அல்லது சிகைக்காயும், துராய்ப் பூண்டும், அல்லது சரக் கொன்றை சேர்த்துப் பக்குவம் செய்த பால் பருகச் செய்து, அடிக்கடி விரேசனம் செய்விக்கவேண்டும். கபத்துடன் கூடிய பித்த உதரநோயில் பசுநீர் கலந்த பாலினாலாவது, வாயுவுடன் கூடிய பித்த உதர நோயில் [2]திக்த கிருதத்துடன் கலந்த பாலினாலாவது விரேசனம் செய்விக்கவேண்டும். இங்கு கூறிய பால் வகையில் ஒன்றுடனாவது [3]விதார்யாதிகணச் சரக்குகள் சேர்த்து காய்ச்சிய பாலுடனாவது உணவு உட்கொள்ளவேண்டும். பால் சேர்த்துப் பக்குவம் செய்த அன்னத்தை வயிற்றின் மீது கட்டவேண்டும்.

குறிப்பு: 1. சிவதை வேர்க் கல்க்கம் இங்குக் கூறப்பட்ட ஒவ்வொரு வகை பால் கல்க்கத்துடனும் கலக்க வேண்டுமென சிலர் கருதுகின்றனர்.

2. திக்த கிருதம் - சிகித்ஸா. அத்.19-ல் கூறப்பட விருக்கிறது.

3. விதார்யாதிகணத்தை ஸூத். அத்தியாயம் 15-ல் காணலாம்.

पुनः क्षीरं पुनर्बस्तिं पुनरेव विरेचनम् ।
क्रमेण ध्रुवमातिष्ठन् यत्तः पित्तोदरं जयेत् ॥ ६५ ॥

மீண்டும் பால், மீண்டும் பஸ்தி, மீண்டும் விரேசனம் என்ற வரிசையில் உறுதியாக சிகித்ஸை செய்து மிகுந்த கவனத்துடன் பித்த உதர நோயை வெல்ல வேண்டும்.

वत्सकादिविपक्वेन कफे संस्नेह्य सर्पिषा ।
स्विन्नं स्नुक्क्षीरसिद्धेन बलवन्तं विरेचितम् ॥ ६६ ॥

संसर्जयेत्कटुक्षारयुक्तैरन्नैः कफापहैः ।

**கப உதர சிகித்ஸை :**

கபத்தால் உண்டான உதரநோய் உள்ளவர் பலசாலியாக இருப்பின், *வத்ஸகாதிகணச் சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பெற்ற க்ருதத்தால் நெய்ப்பு உண் டாக்குவதுடன், வியர்வைச் சிகித்ஸையும் செய்வித்து, கள்ளிப்பால் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யால் விரேசனம் செய்விக்க வேண்டும். பிறகு காரம், க்ஷாரம், ஆகியவை கலந்ததும், கபத்தைப் போக்கக்கூடிய பொருள் கள் கலந்ததுமான கஞ்சி முதலிய உணவு வரிசையால் உபசரிக்கவேண்டும்.

குறிப்பு: வத்ஸகாதிகணத்தின் விளக்கத்தை - ஸூத். அத். 15-ல் காணலாம்.

मूत्रत्र्यूषणतैलाढ्यो निरूहोऽस्य ततो हितः ॥ ६७ ॥

मुष्ककादिकषायेण स्नेहबस्तिश्च तच्छृतः ।

भोजनं व्योषदुग्धेन कौलत्थेन रसेन वा ॥ ६८ ॥

பிறகு, *முஷ்ககாதிகணச் சரக்குகளின் கஷாயத்தில் பசுநீர், த்ரிகடு, தைலம் ஆகியவை அதிகம் கலந்து நிரூஹபஸ்தி செய்விக்கவேண்டும். முஷ்ககாதிகணச் சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப்பெற்ற ஸ்னேஹத் தால் அனுவாஸன பஸ்தி செய்விக்கவேண்டும். கொள் ரஸத்துடனாவது, த்ரிகடு கலந்து பாலுடனாவது அன்னம் உண்ண வேண்டும்.

**குறிப்பு:** முஷ்ககாதிகணத்தின் விளக்கத்தை - சூத்.அத். 15-ல் காண்க.

स्तैमित्यारुचिहृल्लासेमन्देऽग्नौ मद्यपाय च ।
दद्यादरिष्टान् क्षारांश्च कफस्त्यानस्थिरोदरे ॥ ६९ ॥

கபம் காரணமாக இறுக்கமும் அசைவின்மையும் காணப்படும் உதர நோயாளி, மது பருகும் பழக்கமுள்ள வராயின், திமிர்த்தல், ருசியின்மை, குமட்டல், அக்னி மந்தம் ஆகியவை காணப்படும் நிலையில் அவருக்கு அரிஷ்டங்களையும், க்ஷாரங்களையும் கொடுக்கலாம்.

हिंगूपकुल्ये त्रिफलां देवदारु निशाद्वयम् ।
भल्लातकं शिग्रुफलं कटुकां तिक्तकां वचाम् ॥ ७० ॥

शुण्ठीं मार्द्रीं घनं कुष्ठं सरलं पटुपञ्चकम् ।
दाहयेज्जर्जरीकृत्य दधिस्नेहचतुष्कवत् ॥ ७१ ॥

अन्तर्धूमं ततः क्षाराद्बिडालपदकं पिबेत् ।
मदिरादधिमण्डोष्णजलारिष्टसुरासवैः ॥ ७२ ॥

उदरं गुल्ममष्ठीलां तून्यौ शोफं विसूचिकाम् ।
प्लीहहृद्रोगगुदजानुदावर्तं च नाशयेत् ॥ ७३ ॥

காயம், திப்பிலி, திரிபலை. தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், சேங்கொட்டை, முருங்கைவிதை, கடுக ரோஹிணீ, [1]நிலவேம்பு, வசம்பு, சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, கோஷ்டம், சரளதேவதாரு, ஐவகை [2]உப்புக்கள், இவற்றை நசுக்கி தயிரும், நால்வகை [3]ஸ்னேஹப் பொருள்களும் சேர்த்து, பானையிலிட்டு உட் புகையாக எரித்து க்ஷாரம் தயாரிக்கவேண்டும். இத்தகைய க்ஷாரத்தை ¼ பலம் எடுத்து மதிரை என்றும் மது, தயிர்த் தெளிவு, வெந்நீர், அரிஷ்டம், சுரை ஆஸவங்கள் (இவற்றுள் ஒன்றுடன்) கலந்து பருக வேண்டும். உதரம், குன்மம், அஷ்டீலாக்கட்டி, [4]தூனி, பிரதூனி, வீக்கம், வாந்தி, பேதி, மண்ணீரல் நோய், இருதய நோய், மூலம், உதாணர்த்தம் ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: 1. तिक्तक என்பதற்குப் பதிலாக तिल्वक பாச்சோற்றி என சரகத்தில் காணப்படுகிறது.

2. ஐவகை உப்புக்களின் விளக்கத்தை சூத். 6-வது அத்தியாயத்தில் காண்க.

3. நால்வகை ஸ்னேஹப் பொருள்கள் நெய், எண்ணெய், மாம்ஸ எண்ணெய், எலும்புச்சத்து.

4. தூனி - பக்குவாசயத்திலிருந்து ஆசனம், குறி இவற்றை நோக்கி தீவிர வேதனையுடன் செல்லும் வாயு, தூனி என்றும், இது மாறாகச் சென்றால் பிரதூனி என்றும் பெயர்பெறும்.

உணவிற்குப்பின் இதை உட்கொள்ளும்படி சரகஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

जयेदरिष्टगोमूत्रचूर्णायस्कृतिपानतः ।
सक्षारतैलपानैश्च दुर्बलस्य कफोदरम् ॥ ७४ ॥

பலங்குன்றியவருக்கு கபத்தால் உண்டான உதர நோயில் அரிஷ்டம், பசுநீர், அயப்பொடி கலக்கப்பட்ட சூர்ணங்கள் கலந்த *அயஸ்க்ருதி, க்ஷாரம், கலந்த தைலம் ஆகியவற்றை பருகச்செய்வதன் மூலம் சிகித்ஸை செய்ய வேண்டும்.

उपनाह्यं ससिद्धार्थकिण्वैर्बीजैश्च मूलकात् ।
कल्कितैरुदरं स्वेदमभीक्ष्णं चात्र योजयेत् ॥ ७५ ॥

கடுகு, சுரைவண்டல், முள்ளங்கிவிதை இவற்றின் கல்க்கத்தை வயிற்றின் மேல் கட்டவேண்டும். அடிக்கடி வியர்வை சிகித்ஸை செய்ய வேண்டும்.

सन्निपातोदरे कुर्यान्नातिक्षीणबलानले ।
दोषोद्रेकानुरोधेन प्रत्याख्याय क्रियामिमाम् ॥ ७६ ॥

**ஸன்னிபாத உதர சிகித்ஸை :**

ஸன்னிபாத தோஷத்தால் உண்டான உதர நோயில் பலம், ஜாடராக்னி ஆகியவை மிகக் குறையாதிருப்பின், முதலில் சிகித்ஸைக்கு ஏற்கமறுத்து, பிறகு அதிகரித்த தோஷங்களுக்கு ஏற்றபடி, இங்கு அடுத்துக் கூறப்பட விருக்கிற சிகித்ஸையை செய்யவேண்டும்.

दन्तीद्रवन्तीफलजं तैलं पाने च शस्यते ।

நாகதந்தீ, எலிச்செவி இவற்றின் விதையிலிருந்து எடுத்த எண்ணெய், பானம் செய்ய ஏற்றதாகும்.

क्रियानिवृत्ते जठरे त्रिदोषे तु विशेषतः ॥ ७७ ॥

दद्यादापृच्छ्य तज्ज्ञातीन् पातुं मद्येन कल्कितम् ।
मूलं काकादनीगुंजाकरवीरकसम्भवम् ॥ ७८ ॥

पानभोजनसंयुक्तं दद्याद्वा स्थावरं विषम्।
यस्मिन् वा कुपितः सर्पो विमुंचति फले विषम् ॥ ७९॥

तेनास्य दोषसंघातः स्थिरो लीनो विमार्गगः ।
बहिः प्रवर्तते भिन्नो विषेणाशु प्रमाथिना ॥ ८० ॥

तथा व्रजत्यगदतां शरीरान्तरमेव वा ।

சிகித்ஸையை கடந்த நிலையில் எல்லா உதர நோயிலும் விசேஷமாக ஸன்னிபாத உதரத்திலும் உறவினர்களிடம் *அனுமதிபெற்று வெள்ளைக்குன்றி, குன்றி, அரளி, இவற்றின் வேரை கல்க்கமாக்கி மதுவுடன் கலந்து கொடுக்க வேண்டும். அல்லது தாவர விஷத்தை பானம், உணவு ஆகியவற்றில் கலந்து கொடுக்கவேண்டும். அல்லது கோபமடைந்த ஸர்ப்பம் கக்கிய விஷமுள்ள பழத்தைக் கொடுக்கவேண்டும். விரைவில் கடைந்து எடுக்கும் தன்மையுள்ள அந்த விஷத்தால், இறுகியதும், தாதுக்களில் மறைந்ததும், வழி தவறியதுமான தோஷக் கூட்டம் பிளக்கப்பட்டு விரைவில் வெளியேறும். இவ்வித சிகித்ஸையால் நோய் நீங்கும். அல்லது மரணமுண்டாகும்.

குறிப்பு: * இங்கு கூறப்படுபவை விஷம் சம்பந்தப் பட்டவை ஆதலாலும், வேறு உபாயமற்ற நிலையில் துணிகரமாக செய்ய வேண்டியிருப்ப தாலும், உறவினரின் அனுமதி பெறப்படுகிறது.

हृतदोषं तु शीताम्बुस्नातं तं पाययेत्पयः ॥ ८१ ॥

पेयां वा त्रिवृतः शाकं मण्डूक्या वास्तुकस्य वा ।
कालशाकं यवाख्यं वा खादेत्स्वरससाधितम् ॥ ८२ ॥

निरम्ललवणस्नेहं स्विन्नास्विन्नमनन्नभुक् ।
मासमेकं ततश्चैव तृषितः स्वरसं पिबेत् ॥ ८३ ॥

एवं विनिर्हृते शाकैर्दोषे मासात् परं ततः ।
दुर्बलाय प्रयुंजीत प्राणभृत्कारभं पयः ॥ ८४ ॥

தோஷம் நீங்கியபின் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்வித்து [1]பால் அல்லது கஞ்சியைப் பருகச் செய்ய வேண்டும். சிவதை, பிரம்மி, வாஸ்து இவற்றின்[2] கீரை, கருவேப்பிலை, யவைக்கீரை இவற்றை அதனதன் ரஸத்தில் பக்குவம் செய்து புளிப்பு, நெய்ப்புப் பொருள் ஆகியவை சேர்க்காமல் வெந்ததும், வேகாததுமான நிலையில் வேறு உணவின்றி ஒருமாதம் உண்ண வேண்டும். விடாய் ஏற்பட்டால் இங்கு கூறப்பட்ட கீரைகளின் ரசத்தைப் பருகவேண்டும். இவ்வாறு கீரைகளால் தோஷங்கள் நீங்கியபின், ஒரு மாதத்துக்குப்பிறகு பலங் குன்றியவருக்கு ஒட்டகத்தின் பாலைப்பருகக் கொடுக்க வேண்டும். இது உயிரைத் தாங்கும்.

குறிப்பு: 1. பால்கஞ்சி பருகும்படி சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. பொதுவாக பெருமளவில் கீரை வகையின் உபயோகம் தவிர்க்கப்படவேண்டும் என்பதே ஆயுர்வேத ஆசிரியர்களின் கருத்து. ஆனால் இங்கு முக்கியமாக கீரை வகைகளின் உபயோகத்தையே

ஆதரித்திருப்பது, விஷ உபயோகத்தினால் மாறுபட்ட சூழ்நிலையை அனுசரித்த விசேஷ விதி எனக் கொள்ளவேண்டும்.

प्लीहोदरे यथादोषं स्निग्धस्य स्वेदितस्य च ।
सिरां भुक्तवतो दध्ना वामबाहौ विमोक्षयेत् ॥ ८५ ॥

**மண்ணீரல் உதர சிகித்ஸை :**

மண்ணீரல் [1]உதர நோயால் பீடிக்கப்பட்டவருக்கு, அதிகரித்த தோஷங்களுக்கு ஏற்ப ஸினேஹ சிகித்ஸையும் ஸ்வேத சிகித்ஸையும் செய்வித்து, தயிர் சேர்ந்த உணவை உட்கொள்ளச் செய்து, பின்னர் இடது புஜத்தில் ஸிரை யைக், குத்தவேண்டும்.

**குறிப்பு:** 1. மண்ணீரல் உதர நோயில் இவ்வாறே சூடு இடுதல் 13-ஆம் அத்தியாயத்தின் இறுதியிலும் கூறப்பட்டது கவனிக்கத்தக்கது.

2. ரத்தம் நன்கு வெளியேறுவதற்காகக் கையினால் மண்ணீரலைப் பிசையவேண்டும்.

3. முழங்கையின் உட்புறத்திலுள்ள ஸிரையைக் குத்தவேண்டுமென சுச்ருத ஸம்ஹிதையில் தெளிவுறுத்தப்படுகிறது. (சுச்.14.அ.)

लब्धे बले च भूयोऽपि स्नेहपीतं विशोधितम् ।
समुद्रशुक्तिजं क्षारं पयसा पाययेत्तथा ॥ ८६ ॥

பலம் ஏற்பட்டதும் மீண்டும் ஸ்னேஹபானம், வமனம், விரேசனம் ஆகியவற்றைச் செய்வித்து *சமுத்ரத்தில் உண்டான கிளிஞ்சலின் க்ஷாரத்தை பால் கலந்து பருகச் செய்ய வேண்டும்.

குறிப்பு: ★சமுத்ரத்தின் கிளிஞ்சலையே குறிப்பிட்டிருத்தலால் நதி, குளம் இவற்றிலுண்டான கிளிஞ்சல் கூடாது என்பது கருத்து; என இந்து கூறுகிறார்.

अम्लभृतं बिडकणाचूर्णाढ्यं नक्तमालजम् ।
सौभाजनस्य वा क्वाथं सैन्धवाग्निकणान्वितम् ॥ ८७ ॥

हिंग्वादिचूर्णं क्षाराज्यं युंजीत च यथाबलम् ।

அவ்வாறே ஆவில், புங்கின் க்ஷாரத்தை காடி முதலிய புளிப்புத் திரவியங்களில் இட்டு வடிக்கட்டி வளையலுப்பு, திப்பிலிச் சூர்ணம் ஆகியவை அதிகம் கலந்து பருகவேண்டும். அல்லது முருங்கையின் [1]கஷாயத்துடன் இந்துப்பு, கொடி வேலி, திப்பிலிசூர்ணம் ஆகியவை கலந்து பருகவேண்டும். பலத்திற்கேற்ப ஹிங்குவாதி சூர்ணம், க்ஷாரங்கள் [2]நெய் இவற்றை உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. முருங்கைக் கஷாயத்துடன் தைலம் கலந்து பருகவேண்டும் என ஸுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

2. ஷட்பலகிருதம் - சி. அத். 5 சு. 22-ல் முதலியன நெய் வகைப் பற்றி குறிப்பிடப்படுகிறது.

पिप्पलीनागरं दन्तीसमांशं द्विगुणाभयम् ॥ ८८ ॥

बिडार्धांशयुतं चूर्णमिन्दमुष्णाम्बुना पिबेत् ।

திப்பிலி, சுக்கு, நாகதந்தி ஆகியவை வகைக்கு 1 பங்கு, கடுக்காய் 2 பங்கு, [2]வளையலுப்பு ½ பங்கு, இவற்றைச் சூரணித்து வெந்நீருடன் உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: 1. दन्तीसमांशम् என்பதை ஒரு பதமாகக் கொண்டு திப்பிலி, சுக்கு இவற்றின் கூட்டுக்கு சம அளவு நாகதந்தீ என்றும், அதற்கு இரண்டுமடங்கு கடுக்காய் என்றும் அருணதத்தர் உரை சில பதிப்பில் காணப்படுகிறது.

2. दन्तीचित्रक என்ற பாடத்தில் கொடிவேலியும் ஒரு பங்கு எனக் கொள்ளவேண்டும்.

3. विडङ्गांशयुतम् என்ற பாடத்தில் வாய்விளங்கம் ஒரு பங்கு எனக்கொள்ள வேண்டும். இவை சரகத்தை அனுசரித்த பாடங்களாகும்.

विडंगं चित्रकं सक्तून् सघृतान् सैन्धवं वचाम् ॥ ८९ ॥

दग्ध्वा कपाले पयसा गुल्मप्लीहापहं पिबेत् ।

வாய்விளங்கம், கொடிவேலி, நெய் கலக்கப்பட்ட சத்துமா, இந்துப்பு, வசம்பு, இவற்றைச் சட்டியிலிட்டு எரித்து எடுத்து பாலுடன் பருக குன்மம், மண்ணீரல் நோய் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: சரகத்தில் சுக்கு கூறப்பட்டுள்ளது. சத்துமா கூறப்படவில்லை.

तैलोन्मिश्रैर्बदरकपत्रैः सम्मर्दितैः समुपनद्धः ॥ ९० ॥

मुसलेन पीडितोऽनु याति प्लीहा पयोभुजो नाशम् ।

பாலை உணவாகக் கொள்ளச் செய்து இலந்தை இலையை தைலம் கலந்து அரைத்து வயிற்றின் மேல் கட்டி உலக்கையால் அமுக்கினால் மண்ணீரல் உதரம் நீங்கும்.

रोहीतकलताः बलूसाः खण्डशः सामया जले ॥ ९१ ॥

मूत्रे वा सुनुयात्तच्च सप्तरात्रस्थितं पिबेत् ।
कामलाप्लीहगुल्मार्शःकृमिमेहोदरापहम् ॥ ९२ ॥

[1]செம்மரத்தின் இளங்கிளையைச் சிறுசிறு துண்டாக [2]வெட்டி, [3]கடுக்காயும் சேர்த்து, நீரில் அல்லது பசு மூத்திரத்தில் 7 நாள் ஊறவைத்து, அந்நீரைப் பருகினால், காமாலை, மண்ணீரல் உதரம், குன்மம், மூலம், கிருமி, பிரமியம், உதர நோய் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. रोहितम् (ரோஹிதம்) என்ற மூலச் சொல்லுக்கு முள்முருங்கை என்னும் பொருள் கொள்வதுண்டு.

2. இரண்டங்குல நீளமுள்ளதாக வெட்ட வேண்டும் என இந்து கூறுகிறார்.

3. கடுக்காயையும் லேஹம்போல் உண்ண வேண்டும் என அருணதத்தர் கூறுகிறார். கடுக்காயை செம்மரத்தின் துண்டின் நிறைக்கு சமமாகச் சேர்க்க வேண்டும் என இந்து கூறுகிறார்.

4. கடுக்காய் நீரில் செம்மரத்தின் இளங் கிளைத் துண்டுகளை இடவேண்டுமென சரகத்தில் காணப் படுகிறது. தோஷத்திற்கேற்ப நீர் அல்லது பசு மூத்ரம் என இந்து கூறுகிறார்.

रोहीतकत्वचः कृत्वा पलानां पञ्चविंशतिम् ।
कोलद्विप्रस्थसंयुक्तं कषायमुपकल्पयेत् ॥ ९३ ॥

पालिकैः पञ्चकोलैस्तु तैः समस्तैश्च तूल्यया ।
हरीतकत्वचा पिष्टैर्घृतप्रस्थं विपाचयेत् ॥ ९४ ॥

प्लीहाभिवृद्धिं शमयत्येतदाशु प्रयोजितम् ।

செம்மரப்பட்டை 25 பலம், இலந்தை 2 பிரஸ்தம் இவற்றை நீரிலிட்டு முறைப்படி கஷாயமாக்கி பஞ்ச கோலம் வகைக்கு 1 பலம், செம்மரப்பட்டை 5 பலம், இவற்றின் கல்க்கத்துடன் 1 *பிரஸ்தம் நெய் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க விரைவில் மண்ணீரல் வீக்கம் நீங்கும்.

குறிப்பு: *இங்கு கல்கத்தின் மொத்த அளவு 10 பலமாக இருந்தால் நெய்யின் அளவான பிரஸ்தம் என்ற சொல்லுக்கு இரட்டிடை பரிபாஷையை அனுசரித்து 32 பலம் எனக் கொள்வது உசிதமாகும்.

कदल्यास्तिलनालानां क्षारेण क्षुरकस्य च ॥ ९५ ॥

तैलं पक्वं जयेत्पानात्प्लीहानं कफवातजम् ।

வாழை, எள்செடி, நீர்முள்ளி இவற்றின் க்ஷாரத்துடன் தைலம் சேர்த்து பக்குவம் செய்து பருக; வாத கபத்தால் உண்டான மண்ணீரல் வீக்கம் நீங்கும்.

अशान्तौ गुल्मविधिना योजयेदग्निकर्म च ॥ ९६ ॥

अप्राप्तपिच्छासलिले प्लीह्नि वातकफोल्बणे ।

இவ்வாறு செய்வித்தும் மண்ணீரல் உதர நோய் நீங்காவிடில் வாயுவும், கபமும் அதிகரித்து வழவழப்பும் நீரும் தோன்றாத நிலையில் குன்ம விதியில் கூறியவாறு சூடு இடவேண்டும்.

குறிப்பு: *இடது கை மணிக்கட்டைச் சிறிது வளைத்துக் கட்டை விரலை நோக்கிச் செல்லும் ஸிரையில் சரம் என்னும் சலாகையால் சூடு இடவேண்டும் என்று சுச்ருதத்தில் கூறப்படுகிறது.

पैत्तिके जीवनीयानि सर्पींषि क्षीरबस्तयः ॥ ९७ ॥

रक्तावसेकः संशुद्धिः क्षीरपानं च शस्यते ।

பித்ததோஷம் அதிகரிக்கப்பெற்ற மண்ணீரல் உதர நோயில் [1]ஜீவனீயகிருதம், [2]க்ஷீரபஸ்தி, ரத்தத்தை வெளியேற்றுதல், வமனம், விரேசனம், பால் பருகுதல், ஆகியவை ஏற்றனவாகும்.

குறிப்பு: 1. ஜீவனீய கணச்சரக்குள் ஸூத்.அத்.15-ல் கூறப்பட்டுள்ளன.

2. க்ஷீரபஸ்திகள் கல்ப ஸ்தானத்தில் கூறப்பட விருக்கின்றன.

यकृति प्लीहवत्कर्म दक्षिणे तु भुजे सिराम् ॥ ९८ ॥

கல்லீரல் விருத்தியால் உண்டான உதரநோயில் மண்ணீரல் விருத்திக்கு கூறப்பட்ட சிகித்ஸையை செய்யவேண்டும். வலது கையில் ஸிரையைக் குத்த வேண்டும்.

स्विन्नस्य बद्धोदरिणे मूत्रतीक्ष्णौषधान्वितम् ।
सतैललवणं दद्यान्निरूहं सानुवासनम् ॥ ९९ ॥

परिस्रंसीनि चान्नानि तीक्ष्णं चास्मै विरेचनम् ।
उदावर्तहरं कर्म कार्यं यच्चानिलापहम् ॥ १०० ॥

**(பித்தோதர சிகித்ஸை): மலவழித்தடை உதர சிகித்ஸை:**

பித்த உதர நோயாளிக்கு [1]வியர்வை உண்டாக்கி பசு மூத்ரம், தீக்ஷ்ணமான ஔஷதங்கள், [2]தைலம், இந்துப்பு

ஆகியவற்றை கலந்து [3] நிரூஹபஸ்தியும், அனுவாஸன பஸ்தியும் செய்விக்க வேண்டும். தோஷங்களை வெளியேற்றும் உணவுவகை தீக்ஷ்ணமான விரேசனம் ஆகியவற்றையும் உபயோகிக்க வேண்டும். உதாவர்த்த சிகித்ஸை, வாயுவைப்போக்கும் சிகித்ஸை ஆகிய வற்றையும் செய்யவேண்டும்.

குறிப்பு: 1. உதர நோயில் ஸ்வேத சிகித்ஸை தவிர்க்கப் பட வேண்டியது எனக் கூறப்பட்டிருப்பினும், அது பொது விதி என்றும் மலவழித்தடை உதரத்தில் அனுமதிக்கப்படுவது விசேஷ விதி என்றும் கொள்ள வேண்டும்.

2. நிரூஹ பஸ்தியில் பொதுவாகவே எண்ணெயும் இந்துப்பும் கலப்பதுண்டு. எனினும், தனித்துக் கூறப்பட்டிருத்தலால் அவற்றை அதிகரித்த அளவில் கலக்க வேண்டுமென்று சக்ரதத்தர் கூறுகிறார்.

3. மலவழித்தடை, உதரம் முதலிய மூவகை உதரங்களிலும் பஸ்திபிரயோகம் மறுக்கப் பட்டிருப்பினும், பஸ்திபிரயோகத்தால் மாத்திரமே நோய் நிவர்த்தி ஏற்படும் நிலை காணப் பட்டால், பஸ்தி செய்விப்பது அனுமதிக்கப் படுவதாகும்.

छिद्रोदरमृते स्वेदाच्छ्लेष्मोदरवदाचरेत् ।

குடல் துளைக்கப்பட்டதால் உண்டான உதர (சித்ரோதர) நோயில், வியர்வை உண்டாக்குதல் நீங்கலாக, கபோதரத் தில் கூறிய எல்லா சிகித்ஸைகளையும் செய்யவேண்டும்.

जातं जातं जलं स्राव्यमेवं तद्यापयेद्भिषक् ॥ १०१॥

உண்டாக உண்டாக ஜலத்தை வெளியேற்ற வேண்டும். இவ்வாறு சுகம் உண்டாகும் வரை ஜலத்தை வெளியேற்ற வேண்டும்.

यापयेत्-என்ற சொல் பொதுவாக அஸாத்யத் தன்மையைக் குறிப்பதெனினும், स्वास्थ्यं यापयेत् ஆரோக்யத்தை அடைவிக்க வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டதென அருணதத்தர் கூறுகிறார்.

अपां दोषहराण्यादौ योजयेदुदकोदरे ।
मूत्रयुक्तानि तीक्ष्णानि विविधक्षारवन्ति च ॥१०२ ॥

दीपनीयैः कफघ्नैश्च तमाहारैरुपाचरेत् ।

ஜலோதர சிகித்ஸை :

ஜலோதரத்தில் முதலில் பசு மூத்திரம் கலந்தவையும், தீக்ஷ்ணத் தன்மை கொண்டவையும், பலவித க்ஷாரங்களைக் கொண்டவையுமான மருந்துகளை; நீரையும், தோஷங்களையும் போக்க உபயோகிக்கவேண்டும். பசியைத் தூண்டக் கூடியதும், கபத்தை நீக்கக்கூடியதுமான உணவை உபயோகிக்க வேண்டும்.

क्षारं छागकरीषाणां शृतं मूत्रेऽग्निना पचेत् ॥ १०३ ॥

घनीभवति तस्मिंश्च कर्षांशं चूर्णितं क्षिपेत् ।
पिप्पली पिप्पलीमूलं शुण्ठी लवणपञ्चकम् ॥ १०४ ॥

निकुम्भकुम्भत्रिफलास्वर्णक्षीरीविषाणिकाः ।
स्वर्जिकाक्षारषड्ग्रन्थासातलायवशूकजम् ॥ १०५ ॥

कोलाभा गुटिकाः कृत्वा ततः सौवीरकाप्लुताः ।
पिबेदजरके शोफे प्रवृद्धे चोदकोदरे ॥ १०६ ॥

ஆட்டுப் புழுக்கையின் க்ஷாரத்தைப் பசு நீரில் இட்டுக் கரைத்து, வடிகட்டி அடுப்பிலேற்றி கெட்டியாகும் வரை காய்ச்சவேண்டும். அப்பொழுது திப்பிலி, கண்ட திப்பிலி, சுக்கு, ஐவகை உப்பு, நாகதந்தி, வெண்சிவதை, திரிபலை, எருமைக்கள்ளி, ஆடுதீண்டாப்பாளை, ஸர்ஜ க்ஷாரம், வசம்பு, பம்பந்துராய், யவக்ஷாரம், ஆகியவை வகைக்கு 1/4 பலம் சூர்ணித்து சேர்த்து இலந்தை அளவு மாத்திரை செய்து காடியில் கலக்கி அஜீரணம், வீக்கம், முற்றிய ஜலோதரம் ஆகியவற்றில் பருக வேண்டும்.

**குறிப்பு:** சரகத்தில் கொடிவேலியும் கூறப்பட்டுள்ளது. ஆட்டுப் புழுக்கையின் க்ஷாரத்தை, 6 மடங்கு மூத்திரத்திலிட்டு, 21 தடவை வடிக்கட்டி திரவத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சக்ரபாணி கூறுகிறார்.

इत्यौषधैरप्रशमे त्रिषु बद्धोदरादिषु ।
प्रयुंजीत भिषक् शस्त्रमार्तबन्धुनृपार्थितः ॥ १०७ ॥

மலத்தடை உதரம், (சித்ரோதரம்) காயத்தால் உண்டான உதரம், ஜலோதரம் ஆகிய மூன்று நோய்களும் இங்கு கூறப்பெற்ற ஔஷதங்களால் நீங்காவிடில், நோயாளி யின் உறவினர், அரசர் ஆகியோரின் கோரிக்கைக்கிணங்க வைத்தியர் சஸ்திரப்பிரயோகம் செய்யவேண்டும்.

स्निग्धस्विन्नतनोर्नाभेरधो बद्धक्षतान्त्रयोः ।
पाटयेदुदरं मुक्त्वा वामतश्चतुरंगुलात् ॥ १०८ ॥

चतुरंगुलमानं तु निष्कास्यान्त्राणि तेन च ।
निरीक्ष्यापनयेद्वालमललेपोपलादिकम् ॥ १०९ ॥

च्छिद्रे तु शल्यमुद्धृत्य विशोध्यान्त्रपरिस्रवम् ।
मर्कोटैर्दंशयेच्छिद्रं तेषु लग्नेषु चाहरेत् ॥ ११० ॥

कायं मूर्ध्नो नु चान्त्राणि यथास्थानं निवेशयेत् ।
अक्तानि मधुसर्पिर्भ्यामथ सीव्येद्बहिर्व्रणम् ॥ १११ ॥

ततः कृष्णमृदाऽऽलिप्य बध्नीयाद्यष्टिमिश्रया ।
निवातस्थः पयोवृत्तिः स्नेहद्रोण्यां वसेत्ततः ॥ ११२ ॥

மலவழித்தடை உதரம், க்ஷதோதரம் ஆகிய இரண்டு நோய்களிலும் ஸ்னேஹ சிகித்ஸையும், ஸ்வேத சிகித்ஸையும் செய்வித்து, நாபிக்குக் கீழாக 4 அங்குலம் தள்ளி (உரோம வரிசைக்கு) இடப்புறத்தில் 4 அங்குல நீளம் வயிற்றைப் பிளக்கவேண்டும். அந்த த்வாரத்தின் மூலம் குடலை வெளியே எடுத்துப் பார்த்து மயிர், மலம், சிக்கிய பொருள், கல் முதலியவற்றை வெளியேற்ற வேண்டும். சித்ரோதரத்தில் சல்யத்தை எடுத்து, கசியும் குடல்பாகத்தை சுத்தம்செய்து, கட்டெறும்பினால் துவார முள்ள பகுதியை கடிக்கச் செய்யவேண்டும். பிறகு கட்டொம்பு பிடித்துக் கொண்ட நிலையில் அதன் தலை நீங்கலாக உடலை எடுத்து விடவேண்டும். பிறகு குடலில் தேன், நெய், ஆகியவற்றைத் தடவி சரியான இடத்தில் குடலை வைக்கவேண்டும். வெளிப்புறத்தில் விரணத்தைத் தைக்கவேண்டும். அதிமதுரம் கலந்த கறுப்பு மேலே பூசவேண்டும். வெளிக்காற்று வீசாத இடத்தில் இருக்கவேண்டும். நெய்ப்புப் பொருள்

நிரம்பிய கொப்பரையில் இருக்கச் செய்து பாலையே உணவாகக் கொள்ளச் செய்யவேண்டும்.

सजले जठरे तैलैरभ्यक्तस्यानिलापहैः ।
स्विन्नस्योष्णाम्बुनाऽऽकक्षमुदरे पट्टवेष्टिते ॥ ११३ ॥

बद्धच्छिद्रोदितस्थाने विध्येदंगुलमात्रकम् ।
निधाय तस्मिंन्नाडीं च स्रावयेदर्धमम्भसः ॥ ११४ ॥

अथास्य नाडीमाकृष्य तैलेन लवणेन च ।
व्रणमभ्यज्य बध्वा च वेष्टयेद्वाससोदरम् ॥ ११५ ॥

तृतीयेऽह्नि चतुर्थे वा यावदाषोडशं दिनम् ।
तस्य विश्रम्य विश्रम्य स्रावयेदल्पशो जलम् ॥ ११६ ॥

विवेष्टयेद्गाढतरं जठरं वाससा श्लथम् ।
निःस्रुते लंघितः पेयामस्नेहलवणां पिबेत् ॥ ११७ ॥

ஜலோதர நோயாளிக்கு வயிற்றில், வாயுவைப் போக்கும் குணமுள்ள [1]தைலங்களால் அப்யங்கம் செய்வித்து, வெந்நீரால் வியர்வை உண்டாக்கவேண்டும். அக்குள் வரை வயிற்றில் வஸ்திரத்தால் கட்டவேண்டும். மலவழித்தடை உதரம், சித்ரோதரம் [2]ஆகியவற்றில் கூறிய இடத்தில் ஒரு அங்குல அளவுக்கு [3]குத்தவேண்டும். அந்த துவாரத்தில் நாடீ யந்திரத்தைச் செலுத்தி ஜலத்தின் பாதியளவை வெளியேற்ற வேண்டும். பிறகு, நாடீ யந்திரத்தை எடுத்து விட்டு, வஸ்திரத்தால் சுற்றவேண்டும். 16-வது நாள்வரை அவ்வப்பொழுது ஒவ்வொரு மூன்றாவது அல்லது நான்காவது நாளில் சிறிது சிறிதாக ஜலத்தை வெளியேற்றவேண்டும். தளர்ச்சியடைந்த வயிற்றில் வஸ்திரத்தால் மிகவும்

இறுகக் கட்டவேண்டும். ஜலத்தை வெளியேற்றியபின் உபவாஸமிருக்கச் செய்து நெய்ப்பும், [4]உப்பும் இல்லாத கஞ்சியைப் பருகச்செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. கடுகு, ஆமணக்கு, எள் முதலியவற்றின் தைலத்தால் அப்யங்கம் செய்விக்கவேண்டும் என்று அருணதத்தர் கூறுகிறார்.

2. வ்ரீஹி முகத்தால் ஒரு அங்குல அளவுக்கு குத்த லாம் என்று கூறப்படுகிறது.

3. சிறிதளவு நெய்ப்பும், உவர்ப்பும் கலக்கலாம் என அருணதத்தர் கூறுகிறார்.

स्यात्क्षीरवृत्तिः षण्मासांस्त्रीन् पेयां पयसा पिबेत् ।
त्रींश्चान्यान्पयसैवाद्यात् फलाम्लेन रसेन वा ॥ ११८ ॥

अल्पशः स्नेहलवणं जीर्णं श्यामाककोद्रवम् ।
प्रयतो वत्सरेणैवं विजयेत जलोदरम् ॥ ११९ ॥

6 மாதங்கள் வரை பாலையே உணவாகக் கொள்ள வேண்டும். அடுத்த மூன்று மாதங்களுக்கு கஞ்சியை பாலுடன் கலந்து பருகவேண்டும். அடுத்த 3 மாதங்கள் பால் அல்லது பழச்சாற்றால் புளிப்புண்டாக்கப்பட்ட மாம்ஸ ரஸத்துடன் சிறிதே நெய்ப்பும், உவர்ப்பும் கலந்த பழைய சாமை, கேழ்வரகு இவற்றை சிறிதளவே உண்ணவேண்டும். இவ்வாறு ஒரு வருடம் கவனத்துடன் இருந்தால் ஜலோதரம் நீங்கும்.

वर्ज्येषु यन्त्रितो दिष्टे नात्यादिष्टे जितेन्द्रियः ।

*விலக்கத்தக்கவைகளை கண்டிப்பாக நீக்க வேண்டும். அனுமதிக்கப்பட்டவற்றில் அதிகக் கட்டுப்

பாடு தேவையில்லை. குறிப்பிடப்படாதவற்றை புலன் அடக்கத்துடன் கையாளவேண்டும்.

குறிப்பு: ★விலக்கத்தக்கவையை, அடுத்து 124-வது சுலோகத்தில் குறிப்பிடப்படுகின்றன.

உஷ்ணம், புளிப்பு முதலியவற்றை முற்றிலும் நீக்க வேண்டும் என கூறப்படுகிறது.

सर्वमेवोदरं प्रायो दोषसंघातजं यतः ॥ १२० ॥

अतो वातादिशमनी क्रिया सर्वत्र शस्यते ।

★பெரும்பாலும் எல்லா உதரங்களும், தோஷங்களின் கூட்டு காரணமாகவே உண்டாகின்றன. ஆகையால் எல்லா உதரநோய்களிலும் வாயு முதலான தோஷங்களுக்கு உண்டான சிகித்ஸைகள் ஏற்றவையாகும்.

குறிப்பு: ★பெரும்பாலும் என்பதால் முன்னிலை காரண மாகவும், உதரநோய் தோன்றுவதுண்டு என்பது குறிப்பிடப்படுகிறது.

वह्निर्मन्दत्वमायाति दोषैः कुक्षौ प्रपूरिते ॥ १२१ ॥

तस्माद्भोज्यानि भोज्यानि दीपनानि लघूनि च ।
सपंचमूलान्यल्पाम्लपटुस्नेहकटूनि च ॥ १२२ ॥

தோஷங்களால் வயிறு நிரம்பிவிடுவதால் ஜாடராக்னி மந்த நிலையை அடைகிறது. ஆதலால் ஜாடராக்னியின் பலத்தை அதிகரிக்கக் கூடியதும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதுமான பஞ்சமூலம் கலந்ததும், புளிப்பு, உப்பு, நெய்ப்புப் பொருள், காரம் ஆகியவை குறைந்த அளவே சேர்க்கப்பட்டதுமான உணவு ஏற்றதாகும்.

भावितानां गवां मूत्रे षष्टिकानां च तण्डुलैः ।
यवागूं पयसा सिद्धां प्रकामं भोजयेन्नरम् ॥ १२३ ॥

पिबेदिक्षुरसं चानु जठराणां निवृत्तये ।
स्वं स्वं स्थानं व्रजन्त्येषां वातपित्तकफास्तथा ॥ १२४॥

பசு மூத்ரத்தில் பாவனை செய்யப்பட்ட அறுபதாங் குறுவையின் அரிசியில், பால்கஞ்சி தயாரித்து விரும்பிய அளவு பருகச் செய்யவேண்டும். அத்துடன் *கருப்பஞ்சாறு பருகினால் உதரநோய் நீங்கும். இவ்வாறு செய்வதால் இவர்களுக்கு வாதபித்த கபங்கள் தம்தம் இடங்களை அடைகின்றன.

குறிப்பு: *உணவு அருந்தியபின் கரும்புச்சாறு அருந்தினால் வாயு அதிகரிக்கும் என, ஸூத்.அத்.5-ல் கூறப் பட்டிருப்பினும், கஞ்சி மாத்திரம் உணவாகக் கொண்ட உதர நோயில் நிலை இதற்கு விதி விலக்கு எனக் கொள்ளவேண்டும்.

अत्यर्थोष्णाम्ललवणं रूक्षं ग्राहि हिमं गुरु ।
गुडं तैलकृतं शाकं वारि पानावगाहयोः ॥ १२५ ॥

आयासाध्वदिवास्वप्नयानानि च परित्यजेत् ।

**உதர நோயாளி நீக்க வேண்டியவை :**

உஷ்ணம், புளிப்பு, உவர்ப்பு ஆகியவை அதிகம் கலந்தது, வறண்டது, மலத்தைக் கட்டுவது, குளிர்ந்தது, எளிதில் ஜீரணமாகாதது, வெல்லம், எண்ணெயில் பக்குவம் செய்யப்பட்ட கீரை, பருகுவதற்கும், குளிப்பதற்கும் சாதாரண நீரின் உபயோகம், தேகப்பயிற்சி, வழிநடை,

Library of ... Medicine

பகல் தூக்கம், பிரயாணம் (பாஷணம்) ஆகியவற்றை விலக்கவேண்டும்.

குறிப்பு: நீர் பருகுதல் தடுக்கப்பட்டதால் குடிப்பதற்கு ஏற்ற மோர் அடுத்துக் கூறப்படுகிறது.

नात्यर्थसान्द्रमधुरं तक्रं पाने प्रशस्यते ॥ १२६ ॥

सकणालवणं वाते पित्ते सोषणशर्करम् ।
यवानीसैन्धवाजाजीमधुव्योषैः कफोदरे ॥ १२७ ॥

त्र्यूषणक्षारलवणैः संयुतं निचयोदरे ।
मधुतैलवचाशुण्ठीशताह्वाकुष्ठसैन्धवैः ॥ १२८ ॥

प्लीह्नि बद्धे तु हपुषायवानीपट्वजादिभिः ।
सकृष्णामाक्षिकं छिद्रे व्योषवत्सलिलोदरे ॥ १२९ ॥

## உதர நோயில் மோர் பருகும் முறை :

தெளிவு, தடிப்பு, இனிப்பு ஆகியவை அதிகமாக இல்லாத மோரை வாததோதரத்தில் திப்பிலி, இந்துப்பு ஆகியவற்றுடனும், பித்த உதரத்தில் மிளகு, சர்க்கரை ஆகியவற்றுடனும், கப உதரத்தில் ஓமம், இந்துப்பு, ஜீரகம், தேன், த்ரிகடு ஆகியவற்றுடனும், ஸன்னிபாத உதரத்தில் த்ரிகடு, யவக்ஷாரம், இந்துப்பு ஆகியவற்றுடனும், மண்ணீரல் உதரத்தில் தேன், எண்ணெய், வசம்பு, சுக்கு, சதகுப்பை, கோஷ்டம், இந்துப்பு ஆகியவற்றுடனும், மலவழித்தடை உதரத்தில் கொட்டக் கரந்தை, ஓமம், இந்துப்பு, ஜீரகம் ஆகியவற்றுடனும், சித்ரோதரத்தில் திப்பிலி, தேன் ஆகியவற்றுடனும், ஜலோதரத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றுடனும் பருகுதல் சிறந்தது.

गौरवारोचकानाहमन्दवह्न्यतिसारिणाम् ।
तक्रं वातकफार्ताना ममृतत्वाय कल्पते ।। १३० ।।

**மோரின் தன்மை :**

உடல் கனம், ருசியின்மை, பொருமல், அக்னிமந்தம், வயிற்றுப்போக்கு ஆகியவை உள்ளவர்களுக்கும், வாயு, கபம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் மோர் அம்ருதத்திற்கு ஒப்பாகும்.

प्रयोगाणां च सर्वेषामनु क्षीरं प्रयोजयेत् ।
स्थैर्यकृत्सर्वधातूनां बल्यं दोषानुबन्धहृत् ।। १३१ ।।

இங்கு கூறப்பெற்ற பிரயோகங்களுக்குப் பிறகு பாலைப் பிரயோகிக்கவேண்டும். பால் எல்லா தாதுக்களையும் உறுதிப்படுத்துகிறது. பலம் உண்டாக்குகிறது. தோஷங்களின் தொடர்ச்சியை நீக்குகிறது.

भेषजापचिताङ्गानां क्षीरमेवामृतायते ।।

மருந்தின் பிரயோகத்தால் உடல் இளைக்கப் பெற்றவர்களுக்கு பாலே அம்ருதத்திற்கு ஒப்பாகும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थान उदरचिकित्सितं नाम पंचदशोऽध्याय: ।।१५।।

சிகித்ஸாஸ்தானம் - பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

### षोडशोऽध्यायः - அத்தியாயம் - 16

अथाऽतो पाण्डुरोगचिकित्सितं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து பாண்டுரோக சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

पाण्ड्वामयी पिबेत्सर्पिरादौ कल्याणकाह्वयम् ।
पंचगव्यं महातिक्तं शृतं वाऽऽरग्वधादिना ॥ १ ॥

பாண்டு நோயுள்ளவர் *முதலில் [1]கல்யாண கிருதம், [2]பஞ்சகவ்ய கிருதம், [3]மகாதிக்த கிருதம், [4]ஆரக்வதாதிகணச் சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட கிருதம் இவற்றில் ஒன்றை பருகலாம்.

**குறிப்பு:** *பித்தம் அதிகமாக உள்ள தோஷங்களாலேயே இந்நோய் உண்டாகிறது. முதலில் பித்தத்தையும், அடுத்து வாத-கபங்களையும் ஜெயிக்கவேண்டும். பித்தத்தை அடக்குவதில் நெய் சிறந்ததாகும். அது காரணமாகவே நெய்களின் பிரயோகம் முதலில் கூறப்படுகிறது.

1. கல்யாண கிருதம் - உத்தர - அத். 6 - சு. 27-ல் கூறப்பட்டிருக்கிறது.

2. பஞ்சகவ்ய கிருதம் - உத்தர - அத்.7 - சு.20-ல் கூறப்பட்டிருக்கிறது

3. மகாதிக்தகிருதம் - சிகித். - அத். 19-ல் கூறப்பட இருக்கிறது.

4. ஆரக்வதாதிகணம் - சூத். அத். 15-ல் கூறப் பட்டுள்ளது.

दाडिमात्कुडवो धान्यात्कुडवार्धं पलं पलम् ।
चित्रकाच्छृंगबेराच्च पिप्पल्यर्धपलं च तैः ॥ २ ॥

कल्कितैर्विंशतिपलं घृतस्य सलिलाढके ।
सिद्धं हृत्पाण्डुगुल्मार्शःप्लीहवातकफार्तिनुत् ॥ ३ ॥

दीपनं श्वासकासघ्नं मूढवातानुलोमनम् ।
दुःखप्रसविनीनां च वन्ध्यानां च प्रशस्यते ॥ ४ ॥

[1]மாதுளை 4 பலம், கொத்துமல்லி 2 பலம், கொடிவேலி 1 பலம், சுக்கு 1 பலம், திப்பிலி ½ பலம் இவற்றைக் கல்க்கமாக்கி 20 பலம் நெய்யும், 4 பிரஸ்தம் நீரும் சேர்த்து, முறைப்படி பக்குவம் செய்து உபயோகித்தால்; இருதய நோய், பாண்டு, குன்மம், மூலம், மண்ணீரல் வீக்கம், ஆகிய நோய்களையும், வாத-கபங்களால் உண்டான நோய் களையும் நீக்கும். பசியைத் தூண்டும். சுவாசம், இருமல் ஆகியவற்றைப் போக்கும். தடைப்பட்ட வாயுவை கீழ் நோக்கச் செய்யும். பிரஸவ சமயத்திற்கும், பிள்ளைப்பேறு இல்லாதவருக்கும் இது மிகவும் ஏற்றது.

குறிப்பு: 1. மாதுளையின் விதை என இந்து கூறுகிறார்.

स्नेहितं वामयेत्तीक्ष्णैः पुनः स्निग्धं च शोधयेत् ।
पयसा मूत्रयुक्तेन बहुशः केवलेन वा ॥ ५ ॥

நெய்ப்பு உண்டானபின் தீக்ஷ்ணமான பொருள்களால் வாந்தி உண்டாக்கவேண்டும். மறுபடியும் நெய்ப்புச் சிகித்ஸை செய்வித்து பசு மூத்ரம் கலந்த பால் அல்லது தனித்த *பாலால் பலதடவை சோதனம் செய்யவேண்டும்.

குறிப்பு: *ஸங்க்ரஹத்தில் பசும்பால் அல்லது எருமைப் பால் பருக என்று கூறப்பட்டுள்ளது.

दन्तीफलरसे कोष्णे काश्मर्याञ्जलिमासुतम् ।
द्राक्षाञ्जलिं वा मृदितं तत् पिबेत् पाण्डुरोगजित् ॥ ६ ॥

சிறிது சூடான நேர்வாள கஷாயத்தில் 4 பலம் குமிழ் அல்லது திராக்ஷையை இடித்துப் போட்டு ஊறவைத்து கசக்கி பருகினால் பாண்டு நோயைப் போக்கும்.

मूत्रेण पिष्टां पथ्यां वा तत्सिद्धं वा फलत्रयम् ।

பசுவின் நீர் விட்டரைத்த கடுக்காய் அல்லது பசுவின் நீரில் வேக வைக்கப்பட்ட த்ரிபலையை உட்கொள்ள வேண்டும்.

स्वर्णक्षीरीत्रिवृच्छ्यामाभद्रदारुमहौषधम् ॥ ७ ॥

गोमूत्रांजलिना पिष्टं शृतं तैनैव वा पिबेत् ।
साधितं क्षीरमेभिर्वा पिबेद्दोषानुलोमनम् ॥ ८ ॥

எருமைக்கள்ளி, வெண்சிவதை, சிவதை, தேவதாரு, சுக்கு இவற்றை 4 பலம் பசுநீர் விட்டரைத்தாவது பசு நீரில் வேக வைத்தாவது பருகவேண்டும். அல்லது (எருமைக்கள்ளி முதலிய) இவற்றை இட்டுப் பக்குவம் செய்யப்பட்டப் பாலை பருகவேண்டும். இவை தோஷங்களை கீழ்நோக்கச் செய்யும்.

मूत्रे स्थितं वा सप्ताहं पयसाऽयोरजः पिबेत् ।
जीर्णे क्षीरेण भुञ्जीत रसेन मधुरेण वा ॥ ९ ॥

शुद्धश्चोभयतोलिह्यात् पथ्यां मधुघृतद्रुताम् ।

அல்லது பசுமூத்திரத்தில் ஏழு நாட்கள் பாவனை செய்யப்பட்ட அயத்தின் நுண்ணிய *பொடியை பால்

கலந்து பருக வேண்டும். அது ஜீரணித்தவுடன் பாலுடன் அல்லது இனிப்பான மாம்ஸ ரஸத்துடன் உண்ண வேண்டும். வாந்தி, விரேசனம் இவற்றால் சுத்தமானபின் கடுக்காயை (சூரணத்தை) தேன் அல்லது நெய் ஆகிய வற்றில் குழப்பி உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: ★அயபற்பத்தையும் உபயோகிக்கலாம்.

विशालाकटुकामुस्ताकुष्ठदारुकलिंगकाः ॥ १० ॥

कर्षांशां द्विपिचुर्मूर्वा कर्षार्धांशा घुणप्रिया ।
पीत्वा तच्चूर्णमम्भोभिः सुखैर्लिह्यात्ततो मधु ॥ ११ ॥

पाण्डुरोगं ज्वरं दाहं कासं श्वासमरोचकम् ।
गुल्मानाहामवातांश्च रक्तपित्तं च तज्जयेत् । ॥ १२ ॥

பேய்த்தும்மட்டி, கடுகரோஹிணீ, கோரைக்கிழங்கு, கோஷ்டம், தேவதாரு, வெட்பாலையரிசி ஆகியவை வகைக்கு ¼ பலம், பெருங்குரும்பை ½ பலம், அதி விடயம் 1/8 பலம், ஆகியவற்றை எடுத்து சூரணித்து சிறிது சூடான நீருடன் கலக்கிப் பருகிய பிறகு, தேனை உட்கொள்ள வேண்டும். இதனால் பாண்டு, ஜ்வரம், எரிச்சல், இருமல், சுவாஸம், ருசியின்மை, குன்மம், பொருமல், ஆமவாதம், ரத்தபித்தம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. சரகத்தில் த்ரிபலை என்று பாடம் காணப் படுகிறது.

वासागुडूचीत्रिफलाकट्वीभूनिम्बनिम्बजः ।
क्वाथः क्षौद्रयुतो हन्ति पाण्डुपित्तास्रकामलाः ॥ १३ ॥

ஆடாதோடை, சீந்தில், த்ரிபலை, கடுகரோஹிணீ, நில வேம்பு, வேம்பு, இவற்றின் கஷாயத்தைத் தேனுடன் பருக; பாண்டு, ரத்தபித்தம், காமாலை, ஆகியவை நீங்கும்.

व्योषाग्निवेल्लत्रिफलामुस्तैस्तुल्यमयोरजः ।
चूर्णितं तक्रमध्वाज्यकोष्णाम्भोभिः प्रयोजितम् ॥ १४ ॥

कामलापाण्डुहृद्रोगकुष्ठार्शोमेहनाशनम् ।

**நவாயஸம் :**

த்ரிகடு, சித்ரமூலம், வாய்விடங்கன், த்ரிபலை, கோரைக்கிழங்கு, இவைகளின் சூர்ணம் சம எடை, இவற்றிற்குச் சம எடை *நுண்ணிய அயத்தூள் ஆகிய வற்றைக் கலந்து மோர், தேன், நெய், வெந்நீர் இவற்றுள் ஒன்றுடன் பருக காமாலை, பாண்டு, இருதய நோய், குஷ்டம், மூலம், பிரமேகம் ஆகியவை நீங்கும்.

**குறிப்பு:** அயச் செந்தூரத்தை உபயோகிப்பதும் உண்டு.

गुडनागरमण्डूरतिलांशान् मानतः समान् ॥ १५ ॥

पिप्पलीद्विगुणान् दद्याद्गुटिकां पाण्डुरोगिणे ।

வெல்லம், சுக்கு, அயச்சிட்டம், எள் இவை வகைக்கு 1 பங்கு, திப்பிலி 2 பங்கும் சேர்த்து வடகம் செய்து பாண்டு நோய் உள்ளவருக்குக் கொடுக்கலாம்.

ताप्यं दार्व्यास्त्वचं चव्यं ग्रन्थिकं देवदारु च ॥ १६ ॥

व्योषादिनवकं चैतच्चूर्णयेद् द्विगुणं ततः ।
मण्डुरं चांजननिभं सर्वतोऽष्टगुणेऽथ तत् ॥ १७ ॥

पृथग्विपक्वे गोमूत्रे वटकीकरणसमे ।

प्रक्षिण्य वटकान् कुर्यात्तान् खादेत्तक्रभोजनः ॥ १८ ॥

एते मण्डूरवटकाः प्राणदाः पाण्डुरोगिणाम् ।
कुष्ठान्यजरकं शोफमूरुस्तम्भमरोचकम् ॥ १९ ॥

अर्शांसि कामलां मेहान् प्लीहानं शमयन्ति च ।

**மண்டூர வடகம் :**

ஸ்வர்ணமாக்ஷிகம், மரமஞ்சள் தோல், செவ்வியம், கண்டதிப்பிலி, தேவதாரு இவையும் [1]த்ரிகடு முதலிய 9 சரக்குகளும் சம எடை, அஞ்ஜன நிறமுள்ள அயச் சிட்டம் அவற்றின் எடைக்கு இருமடங்கு. (இவற்றை சூர்ணித்துக் கொள்ள வேண்டும்). மொத்தச் சூரணத்துக்கு எட்டு மடங்கு பசு மூத்ரத்தை அடுப்பிலேற்றிக் காய்ச்சி வடகம் செய்யும் பக்குவத்தில் சூரணங்களைச் சேர்த்து, வடகம் செய்து உட்கொள்ளவேண்டும். [2]மோருடன் உணவு உட்கொள்ள வேண்டும். இம்மண்டூர வடகம் பாண்டு ரோகிகளுக்கு, உயிரை அளிக்கக்கூடியது. குஷ்டம், அஜீர்ணம், வீக்கம், தொடைத் தம்பிதம், ருசியின்மை, மூலம், காமாலை, பிரமியம், மண்ணீரல் நோய் ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: 1. த்ரிகடு முதலிய 9 சரக்குகள் இவ்வத்தியா யத்தில் நவாயஸ வடிவில் கூறப்பட்டுள்ளன.

2. மோரை அனுபானமாக உட்கொள்ள வேண்டும் எனச் சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

ताप्यादिजतुरौप्यायोमलाः पञ्चपलाः पृथक् ॥ २० ॥

चित्रकत्रिफलाव्योपविडंगैः पालिकैः सह ।
शर्कराष्टपलोन्मिश्राश्चूर्णितामधुना द्रुताः ॥ २१ ॥

पाण्डुरोगं विषं कासं यक्ष्माणं विषमं ज्वरम् ।
कुष्ठान्यजरकं मेहं शोफं श्वासमरोचकम् ॥ २२ ॥

विशेषाद्धन्त्यपस्मारं कामलां गुदजानि च ।

**யோகராஜவடகம் :**

ஸ்வர்ண மாக்ஷிகம், சிலாஜது, வெள்ளி, அயச் சிட்டம், இவை வகைக்கு 5 பலம், கொடிவேலி, திரிபலை, த்ரிகடு, வாய்விளங்கம் இவை வகைக்கு 1 பலம் இவற்றைச் சூரணித்து 8 பலம் சர்க்கரை சேர்த்து, தேனில் கலக்கி உட்கொண்டால் *பாண்டு, விஷம், இருமல், க்ஷயநோய், முறை ஜுரம், குஷ்டம், அஜீரணம், பிரமேகம், வீக்கம், சுவாஸம், ருசியின்மை ஆகியவற்றையும் விசேஷமாக காக்கைவலிப்பு, காமாலை, மூலம் ஆகிய நோய்களையும் போக்கும்.

குறிப்பு: யோகராஜவும் என சங்க்ரஹத்தில் இதற்குப் பெயரிடப்படுகிறது. இதை உட்கொள்ளும் பொழுது கொள், மனித் தக்காளி முதலிய பொருளும், புறா மாம்ஸமும் விலக்கத்தக்கவை என சரகத்தில் கூறப்படுகிறது. சிலாஜது உப யோகிக்கும் விஷயத்தில் பொதுவாகவே நெஞ்செரிவு செய்யும் பொருள்களையும், அவற்றுள் முக்கியமாக கொள்ளையும் நீக்க வேண்டும். ஏனெனில் கொள், சிலாஜதுவின் தன்மைக்கு முற்றிலும் எதிரிடையானது என, சரகஸம்ஹிதை. சிகித். அத்.1-ல் கூறப்படுகிறது. ஆனால் அஷ்டாங்க சங்க்ரஹத்தில் ''कुलत्थारि यूपाशिना'' - என்பதால் கொள் கஞ்சியை பருக வேண்டுமென கூறியிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் குறிப்பிட்டு, கொள் உபயோகத்தை தவிர்க்கும்படி தெளிவாக சரகஸம்ஹிதையில் கூறியிருப்பதாலும், சங்க்ரஹத்தில் கொள் முதலிய என்ற சொல் நெஞ்செரிவு உண்டாக்கும் யாவற்றையும் குறிப்பிடும் என இந்து உரையின் தன்மை கவனிக்கையிலும், அது தவிர்க்கப்பட வேண்டிய பொருள்களைக் குறிப்பிடுவதாகவே தெரிவதாலும், சங்க்ரஹத்தின் வாக்கியமும் கொள் முதலியவற்றை தவிர்ப்பதைக் குறிப்பிடுவதற்கு ஏற்றவாறு இருக்கவேண்டுமென ஊகிக்கப்படு கிறது.

कौटजत्रिफलानिम्बपटोलघननागरैः ॥ २३ ॥

भावितानि दशाहानि रसैर्द्वित्रिगुणानि वा ।
शिलाजतुपलान्यष्टौ तावती सितशर्करा ॥ २४ ॥

त्वक्क्षीरीपिप्पलीधात्रीकर्कटाख्याः पलोन्मिताः ।
निदिग्ध्याः फलमूलाभ्यां पलं युक्त्या त्रिजातकम् ॥ २५॥

मधुत्रिपलसंयुक्तान् कुर्यादक्षसमान् गुडान् ।
दाडिमाम्बुपयःपक्षिरसतोयसुरासवान् ॥ २६ ॥

तान् भक्षयित्वाऽनु पिबेन्निरन्नो भुक्त एव वा ।
पाण्डुकुष्टज्वरप्लीहतमकार्शोभगन्दरम् ॥ २७ ॥

हृन्मूत्रपूतिशुक्राग्निदोषशोषगरोदरम् ।
कासासृग्दरपित्तासृक्शोफगुल्मगलामयान् ॥ २८ ॥

मेहवर्ध्मभ्रमान् हन्युः सर्वदोषहराः शिवाः ॥

## வஜ்ர வடகம் - சிலாஜது வடகம் :

எட்டுப்பலம் சிலாஜதுவை வெட்பாலையரிசி, த்ரிபலை, வேம்பு, புடல், கோரைக்கிழங்கு, சுக்கு இவற்றின் *கஷாயத்தில் 10 நாள் அல்லது 20 நாள் அல்லது 30 நாட்கள் பாவனை செய்யவேண்டும். சிலாஜதுவுக்கு சம அளவு (8 பலம்) சுத்தமான சர்க்கரையும், மூங்கிலுப்பு, திப்பிலி, நெல்லிக்காய், கர்க்கடச்ருங்கி, இவை வகைக்கு 1 பலமும், கண்டங் கத்திரியின் வேரும், பழமும் சேர்த்து 1 பலம், தேவைக் கேற்ப லவங்கப்பட்டை, ஏலம், லவங்கப்பத்திரி ஆகியவையும், தேன் 3 பலமும் கலந்து தான்றியளவாக குளிகை செய்து கொள்ளவேண்டும். மாதுளைச்சாறு, பால், பறவைகளின் மாம்ஸரஸம், தண்ணீர், கள், ஆஸவம் ஆகியவற்றுள் ஒன்றை அனுபானமாக உட்கொள்ள வேண்டும். உணவு உட்கொள்ளாத நிலையிலாவது, சாப்பிட்ட பின்பாவது இதை உட்கொள்ளலாம். இதனால் பாண்டு, குஷ்டம், ஜுரம், மண்ணீரல் நோய், தமக சுவாஸம், மூலம், பவுத்ரம், இருதய நோய், சிறுநீர்க் குற்றம், நாற்றமுள்ள சுக்ரம், ஜாடராக்னி தோஷம், இளைப்பு, இடுவிஷம், உதரம், இருமல், பெரும்பாடு, ரத்தபித்தம், வீக்கம், குன்மம், தொண்டை நோய், பிரமேகம், அண்டகோச வீக்கம், பிரமை ஆகிய நோய்கள் நீங்கும். எல்லா தோஷங்களும் நீங்கும். இது மங்களரகமானது.

குறிப்பு: 1. எட்டு மடங்கு நீரிலிட்டு, எட்டில் ஒன்றாய் குறுக்கிக் கொள்ள வேண்டும் என அருண தத்தர் கூறுகிறார். 4 மடங்கு நீரிலிட்டு நாலில் ஒன்றாய் குறுக்கிக் கொள்ளவேண்டும் என சக்ரபாணிதத்தர் கூறுகிறார்.

2. இவற்றுள் ஒவ்வொன்றின் கஷாயத்திலும் சிலாஜதுவை பாவனை செய்யவேண்டும் என இந்து கூறுகிறார்.

द्राक्षाप्रस्थं कणाप्रस्थं शर्कराधतुलां तथा ॥ २९ ॥

द्विपलं मधुकं शुण्ठीं त्वक्क्षीरीं च विचूर्णितम् ।
धात्रीफलरसद्रोणे तत्क्षिप्त्वा लेहवत्पचेत् ॥ ३० ॥

शीतान्मधुप्रस्थयुतान् लिह्यात्पाणितलं ततः ।
हलीमकं पाण्डुरोगं कामलां च नियच्छति ॥ ३१ ॥

*திராக்ஷாதி லேஹம் :*

திராக்ஷை 1 பிரஸ்தம், திப்பிலி 1 பிரஸ்தம், சர்க்கரை 50 பலம், அதிமதுரம், சுக்கு, மூங்கிலுப்பு இவை வகைக்கு 2 பலம். இவற்றைச் சூரணித்து 16 பிரஸ்தம் நெல்லிச்சாற்றில் இட்டு லேஹம் போல் பக்குவம் செய்து கொள்ளவேண்டும். ஆறியபின் தேன் 1 பிரஸ்தம் சேர்க்கவேண்டும். ¼ பலம் அளவு (வீதம்) உட்கொண்டு வந்தால் ஹலீமகம் என்னும் பாண்டு நோயின் முற்றிய நிலை, பாண்டு, காமாலை ஆகியவற்றை நீக்கும்.

குறிப்பு:1. மணமூட்டுவதற்காக லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, ஏலம், இவை வகைக்கு ¼ பலம் வீதம் கலப்பதுடன், ஜாதிமல்லிகை முதலியவற்றால் மணமூட்டப்பட்ட பாண்டத்திலிட்டு வைக்கு மாறு சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

2. இருதய நோய், ஜ்வரம், குன்மம், உதரம், வீக்கம், முதலிய மற்றும் பல நோய்களுக்கும் ஏற்றதெனச் சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

कनीयः पञ्चमूलाम्बु शस्यते पानभोजने ।
पाण्डूनां कामलार्तानां मृद्वीकामलकाद्रसः ।। ३२ ।।

பாண்டு நோயாளிக்கு சிறுபஞ்சமூலம் சேர்த்துக் காய்ச்சப் பெற்ற நீரும், காமாலை நோயாளிக்கு திராக்ஷை, நெல்லி இவற்றின் சாறும், பருகுவதற்கும் உணவு தயாரிப்பதற்கும் ஏற்றவையாகும்.

**குறிப்பு:** பாண்டு, காமாலை இரண்டு நோய்களிலும் இங்கு கூறப்பட்டவை ஏற்றவை என இந்து கருதுகிறார்.

வாயு அதிகரித்த நிலையில் பஞ்சமூல கஷாயமும், பித்தம் அதிகரித்த நிலையில் கோரைக்கிழங்கு, குருவிவேர், சுக்கு, இவற்றின் நீரும், கபம் அதிகரித்த நிலையில் வேம்பு, கரும்புச்சாறு, மது, திராக்ஷை மது ஆகியவையும், பாண்டு நோயாளிக்கு, உணவிற்கு அனுபானமாக ஏற்றவை என்றும் பொதுவாக எல்லா நிலையிலும் மோர் ஏற்றதென்றும் சங்க்ரஹத்தில் கூறப்படு கிறது.

इति सामाम्यतः प्रोक्तं पाण्डुरोगे भिषग्जितम् ।
विकल्प्य योज्यं विदुषा पृथग्दोषबलं प्रति ।। ३३ ।।

இவ்வாறு பாண்டு நோயின் சாதாரண சிகித்ஸை முறை கூறப்பட்டது. அறிவாளி தனித்தனி தோஷங்களுக்கு ஏற்ப இங்கு கூறியவற்றைப் பிரித்தறிந்து உபயோகிக்க வேண்டும்.

स्नेहप्रायं पवनजे तिक्तशीतं तु पैत्तिके ।
श्लैष्मिके कटुरूक्षोष्णं विमिश्रं सान्निपातिके ।। ३४ ।।

வாயுவால் உண்டான பாண்டு நோயில் நெய்ப்பு அதிகம் கலந்ததாகவும், பித்தத்தால் உண்டான பாண்டு நோயில் கசப்பு, குளிர்ச்சி ஆகியவை பொருந்தியதாகவும், கபத்தால் உண்டான பாண்டு நோயில் காரம், வறட்சி, உஷ்ணம், ஆகியவை பொருந்தியதாகவும், ஸன்னிபாத பாண்டு நோயில் இவற்றைக் கலந்தும் சிகித்ஸை செய்யவேண்டும்.

मृदं निर्यातयेत्कायात्तीक्ष्णैः संशोधनैः पुरः ।
बलाधानानि सर्पींपि शुद्धे कोष्ठे तु योजयेत् ॥ ३५ ॥

(மண் உண்டதால் ஏற்பட்ட பாண்டு நோயில்) தீக்ஷ்ண மான சோதன மருந்துகளால் உடலிலிருந்து மண்ணை முதலில் வெளியேற்றவேண்டும். கோஷ்டம் சுத்தமான பிறகு வலுவூட்டும் நெய் வகைகளைப் பருகச் செய்ய வேண்டும்.

व्योषबिल्वद्विरजनीत्रिफलाद्विपुनर्नवम् ।
मुस्तान्ययोरजः पाठा विडंगं देवदारु च ॥ ३६ ॥

वृश्चिकाली च भार्गी च सक्षीरैस्तैः शृतं घृतम् ॥
सर्वान् प्रशमयत्याशु विकारान् मृत्तिकाकृतान् ॥ ३७ ॥

த்ரிகடு, பில்வம், மஞ்சள், மரமஞ்சள், த்ரிபலை, வெள்ளைச்சாறடை, சிவப்புச் சாறடை, கோரைக்கிழங்கு, நுண்ணிய அயத்தூள், வட்டத்திருப்பி, வாய்விளங்கம், தேவதாரு, தேட்கொடுக்கு, சிறுதேக்கு இவற்றின் சூர்ணத்துடன் [1]பால் கலந்து [2]நெய் பக்குவம் செய்து உபயோகிக்க; மண் தின்றதால் உண்டான எல்லா நோய்களையும் போக்கும்.

குறிப்பு: 1. क्षीर - (பாலுடன்) என்ற மூலச்சொல்லுக்குப் பதிலாக क्षार - என்னும் பாடம் கொள்வதாகில், யவக்ஷாரம் சேர்க்கவேண்டும்.

2. நெய்க்குச் சம அளவு பால் கலக்கவேண்டும் என இந்து கூறுகிறார்.

3. 4 மடங்கு நீரும் சேர்த்துப் பக்குவம் செய்ய வேண்டும் என அருணதத்தர் கூறுகிறார்.

तद्वत्केसरयष्ट्याह्वपिप्पलीक्षीरशाड्वलैः ।

அவ்வாறே சிறுநாகப்பூ, அதிமதுரம், திப்பிலி, *யவக்ஷாரம், அறுகு இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய கிருதமும் முற்கூறப்பெற்ற பலனளிக்கும்.

குறிப்பு: *இங்கு க்ஷார என்ற மூலச்சொல்லுக்கு பதிலாக क्षीर -என்ற பாடத்தைக் கொள்வதாகில் பால் எனக் கொள்ள வேண்டும்.

क्षीरशाद्वलै - என்பதற்கு வெள்ளறுகு என இந்து பொருள் கூறுகிறார்.

मृद्द्वेषणाय तल्लौल्ये वितरेद्भाविता मृदम् ॥ ३८ ॥

वेल्लाग्निनिम्बप्रसवैः पाठया मूर्वयाऽथवा ।
मृद्भेदभिन्नदोषानुगमाद्योज्यं च भेषजम् ॥ ३९ ॥

மண் உண்ணும் ஆசை உண்டானவருக்கு அதில் வெறுப்பூட்டுவதற்காக வாய்விடங்கம், கொடிவேலி, வேப்பங்கொழுந்து, இவற்றின் சாற்றிலாவது, வட்டத் திருப்பியின் சாற்றிலாவது, பெருங்குரும்பையின் சாற்றி லாவது ஊற வைக்கப்பட்ட மண்ணைக் கொடுக்க வேண்டும். மேலும் மண்ணின் *பிரிவிற்கேற்ப

கோபமடைந்த தோஷங்களுக்குத் தக்க மருந்துகளையும் கொடுக்கவேண்டும்.

குறிப்பு: *மண்ணின் தன்மைக்கேற்ப தோஷங்கள் கோபமடையும் விவரத்தை நி.அத். 13.சு.13-ல் காண்க.

कामलायां तु पित्तघ्नं पाण्डुरोगाविरोधि यत् ।

காமாலை நோயில் பித்தத்தை போக்கக்கூடியதும், பாண்டு நோய்க்கு விரோதமில்லாததுமான ஔஷதங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

पथ्याशतरसे पथ्यावृन्तार्धशतकल्कितः ॥ ४० ॥

प्रस्थः सिद्धो घृताद्गुल्मकामलापाण्डुरोगनुत् ।

**பத்யா கிருதம் :**

100 கடுக்காய் எடுத்துக் கஷாயமாக்கி அதில் கடுக்காய் மரத்தின் 50 இலையின் கல்க்கத்தைச் சேர்த்து 1 பிரஸ்தம் நெய் கலந்து பக்குவம் செய்து கொள்ளவேண்டும். இது குன்மம், காமாலை, பாண்டு ஆகிய நோய்களைப் போக்கும்.

குறிப்பு: 1. பழத்தின் காம்பு எனச் சிலரும், விதை நீக்கிய கடுக்காய் எனச் சிலரும் கூறுகின்றனர்.

2. 16 பிரஸ்த நீரில் இட்டு காய்ச்சி நாலில் ஒன்றாய் குறுக்கிக் கொள்ள வேண்டும் என்று சக்ரதத்தர் கூறுகின்றார்.

आरग्वधं रसेनेक्षोर्विदार्यामलकस्य वा ॥ ४१ ॥

सव्यूषणं बिल्वमात्रं पाययेत् कामिलापहम् ।

சரக்கொன்றையுடன் [1]த்ரிகடு கலந்து 1 பலம் [2]எடுத்து கருப்பஞ்சாற்றுடனாவது, பால்முதுக்கன் சாறு, நெல்லிச் சாறு இவற்றுடனாவது பருக காமாலை நீங்கும்.

குறிப்பு: 1. சம அளவு த்ரிகடு கலந்த சரக்கொன்றை ஒரு பலம் என்று (த்ரிகடு மொத்தம் 1/2 பலம் - சரக்கொன்றை 1/2 பலம்) இந்து கூறுகிறார்.

2. சரகத்தில் बिल्वपत्रम् (பில்வஇலை) என்று பாடம் காணப்படுகிறது.

पिबेन्निकुम्भकल्कं वा द्विगुडं शीतवारिणा ॥ ४२ ॥

कुम्भस्य चूर्णं सक्षौद्रं त्रैफलेन रसेन वा ।

அல்லது நாகதந்தீ கல்க்கத்தை இருபங்கு வெல்லம் சேர்த்துக் [1]குளிர்ந்தநீர் அனுபானத்துடன் பருகவேண்டும். அல்லது [2]சிவதைச் சூர்ணத்தைத் தேன் கலந்து த்ரிபலை யின் கஷாயத்துடன் பருகவேண்டும்.

குறிப்பு: 1. பொதுவாக விரேசனப் பிரயோகங்களில் உஷ்ணமான அனுபானமே விதிக்கப்படுகிறது. எனினும் நாகதந்தியின் தீக்ஷ்ணத் தன்மையானது வயிற்றில் வேதனை, குமட்டல் ஆகியவற்றை உண்டாக்கக் கூடுமாதலால், அதைத் தவிர்ப்பதற் காக குளிர்ந்த நீர் அனுமதிக்கப்படுகிறது.

2. கும்ப என்ற மூலச் சொல்லுக்கு எலிச்செவி என்று சங்க்ரஹத்தின் உரையில் இந்து கூறுகிறார்.

त्रिफलाया गुडूच्या वा दार्व्या निम्बस्य वा रसम् ॥ ४३ ॥

प्रातः प्रातर्मधुयुतं कामलार्ताय योजयेत् ।

திரிபலை, சீந்தில், மரமஞ்சள், வேம்பு, இவற்றுள் ஒன்றின் கஷாயத்துடன் தேன் கலந்து காலை வேளை தோறும் காமாலை நோயாளிக்குக் கொடுக்கவேண்டும்.

निशागैरिकधात्रीभिः कामलापहमजंनम् ॥ ४४ ॥

**காமாலைக்கு அஞ்ஜனம் :**

மஞ்சள், காவிமண், நெல்லி, இவற்றால் அஞ்ஜனமிட காமாலை நீங்கும்.

तिलपिष्टनिभं यस्तु कामलावान् सृजेन्मलम् ।
कफरुद्धपथं तस्य पित्तं कफहरैर्जयेत् ॥ ४५ ॥

எள் கல்க்க நிறத்தில் மலம் வெளியேற்றும் காமாலை நோயுள்ளவருக்கு கபத்தை நீக்கும் மருந்துகளை உபயோகித்து, கபத்தால் வழித் தடையுற்ற பித்தத்தைப் போக்க வேண்டும்.

रूक्षशीतगुरुस्वादुव्यायामबलनिग्रहैः ।
कफसम्मूर्च्छितो वायुर्यदा पित्तं बहिः क्षिपेत् ॥ ४६ ॥

हारिद्रनेत्रमूत्रत्वक्श्वेतवर्चास्तदा नरः ।
भवेत्साटोपविष्टम्भो गुरुणा हृदयेन च ॥ ४७ ॥

दौर्बल्याल्पाग्निपार्श्वार्तिहिध्माश्वासारुचिज्वरैः ।
क्रमेणाल्पेऽनुषज्येत पित्ते शाखासमाश्रिते ॥ ४८ ॥

रसैस्तं रूक्षकट्वम्लैः शिखितित्तिरिदक्षजैः ।
शुष्कमूलकजैर्यूषैः कुलत्थोत्थैश्च भोजयेत् ॥ ४९ ॥

भृशाम्लतीक्ष्णकटुकलवणोष्णं च शस्यते ।

सबीजपूरकरसं लिह्याद्व्योषं तथाऽऽशयम् ॥ ५० ॥

स्वं पित्तमेति तेनास्य शकृदप्यनुरज्यते ।
वायुश्च याति प्रशमं सहाटोपाद्युपद्रवैः ॥ ५१ ॥

निवृत्तोपद्रवस्यास्य कार्यः कामलिको विधिः ।

வறட்சி, குளிர்ச்சி, எளிதில் ஜீரணிக்காமை, இனிப்பு, தேகப்பயிற்சி, வேகத்தடை, இவற்றால் கோபமடைந்த வாயு கபத்துடன் கலந்து பித்தத்தை (கோஷ்டத்திற்கு) வெளியில் சிதறச் செய்யும். அப்பொழுது நோயாளியின் கண்கள், சிறுநீர், சருமம் ஆகியவை மஞ்சளாகவும், மலம் வெளுத்தும் காணப்படும். வயிற்றில் இரைச்சலும், தம்பிதமும் காணப்படும். இருதயம் கனத்துத் தோன்றும். இவ்வாறு பித்தம் கோஷ்டத்தில் குறைந்து சாகைகளில் தங்கிய நிலையில் பலக் குறைவு, அக்னி மந்தம், விலாப்பக்கவலி, விக்கல், சுவாசம், ருசியின்மை, ஜ்வரம், ஆகியவை அடுத்தடுத்துக் காணப்படும். இத்தகைய நோயாளிக்கு வறட்சி, காரம், புளிப்பு, ஆகியவை உள்ள மயில், தித்தரி, கோழி இவற்றின் மாமிஸ ரஸத்துடனும், உலர்ந்த முள்ளங்கி கலந்த பருப்புக் கஞ்சியுடனும், கொள்ளுக் கஞ்சியுடனும் உணவைக் கொடுக்க வேண்டும். புளிப்பு, தீக்ஷ்ணம், காரம், உப்பு, உஷ்ணம் ஆகியவை அதிகரித்த அளவில் உள்ள உணவும் மருந்தும் சிறந்தனவாகும். த்ரிகடுவை, துருஞ்சிச் சாற்றுடன் லேஹமாக உட்கொள்ளவேண்டும். இத்தகைய சிகித்ஸையால் பித்தமானது தன் ஸ்தானத்தை அடைகிறது. அதனால் மலமும் மஞ்சள் நிறத்தை அடைகிறது. பொருமல் முதலிய உபத்ரவங்கள் அடங்குவதுடன் வாயுவும் அடங்குகிறது. உபத்ரவங்கள் நீங்கியபின்

இவர்களுக்குக் காமாலை சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

गोमूत्रेण पिबेत्कुम्भकामलायां शिलाजतु ॥ ५२ ॥

मासं माक्षिकधातुं वा किट्टं वाऽथ हिरण्यजम् ।

**கும்பகாமாலை சிகித்ஸை :**

கும்பகாமாலையில் சிலாஜதுவை பசு மூத்திரத்தில் கலக்கி பருக வேண்டும். ஸ்வர்ணமாக்ஷிகத்தையாவது, ஸ்வர்ணத்தின் *கிட்டத்தையாவது *பசு நீருடன் கலந்து 1 மாதம் பருகவேண்டும்.

குறிப்பு: *வெள்ளியின் கிட்டமென அருணதத்தர் கூறுகிறார்.

गुडूचीस्वरसक्षीरसाधितेन हलीमकी ॥ ५३ ॥

माहिषीहविषा स्निग्धः पिबेद्धात्रीरसेन तु ।
त्रिवृतां तद्विरिक्तोऽद्यात्स्वादुपित्तानिलापहम् ॥ ५४ ॥

द्राक्षालेहं च पूर्वोक्तं सर्पींषि मधुराणि च ।
यापनान् क्षीरबस्तींश्च शीलयेत्सानुवासनान् ॥ ५५ ॥

मार्द्वीकारिष्टयोगांश्च पिबेद्युक्त्याऽग्निवृद्धये ।
कासिकं वाभयालेहं पिप्पलीं मधुकं बलाम् ॥ ५६ ॥

पयसा च प्रयुंजीत यथादोषं यथाबलम् ।

**ஹலீமக சிகித்ஸை :**

[1]சீந்தில் சாறும், பாலும் கலந்து பக்குவம் செய்யப் பட்ட எருமை நெய்யால் நெய்ப்புச் செய்து கொண்டு,

நெல்லிச் சாற்றுடன் சிவதையை உட்கொள்ளவேண்டும். விரேசனம் ஆனபின் பித்தத்தையும், வாயுவையும் போக்கும் தன்மையுள்ள இனிப்பான உணவை உட்கொள்ள வேண்டும். முற்கூறப்பெற்ற [2]திராக்ஷாலேஹம், பொருள் சேர்த்துப் இனிப்பான/பக்குவம் செய்யப்பட்ட நெய் வகைகள், யாபன [3]பஸ்திகள், பால் கலந்த பஸ்திகள், அனுவாஸன பஸ்திகள் ஆகியவற்றை அடிக்கடி உபயோகிக்கவேண்டும். ஜாடராக்னி பலமடைவதற்காக திராக்ஷாரிஷ்ட வகைகளை உத்தியாகப் பருகவேண்டும். காஸ சிகித்ஸையில் கூறப்பட்ட கடுக்காய் [4]லேஹத்தை உட்கொள்ளவேண்டும். [5]திப்பிலி, அதிமதுரம், சிற்றா முட்டி இவற்றை பாலுடன் கலந்து தோஷம், தேக பலம், இவற்றிற்கேற்றவாறு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: 1. நெய்க்கு 4 மடங்கு சீந்தில் சாறு, பால் நெய்க்கு சம அளவு.

2. திராக்ஷாலேஹம் -20-வது சுலோகத்தில் காண்க.

3. பஸ்தி வகைகள் கல்பஸ்தானத்தில் கூறப்பட விருக்கின்றன.

4. கடுக்காய் லேஹம் என்பதால் காஸ சிகித்ஸை அத்.3.சுலோகம் 127-ல் கூறிய அகஸ்திய ரசாயனமும்-சு. 168-ல் கூறிய கடுக்காய் லேஹமும் கொள்ளத்தக்கவையாகும்.

5. திப்பிலி, அதிமதுரம், சிற்றாமுட்டி, இவற்றுள் ஒன்றை உபயோகிக்கவேண்டும் என இந்து கூறுகிறார்.

पाण्डुरोगेषु कुशलः शोफोक्तं च क्रियाक्रमम् ॥ ५७ ॥

திறமையுள்ள வைத்தியர் வீக்கத்திற்குக் கூறப்பட இருக்கிற சிகித்சை முறையை பாண்டு நோயிலும் செய்யலாம்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितयामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने पाण्डुरोगचिकित्सितं नाम षोडशोऽध्याय: ॥ १६ ॥

சிகித்ஸாஸ்தானம் - பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

★★★★★

# ॥ चिकित्सास्थानम् -சிகித்ஸாஸ்தானம் ॥

## सप्तदशोऽध्याय: - அத்தியாயம் - 17

अथाऽत: श्वयथुचिकित्सितं व्याख्यास्याम: ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षय: ।

அடுத்து வீக்கத்தின் சிகித்ஸையை விளக்குகிறோம்.

இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

सर्वत्र सर्वांगसरे दोषजे श्वयथौ पुरा ।
सामे विशोषितो भुक्त्वा लघु कोष्णाम्भसा पिबेत् ॥ १॥

नागरातिविषादारुविडङ्गेन्द्रयवोषणम् ।
अथवा विजयाशुण्ठीदेवदारुपुनर्नवम् ॥ २ ॥

नवायसं वा दोषाढ्य: शुद्ध्यै मूत्रहरीतकी: ।
वराक्वाथेन कटुकाकुम्भायस्त्र्यूषणानि वा ॥ ३ ॥

अथवा गुग्गुलुं तद्वज्जतु वा शैलसम्भवम् ।

உடல் முழுவதும் பரவுபவையும், தோஷங்களால் உண்டானவையும், ஆமத்துடன் கலந்தவையுமான எல்லா வீக்கங்களிலும், முதலில் உடலை இளைக்கச் [1]செய்து கொண்டு, பிறகு எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவை உண்ணவேண்டும். பிறகு சுக்கு, அதிவிடயம், தேவதாரு, வாய்விளங்கம், வெட்பாலையரிசி, மிளகு இவற்றின் சூரணத்தையாவது, கடுக்காய், சுக்கு, தேவதாரு, மூக் கரட்டை, இவற்றின் சூரணத்தையாவது சிறிது சூடான நீருடன் உட்கொள்ள வேண்டும். உடல் சுத்தி அடை வதற்காக பசுமூத்ரம் சேர்ந்த [3]கடுக்காய்களையாவது, கடுகரோஹிணீ, சிவதை, [1]அயம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றையாவது, குக்கிலையாவது, சிலாஜதுவையாவது, த்ரிபலைக் கஷாயத்துடன் உட்கொள்ளலாம்.

குறிப்பு: 1. विशोषित: என்ற மூலச் சொல் உபவாசமிருத்தல் ஆமங்களைப் பக்குவம் செய்தல், வமன விரேசனம் முதலியவற்றால் தோஷங்களை வெளியேற்றல் ஆகிய பிரயோகத்தை குறிப்பிடுவதாகச் சிலர் உரை கூறுவர். இது சங்க்ரஹத்தின் கருத்தைச் சார்ந்த உரையாகும்.

2. நவாயஸ சூர்ணம் - சிகித்ஸா.அத். 16-சு, 14.ல் கூறப்பட்டுள்ளது.

3. கடுக்காய்களை பசு மூத்ரத்துடன் கலந்து பருக வேண்டுமென அருணதத்தர் கூறுகிறார்.

4. அயபற்பம் அல்லது அயத்தின் நுண்ணியதூள் உபயோகிக்க ஏற்றது.

मन्दाग्निः शीलयेदामगुरुभिन्नविबद्धविट् ॥ ४ ॥

तक्रं सौवर्चलव्योपक्षौद्रयुक्तं गुडाभयाम् ।
तक्रानुपानमथवा तद्वद्वा गुडनागरम् ॥ ५ ॥

அக்கினி மந்தித்திருப்பதுடன், ஆமங்கலந்ததும், தடிப்பு உள்ளதும், தடையுடன் பேதியாவதுமான மலம் உள்ளவர், சௌவர்ச்சல உப்பு, த்ரிகடு, தேன், இவற்றுடன் மோரைப் பருகவேண்டும். வெல்லங்கலந்த கடுக்காயை உண்டு மோரை அனுபானமாகப் பருகவேண்டும். அல்லது வெல்லங்கலந்த *சுக்கை அவ்வாறே (மோர் அனு பானத்துடன்) உட்கொள்ளவேண்டும்.

குறிப்பு: *சம அளவு வெல்லங்கலந்த சுக்குப் பிரயோகத் திற்கு மூக்கிரட்டைக் கஷாயத்தை அனுபானமாகக் கொள்ளும்படி சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

आर्द्रकं वा समगुडं प्रकुंचार्धविवर्धितम् ।
परं पंचपलं मासं यूषक्षीररसाशनः ॥ ६ ॥

गुल्मोदरार्शःश्वयथुप्रमेहान् श्वासप्रतिश्यालसकाविपाकान् ।
सकामलाशोफमनोविकारान् कासं कफं चैव जयेत्प्रयोगः ॥ ७॥

சம அளவு வெல்லம் கலந்த [1]இஞ்சியை அதிக அளவு 5 பலம் ஆகும் வரை ஒவ்வொருநாளும் ½ பலம் வீதம் படிப்படியாக அதிகரித்து ஒரு மாதம் வரை உட் கொள்ளவேண்டும். [2]பருப்புக்கஞ்சி, பால், மாம்ஸ ரஸம் ஆகியவற்றை உணவாக கொள்ளவேண்டும். குன்மம், உதரம், மூலம், வீக்கம், பிரமியம், ச்வாஸம், சளிப்பு, அலஸகம், ஜீரணிக்காமை, காமாலை, இளைப்பு, மண நோய்கள், இருமல், கபம் ஆகிய நோய் களைப் போக்கும்.

குறிப்பு: 1. முதல்நாள் கால்பலம் இஞ்சி, கால்பலம் வெல்லம் கலந்து உட்கொள்ளவேண்டும். அடுத்த 9 நாட்களுக்கு பிரதிதினம் கால்பலம் இஞ்சி, கால் பலம் வெல்லம் என்ற விகிதத்தில் அதிகம் சேர்த்து உட்கொள்ள வேண்டும். எனவே 10-வது நாளன்று 2½ பலம் இஞ்சி, 2½ பலம் வெல்லம் ஆக மொத்தம் 5 பலம் ஆகிறது. இந்த அளவில் அடுத்த 20 நாட்களுக்கும் (மாதம் முடிய) உட்கொள்ள வேண்டும். படிப்படியாக அதிகரித்தது போலவே கடைசி அளவு ½ பலம் வரை படிப்படியாகக் குறைத்தும் இதைப் பிரயோகித்து நிறுத்த வேண்டும் என்றும், இவ்வாறு அதிகரித்தும் குறைத்தும் உபயோகிக்கும் கல்பம் உள்பட 1 மாதத்திற்கு இந்தப் பிரயோகம் செய்யப்பட வேண்டும் என்றும் சிலர் கூறுவர். அதாவது 20 நாள்வரை முற்கூறியவாறு உபயோகித்து, அடுத்த பத்து நாட்களில் நாள்தோறும் ½ பலம் விகிதத்தில் படிப்படியாகக் குறைத்துப் பிரயோகிக்கவேண்டும் என்பது இவர்கள் கருத்து.

2. கபம், பித்தம், வாயு அதிகரிக்கப்பெற்றுள்ளவர்,முறையே பருப்புக்கஞ்சி, பால், மாம்ஸ ரஸம் இவற்றைப் பருகவேண்டுமென ஸுஶ்ருத். அத்.19-சு. 56-ல் கூறப்பட்ட முறையும் இங்கு கவனிக்கத்தக்கது.

घृतमार्द्रकनागरस्य कल्कस्वरसाभ्यां पयसा च साधयित्वा ।
श्वयथुक्षवथूदराग्निसादैरभिभूतोऽपि पिबन् भवत्यरोगः ॥८॥

இஞ்சிச் சாறு, இஞ்சிக்கல்க்கம், ஆகியவற்றுடன் பால் கலந்து நெய் பக்குவம் செய்து பருக; வீக்கம், தும்மல், உதரம், அக்னிமந்தம், இவற்றால் பீடிக்கப்பட்ட வர்கள் சுகமடைவர்.

निरामो बद्धशमलः पिबेच्छ्वयथुपीडितः ।
त्रिकटुत्रिवृतादन्तीचित्रकैः साधितं पयः ॥ ९ ॥

मूत्रं गोर्वा महिष्या वा सक्षीरं क्षीरभोजनः ।
सप्ताहं मासमथवा स्यादुष्ट्रक्षीरवर्तनः ॥ १० ॥

வீக்கம் உள்ளவர் ஆமதோஷம் நீங்கிய நிலையில் மலத்தடையும் கொண்டிருப்பின் த்ரிகடு, சிவதை, நாகதந்தீ, கொடிவேலி இவற்றைக் கலந்து, பக்குவம் செய்த பாலைப்பருக வேண்டும். பசு அல்லது எருமை யின் நீருடன் பால் கலந்து பருகுவதுடன், பாலையே உணவாகக் கொள்ளவேண்டும். அல்லது ஏழு நாட்கள், அல்லது 1 மாதம் ஒட்டகத்தின் [1] பாலையே உணவாகக் கொள்ளவேண்டும்.

குறிப்பு: 1. வேறு உணவு கொள்ளக்கூடாது.

यवानकं यवक्षारं यवानीं पञ्चकोलकम् ।
मरिचं दाडिमं पाठां धानकामम्लवेतसम् ॥ ११ ॥

बालबिल्वं च कर्षांशं साधयेत्सलिलाढके ।
तेन पक्वो घृतप्रस्थं शोफार्शोगुल्ममेहहा ॥ १२ ॥

ஓமம், யவக்ஷாரம், ஜீரகம், பஞ்சகோலம், மிளகு, மாதுளை, *வட்டத்திருப்பி, மல்லி, புளிவஞ்சி, பில்வப் பிஞ்சு, இவற்றை வகைக்கு ¼ பலம் எடுத்து, 4 பிரஸ்தம் ஜலத்திலிட்டுக் காய்ச்சிய அந்த கஷாயத்தில், 1 பிரஸ்தம்

நெய் பக்குவம் செய்து உட்கொள்ள வீக்கம், மூலம், குன்மம், பிரமேகம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. இந்த யோகத்தில் கல்கம் சொல்லப்பட வில்லை. கஷாயச் சரக்குகளையே குறைந்த அளவு கல்கத்துக்கும் உபயோகிக்கலாம்.

2. சரகத்தில் கூறப்பட்ட இந்த யோகத்தில் வட்டத்திருப்பி குறிப்பிடப் படவில்லை. ஆனால் சௌவர்ச்சல உப்பு இடம் பெற்றிருக்கிறது.

दध्नश्चित्रकगर्भाद्वा घृतं तत्तक्रसंयुतम् ।
पक्वं सचित्रकं तद्वद्गुणैः-

கொடிவேலிச் சூரணம் கலந்து காய்ச்சப்பெற்ற பாலைத் தோய்த்து உண்டான தயிரைக் கடைந்து எடுத்த நெய்யுடன் அந்த *மோரையும், கொடிவேலிக் கல்கத்தையும் கலந்து பக்குவம் செய்து பருக முற்கூறப் பெற்ற வீக்கம் முதலிய நோய்கள் நீங்கும்.

குறிப்பு: *மூல நோயில் கூறியவாறு இப்பாலை கொடி வேலிக்கல்க்கம் பூசிய பானையில் தோய்க்க வேண்டும்.

-युंज्याच्च कालवित् ॥ १३ ॥

धान्वन्तरं महातिक्तं कल्याणमभयाघृतम् ॥

காலம் (முதலியவற்றை) நன்கு அறிந்து [1]தான்வந்தர கிருதம், [2]மகாதிக்த கிருதம், [3]கல்யாணகிருதம், [4]அபயா கிருதம் ஆகியவற்றையும் உபயோகிக்கலாம்.

குறிப்பு:1. தான்வந்திர கிருதம். சிகித்.அத்.12.சு.19-ல் கூறப்பட்டுள்ளது.

2. மகாதிக்த கிருதம். சிகித். அத்.19-சு. 8-ல் கூறப் படவிருக்கிறது.

3. கல்யாண கிருதம். உத்ர.அத்.6.சு. 26-ல் கூறப் படவிருக்கிறது.

4. அபயா கிருதம். சிகித். அத்.15.சு.28-ல் கூறப்பட்டுள்ளது.

दशमूलकषायस्य कंसे पथ्याशतं पचेत् ॥ १४ ॥

दत्वा गुडतुलां तस्मिन् लेहे दद्याद्विचूर्णितम् ।
त्रिजातकं त्रिकटुकं किञ्चिच यवशूकजम् ॥ १५ ॥

प्रस्थार्धं च हिमे क्षौद्रात्तन्निहन्त्युपयोजितम् ।
प्रवृद्धशोफज्वरमेहगुल्मकार्श्यामवाताम्लकरक्तपित्तम् ।
वैवर्ण्यमूत्रानिलशुक्रदोषश्वासारुचिप्लीहगरोदरं च ॥ १६॥

### தசமூல ஹரீதகி :

தசமூல கஷாயம் [1]4 பிரஸ்தம் எடுத்து 100 கடுக்காயை [2]இட்டு வேகவைத்து (விதையை நீக்கி) 100 பலம் வெல்லம், தேவையான அளவு லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகியவற்றின் [3]சூர்ணமும் சிறிதளவு யவக்ஷாரமும் கலந்து பக்குவம் செய்து கொள்ளவேண்டும். சூடு ஆறியபின் 8 பலம் தேன் சேர்க்க வேண்டும். இதை உப யோகிக்க முதிர்ந்த வீக்கம், ஜுரம், பிரமியம், குன்மம், இளைப்பு, ஆமவாதம், நெஞ்செரிவு, ரக்தபித்தம், நிறமாற்றம் இவற்றையும், சிறுநீர், வாயு, சுக்ரம் இவற்றின் தோஷங்களையும், சுவாஸம், ருசியின்மை, மண்ணீரல் வீக்கம், இடுவிஷம், உதரம் ஆகியவற்றையும் நீக்கும்.

குறிப்பு: 1. கஷாயத்திற்கான தசமூலம் 32 பலம் என இந்துவும் 64 பலமென சக்ரதத்தரும், 100 பல மென அருணதத்தரும் கூறுகின்றனர்.

2. தசமூலத்தையும், துணியில் தளர்த்தியாகக் கட்டப்பட்ட கடுக்காய்களையும் நீரிலிட்டுக் கஷாயம் தயாரித்து அதில் வெந்த கடுக்காய்களை விதையை நீக்கி பாகுடன் சேர்ப்பது சம்பிரதாயம்.

3. திரிகடு மொத்தம் 4 பலம், லவங்கப்பட்டை முதலியன மூன்றும் வகைக்கு 1 பலம், யவக்ஷாரம் ¼ பலம் என அருணதத்தரும், லவங்கப்பட்டை முதலியன மூன்றும் மொத்தம் 2 பலம், யவக்ஷாரம் அதில் 1/2 பங்கு என சக்ரபாணியும் கூறு கின்றார்கள். திரிகடுவும் யவக்ஷாரமும் மொத்தம் 4 பலம், மணப் பொருள் மூன்றும் வகைக்கு கால்பலம் என்று தூதர்ணரின் கருத்தையும் சக்ரபாணி குறிப்பிடுகிறார்.

4. ஒரு கடுக்காயும், ½ பலம் லேஹமும் உட் கொள்ளும்படி சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

पुराणयवशाल्यन्नं दशमूलाम्बुसाधितम् ॥ १७ ॥

अल्पमल्पपटुस्नेहं भोजनं श्वयथोर्हितम् ।
क्षारव्योषान्वितैर्मौद्गैः कौलत्थैः सकणैः रसैः ॥ १८ ॥

तथा जांगलजैः कूर्मगोधाशल्यकजैरपि ।
अनम्लं मथितं पाने मद्यान्यौषधवन्ति च ॥ १९ ॥

**உணவும் பானமும் :**

தசமூல கஷாயத்தில் பக்குவம் செய்யப்பட்டதும் சிறிதளவு உப்பும் நெய்ப்பும் கலந்ததுமான பழகிய யவை,

பழகிய சாலி ஆகியவற்றின் அன்னத்தை க்ஷாரம், த்ரிகடு, ஆகியவை கலந்த பயற்றம் பருப்புக் கஞ்சியுடனும் திப்பிலிச் சூரணம் கலந்த கொள் ரஸத்துடனும் வறண்ட பிரதேசத்து மிருகம், ஆமை, உடும்பு, முள்ளம்பன்றி, இவற்றின் மாம்ஸ ரஸத்துடனும் குறைந்த அளவில் உட்கொள்வது வீக்க நோயில் ஏற்றது. புளிப்பில்லாத மோர், மருந்துப்பொருள் சேர்க்கப்பட்ட மதுவகை ஆகியவை பானத்துக்கு ஏற்றவையாகும்.

अजाजीशठिजीवन्तीकारवीपौष्कराग्निकैः ।
बिल्वमध्ययवक्षारवृक्षाम्लैर्बदरोन्मितैः ॥ २० ॥

कृता पेयाऽज्यतैलाभ्यां युक्तिभृष्टा परं हिता ।
शोफातिसारहृद्रोगगुल्मार्शोल्पाग्निमेहिनाम् ॥ २१ ॥

ஜீரகம், பூலாங்கிழங்கு, கீரிப்பாலை, கருஞ்சீரகம், புஷ்கர மூலம், கொடிவேலி, பில்வச்சத்து, யவக்ஷாரம், புளி, இவை வகைக்கு, 1/8 பல அளவு [1] கலந்து கஞ்சி தயாரித்து உத்தியாக நெய், எண்ணெய், ஆகியவை [2] தாளித்து பருகுவது வீக்கம், வயிற்றுப் போக்கு, இருதய நோய், குன்மம், மூலம், ஜாடராக்னி மந்தம், பிரமியம் ஆகியவற்றில் ஏற்றதாகும்.

குறிப்பு: 1. ஜீரகம் முதலியவற்றின் கஷாயத்தில் கஞ்சி தயாரிக்க வேண்டும்.

இவற்றுடன் தசமூலத்தையும் சேர்க்குமாறு சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. தாளிப்பதுடன் உப்பும் சிறிதளவு சேர்க்கும் படி சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

गुणैस्तद्वच पाठायाः पञ्चकोलेन साधिता ।

வட்டத்திருப்பி 1/8 பலம் அல்லது பஞ்சகோலம் 1/8 பலம் சேர்த்து தயாரிக்கப்பெற்ற கஞ்சியும் இத்தகைய குணமுள்ளதாகும்.

शैलेयकुष्ठस्थौणेयरेणुकागुरुपद्मकैः ॥ २२ ॥

श्रीवेष्टकनखस्पृक्कादेवदारुप्रियंगुभिः ।
मांसीमागधिकावन्यधान्यध्यामकबालकैः ॥ २३ ॥

चतुर्जातकतालीसमुस्तागन्धपलाशकैः ।
कुर्यादभ्यंजनं तैलं लेपं स्नानाय तूदकम् ॥ २४ ॥

கடற்பாசி, கோஷ்டம், தூணியாங்கள், அரேணுகம், அகில், பதிமுகம், திருவட்டப்பிசின், புலிநகம், சோரகப் புல், தேவதாரு, ஞாழல், ஜடாமாஞ்சில், திப்பிலி, நீர்க் கோரை, மல்லி, நான்முகப்புல், வெட்டிவேர், லவங்கப் பட்டை, ஏலம், லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, தாளீசம், கோரைக்கிழங்கு, பூலாங்கிழங்கு இவற்றைச் சேர்த்து அப்யங்கத்திற்கான தைலம், பூச்சு, ஸ்னானத்திற்கேற்ற நீர் ஆகியவை தயாரிக்கலாம்.

குறிப்பு: வாயு அதிகரித்த நிலையில் உள்ள வீக்கத்தில் அப்யங்கம் செய்ய ஏற்றது என சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

स्नानं वा निम्बवर्षाभूनक्तमालार्कवारिणा ।

வேம்பு, மூக்கிரட்டை, புங்கு, எருக்கு இவற்றைக் கலந்து காய்ச்சப்பட்ட நீரினாலாவது ஸ்னானம் செய்யலாம்.

குறிப்பு: முள்ளங்கி, வெட்பாலை இவற்றைக் கலந்து தயாரித்த நீரும் ஏற்றதென சங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

एकांगशोफे वर्षाभूकरवीरककिंशुकैः ॥ २५ ॥

विशालात्रिफलारोध्रनलिकादेवदारुभिः ।
हिंस्राकोशातकीमाद्रीतालपर्णीजयन्तिभिः ॥ २६ ॥

स्थूलकाकादनीशालनाकुलीवृषपर्णिभिः ।
वृद्धिर्द्धिहस्तिकर्णैश्च सुखोष्णैर्लेपनं हितम् ॥ २७ ॥

**தனி உறுப்பு சம்பந்தப்பட்ட வீக்கத்திற்கு சிகித்ஸை :**

மூக்கிரட்டை, அரளி, புரசு, ஆற்றுத்தும்மட்டி, த்ரிபலை, லோத்தி, [1]பவழக்கொடி, தேவதாரு, [2]கண்டங் கத்திரி, பீர்க்கு அதிவிடயம், நிலப்பனங்கிழங்கு, தழு தாழை, பெருங்குன்றி, தேக்கு, சர்ப்பகந்தி, எலிச்செவி, விருத்தி, ருத்தி, சிவப்பு ஆமணக்கு இவற்றை அரைத்துச் சிறிது உஷ்ணமாக்கி பூசலாம்.

**குறிப்பு:** 1. வேலிப்பருத்தி என்றும் கூறுவர்.

2. சடாமாஞ்சில் என இந்து உரை கூறுகிறார்.

अथानिलोत्थे श्वयथौ मासार्धं त्रिवृतं पिबेत् ।
तैलमैरण्डजं वातविड्विबन्धे तदेव तु ॥ २८ ॥

प्राग्भक्तं पयसा युक्तं रसैर्वा कारयेत्तथा ।
स्वेदाभ्यंगान् समीरघ्नान् लेपमेकांगगे पुनः ॥ २९ ॥

मातुलुंगाग्निमन्थेन शुण्ठीहिंस्रामराह्वयैः ।

**வாயுவால் உண்டான வீக்கத்திற்கு சிகித்ஸை :**

வாயுவால் உண்டான வீக்கத்தில் [1]திருவிருதம் அல்லது ஆமணக்கு எண்ணெய் [2]பதினைந்து நாட்களுக்கு பருக

வேண்டும். வாயு, மலம் ஆகியவற்றிற்கு தடை உண்டானால் ஆமணக்கு எண்ணெயையே பால் அல்லது மாம்ஸ ரஸம் கலந்து உணவிற்கு முன்னதாகப் பருக வேண்டும். வாயுவைப் போக்கக்கூடிய, வியர்வை உண்டாக்குதல், அப்யங்கம் செய்வித்தல் ஆகியவற்றையும் செய்விக்க வேண்டும். தனி உறுப்பு வீக்கத்தில் துருஞ்சி, முன்னை சுக்கு, [3]சடாமாஞ்சில், தேவதாரு ஆகியவற்றைப் பூச வேண்டும்.

**குறிப்பு:** 1. திருவிருதம் - நெய், தைலம், மாம்ஸ எண்ணெய் இவற்றின் கலவை.

2. ஒரு மாதம் அல்லது 15 நாள் உபயோகிக்கும்படி சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

3. கண்டங்கத்திரி என்றும் கூறுவர்.

4. வாயுவைக் கண்டிக்கும் பொருள்களை வைத்துக் கட்டுவதன் மூலம் வியர்வை உண்டாக்கும்படி சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

पैत्ते तिक्तं पिबेत्सर्पिर्न्यग्रोधाद्येन वा शृतम् ॥ ३० ॥

क्षीरं तृड्दाहमोहेषु लेपाभ्यंगाश्च शीतलाः ।

**பித்தத்தால் உண்டான வீக்கத்திற்கு சிகித்ஸை :**

பித்தத்தால் உண்டான வீக்கத்தில் [1]திக்தக கிருதம் அல்லது [2]ந்யக்ரோதாதிகணச் சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்த நெய்யைப் பருக வேண்டும். தாகம், எரிச்சல், மயக்கம் ஆகியவை காணப்பட்டால் [3]பாலைப் பருகவேண்டும். குளிர்ச்சி பொருந்திய பூச்சு அப்யங்கம் ஆகியவையும் ஏற்றவையாகும்.

குறிப்பு: திக்த கிருதம். சிகித்ஸா.அத்தி.19-ல் கூறப்பட இருக்கிறது.

2. ந்யக்ரோதாதிகணம்-ஸூத்ர. அத்தி. 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

3. வீக்க நோயில் தனித்த பால் நெய், இவை தவிர்க்கப்பட வேண்டும் என்று ஸுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, இங்கு முற்கூறிய ந்யக்ரோதாதிகணச் சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட பாலைக் குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும். தனித்த பாலையும் பருகலாம் என சங்க்ரஹ உரையில் இந்து கூறுகிறார்.

पटोलमूलत्रायन्तीयष्ट्याह्वकटुकाभयाः ॥ ३१ ॥

दारु दार्वी हिमं दन्ती विशाला निचुलं कणा ।
तैः क्वाथः सघृतः पीतो हन्त्यन्तस्तापतृड्भ्रमान् ॥ ३२॥

ससन्निपातवीसर्पशोफदाहविषज्वरान् ।

பேய்ப்புடல் வேர், துராய்ப்பூண்டு, அதிமதுரம், கடுக ரோஹிணீ, கடுக்காய், தேவதாரு, மரமஞ்சள், சந்தனம், நாகதந்தி, பேய்த்தும்மட்டி, ஆற்று நொச்சி, திப்பிலி, இவற்றின் கஷாயத்துடன் [1]நெய் சேர்த்துப்பருக உட்புற எரிச்சல், தாகம், பிரமை, ஸன்னிபாதம், விஸர்ப்பம், வீக்கம், எரிச்சல், விஷம், ஜ்வரம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. திரவியங்கள் வகைக்கு ¼ பலமிட்டு கஷாய மாக்கி, நெய் 4 பலம் சேர்த்துப் பருகும்படி சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

2. பெருங்குரும்பையும் சேர்த்து पटोलमूर्वा என்றும் பாடம் காணப்படுகிறது.

आरग्वधादिना सिद्धं तैलं श्लेष्मोद्भवे पिबेत् ॥ ३३ ॥

**கப விக்கத்திற்கு சிகித்ஸை :**

கபத்தால் உண்டான விக்கத்தில், *ஆரக்வதாதிகணச் சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட தைலத்தைப் பருகவேண்டும்.

குறிப்பு: *ஆரக்வதாதிகணம்-ஸூத். அத். 15-ல் விளக்கப் பட்டுள்ளது.

स्रोतोविबन्धे मन्देऽग्नावरुचौ स्तिमिताशयः ।
क्षारचूर्णासवारिष्टमूत्रतक्राणि शीलयेत् ॥ ३४ ॥

ஆசயம் தம்பித்து காணப்படுபவர் ஸ்ரோதஸ்களின் தடை, அக்னிமந்தம், ருசியின்மை ஆகியவற்றில் க்ஷாரங் கள், சூர்ணங்கள், ஆஸவங்கள், அரிஷ்டங்கள், பசு நீர், மோர், இவற்றை அடிக்கடி உபயோகித்தல் வேண்டும்.

कृष्णापुराणपिण्याकशिग्रुत्वक्सिकतातसीः ।
प्रलेपोन्मर्दने युंज्यात्सुखोष्णा मूत्रकल्किताः ॥ ३५ ॥

திப்பிலி, பழைய பிண்ணாக்கு, முருங்கப்பட்டை, சர்க்கரை, ஆளிவிதை, இவற்றைப் பசுநீர் விட்டரைத்துச் சிறிது சூடாக்கிப் பூசி மர்த்திக்கலாம்.

स्नानं मूत्राम्भसी सिद्धे कुष्ठतर्कारिचित्रकैः ।
कुलत्थनागराभ्यां वा चण्डाऽगुरु विलेपने ॥ ३६ ॥

கோஷ்டம், முன்னை, கொடிவேலி ஆகியவற்றை யாவது, கொள், சுக்கு ஆகியவற்றையாவது சேர்த்துக் காய்ச்சப் பெற்ற நீர் பசுநீர் இவற்றை ஸ்னானம் செய்ய

உபயோகிக்க வேண்டும். பூசுவதற்கு சண்டக்கிழங்கு, அகில் இவற்றை உபயோகிக்கலாம்.

कालाजशृंगीसरलबस्तगन्धाहयाह्वया: ।
एकैषिका च लेप: स्याच्छ्वयथावेकगात्रजे ।। ३७ ।।

**தனி உறுப்பு வீக்கத்திற்கு சிகித்சை :**

உடம்பின் ஒரு பகுதியில் ஏற்பட்ட வீக்கத்திற்கு [1]மஞ்சட்டி, ஆட்டுக்கோட்டுப்பாலை, ஸரளதேவதாரு, கருஞ்சீரகம், அமுக்கிராக்கிழங்கு, [2]சடாமாஞ்சில், ஆகிய வற்றால் பூசவேண்டும்.

**குறிப்பு:** 1. काला அவுரி என்று அருணதத்தர் உரை சொல்லுகிறார்.

2. एकैपिका சிவதை என்று அருணதத்தர் உரை கூறுகிறார்.

यथादोषं यथासन्नं शुद्धिं रक्तावसेचनम् ।
कुर्वीत मिश्रदोषे तु दोषोद्रेकबलात्क्रियाम् ।। ३८ ।।

அருகிலுள்ள மார்க்கத்தை அனுசரித்து தோஷங்களுக்கு ஏற்ப *சோதன சிகித்ஸையும், அருகிலுள்ள ஸிரையைக் குத்தி ரத்த வெளியேற்றமும் செய்யலாம். தோஷங் களின் சேர்க்கையால் உண்டான வீக்கத்தில் கோபமடைந்த தோஷத்தின் பலத்திற்கு ஏற்ப சிகித்ஸை செய்யவேண்டும்.

**குறிப்பு:** நாபிக்கு மேற்புறமும், கபத்தாலும் உண்டான வீக்கத்திற்கு வமனமும், நாபிக்கு கீழும், வாத பித்தத்தாலும் உண்டான வீக்கத்திற்கு பஸ்தியும், விரேசனங்களும், கழுத்துக்கு மேல் உண்டான வீக்கத்தில் நசியமும் ஏற்றவையாகும்.

अजाजिपाठाघनपञ्चकोलव्याघ्रीरजन्यः सुखतोयपीताः ।
शोफं त्रिदोषं चिरजं प्रवृद्धं निघ्नन्ति भूनिम्बमहौषधै श्च ॥३९॥

**ஸன்னிபாத வீக்கத்திற்கு சிகித்ஸை :**

ஜீரகம், வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, பஞ்சகோலம், கண்டங்கத்திரி, மஞ்சள், இவற்றின் சூரணத்தை இளஞ் சூடான வெந்நீருடன் பருக; மூன்று தோஷங்களால் உண்டானதும், நாட்பட்டதும், முதிர்ந்ததுமான வீக்கம் நீங்கும். நிலவேம்பு, சுக்கு இவற்றின் சூரணத்தையும் இவ்வாறே உபயோகிக்கலாம்.

अमृताद्वितयं सिवाटिका सुरकाष्ठं सपुरं सगोलजम् ।
श्वयथूदरकुष्ठपाण्डुताकृमिमेहोर्ध्वकफानिलापहम् ॥ ४० ॥

கடுக்காய், சீந்தில், மூக்கிரட்டை, தேவதாரு, இவற்றுடன் குக்கில் சேர்த்து பசு நீருடன் பருக வீக்கம், உதரம், குஷ்டம், பாண்டு, கிருமி, பிரமியம் மேல்நோக்கிய கபம், வாயு ஆகியவற்றைப் போக்கும்.

इति निजमधिकृत्य पथ्यमुक्तं क्षतजनिते क्षतजं विशोधनीयम्।
श्रुतिहिमघृतलेपसेकरेकैर्विषजनिते विषजिच्च शोफ इष्टम् ॥४१॥

இங்கு கூறும் தோஷங்களால் உண்டான வீக்கத்திற்கு இதமான முறைகள் கூறப்பட்டன. வெளிக்காரணத்தால் (அடிபடுதல் முதலியவற்றால்) உண்டான வீக்கத்தில் ரத்தவெளி யேற்றத்தாலும், குளிர்ந்த நெய்யால் பூசுதல், நனைத்தல் இவற்றாலும், விரேசனத்தாலும் ரத்தத்தை சுத்தப்படுத்த வேண்டும். விஷத்தால் உண்டான வீக்கத்தில் விஷத்தைப் போக்கும் சிகித்ஸையைச் செய்யவேண்டும்.

ग्राम्यानूपं पिशितमबलं शुष्कशाकं तिलान्नं
गौडं पिष्टं दधि सलवणं विज्जलं मद्यमम्लम् ।
धाना वल्लूर मशनमथो गुर्वसात्म्यं विदाहि
स्वप्नं रात्रौ श्वयथुगदवान् वर्जयेन्मैथुनं च ॥ ४२ ॥

**வீக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை :**

வீக்கமுள்ளவர், கிராமப்புறப் பிராணி, நீர்வாழ் பிராணி, சதுப்புநிலப்பிராணி, பலங்குன்றிய பிராணி இவற்றின் மாமிஸம், உலர்ந்த காய்வகை, எள் கலக்கப் பட்ட அன்னம், வெல்லம் கலந்த நீர், மாப்பண்டம், தயிர், உப்புக்கலந்த பொருள், வழவழப்பானவை, புளிப்பான மதுவகை, வறுத்த யவை, வறண்ட மாமிஸம், பத்தியப் பொருளுடன் அபத்தியப் பொருள் கலந்த உணவு, எளிதில் ஜீரணிக்காததும், பழக்கமில்லாததும், நெஞ்செரிவு உண்டாக்கக் கூடியதுமான உணவு, பகல் தூக்கம், பெண் சேர்க்கை ஆகியவற்றை தவிர்க்கவேண்டும்.

குறிப்பு: மண், நெய், எண்ணெய், பால் ஆகியவையும் தவிர்க்கப்படவேண்டும் என ஸுச்.சிகித்.அத். 23.சு. 13-ல் கூறப்பட்டுள்ளது.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने श्वयथुचिकित्सितं नाम सप्तदशोऽध्यायः ॥ १७ ॥

சிகித்ஸாஸ்தானம் - பதினேழாம் அத்தியாயம்

முற்றிற்று.

# ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

## अष्टादशोऽध्यायः - அத்தியாயம் -18

अथाऽतो विसर्पचिकित्सितं व्याख्यास्यामः ।

इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து *விஸர்ப்ப சிகித்ஸை விளக்கப்படுகிறது. இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

**குறிப்பு:** *அக்கி நோய் போன்ற தோற்றத்துடன் பரவுந் தன்மை கொண்டது விஸர்ப்பம் எனப்படும்.

आदावेव विसर्पेषु हितं लघंनरूक्षणम् ।

रक्तावसेको वमनं विरेकः स्नेहनं न तु ॥ १ ॥

விஸர்ப்ப நோயில் *முதலில் உபவாசம், வறட்சி உண்டாக்குதல், ரத்தத்தை வெளியேற்றுதல், வாந்தி செய்வித்தல், விரேசனம் செய்வித்தல் ஆகியவை ஏற்றவையாகும். நெய்ப்புச் சிகித்ஸை செய்யக்கூடாது.

*முதலில் என்பதால் முற்குறிகள் காணும்பொழுதே இந்த சிகித்ஸைகளைச் செய்விக்கவேண்டும் என இந்து கூறுகிறார். சங்க்ரஹத்திலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது.

प्रच्छर्दनं विसर्पघ्नं सयष्टीन्द्रयवं फलम् ।

पटोलपिप्पलीनिम्बपल्लवैर्वा समन्वितम् ॥ २ ॥

**வாந்தி செய்வித்தல் :**

விஸர்ப்ப நோயில் வாந்தி செய்விப்பதற்காக மலங்காரக் காயுடன் அதிமதுரம், வெட்பாலையரிசி, இவற்றையாவது,

பேய்ப்புடல், திப்பிலி, வேப்பங்கொழுந்து இவற்றை யாவது சேர்த்து உபயோகிக்கவேண்டும்.

குறிப்பு: வமனத் திரவியங்களுடன் கரும்புச்சாறும் சங்க்ர ஹத்தில் குறிப்பிடப்படுகிறது. திப்பிலி இடம் பெறவில்லை.

रसेन युक्तं त्रायन्त्या द्राक्षायास्त्रैफलेन वा ।
विरेचनं त्रिवृच्चूर्णं पयसा सर्पिषाऽथवा ॥ ३ ॥

योज्यं कोष्ठगते दोषे विशेषेण विशोधनम् ।

**விரேசனம் செய்வித்தல் :**

சிவதைச் சூரணத்தை துராய்ப்பூண்டின் சாறு, திராக்ஷ ரஸம், திரிபலைச் சாறு, பால், நெய் இவற்றுள் ஒன்றுடன் கலந்து கொடுக்கலாம். கோஷ்டத்தில் தோஷங்கள் தங்கியிருந்தால் விசேஷமாக சோதன சிகித்ஸை செய்ய வேண்டும்.

अविशोध्यस्य दोषेऽल्पे शमनं चन्दनोत्पलम् ॥ ४ ॥

मुस्तानिम्बपटोलं वा पटोलादिकमेव वा ।
सारिबामलकोशीरमुस्तं वा क्वथितं जले ॥ ५ ॥

**சமன ஔஷதம் :**

சோதன சிகித்ஸைக்கு தகுதியில்லாத விஸர்ப்ப நோயாளி தோஷம் குறைந்திருக்கும் நிலையில் சந்தனம், கருங்குவளை, இவற்றையாவது, கோரைக் கிழங்கு, வேம்பு, பேய்ப்புடல் இவற்றையாவது, படோலாதிகணச் சரக்கு களையாவது, நன்னாரி, நெல்லி, விளாமிச்சை, கோரைக் கிழங்கு இவற்றையாவது நீரிலிட்டுக் கஷாயம் செய்து பருக வேண்டும்.

दुरालभां पर्पटकं गुडूचीं विश्वभेषजम् ।
पाक्यं शीतकषायं वा तृष्णावीसर्पवान् पिबेत् ॥ ६ ॥

दार्वीपटोलकटुकामसुरत्रिफलास्तथा ।
सनिम्बयष्टीत्रायन्तीः क्वथिता घृतमूर्च्छिताः ॥ ७ ॥

விஸர்ப்ப நோயுள்ளவர் எரிச்சல் தோன்றிய நிலையில் காஞ்சொறி, பர்ப்பாடகம், சீந்தில், சுக்கு [1]இவற்றைக் கலந்து கஷாயம் அல்லது [2]சீதகஷாயம் தயாரித்துப் பருகவேண்டும். மரமஞ்சள், பேய்ப்புடல், கடுகரோஹிணீ, காராமணி, த்ரிபலை, வேம்பு, அதிமதுரம், துராய்ப்பூண்டு, ஆகியவற்றைக் கஷாயமாகக் செய்து நெய் கலந்து குலுக்கிப் பருகவேண்டும்.

**குறிப்பு:** 1. சரகத்தில் திராட்சையும் இடம்பெறுகிறது.

2. மருந்துச் சரக்குகளைப் பொடித்து நீரிலிட்டு இரவு வைத்திருந்து காலையில் வடித்துக் கொள்ளப்படுவது சீத கஷாயம் எனப்படும்.

शाखादुष्टे तु रुधिरे रक्तमेवादितो हरेत् ।
त्वङ्मांसस्नायुसंक्लेदो रक्तक्लेदाद्धि जायते ॥ ८ ॥

## ரத்த வெளியேற்றம் :

(சாகைகளில் ரத்தம் தோஷமடைந்திருந்தால் முதலில் ரத்தத்தை வெளியேற்றவேண்டும். ஏனெனில் ரத்தத்தின் கசிவு காரணமாகவே சருமம், மாமிஸம், ஸ்நாயுக்கள் ஆகியவற்றில் கசிவு இடம்பெறுகிறது.

**குறிப்பு:** வாத தோஷத்தில் கொம்பினாலும், பித்த தோஷத்தில் அட்டையினாலும், கப தோஷத்தில்

சுரைக்குடுக்கையினாலும், ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். அல்லது சமீபத்திய ஸிரையைக்கீறி ரத்தத்தை வெளியேற்றவேண்டும். இதன் விபரங் களை ஸூத்ரஸ்தானத்தில் காண்க.

निरामे श्लेष्मणि क्षीणे वातपित्तोत्तरे हितम् ।
घृतं तिक्तं महातिक्तं शृतं वा त्रायमाणया ॥ ९ ॥

### நெய் உபயோகம் :

விஸர்ப்ப நோயாளிக்கு, ஆமநிலை நீங்கியும், கபம் குறைந்தும், வாயு, பித்தம் ஆகியவை அதிகரித்தும் உள்ள நிலையில் திக்த கிருதம், மகாதிக்தக கிருதம், துராய்ப் பூண்டு சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட கிருதம் ஆகியவை ஏற்றவையாகும்.

குறிப்பு: முதலில் நெய்ப்பு கூடாது என்று கூறியது ஆமநிலைக்கு கூறிய பொதுவிதி. இங்கு நிலைமைக்கேற்ப நெய் உபயோகிக்கும்படி கூறியது விரோதமில்லை.

குன்ம சிகித்ஸையில் கூறிய துராய்ப்பூண்டு கிருதம் உட்கொள்ளவேண்டும்.

निर्हृतेऽस्रे विशुद्धेऽन्तर्दोषे त्वङ्मांससन्धिगे ।
बहिः क्रियाः प्रदेहाद्योः सद्या वीसर्पशान्तये ॥ १० ॥

ரத்தத்தை வெளியேற்றிய பின் உடலின் உட்புறம் சுத்த மாக இருக்கையில் சருமம் மாமிஸம், பூட்டு இவற்றில் தோஷம் தங்கியிருக்குமானால் விஸர்ப்பம் உடனடியாக நீங்குவதற்கு *பூச்சு முதலிய வெளிப்புறச் சிகித்ஸை செய்ய வேண்டும்.

**குறிப்பு:** ⋆பூச்சு முதலிய என்பதால், நனைத்தல் முதலியன குறிப்பிடப்படுகின்றன.

शताह्वमुस्तवाराहीवंशार्तगलधान्यकम् ।
सुराह्वा कृष्णगन्धा च कुष्ठं वालेपनं चले ॥ ११ ॥

**வாத விஸர்ப்பத்துக்கு லேபம் :**

சதகுப்பை, கோரைக் கிழங்கு, பன்றி மோந்தான் கிழங்கு, மூங்கில், கருங்குறிஞ்சி, மல்லி, தேவதாரு, முருங்கை, கோஷ்டம் இவற்றை அரைத்து வாத விஸர்ப்பத்தில் பூசலாம்.

**குறிப்பு:** நனைத்தல் முதலியவற்றிற்கும் பயன்படுத்துமாறு ஸுச்ருத ஸம்ஹிதையில் கூறப்படுகிறது. அந்த யோகத்தில் மூங்கிலும், கருங்குறிஞ்சியும் இடம் பெறவில்லை.

न्यग्रोधादिगणः पित्ते तथा पद्मोत्पलादिकम् ।

**பித்த விஸர்ப்பத்தில் லேபம் :**

[1]ந்யக்ரோதி கணச்சரக்குகளாலாவது, தாமரை கருங் குவளை [2]முதலிய சரக்குகளாலாவது பித்த விஸர்ப்பத்தில் லேபம் செய்யலாம்.

**குறிப்பு:** 1. நியக்ரோதாதிகணத்தின் விளக்கத்தை ஸூத். 15-ம் அத்தியாயத்தில் காண்க. ந்யக்ரோதாதி கணச் சரக்குகள் சேர்த்து, கிருதம் பக்குவம் செய்து உபயோகிக்குமாறு ஸுச்ருத ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

2. முதலிய என்பதால் ஸங்க்ரஹத்தில் கூறப்பட்ட கீழ்க்கண்டவை குறிப்பிடப்படுவதாகும். தாமரை,

கருங்குவளை, பாசிசேறு, அறுகு, விளாமிச்சை, செங்காடங்காய், நீர்க்கோரை, சர்க்கரை, வெட்டி வேர், சந்தனம், முத்து, காவிக்கல், க்ஷீரகாகோலீ, வறள்தாமரை, அதிமதுரம், பதிமுகம், நெய், பால்.

न्यग्रोधपादास्तरुणाः कदलीगर्भसंयुताः ॥ १२ ॥

बिसग्रन्थिश्च लेपः स्याच्छतधौतघृताप्लुतः ।
पद्मिनीकर्दमः शीतः पिष्टं मौक्तिकमेव वा ॥ १३ ॥

शंखः प्रवालं शुक्तिर्वा गैरिकं वा घृतान्वितम् ।

இளமையான ஆலம் விழுது, வாழைத்தண்டு, தாமரைத் தண்டுக்கணு இவற்றை அரைத்து [1]சததௌத கிருதத்தில் குழப்பி பித்த விஸப்பத்தில் பூசலாம். தாமரைக் குளத்தின் குளிர்ந்த சேறு அல்லது முத்து, சங்கு, பவழம், கிளிஞ்சல் இவற்றுள் ஒன்றை ஜலம் விட்டரைத்துப் பூசலாம். அல்லது [2]நெய் கலக்கப்பட்ட காவிக்கல்லையும் பூசலாம்.

குறிப்பு: 1. உருக்கிய நெய்யை பால்மரப்பட்டைகளின் கஷாயத்தில் ஊற்றி கடைந்து எடுத்த நெய், சததௌத கிருதம் எனப்படும். இவ்வாறு 100 அல்லது பலதடவை கடைந்து எடுத்த நெய் சததௌத கிருதம் எனப்படும்.

2. முற்கூறப்பட்ட பொருள்களுடனும் நெய் சேர்த்து உபயோகிக்கவேண்டும் என ஸ்ரீ கண்டர், சிவதாசர் ஆகியோர் கூறுகின்றனர்.

त्रिफलापद्मकोशीरसमंगाकरवीरकम् ॥ १४ ॥

नलमूलान्यनन्ता च लेपः श्लेष्मविसर्पहा ।

## கப விஸர்ப்பத்தில் லேபம் :

த்ரிபலை, பதிமுகம், விளாமிச்சை, மஞ்சட்டி, அலரி, வேழம்புல்லின் வேர், நன்னாரி இவற்றை அரைத்து கப விஸர்ப்பத்தில் பூசலாம்.

धवसप्ताह्वखदिरदेवदारुकुरण्टकम् ॥ १५ ॥

समुस्तारग्वधं लेपो वर्गो वा वरुणादिकः ।
आरग्वधस्य पत्राणि त्वचः श्लेष्मातकोद्भवाः ॥ १६ ॥

इन्द्राणीशाकं काकाह्वा शिरीषकुसुमानि च ।
सेकव्रणाभ्यंगहविर्लेपचूर्णान् यथायथम् ॥ १७ ॥

एतैरेवौषधैः कुर्याद्वायौ लेपा घृताधिकाः ।

ஏமவிருக்ஷம், ஏழிலம்பாலை, கருங்காலி, தேவதாரு, குறிஞ்சி, கோரைக்கிழங்கு, சரக்கொன்றை இவற்றாலானது, [1]வரணாதிகணச் சரக்குகளாலாவது, சரக்கொன்றை நறு வலிப்பட்டை, கருநொச்சி, குன்றி, வாகைப்பூ இவற்றால் நனைத்தலுக்கு நீர், விரணப் பூச்சுக்கு நெய், விரணத்திற்கு பூச்சு, சூர்ணம் ஆகியவை தயாரித்து ஏற்றவாறு உப யோகிக்கலாம்.

இங்கு கூறப்பட்ட மருந்துப்பொருள்களுடன் அதிக அளவு நெய் சேர்த்து *வாதவிஸர்ப்பத்தில் உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: *வாத விஸர்ப்பத்தில் அதிக அளவு நெய் உபயோகிக்க வேண்டுமென்பதால் பித்த கப விஸர்ப்பங்களிலும் ஓரளவு நெய் சேர்க்கப்பட வேண்டுமென்று அருணதத்தர் கூறுகிறார்.

कफस्थानगते सामे पित्तस्थानगतेऽथवा ॥ १८ ॥

आशीतोष्णा हिता रूक्षाः-

கபஸ்தானம் அல்லது பித்தஸ்தானத்தில் ஆமதோஷம் கலந்த வாயு இருக்கையில் விஸர்ப்பம் கண்டால் சிறிதே குளிர்ச்சியும், உஷ்ணமும், வறட்சியும் உள்ளவையாகப் பூசவேண்டும்.

**குறிப்பு:** மற்ற ஸ்தானங்களில் சென்றுள்ள தோஷங்களின் சிகித்ஸையானது, அந்தந்த ஸ்தானத்தின் தோஷத் தன்மைக்கேற்றவாறு பொதுவாகச் செய்யப்பட வேண்டுமென ஸூத்ரஸ்தானத்தில் சொல்லப் பட்ட கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

-रक्तपित्ते घृतान्विताः ।
अत्यर्थशीतास्तनवस्तनुवस्त्रान्तरास्थिताः ॥ १९ ॥

योज्याः क्षणे क्षणेऽन्येऽन्ये मन्दवीर्यास्त एव च ।

ரத்தம்பித்தம் ஆகியவை அதிகரித்த விஸர்ப்பத்தில் மிகவும் சீதவீர்யமுள்ள பொருள்களின் கல்க்கத்தில் நெய் கலக்கப்பட்டு தடிப்பின்றி பிரயோகிக்கப்பட வேண்டும். உறுப்பில் மெல்லிய துணியைவைத்து மருந்தைப் பூச வேண்டும். பூச்சுக்களை புதியது புதியதாக அடிக்கடி உபயோகிக்கவேண்டும். வீர்யம் குறைதல் காரணமாக அவற்றையே மீண்டும் உபயோகிப்பதற்கில்லை.

संसृष्टदोषे ससंसृष्टमेतत्कर्म प्रशस्यते ॥ २० ॥

கூட்டு தோஷங்களால் உண்டான விஸர்ப்பங்களில் இங்கு கூறப்பெற்ற முறைகளை ஏற்றவாறு கலந்து செய்ய வேண்டும்.

शतधौतघृतेनाग्निं प्रदिह्यात्केवलेन वा ।
सेचयेद्भूतमण्डेन शीतेन मधुकाम्बुना ॥ २१ ॥

सिताम्भसाऽम्भोदजलैः क्षीरेणेक्षुरसेन वा ।
पानलेपनसेकेषु महातिक्तं परं हितम् ॥ २२ ॥

### அக்னி விஸர்ப்ப சிகித்ஸை :

அக்னி விஸர்ப்பத்தில் சததௌத கிருதத்தால் தடவ வேண்டும். அல்லது தனித்த நெய்த் தெளிவு, குளிர்ச்சியான அதிமதுரக் கஷாயம், சர்க்கரை நீர், கோரைக் கிழங்கு நீர், பால், கருப்பஞ்சாறு ஆகியவற்றில் ஒன்றால் நனைக்க வேண்டும். பருகுவதற்கும், பூசுவதற்கும், ஊற்றுவதற்கும், மகாதிக்தம் மிகவும் ஏற்றதாகும்.

குறிப்பு: 1. अम्भोजजलैः என்ற பாடத்தில் தாமரை நீரினால் எனக் கொள்ளவேண்டும்.

2. மகாதிக்தம் - குஷ்ட சிகித்ஸையில் கூறப்பட இருக்கிறது.

ग्रन्थ्याख्ये रक्तपित्तघ्नं कृत्वा सम्यग्यथोदितम् ।
कफानिलघ्नं कर्मेष्टं पिण्डस्वेदोपनाहनम् ॥ २३ ॥

### கிரந்தி விஸர்ப்ப சிகித்ஸை :

கிரந்தி விஸர்ப்ப நோயில் ரத்தம், பித்தம், இவற்றின் தோஷங்களைப் போக்கும் (லங்கனம் முதலிய) [1]சிகித்ஸைகளை நன்கு செய்வித்து பின்னர் கபம், வாயு, ஆகியவற்றைப் போக்கும் தன்மையுள்ள [2]பிண்டஸ்வேதம், [3]உபநாஹ ஸ்வேதம் ஆகியவற்றைச் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: 1. வறட்சி, லங்கணம், நீர் ஊற்றுதல், பூச்சு, ஸிரையை துண்டித்தல், அட்டைவிடுதல்,

சோதனம், துவர்ப்பு, கசப்பு சுவை உள்ள நெய்கள் முதலியவற்றால் சிகித்ஸை செய்விக்கவேண்டும் என்று சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

2. மருந்துப் பொருள்களை சூடாக்கி, முடிகட்டி ஒத்தடம் கொடுத்தல்.

3. மருந்துப் பொருள்களை வைத்துக்கட்டி வியர்ப் பித்தல்.

ग्रन्थिवीसर्पशूले तु तैलेनोष्णेन सेचयेत् ।
दशमूलविपक्वेन तद्वन्मूत्रैर्जलेन वा ॥ २४ ॥

கிரந்தி விஸர்ப்பத்தில் சூலையும் காணப்பட்டால் தைலம், பசுநீர், நீர் இவற்றால் ஒன்றுடன் தசமூலம் சேர்த்துக் காய்ச்சி சூடானதும், அதனால் உடலை நனைக்க வேண்டும்.

सुखोष्णया प्रदिह्याद्वा पिष्टया कृष्णगन्धया ।
नक्तमालत्वचा शुष्कमूलकैः कलिनाऽथवा ॥ २५ ॥

*முருங்கைப்பட்டை, புங்கம்பட்டை, உலர்ந்த முள்ளங்கி, தான்றிக்காய், இவற்றுள் ஒன்றை அரைத்து இளஞ்சூடாக பூசவேண்டும்.

குறிப்பு: * சரகத்தில் அமுக்கிராக்கிழங்கு (अश्वगन्धी) என்ற பாடம் காணப்படுகிறது.

दन्तीचित्रकमूलत्वक् सौधार्कपयसी गुडः ।
मल्लातकास्थि कासीसं लेपो भिन्द्याच्छिलामपि ॥ २६ ॥

बहिर्मार्गाश्रितं ग्रंथिं किं पुनः कफसम्भवम् ।

நாகதந்தி, கொடிவேலி வேர்ப்பட்டை, கள்ளிப்பால், எருக்கம்பால், *வெல்லம், சேங்கொட்டை, அன்னபேதி இவற்றின் பூச்சு கல்லையும் உடைக்கும். கபத்தின் காரணமாக வெளிமார்க்கத்தில் உண்டான விஸர்ப்பத்தை ஏன் போக்காது.

குறிப்பு: *சங்க்ரஹத்தில் வெல்லம் கூறப்படவில்லை.

दीर्घकालस्थितं ग्रन्थिमेभिभिन्याच भेषजैः ॥ २७ ॥

मूलकानां कुलत्थानां यूषैः सक्षारदाडिमैः ।
गोधूमान्नैर्यवान्नैर्वा ससीधुमधुशर्करैः ॥ २८ ॥

सक्षौद्रैर्वारुणीमण्डैर्मातुलुंगरसान्वितैः ।
त्रिफलायाः प्रयोगैश्च पिप्पल्याः क्षौद्रसंयुतैः ॥ २९ ॥

देवदारुगुडूच्योश्च प्रयोगैर्गिरिजस्य च ।
मुस्तभल्लातसक्तूनां प्रयोगैर्माक्षिकस्य च ॥ ३० ॥

धूमैर्विरेकैः शिरसः पूर्वोक्तैर्गुल्मभेदनैः ।
तप्तायोहेमलवणपाषाणादिप्रपीडनैः ॥ ३१ ॥

முள்ளங்கிக் கஞ்சி, கொள் கஞ்சி இவற்றுடன் யவ க்ஷாரம், மாதுளைச் சாறு ஆகியவற்றை உட்கொள்ளல், கருப்பஞ்சாறு, மது, தேன், சர்க்கரை ஆகியவற்றுடன் கோதுமை அன்னம், யவை அன்னம் உட்கொள்ளல், தேனும், துருஞ்சிச்சாறும் கலந்த வாருணீ, எள், மதுத் தெளிவு பருகுதல், திரிபலையை பிரயோகித்தல், தேன் கலந்து திப்பிலி பிரயோகித்தல், தேவதாரு, சீந்தில், சிலாஜது இவற்றின் பிரயோகம், கோரைக்கிழங்கு, சேங்கொட்டை கலக்கப்பட்ட சத்துமாவை உபயோகித்தல், தேன்* பருகுதல், சிரோவிரேசனம் நஸ்யம் தூமங்களின்

உபயோகம் மற்றும் முற்கூறியவாறு குன்மத்தைப் பிளக்கும் சிகித்ஸைகள், சூடாக்கப்பட்ட இரும்பு, தங்கம், உப்பு, கல் முதலியவற்றால் பீடித்தல் ஆகிய பிரயோகத்தால், நீண்ட காலமாக உண்டான கிரந்தி விஸர்ப்பத்தைப் பிளக்கலாம்.

குறிப்பு: ⋆பொன் நிமிளை என சக்ரபாணி கூறுகிறார்.

आभिः क्रियाभिः सिद्धाभिर्विविधाभिर्बले स्थितः ।
ग्रन्थिः पाषाणकठिनो यदि नैवोपशाम्यति ॥ ३२ ॥

अथास्य दाहः क्षारेण शरैर्हेम्नाऽपि वा हितः ।
पाकिभिः पाचयित्वा तु पाटयित्वा तमुद्धरेत् ॥ ३३ ॥

இத்தகைய பலன் கொடுக்கும் பல முறைகளைக் கையாண்ட பின்னரும் கல்போல் கிரந்தி விஸர்ப்பம் கடினமாக இருந்தால் க்ஷாரம், சூடாக்கப்பட்ட நாணற் குச்சி, தங்ககுச்சி இவற்றால் சூடு இடவேண்டும். அல்லது பழுக்கச் செய்யும் மருந்துகளை உபயோகித்து கட்டி பழுத்ததும் அதைப் பிளந்து எடுக்கவேண்டும்.

मोक्षयेद्बहुशश्चाऽस्य रक्तमुत्क्लेशमागतम् ।
पुनश्चापहृते रक्ते वातश्लेष्मजिदौषधम् ॥ ३४ ॥

கிளர்ச்சியுற்ற ரத்தத்தை பல தடவைகளில் வெளியேற்றவும் வேண்டும். ரத்தம் வெளியேற்றிய பின் வாத கபத்தைப் போக்கும் மருந்துகளை மீண்டும் உபயோகிக்க வேண்டும்.

प्रक्लिन्ने दाहपाकाभ्यां बाह्यान्तर्व्रणवत्क्रिया ।

சூடு இடுதல், பழுக்கவைத்தல் இவற்றால் கசிவு உண்டான நிலையில் உட்புறம் அல்லது வெளிப்புறம்

உண்டான விரணத்திற்கேற்றவாறு சிகித்ஸை செய்ய வேண்டும்.

உட்பிரயோகம் வெளிப்பிரயோகங்கள் மூலம் ரணத்திற்கான சிகித்ஸையைச் செய்யவேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்.

दार्वीविडंगकम्पिल्लैः सिद्धं तैलं व्रणे हितम् ॥ ३५ ॥

दूर्वास्वरससिद्धं तु कफपित्तोत्तरे घृतम् ।

மரமஞ்சள், வாய்விளங்கம், *கம்பிப்பாலை ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்த தைலம் விரணத்தில் ஏற்றதாகும். கபம் மற்றும் பித்தம் அதிகரித்துள்ள விஸர்ப்பத்தில் அறுகம்புல்லின் சாறு சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட கிருதம் ஏற்றதாகும்.

குறிப்பு: *சரகத்தில் இவற்றுடன் புங்கன் காயும் கூறப்பட்டுள்ளது.

एकतः सर्वकर्माणि रक्तमोक्षणमेकतः ॥ ३६ ॥

இத்தகைய சிகித்ஸைகள் யாவும் ஒரு பகுதி எனக் கொள்ள, ரத்தம் வெளியேற்றும் முறை ஒரு பகுதி எனக் கருதுவர்.

विसर्पो नह्यसंसृष्टः सोऽस्रपित्तेन जायते ।
रक्तमेवाश्रयश्चास्यं बहुशोऽस्रं हरेदतः ॥ ३७ ॥

ஏனெனில் எல்லாவித விஸர்ப்பங்களும், ரத்தபித்தம் கேடடையாமல் உண்டாவதில்லை. இந்நோய்க்கு ரத்தமே ஆதாரமாகும். ஆகையால் பல தடவைகளில் ரத்தத்தை வெளியேற்றவேண்டும்.

न घृतं बहुदोषाय देयं यन्न विरेचनम् ।
तेन दोषो ह्युपसाध्यस्त्वग्रक्तपिशितं पचेत् ॥ ३८ ॥

தோஷம் அதிகரித்தவருக்கு விரேசனம் செய்விக்கும் தன்மையற்ற நெய்யைக் கொடுக்ககூடாது. ஏனெனில் அத்தகைய நெய்யால் சூழப்பட்ட தோஷங்கள் வலுவடைந்து சருமம், ரத்தம், மாமிஸம் ஆகியவற்றைப் பாகமடையச் செய்யும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थानेविसर्पचिकित्सितं नाम ष्टादशोऽध्यायः ॥ १८ ॥

சிகித்ஸாஸ்தானம் - பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

### एकोनविंशोऽध्यायः - அத்தியாயம் - 19

अथाऽतो कुष्ठचिकित्सितं व्याख्यास्यामः ।

इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து குஷ்ட நோய் சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

कुष्ठिनं स्नेहपानेन पूर्वं सर्वमुपाचरेत् ।

எல்லா குஷ்ட நோயாளிகளையும் முன்னதாகவே நெய்ப்புப் பொருள்களால் உபசரிக்கவேண்டும்.

**குறிப்பு:** 1. சருமம், ரத்தம், மாம்ஸம் முதலியவை [1]கெடுக்கப்படுவதுடன், அவை கசிந்து நீங்குவது காரணமாகவும், நோய்த் தன்மை காரணமாகவும், உடல் இளைப்பு உண்டாவதால், அடிக்கடி குட்ட நோயாளியை நெய்ப்புப் பொருள்களைப் பருகச் செய்யவேண்டும் என்று கூறப்படுகிறது.

2. முற்குறிகள் தோன்றும் அளவிலேயே என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

तत्र वातोत्तरे तैलं घृतं वा साधितं हितम् ॥ १ ॥

दशमूलामृतैरण्डशार्ङ्गेष्टामेशृंगिभिः ।

**வாத குஷ்டத்திற்கு சிகித்ஸை:**

வாயு அதிகரித்த குஷ்ட நோயில் தசமூலம், சீந்தில், ஆமணக்கு, குன்றி, ஆடுதீண்டாப்பாளை ஆகியவற்றைச்

சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலம் அல்லது நெய் ஏற்றதாகும்.

**குறிப்பு:** பருகுவதற்கும், அப்யங்கத்திற்கும் ஏற்றது என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

पटोलनिम्बकटुकादार्वीपाठादुरालभाः ॥ २ ॥

पर्पटं त्रायमाणां च पलांशं पाचयेदपाम् ।
द्व्याढकेऽष्टांशशेषेण तेन कर्षोन्मितैस्तथा ॥ ३ ॥

त्रायन्तीमुस्तभूनिम्बकलिंगकणचन्दनैः ।
सर्पिषो द्वादशपलं पचेत्ततिक्तकं जयेत् ॥ ४ ॥

पित्तकुष्ठपरीसर्पपिटिकादाहतृड्भ्रमान् ।
कण्डूपाण्डूवामयान् गण्डान् दुष्टनाडीव्रणापचीः ॥ ५ ॥

विस्फोटविद्रधीगुल्मशोफोन्मादमदानपि ।
हृद्रोगतिमिरव्यङ्गग्रहणीश्वित्रकामलाः ॥ ६ ॥

भगन्दरमपस्मारमुदरं प्रदरं गरम् ।
अर्शोऽस्रपित्तमन्यांश्च सुकृच्छ्रान् पित्तजान् गदान् ॥ ७॥

***திக்த கிருதம் :***

பேய்ப்புடல், வேம்பு, கடுகரோஹிணீ, [1]மரமஞ்சள், [2]வட்டத்திருப்பி, காஞ்சொறி, பர்ப்பாடகம், துராய்ப் பூண்டு, ஆகியவை வகைக்கு 1 பலம் எடுத்து, 8 பிரஸ்த நீரிலிட்டு, எட்டில் ஒன்றாகக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். அதில் [3]துராய்ப்பூண்டு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, வெட்பாலையரிசி, [4]திப்பிலி, சந்தனம் ஆகியவை வகைக்கு ¼ பலம் எடுத்து, கல்க்கமாக்கி

12 பலம் நெய் சேர்த்துப் பக்குவம் செய்துகொள்ள வேண்டும். இந்த திக்தக கிருதத்தால் பித்த குஷ்டம், விஸர்ப்பம், கட்டிகள், எரிச்சல், விடாய், பிரமை, அரிப்பு, பாண்டுநோய், [5]களகண்டம், துஷ்டவிரணம், புரையோடல், [6]அபசீ, கொப்புளம், வித்ருதிக்கட்டி, குன்மம், வீக்கம், பைத்தியம், வெறி, இருதய நோய், திமிரம், முகத்தில் உண்டாகும் வங்கு, கிராணி, வெண் குட்டம், காமாலை, புவுத்ரம், காக்கைவலி, உதர நோய், பெரும்பாடு, இடுவிஷம், மூலம், ரத்தபித்தம் ஆகிய வையும் மற்றும் கடினமான எல்லாவகைப் பித்த நோய் களும் நீங்கும்.

குறிப்பு: 1, 2 - ஸுச்ருதத்தில் மரமஞ்சளும், வட்டத் திருப்பியும் கூறப்படவில்லை. ஆனால் திரி பலையும், ஆடாதோடையும் கூறப்பட்டுள்ளன. சரகத்தில் த்ரிபலை கூறப்பட்டுள்ளது. வட்டத் திருப்பியில் கூறப்படவில்லை.

3. त्रायमाणा என்பதற்கு சிலர் பிராம்மீ என்ற உரை கொள்வர்.

4. யானைத் திப்பிலி என இந்து கூறுகிறார்.

5. களகண்டம் - கழுத்தில் தோன்றும் ஒருவகைக் கட்டி.

6. அபசீ - கழுத்து முதலிய இடங்களில் தோன்றும் விரைவில் பழுக்காத கட்டி.

सप्तच्छदः पर्पटकः शम्याकः कटुका वचा ।
त्रिफला पद्मकं पाठा रजन्यौ सारिवे कणे ॥ ८ ॥

निम्बचन्दनयष्ट्याह्वविशालेन्द्रयवामृताः ।

किराततिक्तकं सेव्यं वृषो मूर्वा शतावरी ॥ ९ ॥

पटोलातिविषामुस्तात्रायन्तीधन्वयासकम् ।
तैर्जलेऽष्टगुणे सर्पिर्द्विगुणामलकीरसे ॥ १० ॥

सिद्धं तिक्तान्महातिक्तं गुणैरभ्यधिकं मतम् ।

**மகாதிக்தம் :**

ஏழிலம்பாலை, பர்ப்பாடகம், சரக்கொன்றை, கடுக ரோஹிணீ, வசம்பு, திரிபலை, பதிமுகம், வட்டத்திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், நன்னாரி, கருநன்னாரி, திப்பிலி, யானைத்திப்பிலி, வேம்பு, சந்தனம், அதிமதுரம், பேய்த்தும் மட்டி, வெட்பாலையரிசி, சீந்தில், நிலவேம்பு, [1]விளா மிச்சை ஆடாதோடை, பெருங்குரும்பை, தண்ணீர்விட்டான் கிழங்கு, பேய்ப்புடல், அதிவிடாய், கோரைக் கிழங்கு, துராய்ப்பூண்டு, காஞ்சொறி, இவற்றின் கல்க்கமும், 8 பங்கு நீரும், 2 பங்கு நெல்லிக்காய்ச் சாறும் கலந்து, நெய் பக்குவம் செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு தயாரிக்கப் பட்ட மகாதிக்த கிருதம், திக்தக கிருதத்தைவிட அதிக குணமுள்ளதாகும்.

குறிப்பு: 1. சுச்ருதத்தில் விளாமிச்சை கூறப்படவில்லை.

2. நீர்முள்ளி, பன்றிமோந்தான் ஆகியவை சுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளன.

3. நெய்யின் அளவுக்கு ¼ பங்கு கல்க்க திரவியங்கள் உபயோகிக்க வேண்டும்.

कफोत्तरे घृतं सिद्धं निम्बसप्ताह्वचित्रकैः ॥ ११ ॥

कुष्ठोषणवचाशालप्रियालचतुरगुंलैः ।

**கப குஷ்ட சிகித்ஸை :**

வேம்பு, ஏழிலம்பாலை, கொடிவேலி, கோஷ்டம், மிளகு, வசம்பு, தேக்கு, சாரப்பருப்பு, கொன்றை, இவற்றுடன் பக்குவம் செய்யப்பட்ட நெய்யை கப குஷ்டத்தில் பருக வேண்டும்.

सर्वेषु चारुष्करजं तौवरं सार्षपं पिबेत् ॥ १२ ॥

स्नेहं घृतं वा कृमिजित्पथ्याभल्लातकैः शृतम् ।

எல்லாவிதமான குஷ்ட நோயிலும், சேங்கொட்டை எண்ணெய் நீரடிமுத்து எண்ணெய், கடுகு எண்ணெய், வாய்விளங்கம், கடுக்காய், சேங்கொட்டை சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் இவற்றுள் ஒன்றைப் பருகவேண்டும்.

आरग्वधस्य मूलेन शतकृत्वः शृतं घृतम् ॥ १३ ॥

पिबन् कुष्ठं जयत्याशु भजन् सखदिरं जलम् ।

சரக்கொன்றைவேர் சேர்த்து 100 முறை பாகம் செய்யப்பட்ட நெய்யை, கருங்காலி நீர் அனுபானத்துடன் உட்கொள்ள; குஷ்டம் விரைவில் நீங்கும்.

एभिरेव यथास्वं च स्नेहैरभ्यंजनं हितम् ॥ १४ ॥

இங்கு கூறப்பெற்ற ஸ்னேஹப் பொருள்களால் ஏற்ற வாறு அப்யங்கமும் செய்விக்கலாம்.

स्निग्धस्य शोधनं योज्यं विसर्पे यदुदाहृतम् ।

நெய்ப்பு உண்டாக்கப்பெற்றவருக்கு விஸர்ப்ப நோயில் கூறியவாறு வமனம் முதலிய சோதன சிகித்ஸை செய்விக்க வேண்டும்.

குறிப்பு: விஸர்ப்ப நோயில் கூறிய சோதன முறை சிகித்.18-ஆம் அத்தியாயத்தில், சுலோகம் 3-ல் காண்க. வாந்தி செய்விக்க அதிமதுரம், வெட் பாலையரிசி, வேம்பு, பேய்ப்புடல் துளிர் ஆகியவற்றையும், விரேசனத்திற்கு சிவதை, நாகதந்தி, திரிபலை ஆகியவற்றையும் உப யோகிக்கும்படி சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

ललाटहस्तपादेषु शिराश्चास्य विमोक्षयेत् ॥ १५ ॥

प्रच्छानमल्पके कुष्ठे शृंगाद्याश्च यथायथम् ।

நெற்றி, கை, கால் ஆகிய இடங்களில் *ஸிரையைக் குத்த வேண்டும். மிகக் குறைந்த தோஷமுள்ள குஷ்ட நோயில் நிலமைக்கேற்ப பொளிதல், கொம்பு முதலியவற்றால் ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

குறிப்பு: தேவைக்கேற்றவாறு ஒன்று முதல் ஐந்துவரை ஸிரைகளைக் குத்தலாம் என சங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

स्नेहैराप्याययेच्चैनं कुष्ठघ्नैरन्तराऽन्तरा ॥ १६ ॥

मुक्तरक्तविरिक्तस्य रिक्तकोष्ठस्य कुष्ठिनः ।
प्रभंजनस्तथा ह्यस्य न स्याद्देहप्रभजनः ॥ १७ ॥

ரத்தவெளியேற்யறம், விரேசன சிகித்ஸை இவற்றால் சூன்யமான குடல் உள்ள குட்டநோயாளிக்கு, வாயுவானது உடலைக் கெடுக்காமலிருக்க குஷ்டத்தைப்போக்கும் நெய்ப்புப் பொருள்களால் அவ்வப்பொழுது பலம் உண்டாக்க வேண்டும்.

वासामृतानिम्बवरापटोलव्याघ्रीकरंजोदककल्कपकम् ।
सर्पिर्विसर्पज्वरकामलास्रकुष्ठापहं वज्रकमामनन्ति ।। १८।।

**வஜ்ரக கிருதம் :**

ஆடாதோடை, சீந்தில், வேம்பு, திரிபலை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, புங்கு இவற்றின் கஷாயமும், கல்க்கமும் சேர்த்து, நெய் பக்குவம் செய்து, உபயோகிக்க; விஸர்ப்பம், ஜ்வரம், காமாலை, ரத்ததோஷம், குஷ்டம், ஆகியவை நீங்கும். இதற்கு வஜ்ரக கிருதம் என்று பெயர்.

त्रिफलात्रिकटुद्विकण्टकारीकटुकाकुम्भनिकुम्भराजवृक्षैः ।
सवचातिविषाग्निकैः सपाठैः पिचुभागैर्नववज्रदुग्धमुष्टया ।। १९।।

पिष्टैः सिद्धं सर्पिषः प्रस्थमेभिः क्रूरे कोष्ठे स्नेहनं रेचनं च ।
कुष्ठश्वित्रप्लीहवर्ध्माश्मगुल्मान् हन्यात्कृच्छ्रांस्तन्महावज्रकाख्यम् ।।२०।।

**மஹாவஜ்ரக கிருதம் :**

த்ரிபலை, த்ரிகடு, கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, கடுகரோஹிணீ, சிவதை, நாகதந்தீ, சரக்கொன்றை, வசம்பு, அதிவிடயம், கொடிவேலி, வட்டத்திருப்பி இவற்றை வகைக்கு கால்பலம் எடுத்து கல்க்கமாக்கி 1 பலம் புதிய கள்ளிப்பால் சேர்த்து, நெய் 1 பிரஸ்தம் சேர்த்து *பக்குவம் செய்ய வேண்டும். இது கற்குடலுள்ளவருக்கு நெய்ப்பும், விரசனமும் உண்டாக்கும். குஷ்டம், வெண்குஷ்டம், மண்ணீரல் வீக்கம், அண்டவீக்கம், கல்லடைப்பு, குன்மம், ஆகிய கடினமான நோய்களையும் நீக்கும். இதற்கு மஹா வஜ்ரகம் எனப் பெயர்.

**குறிப்பு:** நெய்க்கு 4 பங்கு நீர் சேர்த்து பக்குவம் செய்ய வேண்டும் என அருணதத்தர் கூறுகிறார்.

दन्त्याढकमपां द्रोणे पक्त्वा तेन घृतं पचेत् ।
धामार्गवपले पीतं तदूर्ध्वाधो विशुद्धिकृत् ।। २१ ।।

4 பிரஸ்தம் நாகதந்தியை 16 பிரஸ்த நீரிலிட்டுக் கஷாயமாக்கி யானைப்பீர்க்கின் கல்க்கம் 1 பலமும், நெய்யும் கலந்து பக்குவம் செய்து உட்கொள்ள வாந்தியும், விரேசனமும் உண்டாகும்.

குறிப்பு: நெய் 1 பிரஸ்தம் எனக் கொள்ளலாம்.

आवर्तकीतुलां द्रोणे पचेदष्टांशशेषितम् ।
तन्मूलैस्तत्र निर्यूहे घृतप्रस्थं विपाचयेत् ।। २२ ।।

पीत्वा तदेकदिवसान्तरितं सुजीर्णे-
भुंजीत कोद्रवमसंस्कृतकांजिकेन ।
कुष्ठं किलासमपचीं च विजेतुमिच्छन्-
इच्छन् प्रजां च विपुलां ग्रहणं स्मृतिं च ।। २३।।

100 பலம் [1]சடைச்சியை 16 [2]பிரஸ்த ஜலத்திலிட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாய் குறுக்கிக் கொள்ளவேண்டும். அந்தக் கஷாயத்துடன், சடைச்சி வேர்க் கல்கம் சேர்த்து நெய் 1 பிரஸ்தம் பக்குவம் செய்து கொள்ளவேண்டும். இந் நெய்யை ஒன்றுவிட்டு ஒரு நாள் உட்கொள்ள வேண்டும். நெய் ஜீரண மானதும் தாளிதம் செய்யாத காடியுடன் கேழ்வரகு உணவு உட்கொள்ளவேண்டும். இதனால் குஷ்டம், வெண்குஷ்டம், அபசீ ஆகியவை நீங்கும். மேலும் அதிக மக்கள், அறியும் சக்தி, நினைவாற்றல் ஆகியவற்றையும் அடைவர்.

குறிப்பு: 1. இடம்புரி என்றும் பேய்ச்சுரை என்றும் கூறுவர்.

2. 32 பிரஸ்த நீர் என இந்து கூறுகிறார்.

यतेर्लेलीतकवसा क्षौद्रजातीरसान्विता ।
कुष्ठघ्नी समसर्पिर्वा सगायत्र्यसनोदका ॥ २४ ॥

பெண் சேர்க்கையின்றி இருப்பதுடன் தேனும், [1]ஜாதி மல்லிகையின் சாறும் கலந்தாவது சம அளவு நெய்யும், கருங்காலி, வேங்கை இவற்றின் கஷாயமும் கலந்தாவது, [1]மலைப்பாம்பின் மாம்ஸ எண்ணெய் உட்கொள்ள குஷ்டம் நீங்கும்.

குறிப்பு: 1. நெல்லிக்கனிச் சாறு என்று சிலரும், போளம் என்று சிலரும் உரை கொள்வர்.

2. சௌவர்ச்சல உப்பின் எண்ணெய் என்று சிலரும், கந்தகம் என்று சிலரும் உரை கொள்வர்.

शालयोः यवगोधूमाः कोरदूषाः प्रियंगवः ।
मुद्गा मसूरास्तुवरी तिक्तशाकानि जांगलम् ॥ २५ ॥

वरापटोलखदिरनिम्बारुष्करयोजितम् ।
मद्यान्यौषधगर्भाणि मथितं चेन्दुराजिमत् ॥ २६ ॥

अन्नपानं हितं कुष्ठे न त्वम्ललवणोषणम् ।
दधिदुग्धगुडानूपतिलमाषांस्त्यजेत्तराम् ॥ २७ ॥

**ஏற்ற உணவும், ஏற்கா உணவும் :**

திரிபலை, பேய்ப்புடல், கருங்காலி, வேம்பு, சேங்கொட்டை ஆகியவற்றுடன் சாலியன்னம், யவை, கோதுமை, வரகு, தினை, பயறு, காராமணி, துவரை, கசப்புச் சுவையுள்ள காய்வகை, வறண்ட தேசத்துப் பிராணியின் மாமிஸம் ஆகிய உணவும், ஏற்ற மருந்துப் பொருள்கள் கலந்து தயாரான மதுவகைகள், கார்போகு அரிசி கலந்த மோர் ஆகிய பானமும் குஷ்ட நோயாளிக்கு

ஏற்றனவாகும். குஷ்ட நோயில் புளிப்பு, உவர்ப்பு, காரம் ஆகிய சுவையுள்ள பொருள்கள் உணவில் தவிர்க்கப்பட வேண்டும். தயிர், பால், வெல்லம், சதுப்பு நிலப் பிராணியின் மாமிஸம், எள், உளுந்து ஆகியவற்றை விசேஷமாக நீக்கவேண்டும்.

पटोलमूलत्रिफलाविशालाः पृथक्त्रिभागापचितत्रिशाणाः ।
स्युस्त्रायमाणा कटुरोहिणी च भागार्धिके नागरपादयुक्ते ॥ २८॥

एतत्पलं जर्जरितं विपक्वं जले पिबेद्दोषविशोधनाय ।
जीर्णे रसैर्धन्वमृगद्विजानां पुराणशाल्योदनमाददीत ॥ २९ ॥

कुष्ठं किलासं ग्रहणीप्रदोषमर्शांसि कृच्छ्राणि हलीमकं च ।
षड्रात्रियोगेन निहन्ति चैतद् हृद्बस्तिशूलं विषमज्वरं च ॥३०॥

பேய்ப்புடல் வேர், தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய் தும்மட்டிவேர் இவை வகைக்கு 8/3 சாணம், துராய்ப்பூண்டு 1 சாணம், கடுகரோஹிணீ 1 சாணம், சுக்கு 2/3 சாணம் இவ்வாறு ஒரு பலம் சரக்குகளைத் துண்டு களாக்கி ஜலத்திலிட்டுப் பக்குவம் செய்து தோஷங்கள் நீங்குவதற்காகப் பருக வேண்டும். இது ஜீரணமான பின் வறண்ட பிரதேசத்தின் மிருகம் மற்றும் பக்ஷி இவற்றின் மாமிஸத்துடன் பழைய சாலியன்னம் உண்ண வேண்டும். இவ்வாறு 6 நாட்கள் பிரயோகிக்க வேண்டும். குஷ்டம், கிலாஸகுஷ்டம் என்னும் வெண்குட்ட வகை, கிராணி தோஷம், மூலம், சிறுநீர்த்தடை, ஹலீமகம் என்னும் பாண்டு நோய்ப் பிரிவு, இருதய வலி, மூத்ரப்பை வலி, முறை ஜுரம், ஆகியவற்றைப் போக்கும்.

**குறிப்பு:** சாணம்=1/16 பலம், வீசம் = 1/16 பலம் இந்த யோகத்தில் நீரின் அளவு கூறப்படாவிடினும்,

பொதுப் பரிபாஷைப்படி 16 மடங்கு நீர் சேர்த்து நாலில் ஒன்றாய் வற்றவைத்து வடிக் கட்டி உபயோகிக்க வேண்டும் என்பது தெளிவு.

विडंगसारामलकाभयानां पलत्रयं त्रीणि पलानि कुम्भात् ।
गुडस्य च द्वादश, मासमेष जितात्मनां हन्त्युपयुज्यमानः ॥ ३१॥

कुष्ठश्वित्रश्वासकासोदरार्शोमेहप्लीहग्रन्थिरुग्जन्तुगुल्मान् ।
सिद्धं योगं प्राह यक्षो मुमुक्षोर्भिक्षोः प्राणान् माणिभद्रः- किलेमम् ॥३२॥

*மாணிபத்ரம் :*

வாய்விளங்கம், நெல்லிக்காய், கடுக்காய் இவை வகைக்கு *1* பலம், சிவதை *3* பலம், வெல்லம் *12* பலம், இவற்றைக் கலந்து புலனடக்கத்துடன் ஒரு மாதம் உபயோகிக்க குஷ்டம் வெண்குட்டம், சுவாசம், இருமல், மகோதரம், மூலம், பிரமேகம், மண்ணீரல் வீக்கம், முடிச்சுவலி, கிருமிகள், குன்மம் ஆகியவற்றைப் போக்கும். மரிக்கும் தருவாயிலிருந்த ஒரு பிக்ஷுவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக மணிபத்ரன் என்ற யக்ஷர் இந்த ஸித்த முறையைக் கூறினார்.

**குறிப்பு:** *18* பலம் வெல்லம் சேர்க்கவேண்டும் என்று சிலர் கூறுவதாக இந்து குறிப்பிடுகிறார்.

*2.* வெல்லத்தைப் பாகு வைத்து சூரணங்களைக் கலந்து லேஹியமாக்கிக் கொள்வது சம்பிர தாயம். வடகமாக்கி உபயோகிக்கவேண்டும் என்றும் கூறுவர்.

*3.* இங்கு கூறப்பெற்ற மருந்தின் மொத்த அளவு ஒரு மாத உபயோகத்திற்குப் போதுமானதாகும்.

भूनिम्बनिम्बत्रिफलापद्मकातिविषाकणाः ।
मूर्वापटोलीद्विनिशापाठातिक्तेन्द्रवारुणीः ॥ ३३ ॥

सकलिंगवचास्तुल्या द्विगुणाश्च यथोत्तरम् ।
लिह्याद्दन्तीत्रिवृद्ब्राह्मीश्चूर्णिता मधुसर्पिषा ॥ ३४ ॥

कुष्ठमेहप्रसुप्तीनां परमं स्यात्तदौषधम् ।

நிலவேம்பு, வேம்பு, திரிபலை, பதிமுகம், அதிவிடயம், திப்பிலி, பெருங்குரும்பை, பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், வட்டத்திருப்பி, கடுகரோஹிணீ, பேயத்தும் மட்டி, வெட்பாலையரிசி, வசம்பு, இவை வகைக்கு ஒரு பங்கு, நாகதந்தி 1 பங்கு, சிவதை 2 பங்கு, பிராம்மீ 4 பங்கு, இவற்றைச் சூரணித்து, தேனும், நெய்யும் கலந்து பருக வேண்டும். குஷ்டம், பிரமேகம், உணர் வின்மை ஆகிய நோய்களில் இம்மருந்து மிகவும் ஏற்ற தாகும்.

वराविडंगकृष्णा वा लिह्यात्तैलाज्यमाक्षिकैः ॥ ३५ ॥

அல்லது திரிபலை, வாய்விளங்கம், திப்பிலி இவற்றை எண்ணெய், நெய், தேன் ஆகியவற்றுடன் கலந்து பருகலாம்.

काकोदुम्बरिकावेल्लनिम्बाब्दव्योषकल्कवान् ।
हन्ति वृक्षकनिर्यूहः पानात्सर्वांस्त्वगामयान् ॥ ३६ ॥

பேயத்தி, வாய்விளங்கம், வேம்பு, கோரைக்கிழங்கு, த்ரிகடு இவற்றின் கல்கம் கலந்த வெட்பாலைக் கஷாயத்தை பருக எல்லா சரும நோய்களும் நீங்கும்.

कुटजाग्निनिम्बनृपतरुखदिरासनसप्तपर्णनिर्यूहे ।
सिद्धा मधुघृतयुक्ताः कुष्ठघ्नीर्भक्षयेदभयाः ॥ ३७ ॥

வெட்பாலை, கொடிவேலி, வேம்பு, சரக்கொன்றை, கருங்காலி, வேங்கை, ஏழிலம்பாலை இவற்றின் கஷாயத்தில் கடுக்காயை வேகவைத்து தேனும், நெய்யும் கலந்து உட்கொள்ள குஷ்ட நோய் நீங்கும்.

दार्वीखदिरनिम्बानां त्वक्काथः कुष्ठसूदनः ॥

மரமஞ்சள், கடுக்காய், வேம்பு இவற்றின் பட்டைகளைக் கஷாயமிட்டுப் பருக குஷ்டம் நீங்கும்.

निशोत्तमानिम्बपटोलमूलतिक्तावचालोहितयष्टिकाभिः ।
कृतः कषायः कफपित्तकुष्ठं सुसेवितो धर्म इवोच्छिनत्ति ॥३८॥

एभिरेव च शृतं घृतमुख्यं भेषजैर्जयति मारुतकुष्ठम् ॥
कल्पयेत्खदिरनिम्बगुडूचीदेवदारुरजनीः पृथगेवम् ॥ ३९ ॥

*நிசோத்தமாதி கஷாயம் :*

நன்கு அனுஷ்டிக்கப்பட்ட தர்மத்தால் குஷ்டம் நீங்குவது போல மஞ்சள், த்ரிபலை, வேம்பு, பேய்ப்புடல் வேர், கடுகரோஹிணீ, வசம்பு, மஞ்சிட்டி இவற்றைக் கஷாயமிட்டுப் பருக, கப-பித்தங்களால் உண்டான குஷ்டம் நீங்கும். இங்கு கூறப்பெற்ற மஞ்சள் முதலிய இம்மருந்துப் *பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப் பட்ட பசுநெய்யைப்பருக, வாதத்தால் உண்டான குஷ்டம் நீங்கும். இவ்வாறே கருங்காலி, வேம்பு, சீந்தில், தேவதாரு, மஞ்சள் இவற்றுள் ஒன்றுடன் நெய் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகிக்கலாம்.

குறிப்பு: *இம்மருந்துப் பொருள்களின் கஷாயமும் கல்க்கமும் சேர்த்து நெய் பக்குவம் செய்யவேண்டுமென இந்து கூறுகிறார்.

पाठादार्वीवह्निघुणेष्टाकटुकाभिर्मूत्रं
युक्तं शक्रयवैश्चोष्णजलं वा ।
कुष्ठी पीत्वा मासमरुक् स्याद्गुदकीली
मेही शोफी पाण्डरजीर्णी कृमिमांश्च ॥ ४० ॥

வட்டத்திருப்பி, மரமஞ்சள், கொடிவேலி, அதிவிடயம், கடுகரோஹிணீ, வெட்பாலையரிசி இவற்றை பசுநீர் அல்லது வெந்நீரில் கலந்து குஷ்டம், மூல நோய், பிரமியம், வீக்கம் பாண்டு, அஜீர்ணம், கிருமி ஆகிய நோயுள்ளவர்கள் ஒரு மாதம் பருக நோய் நீங்கும்.

लाक्षादन्तीमधुरसवराद्वीपिपाठाविडंग-
प्रत्यक्पुष्पीत्रिकटुरजनीसप्तपर्णाटरूषम् ।
रक्ता निम्बं सुरतरु कृतं पञ्चमूल्यौ च चूर्णं
पीत्वा मासं जयति हितभुग्गव्यमूत्रेण कुष्ठम् ॥ ४१ ॥

அரக்கு, நாகதந்தீ, பெருங்குரும்பை, திரிபலை, கொடிவேலி, வட்டத்திருப்பி, வாய்விளங்கம், நாயுருவி, திரிகடு, மஞ்சள், ஏழிலம்பாலை, ஆடாதோடை, மஞ்சிட்டி, வேம்பு, தேவதாரு, சிறுபஞ்சமூலம், மகாபஞ்சமூலம் இவற்றின் சூரணத்தைப் பசுநீருடன் கலந்து ஒரு மாதம் உட்கொள்வதுடன் இதமான உணவும் உட்கொள்ள; குஷ்டம் நீங்கும்.

निशाकणानागरवेल्लतोवरं सवह्नितार्प्यं क्रमशो विवर्धितम् ।
गवाम्बुपीतं वटकीकृतं तथा निहन्ति कुष्ठानि सुदारुणान्यपि ॥४२॥

மஞ்சள், திப்பிலி, சுக்கு, வாய்விளங்கம், நீரடிமுத்து, கொடிவேலி, பொன்நிமிளை ஆகியவற்றை அடுத்தடுத்து ஒரு பங்கு அதிகரித்த அளவாக எடுத்துக்கொண்டு, பசு

நீருடன் கலந்து அல்லது வடகம் செய்து உபயோகிக்க; முற்றிய குஷ்டங்களையும் நீக்கும்.

குறிப்பு: ★ மஞ்சள் 1 பங்கு, திப்பிலி 2 பங்கு, சுக்கு 3 பங்கு, வாய்விளங்கம் 4 பங்கு, நீரடிமுத்து 5 பங்கு, கொடி வேலி 6 பங்கு, பொன்நிமிளை 7 பங்கு என்ற அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

त्रिकटूत्तमातिलारुष्कराज्यमाक्षिकसितोपलाविहिता ।
गुलिका रसायनं स्यात् कुष्ठजिच्च वृष्या च सप्तसमा ।।४३।।

**ஸப்தஸம குளிகை :**

த்ரிகடு, திரிபலை, எள், சேங்கொட்டை, நெய், தேன், சர்க்கரை, இவற்றைச் சம அளவு கலந்து குளிகை செய்து உபயோகிக்க குஷ்டம், நீங்கும். இளமையை நீடிக்கச் செய்யும். ஆண்மையை உண்டாக்கும். இது ஸப்தஸம (ஏழு சரக்குகள் சம அளவு உள்ள) குளிகை எனப்படும்.

குறிப்பு: திரிகடு, திரிபலை இவற்றின் சரக்குகளை தனித்தனியாகக் கொண்டால் எண்ணிக்கை பதி னொன்று ஆகிறது. எனினும் த்ரிகடு, திரிபலை ஆகிய சொற்களால் குறிப்பிடப்படுவதை ஒவ்வொன்று எனக் கொள்வதால் 7 என்ற எண் கிடைப்பதாகும்.

चन्द्रशकलाग्निरजनीविडगंतुवरास्थ्यरुष्करत्रिफलाभिः ।
वटका गुडांशक्लृप्ताः समस्तकुष्ठानि नाशयन्त्यभ्यस्ताः।।४४।।

**சந்த்ர சகலாதி வடகம் :**

கார்போகு அரிசி, கொடிவேலி, மஞ்சள், வாய்விளங்கம், நீரடி முத்து விதை, சேங்கொட்டை, த்ரிபலை, இவற்று

டன் வெல்லம் சேர்த்து வடகம் செய்து தொடர்ந்து உபயோகிக்க; எல்லா குஷ்டங்களும் நீங்கும்.

குறிப்பு: வெல்லத்தின் அளவு குறிப்பிட்டு கூறப்படாத வடகயோகத்தில் பெரும்பாலும் சூர்ணத்திற்கு 3 மடங்கு வெல்லம் சேர்ப்பது சம்பிரதாயம் என்பது கவனிக்கத்தக்கது.

विडगंभल्लातकबाकुचीनां सद्वीपिवाराहिहरीतकीनाम् ।
सलांगलीकृष्णतिलोपकुल्या गुडेन पिण्डी विनिहन्ति कुष्ठम् ।।४५।।

வாய்விளங்கம், சேங்கொட்டை, கார்போகு அரிசி, கொடிவேலி, பன்றிமோந்தான் கிழங்கு, கடுக்காய், கலப்பங்கிழங்கு, கறுப்பு எள், திப்பிலி இவற்றுடன் வெல்லம் கலந்து வடகம் செய்து உட்கொள்ள குஷ்டம் நீங்கும்.

शशांङ्कलेखा सविडंगसारा सपिप्पलीका सहुताशमूला ।
सायोमला सामलका सतैला कुष्ठानि कृच्छ्राणि निहन्ति लीढा ।।४६।।

கார்போகு அரிசியை வாய்விளங்கச் சத்து, திப்பிலி, கொடிவேலி வேர், அயச்சிட்டம், நெல்லிக்காய் எண்ணெய் இவற்றுடன் உட்கொள்ள கடுமையான குஷ்டங்களும் நீங்கும்.

1. இவை எல்லாவற்றுடனும் கலந்து உட்கொள்ள வேண்டுமென இந்து கூறுகிறார்.

पथ्यातिलगुडैः पिण्डी कुष्ठं सारुष्करैर्जयेत् ।
गुडारुष्करजन्तुघ्नसोमराजीकृताऽथवा ।। ४७ ।।

கடுக்காய், எள், வெல்லம், இவற்றுடன் சேங்கொட்டை கலந்தாவது வெல்லம், சேங்கொட்டை, வாய்விளங்கம்,

கார்போகு அரிசி ஆகியவற்றாலாவது வடகம் செய்து உட்கொள்ள குஷ்டம் நீங்கும்.

विडंगाद्रिजतुक्षौद्रसर्पिष्मत्खादिरं रजः ।
किटिभश्वित्रदद्रुघ्नं खादेन्मितहिताशनः ॥ ४८ ॥

கருங்காலித் தூளுடன் வாய்விளங்கம், சிலாஜது, தேன், நெய், ஆகியவை கலந்து உட்கொள்ள கிடிபகுஷ்டம், வெண்குஷ்டம், தத்ருகுஷ்டம் ஆகியவை நீங்கும். குறைந்த அளவில் இதமான உணவு கொள்ளவேண்டும்.

குறிப்பு: கிடிபகுஷ்டம், வெண்குஷ்டம், தத்ருகுஷ்டம் இவற்றின் விளக்கத்தை, நிதானஸ்தானம் 14-வது அத்தியாயத்தில் காண்க.

सितातैलकृमिघ्नानि धात्र्ययोमलपिप्पलीः ।
लिहानः सर्वकुष्ठानि जयत्यतिगुरूण्यपि ॥ ४९ ॥

சர்க்கரை, எண்ணெய், வாய்விளங்கம், நெல்லிக்காய், அயச்சிட்டம், திப்பிலி இவற்றைக் கலந்து உட்கொள்ள எல்லாவித குஷ்டங்களையும், சிகித்ஸைக்கு மிகவும் கடினமாயிருப்பினும் நீக்கும்.

मुस्तं व्योषं त्रिफला मंजिष्ठा दारु पंञ्चमूले द्वे ।
सप्तच्छदनिम्बत्वक् सविशाला चित्रको मूर्वा ॥ ५० ॥

चूर्णं तर्पणभागेर्नवभिः संयोजितं समध्वंशम् ।
नित्यं कुष्ठनिबर्हणमेतत्प्रायोगिकं खादन् ॥ ५१ ॥

श्वयथुं सपाण्डुरोगं श्वित्रं ग्रहणीप्रदोषमर्शांसि ।
वर्ध्मभगन्दरपिडकाकण्डूकोठापचीर्हन्ति ॥ ५२ ॥

கோரைக்கிழங்கு, த்ரிகடு, திரிபலை, மஞ்சிட்டி, தேவ தாரு, [1]மகாபஞ்சமூலம், [2]சிறுபஞ்சமூலம், ஏழிலம் பாலைப்பட்டை, வேப்பம்பட்டை, தும்மட்டி, கொடி வேலி, பெருங்குரும்பை இவற்றின் சூர்ணத்துடன், 9 பங்கு யவையின் சத்துமா கலந்து தேனுடன் எப்பொழுதும் உட்கொள்ளலாம். இது குஷ்டத்தைப்போக்கும். மேலும் வீக்கம், பாண்டு, வெண்குஷ்டம், கிராணி, மூலம், அண்டவிருத்தி, பவுத்ரம், கட்டி, நமைச்சல், கொப்புளம், அபசீ (விரைவில் பழுக்காத கண்டமாலைக்கட்டி) ஆகிய நோய்களைப் போக்கும்.

**குறிப்பு:** 1,2. மகாபஞ்சமூலம், சிறுபஞ்சமூலம், இவற்றின் விளக்கத்தை ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 6-ல் காண்க.

रसायनप्रयोगेण तुवरास्थीनि शीलयेत् ।
भल्लातकं बाकुचिकां वह्निमूलं शिलाह्वयम् ॥ ५३ ॥

நீரடிமுத்து, சேங்கொட்டை, கார்போகு அரிசி, கொடி வேலி சிலாஜது ஆகியவற்றை *ரசாயன முறைப்படி கைக்கொள்ளலாம்.

**குறிப்பு:** *இவற்றை ரசாயன முறைப்படி உபயோகிக்கும் வகை உத்தரஸ்தானம் 39-வது அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது.

इति दोषे विजितेऽन्तस्त्वक्स्थे शमनं बहिः प्रलेपादि हितम् ।
तीक्ष्णालेपोत्क्लिष्टं कुष्ठं हि विवृद्धिमेति मलिने देहे ॥ ५४ ॥

இவ்வாறு உட்புறம் உள்ள தோஷங்கள் ஜெயிக்கப்பட்ட நிலையில் சருமத்தில் தோஷங்கள் தங்கிய நிலையில்

சமனம் செய்ய *பூச்சு முதலிய வெளிப்புறச் சிகித்ஸை ஏற்றதாகும். தோஷங்கள் உள்தங்கிய நிலையில் தீக்ஷ்ண மான பூச்சுக்களால் குஷ்டம் கிளர்ச்சியுற்று வளர்ச்சியையே அடையும்.

குறிப்பு: *பூச்சு முதலிய என்பதால் குளித்தல் முதலியவை கூறப்படுகின்றன. ஆகையால் உட்புறம் சுத்தமான பின்னரே வெளிப்புறச் சிகித்ஸை செய்ய வேண்டும் என்பது கருத்து.

स्थिरकठिनमण्डलानां कुष्ठानां पोटलैर्हितः स्वेदः ।
स्विन्नोत्सन्नं कुष्ठं शस्त्रैर्लिखितं प्रलेपनैर्लिम्पेत् ॥ ५५ ॥

நிலைபெற்றவையும், கடினமானவையும், வட்ட மானவையுமான குஷ்டங்களுக்கு பொட்டலங்களால் வியர்வை உண்டாக்கவேண்டும். வியர்வை உண்டாக்கப் பட்டபின் எழும்பிய நிலையில் உள்ள குஷ்டத்தை சஸ்திரங்களால் கீறியபின் பூச்சுக்களால் பூசவேண்டும்.

குறிப்பு: *வறட்சியுள்ள மருந்து முடிச்சுக்களால் என இந்து கூறுகிறார்.

येषु न शस्त्रं क्रमते स्पर्शेन्द्रियनाशनेषु कुष्ठेषु ।
तेषु निपात्यः क्षारो रक्तं दोषं च विस्राव्यम् ॥ ५६ ॥

சஸ்திரப் பிரயோகத்திற்குத் தகுதியற்றதும், பரிச உணர்ச்சி நீங்கியதுமான குஷ்டத்தில் ரத்தம், தோஷங்கள் ஆகியவற்றை வெளியேற்றியபின் க்ஷாரத்தை உப யோகிக்க வேண்டும்.

लेपोऽतिकठिने परुषे सुप्ते कुष्ठे स्थिरे पुराणे च ।
पीतागदस्य कार्यो विषैः समन्त्रोऽगदैश्चानु ॥ ५७ ॥

மிகக் கடினத்தன்மை, மிக வறட்சி, உணர்ச்சியின்மை ஆகிய குணமுள்ளவையும், நிலைபெற்றவையும், நாட்பட்டவையுமான குஷ்டங்களில் விஷத்தை அகற்றும் மருந்து உட்கொண்டவர்களுக்கு விஷப் பொருள்களால் பூச வேண்டும். அடுத்து விஷப் பிரயோகத்திற்குப் பிறகு உபயோகிக்கத்தக்க மருந்துகளைப் மந்திரங்களை உச்சரித்து பூசவேண்டும்.

குறிப்பு: விஷ ப்ரயோகத்தால் தீங்கு ஏற்படாமலிருப்பதற்காக விஷத்தைப்போக்கும் மருந்துகளை முன்னரே உட்கொள்ளும்படி கூறப்படுகிறது. வெளியில் பூசப்பட்ட விஷத்தின் தீமை நீங்குவதற்காக அடுத்து மந்திர ப்ரயோகங்களும் விஷத்தைப் போக்கும் பொருள்களின் பூச்சும் கூறப்படுகின்றன.

स्तब्धाति सुप्तसुप्तान्यस्वेदनकण्डुलानि कुष्ठानि ।
घृष्टानि शुष्कगोमयफेनकशस्त्रैः प्रदेह्यानि ॥ ५८ ॥

தம்பிதம், அதிக உணர்ச்சியின்மை, வியர்வையின்மை, அரிப்பு, ஆகியவை உள்ள குஷ்டநோயில் வறண்டசாணம், கடல்நுரை, சஸ்திரம் இவற்றால் தேய்த்த பின், பூச்சுக்களை பிரயோகிக்காலம்.

मुस्ता त्रिफला मदनं करजं आरग्वधः कलिंगयवाः ।
सप्ताह्वकुष्ठफलिनीदार्व्यः सिद्धार्थकं स्नानम् ॥ ५९ ॥

एष कषायो वमनं विरेचनं वर्णकर स्तथोद्धर्षः ।
त्वग्दोषकुष्ठशोफप्रबाधनः पाण्डुरोगघ्नः ॥ ६० ॥

கோரைக்கிழங்கு, திரிபலை, மலங்காரக்காய், புங்கு, சரக்கொன்றை, வெட்பாலையரிசி, ஏழிலம்பாலை,

கோஷ்டம், ஞாழல், மரமஞ்சள், இவற்றின் தூள் ஸித்தார்த்தகம் என்னும் ஸ்நானப்பொடியாகும். வாந்தி, விரேசனம் நிறம் ஆகியவை உண்டாக்க இதை கஷாய மாக உபயோகிக்கலாம். பூசித்தேய்க்க சரும தோஷம், குஷ்டம், வீக்கம், பாண்டு *ஆகியவற்றை நீக்கும்.

குறிப்பு: *சரகத்தில் கோஷ்டமும், ஞாழலும் கூறப்பட வில்லை.

करवीरनिम्बकुटजाच्छम्याकाचित्रकाचमूलानाम् ।
मूत्रे दर्वीलेपी क्वाथौ लेपेन कुष्ठघ्नः ॥ ६१ ॥

அலரி, வேம்பு, வெட்பாலை, சரக்கொன்றை, கொடி வேலி, இவற்றின் வேரை *பசு நீரில் கொதிக்கவைத்து, கரண்டியில் ஒட்டும் பதமாக சுண்டவைத்து பூச குஷ்டம் நீங்கும்.

குறிப்பு: *4 மடங்கு பசு நீரில் கொதிக்கவைக்க வேண்டுமென அருணதத்தர் கூறுகிறார்.

श्वेतकरवीरमूलं कुटजकरंजात्फलं त्वचो दार्व्याः ।
सुमनःप्रवालयुक्तो लेपः कुष्ठापहः सिद्धः ॥ ६२ ॥

வெள்ளை அலரி வேர், வெட்பாலையரிசி, புங்கன் விதை, மரமஞ்சள் தோல், மல்லிகைத்துளிர், இவற்றால் பூச்சு தயாரித்து உபயோகிக்க குஷ்டம் உறுதியாக நீங்கும்.

शैरीषी त्वक् पुष्पं कार्पास्या राजवृक्षपत्राणि ।
पिष्टा च काकमाची चतुर्विधः कुष्ठहा लेपः ॥ ६३ ॥

வாகைப்பட்டை, பருத்திப்பூ, சரக்கொன்றை இலை, மனித்தக்காளி இவை நான்கும் (தனித்தனியே) குஷ்டத் தைப் போக்கும் பூச்சுக்களாகும்.

व्योषसर्षपनिशागृहधूमैर्यावशूकपटुचित्रककुष्ठैः ।
कोलमात्रगुटिकाऽर्धविषांशाश्वित्रकुष्ठहरणो वरलेपः ॥ ६४॥

த்ரிகடு, கடுகு, மஞ்சள், ஒட்டடை, யவக்ஷாரம், இந்துப்பு, கொடிவேலி, கோஷ்டம் இவற்றுடன் அரைப் பங்கு வத்ஸநாபி சேர்த்து, இலந்தையளவு செய்யப்பட்ட குளிகை, வெண்குட்டம், குட்டம் ஆகியவற்றைப் போக்கு கின்ற சிறந்த பூச்சாகும்.

निम्बं हरिद्रे सुरसं पटोलं कुष्ठाश्वगन्धे सुरदारु शिग्रुः ।
ससर्षपं तुम्बरुधान्यवन्यं चण्डा व चूर्णानि समानिकुर्यात् ॥ ६५॥

तैस्तक्रपिष्टैः प्रथमं शरीरं तैलाक्तमुद्वर्तयितुं यतेत ।
तथाऽस्य कण्डूः पिटिकाः सकोठाः कुष्ठानि शोफाश्च शमं व्रजन्ति॥६६॥

***நிம்பாதி சூர்ணம் :***

உடலில் முன்னரே எண்ணெய் பூசிக்கொண்டவருக்கு வேம்பு, மஞ்சள், மரமஞ்சள், துளஸி, பேய்ப்புடல், கோஷ்டம், அமுக்கிராக்கிழங்கு, தேவதாரு, முருங்கை, கடுகு, *தூம்பூணரிசி, மல்லி, நீர்க்கோரைக்கிழங்கு, சண்டக்கிழங்கு இவைகளை சம அளவு எடுத்துச் சூர்ண மாக்கி மோரில் பிசைந்து உடலைத் தேய்க்க, உப யோகிக்க வேண்டும். இதனால் அரிப்பு, கொப்புளம், கோடம் என்னும் தடிப்புக்கள், குஷ்டம், வீக்கம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: *இதற்கு பதிலாக தகரைவிதை சேர்க்கப்படு வதும் உண்டு. பிறகு சூடான நீரில் முழுக வேண்டுமென அருணதத்தர் கூறுகிறார்.

मुस्तामृतासंगकटंकटेरीकासीसकम्पिल्लककुष्ठरोध्राः ।
गन्धोपलः सर्जरसो विडंगं मनःशिलाले करवीरकत्वक् ॥ ६७॥

तैलाक्तगात्रस्य कृतानि चूर्णान्येतानि दद्यादवचूर्णनार्थम् ।
दद्रुः सकण्डूः किटिभानि पामा विचर्चिका चेति तथा न सन्ति ॥६८॥

தைலம் தடவிக்கொண்டவர், கோரைக்கிழங்கு, மயில் துத்தம், மரமஞ்சள், அன்னபேதி, கம்பிப்பாலை, கோஷ்டம், வெள்ளிலோத்தி, கந்தகம், மருந்துவெள்ளை, வாய் விளங்கம், மனோசிலை, தாளகம், அலரிப்பட்டை, இவற்றின் சூரணத்தைத் தூவ உபயோகிக்கவேண்டும். இதனால் [1] தத்ருகுஷ்டம், அரிப்பு, கிடபகுஷ்டம், பாமாகுஷ்டம், விசர்க்சிகா குஷ்டம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. தத்ரு முதலிய குஷ்டவகைகள் நிதானம் 14-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

2. आसङ्ग என்ற மூலச்சொல் பெருங்குரும்பையைக் குறிப்பிடுவதாக அருணதத்தர் கூறுவதாக சில பதிப்புக்களில் காணப்படுகிறது.

अमृतासङ्ग என்பதற்கு சீந்திலும், ரஸாஞ்சனமும் என்று பொருள் கூறலாமென இந்து கூறுகிறார்.

स्नुग्गण्डे सर्षपात्कल्कः कुकूलानलपाचितः ।
लेपाद्विचर्चिकां हन्ति रागवेग इव त्रपाम् ॥ ६९ ॥

கடுகை அரைத்து கள்ளித்தண்டில் வைத்து உமித் தீயால் பக்குவம் செய்து பூச ஆசை வெறியானது வெட்கத்தை அகற்றுவதுபோல விசர்சிக குஷ்டத்தை அகற்றும்.

मनःशिलाले मरिचानि तैलमार्कं पयः कुष्ठहरः प्रदेहः ।
तथा करञ्जप्रपुनाटबीजं कुष्ठान्वितं गोसलिलेन पिष्टम् ॥७०॥

மனோசிலை, தாளகம், மிளகு, *எண்ணெய், எருக்கம் பால் இவற்றையாவது புங்கன்விதை, தகரைவிரை, கோஷ்டம் இவற்றை பசுநீருடனாவது கலந்துபூச குஷ்டம் நீங்கும்.

குறிப்பு: *இங்கு எண்ணெய் என்பது கடுகெண்ணெயைக் குறிக்கும் என ஸ்ரீகண்டர், சிவதாஸர் ஆகியோர் கூறு கின்றனர்.

गुग्गुलुपरिचविडंगैः सर्षपकासीससर्जरसमुस्तैः ।
श्रीवेष्टकालगन्धैर्मनःशिलाकुष्ठकम्पिल्लैः ॥ ७१ ॥

उभयहरिद्रासहितैश्चाक्रिकतैलेन मिश्रितैरेभिः ।
दिनकरकराभितप्तैः कुष्ठं घृष्टं च नष्टं च ॥ ७२ ॥

குக்கில், மிளகு, வாய்விளங்கம், கடுகு, அன்னபேதி, மருத்துவெள்ளை, கோரைக்கிழங்கு, திருவட்டப்பிசின், தாளகம், கந்தகம், மனோசிலை, கோஷ்டம், கம்பிப்பாலை, மஞ்சள், மரமஞ்சள், இவற்றின் தூளை [1]சக்ர தைலத்துடன் கலந்து சூரிய கிரணங்களால் சூடாக்கி தேய்க்க குஷ்டம் நீங்கும்.

குறிப்பு: 1. செக்கிலிருந்து அப்பொழுதே எடுக்கப்பட்ட எண்ணெய் சக்ர தைலம் என அருணதத்தர் கூறு கிறார்.

2. நீண்டகாலமாக எண்ணெய் பிழிய உபயோகப் பட்டு வரும் செக்கின் பாகத்தை சிறு தூளாக்கி நீரிலிட்டுக் கொதிக்கவைத்து நீரில்மேல் ஆடையாகப் படர்ந்து வருகிற எண்ணெயை வழித்து எடுத்து காய்ச்சி வைக்கப்படுவது சக்ர தைலம் என்றும் சிலர் கூறுவர்.

मरिचं तमालपत्रं कुष्ठं समनःशिलं सकासीसम् ।
तैलेन युक्तमुषितं सप्ताहं भाजने ताम्रे ॥ ७३ ॥

तेनालिप्तं सिध्मं सप्ताहाद् घर्मसेविनोऽपैति ।
मासान्नवं किलासं स्नानेन विना विशुद्धस्य ॥ ७४ ॥

மிளகு, பச்சிலை, கோஷ்டம், மனோசிலை, அன்னபேதி, இவற்றைத் தைலத்துடன் கலந்து செப்புப் பாத்திரத்தில் 7 நாட்கள் வைத்திருந்த பிறகு, உடலில் பூசிக்கொண்டு வெயிலில் காய வைத்தால் ஏழு நாட்களில் ஸித்மகுஷ்ட நோய் நீங்கும். சோதனம் செய்து கொண்டவர் ஸ்னான மின்றி உடலில் எண்ணெயைப் *பூசுவதால் புதியதான வெண்குட்டம் ஒரு மாதத்தில் நீங்கும்.

குறிப்பு: *இந்த முறையிலும் வெளியில் காயவேண்டும் என இந்து கூறுகிறார்.

मयूरकक्षारजलै सप्तकृत्वः परिस्रुतै ।
सिद्धं ज्योतिष्मतीतैलमभ्यंगात्सिध्मनाशनम् ॥ ७५ ॥

7 தடவை வடிக்கட்டப்பட்ட நாயுருவிக் க்ஷார நீரில் வாலுளுவைத் தைலம் சேர்த்துப் பக்குவம் செய்து அப்யங்கம் செய்ய ஸித்மகுஷ்டம் நீங்கும்.

वायसजंघामूलं वमनीपत्राणि मूलकाद्बीजम् ।
तक्रेण भौमवारे लैपः सिध्मापहः सिद्धः ॥ ७६ ॥

குன்றிவேர், *வட்டக் கிலுகிலுப்பையின் இலை, முள்ளங்கி விதை, இவற்றை மோர் விட்டரைத்து செவ்வாய்க்கிழமையன்று பூச ஸித்மகுஷ்டம் நீங்கும்.

குறிப்பு: *वमनी என்ற மூலச்சொல்லுக்கு நீராரை என்று அருணதத்தர் உரை கூறுகிறார்.

जीवन्ती मंजिष्ठा दार्वी कम्पिल्लकं पयस्तुत्थम् ।
एष घृततैलपाकः सिद्धः सिद्धे च सर्जरसः ॥ ७७ ॥

देयः समधूच्छिष्टो विपादिका तैन नश्यति ह्युक्ता ।
चर्मैककुष्ठकिटिमं कृष्ठं शाम्यत्यलसकं च ॥ ७८ ॥

கிரிப்பாலை, மஞ்சட்டி, மரமஞ்சள், கம்பிப்பாலை, [1]பால், துத்தம் இவற்றுடன் நெய்யும், தைலமும் கலந்து பாகம் செய்யவேண்டும். பாகமானபின் மருத்துவெள்ளை, தேன்மெழுகு இவைகளைக் கலக்கவேண்டும். இதை உடலில் பூசிக்கொள்ள [2]விபாதிகாகுஷ்டம், சர்மகுஷ்டம், ஏக குஷ்டம், கிடிபகுஷ்டம், அலஸகுஷ்டம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. பால் என்பதற்கு எருக்கம்பால் என அருண தத்தர் விளக்கம் கூறுகிறார்.

2. விபாதிகா குஷ்டம் முதலியவை நிதான ஸ்தானம் 14-வது அத்தியாயத்தில் விளக்கப் பட்டுள்ளன.

मूलं सप्ताह्वात्वक् शिरीषाश्वमारा-
दर्कान्मालत्याश्चित्रकास्फोतनिम्बात् ।
बीजं कारञ्जं सार्षपं प्रापुनाटं
श्रेष्ठा जन्तुघ्नं त्र्यूषणं द्वे हरिद्रे ॥ ७९ ॥

तैलं तैलं साधितं तैः समूत्रै-
स्त्वग्दोषाणां दुष्टनाडीव्रणानाम् ।
अभ्यंगेन श्लेष्मवातोद्भवानां
नाशायालं वज्रकं वज्रतुल्यम् ॥ ८० ॥

Central Library of Indian Medicine
21 NOV

**வஜ்ரக தைலம் :**

ஏழிலம்பாலைவேர், வாகை, அலரி, எருக்கு, மல்லிகை, கொடிவேலி, வெள்ளெருக்கு, வேம்பு இவற்றின் பட்டை, புங்கன்விதை, கடுகு, தகரைவிதை, த்ரிபலை, வாய் விளங்கம், திரிகடு, மஞ்சள், மரமஞ்சள் இவற்றுடன் பசுநீர் சேர்த்து நல்லெண்ணெயை பக்குவம் செய்து அப்யங்கமாக உபயோகிக்க; வாதகபங்களால் உண்டான சரும நோய்கள் துஷ்டவிரணம், புரை ஆகியவை நாச மடையும். இது *வஜ்ரக தைலம் எனப்படும். வஜ்ராயு தத்துக்கு ஒப்பானது.

*குறிப்பு:* ⋆வஜ்ரம் போல் தடையற்றது என்பது கருத்து.

एरण्डताक्ष्यघननीपकदम्बभार्गीकम्पिल्लवेल्लफलिनीसुरवारुणीभिः ।
निर्गुण्ड्यरुष्करसुराह्वसुवर्णदुग्धाश्रीवेष्टगुग्गुलुशिलापटुतालविश्वैः ॥८१॥

तुल्यस्नुगर्कदुग्धं सिद्धं तैलं स्मृतं महावज्रम् ।
अतिशयितवज्रकगुणं श्वित्रार्शोग्रन्थिमालाघ्नम् ॥ ८२ ॥

*மகாவஜ்ரக தைலம் :*

ஆமணக்கு, ரஸாஞ்சனம், கோரைக்கிழங்கு, பெருங் கடம்பு, கடம்பு, சிறுதேக்கு, கம்பிப்பாலை, வாய்விளங்கம், ஞாழல், பேய்த்தும்மட்டி, நொச்சி, சேங்கொட்டை, தேவதாரு, எருமைக்கள்ளி, திருவட்டப்பிசினி, குக்கில், மனோசிலை, இந்துப்பு, தாளகம், சுக்கு இவற்றைக் கல்க்கமாக்கி எண்ணெயும் அதற்குச் சமஅளவு கள்ளிப் பாலும், எருக்கம் பாலும் சேர்த்து பக்குவம்செய்து உபயோகிக்க; வஜ்ர தைலத்தைவிட நல்ல பயனளிக்கும். இதனால் வெண்குட்டம், மூலம், கிரந்தி, கண்டமாலை ஆகியவை நீங்கும். இது மகாவஜ்ர தைலமெனப்படும்.

कुष्ठाश्वमारभृंगार्कमूत्रस्नुक्क्षीरसैन्धवैः ।
तैलं सिद्धं विषावापमभ्यंगात् कुष्ठजित्परम् ॥ ८३ ॥

கோஷ்டம், அலரி, கரிசாலை, எருக்கு, பசுநீர், கள்ளிப் பால், இந்துப்பு ஆகியவற்றைக் கலந்து எண்ணெய் காய்ச்சி *வத்ஸநாபியை [2]பாத்ரபாகமாக சேர்க்கவேண்டும். அப்பியங்கம் செய்ய விசேஷமாக குஷ்டத்தைப் போக்கும்.

**குறிப்பு:** 1. வத்ஸநாபியை கல்கமாகச் சேர்க்கவேண்டு மென்றும் உரை செய்வதுண்டு.

विष - என்ற மூலச்சொல்லுக்கு எட்டி என்றும் பொருள் கூறுவர்.

2. பக்குவம் செய்து வடிக்கட்டும் பொழுது பாத்ரத்தில் இடப்படுவது பாத்ரபாகம் எனப்படும்.

सिद्धं सिक्थकसिन्दूरपुरतुत्थकतार्क्ष्यजैः ।
कच्छूं विचर्चिकां वाऽऽशु कटुतैलं नियच्छति ॥ ८४ ॥

கடுகெண்ணெயுடன் தேன்மெழுகு, செந்தூரம், குக்கில், துத்தம், ரஸாஞ்சனம், ஆகியவற்றைக் கலந்து பக்குவம் செய்து உபயோகிக்க; குஷ்டம், *விசர்ச்சிகாகுஷ்டம் ஆகியவை விரைவில் நீங்கும்.

**குறிப்பு:** *நிதானஸ்தானம் 14-வது அத்தியாயத்தில் காண்க. தீவிர எரிச்சல் முதலியவற்றுடன் கூடிய கிடிமா குஷ்டமானது கச்சு எனப்படும்.

लाक्षा व्योषं पापुनाटं च बीजं सश्रीवेष्टं कुष्ठसिद्धार्थकाश्च ।
तक्रोन्मिश्रः स्याद्धरिद्रा च लेपो दद्रूपूक्तो मूलकोत्थं च बीजम् ॥८५॥

அரக்கு, திரிகடு, தகரைவிதை, திருவட்டப்பிசின், கோஷ்டம், வெண்கடுகு, மஞ்சள் (இவற்றின் சூரணத்தை)

மோரில் கலக்கிப் பூச; தத்ருகுஷ்டம் நீங்கும். முள்ளங்கி விதையை அரைத்து (மோரில் கலக்கி) லேபம் செய்ய தத்ருகுஷ்டம் நீங்கும்.

चित्रकसोभांजनकौ गुडूच्यपामार्गदेवदारूणि ।
खदिरो धवश्च लेपः श्यामा दन्ती द्रवन्ति च ॥ ८६ ॥

लाक्षारसाजनैलाः पुनर्नवा चेति कुष्ठिनां लेपाः ।
दधिमण्डयुताः पादैः षट्प्रोक्ता मारुतकफघ्नाः ॥ ८७ ॥

கொடிவேலி, செம்முருங்கை ஆகியவற்றையாவது, சீந்தில், நாயுருவி, தேவதாரு ஆகியவற்றையாவது, கருங்காலி, ஞமை ஆகியவற்றையாவது, கருஞ்சிவதை, நாகதந்தீ, எலிச்செவி ஆகியவற்றையாவது, அரக்கு, ரஸாஞ்சனம், ஏலம் ஆகியவற்றையாவது, மூக்கிரட்டையையாவது என்றவாறு சுலோகத்தின் ஒவ்வொரு அடியால் கூறப்பட்ட ஆறு யோகங்களின் சரக்குகளை தயிர்த் தெளிவுடன் கலந்து பூச; வாத -கபங்களால் உண்டான குஷ்டத்தை நீக்கும்.

जलवाप्यलोहकेसरपत्रप्लवचन्दनमृणालानि ।
भागोत्तराणि सिद्धं प्रलेपनं पित्तकफकुष्ठे ॥ ८८ ॥

வெட்டிவேர், கோஷ்டம், அகில், சிறுநாகப்பூ, பச்சிலை, நீர்க்கோரைக்கிழங்கு, சந்தனம், தாமரைத்தண்டு ஆகியவற்றை அடுத்தடுத்து 1 பங்கு அதிகமாக இருக்கும்படி எடுத்து அரைத்து பூச; பித்த கபங்களாலுண்டான குஷ்டம் நீங்கும்.

तिक्तघृतैर्धौतघृतैरभ्यंगो दह्यमानकुष्ठेषु ।
तैलैश्चन्दनमधुकप्रपौण्डरीकोत्पलयुतैश्च ॥ ८९ ॥

எரிச்சல் உள்ள குஷ்டத்தில் கசப்புப் [1]பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யாலும், நீரிலிட்டு [2]கடைந்தெடுக்கப்பட்ட கிருதத்தாலும் அப்பியங்கம் செய்ய வேண்டும். சந்தனம், அதிமதுரம், வறள்தாமரை, நீலோத்பலம் ஆகியவை கலந்த எண்ணெயால் அப்பியங்கம் செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. திக்தக கிருதம், மகாதிக்த கிருதங்களைக் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

2. இங்கு தௌதகிருதம் என்ற மூலச்சொல்லால் சததௌத கிருதத்தையும் குறிப்பிடுவதுண்டு. உருக்கிய நெய்யை பால்மரப்பட்டைகளின் கஷாயத்திலிட்டு கடைந்து எடுக்கவேண்டும். இவ்வாறு பல தடவை செய்யப்பட்டது சததௌத கிருதம் எனப்படும்.

क्लेदे प्रपतति चांगे दाहे विस्फोटके च चर्मदले ।
शीताः प्रदेहसेका व्यधनविरेकौ घृतं तिक्तम् ॥ ९० ॥

[1]கசிவு, உறுப்புச் [1]சிதைவு, எரிச்சல், கொப்புளம், தோல் வெடிப்புக் குஷ்டம் ஆகியவற்றில் குளிர்ச்சியான பூச்சுக்கள், நனைத்தல் ஆகியவையும் ஸிரையைக் குத்துதல், விரேசனம், திக்தகிருதம் பருகுதல் ஆகியவையும் ஏற்றனவாகும்.

குறிப்பு: 1. கசிவு, உறுப்புச் சிதைவு முதலியவற்றிலும் (முன் சுலோகத்தில் கூறப்பட்ட) சந்தனம், அதி மதுரம் முதலியவற்றை எண்ணெயுடன் கலந்து பூச வேண்டும் என்றும் உரை கொள்வதுண்டு.

குறிப்பு: 1. திக்தக கிருதம் மகாதிக்த கிருதங்களைக் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

2. இங்கு தௌதகிருதம் என்ற மூலச்சொல்லால் சததௌத கிருதத்தையும் குறிப்பிடுவதுண்டு. உருக்கிய நெய்யை பால்மரப்பட்டைகளின் கஷாயத்திலிட்டு கடைந்து எடுக்கவேண்டும். இவ்வாறு பல தடவை செய்யப்பட்டது சததௌத கிருதம் எனப்படும்.

குறிப்பு: 1. கசிவு, உறுப்புச்சிதைவு முதலியவற்றிலும் (முன் சுலோகத்தில் கூறப்பட்ட) சந்தனம், அதிமதுரம் முதலியவற்றை எண்ணெயுடன் கலந்து பூச வேண்டும் என்றும் உரை கொள்வதுண்டு.

खदिरवृषनिम्बकुटजाः श्रेष्ठाकृमिजित्पटोलमधुपर्ण्यः ।
अन्तर्बहिः प्रयुक्ताः कृमिकुष्ठनुदः सगोमूत्राः ॥ ९१ ॥

கருங்காலி, ஆடாதோடை, வேம்பு, வெட்பாலை, திரிபலை, வாய்விளங்கம், பேய்ப்புடல், சீந்தில் ஆகிய வற்றைப் பசுநீருடன் சேர்த்து நோயாளிக்கு உள்ளுக்கும், வெளிக்கும் பிரயோகிக்க கிருமியுடன் கூடிய குஷ்டம் நீங்கும்.

वातोत्तरेषु सर्पिर्वमनं श्लेष्मोत्तरेषु कुष्ठेषु ।
पित्तोत्तरेषु मोक्षो रक्तस्य विरेचनं चाग्र्यम् ॥ ९२ ॥

வாயு அதிகரித்த குஷ்டங்களில் நெய்ப்பிரயோகமும், கபம் அதிகரித்த குஷ்டங்களில் வாந்தி சிகித்ஸையும், பித்தம் அதிகரித்த குஷ்டங்களில் ரத்த வெளியேற்றமும்,

விரேசனம் ஆகியவையும் *முதலில் செய்யப்பட வேண்டியவையாகும்.

குறிப்பு: * अग्रे முதலில் என்ற சொல் முற்குறி நிலையையும் குறிப்பிடுவதாகக் கொள்வதுண்டு.

ये लेपाः कुष्ठानां युज्यन्ते निर्हृतास्रदोषाणाम् ।
संशोधिताशयानां सद्यः सिद्धिर्भवति तेषाम् ॥ ९३ ॥

ரத்ததோஷம் நீங்கியவர்களும் கோஷ்டம் சுத்தியடைந்தவர்களுமான குஷ்ட நோயாளிக்கு உபயோகிக்கப்படும் பூச்சுக்கள் உடன் பலனைக் கொடுக்கும்.

दोषे हृतेऽपनीते रक्ते बाह्यान्तरे कृते शमने ।
स्नेहे च कालयुक्ते न कुष्ठमतिवर्तते साध्यम् ॥ ९४ ॥

ஸாத்ய நிலையில் உள்ள குஷ்டமானது தோஷங்கள் நீங்கியும் ரத்ததோஷம் நீக்கப்பட்டும், உள்ளும், புறமும் சமன பிரயோகங்கள் செய்யப்பட்டும், காலத்திற்கேற்ற நெய்ப்புப் பொருள் பிரயோகம் செய்யப்பட்டும் உள்ள நிலையில், சிகித்ஸைக்கு அடங்காமல் போவதில்லை.

बहुदोषः संशोध्यः कुष्ठी बहुशोऽनुरक्षता प्राणान् ।
दोषे ह्यतिमात्रहृते वायुर्हन्यादबलमाशु ॥ ९५ ॥

தோஷம் அதிகம் உள்ள குஷ்ட நோயாளிக்கு உயிருக்கு தீங்கு ஏற்படாதவாறு பலதடவைகளில் சோதனம் செய்ய வேண்டும். அதிக அளவில் தோஷம் வெளியேற்றப்பட்டால் வாயுவானது பலமில்லாதவர்களை விரைவில் கொல்லும்.

पक्षात्पक्षाच्छर्दनान्यभ्युपेयान्मासान्मासाच्छोधनान्यप्यधस्तात् ।
शुद्धिर्मूर्ध्नि स्यात्त्रिरात्रात्त्रिरात्रात् षष्ठे षष्ठे मास्यसृङ्मोक्षणं च ॥९६॥

குஷ்ட நோயில் பட்சத்திற்கு (15 நாட்களை ஒரு முறை, வாந்தி சிகித்ஸையும், மாதம் ஒருமுறை விரேசன சிகித்ஸையும், மூன்று நாட்களுக்கு ஒரு தடவை சிரோ *விரேசனமும், ஆறுமாதத்துக்கு ஒரு முறை ரத்தவெளி யேற்றமும் செய்து கொள்ளவேண்டும்.

குறிப்பு: *நசியத்தின் மூலம் தோஷத்தை வெளி யேற்றுதல்.

**यो दुर्वान्तो दुर्विरिक्तोऽथवा स्यात् कुष्ठीदोषैरुद्धतैर्व्याप्यतेऽसौ ।**
**निःसन्देहं यात्यसाध्यत्वमेवं तस्मात् कृत्स्नान्निर्हरेदस्य दोषान् ॥९७॥**

வாந்தி அல்லது விரேசன சிகித்ஸை முறைகேடாகப் பிரயோகிக்கப்பட்டால் கிளர்ச்சியடைந்த தோஷங்களால் குஷ்ட நோயாளி பீடிக்கப்படுவார். இதனால் சந்தேகத்துக்கு இடமின்றி அசாத்ய நிலையை அடைவார். ஆகையால் தோஷங்கள் முழுவதையும் வெளியேற்ற வேண்டும்.

**व्रतदमयमसेवा त्यागशीलाभियोगो द्विजसुरगुरुपूजा सर्वसत्वेषु मैत्री ।**
**शिवशिवसुतताराभास्कराराधनानि प्रकटितमलपापं कुष्ठमुन्मूलयन्ति ॥९८॥**

(சாந்திராயணம் முதலிய) விரதமிருத்தல் (கோபம் முதலியவற்றை) அடக்குதல், புலன்களை அடக்குதல், கொடை, ஒழுக்கம் இவற்றை மேற்கொள்ளுதல், அந்தணர், தேவர், பெரியோர் ஆகியோரைப் பூசித்தல் எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புடைமை, [1]சிவன், சிவகுமாரன், நட்சத்திரங்கள், சூரியன் ஆகியோரை பூசித்தல் ஆகிய இவை அதிகரித்த தோஷத்தாலும், பாபத்தாலும் வெளியான குஷ்ட நோயை வேரறுக்கின்றன.

குறிப்பு: ★ (जिनजिनसुत) இங்கு ஜினர், ஜினரின் மகன் என்று பொருள் கொள்ளுமாறும் ஒரு பாடம் உண்டு.

तारा என்பதற்கு கௌத்தர்களின் தேவதை என்றும் பொருள் சொல்லுவர்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थानेकुष्ठचिकित्सितं नामैकोनविंशोऽध्यायः ॥ १९ ॥

சிகித்ஸாஸ்தானம் - பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று

★★★★★

## ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

## विंशोऽध्यायः - அத்தியாயம் - 20

अथाऽतो श्वित्रकृमिचिकित्सितं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து வெண்குஷ்டம், கிருமிநோய், இவற்றின் சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

कुष्ठादपि बीभत्सं यच्छीघ्रतरं च यात्यसाध्यत्वम् ।
श्वित्रमतस्तच्छान्त्यै यतेत दीप्ते यथा भवने ॥ १ ॥

வெண்குஷ்டநோய், குஷ்டநோயைக் காட்டிலும் அருவருப்பு உண்டாக்குவதாகும். மேலும் மிக விரைவிலேயே அஸாத்ய நிலையை அடையும். ஆகையால் தீப்பற்றிக் கொண்ட வீட்டை விரைந்து காப்பதுபோல வெண்குட்ட நோயாளிக்கு விரைவில் சிகித்ஸை செய்யவேண்டும்.

संशोधनं विशेषात्प्रयोज्येत्पूर्वमेव देहस्य ।
श्वित्रे स्रंसनमग्र्यं मलयूरस इष्यते सगुडः ॥ २ ॥

तं पीत्वाऽभ्यक्ततनुर्यथाबलं सूर्यपादसन्तापम् ।
सेवेत विरिक्ततनुस्त्र्यहं पिपासुः पिबेत्पेयाम् ॥ ३ ॥

வெண்குஷ்ட நோயில் முதலாவதாக சோதன சிகித்ஸையை விசேஷமாகச் செய்விக்கவேண்டும். கள்ளிப்பால் கலந்த *பேயத்திக் கஷாயம் விரேசனத்திற்குச் சிறந்ததாகும். இதைப் பருகியபின் உடலில் தைலம் தடவிக் கொண்டு, பலத்திற்கேற்ப வெயில் காயவேண்டும்.

இவ்வாறு 3 நாட்கள் விரேசனம் செய்விக்கவேண்டும். விடாயைப் போக்கிக்கொள்ள கஞ்சியைப் பருக வேண்டும்.

**குறிப்பு:** நெய்ப்புச் சிகித்ஸை செய்து கொண்ட பின்னரே சோதனம் ஏற்றதென சங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

★ கார்போகு அரிசியின் கஷாயம் என அருணதத்தரும் இந்துவும் உரை கூறுகின்றனர்.

श्वित्रेऽङ्गे ये स्फोटा जायन्ते कण्टकेन तान् भिन्द्यात् ।
स्फोटेषु निःस्रुतेषु प्रातः प्रातः पिबेत् त्रिदिनम् ॥ ४ ॥

मलयमसनं प्रियंगूं शतपुष्पां चाम्भसा समुत्क्वाथ्य ।
पालाशं वा क्षारं यथाबलं फाणितोपेतम् ॥ ५ ॥

வெண்குஷ்ட நோயாளியின் உடலில் உண்டாகும் கொப்புளங்களை முட்களால் பிளக்கவேண்டும். கசிவு வெளியேறியபின் பேயத்தி, வேங்கை, ஞாழல், சத குப்பை இவற்றை நீரிலிட்டுக் கொதிக்கவைத்து *மூன்று நாட்கள் காலையில் பருகவேண்டும். அல்லது புரசின் க்ஷாரத்தை தேன்பாகு கலந்து பலத்திற்கேற்ப பருகவேண்டும்.

குறிப்பு: *पक्षम् பதினைந்து நாட்கள் காலையில் பருக வேண்டுமெனவும் பாடம் காணப்படுகிறது.

फल्गवक्षवृक्षवल्कलनिर्यूहेणेन्दुराजिकाकल्कम् ।
पीत्वोष्णस्थितस्य जाते स्फोटे तक्रेण भोजनं निर्लवणम् ॥ ६॥

கார்போகு அரிசியின் கல்க்கத்தை பேயத்திப் பட்டை, தான்றி மரப்பட்டை இவற்றின் கஷாயத்துடன் கலந்து பருகி *சூரிய ஒளியில் இருக்கவேண்டும். கொப்புளம் உண்டானவுடன் மோருடன் அன்னத்தை உப்புக் கலக்காமல் உண்ணவேண்டும்.

குறிப்பு: *அப்பியங்கம் செய்துகொண்டே வெயில் காயவேண்டும் என இந்து விளக்குகிறார்.

गव्यं मूत्रं चित्रकव्योषयुक्तं सर्पिःकुम्भे स्थापितं क्षौद्रमिश्रम् ।
पक्षादूर्ध्वं श्वित्रिणा पेयमेतत् कार्यं चास्मै कुष्ठदृष्टं विधानम् ॥७॥

நெய் தடவப்பட்ட பானையில் பசுநீரை கொடிவேலி, த்ரிகடு, தேன், ஆகியவற்றுடனிட்டு 15 நாட்களுக்கு வைக்க வேண்டும். பிறகு வெண்குஷ்ட நோயாளி இதைப்

பருக வேண்டும். மேலும் குஷ்ட நோய்க்கு கூறப்பட்ட சிகித்ஸை முறைகளையும் செய்விக்கவேண்டும்.

मार्कवमथवा खादेद्भृष्टं तैलेन लोहपात्रस्थम् ।
बीजकशृतं च दुग्धं तदनु पिबेच्छ्वित्रनाशाय ॥ ८ ॥

அல்லது நல்லெண்ணெய் விட்டு பொரிக்கப்பட்ட கரிசலாங்கண்ணியை இரும்புப் பாத்திரத்தில் வைத்திருந்து உண்பதுடன் வேங்கைத்தூள் கலந்து காய்ச்சிய பாலை அனுபானமாக பருக; வெண்குஷ்டம் நீங்கும்.

குறிப்பு: இரும்புப் பாத்திரத்தில் உள்ள கரிசலாங்கண்ணி நல்லெண்ணை தாளிதம் செய்யவேண்டும் என்றும் சொல்வதுண்டு.

### பால் பக்குவம் செய்யும் முறை :

மருந்துச் சரக்குக்கு எட்டு மடங்கு பாலும், பாலுக்கு 4 மடங்கு நீரும், கலந்து பால் மிஞ்சுமளவுக்கு சுண்ட வைத்து வடிக்கட்டி உபயோகிக்க வேண்டும்.

पूतीकार्कव्याधिघातस्नुहीनां मूत्रे पिष्टाः पल्लवा जातिजाश्च ।
घ्नन्त्यालेपाच्छ्वित्रदुर्नामदद्रुपामाकोठान् दुष्टनाडीव्रणांश्च ॥ ९॥

ஆவில்புங்கு, எருக்கு, சரக்கொன்றை, கள்ளி, *ஜாதி மல்லிகை, இவற்றின் துளிரை பசுநீர் விட்டரைத்து பூச; வெண்குஷ்டம், மூலம், படை, சொறிசிரங்கு, கொப்புளம், துஷ்ட விரணம், புரை ஆகியவை நீங்கும்.

குறிப்பு: *தனித்த ஜாதிமல்லிகையின் துளிரை பசு நீருடன் பிரயோகிக்கலாமென அருணதத்தர் கூறுகிறார்.

द्वैपं दग्धं चर्म मातंगजं वा श्वित्रे लेपस्तैलयुक्तो वरिष्ठः।

சிறுத்தையின் தோலையாவது, யானையின் தோலை யாவது சுட்டெரித்து நல்லெண்ணையுடன் கலந்து வெண் குஷ்டத்தில் பூசுவது சிறந்தது.

குறிப்பு: கொப்புளம் உடைந்தபின் இதைப் பிரயோகிக் குமாறு ஸுச்ருதர் கூறுகிறார்.

पूतिः कीटो राजवृक्षोद्भवेन क्षारेणाक्तः श्वित्रमेकोऽपि हन्ति ॥१०॥

*பூதிகீடம் என்ற கிருமியை சரக்கொன்றை க்ஷாரத் துடன் பூசுவது ஒன்றே வெண்குஷ்ட நோயைப் போக்கும்.

குறிப்பு: *'பூதிகீடம்'மாரிக் காலத்தில் உண்டாகும் ஒரு வகை கிருமி.

रात्रौ गोमूत्रे वासितान् जर्जरांगानह्नि च्छायायां शौषयेत्स्फोटहेतून् ।
एवं वारांस्त्रीस्तैस्ततः श्लक्ष्णपिष्टैः स्नुह्याः क्षीरेण श्वित्रनाशाय लेपः॥११॥

சேங்கொட்டையைத் தூளாக்கி இரவில் பசு நீரில் ஊறவைத்துப் பகலில் நிழலில் உலர்த்தவேண்டும். இவ்வாறு மூன்று தடவை செய்யவேண்டும். பிறகு, கள்ளிப்பால் விட்டு நன்கு அரைத்துப் பூச; வெண்குஷ்டம் நீங்கும்.

अक्षतैलकृतो लेपः कृष्णसर्पोद्भवा मषी।
शिखिपित्तं तथा दग्धं ह्रीबेरं वा तदाप्लुतम् ॥ १२ ॥

கருநாகத்தைச் சுட்டெரித்த கரியையாவது, மயில் துத்தத் தையாவது, *வெட்டிவேரை எரித்து எடுத்த சாம்பாலை யாவது, தான்றியெண்ணையில் கலக்கிப் பூசலாம்.

குறிப்பு: *வெட்டிவேர் எரித்த சாம்பலை மயில் துத்தத்தில் கலந்து பூச வேண்டுமென இந்து உரை கூறு கிறார்.

कुडवोऽवल्गुजबीजाद्धरितालचतुर्थभागसम्मिश्रः ।
मूत्रेण गवां पिष्टः सवर्णकरणं परं श्वित्रे ॥ १३ ॥

கார்போகு அரிசி 4 பலம், தாளகம் 1 பலம், இவற்றைப் பசுநீர் விட்டரைத்து வெண் குஷ்டத்தில் பூச விசேஷமாக சருமம் சுயநிறத்தை அடையும்.

क्षारे सुदग्धे गजलिण्डजे च गजस्य मूत्रेण परिस्रुते च ।
द्रोणप्रमाणे दशभागयुक्तं दत्वा पचेद्बीजमवल्गुजानाम् ॥ १४॥

श्वित्रं जयेच्चिक्कणतां गतेन तेन प्रलिम्पन् बहुशः प्रधृष्टम् ।
कुष्ठं मषी वा तिलकालकं वा यद्वा व्रणे स्यादधिमांसजातम् ॥१५॥

யானையின் மலம் 16 [1]பிரஸ்தம். இதை எரித்து கரியாக்கி எடுத்த க்ஷாரத்தை யானையின் சிறுநீரில் கரைத்து [2]வடிக்கட்டி அதனுடன் கார்போகி அரிசி பத்தில் ஒரு பாகம் சேர்த்துப் பக்குவம் செய்து மெழுகு பதத்தில் இறக்கவேண்டும். இதை [3]பல தடவை பூச; குஷ்டம், மச்சம், திலகாலகம் என்னும் சிறு கரும்புள்ளிகள், மாம்ஸ விரணத்திலுண்டான மாம்ஸ வளர்ச்சி ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. க்ஷார நீர் 16 பிரஸ்தம் என இந்து கூறுகிறார்.

2. வடிகட்டுவது ஏழுதடவை என்றும், பத்து தடவை என்றும், பலதடவை என்றும் கூறுவர்.

3. உலர்ந்த சாணத்தூள் முதலியவற்றால் தேய்க்கப் பட்டபின் பூச வேண்டுமென இந்து கூறுகிறார்.

भल्लातकं द्वीपिसुधार्कमूलं गुंजाफलं त्र्यूषणशंखचूर्णम् ।
तुत्थं सकुष्ठं लवणानि पञ्च क्षारद्वयं लांगलिकां च पक्त्वा ॥१६॥

स्नुगर्कदुग्धे धनमायसस्थं शलाकया तद्विदधीत लेपम् ।
कुष्ठे किलासे तिलकालकेषु मांसेषु दुर्नामसु चर्मकीले ॥ १७॥

சேங்கொட்டை, கொடுவேலி வேர், கள்ளிவேர், எருக்கின் வேர், குன்றிமணி, திரிகடு சூர்ணம், சங்குச் சூர்ணம், துத்தம், கோஷ்டம், [1]ஐவகை உப்புக்கள், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், கலப்பங்கிழங்கு இவற்றை, கள்ளி, எருக்கு, இவற்றின் பால் சேர்த்து பக்குவம் செய்து இறுகிய நிலையில் இரும்புப் [2]பாத்திரத்தில் வைத்திருந்து குஷ்டம், கிலாஸகுஷ்டகம், திலகாலகம், மச்சம், மூலம், சர்மசீலம் என்னும் முளை ஆகிய வற்றில் சலாகையினால் பூசவேண்டும்.

குறிப்பு: 1. ஐவகை உப்புக்கள் - இந்துப்பு, சௌவர்ச்சல உப்பு, வளையலுப்பு, கறியுப்பு, சவுட்டுப்பு.

2. இரும்புப் பாத்திரத்தில் பக்குவம் செய்ய வேண்டுமென்றும் கொள்ளலாம்.

शुद्ध्या शोणितमोक्षैर्विरूक्षणैर्भक्षणैश्च सक्तूनाम् ।
श्वित्रं कस्यचिदेव प्रशाम्यति क्षीणपापस्य ॥ १८ ॥

इति श्वित्रचिकित्सा ।

(கழுவாய் முதலியவற்றால்) பாபங்கள் குறைந்த சிலருக்கே சோதன சிகித்ஸை, ரத்தத்தை வெளியேற்றுதல், வறட்சி உண்டாக்குதல், ஸத்துமா உண்ணல் ஆகிய வற்றால் வெண்குஷ்டம் நீங்கும்.

குறிப்பு: பாபம் குறையாதவருக்கு நோய் நீங்காது.

**अथ कृमिचिकित्सा ।**

स्निग्धस्विन्ने गुडक्षीरमत्स्याद्यैः कृमिणोदरे ।

उत्क्लेशितकृमिकफे शर्वरीं तां सुखोषिते ॥ १९ ॥

सुरसादिगणं मूत्रे क्वाथयित्वाऽर्धवारिणि ।
तं कषायं कणागालकृमिजित्कल्कयोजितम् ॥ २० ॥

सतैलस्वर्जिकाक्षारं युंज्याद्बस्तिं ततोऽहनि ।
तस्मिन्नेव निरूढं तं पाययेत विरेचनम् ॥ २१ ॥

त्रिवृत्कल्कं फलकणाक्वषायालोडितं ततः ।
ऊर्ध्वाधः शोधिते कुर्यात्पंचकोलयुतं क्रमम् ॥ २२ ॥

कटुतिक्तकषायाणां कषायैः परिषेचनम् ।
काले विडंगतैलेन ततस्तमनुवासयेत् ॥ २३ ॥

### கிருமி நோய்க்குச் சிகித்ஸை :

வயிற்றில் கிருமிகள் உள்ளவருக்கு முதலில் நெய்ப்பு உண்டாக்குதல், வியர்வை உண்டாக்குதல் ஆகிய சிகித்ஸை களைச் செய்விக்கவேண்டும். பிறகு வெல்லம், பால், மீன் முதலியவற்றின் பிரயோகத்தால் கிருமிகளையும், கபத் தையும் கிளர்ச்சியுறச் செய்யவேண்டும். அன்று இரவு சுகமாகச் சென்றபின், மறுநாள் பகலில் சுரஸாதிகணச் சரக்குகளைப் பாதி அளவு நீர் கொண்ட [1]பசுமூத்திரத் தில் போட்டுக் கஷாயம் செய்து அதனுடன் திப்பிலி, மலங்காரக்காய், வாய்விளங்கம் இவற்றின் கல்க்கமும், எண்ணெய் ஸர்ஜக்ஷாரம் ஆகியவற்றையும் கலந்து பஸ்தி செய்விக்க வேண்டும். பிறகு அன்றைய தினமே சிவதைக் கல்க்கத்தை, மலங்காரக்காய், திப்பிலி இவற்றின் கஷாயத் தில் கலந்து பிரயோகித்து [2]விரேசனம் செய்விக்க வேண்டும். வாந்தியும், விரேசனமும் ஆனபின் பஞ்ச

கோலம் சேர்த்துக் கஞ்சி முதலிய வரிசையில் உணவு உட்கொள்ளவேண்டும். காரம், கசப்பு, துவர்ப்பு ஆகிய சுவை உள்ள கஷாயங்களால் உடலை நனைக்க வேண்டும். ஜாடராக்னி பலம் நன்கு அமைந்த நிலையில் வாய்விடங்கத் தைலத்தால் அனுவாஸன பஸ்தி பிர யோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. பசு மூத்திரத்துக்கு சம அளவு நீர் கலக்க, அந்தக் கலவை பாதி நீர் கொண்ட பசு மூத்ரம் எனப் படும்.

2. இங்குள்ள விரேசனம் என்ற சொல் தோஷங் களை வெளியேற்றுதல் என்னும் கருத்தில் வமனம், விரேசனம் இரண்டையும் குறிப்பதாகும்.

शिरोरोगनिषेधोक्तमाचरेन्मूर्धगेष्वनु ।
उद्रिक्ततिक्तकटुकमल्पस्नेहं च भोजनम् ॥ २४ ॥

தலையில் கிருமிகள் இருந்தால் தலை நோய் சிகித்ஸை விளக்கப்படும் அத்தியாயத்தில் கூறப்படவிருக்கிற சிகித்ஸையைச் செய்விக்க வேண்டும் கசப்பு, காரம் ஆகிய சுவை அதிகம் கலந்ததும், சிறிதே நெய்ப்புக் கலந்ததுமான உணவு உட்கொள்ளவேண்டும்.

विडंगकृष्णामरिचपिप्पलीमूलशिग्रुभिः ।
पिबेत्सस्वर्जिकाक्षारैर्यवागूं तक्रसाधिताम् ॥ २५ ॥

மோர் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட கஞ்சியில் வாய்விளங்கம், திப்பிலி, மிளகு, கண்டதிப்பிலி, முருங்கை இவற்றின் சூர்ணமும், ஸர்ஜக்ஷாரமும் கலந்து பருக வேண்டும்.

रसं शिरीषकिणिहीपारिभद्रककेम्बुकात् ।
पलाशबीजपत्तूरपूतिकाद्वा पृथक् पिबेत् ॥ २६ ॥

सक्षौद्रं सुरसादीन् वा लिह्यात्क्षौद्रयुतान् पृथक् ।

அல்லது [1]வாகை, நாயுருவி, மலைவேம்பு, கேமுகப்புல், புரசைவிதை, பொன்னாங்காணி, ஆவில்புங்கு இவற்றுள் ஒன்றின் ரஸத்தை தேனுடன் பருகவேண்டும். சுரஸாதி [2]கணச்சரக்குகளைத் தனித்தனியே தேன் கலந்து லேஹமாக உபயோகிக்கலாம்.

குறிப்பு: 1. வாகை, நாயுருவி, மலைவேம்பு, கேமுகப்புல் ஆகிய நான்கும் சேர்ந்து ஒரு யோகமென அருண தத்தர் கருதுகிறார்.

2. சுரஸாதிகணம், ஸூத்ரஸ்தானம் 15-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

शतकृत्वोऽश्वविट्चूर्णं विडंगकाथभावितम् ॥ २७ ॥

कृमिमान् मधुना लिह्याद्भावितं वा वरारसैः ॥
शिरोगतेषु कृ मिषु चूर्णं प्रधमनं च तत् ॥ २८ ॥

கிருமி நோயாளி, குதிரையின் சாணித்தூளை வாய் விளங்க கஷாயத்திலாவது திரிபலைக் கஷாயத்திலாவது 100 [1]தடவை ஊறவைத்து, தேன் கலந்து லேஹமாக உட்கொள்ள வேண்டும். தலையில் கிருமிகள் இருந்தால் அவருக்கு இந்தச் *சூர்ணத்தையே நாசியில் ஊதி செலுத்த வேண்டும்.

குறிப்பு: பலதடவை என்றும் ஒரு பாடம் உண்டு. சிரோ ரோக சிகித்ஸையில் கூறப்படவிருக்கிற

இத்தகைய நசிய யோகத்தை குறிப்பிடுவதாக அருணதத்தர் கூறுகிறார்.

आखुकर्णीकिसलयैः सुपिष्टैः पिष्टमिश्रितैः ।
पक्त्वा पूपलिकां खादेद्धान्याम्लं च पिबेदनु ।। २९ ।।

सपंचकोललवणमसान्द्रं तक्रमेव वा ।
नीपमार्कवनिर्गुण्डीपल्लवेष्वप्ययं विधिः ।। ३० ।।

எலிச்செவியின் துளிரை நன்கு கல்க்கமாக்கி சாலி அரிசி மாவுடன் கலந்து வடை பக்குவம் செய்து உண்டு, பஞ்ச [1]கோலம், [2]பஞ்சலவணம், ஆகியவை கலந்த காடியை அனுபானமாக உட்கொள்ளவேண்டும். அல்லது தடிப் பற்ற [3]மோரையே அனுபானமாக பருகவேண்டும். கடம்பு, கரிசாலை, நொச்சி இவற்றின் துளிரையும் இவ்வாறே உபயோகிக்கலாம்.

குறிப்பு: 1. பஞ்சகோலம் - திப்பிலி, கண்டதிப்பிலி, செவ்வியம், கொடிவேலி, சுக்கு.

2. பஞ்சலவணம் - இந்துப்பு, ஸௌவர்ச்சல உப்பு, வளையலுப்பு, கறியுப்பு, வெடியுப்பு.

3. பஞ்சகோலம், பஞ்சலவனம் ஆகியவற்றை மோருடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும் என்பது அருணதத்தரின் கருத்து.

विडंगचूर्णमिश्रैर्वा पिष्टैर्भक्ष्यान् प्रकल्पयेत् ।

அல்லது வாய்விளங்கச் சூரணம் கலந்த மாவினால் பணியாரங்கள் தயாரித்து உண்ணலாம்.

विडंगतण्डलैर्युक्तमर्धांशैरातपे स्थितम् ॥ २१ ॥

दिनमारुष्करं तैलं पाने बस्तौ च योजयेत् ॥
सुराह्वसरलस्नेहं पृथगेवं च कल्पयेत् ॥ २२ ॥

சேங்கொட்டைத் தைலத்தை பாதியளவு வாய் விளங்கச் சூரணத்துடன் கலந்து பகல் முழுவதும் வெயிலில் வைத்து பருகுவதற்கும், பஸ்திபிரயோகத் திற்கும் உபயோகிக்கலாம். தேவதாரு, ஸரளதேவதாரு இவற்றின் தைலத்தையும் இவ்வாறே தனித்தனியாக உபயோகிக்கலாம்.

पुरीषजेषु सुतरां दद्याद्बस्तिविरेचने ।

மலத்தில் கிருமி இருந்தால் *விசேஷமாக பஸ்தி, விரேசனம், ஆகியவற்றைப் பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: *பஸ்தி, விரேசனம் ஆகியவை விசேஷமாக பயன்படும் என்பதால் மற்ற பொதுவான கிருமி சிகித்ஸையும் இங்கு பயன்படும் என்பது குறிப் பிடப்படுகிறது.

शिरोविरेकं वमनं शमनं कफजन्मसु ॥ २३ ॥

கபத்தால் கிருமிகள் உண்டாகி இருப்பின் சிரோ விரேசனம், வாந்தி செய்வித்தல், சமனசிகித்ஸை ஆகியவை களைச் செய்விக்கவேண்டும்.

रक्तजानां प्रतीकारं कुर्यात्कुष्ठचिकित्सितात् ।

ரத்தத்தில் கிருமிகள் உண்டாகியிருப்பின் குஷ்ட சிகித்ஸையில் கூறியவாறு சிகித்ஸை செய்யவேண்டும்.

इन्द्रलुप्तविधिश्चात्र विधेयो रोमभोजिषु ॥ ३४ ॥

உரோமத்தை உண்ணும் கிருமிகள் ரத்தத்தில் இருந்தால் *இந்திரலுப்த சிகித்ஸையை செய்ய வேண்டும்.

**குறிப்பு:** *இந்திரலுப்த சிகித்ஸை உத்தரஸ்தானம் 24-வது அத்தியாயத்தில் விளக்கப்பட இருக்கிறது.

क्षीराणि मांसानि घृतं गुडं च दधीनि शाकानि च पर्णवन्ति ।
समासतोऽम्लान्मधुरान् रसांश्च कृमीन् जिहासुः परिवर्जयेच्च ॥३५॥

**கிருமி நோயாளி தவிர்க்கவேண்டியவை :**

சுருங்கக்கூறின் கிருமியைப் போக்க விரும்புகிறவர் பால் வகை, மாம்ஸவகை, நெய், வெல்லம், தயிர், இலைக்கீரை வகை, புளிப்பு, இனிப்பு, ஆகிய சுவை உள்ள பொருள்கள் ஆகியவற்றை விலக்கவேண்டும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने श्वित्रकृमिचिकित्सितं नाम विंशोऽध्यायः ॥२०॥

சிகித்ஸாஸ்தானம் - இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

# ।। चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ।।

## एकविंशोऽध्यायः - அத்தியாயம் - 21

अथाऽतो वातव्याधिचिकित्सितं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து வாத நோய் சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

केवलं निरुपस्तम्भमादौ स्नेहैरुपाचरेत् ।
वायुं सर्पिर्वसामज्जतैलपानैर्नरंततः ।। १ ।।

**வாத நோய் சிகித்ஸை :**

மற்ற தோஷங்களால் ஆவரணம் செய்யப்படாமல் தனித்த வாயு தோஷமுள்ள நிலையில் முதலில் *நெய், மாம்ஸ எண்ணெய், எலும்புச்சத்து, எண்ணெய் இவைகளைப் பருகச் செய்யவேண்டும்.

குறிப்பு: *வாயுவைக் கண்டிக்கும் பொருள்களுள் தைலம் சிறந்தது. ஆயினும், பிறவி முதல் பழக்கத்தின் காரணமாக ஒத்து கொண்டிருப்பதாலும், நெய்ப்புப் பொருள்களுள் சிறப்புற்றமை காரணமாகவும், நெய்ப்பு சிகித்ஸைக்காகக் கூறப்பட்ட பொருள் களுள் இங்கு நெய்யே முதலிடம் பெற்றிருக் கிறது.

स्नेहाक्रान्तं समाश्वास्य पयोभिः स्नेहयेत्पुनः ।
यूषैर्ग्राम्योदकानूपरसैर्वा स्नेहसंयुतैः ।। २ ।।

पायसैः कृसरैः साम्ललवणैः सानुवासनैः ।

नावनैस्तर्पणैश्चान्नैः सुस्निग्धैः, स्वेदयेत्ततः ॥ ३ ॥

स्वभ्यक्तं स्नेहसंयुक्तैः शर्करायैः पुनः पुनः ।

பிறகு நெய்ப்புச் சிகித்ஸையால் இளைத்தவரை பால் பருகச் செய்து களைப்பாற்ற வேண்டும். பிறகு நெய்ப்புப் பொருள் கலந்தவையான பருப்புக் கஞ்சியாலும், கிராமிய பிராணி, நீர்வாழ்வன, சதுப்புநிலத்தில் வசிப்பன, இவற்றின் மாம்ஸ ரஸத்தாலும், நன்கு நெய்ப்புக் கலந்தவையான பால் பொருள்கள், எள்ளும் அரிசியும் கலந்து தயாரித்த கஞ்சிகள், புளிப்பும், உவர்ப்பும் உள்ளவையும், உடலைப்பருக்கச் செய்பவையுமான உணவு வகை, அனுவாஸனம், நஸ்யம், இவற்றாலும் மீண்டும் நெய்ப்பு உண்டாக்க வேண்டும். பிறகு அப்யங்கம் செய்வித்து நெய்ப்புக் கலந்து *ஸங்கரஸ்வேதம் முதலியவற்றால் அடிக்கடி வியர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு: *ஸங்கரஸ்வேதம் - மருந்துப் பொருள்களை வஸ்திரத்தில் கட்டியாவது, தனித்தாவது உருண்டையாக்கி ஒத்தடமிடுதல், நாடீ பிரஸ்தம், குடி, பூ முதலிய ஸ்வேத விதிகளும் (வியர்ப்பிக்கும் முறைகளும்) சரகத்தில் கூறப்பட்டுள்ளன.

स्नेहाक्तं स्विन्नमङ्गं तु वक्रं स्तब्धं सवेदनम् ॥ ४ ॥

यथेष्टमानामयितुं सुखमेव हि शक्यते ।
शुष्काण्यपि हि काष्ठानि स्नेहस्वेदोपपादनैः ॥ ५ ॥

शक्यं कर्मण्यतां नेतुं किमु गात्राणि जीवताम् ।

உடல் உறுப்பானது கோணலாகவும், தம்பித்தும், வேதனையுடனும், இருந்தாலும் நெய்ப்புப் பொருள்

பூசப்பட்டு வியர்வை சிகித்ஸை செய்யப்பட்டால் சுலபமாக விருப்பம்போல் வளைக்கத் தக்கதாகிறது அல்லவா? வறண்ட கட்டைகளாயினும் அவற்றை நெய்ப்புப் பொருள் வியர்ப்பிப்பவை இவற்றின் பிரயோகத்தால் செயலுக்கு ஏற்றனவாக செய்யமுடியும். உயிருடன் கூடியவர்களின் உறுப்புக்களும் செயல்படும் எனக்கூறவும் வேண்டுமா?

हर्पतोदरुगायामशोफस्तम्भग्रहादयः ॥ ६ ॥

स्विन्नस्याशु प्रशाम्यन्ति मार्दवं चोपजायते ।

**வியர்ப்பித்தலின் குணம் :**

வியர்வைச் சிகித்ஸை செய்யப்பட்டவருக்கு மயிர்க் கூச்சம், குத்துவலி, வலி, வளைதல், வீக்கம், தம்பனம், பிடிப்பு முதலியவை உடனடியாக நீங்குகின்றன. மிருதுத் தன்மையும் உண்டாகிறது.

**குறிப்பு:** நெய்ப்புச் சிகித்ஸைக்குப் பின் வியர்வை சிகித்ஸை செய்து கொண்டவருக்கு மயிர்க்கூச்சம் முதலியவையும் நீங்கும் என இந்து விளக்கு கிறார்.

स्नेहश्च धातून् संशुष्कान् पुष्णात्याशुप्रीयोजितः ॥ ७ ॥

बलमग्निबलं पुष्टिं प्राणं चास्याभिवर्धयेत् ।

நெய்ப்புச் சிகித்ஸையானது உலர்ந்த தாதுக்களை விரைவில் விருத்தி அடையச் செய்யும். உடல்பலம், ஜாடராக்னி பலம், வலு, பிராண சக்தி, ஆகியவற்றையும் அதிகரிக்கச் செய்யும்.

असकृत्तं पुनः स्नेहैः स्वेदैश्च प्रतिपादयेत् ॥ ८ ॥

तथा स्नेहमृदौ कोष्ठे न तिष्ठन्त्यनिलामयाः ।

மறுபடியும் வாத நோயாளிக்கு நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை, ஆகியவற்றை அடிக்கடி செய்யவேண்டும். இவ்வித நெய்ப்புச் சிகித்ஸை யால் கோஷ்டம் மென்மைத் தன்மையடைந்த நிலையில் வாத நோய்கள் நிலைபெறாது.

குறிப்பு: முந்திய சுலோகம் விஸர்ப்பித்தலின் பெருமை யையும், அடுத்ததாக உள்ள இந்த சுலோகம் நெய்ப்புச் சிகித்ஸையின் பெருமையையும் கூறுகின்றன.

यद्येतेन सदोषत्वात्कर्मणा न प्रशाम्याति ॥ ९ ॥

मृदुभिः स्नेहसंयुक्तैर्भेषजैस्तं विशोधयेत् ।

இவ்வாறு சிகித்ஸை செய்தும் தோஷ [1]சேர்க்கையின் காரணமாக நோய்கள் நீங்காவிடில், நெய்ப்புப் பொருள் கலந்ததும், மிருது குணமுள்ளதுமான விரேசன மருந்துப் [2]பொருள்களால் சோதனம் செய்யவேண்டும்.

குறிப்பு: முக்கியமாக பக்குவாசயத்தில் உள்ள வாயு விஷயத்தில், இங்கு கூறப்படுகிற விரேசன யோகங்கள் ஏற்றவையாகும். ஆமாசயத்திலுள்ள வாயு விஷயத்தில் வாந்தி செய்வித்து மற்ற சிகித்ஸைகளைப் பிரயோகிக்குமாறு கூறப்பட இருக்கிறது.

1. தோஷமென்பது செய்முறை தோஷத்தைக் குறிப்பிடுவதாக சக்ரபாணிதத்தரும், பித்த-கபம்

ஆகியவற்றைக் குறிப்பிடுவதாக இந்துவும் கருதுகின்றனர்.

2. சரக்கொன்றை முதலியன மென்மைக் குண முள்ள விரேசனப் பொருள்களாகும்.

घृतं तिल्वकसिद्धं वा सातलासिद्धमेव वा ॥ १० ॥

पयसैरण्डतैलं वा पिबेद्दोषहरं शिवम् ।

பாச்சோற்றி அல்லது [1]காய்த்துராய் சேர்த்துப் பக்குவம் செய்த கிருதத்தையாவது, [2]பாலுடன் ஆமணக்கு எண்ணையையாவது கலந்து தோஷம் நீங்கப் பருகலாம். இது மங்களமானது, விரேசனமாகும்.

குறிப்பு: 1. ஸாதலா என்பதற்கு சிகைக்காய் என்றும் பொருள் கூறுவர்.

2. இங்கு கூறப்பட்ட இரண்டு கிருதங்களும் பாலுடன் பருகப்படலாம் என இந்து கூறுகிறார்.

स्निग्धाम्ललवणोष्णाद्यैराहारैर्हि मलश्चितः ॥ ११ ॥

स्रोतो रुद्ध्वऽनिलं रुन्ध्यात्तस्मात्तमनुलोमयेत् ॥

நெய்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, உஷ்ணம் முதலிய குணங்களுள்ள உணவு வகைகளால் மலம் சேமிக்கப் பெறுவதால் வழியை அடைத்து வாயுவைத் தடை செய்யும். ஆகையால் வாயுவை கீழ்நோக்கச் செய்ய வேண்டும்.

दुर्बलौ योऽविरेच्यः स्यात्तं निरूहैरुपाचरेत् ॥ १२ ॥

दीपनैः पाचनीयैर्वा भोज्यैर्वा तद्युतैर्नरम् ।

संशुद्धस्योत्थिते चाग्नौ स्नेहस्वेदौ पुनर्हितौ ॥ १३ ॥

நோயாளி பலங்குன்றியிருப்பது காரணமாக விரேசனத்திற்குத் தகாதவராயின் அவருக்கு பசியைத் தூண்டுவதுடன் ஆமத்தைப் பாகம் செய்யக்கூடிய பொருள் சேர்த்து நிரூஹபஸ்தி செய்விக்கவேண்டும். அல்லது பசியைத் தூண்டி ஆமத்தைப் பாகம் செய்பவைகளான பொருள்களைக் கலந்து உணவு கொடுக்கவேண்டும். சோதனம் நன்கு ஏற்பட்டபின் ஜாடராக்னி பலம் பெற்ற நிலையில் நெய்ப்புச் சிகித்ஸை, வியர்ப்பித்தல் ஆகிய இரண்டும் மீண்டும் பிரயோகிக்கத் தக்கவை ஆகும்.

आमाशयगते वायौ वमितप्रतिभोजिते ।
सुखाम्बुना षट्धरणं वचादि वा प्रयोजयेत् ॥ १४ ॥

सन्धुक्षितेऽग्नौ परतो विधिः केवलवातिकः ।

[1]வாயு ஆமாசயத்தில் கோபமடைந்திருந்தால் வாந்தி உண்டாக்கி குறைந்த அளவு உணவு உண்ணச் செய்து [2]ஷட்தரணம் அல்லது வசாதிகணச் சரக்குகளின் சூர்ணத்தை வெந்நீருடன் உட்கொள்ளச் செய்யவேண்டும். பிறகு ஜாடராக்னி பலம் பெற்ற நிலையில் தனித்த வாயுவிற்கு உண்டான சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: 1. வாயுவிற்கு வாந்தி செய்வித்தல் கூடாதாயினும், நோய் ஏற்பட்டிருக்கும் ஸ்தானத்தை அனுசரித்து ஏற்றதாகும்.

2. 'தரணம்' என்பது பலத்தின் பத்தில் ஒரு பங்கு என்றும் பதினாறில் ஒரு பங்கு என்றும் கூறுவர்.

3. சிகி.அத்.19.சு.40-ல் கூறப்பட்ட வட்டத் திருப்பி முதலிய ஆறு சரக்குகள்.

4. ஸுச்ருதத்தில் ஷட்தரணம் என்ற பெயருடன் வாதவியாதி சிகித்ஸையில் கூறப்படும் யோகத்தில் இங்கு காணப்படுகிற மரமஞ்சள் இடம் பெற வில்லை. கடுக்காய் காணப்படுகிறது. ஆனால் அந்நூலிலேயே கடுக்காய்க்குப் பதிலாக மஞ்சள் சேர்ந்ததாக ஒரு பாடமும் காணப்படுகிறது.

मत्स्यान्नाभिप्रदेशस्थे सिद्धान्बिल्वशलाटुभिः ॥ १५ ॥

बस्तिकर्म त्वधोनाभेः शस्यते चावपीडकः ।

நாபியில் வாயு கோபமடைந்திருந்தால் பில்வப்பிஞ்சு சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட மீன்களை உபயோகிக்க வேண்டும். நாபிக்கு கீழ் வாயு கோபமடைந்திருப்பின் பஸ்தியும் *அவபீடகமும் ஏற்றவை ஆகும்.

குறிப்பு: * உணவிற்கு முன்னும் ஜீரணித்த நிலையிலும் நெய் பருகுவது அவபீடகம் எனப்படும்.

कोष्ठगे क्षारचूर्णाद्या हिताः पाचनदीपनाः ॥ १६ ॥

கோஷ்டத்தில் வாயு கோபமடைந்திருந்தால் ஆமத்தைப் பாகம் செய்யக்கூடியவையும், பசியைத் தூண்டுபவையு மான க்ஷாரம், சூர்ணம் முதலியவை ஏற்றவையாகும்.

हृत्स्थे पयः स्थिरासिद्धंशिरोबस्तिः शिरोगते ।
स्नैहिकं नावनं धूमः श्रोत्रादीनां च तर्पणम् ॥ १७ ॥

இருதயத்தில் வாயு கோபமடைந்திருந்தால், ஓரிலை சேர்த்துக் காய்ச்சப்பட்ட பால் ஏற்றது. தலையில் வாயு கோபமடைந்திருந்தால் [1]சிரோபஸ்தி, நெய்ப்புள்ள

நஸ்யம், புகைபிடித்தல், [2]காது முதலியவற்றில் எண்ணெய் இடுதல் ஆகியவை ஏற்றவையாகும்.

குறிப்பு: 1. ஸூத்ரஸ்தானம் 22-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டது.

2. காது முதலியவற்றில் வாயு கோபமடைந்த விஷயத்திலும் இவை பிரயோகிக்க ஏற்றவை என சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

स्वेदाभ्यंगनि वा तानि हृद्यं चान्नं त्वगाश्रिते ।

சருமத்தில் வாயு கோபமடைந்திருந்தால் வியர்வை உண்டாக்குதல், அப்யங்கம், காற்று அதிகம் இல்லாத இடத்திலிருத்தல், மனதிற்கு பிடித்தமான உணவு, ஆகியவை ஏற்றவையாகும்.

शीताः प्रदेहाः रक्तस्थे विरेको रक्तमोक्षणम् ॥ १८ ॥

ரத்தத்தில் வாயு கோபமடைந்திருந்தால், குளிர்ச்சியான பூச்சுக்கள், விரேசனம் செய்வித்தல், ரத்தத்தை வெளியேற்றுதல் ஆகியவை ஏற்றவையாகும்.

विरेको मांसमेदःस्थे निरूहाः शमनानि च ।

மாம்ஸம், கொழுப்பு ஆகியவற்றில் வாயு கோபமடைந்திருந்தால் விரேசனம், நிரூஹபஸ்தி, தோஷங்களை அடக்கும் மருந்து ஆகியவை ஏற்றவையாகும்.

बाह्याभ्यन्तरतः स्नेहैरस्थिमज्जागतं जयेत् ॥ १९ ॥

எலும்பு, எலும்புச்சத்து, ஆகியவற்றில் வாயு கோபமடைந்திருந்தால் உள்ளும் புறமும் நெய்ப்புப் பொருள் பிரயோகித்து சமனம் செய்யவேண்டும்.

प्रहर्षोऽन्नं च शुक्रस्थे बलशुक्रकरं हितम् ।

சுக்லத்தில் வாயு கோபமடைந்திருந்தால் மகிழ்ச்சி உண்டாக்குதல், பலத்தையும் சுக்ரத்தையும் உண்டாக்கும் உணவு வகை ஆகியவை ஏற்றவையாகும்.

विबद्धमार्गं दृष्ट्वा तु शुक्रं दद्याद्विरेचनम् ॥ २० ॥

विरिक्तं प्रतिभुक्तं च पूर्वोक्तां कारयेत्क्रियाम् ।

சுக்லம் தடையுற்றிருந்தால் விரேசனம் செய்விக்க வேண்டும். விரேசனத்திற்குப்பின் ஏற்ற உணவு கொள்ளச் செய்து முற்கூறிய மகிழ்ச்சி உண்டாக்குதல் முதலிய வற்றையும் செய்யவேண்டும்.

गर्भे शुष्के तु वातेन बलानां च विशुष्यताम् ॥ २१ ॥

सिताकाश्मर्यमधुकैः सिद्धमुत्थापने पयः ।

வாயு காரணமாக கர்ப்பமும், பாலரும் வளர்ச்சி குறைவுற்றிருந்தால் சர்க்கரை, குமிழ், அதிமதுரம் ஆகியவை சேர்த்துப் பக்குவம் செய்த பாலால் புஷ்டி உண்டாக்க வேண்டும்.

குறிப்பு: சங்க்ரஹத்தில் இவற்றுடன் நன்னாரியும் காணப்படுகிறது. மேலும் புலால் உண்ணும் பிராணிகளின் மாம்ஸரஸத்தை உடல் பருக்கச் செய்யும் நெய்ப்புப் பொருள்களுடன் கலந்து பருகுமாறும் கூறப்பட்டுள்ளது.

स्नावसन्धिशिराप्राप्ते स्नेहदाहोपनाहनम् ॥ २२ ॥

தசைநார், மூட்டு, ஸிரை ஆகியவற்றில் வாயு கோபம் அடைந்திருந்தால் நெய்ப்புப் பொருளை உபயோகித்

தல், சூடு இடுதல், மருந்து வைத்துக் கட்டுப் போடுதல் ஆகியவை ஏற்றவையாகும்.

குறிப்பு: பிடித்து விடுதல், வியர்வை உண்டாக்குதல், கட்டுதல் ஆகியவையும் சங்க்ரஹத்தில் குறிப் பிடப்படுகின்றன.

तैलं संकुचितेऽभ्यंगो माषसैन्धवसाधितम् ।

உறுப்புச் சுருக்க நோயில் உளுந்து, இந்துப்பு ஆகியவை சேர்த்துப் பக்குவம் செய்யப்பெற்ற தைலத் தால் அப்பியங்கம் செய்யலாம்.

குறிப்பு: உளுந்தின் கஷாயத்தில் இந்துப்பு கல்க்கம் சேர்த்து தைலம் காய்ச்சுமாறு சக்ரபாணிதத்தர் கூறுகிறார்.

आगारधूमलवणतैलैर्लेपः स्रुतेऽसृजि ॥ २३ ॥

सुप्तेऽङ्गे वेष्टयुक्ते तु कर्तव्यमुपनाहनम् ।

உறுப்பு, உணர்ச்சியற்றிருந்தால், ரத்தத்தை வெளி யேற்றியபின், ஒட்டடை, இந்துப்பு, எண்ணெய் இவற்றால் பூசலாம். உணர்ச்சியற்ற நிலையில் உறுப்பு முறுக்கிக் கொண்டால் மருந்துப் பொருள்களை வைத்துக் கட்டுப் போடவேண்டும்.

अथापतानकेनार्तमस्रस्ताक्षमवेपनम् ॥ २४ ॥

अस्तब्धमेढ्रमस्वेदं बहिरायामवर्जितम् ।
अखट्वाघातिनं चैनं त्वरितं समुपाचरेत् ॥ २५ ॥

## அபதானக[1] சிகித்ஸை :

கண்கள் இடம் பெயர்ச்சி, நடுக்கம், குறித்தம்பிதம், வியர்வை, [2]பஹிராயாமம் ஆகியவை அற்ற நிலையில், படுக்கையிலிருந்து எழுந்து காலால் படுக்கையை அடிக்காதவராகவும் உள்ள அபதானக நோயாளிக்கு விரைவாக சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: 1. அபதானகத்தின் விளக்கத்தை நிதானஸ்தானம் 15-வது அத்தியாயத்தில் 17-வது சுலோகத்தில் காண்க.

2. பஹிராயாமம் - மார்பை முற்புறம் தள்ளி தலையை பின்னுக்கு இழுத்து உடலை வில் போல் வளைக்கும் நோய்.

तत्र प्रागेव सुस्निग्धस्विन्नांगे तीक्ष्णनावनम् ।
स्रोतोविशुद्धये युंज्यादच्छपानं ततो धृतम् ॥ २६ ॥

विदार्यादिगणक्वाथदधिक्षाररसैः शृतम् ।
नातिमात्रं तथा वायुर्व्याप्नोति सहसैव वा ॥ २७ ॥

அபதானக நோயாளிக்கு முதலில் நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை ஆகியவற்றை நன்கு செய்வித்து, ஸ்ரோதஸ்ஸுகள் சுத்தியடைவதற்காக [1]தீக்ஷ்ணமான பொருள்களால் நஸ்யமிடவேண்டும். பிறகு [2]விதார்யாதிகணச் சரக்குகளின் [3]கஷாயம், தயிர், பால், மாம்ஸ ரஸம் ஆகியவை சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட நெய்யை [4]அச்சபானமாகப் பருகவேண்டும். இவ்வாறு செய்வதால் வாயு விரைவிலே அதிகமாகவோ உடலில் பரவாது.

குறிப்பு: 1. ஸூத்ரஸ்தானத்தில், 20-வது அத்தியாயத்தில் தீக்ஷ்ணமான நஸ்யப்பொருள்கள் கூறப் பட்டுள்ளன.

திரிகடு, வாய்விளங்கம், வெள்ளைமிளகு முதலியவை என இந்து கூறுகிறார்.

2. விதார்யாதிகணம் ஸூத்ரஸ்தானம் 15-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

3. விதார்யாதிகணச்சரக்குகளின் கஷாயம் நெய்க்கு 4 மடங்கு. தயிர் முதலியவை, நெய்க்குச் சம அளவு.

4. அச்சபானம் - வேறு உணவுப் பொருள் கலப்பின்றி தனித்த நெய்ப்புப் பொருளை அதிக அளவில் பருகுதல்.

कुलत्थयवकोलानि भद्रदार्वादिकं गणम् ।
निःक्वाथ्यानूपमांसं च तेनाम्लैः पयसाऽपि च ॥ २८ ॥

स्वादुस्कन्धप्रतीवापं महास्नेहं विपाचयेत् ।
सेकाभ्यंगावगाहान्नपाननस्यानुवासनैः ॥ २९ ॥

स हन्ति वातं ते ते च स्नेहस्वेदाः सुयोजिताः ।

கொள், யவை, இலந்தை, [1]பத்ரதார்வதிகணச் சரக்குகள், சதுப்பு நிலப்பிராணிகளின் மாம்ஸம், ஆகியவற்றை நீரிலிட்டு தயாரிக்கப்பெற்ற கஷாயத்துடன் (காடி, மதுவகை முதலிய) புளிப்புப் பொருள்கள், பால் ஆகியவற்றையும் [2]மதுரவர்க்கச் சரக்குகளின் கல்க்கமும் சேர்த்து [3]மஹாஸ்னேகம் பக்குவம் செய்து கொள்ள

வேண்டும். நனைத்தல், அப்பியங்கம், மூழ்குதல், உணவுவகை, பானம், நசியம், ஸ்னேஹபஸ்தி ஆகிய வற்றில் இதை உபயோகிக்க வாயுவைப் போக்கும். முற்கூறப்பெற்ற ஸ்னேஹப் பிரயோகம், வியர்ப்பித்தல் ஆகியவையும் நன்கு செய்யப்படின் வாயுவைப் போக்கும்.

குறிப்பு: 1. பத்ரதார்வதிகணத்தின் விளக்கத்தை ஸுத்ர ஸ்தானம் 15-வது அத்தியாயத்தில் காண்க.

2. மதுரவர்க்கத்தின் விளக்கத்தை ஸுத்ர ஸ்தானம் 10-வது அத்தியாயத்தில் காண்க.

3. மஹாஸ்னேஹம் - நெய், தைலம், மாம்ஸ எண்ணெய், எலும்புச்சத்து ஆகியவற்றின் கலவை.

वेगान्तरेषु मूर्धानमसकृच्चास्य रेचयेत् ॥ ३० ॥

अवपीडैः प्रधमनैस्तीक्ष्णैः श्लेष्मनिबर्हणैः ।
श्वसनासु विमुक्तासु तथा संज्ञां स विन्दति ।

வேகங்களுக்கு இடையில் இந்நோயாளிக்கு பல தடவை, நஸ்யம், [1]அவபீடம், தீக்ஷ்ண குணமுள்ளதை யும், கபத்தைப் போக்குபவையுமான [2]பிரதமன நஸ்யம் ஆகியவற்றால் சிரோவிரேசனம் அடிக்கடி செய்விக்க வேண்டும். சுவாஸ நாடிகளில் சிக்கிய கபம் நீங்கு வதால் நினைவு உண்டாகிறது.

குறிப்பு: 1, 2 - அவபீடம், பிரதமனம் ஆகியவை ஸுத்ர ஸ்தானம் அத்தியாயம் 20-ல் சுலோகம் 7, 8 -ல் கூறப்பட்டுள்ளன.

सौवर्चलाभयाव्योषसिद्धं सर्पिश्चलेऽधिके ॥ ३१ ॥

வாயு அதிகரித்த நிலையில் ஸௌவர்ச்சல உப்பு, கடுக்காய், த்ரிகடு, இவை சேர்த்து தயாரிக்கப்பெற்ற நெய்யை பிரயோகிக்கவேண்டும்.

पलाष्टकं तिल्वकतो वरायाः प्रस्थं पलांशं गुरुपञ्चमूलम् ।
सैरण्डसिंहीत्रिवृतं घटेऽपां पक्त्वा पचेत्पादशृतेन तेन ॥ ३२॥

दध्नः पात्रे यावशूकात्त्रिबिल्वैः सर्पिःप्रस्थं हन्ति तत्सेव्यमानम्।
दुष्टान् वातानेकसर्वांगसंस्थान् योनिव्यापद्गुल्मवर्ध्मोदरं च ॥३३॥

**தில்வக கிருதம் :**

பாற்சோற்றி 8 பலம், திரிபலை 16 பலம், மகா பஞ்ச மூலச் சரக்குகள், ஆமணக்கு, கண்டங்கத்திரி, சிவதை ஆகியவை வகைக்கு 1 பலம், இவற்றை 16 பிரஸ்த ஜலத்திலிட்டு நாலில் ஒன்றாய்க் காய்ச்சி அந்தக் கஷாயத்துடன் 4 பிரஸ்தம் தயிர், 3 பலம் யவக்ஷாரம், 1 பிரஸ்தம் நெய் ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகிக்க; தனி உறுப்புக்களை அல்லது உடல் முழுவதையும் சார்ந்த வாயுவைப் போக்கும். மேலும் யோனி நோய், குன்மம், அண்டவிருத்தி, உதரம் ஆகியவையும் நீங்கும்.

குறிப்பு: 1. மகாபஞ்சமூலச் சரக்குகள் ஸூத்ரஸ்தானம். அத்தியாயம் 6-ல் விளக்கப்பட்டுள்ளன.

2. நெய் 2 பிரஸ்தம் சேர்க்குமாறு அருணதத்தர் கூறுவதாக, சில பதிப்புக்களில் காணப்படுகிறது. இந்த விஷயமானது, இரட்டிப்பு பரிபாஷையை கையாண்டதால் இருக்கக்கூடும். சங்க்ரஹத்தில்

உள்ள தில்வக் கிருதயோகம் பெரிதும் மாறு பட்டு இருப்பது கவனிக்கத்தக்கது.

विधिस्तिल्वकवज्ज्ञेयो शम्याकाशोकयोरपि ।

பாற்சோற்றியைப் போலவே *பெருவேம்பு, அசோகம், சேர்த்தும் நெய் பக்குவம் செய்து உபயோகிக்கலாம்.

குறிப்பு: *பெருவேம்புக்குப் பதிலாக (शम्याक) சரக் கொன்றை என்றும் ஒரு பாடம் உண்டு.

चिकित्सितमिदं कुर्याच्छुद्धवातापतानके ॥ ३४ ॥

ससृंष्टदोषे संसृष्टं-

தனித்த வாயுவால் உண்டான அபதானக நோயில் இவ்வாறு சிகித்ஸை செய்யவேண்டும். இருதோஷங் களின் கூட்டால் உண்டான அபதானக நோயில், அவ்விரு தோஷங்களுக்கும் உரிய சிகித்ஸை செய்யவேண்டும்.

-चूर्णयित्वा कफान्विते ।
तुम्बुरूण्यभया हिंगु पौष्करं लवणत्रयम् ॥ ३५ ॥

यवक्राथाम्बुना पेयं हृत्पार्श्वार्त्यपतन्त्रके ।
हिंगु सौवर्चलं शुण्ठी दाडिमं साम्लवेतसम् ॥ ३६ ॥

पिबेद्वा श्लेष्मपवनहृद्रोगोक्तं च शस्यते ।

கபத்துடன் கூடிய வாயுவால் உண்டான அபதானக நோயில், இருதய வலியும், பக்க குலையும் காணப் படின் தூம்பூணி, கடுக்காய், காயம், புஷ்பகரமூலம், இந்துப்பு, ஸௌவர்ச்சல உப்பு, வளையலுப்பு ஆகிய வற்றைப் பொடித்து யவைக் கஷாயத்துடன் பருக

வேண்டும். அல்லது காயம், ஸௌவர்ச்சல உப்பு, சுக்கு, மாதுளை, புளிவஞ்சி இவற்றை யவைக் கஷாயத்துடன் பருகலாம். கபவாதத்தால் உண்டான இருதய நோயில் கூறப்பெற்ற சிகித்ஸையும் சிறந்தது.

आयामयोरर्दितवद्बाह्याभ्यन्तरयोः क्रिया ॥ ३७ ॥

तैलद्रोण्यां च शयनमान्तरोऽत्र सुदुस्तरः ॥ ३८ ॥

**ஆயாம சிகித்ஸை :**

[1]பஹிராயாமம், [2]அந்தராயாமம் இவ்விரண்டுக்கும், [3]அர்த்தித நோய்க்கு உண்டான சிகித்ஸை செய்ய வேண்டும். தைலம் நிரப்பப்பட்ட பெரிய பாத்திரத்தில் படுக்க வேண்டும். அந்தராயாமம் நீங்குவது மிகவும் கடினம்.

குறிப்பு: 1, 2, 3 - இவை நிதானஸ்தானம் 15-ஆவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

அர்த்தித நோய்க்கு சிகித்ஸை, அடுத்து 43-வது சுலோகத்தில் கூறப்படவிருக்கிறது.

அந்தராயாமம் மிகவும் கடினம் என்பதால் பஹிராயாமமும் ஓரளவு கடினமே என்பது குறிப்பிடப்படுகிறது.

विवर्णदन्तवदनः स्रस्तांगो नष्टचेतनः ।
प्रस्विद्यंश्च धनुष्तम्भी दशरात्रं न जीवति ॥ ३९ ॥

பற்கள், முகம் ஆகியவை நிறம் மாறியும், உறுப்புக்கள் நழுவியும் நினைவு நீங்கியும், வியர்த்தும் காணப்படும் பஹிராயாம நோயாளி 10 நாட்களுள் உயிரிழப்பார்.

वेगेष्वतोऽन्यथा जीवेन्मन्देषु विनतो जडः ।
खञ्जः कुणिः पक्षहतः पंकुलो विकलोऽथवा ॥ ४० ॥

இதற்கு மாறான குறிகளுடன் குறைந்த வேகம் உள்ள பஹிராயாம நோயாளி பிழைத்திருப்பினும் கூனனாகவோ, அறிவின்றியோ, ஒருகால் நொண்டியாகவோ, முடவராகவோ, பக்கவாதம் உள்ளவராகவோ, இருகாலும் நொண்டியாகவோ, உறுப்புக் குறைந்தவராகவோ இருப்பர்.

हनुस्रंसे हनू स्निग्धस्विन्नौ स्वस्थानमानयेत् ।

**(ஹனுஸ்ரம்ஸம்) தாடை நழுவிய நோய் :**

தாடை நழுவிய நோயில் நெய்ப்பு உண்டாக்குதல், வியர்ப்பித்தல் ஆகிய சிகித்ஸைகளைச் செய்வித்துத் தாள்களை உரிய இடத்தில் வைக்கவேண்டும்.

उन्नामयेच्च कुशलश्चिबुकं विवृते मुखे ॥ ४१ ॥

नामयेत्संवृते शेषमेकायामवदाचरेत् ।

நிபுணரான வைத்தியர் வாய் திறந்த நிலையில் இருந்தால் முகவாய்க் கட்டையை உயர்த்திவைக்க வேண்டும். வாய் இறுக மூடியிருந்தால் முகவாயை கீழ் நோக்கித் தள்ள வேண்டும். அர்த்தித நோயில் செய்வது போல் மற்ற சிகித்ஸைகளையும் செய்ய வேண்டும்.

जिह्वास्तम्भे यथावस्थं कार्यं वातचिकित्सितम् ॥ ४२ ॥

நாக்கு தம்பித்திருந்தால் நிலமைக்கேற்றதான வாத சிகித்ஸைகளைச் செய்யவேண்டும்.

**குறிப்பு:** நெய்ப்பு உண்டாக்குதல், வியர்ப்பித்தல் முதலியவை குறிப்பிடப்படுகின்றன.

अर्दिते नावनं मूर्ध्नि तैल श्रोत्राक्षितर्पणम् ।

அர்த்தித நோயில் நஸ்யம், தலையில் [1] எண்ணையிடல், காதிலும், கண்களிலும் எண்ணையிடல் ஆகியவற்றைச் செய்யவேண்டும்.

**குறிப்பு:** 1. தலையில் எண்ணெய் இடுதல் என்பதால் ஸூத்ர.அத்.21-ல் விளக்கப்பட்ட அப்யங்கம் முதலிய நான்கு பிரயோகங்களும் குறிப்பிடப் படுகிறது.

2. நாடீ ஸ்வேதம், சதுப்பு நிலப் பிராணியின் மாமிஸத்தை வைத்துக் கூடுதல் ஆகியவையும் சரகத்தில் கூறப்பட்டுள்ளன.

सशोफे वमनं दाहरागयुक्ते सिराव्यधः ॥ ४३ ॥

வீக்கமும் இருந்தால் வாந்தி செய்விக்கவேண்டும். எரிச்சல், செந்நிறம் ஆகியவையும் காணப்படின் ஸிரையைக் குத்தி ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

स्नेहनं स्नेहसंयुक्तं पक्षाघाते विरेचनम् ।

பக்ஷவாத நோயில் நெய்ப்பு *உண்டாக்குதலும், நெய்ப்புக் கலந்த விரேசனமும் செய்விக்க வேண்டும்.

**குறிப்பு:** ⋆வியர்ப்பித்தலும் (स्वेदनम्) செய்விக்க வேண்டுமென்றும் ஒரு பாடம் உண்டு.

अवबाहौ हितं नस्यं स्नेहश्चोत्तरभक्तिकः ॥ ४४ ॥

*அபபாஹுகம் நோயில் நசியமும், உணவிற்குப்பின் நெய்ப்புப் பொருளைப் பருகுதலும் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: *அபபாஹுகம் நிதானஸ்தானம் 15-ஆவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஆமங்கலக்காத நிலையிலேயே இந்த சிகித்ஸை ஏற்றதாகும் என்று, சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது. ஆமங்கலந்த நிலையில் உபவாசம் ஏற்றது என்பது கருத்து.

ऊरुस्तम्भे तु न स्नेहो न च संशोधनं हितम् ।
श्लेष्माममेदोबाहुल्याधुक्त्या तत्क्षपणान्यतः ॥ ४५ ॥

कुर्याद्रक्षोपचारश्च यवश्यामाककोद्रवाः ।
शाकैरलवणैः शस्ताः किंचितैलैर्जलैः शृतैः ॥ ४६ ॥

जांगलैरघृतैर्मांसैर्मध्वम्भोरिष्टपायिनः ।
वत्सकादिर्हरिद्रादिर्वचादिर्वा ससैन्धवः ॥ ४७ ॥

आढ्यवाते सुखाम्मोभिः पेयः षड्धरणोऽथवा ।

**(ஊருஸ்தம்பம்) தொடை தம்பித்தல் :**

(ஊருஸ்தம்பம்) தொடை தம்பித்த நோயில் கபம், ஆமதோஷம், கொழுப்பு ஆகியவை அதிகரித்திருப்பதன் காரணமாக, நெய்ப்புச் சிகித்ஸை, சோதன சிகித்ஸை ஆகியவை ஏற்றவையல்ல. ஆகையால் உத்தியாக கபம் முதலியவற்றைக் குறைக்கும் சிகித்ஸைகளைச் செய்வித்த பிறகு, சிறிதே எண்ணெய் கலக்கப்பட்ட நீரில், பக்குவம் செய்யப்பட்டதும், சிறிதே உப்புக் கலக்கப்பட்டதுமான காய்வகைகளுடன் யவை, சாமை, வரகு ஆகியவை

உண்பதற்கு ஏற்றவையாகும். நெய் கலப்பின்றி வறண்ட பிரதேசத்துப் பிராணியின் மாமிஸத்துடனும், யவை, சாமை, கேழ்வரகு இவற்றின் உணவு ஏற்றதாகும். தேன் கலந்த நீர், அரிஷ்டம் ஆகியவற்றைப் பருகச் செய்யலாம். இத்தகைய வறண்ட சிகித்ஸை ஏற்றதாகும். [1]வத்ஸகாதிகணம், [2]ஹரித்ராதிகணம், [3]வசாதிகணம், இவற்றுள் ஒன்றின் சூரணத்துடன் இந்துப்பு கலந்து வெந்நீருடன் பருக வேண்டும். அல்லது ஷட் தரண சூர்ணத்தை வெந்நீருடன் பருகவேண்டும்.

**குறிப்பு:** *1, 2, 3* - ஆகியவை ஸூத்ரஸ்தானம் 15-ஆவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஷட்தரணம் - சுலோகம் 14-ல் விளக்கப்பட்டுள்ளது.

लिह्यात्क्षौद्रेण वा श्रेष्ठाचव्यतिक्ताकणाघनान् ॥ ४८ ॥

कल्कं समधु वा चव्यपथ्याग्निसुरदारुजम् ।
मूत्रैर्वा शीलयेत्पथ्यं गुग्गुलुं गिरिसम्भवम् ॥ ४९ ॥

அல்லது திரிபலை, செவ்வியம், கடுகரோஹிணீ, திப்பிலி, கோரைக்கிழங்கு இவற்றின் கல்க்கத்தை யாவது, சல்வியம், கடுக்காய், கொடிவேலி, தேவதாரு இவற்றின் கல்க்கத்தையாவது, தேன்கலந்து பருக வேண்டும். கடுக்காய், குக்கில், சிலாஜது இவற்றுள் ஒன்றைப் பசு நீருடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

व्योषाग्निमुस्तत्रिफलाविडङ्गैर्गुग्गुलुं समम् ।
खादन् सर्वान् जयेद्व्याधीन् मेदःश्लेष्मामवातजान् ॥ ५०॥

திரிகடு, கொடிவேலி, கோரைக்கிழங்கு, திரிப்லை, வாய் விளங்கம் இவற்றைச் சூரணித்து அவற்றிற்கு சம

அளவு குக்கில் சேர்த்து உட்கொண்டால் கொழுப்பு, கபம், ஆமவாதம் ஆகியவை காரணமாக உண்டான எல்லா நோய்களும் நீங்கும்.

शाम्यत्येवं कफाक्रान्तः समेदस्कः प्रभञ्जनः ।
क्षारमूत्रान्वितान् स्वेदान् सेकानुद्वर्तनानि च ॥ ५१ ॥

कुर्याल्लिह्याच मूत्राढ्यैः करञ्जफलसर्षपैः ।
मूलैर्वाऽप्यर्कतर्कारीनिम्बजैः ससुराह्वयैः ॥ ५२ ॥

सक्षौद्रसर्षपापक्कलोष्टवल्मीकमृत्तिकैः ।
कफक्षयार्थं व्यायामे सह्ये चैनं प्रवर्तयेत् ॥ ५३ ॥

स्थलान्युल्लंघयेन्नारीः शक्तितः परिशीलयेत् ।
स्थिरतोयं सरः क्षेमं प्रतिस्रोतो नदीं तरेत् ॥ ५४ ॥

श्लेष्ममेदःक्षयै चात्र स्नेहादीनवचारयेत् ।
स्थानदूष्यादि चालोच्य कार्या शेषेष्वपि क्रिया ॥ ५५ ॥

கபம், கொழுப்பு ஆகியவற்றுடன் கூடிய வாத நோய், இவ்வித சிகித்ஸை முறையால் நீங்கும். க்ஷாரம், மூத்ரம் ஆகியவற்றைக் கலந்து வியர்ப்பித்தல், (ஸேகம்) ஊற்றுதல் தேய்த்துக்குளித்தல் முதலியவற்றைப் பிரயோகிக்க வேண்டும். புங்கங்காய், கடுகு இவற்றை அரைத்து அதிக அளிவில் பசு நீரில் கலக்கிப் பூசவேண்டும். அல்லது எருக்கு, முன்னை, வேம்பு, இவற்றின் வேருடன் தேவதாரு, தேன், கடுகு, சூளையிலிடப்படாத ஓட்டின் துண்டு, புற்று மண் இவற்றைச் சேர்த்து அரைத்து கபம் குறைவதற்காக பூசவேண்டும். நோயாளியை இயன்ற அளவு உடற் பயிற்சியில் ஈடுபடச் செய்ய வேண்டும். உயரத் தாண்டிக் குதிக்கலாம். சக்திக்கேற்ப ஸ்த்ரீயுடன் சேரலாம். அபாய

மற்றதும், ஓட்டமில்லாதது மான ஏரிகளிலும், ஆறுகளில் எதிர்ப்புறமாகவும் நீந்தலாம். கபமும், கொழுப்பும் குறைந்த பின் நெய்ப்புப் பொருள் முதலியவற்றை உபயோகிக்கவேண்டும். மற்ற வாத நோய்களிலும் இடம், (ரஸம், ரத்தம் முதலிய) தாது *முதலியவற்றிற்கேற்ப சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: *தாது முதலிய என்பதால் ஆவரணம் முதலியவை குறிப்பிடப்படுகின்றன.

सहचरं सुरदारु सनागरं क्वथितमम्भसि तैलविमिश्रितम् ।
पवनपीडितदेहगतिः पिबन् द्रुतविलम्बितगो भवतीच्छया ॥५६॥

வாயுவால் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளி [1]கருங்குறிஞ்சி, தேவதாரு, சுக்கு இவற்றை நீரிலிட்டுக் காய்ச்சி, கஷாயம் தயாரித்து தைலம் கலந்து பருக; விருப்பம் போல் [2]விரைவாகவோ, மெதுவாகவோ நடக்க இயலும்.

குறிப்பு: 1. இங்கு கருங்குறிஞ்சி முதலியவை ஒரே விதமாகக் கூறப்பட்டிருப்பினும், கருஞ்குறிஞ்சி 3 பங்கு, தேவதாரு 2 பங்கு, சுக்கு 1 பங்கு என்ற விகிதத்தில் பிரயோகம் செய்வது சம்பிரதாயமாகும்.

2.(இங்கு மூலச் செய்யுளில் குணத்தைக் குறிப்பிடும் வாயிலாக द्रुतविलम्बित என சந்தத்தின் பெயரும் இடம் பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது).

रास्नामहोपधद्वीपिपिप्पलीशठिपौष्करम् ।
पिष्ट्वा विपाचयेत्सर्पिर्वातरोगहरं परम् ॥ ५७ ॥

**ராஸ்னாதி கிருதம் :**

சிற்றரத்தை, சுக்கு, கொடிவேலி, திப்பிலி, பூலாங் கிழங்கு, புஷ்கரமூலம், இவற்றின் கல்க்கம் சேர்த்து நெய் பக்குவம் செய்து பருக விசேஷமாக வாத நோய்கள் நீங்கும்.

निम्बामृतावृषपटोलनिदिग्धिकानां भागान्
पृथक् दश पलान् विपचेद्धटेऽपाम्।
अष्टांशशेषितरसेन पुनश्च तेन प्रस्थं घृतस्य
विपचेत्पिचुभागकल्कैः ॥ ५८ ॥

पाठाविडंगसुरदारुगजोपकुल्याद्वि-
क्षारनागरनिशामिशिचव्यकुष्ठैः ।
तेजोवतीमरिचवत्सकदीप्यकाग्निरो-
हिण्यरुष्करवचाकणमूलयुक्तैः ॥ ५९ ॥

मंजिष्ठयाऽतिविषया विषया यवान्या
संशुद्धगुग्गुलुपलैरपि पञ्चसंख्यैः ।
तत्सेवितं प्रधमति प्रबलं समीरं सन्ध्यस्थि-
मज्जगतमप्यथ कुष्ठमीदृक् ॥ ६० ॥

नाडीव्रणार्बुदभगन्दरगण्डमालाजत्रूर्ध्वसर्व-
गदगुल्मगुदोत्थमेहान् ।
यक्ष्मारुचिश्वसनपीनसकासशोफहृत्पा-
ण्डरोगमदविद्रधिवातरक्तम् ॥ ६१ ॥

**[1]குக்கிலுதிக்த கிருதம் :**

வேம்பு, சீந்தில், ஆடாதோடை, பேய்ப்புடல், கண்டங் கத்திரி ஆகியவை வகைக்கு 10 பலம் எடுத்து 16 பிரஸ்தம்,

ஜலத்திலிட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாக குறுக்கிக் கொள்ள வேண்டும். பிறகு அந்த கஷாயத்துடன் நெய் 1 [2]பிரஸ்தம், வட்டத்திருப்பி, வாய்விளங்கம், தேவதாரு, யானைத் திப்பிலி, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், சுக்கு, மஞ்சள், சதகுப்பை, சனியம், கோஷ்டம், வாலுளுவை, மிளகு, வெட்பாலையரிசி, ஜீரகம், கொடிவேலி, கடுகரோஹிணீ, சேங்கொட்டை, வசம்பு, திப்பிலி, கண்டதிப்பிலி, சிற்றரத்தை, மஞ்சட்டி, அதிவிடயம், கலப்பைக் கிழங்கு எனச் சிலர் சொல்வர்) ஓமம் இவை வகைக்கு ¼ பலம், சுத்திசெய்த குக்கில் 5 பலம் ஆகியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க, பலம் வாய்ந்ததும், பூட்டுக்கள், எலும்பு, எலும்புச்சத்து ஆகியவற்றில் பரவியதுமான வாத நோயையும், அத்தகைய குஷ்ட நோயையும் நீக்கும். புரை, அற்புதம், பவுத்ரம், கண்டமாலை, கழுத்துக்கு மேல் பாகத்திலுண்டாகும் நோய்கள், குன்மம், மூலம், மேகம், க்ஷயம், ருசியின்மை, ச்வாஸம், பீனிசம், காஸம், வீக்கம், ஹிருதய நோய், பாண்டு, வெறி, வித்ருதிக்கட்டி, வாதரத்தம் ஆகியவற்றையும் நீக்கும்.

குறிப்பு: 1. இதை பஞ்சதிக்த குக்குலு கிருதம் என்றும் கூறுவர்.

2. நெய்யின் அளவு 32 பலம் என இந்து கூறுகிறார். கல்க்கப்பொருள்கள் அதிக அளவில் காணப்படுவதால் இங்கு நெய்யின் அளவு 1 பிரஸ்தம் என்றிருப்பதை இரட்டிப்பு பரிபாஷையால் இரண்டு பிரஸ்தம் (32 பலம்) என்று கொள்ளவேண்டும் என்பது, அதன் கருத்தாகும். அவ்வாறே கஷாயத்தின் அளவிலும்,

நெய்யின் அளவிற்கேற்ப ஓரளவு அமைவதற்காக ஒரு த்ரோணம் (16 பிரஸ்தம்) என்றிருப்பதையும் இரட்டிப்பு பரிபாஷையால் 32 பிரஸ்தம் எனக்கொண்டு கஷாயம் 4 பிரஸ்தமாக அமையும்படி செய்து கொள்வதும் சம்பிரதாயம்.

बलाबिल्वशृते क्षीरे घृतमण्डं विपाचयेत् ।
तस्य शुक्तिः प्रकुञ्चो वा नस्यं वाते शिरोगते ॥ ६२ ॥

சிற்றாமுட்டி, பில்வவேர், இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பெற்ற பாலுடன் நெய்த் தெளிவு கலந்து பக்குவம் செய்து தலையில் வாயு அதிகரித்த நிலையில், உரியவாறு கூறப்பட்ட அளவுப்படி ½ பலம் அல்லது 1 பலம் நஸ்யமாக உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: शिरोगते என்ற மூலச்சொல், தலையில் உள்ள வாயு என்ற மூலச்சொல்லுக்கு (बाहुशिरोगते) தோள் பட்டையிலுள்ள வாயு என்றும் பொருள் கொள்ளலாம் என்று இந்து கூறுகிறார்.

तद्वत्सिद्धा वसा नक्रमत्स्यकूर्मचुलूकजा ।
विशेषेण प्रयोक्तव्या केवले मातरिश्वनि ॥ ६३ ॥

தனித்த வாத தோஷத்தில் முதலை, மீன், ஆமை, சுறா இவற்றின் மாம்ஸ எண்ணையையும் இவ்வாறு பக்குவம் செய்து உபயோகிக்க விசேஷ பலன் கிட்டும்.

குறிப்பு: இது உட்ப்ரயோகத்திற்கும் ஏற்றதென சங்க்ரஹத்தில் காணப்படுகிறது.

जीर्णं पिण्याकं पञ्चमूलं पृथक् च क्वाथ्यं क्वाथाभ्यामेकतस्तैलमाभ्याम् ।
क्षीरादष्टांशं पाचयेत्तेन पानाद् वाता नश्येयुः श्लेष्मयुक्ता विशेषात् ॥६४॥

நாட்பட்ட பிண்ணாக்கின் கஷாயம், பஞ்சமூலச் சரக்குக் கஷாயம், ஆகியவை தயாரித்துக் கொள்ள வேண்டும். இவ்விரு கஷாய அளவுக்கு சமமாக தைலமும் தைலத்துக்கு 8 மடங்கு பாலும் சேர்த்துக் காய்ச்சிப் பருக; வாத நோய்கள் நீங்கும். கபம் கலந்த வாத நோய்கள் விசேஷமாக நீங்கும்.

**குறிப்பு:** பஞ்சமூல கஷாயத்தில் பிண்ணாக்கை வேக வைத்து, அந்த நீரை வடிக்கட்டி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சரகத்தில் காணப் படுகிறது.

இந்த யோகத்தில் உள்ள பஞ்சமூலம் என்ற சொல் மகாபஞ்சமூலத்தை (பில்வம், முன்னை, பெரு வாகை, பெருங்குமிழ், பாதிரி இவற்றின் வேரை) குறிப்பிடுவதாய் அருணதத்தர் உரையில் (சில புஸ்தகங்களில்) காணப்படுகிறது. ஆனால் ஜதூ கர்ணஸம்ஹிதையில் சிறுபஞ்சமூலத்தைக் குறிப்பிட்டிருப்பதால், இங்கு உள்ளதும் அதுவே ஆகும்.

(சிறுபஞ்சமூலம் - ஓரிலை, மூவிலை, கண்டங் கத்திரி, முள்ளுக்கத்திரி, நெருஞ்சில்)

प्रसारिणीतुलाक्वाथे तैलप्रस्थं पयःसमम् ।
द्विमेदामिशिमंजिष्ठकुष्ठरास्नाकुचन्दनैः ॥ ६५ ॥

जीवकर्षभकाकोलीयुगुलामरदारुभिः ।
कल्कितैर्विपचेत्सर्वमारुतामयनाशनम् ॥ ६६ ॥

**பிரஸாரிணி தைலம் :**

100 பலம் முதியோர் கூந்தல் எடுத்து முறைப்படி கஷாயமிட்டு 1 பிரஸ்தம் தைலம், 1 பிரஸ்தம் பால்

ஆகியவற்றையும், மேதா, மகாமேதா, சதகுப்பை, மஞ்சிட்டி, கோஷ்டம், சிற்றரத்தை, சிவப்புச்சந்தனம், ஜீவகம், ருஷபகம், காகோலீ, க்ஷீரகாகோலீ, தேவதாரு இவற்றின் கல்க்கத்தையும் சேர்த்துக் காய்ச்சி உபயோகிக்க எல்லாவித வாத நோய்களும் நீங்கும்.

குறிப்பு: கல்க்கச் சரக்குகளின் மொத்த அளவு சாமான்ய பரிபாஷையை அனுசரித்து, தைலத்துக்கு நாலில் அல்லது ஆறில் ஒரு பங்காகும்.

समूलशाखस्य सहाचरस्य तुलां समेतां दशमूलतश्च ।
पलानि पंचाशदभीरुतश्च पादावशेषं विपचेद्वहेऽपाम् ॥ ६७ ॥

तत्र सेव्यनखकुष्ठहिमैलास्पृक्प्रियंगुनलिकाम्बुशिलाजैः ।
लोहितानलदलोहसुराह्वैः कोपनामिशितुरुष्कनतैश्च ॥ ६८ ॥

तुल्यंक्षीरं पालिकैस्तैलपात्रं सिद्धं कृच्छ्रान् शीलितं हन्ति वातान् ।
कम्पाक्षेपस्तम्भशोपादियुक्तान् गुल्मोन्मादौ पीनसं योनिरोगान् ॥६९॥

ஸஹஸராதி தைலம் :

கருங்குறிஞ்சி மூலம் 100 பலம், தசமூலம் மொத்தம் 100 பலம், தண்ணீர்விட்டான் கிழங்கு 50 பலம், இவற்றை 64 பிரஸ்த நீரிலிட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி அதில் விளாமிச்சை, புலிநகம், கோஷ்டம், சந்தனம், ஏலம், சோரகப்புல், ஞாழல், *ஜடாமாஞ்சில், வெட்டிவேர், கல்மதம், மஞ்சிட்டி, கந்தமாம்ஸீ, அகில், தேவதாரு, *சிவப்பு அலரி, சதகுப்பை, குந்துருக்கம், தகரம் இவை வகைக்கு 1 பலம் கல்கமாக்கி சேர்ப்பதுடன், 4 பிரஸ்தம் எண்ணையும் 4 பிரஸ்தம் பாலும் சேர்த்துக் காய்ச்சி உபயோகிக்க; நடுக்கம், (ஆக்ஷேபவாதம்) உதறல்,

திமிர்த்தல், இளைப்பு, இவற்றுடன் கூடிய கஷ்டமான வாத நோய்களும், குன்மம், பைத்தியம், பீனிசம், யோனி நோய்கள் ஆகியவையும் நீங்கும்.

குறிப்பு: नलिका (சடாமாஞ்சில்) என்ற மூலச்சொல்லுக்கு பவழக்கொடி என்றும், உத்தாமணி என்றும், कोपना (சிவப்பு அலரி) என்பதற்கு திருவட்டப் பிசின் என்றும் உரை கொள்வதுண்டு.

सहाचरतुलायास्तु रसे तैलाढकं पचेत् ।
मूलकल्काद्दशपलं पयो दत्त्वा चतुर्गुणम् ॥ ७० ॥

अथवा नतपड्ग्रन्थास्थिराकुष्ठसुराह्वयान् ।
सैलानलदशैलेयशताह्वारक्तचन्दनान् ॥ ७१ ॥

सिद्धेऽस्मिन् शर्कराचूर्णादष्टादशपलं क्षिपेत् ।
भेडस्य सम्मतं तैलं तत्कृच्छ्रानिलामयान् ॥ ७२ ॥

वातकुण्डलिकोन्मादगुल्मवर्ध्मादिकान् जयेत् ।

100 பலம் குறிஞ்சி எடுத்து கஷாயமிட்டு அதில் 4 பிரஸ்தம் எண்ணெயை 10 பலம் [1]குறிஞ்சிவேர்க் கல்க்கத்துடனாவது, தகரம், வசம்பு, ஓரிலை, கோஷ்டம், தேவதாரு, ஏலம், வெட்டிவேர், கல்மதம், சதகுப்பை, செஞ்சந்தனம் இவற்றை வகைக்கு 1 பலம் எடுத்து கல்கமாக்கியாவது பால் 16 பிரஸ்தம் கலந்து தைலம் காய்ச்சவேண்டும். காய்ச்சியபின் சர்க்கரை 18 பலம் சேர்க்கவேண்டும். இது பேளாசார்யருக்கு சம்மதமான தைலமாகும். இது கஷ்டமான வாதநோய்களையும், வாத [2]குண்டலிகா, பைத்தியம், குன்மம், அண்டவிருத்தி முதலியவற்றையும் போக்கும்.

குறிப்பு: 1. मूलकल्कम् மூலகல்கம் என்ற மூலச்சொல்லுக்கு முள்ளங்கியின் கல்க்கம் என்பது ஜதூகர்ணரின் உரையை அனுசரித்ததாகும்.

2. வாதகுண்டலிகா - நிதானம் 9-வது அத்தியாயம் சுலோகம் 25-ல் விளக்கப்பட்டுள்ளது.

இங்கு கஷாயத்தின் அளவு கூறப்படவில்லை. சங்க்ரஹத்தை அனுசரித்து பொருள்களை 64 பிரஸ்த நீரிலிட்டு, 16 பிரஸ்தமாகக் காய்ச்சி கஷாயம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

बलाशतं च्छिन्नरुहापादं रास्नाष्टभागिकम् ॥ ७३ ॥

जलाढकशते पक्त्वा शतभागस्थिते रसे ।
दधिमस्त्विक्षुनिर्यासशुक्तैस्तैलाढकं समैः ॥ ७४ ॥

पचेत्साजपयोर्धांशं कल्कैरेभिः पलोन्मितैः ।
शठीसरलदार्वेलामंजिष्ठागुरुचन्दनैः ॥ ७५ ॥

पद्मकातिबलामुस्ताशूर्पपर्णीहरेणुभिः ।
यष्ट्याह्वासुरसव्याघ्रनखर्षभकजीवकैः ॥ ७६ ॥

पलाशरसकस्तूरीनलिकाजातिकोशकैः ।
स्पृक्काकुंकुमशैलेयजातीकटुफलाम्बुभिः ॥ ७७ ॥

त्वक्कुन्दरुककर्पूरतुरुष्कश्रीनिवासकैः ।
लवंगनखकंकोलकुष्ठमांसीप्रियंगुभिः ॥ ७८ ॥

स्थौणेयतगरध्यामवचामदनकप्लवैः ।
सनागकेसरैः सिद्धे दद्याचात्रावतारिते ॥ ७९ ॥

पत्रकल्कं ततः पूतं विधिना तत्प्रयोजितम् ।
कासं श्वासं ज्वरं च्छर्दिं मूर्च्छां गुल्मक्षतक्षयान् ॥ ८०॥

प्लीहशोपमपस्मारमलक्ष्मीं च प्रणाशयेत् ।
बलातैलमिदं श्रेष्ठ वातव्याधिविनाशनम् ॥ ८१ ॥

*பலா தைலம் :*

சிற்றாமுட்டி, 100 பலம் சீந்தில் 25 பலம், சிற்றரத்தை 12½, இவற்றை 400 பிரஸ்தம் ஜலத்திலிட்டு [1]நூறில் ஒரு பங்காகக் குறுக்கி அதனுடன் தயிர், தயிர்த் தெளிவு, கருப்பஞ்சாறு, காடி ஆகியவை வகைக்கு 4 பிரஸ்தமும், தைலம் 4 பிரஸ்தமும், ஆட்டுப்பால் 2 பிரஸ்தமும் சேர்ப்பதுடன், பூலாங்கிழங்கு, ஸரள தேவதாரு, தேவதாரு, ஏலம், மஞ்சட்டி, அகில், சந்தனம், பதிமுகம், பேராமுட்டி, கோரைக்கிழங்கு, காட்டுளுந்து, காட்டுப்பயறு, அரேணுகம், அதிமதுரம், துளஸி, புலிநகம், ருஷபகம், ஜீவகம், பச்சிலை, கரியபோளம், கஸ்தூரி, பவழக்கொடி, ஜாதிப்பத்திரி, (ப்ராம்மீ அல்லது) சோரகப்புல், குங்குமப்பூ, கல்மதம், ஜாதிமல்லிகை, சிறுதக்கோலம் அல்லது பேய்ச்சுரை, வெட்டிவேர், லவங்கப்பட்டை, குந்துருக்கம், பச்சைக் கர்ப்பூரம், உவர்மண், திருவட்டப்பிசின், கிராம்பு, அரிநகம், தக்கோலம், கோஷ்டம், சடாமாஞ்சில், ஞாழல், தூணியாங்கம், தகரம், நான்முகப்புல், வசம்பு, தேன்மெழுகு, முத்தக்காசு, சிறுநாகப்பூ இவை வகைக்கு 1 பலம் எடுத்து கல்கமாக்கிச் சேர்த்து தைலம் காய்ச்சி இறங்கிய பின் [2]பத்ரகல்க்கம் கலந்து வடிகட்டவேண்டும். இதை முறைப்படி உபயோகிக்க இருமல், ச்வாஸம், ஜ்வரம், வாந்தி, மூர்ச்சை, குன்மம், நெஞ்சுப்புண், க்ஷய நோய், மண்ணீரல் வீக்கம், இளைப்பு, காக்கை வலிப்பு,

அலக்குமி (அலக்ஷ்மீ) ஆகியவை நீங்கும். இந்த பலா தைலம் வாத நோயை நீக்குவதில் மிகச் சிறந்த தாகும்.

குறிப்பு: 1. दशभागस्थिते பத்தில் ஒருபங்காகக் குறுக்கி என்றும் ஒரு பாடம் உண்டு.

2. தைலத்தில் சேர்க்கப்படுகிற மணப்பொருள் களின் கல்க்கம் பத்ரகல்கம் எனப்படும். ஆதலால் இங்கு பச்சைக் கர்ப்பூரம் முதலிய மணப் பொருள்களை தனியே இடித்துக் கல்க்கமாக்கி தைலம் தயாரானபின் அதில் சேர்க்கவேண்டும்.

கல்க்கங்கள் அதிகம் இருப்பதால், திரவத்தின் அளவு விஷயத்தில் இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்தல் நலம்.

पाने नस्येऽन्वासनेऽभ्यंजने च स्नेहाः काले सम्यगेते प्रयुक्ताः।
दुष्टान् वातानाशु शान्तिं नयेयुर्वन्ध्या नारीः पुत्रभाजश्च कुर्युः॥८२॥

இங்கு கூறப்பெற்ற தைலங்களைப் பருகுதல், நசியம், அனுவாசன பஸ்தி, அப்யங்கம் ஆகியவகைகளில் தகுந்த காலத்தில் முறையாகப் பிரயோகிக்க கடுமையான வாத நோய்களையும் விரைவில் போக்கும். மலடான பெண்ணும் மக்களைப் பெறுவாள்.

स्नेहस्वैदैर्द्रुतः श्लेष्मा यदा पक्वाशये स्थितः ।
पित्तं वा दर्शयेद्रूपं बस्तिभिस्तं विनिर्जयेत् ॥ ८३ ॥

நெய்ப்பு சிகித்சை, வியர்ப்பித்தல் ஆகியவற்றால் இளகிய கபமாவது பித்தமாவது, பக்குவாசயத்தில் தன்

குணங்களை வெளிப்படுத்துகையில் பஸ்தி செய்வித்து அந்த தோஷத்தை வெல்ல வேண்டும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां चतुर्थे चिकित्सास्थाने वातव्याधिचिकित्सा नाम एकविंशोऽध्यायः ॥ २१ ॥

சிகித்ஸாஸ்தானம் - இருபத்து ஒன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

★★★★★

# ॥ चिकित्सास्थानम् - சிகித்ஸாஸ்தானம் ॥

## द्वाविंशोऽध्यायः - அத்தியாயம் - 22

अथाऽतो वातशोणितचिकित्सितं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து வாத ரத்த நோய் சிகித்ஸை விளக்கப்படுகிறது. இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

**வாத ரத்த சிகித்ஸை :**

ரத்தத்துடன் கலந்த வாயுவால் உண்டாகும் வாதரத்த நோயும், வாத நோய்ப் பிரிவைச் சேர்ந்ததேயாகும். எனினும் ரத்தத்துடன் கலந்து கோபமடைந்த நிலையில் ஏற்படக்கூடிய பல விசேஷங்கள் கூறப்பட வேண்டியிருப்பதால் தனித்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

वातशोणितिनो रक्तं स्निग्धस्य बहुशो हरेत् ।
अल्पाल्पं पालयन् वायुं यथादोषं यथाबलम् ॥ १ ॥

## ரத்தத்தை வெளியேற்றுதல் :

வாதரக்த நோயாளிக்கு நெய்ப்புச் சிகித்ஸை செய்விக்க வேண்டும். வாயு கோபமடையாதவாறு தோஷம், பலம், இவற்றிற்கேற்ப பல தடவைகளில் சிறிது சிறிதாக ரத்தத்தை வெளியேற்றவேண்டும்.

குறிப்பு: ரத்தம் ஒரே தடவையில் அதிக அளவு வெளியேற்றப்படின், வாயு கோபமடையும். அது காரணமாகவே வாயு கோபமடையாதவாறு கவனித்துக் கொண்டு என்றும், சிறிது சிறிதாக என்றும் கூறப்பட்டது.

रुग्रागतोददाहेषु जलौकोभिर्विनिर्हरेत् ।
शृङ्गतुम्बैश्चिमिचिमाकण्डूरुग्दूयनान्वितम् ॥ २ ॥

प्रच्छानेन सिराभिर्वा देशाद्देशान्तरं व्रजेत् ।

வலி, செந்நிறம், குத்துவலி, எரிச்சல் ஆகியவை காணப்பட்டால் அட்டை மூலமும், கடுகு பூசியது போன்ற விறுவிறுப்பான உணர்வு, அரிப்பு, வலி, காந்தல் இவற்றுடன் கூடியிருந்தால் கொம்பு, சுரைக் குடுக்கை, ஆகியவற்றின் மூலமாகவும். இடம் விட்டு இடம் பெயருவதாயின் பொளிதல் அல்லது ஸிரையைக் குத்துதல் மூலமாகவும் ரத்தத்தை வெளியேற்றவேண்டும்.

अंगग्लानौ तु न स्राव्यं रूक्षं वातोत्तरं च यत् ॥ ३ ॥

## ரத்த வெளியேற்றம் தவிர்க்க வேண்டிய நிலை :

உறுப்புக்களில் வாட்டம், வறட்சி, வாயு அதிகரித்த நிலை இவற்றில் ரத்தத்தை வெளியேற்றக்கூடாது.

गम्भीरं श्वयथुं स्तम्भकम्भंस्नायुसिरामयान् ।
ग्लानिमन्यांश्च वातोत्थान् कुर्याद्वायुरसृक्क्षयात् ॥ ४ ॥

ரத்தம் குறைவதால் வாயுவானது (அடிப்படை) ஆழமுள்ள வீக்கம், தம்பிதம், நடுக்கம், தசை நார் நோய், ஸிரை நோய், ஓய்ச்சல், மற்றும் வாத நோய்கள் ஆகியவற்றை உண்டாக்கும்.

विरेच्यः स्नेहयित्वा तु स्नेहयुक्तैर्विरेचनैः ।

நோயாளி விரேசனத்துக்குத் தகுந்தவராயின் நெய்ப்புச் சிகித்ஸை செய்வித்த பிறகு, நெய்ப்புக் கலந்த விரேசனப் *பொருளால் விரசேனம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: *வறட்சித்தன்மை உள்ளவற்றாலும் விரேசனம் செய்விக்கலாமென சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

वातोत्तरे वातरक्ते पुराणं पाययेद्घृतम् ॥ ५ ॥

வாயு அதிகம் கேடு அடைந்த வாத-ரத்த நோயில் *நாட்பட்ட நெய்யை பருகச் செய்யவேண்டும்.

குறிப்பு: *பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட நெய்யை உபயோகிக்கவேண்டும் என இந்து கூறுகிறார்.

श्रावणीक्षीरकाकोलीक्षीरिणीजीवकैः समैः ।
सिद्धं सर्षपकैः सर्पिः सक्षीरं वातरक्तनुत् ॥ ६ ॥

கொட்டைக்கரந்தை, க்ஷீரகாகோலீ, [1]பால்குமிழ், ஜீவகம், ருஷபகம் இவை சம அளவு எடுத்து கல்க்கமாக்கி பால் [2]கலந்து பக்குவம் செய்யப்பட்ட நெய் வாதரத்தத்தை நீக்கும்.

குறிப்பு: 1. சரகத்தில் அதிமதுரம் காணப்படுகிறது. பால் குமிழ் இடம் பெறவில்லை.

2. வேறு திரவங்கள் கூறப்படாமையால் 4 மடங்கு, பால் சேர்க்கப்படவேண்டுமென்று, சக்ரதத்தர் கூறியுள்ளார்.

द्राक्षामधूकवारिभ्यां सिद्धं वा ससितोपलम् ।
घृतं पिबेत्तथा क्षीरं गुडूचीस्वरसे शृतम् ॥ ७ ॥

அல்லது திராக்ஷைக் கஷாயம், இலுப்பைக் [1]கஷாயம் ஆகியவை சேர்த்து நெய் பக்குவம் செய்து சர்க்கரை சேர்த்துப் பருகலாம். சீந்தில் சாறு கலந்து காய்ச்சிய பாலையும் [2]அவ்வாறே பருகவேண்டும்.

குறிப்பு: 1. இலுப்பைப்பூ கஷாயம் என, அருணதத்தர் கூறுவதாக சில பதிப்புகளில் காணப்படுகிறது.

திராக்ஷைக் கஷாயத்தினாலும், இலுப்பைக் கஷாயத்தினாலும், தனித்தனியே நெய் பக்குவம் செய்ய வேண்டுமென்று ஜெஜ்ஜடர் கூறுகிறார்.

मधुक எனப் பாடம் கொண்டு அதிமதுரத்தை குறிப்பிடுவதாகவும் கூறுவர்.

2. அவ்வாறே என்பதால், சர்க்கரை கலந்து பருக வேண்டுமென்பது குறிப்பிடப்படுகிறது.

तैलं पयः शर्करां च पाययेद्वा समूर्च्छितम् ।

அல்லது எண்ணெய், பால், சர்க்கரை இவற்றை நன்கு கலக்கிப் பருகலாம்.

बलाशतावरीरास्नादशमूलैः सपीलुभिः ॥ ८ ॥

श्यामैरण्डस्थिराभिश्च वातार्तिघ्नं शृतं पयः ।

சிற்றாமுட்டி வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, சிற்ற ரத்தை, தசமூலம், உகாக்காய் இவற்றுடனாவது, சிவதை, ஆமணக்கு, ஓரிலை இவற்றுடனாவது பக்குவம் செய்யப் பட்ட பாலைப் பருக; வாயுவால் உண்டான வலி நீங்கும்.

धारोष्णं मूत्रयुक्तं वा क्षीरं दोषानुलोमनम् ॥ ९ ॥

அல்லது கறந்த அளவில் சூடான பாலைப் *பசுநீர் சேர்த்து பருக; தோஷங்கள் கீழ்நோக்கும்.

குறிப்பு: *பாலுக்கு சம அளவு பசுநீர் சேர்க்கவேண்டும் என்று சக்ரபாணிதத்தர் கூறுகிறார்.

पैत्ते पक्त्वा वरीतिक्ता पटोलत्रिफलामृताः ।

**பித்தவாத ரத்த சிகித்ஸை :**

பித்தம் அதிகரித்த வாதசோணித நோயில் தண்ணீர் விட்டான் கிழங்கு, கடுகரோஹிணீ, பேய்ப்புடல், திரி பலை, சீந்தில் இவற்றின் கஷாயத்தைப் பருகவேண்டும்.

குறிப்பு: சர்க்கரையும், தேனும் கலந்து பருகவேண்டுமென இந்து கூறுகிறார்.

पिबेद्घृतं वा क्षीरं वा स्वादुतिक्तकसाधितम् ॥ १० ॥

இனிப்பு வர்க்கம், கைப்பு வர்க்கம் ஆகியவற்றின் சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் அல்லது பாலை பருகலாம்.

குறிப்பு: இனிப்பு வர்க்கம், கைப்பு வர்க்கம் ஆகியவை ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 10-ல் விளக்கப் பட்டுள்ளன.

क्षीरेणैरण्डतैलं च प्रयोगेण पिबेन्नरः ।
बहुदोषो विरेकार्थं जीर्णे क्षीरोदनाशनः ॥ ११ ॥

அதிகரித்த தோஷமுள்ளவர், விரேசனத்திற்காக பாலுடன் ஆமணக்கு எண்ணெய் கலந்து பருகுவதை பழக்கமாகக் கொள்ளவேண்டும். இது ஜீரணித்தபின் பாலன்னம் உட்கொள்ளவேண்டும்.

कषायमभयानां वा पाययेद्घृतभर्जितम् ।
क्षीरानुपानं त्रिवृताचूर्णं द्राक्षारसेन वा ॥ १२ ॥

அல்லது கடுக்காய் கஷாயத்தை நெய் *தாளித்துப் பருகலாம். அல்லது சிவதைவேர் சூர்ணத்தைப் பாலுடனாவது, திராக்ஷை ரஸத்துடனாவது பருகவேண்டும்.

குறிப்பு: *நெய் தாளிக்கப்பட்ட கடுக்காய் கஷாயத்துக்கு பால் அனுபானம் என இந்து கூறுகிறார்.

निर्हरेद्वा मलं तस्य सघृतैः क्षीरबस्तिभिः ।

அல்லது வாதரத்த நோயுள்ளவருக்கு *பால் பஸ்தியுடன் நெய் கலந்து பிரயோகித்து மலத்தை வெளியேற்றலாம்.

குறிப்பு: *பால் பஸ்தி என்பதால் பாலை முக்கியமாகக் கொண்ட பஸ்தி அல்லது கல்பஸ்தானம் 4-ஆம் அத்தியாயம் 32-ஆம் சுலோகம் தொடங்கி கூறப்படவிருக்கிற யாபன பஸ்தி குறிப்பிடப் படுகிறது.

न हि बस्तिसमं किंचिद्वातरक्तचिकित्सितम् ॥ १३ ॥

विशेषात्पायुपार्श्वोरुपर्वास्थिजठरार्तिषु ।

வாதசோணித நோயில் பஸ்திப் பிரயோகத்திற்கு ஈடான வேறொரு சிகித்ஸை இல்லை. புட்டம், பக்கங்கள், தொடை, பூட்டுக்கள், கோஷ்டம் ஆகியவற்றில் வலி உண்டானால் முக்கியமாக பஸ்தி சிகித்ஸையை செய்யவேண்டும்.

मुस्ताधात्रीहरिद्राणां पिबेत्काथं कफोल्बणे ॥ १४ ॥

सक्षौद्रं त्रिफलाया वा गुडूचीं वा यथा तथा ।

**கபம் அதிகரித்த வாதரத்த நோய் சிகித்ஸை :**

கபம் அதிகரித்த வாதரத்த நோயில் கோரைக்கிழங்கு, (திராக்ஷை) நெல்லிக்காய், மஞ்சள் இவற்றின் கஷாயத்தை யாவது, திரிபலைக் கஷாயத்தையாவது, தேன் கலந்து பருகவேண்டும். சீந்திலை எந்த *விதத்திலாவது உப யோகிக்கலாம்.

குறிப்பு: *ஸ்வரசம், கல்கம், சூர்ணம், கஷாயம் முதலிய வற்றில் ஏதாவது ஒரு வகையில் உபயோகிக்க லாம் என்பது கருத்து.

यथार्हस्नेहपीतं च वामितं मृदु रूक्षयेत् ॥ १५ ॥

ஏற்றதான நெய்ப்புப் பொருளைப் பருகச் செய்தபின் வாந்தி செய்வித்து, சிறிதே வறட்சி உண்டாக்கவேண்டும்.

குறிப்பு: நனைத்தாலும், லேபங்களும் அதிக அளவில் பிரயோகிக்கக்கூடாது என சங்க்ரஹத்தில் கூறப் படுகிறது.

त्रिफलाव्योपपत्रैलात्वक्क्षीरीचित्रकं वचाम् ।
विडंगं पिप्पलीमूलं लोमशं वृषकं त्वचम् ॥ १६ ॥

वृद्धिं लांगलिकीं चव्यं समभागानि पेषयेत् ।
कल्ये लिस्वाऽऽयसीं पात्रीं मध्याह्ने भक्षयेदिदम् ॥ १७ ॥

वातास्रे सर्वदोषेऽपि परं शूलान्विते हितम् ।

எல்லா தோஷங்களாலும் உண்டான வாதரத்த நோயிலும் விசேஷமாக குத்துவலியுடன் கூடிய வாதரக்த நோயிலும், த்ரிபலை, த்ரிகடு, லவங்கப்பத்திரி, ஏலம், முங்கிலுப்பு, கொடிவேலி, வசம்பு, வாய்விளங்கம், கண்டதிப்பிலி, அன்னபேதி, ஆடாதோடை, லவங்கப் பட்டை, ருத்தி, [1]கலப்பங்கிழங்கு, செவ்வியம் இவற்றைச் சம அளவு எடுத்து (நீர் விட்டு) அரைத்து விடியற் காலையில் இரும்புப் பாத்திரத்தில் பூசி வைத்து நடுப் பகலில் உண்ண ஏற்றதாகும்.

குறிப்பு: 1. तामलकी கீழாநெல்லி எனவும் பாடம் காணப் படுகிறது.

2. தயிர், காடி, க்ஷாரம், பொருந்தா உணவுகள் ஆகியவற்றை விலக்கவேண்டுமென சரகத்தில் விசேஷமாகக் கூறப்படுகிறது.

कोकिलाक्षकनिर्यूहः पीतस्तच्छाकभोजिना ॥ १८ ॥

कृपाभ्यास इव क्रोधं वातरक्तं नियच्छति ।

நீர் முள்ளியைக் கறி சமைத்து உண்பதுடன் அதன் கஷாயத்தைப் பருக, கருணையை அப்பியசிப்பதால் கோபம் அடங்குவது போல, வாதரக்த நோய் அடங்கும்.

पञ्चमूलस्य धात्र्या वा रसैर्लेलीतकीं वसाम् ॥ १९ ॥

खुडं सरूढमप्यंगे ब्रह्मचारी पिबन् जयेत् ।

பெண் சேர்க்கையின்றி இருப்பதுடன் *கந்தகத்தை பஞ்சமூல கஷாயம் அல்லது நெல்லிச்சாறு சேர்த்துப் பருகினால், உடலில் வெகுநாள் பட்டதாயினும் வாதரக்த நோய் நீங்கும்.

குறிப்பு: लेलीतकवसा - என்பதற்கு மலைப்பாம்பின் மாம்ஸ எண்ணெய் என்றும், ஸௌவர்ச்சல உப்பின் எண்ணெய் என்றும் பொருள் கூறுவர்.

इत्याभ्यन्तरमुद्दिष्टं कर्म-

இவ்வாறு வாதரக்த நோய்க்கு உட்புறச் சிகித்சை கூறப்பட்டது.

-बाह्यमतः परम् ॥ २० ॥

வெளிப்புறச் சிகித்ஸை அடுத்துக் கூறப்படுகிறது.

आरनालाढके तैलं पादसर्जरसं शृतम् ।
प्रभूते खजितं तोये ज्वरदाहार्तिनुत्परम् ॥ २१ ॥

**ஆரனாள தைலம் :**

*எண்ணெயும் (எண்ணெய்க்கு) நாலிலொரு பங்கு மருத்துவெள்ளையும், 4 பிரஸ்தம் காடியும் சேர்த்துப் பக்குவம் செய்து, அதிக அளவு நீரிலிட்டு மத்தால், கடைந்தெடுத்து உபயோகிக்க; ஜ்வரம், எரிச்சல், வலி ஆகியவற்றைப் விசேஷமாக போக்கும்.

* எண்ணெய் 1 பிரஸ்தம் எனக் கொள்ளவேண்டும்.

समधूच्छिष्टमंजिष्ठं ससर्जरससारिबम् ।
पिण्डतैलं तदभ्यंगाद्वातरक्तरुजापहम् ॥ २२ ॥

### பிண்ட தைலம் :

முற்கூறப்பெற்ற தைலத்தில் தேன் மெழுகு, மஞ்சட்டி, மருத்துவெள்ளை, நன்னாரி இவற்றைப் பொடித்துத் தூவுவது பிண்டதைலம் எனப்படும். இதை அப்யங்கமாக உபயோகிக்க; வாதரக்த நோய் நீங்கும்.

குறிப்பு: 1. முற்கூறிய ஆரளாள தைலத்தில் தனித்த மருத்துவெள்ளைக்குப் பதிலாக தேன்மெழுகு, மஞ்சட்டி, மருத்துவெள்ளை, நன்னாரி இவற்றைக் கல்க்கமாகக் கலந்து தயாரிக்கவேண்டுமென்று சிலர் கூறுவர்.

2. பிண்டதைலம் என்பதால்; காய்ச்சியபின் இத் தைலத்தை வடிகட்டாமல் கல்க்கங்களுடன் கலந்தவாறே வைத்திருந்து உபயோகிக்க வேண்டு மெனவும் சிலர் கூறுவர்.

3. இதில் பிண்ட என்ற சொல், மருத்துவெள்ளை யைக் குறிக்கும் எனச் சிலர் கூறுவர்.

4. நன்னாரிவேர்க் கஷாயத்தில் மஞ்சட்டிக் கல் கத்துடன் எண்ணெய் கலந்து காய்ச்சி வடிக்கட்டி தேன் மெழுகு, மருத்துவெள்ளை ஆகியவற்றைப் பாத்ர கல்க்கமாகக் கலந்து, பிண்டதைலம் என்ற பெயருடன் உபயோகிப்பதும் உண்டு.

दशमूलेभृतं क्षीरं सद्यः शूलनिवारणम् ।
परिषेकोऽनिलप्राये तद्वत्कोष्णेन सर्पिषा ॥ २३ ॥

வாயு அதிகரித்த வாதசோணித நோயில் தசமூலம் சேர்த்துக் காய்ச்சப்பெற்ற பால் அல்லது சிறிது உஷ்ண மான *நெய்யை ஊற்ற; சூலை விரைவில் நீங்கும்.

குறிப்பு: ★ தசமூலம் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் என இந்து கூறுகிறார்.

स्नेहैर्मधुरसिद्धैर्वाचतुर्भिः परिषेचयेत् ।
स्तम्भाक्षेपकशूलार्तं कोष्णैर्दाहे तु शीतलैः ॥ २४ ॥

तद्वद्गव्याविकच्छागैः क्षीरैस्तैलविमिश्रितैः ।

அல்லது [1]மதுர திரவியங்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நால்வகை [2]நெய்ப்புப் பொருளை, தம்பிதம், உதறல், வலி ஆகியவற்றால் பீடிக்கப்பட்டிருந்தால் சிறிது உஷ்ணமாகவும், எரிச்சல் இருந்தால் குளிரச் செய்தும் ஊற்ற வேண்டும். பசு, செம்மறி ஆடு, வெள்ளாடு இவற்றின் பாலுடன் தைலம் கலந்து [3]அவ்வாறே பிரயோகிக்கலாம்.

குறிப்பு: 1. மதுர திரவியங்கள். ஸூத்ர.10-ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டன. ஜீவனீயகணச் சரக்குகள் குறிப்பிடப்படுவதாக சக்ரதத்தர் கூறுகிறார். ஜீவனீயகணச் சரக்குகள் ஸூத்ர. அத்தியாயம் 15-ல் கூறப்பட்டுள்ளது.

2. நெய், தைலம், மாம்ஸ எண்ணெய், எலும்புச் சத்து ஆகியவை நால் வகை நெய்ப்புப் பொருள் ஆகும்.

3. அவ்வாறே என்பதால் தம்பிதம் முதலியவற்றில் உஷ்ணமாகவும், எரிச்சல் காணப்பட்டால், குளிரச் செய்தும் உபயோகிக்க வேண்டும் எனக் கொள்ள வேண்டும்.

निः क्वाथैर्जीवनीयानां पञ्चमूलस्य वा लघोः ॥ २५ ॥

ஜீவனீயகணச் சரக்குகள் அல்லது சிறுபஞ்சமூலம் சேர்த்துக் காய்ச்சிய கஷாயத்தால் தம்பிதம் முதலிய வற்றில் உஷ்ணமாகவும், எரிச்சலில் குளிரச் செய்தும் ஊற்றவேண்டும்.

द्राक्षेक्षुरसमद्यानि दधिमस्त्वम्लकांजिकम् ।
सेकार्थं तण्डुलक्षौद्रशर्कराम्भश्च शस्यते ॥ २६ ॥

திராக்ஷைச்சாறு, கரும்புச்சாறு, மதுவகை, தயிர்த்தெளிவு, புளித்தகாடி, கழுநீர், தேன் கலக்கப்பட்ட நீர், சர்க்கரை நீர் ஆகியவை உடலை நனைக்க ஏற்றவையாகும்.

प्रियाः प्रियवंदा नार्यश्चन्दनार्द्रकरस्तनाः ।
स्पर्शशीताः सुखस्पर्शा घ्नंति दाहं रुजं क्लमम् ॥ २७ ॥

பிரியமுள்ளவர்களும், இனிமையாகப் பேசுகிறவர் களும், சந்தனத்தால் நனைக்கப்பட்ட கைகள், மார்பகம் ஆகியவை உள்ளவர்களும், பரிசிக்க குளிர்ச்சியுள்ளவர் களும், பரிசிக்க சுகம் உண்டாக்குபவர்களுமான ஸ்திரீ களும், எரிச்சல், வலி, ஓய்ச்சல் ஆகியவற்றைப் போக்குவர்.

सरागे सरुजे दाहे रक्तं हृत्वा प्रलेपयेत् ।
प्रपौण्डरीकमंजिष्ठादर्वीमधुकचन्दनैः ॥ २८ ॥

ससितोपलकासेक्षुमसूरैरकसक्तुभिः ।
लेपो रुग्दाहवीसर्परागशोफनिबर्हणः ॥ २९ ॥

செந்நிறம், வலி இவற்றுடன் எரிச்சல் காணப்பட்டால் ரத்தத்தை வெளியேற்றியபின், வறள்தாமரை, மஞ்சட்டி, மரமஞ்சள், அதிமதுரம், சந்தனம், சர்க்கரை, [1] ஏரகச் சத்துமா, காராமணி, விளாமிச்சை, [2] பதிமுகம் இவற்றை பூச வேண்டும். இதைப் பூசினால் வலி, எரிச்சல், விஸர்ப் பம், செந்நிறம், வீக்கம் ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: 1. ஏரகத்தின் விதையின் சத்துமா என இந்து கூறுகிறார்.

2. கருங்குவளை என ஸங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

3. இவற்றுடன் நெய்யும் பாலும் சேர்த்துப் பூசவேண்டும் என்று ஸங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

பித்தமும், ரத்தமும் அதிகரித்த வாதரக்த நோயில் ஏற்றது என சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

वातघ्नैः साधितः स्निग्धः कृशरो मुद्गपायसः ।
तिलसर्षपपिण्डैश्च शूलघ्नमुपनाहनम् ।। ३० ।।

வாயுவைக் கண்டிக்கும் குணமுள்ள பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்டதும், நெய்ப்புக் கலக்கப் பட்டதுமான [1]க்ருஸரம், பயற்றம் பருப்புப் பால்கஞ்சி, மற்றும் எள், கடுகு இவற்றின் பிண்டம் இவைகளை வைத்துக் கட்டுவதன் மூலம் வியர்ப்பிக்க சூலை நீங்கும்.

குறிப்பு: க்ருஸரம் - எள், அரிசி, உளுந்து ஆகியவை கலந்து தயார் செய்த கஞ்சி.

औदकप्रसहानूपवेसवाराः सुसंस्कृताः ।
जीवनीयौषधैः स्नेहयुक्ताः स्युरुपनाहने ।। ३१ ।।

स्तम्भतोदरुगायामशोफांगग्रहनाशनाः ।
जीवनीयौषधैः सिद्धा सपयस्का वसाऽपि वा ।। ३२ ।।

[1]ஜீவனீயகணச் சரக்குகள் சேர்த்து நன்கு பக்குவம் செய்யப்பட்ட [2]நீர் வாழும் பிராணிகள், பிரஸஹம், சதுப்பு

நிலத்தில் வாழ்பவை ஆகியவற்றின் மாமிஸப் பொடித் தூவலை; நெய்ப்புப் பொருள்கள் கலந்து கட்ட; தம்பிதம், குத்துவலி, வலி, உறுப்பு விரிதல், வீக்கம், உறுப்புப் பிடிப்பு ஆகியவை நீங்கும். அல்லது (முற்கூறப்பெற்ற ஜலப் பிராணிகள் முதலியவற்றின்) மாம்ஸ எண்ணெயை ஜீவனீயச் சரக்குகள், பால் ஆகியவற்றுடன் சேர்த்துப் பக்குவம் செய்து கட்டுவதற்கு உபயோகிக்கலாம்.

குறிப்பு: 1. ஜீவனீயகணச் சரக்குகள் ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளன.

2. நீர்வாழும் பிராணிகள் முதலியவை ஸூத்ர ஸ்தானம் அத்தியாயம் 6-ல் விளக்கப்பட்டுள்ளன.

घृतं सहचरान्मूलं जीवन्ती च्छागलं पयः ।
लेपः पिष्ठास्तिलास्तद्वद्भृष्टाः पयसि निर्वृताः ॥ २३ ॥

கருங்குறிஞ்சி வேர், கீரிப்பாலை இவற்றை அரைத்து நெய்யும், ஆட்டுப்பாலும் சேர்த்துப் பூசலாம். எள்ளை வறுத்துப் பாலில் இட்டு அரைத்துப் பூசலாம்.

क्षीरपिष्टक्षुमांलेपमेरण्डस्य फलानि वा ।
कुर्याच्छूलनिवृत्त्यर्थं शताह्वां वाऽनिलेऽधिके ॥ २४ ॥

ஆளி விதையையாவது, ஆமணக்கு விதையையாவது பால் விட்டரைத்து வலி நீங்குவதற்குப் பூசலாம். வாயு அதிகரித்திருப்பின் சதகுப்பையைப் பூசலாம்.

मूत्रक्षारसुरापक्वं घृतमभ्यंजने हितम् ।

பசுநீர், க்ஷாரம், சுரையென்னும் மது, கள், ஆகிய வற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் அப்பியங்கத்திற்குச் சிறந்ததாகும்.

सिद्धं समधु शुक्तं वा सेकाभ्यंगे-

**கபம் அதிகரித்த வாத ரத்த நோய் :**

தேனும் சுத்தம் என்னும் காடியும் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் ஊற்றுவதற்கும் அப்யங்கம் செய்வதற்கும் ஏற்றது.

**குறிப்பு:** நன்கு அமைந்த சுத்தக்காடியுடன் தேன் கலந்து ஊற்றுவதற்கும், அப்யங்கத்திற்கும் உபயோகிக்க வேண்டுமென அருணதத்தர் உரையில் சில பதிப்புக்களில் காணப்படுகிறது.

-कफोत्तरे ॥ ३५ ॥

गृहधूमो वचाकुष्ठं शताह्वा रजनीद्वयम् ।
प्रलेपः शूलनुद्वातरक्ते-

கபம் அதிகரித்துள்ள வாதரக்த நோயில் ஒட்டடை, வசம்பு, கோஷ்டம், சதகுப்பை, மஞ்சள், மரமஞ்சள் இவற்றைப் பூச; வலி நீங்கும்.

**குறிப்பு:** கபம் அதிகரித்த நிலையில் இது ஏற்றதென அருணதத்தர் கூறுகிறார்.

-वातकफोत्तरे ॥ ३६ ॥

मधुशिग्रोर्हितं तद्वद्बीजं धान्याम्लसंयुतम् ।
मुहूर्तलिप्तमम्लैश्च सिंचेद्वातकफोत्तरे ॥ ३७ ॥

வாயுவும், கபமும் அதிகரித்துள்ள வாதரக்த நோயில் செம்முருங்கை விதையை (அரைத்து) தான்யாம்லம் என்ற காடி கலந்து பூசுவது ஏற்றதாகும். ஒரு *முகூர்த்த

தாலத்துக்குப்பின் அவ்விடத்தை புளிப்பான திரவத்தால் நனைக்க வேண்டும்.

குறிப்பு: *முகூர்த்தகாலம் - 48 நிமிடம். அல்லது 2 நாழிகை.

उत्तानं लेपनाभ्यंगपरिषेकावगाहनैः ।

சருமம், மாம்ஸம் ஆகியவற்றில் மட்டும் பரவிய வாத ரக்த நோய் உள்ளவருக்கு பூச்சு, அப்யங்கம், நனைத்தல், மூழ்குதல் ஆகியவற்றால் சிகித்ஸை செய்யவேண்டும்.

विरेकास्थापनैः स्नेहपानैर्गम्भीरमाचरेत् ॥ ३८ ॥

மற்ற தாதுக்களிலும் பரவிய வாதரக்த நோய் உள்ள வருக்கு விரேசனம், ஆஸ்தாபண பஸ்தி, நெய்ப்புப் பொருள் பருகுதல் ஆகியவற்றால் சிகித்ஸை செய்ய வேண்டும்.

वातश्लेष्मोत्तरे कोष्णा लेपाद्यास्तत्र शीतलैः ।
विदाहशोफरुक्कण्डूविवृद्धिः स्तम्भनाद्भवेत् ॥ ३९ ॥

வாயு, கபம் ஆகியவை அதிகரித்த வாதரக்த நோயில் பூச்சு முதலியவை சிறிது சூடாக இருக்கவேண்டும். அவற்றை குளிர்ச்சியாக உபயோகப்படுத்தினால் தம்பிதம் காரணமாக எரிச்சல், வீக்கம், வலி, அரிப்பு ஆகியவை அதிகரிக்கும்.

पित्तरक्तोत्तरे वातरक्ते लेपादयो हिमाः ।
उष्णैः प्लोषोषरुग्रागस्वेदावदरणोद्भवः ॥ ४० ॥

பித்தம், ரத்தம் ஆகியவை அதிகரித்த நிலையில் உள்ள வாதரத்த நோயில், பூச்சுக்கள், முதலியவை குளிர்ச்சி யாக இருக்கவேண்டும். இவை உஷ்ணமாக இருந்தால்

எரிச்சல், காந்தல், வலி, செந்நிறம், வியர்வை, வெடிப்பு ஆகியவை உண்டாகும்.

मधुयष्ट्याः पलशतं कषाये पादशेषिते ।
तैलाढकं समक्षीरं पचेत्कल्कैः पलोन्मितैः ॥ ४१ ॥

स्थिरातामलकीदूर्वापयस्याभीरुचन्दनैः ।
लोहहंसपदीमांसीद्विमेदामधुपर्णिभिः ॥ ४२ ॥

काकोलीक्षीरकाकोलीशतपुष्पर्द्धिपद्मकैः ।
जीवकर्षभजीवन्तीत्वक्पत्रनखवालकैः ॥ ४३ ॥

प्रपौण्डरीकमंजिष्ठासारिवैन्द्रीवितुन्नकैः ।
चतुष्प्रयोगं वातासृक्पित्तदाहज्वरार्तिनुत् ॥ ४४ ॥

***(மதுயஷ்டி தைலம்) :***

*100 பலம் அதிமதுரம் எடுத்து (நீரிலிட்டு) நாலில் ஒன்றாகக் குறுக்கி தயாரித்த கஷாயத்தில் 4 பிரஸ்தம் எண்ணெய், 4 பிரஸ்தம் பால்,* ஆகியவற்றையும் ஓரிலை, கீழாநெல்லி, அறுகம்புல், கீரிப்பாலை, தண்ணீர்விட்டான் கிழங்கு, சந்தனம், அகில் செருப்படை, சடாமாஞ்சில், மேதா, மகாமேதா, [1]அதிமதுரம், காகோலீ, க்ஷீரகாகோலீ, சதகுப்பை, ருத்தி, பதிமுகம், ஜீவகம், ருஷபகம், கீரிப்பாலை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நகம் வெட்டிவேர், வறள்தாமரை, மஞ்சட்டி, நன்னாரி, கும்மட்டி, [2]மல்லி இவற்றை வகைக்கு 1 பலம் எடுத்து கல்க்கமாக்கிச் சேர்த்துப் பக்குவம் செய்து [3]நான்கு விதமாக உபயோகிக்க வாதரத்தம், பித்தம், எரிச்சல், ஜ்வரம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. मधुपर्णी மதுபர்ணீ என்ற மூலச்சொல்லுக்கு சீந்தில் என்று அருணதத்தர் உரை கூறுகிறார்.

2. वितुन्नक என்ற மூலச்சொல்லுக்கு முத்தக்காசு என்று அருணதத்தரும், ஸங்க்ரஹ உரையில் காட்டாத்திப் பூ, என இந்துவும் உரை கூறு கின்றனர்.

3. பானம், நஸ்யம், அனுவாஸனம், அப்யங்கம் என அருணதத்தரும்.

பானம், அப்யங்கம், பஸ்தி, நசியம் என சக்ர பாணிதத்தரும், பானம், அப்யங்கம், நனைத்தல், நசியம் என இந்துவும் கூறுகின்றார்கள்.

बलाकषायकल्काभ्यां तैलं क्षीरसमं पचेत् ।
सहस्रशतपाकं तद्वतासृग्वातरोगनुत् ॥ ४५ ॥

रसायनं मुख्यतममिन्द्रियाणां प्रसादनम् ।
जीवनं बृंहणं स्वर्यं शुक्रासृग्दोषनाशनम् ॥ ४६ ॥

### பலா தைலம் :

(பொதுவிதிப்படி) சிற்றாமுட்டியின் கஷாயம் கல்க்கம் ஆகியவற்றுடன் எண்ணெயும் அதற்குச்[1] சம அளவு பாலும் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகிக்க வேண்டும். இவ்வாறு ஆயிரம் அல்லது நூறு தடவை பக்குவம் செய்து உபயோகிக்கலாம். இது வாதரத்தம், வாத நோய்கள் ஆகியவற்றை நீக்கும். இந்த தைலம் மிகச் சிறந்த ரஸாயனமாகும். புலன்களுக்குத் தெளிவு உண்டாக்கும். ஜீவசக்தியை அதிகரிக்கச் செய்யும். உடலைப் பருக்கச் செய்யும். குரலுக்கு ஏற்றது. சுக்ரம், சோணிதம் இவற்றின் தோஷத்தைப் போக்கும்.

குறிப்பு: क्षीरचतुर्गुणम् தைலத்துக்கு 4 மடங்கு பால் சேர்த்து தயாரிக்கும்படி, பாடமும் அதையனுசரித்து சம்பிரதாயமும் உண்டு.

பலதடவை காய்ச்சித் தயாரிக்கப்படுவதால் ஆவர்த்தித க்ஷீரபலா என்றும் இதைக் குறிப் பிடுவதுண்டு.

कुपिते मार्गसंरोधान्मेदसो वा कफस्य वा ।
अतिवृध्याऽनिले शस्तमादौ स्नेहनबृंहणम् ॥ ४७ ॥

कृत्वा तत्राढ्यवातोक्तं वातशोणितिकं ततः ।
भेपजं स्वेहनं कुर्याद्यच्च रक्तप्रसादनम् ॥ ४८ ॥

கொழுப்பு, அல்லது கபம் மிக அதிகரித்தல் காரணமாக வழித்தடை உண்டாகி வாயு கோபமடைந்திருந்தால் முதலில் நெய்ப்புச் சிகித்ஸை, பருக்கச் செய்யும் சிகித்ஸை, ஆகியவற்றைச் செய்விக்கக்கூடாது. இவற்றில் தொடைத் *தம்பித நோய்க்கு கூறப் பெற்ற சிகித்ஸையைச் செய் வித்தப் பிறகு, வாதரத்த நோயைப் போக்கும் நெய்ப்புப் பொருள்களையும், ரத்தத்தைச் சுத்தி செய்யும் சிகித்ஸை யையும் பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: *தொடைத் தம்பித சிகித்ஸை 21-ஆம் அத்தி யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

प्राणादिकोपे युगपद्यथोद्दिष्टं यथामयम् ।
यथासन्नं च भैपज्यं विकल्प्यं स्याद्यथाबलम् ॥ ४९ ॥

ஒரே சமயத்தில் பிராணன் *முதலிய ஐந்து வாயுக்களும் கோபமடைந்திருந்தால், அந்தந்த நோய்க்கேற்பவும்,

சமீபத்திய வழியின் மூலமும், பலத்திற்கேற்பவும், பிரித்தறிந்து சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: ★ பிராணன் முதலிய வாயு வகைகளின் ஸ்தானங்கள் ஸூத். அத்.12-ல் கூறப்பட்டுள்ளன.

नीते निरामतां सामे स्वेदलंधनपाचनैः ।
रूक्षैश्चालेपसेकाद्यैः कुर्यात्केवलवातनुत् ॥ ५० ॥

(ஆமத்துடன் கூடிய வாத நோயில்) வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை, உபவாஸமிருத்தல், ஆமதோஷத்தைப் பக்குவம் செய்யும் முறை, வறட்சியான பூச்சு, நனைத்தல் முதலியவற்றால் ஆம தோஷம் நீக்கப்படவேண்டும். பிறகு தனித்த வாத தோஷத்திற்குண்டான சிகித்ஸை செய்ய வேண்டும்.

शोपाक्षेपणसंकोचस्तम्भस्वपनकम्पनम् ।
हनुस्रंसोऽर्दितं खाञ्ज्यं पाङ्गुल्यं खुडवातता ॥ ५१ ॥

सन्धिच्युतिः पक्षवधो मेदोमज्जास्थिगा गदाः ।
एते स्थानस्य गाम्भीर्यात्सिध्येयुर्यत्नतो नवाः ॥ ५२ ॥

तस्माज्जयेन्नवानेतान् बलिनो निरुपद्रवान् ।

உடல் வற்றுதல், உதறல், சுருங்குதல், தம்பித்தல், உணர்ச்சியின்மை, நடுக்கம், தாடை நழுவுதல், முகத்திலுண்டாகும் பார்சவ வாயு, ஒருகால் நொண்டி, இருகாலும் நொண்டி, வாதரத்தம், மூட்டு நழுவுதல், பக்ஷவாதம் மற்றும் கொழுப்பு, எலும்புச் சத்து, எலும்பு இவற்றில் உண்டாகும் நோய்கள் ஆகியவை புதியதாயிருப்பின், நோய் தோன்றும் ஸ்தானம் ஆழ்ந்திருத்தல் காரணமாக முயற்சியின் பேரில் நீங்கும். ஆகையால்

பலசாலிகளுக்கு உண்டானவையும், உபத்ரவங்கள் காணப் படாதவையும், நாட்படாதவையுமான இந்நோய்களுக்கு சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: यत्नतो न वा என்ற பாடத்தைக் கொள்வதானல் முயற்சியின் பேரில் குணமாகலாம். குணமாகா மலும் போகலாம் என்பது பொருள்.

वायौ पित्तावृते शीतामुष्णां च बहुशः क्रियाम् ॥ ५३ ॥

व्यत्यासाद्योजयेत्सर्पिर्जीवनीयं च पाययेत् ।
धन्वमांसं यवाः शालिर्विरेकः क्षीरवान् मृदुः ॥ ५४ ॥

**ஆவரண சிகித்ஸை :**

வாயுவானது பித்தத்தால் சூழ (ஆவரணம் செய்ய)ப் பட்டிருந்தால், குளிர்ச்சி சிகித்ஸை, உஷ்ணசிகித்ஸை இவைகளை மாற்றி மாற்றிப்பலதடவை பிரயோகிக்க வேண்டும். *ஜீவனீய கிருதத்தையும் பருகச்செய்யலாம். வறண்ட பிரதேசப் பிராணியின் மாம்ஸம் யவை, சாலி யன்னம் ஆகியவையும் பால் சேர்க்கப்பட்ட மிருது விரேசனமும் ஏற்றவையாகும்.

குறிப்பு: *ஜீவனீய கணச்சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட கிருதம் என அருணதத்தர் கூறு வதாக சில பதிப்புக்களில் காணப்படுகிறது.

ஜீவனீய கிருதம் சங்க்ரஹம் அத்தியாயம் 24-ல் கூறப்பட்டுள்ளது.

सक्षीरा बस्तयः क्षीरं पञ्चमूलबलाशृतम् ।
कालेऽनुवासनं तैलैर्मधुरौपधसाधितम् ॥ ५५ ॥

பால் கலந்த பஸ்தி ப்ரயோகங்கள், பஞ்சமூலம், சிற்றா முட்டி ஆகியவை சேர்த்துப்பக்குவம் செய்யப்பட்ட பால் [2]மதுரகணச் சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப் பட்ட தைலத்தால் உரியகாலத்தில் அனுவாசனம் ஆகி யவை ஏற்றவை ஆகும்.

குறிப்பு: 1. மகாபஞ்சமூலம் என அருணதத்தர் கூறுகிறார். அது ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 6-ல் விளக்கப் பட்டுள்ளது.

2. மதுரகணச் சரக்குகள் - சூத்ரஸ்தானம் 10-ஆவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஜீவனீய கணச்சரக்குகள் என்றும் கொள்வதுண்டு. அவை ஸூத் . அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

यष्टीमधुबलातैलघृतक्षीरैश्च सेचनम् ।
पञ्चमूलकषायेण वारिणा शीतलेन वा ॥ ५६ ॥

மதுயஷ்டி தைலம், *பலாதைலம், நெய், பால், பஞ்ச மூல கஷாயம், குளிர்ந்த நீர் இவற்றால் உடலை நனைத்தல் ஆகியவையும் ஏற்றவையாகும்.

குறிப்பு: *பலா தைலம் சிகித். 21-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயத்தில் 45-ஆவது சுலோகத்தில் கூறப்பட்ட தைலத்தைக் குறிப்பிடுவதாகவும் சொல்வதுண்டு.

कफावृते यवान्नानि जांगला मृगपक्षिणः ।
स्वेदास्तीक्ष्णा निरूहाश्च वमनं सविरेचनम् ॥ ५७ ।

पुराणसर्पिस्तैलं च तिलसर्षपजं हितम् ।

வாயுவானது கபத்தால் சூழப்பட்டிருந்தால், யவை யின் அன்னமும், வறண்ட பிரதேசத்தில் வாழும் மிருகங் கள், பக்ஷிகள் ஆகியவற்றின் மாமிஸமும் வியர்ப்பித்த லும், தீக்ஷ்ணத்தன்மை கொண்டவைகளான, கஷாய பஸ்தி, விரேசனம், வமனம் ஆகியவையும், நாட்பட்ட நெய்யும், நல்லெண்ணெய், கடுகெண்ணெய், ஆகிய வையும் ஏற்றவை ஆகும்.

संसृष्टे कफपित्ताभ्यां पित्तमादौ विनिर्जयेत् ॥ ५८ ॥

வாயுவானது கப பித்தங்களால் சூழப்பட்டிருந்தால் முதலில் பித்தத்திற்கு சிகித்ஸை செய்யவேண்டும்.

**குறிப்பு:** பிறகு வாயுவுடன் கூடிய கபத்திற்குச் சிகித்ஸை செய்யவேண்டும்.

कारयेद्रक्तसंसृष्टे वातशोणितिकीं क्रियाम् ।

வாயுவானது ரத்தத்துடன் கலந்திருந்தால், (ரத்தத்தால் சூழப்பட்டிருந்தால்) வாதரத்த சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

स्वेदाभ्यंगरसाः क्षीरं स्नेहो मांसावृते हितम् ॥ ५९ ॥

வாயு மாம்ஸத்தால் சூழப்பட்டிருந்தால், வியர்ப்பித்தல், அப்யங்கம் மாம்ஸரஸம், பால், நெய்ப்புப் பொருள்கள் ஆகியவை ஏற்றவை.

प्रमेहमेदोवातघ्नमाढ्यवाते भिषग्जितम् ।

ஆட்யவாதம் என்னும் தொடைத் தம்பித நோயில், பிரமேகம், கொழுப்பு, வாயு ஆகியவற்றைப் போக்கும் சிகித்ஸைகளை செய்யவேண்டும்.

**குறிப்பு:** கொழுப்பால் வாயு சூழப்பட்டிருப்பின் அந்த நோய் ஆட்யவாதம் எனப்படும்.

महास्नेहोऽस्थिमज्जस्थे-

எலும்பு, எலும்புச்சத்து ஆகியவற்றால் வாயு சூழப் பட்டிருப்பின் *மஹாஸ்னேஹம் பருகவேண்டும்.

**குறிப்பு:** ★ மகாஸ்னேஹம் நால்வகை நெய்ப்புப் பொருள்கள் எனவும், நாராயண தைலம் முதலியன எனவும், சிகித்.அத்.21-ல் கூறப்பட்ட மஹாஸ்னேஹம் எனவும் கூறுவர்.

-पूर्वोक्तं रेतसा वृते ॥ ६० ॥

வாயு சுக்ரத்தால் சூழப்பட்டிருந்தால் *முற்கூறப்பெற்ற சிகித்ஸையைச் செய்யவேண்டும்.

**குறிப்பு:** ★சிகித்ஸாஸ்தானம் அத்தியாயம் 21-ல் சுலோகம் 20-ல் கூறப்பெற்ற சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

சாரீரஸ்தானம் அத்தியாயம் 1-ல் கூறப்பட்ட சுக்ர தோஷ சிகித்ஸையும் ஏற்றதென இந்து கூறுகிறார்.

अन्नावृते पाचनीयं वमनं दीपनं लघु ।

வாயு அன்னத்தால் சூழப்பட்டிருந்தால் ஆமத்தைப் பக்குவம் செய்யும் மருந்தும் உணவும், வாந்தி செய்வித்தல், பசியைத் தூண்டக்கூடியதும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதுமான மருந்து இவை ஏற்றவையாகும்.

मूत्रावृते मूत्रलानि स्वेदाश्चोत्तरबस्तयः ॥ ६१ ॥

வாயுவானது சிறு நீரால் சூழப்பட்டிருந்தால் சிறு நீரைப் [1]அதிகரிப்பவை, வியர்ப்பித்தல், [2]உத்தரபஸ்தி ஆகியவை ஏற்றவையாகும்.

குறிப்பு: 1. வெள்ளரி, கக்கரி முதலியன சிறு நீரை அதி கரிக்கக் கூடியவையாகும்.

2. உத்தரபஸ்தி - குறியின் வழியாக நெய்ப்புப் பொருளை செலுத்தும் பஸ்திப் பிரயோகம்.

एरण्डतैलं वर्चःस्थे बस्तिंस्नेहाश्च भेदिनः ।

வாயு மலத்தால் சூழப்பட்டிருந்தால் ஆமணக்கு எண்ணெய், பஸ்தி, பேதி உண்டாக்கும் நெய்ப்புப் பொருள்கள் ஆகியவை ஏற்றவையாகும்.

कफपित्ताविरुद्धं यद्यच्च वातानुलोमनम् ॥ ६२ ॥

सर्वस्थानावृतेऽप्याशु तत्कार्यं मातरिश्वनि ।

எல்லா ஸ்தானங்களிலும் வாயு சூழப்பட்டிருந்தால், கபம், பித்தம் ஆகியவற்றுக்கு விரோதமின்றி, வாயுவை கீழ்நோக்கச் செய்யக்கூடிய ஔஷதங்களை •விரைவில் உபயோகிக்க வேண்டும்.

अनभिष्यन्दि च स्निग्धं स्रोतसां शुद्धिकारणम् ॥ ६३ ॥

पाचना बस्तयः प्रायो मधुराः सानुवासनाः ।

கபத்தை இளக்குந் தன்மையின்றி நெய்ப்புள்ளதும், ஸ்ரோதஸ்களை சுத்தப்படுத்தக்கூடியதுமான உணவு ஏற்ற தாகும். அனுவாஸன பஸ்தியும் பெரும்பாலும் இனிப்பு வர்க்கத் திரவியங்கள் சேர்த்து தயாரிக்கப்பெற்ற, *யாபன பஸ்தியும் ஏற்றவை.

குறிப்பு: ★கல்பஸ்தானத்தில் 4-ஆம் அத்தியாயத்தில் கூறப் படவிருக்கிறது.

प्रसमीक्ष्य बलाधिक्यं मृदु कार्यं विरेचनम् ॥ ६४ ॥

रसायनानां सर्वेषामुपयोगः प्रशस्यते ।
शिलाह्वस्य विशेषेण पयसा शुद्धगुग्गुलोः ॥ ६५ ॥

लेहो वा भार्ङ्गवस्तद्व देकादशसितासितः ।

நோயாளி பலம் அதிகரித்தவராயின் மிருதுவாக விரசேனம் செய்விக்கவேண்டும். எல்லா விதமான ரஸாயன ஔஷதங்களின் உபயோகமும் சிறந்ததாகும். விசேஷமாக சிலாஜதுவுடன் பால் சேர்த்து உபயோகிக்கவேண்டும். அவ்வாறே சுத்தம் செய்யப்பட்ட குக்கிலையும் உப யோகிக்கலாம். அல்லது ★ச்யவனப்ராசலேஹம், ★பிரும்ம ரசாயனம் ஆகியவற்றையும் உட்கொள்ளலாம்.

குறிப்பு: ★உத்தர ஸ்தானம் 39-ஆம் அத்தியாயத்தில் கூறப் படவிருக்கிறது.

अपाने त्वावृते सर्वं दीपनं ग्राहि भेषजम् ॥ ६६ ॥

वातानुलोमनं कार्यं मूत्राशयविशोधनम् ।

அபான வாயு சூழப்பட்டிருந்தால் பசியைத் தூண்டக் கூடியதும், மலத்தை கட்டக் கூடியதுமான மருந்தை உபயோகிக்க வேண்டும். வாயுவை கீழ்நோக்கச் செய் வதும், சிறுநீர்ப் பையை சுத்தம் செய்வதுமான, சிகித் ஸையும் ஏற்றதாகும்.

इति संक्षेपतः प्रोक्तमावृतानां चिकित्सितम् ॥ ६७ ॥

प्राणादीनां भिषक्कुर्याद्वितर्क्य स्वयमेव तत् ।

இவ்வாறு ஆவரணத்திற்கு சிகித்ஸை சுருக்கமாக கூறப் பட்டது. *பிராணன் முதலியவற்றிற்கு உண்டாகும் ஆவ ரணங்களுக்கு வைத்தியர் தானாக ஊகித்து ஏற்ற சிகித்ஸை களைச் செய்யவேண்டும்.

குறிப்பு: *முதலிய என்பதால் அபானன், வியானன், உதானன், ஸமானன் என்ற வாயுக்கள் கூறப்படு கின்றன.

उदानं योजयेदूर्ध्वमपानं चानुलोमयेत् ॥ ६८ ॥

समानं शमयेद्विद्वांस्त्रिधा व्यानं तु योजयेत् ।
प्राणो रक्ष्यश्चतुर्भ्योऽपि तत्स्थितो देहसंस्थितिः ॥ ६९ ॥

स्वं स्वं स्थानं नयेदेवं वृत्तान् वातान् विमार्गगान् ।

[1]உதானவாயுவை மேல்நோக்கச் செய்யவேண்டும். அபான வாயுவை கீழ்நோக்கச் செய்யவேண்டும். ஸமான வாயுவை சமனம் செய்விக்கவேண்டும். வியானவாயுவை மேலும், கீழும், இடையிலுமாக இருக்கச் செய்தல் வேண்டும். மற்ற நான்கு [2]வாயுக்களைவிட பிராண வாயு முக்கியமாகக் காப்பாற்றப்படவேண்டும். பிராணன் இருந்தால் தான் சரீரம் நிலைக்கும். சூழப்பட்டவையும் வேறு மார்க்கங்களில் சென்றவையுமான வாயுக்களை அதனதன் இடங்களைச் அடையச் செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. ஆவரணம் ஏற்பட்ட நிலையில் என இந்து கூறுகிறார்.

2. மற்ற நான்கு வாயுக்களாலும் தீங்கு ஏற்படாத வாறு பிராண வாயுவை காப்பாற்ற வேண்டு மென்று அருணதத்தர் உரை கூறுகிறார்.

सर्वं चावरणं पित्तरक्तसंसर्गवर्जितम् ॥ ७० ॥

रसायनविधानेन लशुनो हन्ति शीलितः ।

**உள்ளிப் பிரயோகம் :**

பித்தம், ரத்தம் இவற்றின் சேர்க்கையில்லாத, எல்லா ஆவரணங்களும் ரசாயன முறைப்படி *உள்ளியை உப யோகித்தால் நீங்கும்.

குறிப்பு: *உள்ளியை ரஸாயன முறையில் உட்கொள்ளும் முறை உத்தரஸ்தானம் 39-வது அத்தியாயத்தில் விளக்கப்படவிருக்கிறது.

உள்ளி உஷ்ணத்தன்மை காரணமாக பித்தரத்த நோய்களில் உபயோகிக்க ஏற்றதல்ல.

पित्तावृते पित्तहरं मरुतश्चानुलोमनम् ॥ ७१ ॥

வாயுவானது பித்தத்தால் ஆவரணம் செய்யப்பட்டிருப் பின், பித்தத்தைப் போக்கக்கூடியதும் வாயுவை கீழ் நோக்கச் செய்வதுமான சிகித்ஸையைச் செய்யவேண்டும்.

रक्तावृतेऽपि तद्वच्च खुडोक्तं यच्च भेषजम् ।
रक्तपित्तानिलहरं विविधं च रसायनम् ॥ ७२ ॥

ரத்தத்தால் ஆவரணம் செய்யப்பட்ட நிலையிலும் [1]அவ்வாறே செய்வதுடன் வாதரத்த சிகித்ஸை, ரத்தம், பித்தம், வாயு இவற்றைப் போக்கும் சிகித்ஸை, பலவித ரசாயன ஔஷதங்களை உபயோகித்தல் ஆகியவையும் ஏற்றவையாகும்.

குறிப்பு: 1. பித்தத்தைப் போக்கக்கூடியதும், வாயுவை கீழ் நோக்கச் செய்வதுமான சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

यथानिदानं निर्दिष्टमिति सम्यक् चिकित्सितम् ।
आयुर्वेदफलं स्थानमेतत्सद्योऽर्तिनाशनाम् ॥ ७३ ॥

நிதானஸ்தானத்தில் கூறிய வரிசையிலேயே சிகித்ஸை முறையும் நன்கு கூறப்பட்டுள்ளது. உடனடியாக நோயைப் போக்கப் பயன்படுவதால் இந்த ஸ்தானமானது ஆயுர் வேதத்தில் முழுப் பலனுக்கு ஸாதனமாகும்.

चिकित्सितं हितं पथ्यं प्रायश्चित्तं भिषग्जितम् ।
भेषजं शमनं शस्तं पर्यायैः स्मृतमौषधम् ॥ ७४ ॥

(சிகித்ஸை) நோய்க்கு மாற்று. (இதம்) ஆரோக்கிய மார்க் கத்திற்கு ஏற்றது. (பத்யம்) ஆரோக்கிய மார்க்கத்தினின்றும் வழுவாதது. (பிராயச்சித்தம்) தோஷத்திற்கு மாற்று, (பிஷக் ஜிதம்) வைத்தியரின் வெற்றி, (பேஷஜம்) நோயை ஜெயிப்பது. (சமனம்) நோயை அடக்குவது. (சஸ்தம்) சிறந்தது என்னும் சொற்கள் ஔஷதத்தின் வேறு பெயர்களாகும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसुनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायांचतुर्थे चिकित्सास्थाने वातशोणितचिकित्सा नाम द्वाविंशोऽध्यायः ॥ २२ ॥

சிகித்ஸாஸ்தானம்

இருபத்து இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ समाप्तमिदं चिकित्सास्थानम् ॥

சிகித்ஸாஸ்தானம் இத்துடன் முடிவடைந்தது.

# அஷ்டாங்க ஹிருதயம்

## ॥ कल्पस्थानम् - கல்பஸ்தானம் ॥

### प्रथमोध्यायः - அத்தியாயம் - 1

சிகித்ஸாஸ்தானத்தை அடுத்து கல்பஸ்தானம் ஆரம்பிக்கப்படுகிறது. சிகித்ஸை செய்வதற்குத் தேவையான ஔஷதங்கள் உரிய முறைப்படி தயாரிக்கப்பட வேண்டும். எனவே, ஔஷதங்களின் கல்பனை முறைகள், தனித்த மருந்துச் சரக்குகளைச் சேகரிக்கும் முறைகள், பாதுகாக்கும் முறைகள், பிரயோகங்களுக்கு உள்ள பொதுமுறைகள், பிரயோகத்தில் நேருகின்ற தீங்குகளுக்கான பரிகாரங்கள், தேவையான அளவு, பரிபாஷை முதலிய பல விபரங்கள் இந்த ஸ்தானத்தில் இடம் பெறுகின்றன.

अथाऽतो वमनकल्पं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து வமன கல்பத்தை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

குறிப்பு: சோதன சிகித்ஸை முறைகளுள் முதலில் வாந்தி செய்வித்தல் இடம் பெறுவதாகும். வாந்தி செய்விக்கப்படாத நிலையில், விரேசனம் செய்வித்தல் பொதுவாக ஏற்றதன்று. ஏனெனில் வமனத்தின் மூலம் கபத்தை வெளியேற்றிய பின்னரே விரேசனத்தின் மூலம் பித்தத்தை வெளியேற்றுதல் வேண்டும். உணவுக் குழலில்

முன்னதாக உள்ள ஆமாசயத்தைச் சார்ந்த தோஷம் கபமாகும். அது காரணமாகவே வமனம் முதலில் இடம்பெற வேண்டியதாகிறது. வமனம் செய்விக்காமல் விரேசனம் செய்விக்கத் தொடங்கினால், வெளியேற்றப்படாத கபம், கீழ்நோக்கிச் சென்று அக்னியின் ஸ்தானத்தைச் சூழ்ந்து மந்தத்தை உண்டாக்கும். இதனால் விரேசனம் பாதிக்கப் படுவதுடன், தோஷங்களும் அதிகரிக்கவே இடமாகும். எனவே, முதலில் வமன கல்பம் விளக்கப்படுகிறது. மேலும் தலைப்பகுதியானது பலவித ஔஷதப்பிரயோக வகைகளுக்கும் உரிய இடமாகிறது. உடல் உறுப்புக்களில் தலை சிறந்ததெனவும் போற்றப்படுகிறது. உடலில் அத்தகைய மேற்பகுதியை தாக்கும் தோஷங்களுள் கபம் முதல் இடத்தைப்பெறும். அந்தக் கபத்தை அகற்றும் சோதன சிகித்ஸைகளுள் பரம ஔஷதம் வமனமாகும். எனவே முதலில் வமன, கல்பம் இடம் பெறுகிறது.

மலங்காரை, இருவகைச் சுரை, இருவகைப் பீர்க்கு, வெட்பாலை இவை சிறந்த வமனத் திரவியங்களாகும்.

## अथ मदनकल्पः

## மலங்காரைக் கல்பம்

वमने मदनं श्रेष्ठं त्रिवृन्मूलं विरेचने ।
नित्यमन्यस्य तु व्याधिविशेषेण विशिष्टता ॥ १ ॥

பொதுவாக எல்லா நோய்களிலும் வமனத்திற்குரிய எல்லாக் காலங்களிலும் வாந்தி செய்விப்பதில் மலங் காரைக்காயும், அவ்வாறே விரேசனம் செய்விப்பதில்

சிவதை வேரும் சிறந்தனவாகும். மற்றப் பொருள்கள் வியாதி நிலைக்கு ஏற்ப சிறந்தனவாகும்.

**குறிப்பு:** உபயோகிப்பதில் அபாயமில்லாததாலும், மற்றப் பொருள்களுடன் சேருவதாலும், எல்லா நோய் களிலும் உபயோகிக்க ஏற்புடமையாலும், வாந்திப் பொருள்களில் மலங்காரையும், விரேசனப் பொருள்களில் சிவதை வேரும் சிறந்தவையாகும்.

फलानि तानिपाण्डूनि न चाऽति हरितान्यपि ।
आदायाऽह्नि प्रशस्तर्क्षे मध्ये ग्रीष्मवसन्तयोः ॥ २ ॥

प्रमृज्य कुशमुत्तोल्यां क्षिप्त्वा बद्ध्वा प्रलेपयेत् ।
गोमयेनानुमुत्तोलीं धान्यमध्ये निधापयेत् ॥ ३ ॥

मृदुभूतानि मध्विष्टगन्धानि कुशवेष्टनात् ।
निष्कृष्यनिर्गतेऽष्टाहे शोषयेत्तान्यथातपे ॥ ४ ॥

तेषां ततः सुशुष्काणामुद्धृत्य फलपिप्पलीः ।
दधिमध्वाज्यपललैः मृदित्वा शोषयेत्पुनः ॥ ५ ॥

ततः सुगुप्तं संस्थाप्य कार्यकाले प्रयोजयेत् ।

**மலங்காரைக் காயை சேமித்தல் :**

இளவேனிற் காலம் - [1]முதுவேனிற்காலம் இவற்றின் இடைப்பட்ட காலத்தில் நல்ல நட்சத்திரம் கூடிய நாளில் பகல் வேளையில் அதிக [2]வெண்மை அல்லது அதிக பசுமை இல்லாத மலங்காரைக் காயை எடுத்து நீரில் அலம்பி தர்ப்பைக் கூடையில் வைத்து கயிற்றால் கட்டி பசுஞ்சாணத்தால் பூசவேண்டும். பிறகு [3]தானியக்

குவியலில் வைக்கவேண்டும். எட்டு நாட்களுக்குப் பிறகு, மென்மை அடைந்ததும், தேன் போன்று விரும்பப்படும் மணம் உள்ளதுமான மருக்காரையை தர்ப்பைக் கூடை யிலிருந்து எடுத்து வெயிலில் காயவைக்கவேண்டும். பிறகு நன்கு காய்ந்த மருக்காரையிலிருந்து [4]பழச்சத்தை, எடுத்து தயிர், தேன், நெய், எள் கல்க்கம் [5]ஆகியவற்றைச் சேர்த்து இடித்து மறுபடியும் (வெயிலில்) காய வைக்கவேண்டும். பிறகு பாதுகாப்புடன் வைத்திருந்து தேவையான காலத்தில் உபயோகிக்க வேண்டும்.

*குறிப்பு:* 1. இளவேனிற் காலத்தின் இறுதியும், முதுவேனிற் காலத்தின் ஆரம்பமுமாகிய பகுதி குறிப்பிடப் படுகிறது.

2. அதிகவெண்மையானது மிக முதிர்ச்சியிலும் அதிகப் பசுமையானது மிக இளநிலையிலும் காணப்படும்.

3. யவைப்பதர், உளுந்து, சாலி, வ்ரீஹி, நெல், கொள், பயறு இவற்றுள் ஒன்றின் குவியலில் வைக்குமாறு சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

4. பழத்தினுள் திப்பிலி போன்ற விதைப் பகுதி.

5. தயிர், தேன், நெய், எள்பொடி இவற்றுடன் வரிசைக் கிரமப்படி அரைக்க வேண்டுமென இந்து, சங்க்ரஹத்தில் கூறுகிறார்.

अथाऽऽदाय ततो मात्रां जर्जरीकृत्य वासयेत् ॥ ६ ॥

शर्वरीं मधुयष्ट्या वा कोविदारस्य वा जले ।
कर्बुदारस्य विम्ब्या वा नीपस्य विदुलस्य वा ॥ ७ ॥

शणपुष्प्याः सदापुष्प्याः प्रत्यक्पुष्प्युदकेऽथवा ।
ततः पिबेत्कषायं तं प्रातर्मृदितगालितम् ॥ ८ ॥

सूत्रोदितेन विधिना साधु तेन तथा वमेत् ।

### பிரயோக முறை :

இடம், காலம் முதலியவற்றிற்கேற்ப தேவையான அளவு பழச்சத்தை பொடித்து அதிமதுரம், மந்தாரை, நறுவிலி, கோவை, கடம்பு, நீர்நொச்சி, கிலுகிலுப்பை, *எருக்கு, நாயுருவி, இவற்றுள் ஒன்றின் கஷாயத்தில் ஓர் இரவு ஊறவைத்து கசக்கி வடிக்கட்டி ஸூத்ரஸ்தானத்தில் (18-வது அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ள முறையில் காலையில் பருகவேண்டும். இதனால் நன்கு வாந்தி உண்டாகும்.

குறிப்பு: *எருக்கு, பில்வம் என்று இந்துவும், எருக்கின் வேர் என டல்ஹணரும், காட்டுப்பருத்தி என ஹேமாத்ரியும் உரை கூறுகிறார்கள்.

श्लेष्मज्वरप्रतिश्यायगुल्मान्तर्विद्रधीषु च ॥ ९ ॥

प्रच्छर्दयेद्विशेषेण यावत्पित्तस्य दर्शनम् ।

### விசேஷமாக வாந்தி செய்விக்க வேண்டிய நோய்கள்:

விசேஷமாக* கப ஜ்வரம், சளிப்பு, குன்மம், உட்புறக் கட்டி, ஆகியவற்றின் பித்தம் வெளியாகும் வரை வாந்தி செய்விக்க வேண்டும்.

குறிப்பு: *விசேஷமாக என்பது அடிக்கடி வாந்தி செய் விக்க வேண்டுமென்பதைக் குறிப்பதாக ஹேமாத்திரி கூறுகிறார்.

फलपिप्पलिचूर्णं वा क्वाथेन स्वेन भावितम् ॥ १० ॥

त्रिभागत्रिफलाचूर्णं कोविदारादिवारिणा ।
पिबेज्ज्वरारुचिप्लीहग्रन्थ्यपच्यर्बुदोदरी ॥ ११ ॥

அல்லது மருக்காரைக் கஷாயத்தில் ஊறவைக்கப்பட்ட மருக்காரைப் பழச்சத்தை மூன்றில் ஒரு பங்கு திரிபலா சூர்ணம் சேர்த்து [1] மந்தாரை முதலியவற்றின் கஷாயத்துடன் ஜுரம், ருசியின்மை, கபம் துப்புதல், முடிச்சுநோய், [2] அபசீ, அற்புதம்[3], உதரம் முதலிய நோய் உள்ளவர் பருக வேண்டும்.

**குறிப்பு:** 1. மந்தாரை முதலியன 7-ஆம் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளன.

2. அபசீ-கழுத்திலுண்டாவதும், விரைவில் பழுக் காததுமான சிறு கட்டி.

3. அற்புதம் - விரைவில் பழுக்காத கட்டி.

पित्ते कफस्थानगते जीमूतादिजलेन तत् ।

கபஸ்தானத்தில் பித்தம் [1] வந்திருந்தால் மருக்காரையை [2] பீர்க்கு முதலியவற்றின் கஷாயத்துடன் பருகவேண்டும்.

**குறிப்பு:** 1. முன் சுலோகத்தில் கூறப்பட்ட ஜுரம் முதலிய நோயுள்ளவர் பருகவேண்டும் என அருண தத்தர் விளக்குகிறார்.

2. பீர்க்கு முதலிய என்பதால் இங்கு அடுத்துக் கூறப்படவிருக்கிற வாந்தியுண்டாக்கும் பொருள் கள் குறிப்பிடப்படுகின்றன.

हृद्दाहेऽधोऽस्रपित्ते च क्षीरं तत्पिप्पलीशृतम् ॥ १२ ॥

क्षैरेयीं वा-

நெஞ்செரிவிலும், கீழ்நோக்கிய ரத்தபித்த [1]நோயிலும் பால் அல்லது [2]பால் கஞ்சியை மருக்காரைப் பழச்சத்து சேர்த்து பக்குவம் செய்து பருகவேண்டும்.

குறிப்பு: 1. கீழ் நோக்கிய ரத்த பித்தத்தில் வமனம் செய்விப்பதே உரிய சோதன சிகித்ஸையாகும் என முன்னரே கூறப்பட்டது கவனிக்கத்தக்கது.

2. மருக்காரைப் பழச்சத்து சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட பாலால், பக்குவம் செய்யப்பட்ட கஞ்சி என இந்து கூறுகிறார்.

-कफच्छर्दिप्रसेकतमकेषु तु ।
दध्युत्तरं वा दधि वा तच्छृतक्षीरसम्भवम् ॥ १३ ॥

கபம், வாந்தி, வாயில் நீர் ஊருதல், தமக சுவாஸம் ஆகியவற்றில் மருக்காரைப் பழச்சத்து சேர்த்துக் காய்ச்சப் பெற்ற பாலிலிருந்து உண்டான தயிர்த் தெளிவு அல்லது, அந்த தயிரை உட்கொள்ளவேண்டும்.

फलादिकाथकल्काभ्यां सिद्धं तत्सिद्धदुग्धजम् ।
सर्पिः कफाभिभूतेऽग्नौ शुष्यद्देहे च वामनम् ॥ १४ ॥

கபத்தால் ஜாடராக்னி ஆக்ரமிக்கப்பட்ட நிலையிலும் உடல் இளைப்பிலும் மருக்காரை முதலியவற்றைச் சேர்த்து காய்ச்சிய பாலிலிருந்து தயாரான நெய்யை மருக்காரை முதலியவற்றின் கஷாயம் கல்க்கம் ஆகியவை சேர்த்து பக்குவம் செய்து வாந்தி உண்டாக்குவதற்காகப் பருக வேண்டும்.

स्वरसं फलमज्ज्ञो वा भल्लातकविधिभृतम् ।
आदर्वीलेपनात्सिद्धं लीढ्वा प्रच्छर्दयेत्सुखम् ॥ १५ ॥

तं लेहं भक्ष्यभोज्येषु तत्कषायांश्च योजयेत् ।

அல்லது பழச்சத்தின் ஸ்வரஸத்தை சேங்கொட்டை *ரசாயன விதியில் கூறப்படவிருக்கும் முறையில் குழித் தைலமாகத் தயாரித்து கரண்டியில் ஒட்டும் பதத்தில் பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இதை உட் கொள்ளச் செய்து சுகமாக வாந்தி செய்விக்க வேண்டும். இந்த லேகத்தையும், மருக்காரையின் கஷாயத்தையும் உணவு, பணியாரம் முதலியவற்றிலும் உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: *சேங்கொட்டை ரஸாயன விதியின் விளக்கத்தை உத்தரஸ்தானம், அத்தியாயம் 39. சுலோகம் 72-ல் காண்க.

वत्सकादिप्रतीवापः कषायः फलमज्जजः ॥ २६ ॥
निम्बार्कान्यतरक्वाथसमायुक्तो नियच्छति ।
बद्धमूलानपि व्याधीन् सर्वान् सन्तर्पणोद्भवान् ॥ १७ ॥

மருக்காரைச் சத்தின் கஷாயத்தில் *வத்ஸகாதிகணச் சரக்குகளின் சூர்ணத்தை, மேல்பொடியாகக் கலப்பதுடன், வேம்பு அல்லது எருக்கின் கஷாயமும் சேர்த்துப் பருக; உடலைப் பருக்கச் செய்யும் சிகித்ஸையால் உண்டான எல்லா நோய்களும் வேரூன்றியதாயினும் நீங்கும்.

குறிப்பு: *வத்ஸகாதிகணம் - ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

राठपुष्पफलश्लक्ष्णचूर्णैर्माल्यं सुरूक्षितम् ।
वमेन्मण्डरसादीनां तृप्तो जिघ्रन् सुखं सुखी ॥ १८ ॥

பத்தியக் கட்டுப்பாடுகளைத் தாங்கமுடியாத இயல்புள்ள சுகசாலி கஞ்சித் தெளிவு *மாம்ஸரஸம் முதலியவற்றை திருப்தியாக உட்கொண்ட பின் மகரந்தப் பொடி போன்ற நுண்ணிய மருக்காரைத் தூளினால் நன்கு தூவப்பட்ட மாலையை நுகர்ந்து சுகமாக வாந்தி செய்யலாம்.

குறிப்பு: *மாம்ஸரஸம் முதலிய என்பதால் எள்ளும் சேர்த்து தயாரிக்கப்பட்ட அரிசிக் கஞ்சி, பால் கஞ்சி முதலியவை கூறப்படுகின்றன.

एवमेव फलाभावे कल्प्यं पुष्पं शलाटु वा ।

மருக்காரை கிடைக்காத காலத்தில் மருக்காரையின் மலர் அல்லது பிஞ்சுகளை இவ்வாறே[1] உபயோகிக்கலாம்.

குறிப்பு: 1.இவ்வாறே என்பதால் அளவுடன் எடுத்து அதிமதுரக் கஷாயம் மந்தாரைக் கஷாயம் முதலியவற்றில் ஓர் இரவு ஊறவைத்து உபயோகித்தல் முதலியன கூறப்படுகிறது.

2. இந்த அத்தியாயத்தில் கூறப்பட்ட பொருள்கள் கிடைக்காத காலத்தில் அவற்றின் மலர் அல்லது பிஞ்சுக்களை உபயோகிக்கலாம்.

इति मदनकल्पः।

अथ जीमूत कल्पः ।

जीमूताद्याश्च फलवत्-

மருக்காரையை உபயோகிப்பது போல் அடுத்து கூறப் படவிருக்கிற தேவதாளிப் பீர்க்கு முதலியவற்றையும் உபயோகிக்கலாம்.

-जीमूतं तु विशेषतः ॥ १९ ॥

प्रयोक्तव्यं ज्वरश्वासकासहिध्मादिरोगिणाम् ।

**தேவதாளிப் பீர்க்குக் கல்பம் :**

ஜ்வரம், சுவாஸம், இருமல், விக்கல் முதலிய நோயால் பிடிக்கப்பட்டவருக்கு விசேஷமாக தேவதாளிப் பீர்க்கை உபயோகிக்கவேண்டும்.

पयः पुष्पेऽस्य निर्वृत्ते फले पेया पयस्कृता ॥ २० ॥

लोमशे क्षीरसन्तानं दध्युत्तरमलोमशे ।
शृते पयसि दध्यम्लं जातं हरितपाण्डुके ॥ २१ ॥

आसुत्य वारुणीमण्डं पिबेन्मृदितगालितम् ।
कफादरोचके कासे पाण्डुत्वे राजयक्ष्मणि ॥ २२ ॥

தேவதாளியில் பூ உண்டான நிலையில் பூ சேர்த்துப் பக்குவம் செய்யப் பெற்ற பாலையும், காயுண்டான நிலையில் காய்ச் சேர்த்துக் காய்ச்சிய பாலால் தயாரிக் கப்பட்ட கஞ்சியும், இளங்காய் (சுளையுள்ள) நிலையில் காய்ச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட பாலின் தயிரித் தெளிவையும், காய் முழுவதும் முற்றாத (பச்சை வெண்மை நிறம் கொண்ட இடை) நிலையில் இருந்தால் அது சேர்த்துக் காய்ச்சிய பாலிலிருந்து உண்டான புளித்த தயிரையும் காயை இடித்து வாருணி என்னும் தெளிவில் பிழிந்து ஆஸவமாக்கியும் பருக, கபத்தாலான

ருசியின்மை, இருமல், பாண்டு நோய், க்ஷய நோய் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: ★சூர்ணம் கலந்து தயிர் தெளிவைப் பருக வேண்டுமென அருணதத்தர் கூறுகிறார்.

इयं च कल्पना कार्या तुम्बीकोशातकीष्वपि ।

சுரைக்காய், பேய்ப்பீர்க்கு ஆகியவற்றையும் இவ்வாறே உபயோகிக்கலாம்.

पर्यागतानां शुष्काणां फलानां वेणिजन्मनाम् ॥ २३ ॥

चूर्णस्य पयसा शुक्तिं वातपित्तार्दितः पिबेत् ।

வாயு, பித்தம் இவற்றால் பீடிக்கப்பட்டவர் நன்கு முதிர்ந்தும் உலர்ந்ததுமான தேவதாளிப் பீர்க்கின் 1/2 பலம் சூரணத்தை பாலுடன் கலந்து பருகவேண்டும்.

द्वे वा त्रीण्याति वाऽऽपोथ्य क्वाथे तिक्तोत्तमस्य वा ॥ २४ ॥
आरग्वधादिनवकादासुत्यान्यतमस्य वा ।
विमृद्य पूतं तं क्वाथं पित्तश्लैष्मज्वरी पिबेत् ॥ २५ ॥

இரண்டு அல்லது மூன்று தேவதாளிப் பீர்க்கை இடித்து ★வேம்புக் கஷாயத்திலாவது ஆரக்வதாதி கணச்சரக்கு களுள் முதல் ஒன்பது சரக்குகளுள் ஒன்றின் கஷாயத்தி லாவது இட்டு (ஊறிய பின்) பிசைந்து வடிக்கட்டி பித்த கப ஜ்வரம் உள்ளவர் பருகலாம்.

குறிப்பு: ★பேய்ப்புடல் என ஹேமாத்ரி உரை கூறுகிறார். சங்க்ரஹத்திலும் பேய்ப்புடல் என்றே காணப் படுகிறது.

जीमूतकल्कं चूर्णं वा पिबेच्छीतेन वारिणा ।
ज्वरे पैत्ते कवोष्णेन कफवातात्कफादपि ॥ २६ ॥

பித்த ஜ்வரத்தில் தேவதாளிப் பீர்க்கின் கல்க்கம் அல்லது சூர்ணத்தை குளிர்ந்த நீருடனும், கப-வாத ஜ்வரத்திலும் கப ஜ்வரத்திலும் இளஞ்சூடான நீருடனும் பருகவேண்டும்.

इति जीमूतकल्पः ।

**अथ इक्ष्वाकुकल्पः ।**

कासश्वासविषच्छर्दिज्वरार्ते कफकर्शिते ।
इक्ष्वाकुर्वमने शस्तः प्रताम्यति च मानवे ॥ २७ ॥

***கசப்புச் சுரை கல்பம் :***

இருமல், சுவாஸம், விஷம், வாந்தி, ஜ்வரம், கபத்தால் பிடிக்கப்பட்ட நிலை, பிரதமக *சுவாஸம், ஆகியவற்றில் வாந்தி செய்விக்க கசப்புச்சுரை ஏற்றதாகும்.

குறிப்பு: * प्रताम्यति என்ற மூலச் சொல்லுக்கு கண் இருளடைதல் எனவும், மூர்ச்சை எனவும் உரை கொள்வதுண்டு.

फलपुष्पविहीनस्य प्रवालैस्तस्य साधितम् ।
पित्तश्लैष्मज्वरे क्षीरं पित्तोद्रिक्ते प्रयोजयेत् ॥ २८ ॥

பழம், மலர் ஆகியவை உண்டாகாத கசப்புச்சுரைக் கொடியின் துளிரால் பால் பக்குவம் செய்து பித்தம் அதிகரித்த, பித்த-கப ஜ்வரத்தில் பருகவேணடும்.

हतमध्ये फले जीर्णे स्थितं क्षीरं यदा दधि ।
स्यात्तदा कफजे कासे श्वासे वम्यं च पाययेत् ॥ २९ ॥

கசப்புச்சுரைக்காய் முதிர்ந்த நிலையில் அதன் உட்புறத்தைக் குடைந்து வெளியே எடுத்துவிட்டு அதில் பாலை நிரப்பி வைக்கவேண்டும். தயிராக அமைந்த நிலையில் அதை கபத்தால் உண்டான இருமல், சுவாஸம் ஆகிய நோய்களில் வாந்தி செய்விப்பதற்காகப் பருகச் செய்யவேண்டும்.

குறிப்பு: वम्याश्च என்ற பாடத்தில் வாந்தி நோயிலும் (வாந்தியை நீக்குவதற்காக வாந்தி செய்விக்க) உபயோகிக்க வேண்டுமென்பது பொருள்.

मस्तुना वा फलान्मध्यं पाण्डुकुष्ठविषार्दितः ।
तेन तक्रं विपक्वं वा पिबेत्समधुसैन्धवम् ॥ ३० ॥

பாண்டு, குஷ்டம், விஷம் இவற்றால் பீடிக்கப்பட்டவர், கசப்புச் சுரையின் மத்யபாகத்தை தயிர்த் தெளிவுடன் பருகவேண்டும். அல்லது கசப்புச் சுரையின் மத்யபாகம் சேர்த்து மோரைப் பக்குவம் செய்து தேனும், இந்துப்பும் கலந்து பருகலாம்.

குறிப்பு: கசப்புச் சுரையின் மத்யபாகத்தை வெல்லமும் எள் கல்க்கமும் கலந்து உண்ணலாம். அல்லது பேய்ச் சுரைக்காய் தைலத்தைப் பருகலாம் என சங்க்ரஹத் தில் கூறப்பட்டுள்ளது.

भावयित्वाऽऽजदुग्धेन बीजं तेनैव वा पिबेत् ।
विषगुल्मोदरग्रन्थिगण्डेषु श्लीपदेषु च ॥ ३१ ॥

அல்லது விஷம், குன்மம், உதரம், கிரந்தி, கண்டமாலை, யானைக்கால் நோய் ஆகியவற்றில் கசப்புச் சுரையின் விதையை ஆட்டுப்பாலில் ஊறவைத்தாவது ஆட்டுப்பாலுடனாவது உட்கொள்ளவேண்டும்.

सक्तुभिर्वा पिबेन्मन्थं तुम्बीस्वरसभावितैः ।
कफोद्भवे ज्वरे कासे गलरोगेष्वरोचके ॥ ३२ ॥

கபத்தால் உண்டான ஜ்ுரம், இருமல், தொண்டை நோய், ருசியின்மை, ஆகியவற்றில் சுரைக்காய்ச் சாற்றில் ஊறவைக்கப்பட்ட (யவையின் ) சத்துமா நீரைப் பருக வேண்டும்.

गुल्मे ज्वरे प्रसक्ते च कल्कं मांसरसैः पिबेत् ।
नरः साधु वमत्येवं नच दौर्बल्यमश्नुते ॥ ३३ ॥

குன்மம், நாட்பட்ட ஜ்ுரம் ஆகியவற்றில் கசப்புச் சுரைக்காயின் கல்கத்தை மாம்ஸரஸத்துடன் சேர்த்துப் பருக வேண்டும். இதனால் நன்கு வாந்தி உண்டாகும். இளைப்பு உண்டாகாது.

குறிப்பு: 1. प्रसेके என்ற பாடத்தில் வாயில் நீர் ஊறல் என்பது பொருள்.

तुम्ब्याः फलरसैः शुष्कैः सपुष्पैरवचूर्णितम् ।
छर्दयेन्माल्यमाघ्राय गन्धसम्पत्सुखोचितः ॥ ३४ ॥

நல்ல மணத்தின் சுகத்திற்கே பழக்கமுள்ளவர், கசப்புச் சுரையின் சாற்றை காயவைத்து (சூரணமாக்கி) கசப்புச் சுரை புஷ்பத் தூளுடன் கலந்து இதனால் தூவப்பட்ட மாலையை நுகர்ந்து வாந்தி செய்யவேண்டும்.

குறிப்பு: गन्धसंपत् என்ற மூலச்சொல் மணமூட்டப்பட்ட என்ற கருத்தில் மாலையைக் குறிப்பிடுவதாக அருணதத்தர், ஹேமாத்ரி ஆகியோர் கூறுகின்றனர்.

इति इक्ष्वाकुकल्पः ।

**अथ धामार्गवकल्पः ।**

कासगुल्मोदरगरे वाते श्लेष्माशयस्थिते ।
कफे च कण्ठवक्त्रस्थे कफसंचयजेषु च ॥ ३५ ॥

धामार्गवो गदेष्विष्टः स्थिरेषु च महत्सु च ।

***யானைப்பீர்க்கு கல்பம் :***

இருமல், குன்மம், உதரம், இடுவிஷம், கபஸ்தானத்தில் உள்ள வாயு, தொண்டை வாய் ஆகிய இடங்களில் கபம் இருத்தல், மற்றும் கபம் அதிகரித்து உண்டான நோய், நிலைபெற்ற நோய், நாட்பட்ட நோய் ஆகியவற்றில் யானைப் பீர்க்கை உபயோகிக்கவேண்டும்.

जीवकर्षभकौ वीरा कपिकच्छूः शतावरी ॥ ३६ ॥

काकोली श्रावणी मेदा महामेदा मधूलिका ॥
तद्रजोभिः पृथग्लेहा धामार्गवरजोन्विताः ॥ ३७ ॥

कासे हृदयदाहे च शस्ता मधुसिताधुताः ।

ஜீவகம், ருஷபகம், கோவை, பூனைக்காலி, தண்ணீர் விட்டான் கிழங்கு, காகோலி, கொட்டைக்கரந்தை, மேதா, மகாமேதா, அதிமதுரம் இவற்றுள் ஒன்றின் சூர்ணத்துடன் யானைப்பீர்க்கின் சூரணத்தையும் தேன், சர்க்கரை ஆகியவற்றையும் கலந்து லேஹமாக்கி உட்கொள்வது; இருமல், இருதய எரிச்சல் ஆகியவற்றில் ஏற்றதாகும்.

ते सुखाम्भोनुपानाः स्युः पित्तोष्मसहिते कफे ॥ ३८ ॥

பித்த உஷ்ணத்துடன் கூடிய கப நோயில் முன்கூறப் பெற்ற லேஹங்களை இளஞ்சூடான வெந்நீர் அனு பானத்துடன் உட்கொள்ளவேண்டும்.

धान्यतुम्बरुयूषेण कल्कस्तस्य विषापहः ।

யானைப்பீர்க்கின் கல்கத்தை மல்லி, தூம்பூணி ஆகிய வற்றின் கஞ்சியுடன் உட்கொள்ள விஷம் நீங்கும்.

बिम्व्याः पुनर्नवाया वा कासमर्दस्य वा रसे ॥ ३९ ॥

एकं धामार्गवं द्वे वा मानसे मृदितं पिबेत् ।
तच्छृतक्षीरजं सर्पिः साधितं वा फलादिभिः ॥ ४० ॥

மண நோயில் கோவை, மூக்கிரட்டை, தூதுவளை இவற்றுள் ஒன்றின் சாற்றில் ஒன்று அல்லது இரண்டு யானைப்பீர்க்கின் கல்க்கத்தை கலக்கி வாந்திக்காகப் பருகவேண்டும். அல்லது யானைப்பீர்க்கு சேர்த்துப் காய்ச்சப்பெற்ற பாலிலிருந்து எடுக்கப்பட்ட நெய்யை *மருக்காரை முதலிய பொருள்களின் கல்க்கம் சேர்த்துப் பக்குவம் செய்து பருகவேண்டும்.

**குறிப்பு:** *மருக்காரை முதலிய என்பதால் இந்த அத்தியா யத்தில் கூறப்பட்ட 6 வாந்திப் பொருள்களும் குறிப்பிடப்படுகின்றன.

इति धामार्गवकल्पः ।

**अथ क्ष्वेडकल्पः ।**

क्ष्वेडोऽतिकटुतीक्ष्णोष्णः प्रगाढेषु प्रशस्यते ।
कुष्ठपाण्ड्वामयप्लीहशोफगुल्मगरादिषु ॥ ४१ ॥

**கசப்புப் பீர்க்கு கல்பம் :**

கசப்புப்பீர்க்கு, காரம், தீக்ஷ்ணம், உஷ்ணம் ஆகிய குணங்களை அதிகமாகக் கொண்டது. வேரூன்றியவையான குஷ்டம், பாண்டு, மண்ணீரல் நோய், வீக்கம், குன்மம், இடு விஷம் முதலியவற்றில் இது சிறந்ததாகும்.

पृथक् फलादिषट्कस्य क्वाथे मांसमनूपजम् ।
कोशातक्या समं सिद्धं तद्रसं लवणं पिबेत् ॥ ४२ ॥

மருக்காரை முதலிய ஆறு பொருள்களுள் ஒன்றின் கஷாயத்தில் பீர்க்கு சதுப்புநிலப் பிராணியின் மாமிஸம் சேர்த்துப் பக்குவம் செய்து, அந்த மாம்ஸ ரஸத்தை உப்பு கலந்து பருகவேண்டும்.

फलादिपिप्पलीतुल्यं सिद्धं क्ष्वेडरसे ऽथवा ।

அல்லது மருக்காரை முதலியவற்றின் பழச் சத்துக்குச் சம அளவு சதுப்பு நிலப் பிராணியின் மாம்ஸத்தை எடுத்து, கசப்புப் பீர்க்கு கஷாயத்தில் பக்குவம் செய்து பருகலாம்.

क्ष्वेडक्वाथं पिबेत्सिद्धं मिश्रमिक्षुरसेन वा ॥ ४३ ॥

அல்லது கசப்புப் பீர்க்குக் கஷாயத்தை கருப்பஞ்சாறு சேர்த்துப் பருகவேண்டும்.

**குறிப்பு:** சதுப்பு நிலப்பிராணியின் மாம்ஸரஸம் பக்குவம் செய்யும் முறைகளுள் ஒன்றாகவே இதை அருணதத்தர் கருதுகிறார். ஆனால் சரகஸம்ஹிதை, ஜதூகர்ணஸம்ஹிதை ஆகிய நூல்களில் இந்த யோகத்தில் மாம்ஸ ரஸம் கலக்கும்படி கூறப் படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

கருப்பஞ்சாறு சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட கஷாயம் என சக்ரபாணி உரை கூறுகிறார்.

इति क्ष्वेडकल्पः ।

## अथ कुटवफलकल्पः ।

कौटजं सुकुमारेषु पित्तरक्तकफोदये ।
ज्वरे विसर्पे हृद्रोगे खुडे कुष्ठे च पूजितम् ॥ ४४ ॥

### வெட்பாலையரிசி கல்பம் :

மென்மையான உடற் கூறு உள்ளவருக்கும், பித்தம், ரத்தம், கபம், ஆகியவை அதிகரித்த நிலையிலும், ஜுரம், விஸர்ப்பம், இருதய நோய், வாத ரத்தம், குஷ்டம் ஆகிய வற்றிலும் (வாந்தியுண்டாக்க) வெட்பாலையரிசி சிறந்த தாகும்.

सर्पपाणां मधूकानां तोयेन लवणस्य वा ।
पाययेत्कौटजं बीजं युक्तं कृशरयाऽथवा ॥ ४५ ॥

सप्ताहं वाऽर्कदुग्धाक्तं तच्चूर्णं पाययेत्पृथक् ।
फलजीमूतकेक्ष्वाकुजीवन्तीजीवकोदकैः ॥ ४६ ॥

வெட்பாலை அரிசியைக் கடுகுக் கஷாயம், இலுப்பைக் கஷாயம், இந்துப்பு நீர், எள்ளும் அரிசியும் சேர்த்து தயாரிக்கப்பட்ட கஞ்சி, இவற்றுள் ஒன்றுடன் கலந்து பருகவேண்டும். அல்லது எருக்கம் பாலில் ஏழு நாட்கள் ஊறவைக்கப்பட்ட வெட்பாலையரிசிச் சூர்ணத்தை மருக்காரை, தேவதாளிப்பீர்க்கு, கசப்புச்சுரை, கிரிப்பாலை, ஜீவகம் இவற்றுள் ஒன்றின் நீருடன் பருகச் செய்யவேண்டும்.

इति कुटवफलकल्पः ।

वमनौषधमुख्यानामिति कल्पदिगीरिता ।
बीजेनानेन मतिमानन्यान्यपि च कल्पयेत् ।। ४७ ।।

உதாரணமாக முக்யமான சில வாந்திப் பொருள்களின் கல்பனை கூறப்பட்டது. அறிவாளி இந்த அடிப்படையில் மற்றவைகளையும் அமைத்துக் கொள்ளலாம்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां पंचमे कल्पस्थाने वमनकल्पो नाम प्रथमोऽध्यायः।। १ ।।

கல்பஸ்தானம் - முதல் அத்தியாயம் முற்றிற்று.

★★★★★

## ।। कल्पस्थानम् - கல்பஸ்தானம் ।।

### द्वितीयोध्यायः - அத்தியாயம் - 2

अथाऽतो विरेचनकल्पं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து விரேசன கல்பத்தை விளக்குகிறோம்.

இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

**குறிப்பு:** வமனத்தை அடுத்துச் செய்யவேண்டிய விரேசனத்தின் முக்கியத்துவம் முந்திய அத்தியாயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டது கவனிக்கத்தக்கது.

**अथ त्रिवृच्छ्यामयोः कल्पः ।**

कषायमधुरा रूक्षा विपाके कटुका त्रिवृत् ।

कफपित्तप्रशमनी रौक्ष्याचानिलकोपनी ॥ १ ॥

**சிவதை கல்பம் :**

*சிவதையானது, துவர்ப்பு, இனிப்பு ஆகிய சுவைகளையும், வறட்சி, விபாகத்தில் காரம் ஆகிய குணங்களையும் கொண்டது. இது கபத்தையும், பித்தத்தையும் போக்கும். வறட்சி காரணமாக வாயுவை கோபமடையச் செய்யும்.

**குறிப்பு:** *இந்த குணங்கள் செஞ்சிவதைக்கே அதிகமாக உள்ளன என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

விரேசனம் செய்யும் பொருள்களுள், வேர்களில் சிவதையும், பட்டைகளில் லோத்தியும், பால் வகையில் கள்ளிப்பாலும், காய்களுள் கடுக்காயும் சிறந்தனவாகும் என சங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

தைலத்தில் ஆமணக்கு எண்ணெய் சிறந்ததென சுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

सेदानीमौपधैर्युक्ता वातपित्तकफापहैः ।
कल्पवैशेष्यमासाद्य जायते सर्वरोगजित् ॥ २ ॥

வாயு, பித்தம், கபம் ஆகியவற்றைக் கண்டிக்கும் பொருள்களுடன் சேர்த்து சிவதையை உபயோகிக்க *கல்பனையின் விசேஷத்தை அனுசரித்து (விரேசனத்தால் நீங்கக்கூடிய) எல்லா நோய்களையும் போக்கும்.

**குறிப்பு:** *கல்பனை என்பது பொருள்களில் கட்டு, பக்குவ முறை முதலியவற்றைக் குறிக்கும்.

द्विधा ख्यातं च तन्मूलं श्यामं श्यामाऽरुणं त्रिवृत् ।

**சிவதையின் இருவகை :**

வேர், கறுப்பு நிறமாயின், ச்யாமா (கருஞ்சிவதை) என்றும், இளம் செந்நிறமாயின் 'த்ருவிருத்' (வெண்சிவதை) என்றும், சிவதை இரு வகைப்படும்.

त्रिवृदाख्यं वरतरं निरपायं सुखं तयोः ॥ ३ ॥

सुकुमारे शिशौ वृद्धे मृदुकोष्ठे च तद्धितम् ।

இவற்றுள் வெண் சிவதை அபாயமற்றது என்ற காரணத்தால் சிறந்ததாகும். சுகமுண்டாக்கும். இது நளினமான உடல் இயல்பு உள்ளவர், பாலர், வயோதிகர், மென்மையான கோஷ்டம் உள்ளவர் ஆகியோருக்கு ஏற்றதாகும்.

मूर्च्छासम्मोहहृत्कण्ठकर्षणक्षणनप्रदम् ॥ ४ ।

श्यामं तीक्ष्णाशुकारित्वादतस्तदपि शस्यते ।
क्रूरे कोष्ठे बहौ दोषे क्लेशक्षमिणि चातुरे ॥ ५ ॥

கருஞ்சிவதையானது தீக்ஷ்ணம், விரைவில் செயல்படுதல் ஆகிய குணங்கள் காரணமாக மூர்ச்சையையும், சித்தப் பிரமையையும் உண்டாக்கும். இருதயம், தொண்டை ஆகியவற்றை சிதைப்பதுடன் ரணத்தையும் உண்டாக்கும். இத்தகையதெனிலும், கற்குடல் உள்ளவர், தோஷம் அதிகரித்திருப்பவர், கஷ்டத்தைத் தாங்கும் சக்தியுள்ளவர் ஆகியோருக்கு இது ஏற்றதாகும்.

गम्भीरानुगतं श्लक्ष्णमतिर्यग्विसृतं च यत् ।
गृहीत्वा विसृजेत्काष्ठं त्वचं शुष्कां निधापयेत् ॥ ६ ॥

**சேகரிக்கும் முறை :**

பூமியில் ஆழ்ந்து சென்றதும் வழவழப்பான (மேற்புறம் உள்ள)தும் குறுக்கின்றி செல்வதுமான வேரை எடுத்து கட்டையை நீக்கிவிட்டு, தோல் பாகத்தைக் காய வைத்து பத்திரப்படுத்த வேண்டும்.

अथ काले ततश्चूर्णं किंचिन्नागरसैन्धवम् ।
वातामये पिबेदम्लैः-

**வாத நோயில் உபயோகிக்கும் முறை :**

வாதநோயில் விரேசனம் செய்விக்க வேண்டிய பொழுது , சிவதைச் சூரணத்துடன் சிறிது [1]சுக்கு, இந்துப்பு ஆகியவற்றை கலந்து (காடி முதலிய) புளிப்பான [2]பொருள்களுடன் பருகவேண்டும்.

**குறிப்பு:** 1. சுக்கு, இந்துப்பு இவற்றின் தூள் சிவதைச் சூரணத்தின் நாலில் ஒரு பங்காகும் என ஹேமாத்ரி கூறுகிறார்.

2. மாம்ஸ ரஸத்துடனும் உட்கொள்ளலாம் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

3.விரேசனம் உண்டாக்கும் பொருள்களின் கஷாயத்தில் பாவனை செய்த சிவதையை சூரணித்து, உபயோகிக்கவேண்டுமென சுச்ருதத்தில் கூறப் பட்டுள்ளது.

-पैत्ते साज्यसितामधु ॥ ७ ॥

क्षीरद्राक्षेक्षुकाश्मर्यस्वादुस्कन्धवरारसैः ।

### பித்த நோயில் உபயோகிக்கும் முறை :

பித்த நோயில் சிவதைச் சூரணத்தை நெய், சர்க்கரை, தேன், ஆகியவற்றுடன் கலந்து பால் திராக்ஷைச்சாறு, கருப்பஞ்சாறு, குமிழன்சாறு, இனிப்பு வர்க்கப் பொருள் களின் கஷாயம், திரிபலா கஷாயம் ஆகியவற்றுடன் உட்கொள்ள வேண்டும்.

कफामये पीलुरसमूत्रमद्याम्लकांजिकैः ॥ ८ ॥

पञ्चकोलादिचूर्णैश्च युक्त्या युक्तं कफापहैः ।

### கப நோயில் உபயோகிக்கும் முறை :

கப நோயில் சிவதைச் சூரணத்தை கபத்தைப் போக்கும் பஞ்சகோலம் முதலியவற்றின் சூர்ணத்துடன் ஏற்றவாறு கலந்து உகாய்ச் சாறு, பசுநீர், மதுவகை, புளிப்பான காடி ஆகியவற்றுடன் பருகவேண்டும்.

**குறிப்பு:** சிவதையை திரிகடு சூர்ணத்துடன் கலந்து பசு நீர், தேன், திராக்ஷாரிஷ்டம், உகாய்ச் சாறு, திரிபலா கஷாயம், பஞ்சகோலம் கஷாயம் இவற்றுடன் உபயோகிக்கும்படி சங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

त्रिवृत्कल्ककषायाभ्यां साधितः ससितो हिमः ॥ ९ ॥

मधुत्रिजातसंयुक्तो लेहो हृद्यं विरेचनम् ।

### சிவதை லேஹம் :

சிவதையின் கல்கம், கஷாயம் ஆகியவற்றுடன் சர்க்கரை சேர்த்து லேஹம் தயாரித்து ஆறியபின் தேன், *லவங்கப்

பட்டை, ஏலம், லவங்கப்பத்திரி ஆகியவை கலந்து உட்கொள்ளவேண்டும். இது மனதிற்குகந்த விரேசன மாகும்.

**குறிப்பு:** *விரேசனப் பொருள்கள் ஜீர்ணமாகும் நிலையை அடைந்த பிறகே, செயல்படுவதால் அதற்கு முன் வாந்தி ஏற்படாமல் தடுப்பதற்காக மணப் பொருள்களைக் கலக்கவேண்டும் என்னும் கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

अजगन्धा तवक्षीरी विदारी शर्करा त्रिवृत् ॥ १० ॥

चूर्णितं मधुसर्पिर्भ्यां लीढ्वा साधु विरिच्यते ।
सन्निपातज्वरस्तम्भपिपासादाहपीडितः ॥ ११ ॥

ஸன்னிபாத ஜ்வரம், தம்பிதம், விடாய், எரிச்சல், ஆகிய வற்றால் பீடிக்கப்பட்டவர், நாய்வேளை, மூங்கிலுப்பு, பால்முதுக்கன் கிழங்கு, சர்க்கரை, சிவதை இவற்றின் சூரணத்தை தேனும், நெய்யும் கலந்து உட்கொள்ள நன்கு விரேசனமாகும்.

लिम्पेदन्तस्त्रिवृतया द्विधाकृत्वेक्षुगण्डिकाः ।
एकीकृत्य पचेत्स्विन्नं पुटपाकेन भक्षयेत् ॥ १२ ॥

கரும்புத் துண்டை இரண்டாகப் பிளந்து அதன் உட்புறத்தில் சிவதைச் சூரணத்தைப் பூசி, பின்னர் அந்த இரண்டு பாகங்களையும் ஒன்றாக்கி, புடபாக முறையில் வேகவைத்து உட்கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** இது பித்த நோயாளிக்கு ஏற்றது என்றும், ஆறிய பின் உட்கொள்ளவேண்டும் என்றும் ஸுச்ருதத் தில் கூறப்பட்டுள்ளது.

त्वगैलाभ्यां समा नीली तैस्त्रिवृत्तैश्च शर्करा ।
चूर्णं फलरसक्षौद्रसक्तुभिस्तर्पणं पिबेत् ॥ १३ ॥

वातपित्तकफोत्थेषु रोगेष्वल्पानलेषु च ।
नरेषु सुकुमारेषु निरपायं विरेचनम् ॥ १४ ॥

லவங்கப்பட்டை, ஏலம் இவற்றின் கூட்டுக்குச் சம அளவு அவுரியும், இம்மூன்றுக்குச் சம அளவு சிவதையும், மொத்தத்துக்கு சமஅளவு சர்க்கரையும் கலந்து சூரணித்து *பழச்சாறு, தேன், பொரிமா, ஆகியவற்றைச் சேர்த்து இந்தப் பொரிமா நீரை வாதம், பித்தம், கபம் ஆகியவற்றால் உண்டான நோய்களிலும், அக்னி மந்தித்திருப்பவர், கஷ்டத்தைத் தாங்கமுடியாதவர் ஆகியோருக்கும் கொடுக்க; அபாயமின்றி விரேசனமாகும்.

**குறிப்பு:** திராக்ஷை முதலியவற்றின் சாறு என ஹேமாத்ரியும், மாதுளைச்சாறு என சக்ரதத்தரும் கூறுகின்றனர்.

विडंगतण्डुलवरायावशूककणात्रिवृत् ।
सर्वतोऽर्धेन तल्लीढं मध्वाज्येन गुडेन वा ॥ १५ ॥

गुल्मं प्लीहोदरं कासं हलीमकमरोचकम् ।
कफवातकृतांश्चान्यान् परिमार्ष्टि गदान् बहून् ॥ १६ ॥

வாய்விளங்கம், திரிபலை, யவக்ஷாரம், திப்பிலி இவை சம எடை எடுத்து, மொத்த எடையில் பாதி சிவதைச் சூர்ணம் கலந்து தேன், நெய், ஆகியவற்றுடனாவது, வெல்லத்துடனாவது உட்கொள்ள; குன்மம், மண்ணீரல், உதரம், இருமல், [1]ஹலீமகம், ருசியின்மை ஆகியவையும், மற்றும் வாத - கபங்களால் உண்டான பல நோய்களும் நீங்கும்.

குறிப்பு: ★ஹலீமகம் - பாண்டு நோயின் முற்றிய நிலை.

विडंगपिप्पलीमूलत्रिफलाधान्यचित्रकान् ।
मरीचेन्द्रयवाजाजीपिप्पलीहस्तिपिप्पलीः ॥ १७ ॥

दीप्यकं पञ्चलवणं चूर्णितं कार्षिकं पृथक् ।
तिलतैल त्रिवृच्चूर्णभागौ चाष्टपलोन्मितौ ॥ १८ ॥

धात्रीफलरसप्रस्थांस्त्रीन् गुडार्धतुलान्वितान् ।
पक्त्वा मृद्वग्निना खादेत्ततो मात्रामयन्त्रणः ॥ १९ ॥

कुष्ठार्शःकामलागुल्ममेहोदरभगन्दरान् ।
ग्रहणीपाण्डुरोगांश्च हन्ति पुंसवनश्च सः ॥ २० ॥

गुडः कल्याणको नाम सर्वेष्वृतुषु यौगिकः ।

**கல்யாணகுடம் :**

வாய்விளங்கம், கண்டதிப்பிலி, திரிபலை, மல்லி, கொடிவேலி, மிளகு, வெட்பாலையரிசி, ஓமம், திப்பிலி, யானைத்திப்பிலி, ஜீரகம், [1]பஞ்சலவணம் ஆகியவற்றை வகைக்கு 1/4 பலம் எடுத்து சூரணித்து, நல்லெண்ணெய் சிவதைச் சூரணம், ஆகியவை வகைக்கு 8 பலம், நெல்லிச் சாறு 3 பிரஸ்தம், வெல்லம் 50 பலம் இவற்றை சேர்த்து சிறு தீயில் பக்குவம் செய்யவேண்டும். தேவையான [2]அளவு உண்ணவேண்டும். பத்திய கட்டுப்பாடு இல்லை. இதனால் குஷ்டம், மூலம், காமாலை, குன்மம், பிரமியம், உதர நோய், பவுத்ரம், கிராணி, பாண்டு ஆகிய நோய்கள் நீங்கும். ஆண்மையை உண்டாக்கும். இது கல்யாண குடம் எனப்படும். இதனை எல்லா ருதுக்களிலும் உபயோகிக்கலாம்.

Central Library of Indian Medicines

**குறிப்பு:** 1. பஞ்சலவணம் ஸூத்திரஸ்தானம் அத்தியாயம் 6-ல் விளக்கப்பட்டுள்ளது.

2. இலந்தை அல்லது அத்திக்காய் அளவு குளிகை செய்து உபயோகிக்க வேண்டும் என சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

व्योषत्रिजातकाम्भोदकृमिघ्नामलकै स्त्रिवृत् ॥ २१ ॥

सर्वैः समा समसिता क्षौद्रेण गुटिकाः कृताः ।
मूत्रकृच्छ्रज्वरच्छर्दिकासशोषभ्रमक्षये ॥ २२ ॥

तापे पाण्ड्वामयेऽल्पेऽग्नौ शस्ताः सर्वविषेषु च ।
अविपत्तिरयं योगः प्रशस्तः पित्तरोगिणाम् ॥ २३ ॥

## அவிபத்தி குளிகை :

த்ரிகடு, த்ரிஜாதம், கோரைக் கிழங்கு, வாய்விளங்கம், நெல்லி இவை சம எடை, மொத்த எடைக்குச் சம அளவு சிவதைச் சூரணம், சிவதையின் அளவு சர்க்கரை ஆகிய வற்றுடன் (தேவையான அளவு) தேனும் கலந்து குளிகை செய்து சிறுநீர்த் தடை, ஜுரம், வாந்தி, இருமல், இளைப்பு, பிரமை, க்ஷயம், காந்தல், பாண்டு, அக்னிமந்தம், எல்லா வகையான விஷம் சேர்க்கை ஆகியவற்றில் உபயோகிக்கலாம். இந்த யோகம் அவிபத்தி (விபத்து அற்றது) எனப்படும். இது பித்த நோயாளிக்கு சிறந்தாகும்.

**குறிப்பு:** மூர்ச்சை, ருசியின்மை, தூக்கமின்மை, உடல் வலி, இருமல், சுவாஸம், ஆகியவையும் நீங்கும் என சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

त्रिवृता कौटजं बीजं पिप्पली विश्वभेषजम् ।

क्षौद्रद्राक्षारसोपेतं वर्षाकाले विरेचनम् ॥ २४ ॥

**மழைக் காலத்தில் உபயோகிக்கும் முறை :**

சிவதை, வெட்பாலையரிசி, திப்பிலி, சுக்கு இவற்றின் சூரணத்தை தேன், திராட்சைச்சாறு ஆகியவற்றில் கலக்கி விரேசனத்திற்காகப் பருகுவது மழைக்காலத்திற்கு ஏற்ற தாகும்.

त्रिवृद्दुरालभामुस्तशर्करोदीच्यचन्दनम् ।
द्राक्षाम्बुना सयष्टयाह्वसातलं जलदात्यये ॥ २५ ॥

**இலையுதிர் காலத்தில் உபயோகிக்கும் முறை :**

சிவதை, காஞ்சொறி, கோரைக்கிழங்கு, சர்க்கரை, விளாமிச்சை, சந்தனம், அதிமதுரம், துராய் இவற்றின் சூர்ணத்தை திராக்ஷைச் சாற்றுடன் இலையுதிர்காலத்தில் பருகவேண்டும்.

त्रिवृतां चित्रकं पाठामजाजीं सरलं वचाम् ।
स्वर्णक्षीरीं च हेमन्ते चूर्णमुष्णाम्बुना पिबेत् ॥ २६ ॥

**முன்பனிக் காலத்தில் உபயோகிக்கும் முறை :**

சிவதை, கொடிவேலி, வட்டத்திருப்பி, ஜீரகம், ஸரள தேவதாரு, வசம்பு, எருமைக்கள்ளி இவற்றின் சூர்ணத்தை வெந்நீருடன் முன்பனிக் காலத்தில் பருகவேண்டும்.

त्रिवृता शर्करातुल्या ग्रीष्मकाले विरेचनम् ।

**முதுவேனிற் காலத்தில் உபயோகிக்கும் முறை:**

சிவதைச் சூரணத்துடன் சம அளவு சர்க்கரை கலந்து முதுவேனிற் காலத்தில் உபயோகிக்கவேண்டும்.

त्रिवृत्त्रायन्तिहपुषासातलाकटुरोहिणीः ॥ २७ ॥

स्वर्णक्षीरी च संचूर्ण्य गोमूत्रे भावयेत्त्र्यहम् ।
एष सर्वर्तुको योगः स्निग्धानां मलदोषहृत् ॥ २८ ॥

**எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற விரேசனம் :**

சிவதை, துராய், கொட்டைக்கரந்தை, சிகைக்காய், கடுகரோஹிணீ, எருமைக்கள்ளி இவற்றைச் சூரணித்து பசுநீரில் 3 நாட்கள் ஊறவைக்கவேண்டும். இதை எல்லாக் காலங்களிலும் உபயோகிக்கலாம். உடல் நெய்ப்பு உள்ள வர்களுக்கு மலதோஷத்தை போக்கும்.

**குறிப்பு:** இளவேனிற் காலம், பின்பனிக் காலம் இவற்றிற் குரிய விரேசனம் தனித்து கூறப்படாவிடிலும், இந்த முறை ஏற்றதாகும்.

பொதுவாக அதிகக் குளிர் முதலியவை உள்ள காலத்தில் விரேசனம் தவிர்க்கப்பபட வேண்டி யதே. எனினும், நோயின் தன்மையை அனுசரித்து விரேசனம் அவசியமானால் இது உபயோகிக்கத் தக்கது என்பது கருத்து.

श्यामात्रिवृद्दुरालम्भाहस्तिपिप्पलिवत्सकम् ।
नीलिनीकटुकामुस्ताश्रेष्ठायुक्तं सुचूर्णितम् ॥ २९ ॥

रसाज्योष्णाम्बुभिः शस्तं रूक्षाणामपि सर्वदा ।

**வறட்சியுள்ளவருக்கும் விரேசனம் :**

கருஞ்சிவதை, சிவதை, காஞ்சொறி, யானைத் திப்பிலி, வெட்பாலையரிசி, அவுரி, கடுகரோஹிணீ, கோரைக் கிழங்கு, திரிபலை இவற்றைச் சூரணித்து மாம்ஸரஸம்,

நெய், வெந்நீர் இவற்றுடன் எக்காலத்திலும் வறட்சி உள்ளவராயிருப்பினும் உட்கொள்ளலாம்.

इति श्यामात्रिवृत् कल्कम् ।

अथ राजवृक्षकल्पः ।

ज्वरहृद्रोगवातासृगुदावर्तादिरोगिषु ॥ ३० ॥

राजवृक्षोऽधिकं पथ्यो मृदुर्मधुरशीतलः ।

**கொன்றைக் கல்பம் :**

மென்மை, இனிப்புச் சுவை, சீதவீர்யம் ஆகியவற்றைக் கொண்ட சரக்கொன்றையானது ஜ்வரம், இருதயரோகம், வாதரத்தம், உதாவர்த்தம் முதலிய நோய்களில் உபயோகிக்க மிகவும் ஏற்றதாகும்.

बाले वृद्धे क्षते क्षीणे सुकुमारे च मानवे ॥ ३१ ॥

योज्यो मृद्वनपायित्वाद्विशेषाच्चतुरगुंलः ॥

மென்மை, தீங்கு விளைவிக்காமை என்ற குணங்களைக் கொண்டிருத்தல் காரணமாக சரக்கொன்றையானது பாலர், வயோதிகர், நெஞ்சுப்புண் உள்ளவர், இளைத்தவர், நளினமான இயல்பு கொண்டவர் ஆகியோருக்கு விசேஷமாக உபயோகிக்க ஏற்றதாகும்.

फलकाले परिणतं फलं तस्य समाहरेत् ॥ ३२ ॥

तेषां गुणवतां भारं सिकतासु विनिक्षिपेत् ।
सप्तरात्रात्समुद्धृत्य शोषयेदातपे ततः ॥ ३३ ॥

ततो मज्ज्ञानमुद्धृत्य शुचौ पात्रे निधापयेत् ।
द्राक्षारसेन तं दद्याद्दाहोदावर्तपीडिते ॥ ३४ ॥

चतुर्वर्षे सुखं बाले यावद्द्वादशवार्षिके ।

**சரக்கொன்றையைச் சேகரிக்கும் முறை :**

நன்கு முதிர்ந்த கொன்றைப்பழத்தை, பழுக்கும் காலத்தில் சேகரிக்கவேண்டும். குற்றமற்ற பழங்கள் ஒரு பாரம் (2000 பலம்) எடுத்து, மணலில் வைக்க வேண்டும். ஒரு வாரத்துக்குபின் எடுத்து வெயிலில் உலர்த்தவேண்டும். பிறகு அதிலிருந்து பழச்சத்தை எடுத்து சுத்தமான பாத்திரத்தில் வைக்கவேண்டும். எரிச்சல், உதாவர்த்தம் ஆகிய நோய் உள்ளவருக்கு திராட்சைச் சாற்றுடன் கொடுக்க வேண்டும். இதை நான்கு வயது குழந்தை முதல் 12 வயதுள்ளவர் வரை உபயோகிக்க சுகம் தரும்.

**குறிப்பு:** கொன்றைப் பழச்சத்தை 2 அல்லது 4 பலம் உபயோகிக்கலாமென்று சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

चतुरंगुलमज्ज्ञो वा कषायं पाययेदिमम् ॥ ३५ ॥

दधिमण्डसुरामण्डधात्रीफलरसैः पृथक् ।
सौवीरकेण वा युक्तं कल्केन त्रैवृतेन वा ॥ ३६ ॥

அல்லது கொன்றைப் பழச்சத்தை (கொன்றைப் புளியை) ★சீத கஷாயம் தயாரித்து தயிர்த் தெளிவு, ஸுராத் தெளிவு, நெல்லிக்காய்ச் சாறு இவற்றுள் ஒன்றுடனாவது, காடி, சிவதைக் கல்க்கம் இவற்றுள் ஒன்றுடனாவது பருகச் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** ★ மருந்துப்பொருளை இடித்து நீர்விட்டு ஒரு இரவு வைத்திருந்து எடுக்கப்படுவது சீத கஷாயம் எனப்படும்.

दन्तीकषाये तन्मज्ज्ञो गुडं जीर्णं च निक्षिपेत् ।
तमरिष्टं स्थितं मासं पाययेत् पक्षमेव वा ॥ ३७ ॥

इति राजवृक्षकल्पः ।

நாகதந்தீ கஷாயத்தில் கொன்றைப் புளியையும், பழைய வெல்லத்தையும் கலந்து ஒரு மாதம் அல்லது 15 நாட்கள் வைத்திருந்து தயாரான அரிஷ்டத்தைப் பருகவேண்டும்.

अथ तिल्वककल्पः ।

त्वचं तिल्वकमूलस्य त्यक्त्वाऽऽभ्यन्तरवल्कलम् ।
विशोष्य चूर्णयित्वा च द्वौ भागौ गालयेत्ततः ॥ ३८ ॥

रोध्रस्यैव कषायेण तृतीयं तेन भावयेत् ।
कषाये दशमूलस्य तं भागं भावितं पुनः ॥ ३९ ॥

शुष्कं चूर्णं पुनः कृत्वा ततः पाणितलं पिबेत् ।
मस्तुमूत्रसुरामण्डकोलधात्रीफलाम्बुभिः ॥ ४० ॥

**லோத்திக் கல்பம் :**

லோத்தி வேரின் உட்புறப் பட்டையை நீக்கவிட்டு வெளிப்புறப் பட்டையை காய வைத்து சூரணிக்க வேண்டும். (சூரணத்தை மூன்று பங்கிட்டு) இரண்டு பங்கு சூரணத்தை லோத்திக் *கஷாயத்தில் கலக்கி வடிக் கட்டவேண்டும். பிறகு, மூன்றாவது பங்கு லோத்திச் சூரணத்தையும் அந்த கஷாயத்திலேயே ஊறவைக்க வேண்டும். அந்தச் சூர்ணத்சை தசமூல கஷாயத்தில் மறுபடியும் ஊறவைக்கவேண்டும். பிறகு, சூர்ணத்தைக் காயவைத்து 1/4 பலம் எடுத்து, தயிர்த்தெளிவு, பசுநீர், ஸுரைத் தெளிவு, இலந்தைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு இவற்றுள் ஒன்றுடன் பருகவேண்டும்.

குறிப்பு: *பாவனை செய்யப்பட வேண்டிய பொருளுக்கு சம அளவு லோத்திியை எடுத்து, 8 மடங்கு நீரில் இட்டுக் காய்ச்சி, எட்டிலொன்றாய் குறுக்கிக் கொள்ள வேண்டும்.

तिल्वकस्य कषायेण कल्केन च सशर्करः ।
सघृतः साधितो लेहः स च श्रेष्ठं विरेचनम् ॥ ४१ ॥

इति तिल्वककल्पः ।

லோத்திக் கஷாயம், லோத்திக் கல்க்கம், சர்க்கரை, நெய், ஆகியவற்றைச் சேர்த்து தயாரித்து உட்கொள்ள நன்கு விரேசனம் ஆகும்.

अथ सुधाकल्पः ।

सुधा भिनत्ति दोषाणां महान्तमपि संञ्चयम् ।
आश्वेव कोष्ठविभ्रशान्नैव तां कल्पयेदतः ॥ ४२ ॥

मृदो कोष्ठेऽबले बाले स्थविरे दीर्घरोगिणि ।
कल्प्या गुल्मोदरगरत्वग्रोगमधुमेहिषु ॥ ४३ ॥

पाण्डौ दूषीविषे शोफे दोषविभृान्तचेतसि ।
सा श्रेष्ठा कण्टकैस्तीक्ष्णैर्बहुभिश्च समाचिता ॥ ४४ ॥

द्विवर्षां वा त्रिवर्षां वा शिशिरान्ते विशेषतः ।
तां पाटयित्वा शस्त्रेण क्षीरमुद्धारयेत्ततः ॥ ४५ ॥

बिल्वादीनां बृहत्योर्वा काथेन सममेकशः।
मिश्रयित्वा सुधाक्षीरं ततोऽङ्गारेषु शोषयेत् ॥ ४६ ॥

पिबेत्कृत्वा तु गुटिकां मस्तुमूत्रसुरादिभिः ।

**கள்ளி :**

மிகவும் அதிகரித்த தோஷங்களையும் கள்ளியானது விரைவில் உடைக்கும். எனினும் கஷ்டமான தீங்கை விளைவிக்கும். ஆகையால் கள்ளியை மிருது கோஷ்டம் உள்ளவர், பலமில்லாதவர், பாலர், வயோதிகர், வெகு காலமாக நோய்வாய்ப்பட்டவர், ஆகியோருக்கு பிரயோகிக்கக்கூடாது. குன்மம், உதரம், இடுவிஷம், சரும நோய், மதுமேகம், பாண்டு, நாட்பட்ட விஷம், வீக்கம், தோஷங்களால் ஏற்பட்ட மனக்கலக்கம் ஆகியவற்றில் இதை உபயோகிக்கலாம். கூரான பல முட்கள் கொண்ட கள்ளி சிறந்ததாகும். விசேஷமாக 2 அல்லது 3 வருடமுள்ள கள்ளிச்செடியை பின்பனிக்காலத்தின் முடிவில் சஸ்திரத்தால் பிளந்து, பாலை எடுக்கச் செய்யவேண்டும். பின்பனிக் காலத்தின் முடிவில் சஸ்திரத்தால் பிளந்து பாலை எடுக்கச் செய்யவேண்டும். *பில்வாதிகணச்சரக்குகள் வரிசைப்படி அடுத்தடுத்து ஒவ்வொன்றின் கஷாயத்துடனாவது, அடுத்தடுத்து கண்டங்கத்திரி கஷாயம், கத்திரி கஷாயம் இவற்றுடனாவது, சம அளவு கள்ளிப்பால் சேர்த்து அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி வற்றச் செய்யவேண்டும். குளிகை செய்து தயிர்த் தெளிவு, பசுநீர், கள், முதலிய அனுபானத்துடன் உட்கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** *பில்வாதி சரக்குகள், பில்வம், பெருவாகை: முன்னை, பாதிரி, குமிழ், இவற்றின் வேர்.

त्रिवृतादीन्नव वरां स्वर्णक्षीरीं ससातलाम् ॥ ४७ ॥

सप्ताहं स्नुक्पयःपीतान् रसेनाज्येन वा पिबेत् ।

तद्वद्व्यषोत्तमाकुम्भनिकुम्भादीन् गुडाम्बुना ॥ ४८ ॥

इति सुधाकल्पः ।

சிவதை முதலிய *ஒன்பது திரவியங்களையாவது, திரிபலையையாவது, எருமைக்கள்ளி சேர்த்த துராயை யாவது கள்ளிப்பாலில் ஏழு நாட்கள் ஊறவைத்து மாம்ஸ ரஸம் அல்லது நெய்யுடன் உட்கொள்ளவேண்டும். அவ்வாறே (கள்ளிப்பாலில் 7 நாட்கள் ஊறவைக்கப்பட்ட) திரிகடு, திரிபலை, சிவதை, நாகதந்தீ, கொடிவேலி இவற்றின் சூர்ணத்தை வெல்ல ஜலத்துடன் உட்கொள்ளலாம்.

குறிப்பு: *சிவதை, கருஞ்சிவதை, கொன்றை, லோத்தி, கள்ளி, சங்குவெள்ளி, துராய், நாகதந்தீ, எலியால் ஆகியவை கூறப்படுகின்றன.

अथ शंखिनीसप्तलयोः कल्पः ।

नातिशुष्कं फलं ग्राह्यं शंखिन्या निस्तुषीकृतम् ।
सप्तलायास्तथा मूलं ते तु तीक्ष्णविकाषिणी ॥ ४९ ॥

श्लेष्मामयोदरगरश्वयथ्वादिषु कल्पयेत् ।
अक्षमात्रं तयोः पिण्डं मदिरालवणान्वितम् ॥ ५० ॥

हृद्रोगे वातकफजे तद्वद्गुल्मेप्रयोजयेत् ।

इति शांखनीसप्तलयोः कल्पः ।

சங்கு வெள்ளி துராய் இவற்றின் கல்பம் :

சங்கு வெள்ளியின் அதிகம் உலராத பழத்தை எடுத்து, தோல் நீக்கி வைத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறே துராய்ச் செடியின் வேரை எடுத்து தோல் நீக்கி வைத்துக்

கொள்ளவேண்டும். இவ்விரண்டும் தீக்ஷ்ணத் தன்மை யுடன் கரைக்கும் குணமும் கொண்டவை. இவற்றின் கல்க்கம் 1/4 பலம் எடுத்து, மதிரை என்னும் கள், இந்துப்பு ஆகியவற்றைக் கலந்து, கபநோய்கள், உதரம், இடுவிஷம், வீக்கம் முதலிய நோய்களிலும், வாத-கபங் களால் உண்டான இருதய நோய், குன்மம் ஆகியவற்றிலும் பிரயோகிக்கவேண்டும்.

**अथ दन्तीद्रवन्त्योः कल्पः ।**

दन्दिदन्तस्थिरं स्थूलं मूलं दन्तीद्रवन्तिजम् ।। ५१ ।।

आताम्रश्यावतीक्ष्णोष्णमाशुकारि विकाशि च ।
गुरु प्रकोपि वातस्य पित्तश्लेष्मविलायनम् ।। ५२ ।।

तत्क्षौद्रपिप्पलीलिप्तं स्वेद्यं मृद्दर्भवेष्टितम् ।
शोष्यं मन्दातपेऽग्न्यर्कौ हतो ह्यस्य विकाशिताम् ।। ५३ ।।

तत्पिबेन्मस्तुमदिरातक्रपीलुरसासवैः ।
अभिष्यन्नतनुर्गुल्मी प्रमेही जठरी गरी ।। ५४ ।।

गोमृगाजरसैः पाण्डुः कृमिकोष्ठी भगन्दरी ।
सिद्धं तत्काथकल्काभ्यां दशमूलरसेन च ।। ५५ ।।

विसर्पविद्रध्यलजीकक्षादाहान् जयेद्घृतम् ।
तैलं तु गुल्ममेहार्शोविबन्धकफमारुतान् ।। ५६ ।।

महास्नेहः शकृच्छुक्रवातसंगानिलव्यथाः ।

इति दन्तीद्रवन्त्योः कल्पः ।

## நாகதந்தீ - எலியால் இவற்றின் கல்பம் :

யானையின் தந்தம்போன்று கடினமும், உறுதியும் வாய்ந்த நாகதந்தீ - எலியால் இவற்றின் தடித்த வேரானது சிறிது சிவப்பு, கறுப்பு ஆகிய நிறமும், தீக்ஷ்ணம், உஷ்ணம், விரைவில் செயல்புரிதல், கரைத்தல், எளிதில் ஜீரணிக் காமை, வாயுவை கோபமடையச் செய்தல், பித்தம், கபம் ஆகியவற்றை குறையச் செய்தல் ஆகிய குணங்களும் கொண்டது. தேன், திப்பிலி இவற்றை அதன்மேல் தடவி தர்ப்பத்தினால் சுற்றி மண்ணை மேலே பூசி, வேகவைக்க வேண்டும். பிறகு இளம் வெயிலில் அதைக் காயவைக்க வேண்டும். ஏனெனில் அக்னி, வெயில் இவற்றால் இதிலுள்ள கரைக்கும் (விகாஸி) தன்மை நீக்கப்படுகிறது. இதைச் சூரணித்து; கசிவுள்ள உடல் உள்ளவர், குன்மம், பிரமியம், உதரம், இடுவிஷம், ஆகியவற்றால் பீடிக்கப் பட்டவர் ஆகியோர், தயிர்த்தெளிவு, மதிரை என்னும் மது, மோர், உகாய்ச்சாறு, ஆஸவம் இவற்றுடன் பருகவேண்டும். பாண்டு நோயாளி, கோஷ்டத்தில் கிருமி உள்ளவர். பவுத்ர நோயாளி ஆகியோர் பசு, மான், வெள்ளாடு இவற்றின் மாம்ஸ ரஸத்துடன் இதைப் பருகவேண்டும். இதன் கஷாயம், கல்கம் ஆகியவற்றுடன் தஸமூல கஷாயம் சேர்த்து நெய் பக்குவம் செய்து பருக விஸர்ப்பம், வித்ருதிக்கட்டி, அலஜி என்னும் பிரமியக்கட்டி, [1] கக்ஷா, எரிச்சல் ஆகிய வற்றைப் போக்கும். அவ்வாறே தைலம் காய்ச்சிப் பருக; குன்மம், பிரமியம், மூலம், மலத்தடை, கபம், வாயு ஆகிய வற்றைப் போக்கும். [2] அவ்வாறே மகாஸ்னேஹம் பக்குவம் செய்து பருக; மலம், சுக்ரம், வாயு ஆகியவற்றின் தடை யையும், வாயுவால் உண்டான வலியையும் போக்கும்.

குறிப்பு: 1. கக்ஷா - உத்தரஸ்தானம், அத்தியாயம் 31-ல் சுலோகம் 11-ல் விளக்கப்படவிருக்கிறது.

2. அவ்வாறே என்பதால், முற்கூறிய க்ருத யோகத்தில் உள்ளவாறு தசமூல கஷாயம் முதலியன குறிப்பிடப்படுகின்றன.

विरेचने मुख्यतमा नवैते त्रिवृतादयः ॥ ५७ ॥

சிவதை முதலிய இந்த 9 சரக்குகளும் விரேசனம் உண்டாக்குவதில் மிக முக்கியமானவையாகும்.

अथ हरीतकी कल्पः ।

हरीतकीमपि त्रिवृद्विधानेनोपकल्पयेत् ।

**கடுக்காய் கல்பம் :**

சிவதையின் *உபயோக முறையிலேயே கடுக்காயையும் உபயோகிக்கவேண்டும்.

**குறிப்பு:** *சிவதையின் உபயோக முறை 7-ஆம் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

गुडस्याष्टपले पथ्याविंशतिः स्यात्पलं पलम् ॥ ५८ ॥

दन्तीचित्रकयोः कर्षौ पिप्पलीत्रिवृतोर्दश ।
प्रकल्प्य मोदकानेवं दशमे दशमेऽहनि ॥ ५९ ॥

उष्णाम्बोऽनु पिबेत्खादेत्तान् सर्वान्विधिनाऽमुना ।
एते निष्परिहाराः स्युः सर्वव्याधिनिबर्हणाः ॥ ६० ॥

विशेषाद्ग्रहणीपाण्डुकण्डूकोठार्शसां हिताः ।

**அபயாமோதகம் :**

8 பலம் வெல்லம், 20 கடுக்காய், 1 பலம் நாகதந்தீ, 1 பலம் கொடிவேலி, ¼ பலம் திப்பிலி, ¼ பலம்

சிவதை இவற்றைக் கொண்டு, 10 மோதகம் செய்ய வேண்டும். 10 தினங்களுக்கு ஒரு மோதகம் வீதம் எல்லா வற்றையும் உட்கொள்ளவேண்டும். வெந்நீரை அனுபான மாகக் கொள்ளவேண்டும். கட்டுப்பாடுகள் கிடையாது. இது எல்லா வியாதிகளையும் போக்கும். விசேஷமாக கிராணி, பாண்டு, அரிப்பு, கொப்புளம், மூலம் ஆகிய வற்றில் நல்ல பயனை அளிக்கும்.

अल्पस्यापि महार्थत्वं पभूतस्याल्पकर्मताम् ॥ ६१ ॥

कुर्यात्संश्लेषविश्लेषकालसंस्कारयुक्तिभिः ॥

**கல்பனையின் சிறப்பு :**

வீர்யம், அளவு ஆகியவற்றில் குறைந்திருப்பினும், அதற்கு விசேஷ பலன் தரும் சக்தி நிறைந்திருப்பின், குறைந்த செயல் திறனையும், ஏற்ற பொருள்களுடன் சேர்த்தல், தனிப்படுத்தல், காலம், பக்குவமுறை, உத்தி ஆகியவற்றினால் அமைத்துக் கொள்ளவேண்டும்.

त्वक्केसराम्रातकदाडिमैलासितोपलामाक्षिकमातुलङ्गैः ।
मद्येन तैस्तैश्च मनोनुकूलैर्युक्तानि देयनि विरेचनानि ॥ ६२ ॥

விரேசன மருந்துகளை லவங்கப்பட்டை, சிறு நாகப்பூ, அம்பாளம், மாதுளை, ஏலம், சர்க்கரை, தேன், துருஞ்சி, மதுவகை ஆகியவற்றுடனும், மற்றும் மனதிற்கிசைந்த வற்றுடனும் கலந்து கொடுக்கவேண்டும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भट विरचितायामष्टांगहृदयसंहितायां
पंचमे कल्पस्थाने विरेचनकल्पो नाम द्वितीयोऽध्यायः ॥ २ ॥

கல்பஸ்தானம் - இரண்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

## ॥ कल्पस्थानम् - கல்பஸ்தானம் ॥

### तृतीयोऽध्यायः - அத்தியாயம் - 3

अथाऽतो वमनविरेचनव्यापत्तिसिद्धिं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

(முறை கேடாக) வாந்தி செய்வித்தல், (முறை கேடாக) விரேசனம் செய்வித்தல் ஆகியவற்றால் உண்டாகும் [1]தீங்குகளுக்குச் சிகித்ஸை என்னும் அத்தியாயம் விளக்கப் படுகிறது.

*குறிப்பு:* 1. எதிர் வழியில் செல்லுதல், ஜீரணித்து விடுதல், இறுகுதல், உடல்கனத்தல், தோஷங்கள் கிளர்ச்சியடைதல், வயிறு மிகவும் பருத்தல், கத்தரிப்பது போன்ற வலி, கசிவு, வயிற்றுக் கடுப்பு, இருதயப் பிடிப்பு, எல்லா உறுப்புக்களும் பிடித்துக் கொள்ளுதல், ஓஜஸ் வெளியேறுதல் இவை பன்னிரெண்டும் வமன விரேசன முறைக் கேடு காரணமாக உண்டாகின்றன என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

சரகத்தில் 10 உபத்ரவங்களே கூறப்பட்டுள்ளன.

वमनं मृदुकोष्ठेन क्षुद्वताऽल्पकफेन वा ।
अतितीक्ष्णहिमस्तोकमजीर्णे दुर्बलेन वा ॥ १ ॥

पीतं प्रयात्यधस्तस्मिन्निष्टहानिर्मलोदयः ।
वामयत्तं पुनः स्निग्धं स्मरन् पूर्वमतिक्रमम् ॥ २ ॥

மென்மையான குடல் உள்ளவர், பசியுள்ளவர், கபம் குறைந்தவர் ஆகியோரால் பருகப்பட்டதும், மிகத்

தீக்ஷ்ணம், மிகக் குளிர்ச்சி, மிகக் குறைந்த அளவு ஆகியவை பொருந்தியதும் அஜீர்ண நிலையில் பருகப்பட்டதும், பலங்குன்றியவரால் பருகப்பட்டதுமான வாந்தி [1] கீழ் நோக்கிச் செல்லும், இதனால் நினைத்த பயன் (வாந்தி) உண்டாகாது. தோஷங்கள் அதிகரிக்கும். அவருக்கு மீண்டும் நெய்ப்புச் சிகித்ஸை [2] செய்வித்து முன் தடவை ஏற்பட்ட தவறை கவனத்தில் கொண்டு, மறுபடியும் வாந்தி செய்விக்கவேண்டும்.

**குறிப்பு:** 1. மாறுபட்ட வழியில் செல்லுவதால் பெரும் பாலும் (அயோகம்) போதாமை எனப்படும். தோஷம் தக்கவாறு வெளியாவதில்லை.

2. அளவு, காலம், ஏற்றவை ஆகியவற்றைக் கவனித்து வாந்தி செய்விக்க வேண்டும்.

अजीर्णिनः श्लेष्मवतो व्रजत्यूर्ध्वं विरेचनम् ।
अतितीक्ष्णोष्णलवणमहृद्यमतिभूरि वा ॥ ३ ॥

तत्र पूर्वोदिता व्यापत्सिद्धिश्च न तथाऽपि चेत् ।
आशये तिष्ठति ततस्तृतीयं नावचारयेत् ॥ ४ ॥

अन्यत्र सात्म्याद्धृद्याद्वा भेषजान्निरपायतः ।

அஜீர்ணம் உள்ளவர், கபம் அதிகரிக்கப் பெற்றவர் ஆகியோரால் உட்கொள்ளப்பட்டதும், மிகவும் தீக்ஷ்ணம், மிகவும் உஷ்ணம், மிகவும் உப்புக்கலந்தது, மனதிற்கு பிடிக்காதது, மிகவும் அதிக அளவு உள்ளது ஆகிய குணங்களுள்ளதுமான விரேசன ஔஷதமானது, மேல் நோக்கும் (வாந்தியாகும்). இதனால் வமன தோஷத்தில் கூறியவாறு தீங்கு உண்டாகும். இங்கு கூறப்பட்டவாறு

சிகித்ஸை செய்யவேண்டும். இவ்வாறு செய்வித்தும் விரேசன ஒளஷதம் குடலில் தங்காது வாந்தியானால், மூன்றாவது தடவை விரேசன *ஒளஷதம் கொடுக்கக் கூடாது. உடலுக்குப் பழகியதும், மனதிற்குப் பிடித்ததும், அபாயம் உண்டாக்காததுமான மருந்துப் பொருள்களைக் கொடுக்கலாம்.

குறிப்பு: ★மனதிற்குப் பிடித்த லேஹம், வடகம் ஆகியவை மட்டுமே கொடுக்கலாம் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

अस्निग्धस्विन्नदेहस्य पुराणं रूक्षमौषधम् ॥ ५ ॥

दोषानुत्क्लेश्य निर्हर्तुमशक्तं जनयेद्गदान् ।
विभ्रंशं श्वयथुं हिध्मां तमसो दर्शनं तृषम् ॥ ६ ॥

पिण्डिकोद्वेष्टनं कण्डूमूर्वोः सादं विवर्णताम् ।
स्निग्धस्विन्नस्य वाऽत्यल्पं दीप्ताग्नेर्जीर्णमौषधम् ॥ ७ ॥

शीतैर्वास्तब्धमामे वा समुत्क्लेश्य हरन्मलान् ।
तानेव जनयेद्रोगानयोगः सर्व एव सः ॥ ८ ॥

நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை உண்டாகும் சிகித்ஸை ஆகியவற்றைச் செய்து கொள்ளாதவர்களால் பருகப் பட்டதும், நாட்பட்டதும், வறட்சியுள்ளதுமான *ஒளஷத மானது தோஷங்களைக் கிளர்ச்சியுறச் செய்யும். (ஆனால்) வெளியேற்றும் திறன் இல்லாததால் விருப்பம் நிறை வேறாமை, வீக்கம், விக்கல், கண் இருள் அடைதல், விடாய், ஆடு சதை முறுக்கிக் கொள்ளுதல், அரிப்பு, தொடை துவளுதல், நிறமாற்றம் ஆகியவற்றை உண் டாக்கும்.

நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை ஆகியவற்றை செய்து கொண்டவராயிருப்பினும் ஜாடராக்னி பலமுள்ளவருக்கு குறைவாகப் பிரயோகிக்கப் பட்ட ஔஷதமானது ஜீரணமாகி தோஷங்களை கிளர்ச்சி யுறச் செய்யும். ஆமதோஷம் உள்ளவர் விஷயத்திலாவது, குளிர்ச்சி பொருந்தியவற்றாலாவது, தம்பிதம் அடை விக்கப்பட்ட ஔஷதமும், தோஷங்களை கிளர்ச்சியுறச் செய்யும். அவற்றை வெளியேற்றாது முற்கூறிய நோய் களையே உண்டாக்கும். இவையாவும் (அயோகம்) செயல் திறன் போதாமையைக் குறிப்பிடும்.

குறிப்பு: ★விரேசன ஔஷதம் என அருணதத்தர் கூறுகிறார்.

तं तैललवणाभ्यक्तं स्विन्नं प्रस्तरशंकरैः ।
निरूढं जागलरसेभोजयित्वाऽ नुवासयेत् ॥ ९ ॥

फलमागधिकादारुसिद्धतैलेन मात्रया ।
स्निग्धं वातहरैः स्नेहैः पुनस्तीक्ष्णेन शोधयेत् ॥ १० ॥

அத்தகையவருக்கு எண்ணெயுடன் இந்துப்பு கலந்து அப்யங்கம் செய்வித்து, [1]பிரஸ்தரம், [2]சங்கரம் ஆகிய முறைகளால் வியர்வை உண்டாக்கவேண்டும். பின்னர் நிரூஹபஸ்தி செய்வித்து, வறண்ட பிரதேசப்பிராணிகளின் மாமிஸ ரஸங்களுடன் உணவு கொள்ளச் செய்து மலங்காரக் காய், திப்பிலி, தேவதாரு ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலத்தால் அளவுடன் அனுவாசனம் செய் விக்கவேண்டும். வாயுவைப் போக்கும் நெய்ப்புப் பொருள் களால், நெய்ப்பு உண்டாக்கி மறுபடியும் தீக்ஷ்ணமாக விரேசனம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: 1. வேகவைக்கப்பட்ட தானியங்கள் அல்லது பொடித்துவல், பாயசம், க்ருஸரம் என்னும்

எள் கஞ்சி, உத்காரை முதலியவற்றைப் பரப்பி அதன்மேல் பட்டுவகை, ஆமணக்கு இலை முதலியவற்றை விரித்து அதன் மேல் நோயாளி யைப் படுக்கச் செய்து வியர்ப்பித்தல் பிரஸ்தர ஸ்வேதம் எனப்படும்.

2. ஸங்கரஸ்வேதம் - உருண்டைகளால் (ஒத்தட மிடுதல் மூலமாக) வியர்ப்பித்தல்.

बहुदोषस्य रूक्षस्य मन्दाग्नेरल्पमौषधम् ।
सोदावर्तस्य चोत्क्लेश्य दोषान्मार्गान् निरुध्य तैः ॥ ११॥

भृशमाध्मापयेन्नाभिं पृष्ठपार्श्वशिरोरुजम् ।
श्वासं विण्मूत्रवातानां संगं कुर्याच्च दारुणम् ॥ १२ ॥

अभ्यंगस्वेदवर्त्यादि सनिरूहानुवासनम् ।
उदावर्तहरं सर्वं कर्माध्मातस्य शस्यते ॥ १३ ॥

पंचमूलयवक्षारवचाभूतिकसैन्धवैः ।
यवागूः सुकृता शूलविबन्धानाहनाशनी ॥ १४ ॥

தோஷம் அதிகரிக்கப் பெற்றவர், வறட்சியுள்ளவர், அக்னி மந்தம் உள்ளவர், மலவழித்தடை காரணமாக, தோஷம் மேல்நோக்கி உள்ளவர் ஆகியோருக்கு, குறைந்த அளவு கொடுக்கப்பட்ட ஔஷதமானது தோஷங்களைக் கிளறச் செய்து, அவற்றால் மார்க்கங்களை அடைத்து, நாபியை மிகவும் பருக்கச் செய்யும். மேலும் புட்டம், விலாப்பக்கங்கள், தலை ஆகிய இடங்களில் கடுமையான வலி, சுவாஸநோய், மலம், மூத்ரம், வாயு ஆகிய வற்றிற்கு தீவிரமான தடை ஆகியவற்றை உண்டாக்கும். அப்யங்கம், வியர்வை உண்டாக்குதல், பஸ்திப்

[1]பிரயோகம் முதலியன, நிரூஹபஸ்தி, அனுவாஸனபஸ்தி, உதாவர்த்த நோயைப் போக்கும் எல்லாவித சிகித்ஸையும் பொருமல் உள்ளவருக்கு ஏற்றவையாகும். [2]பஞ்சமூலம், யவக்ஷாரம், வசம்பு, நான்முகப்புல், இந்துப்பு ஆகிய வற்றைச் சேர்த்து கஞ்சி தயாரித்து உட்கொள்ள சூலை, மலத்தடை, பொருமல் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. மலங்காரை முதலியவற்றால் தயாரிக்கப் பட்ட திரி.

2. பஞ்சமூலம் என்பதால் பில்வம், முன்னை, பெருவாகை, குமிழ், பாதிரி இவற்றின் வேர் களாலான மகாபஞ்சமூலம் குறிக்கப்படுகிறது. திப்பிலி, கண்டதிப்பிலி, செவ்வியம், கொடி வேலி, சுக்கு ஆகிய பஞ்சகோலம் என்றும் மற்றொரு பாடம் காணப்படுகிறது.

पिप्पलीदाडिमक्षारहिंगुशुण्ठ्यम्लवेतसान् ।
ससैन्धवापिबेन्मद्यैः सर्पिषोष्णोदकेन वा ॥ १५ ॥

प्रवाहिकापरिस्रावववेदनापरिकर्तने ।

திப்பிலி, மாதுளை, யவக்ஷாரம், காயம், சுக்கு, புளி வஞ்சி இவற்றுடன் இந்துப்பைக் கலந்து மதுவகைகள், நெய், வெந்நீர் இவற்றுள் ஒன்றுடன் வயிற்றுக்கடுப்பு, கசிவு, வேதனையால் கத்தரிப்பது போன்ற உணர்ச்சி ஆகியவற்றில் உபயோகிக்கவேண்டும்.

पीतौषधस्य वेगानां निग्रहान्मारुतादयः ॥ १६ ॥

कुपिता हृदयं गत्वा घोरं कुर्वन्ति हृद्ग्रहम् ।
हिध्मापार्श्वरुजाकासदैन्यलालाक्षिविभ्रमैः ॥ १७ ॥

जिह्वां खादति निःसंज्ञो दन्तान् कटकटाययन् ।
न गच्छेद्विभ्रमं तत्र वामयेदाशु तं भिषक् ॥ १८ ॥

मधुरै पित्तमूर्च्छातं कटुभिः कफमूर्च्छितम् ।
पाचनीयेस्ततश्चास्य दोषशेषं विपाचयेत् ॥ १९ ॥

कायाग्निं च बलं चास्य क्रमेणाभिप्रवर्धयेत् ।

சோதனத்திற்கான ஔஷதம் உட்கொண்டவர், வேகங்களைத் தடுப்பின், வாயு முதலிய தோஷங்கள் கோபமடைந்து இருதயத்திற்குச் சென்று கொடூரமான இருதயப் பிடிப்பை உண்டாக்குகின்றன. விக்கல், விலாப்பக்கங்களில் வலி, இருமல், மனவாட்டம், வாயில் நீர் சுரத்தல், கண் சுழற்றல் ஆகியவற்றுடன் கூடிய இத்தகைய நோயாளி நாக்கைக் கடிப்பர், நினைவு இழப்பர், பற்களை நறநற வெனக் கடிப்பர், இந்த நிலையில் திகைப்படையாமல், வைத்தியர், பித்தத்தால் மூர்ச்சை அடைந்தவருக்கு இனிப்புப் பொருள்களாலும், கபத்தால் மூர்ச்சை அடைந்தவர்களுக்கு, காரப் பொருள்களாலும், உடனே வாந்தி செய்விக்க வேண்டும். பிறகு மீதியான தோஷத்தை ஆமதோஷத்தை பக்குவம் செய்யும் ஔஷதங்களால் பக்குவம் செய்ய வேண்டும். ஜாடராக்னியையும், தேக பலத்தையும் படிப் படியாக அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

पवनेनाऽतिवमनो हृदयं यस्य पीड्यते ॥ २० ॥

तस्मै स्निग्धाम्ललवणान् दद्यात्पित्तकफेऽन्यथा ।

அதிக வாந்தியுண்டானவருக்கு வாயுவால், இருதயம் பீடிக்கப்படுமாயின், அவருக்கு நெய்ப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகியவை பொருந்திய பொருள்களை கொடுக்க

வேண்டும். பித்தம், கபம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டால் *மாறுபட்ட பொருள்களைக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு: *மாறுபட்ட என்பதால் வறட்சி, இனிப்பு, காரம், கசப்பு, துவர்ப்பு ஆகியவை பொருந்திய பொருள்கள் கூறப்படுகின்றன.

पीतौषधस्य वेगानां निग्रहेण कफेन वा ॥ २१ ॥

रुद्धोऽति वा विशुद्धस्य गृह्णात्यंगानि मारुतः ।
स्तम्भवेपथुनिस्तोदसादोद्वेष्टार्तिभेदनैः ॥ २२ ॥

तत्र वातहरं सर्वं स्नेहस्वेदादि शस्यते ।

மருந்து உட்கொண்டவருக்கு, வேகங்களைத் தடுத்தலாலும், கபம் காரணமாக வழித்தடை ஏற்படுவதாலும், அதிகமாக சோதனம் ஏற்படுதலாலும், வாயு கோபமடைந்து தம்பிதம், நடுக்கம், குத்துவலி, ஓய்ச்சல், உறுப்பு முறுக்கிக் கொள்ளுதல், வலி, பிளத்தல் ஆகியவற்றுடன் உறுப்புக் களைப் பீடிக்கும். இந்த நிலையில் வாயுவைப் போக்கும் நெய்ப்புச் சிகித்ஸை, வியர்ப்பித்தல் முதலிய எல்லா சிகித்ஸை முறைகளும் சிறந்தனவாகும்.

बहुतीक्ष्णं क्षुधार्तस्य मृदुकोष्टस्य भेषजम् ॥ २३ ॥

हृत्वाऽऽशु विट्पित्तकफान् धातूनास्रावयेद्द्रवान् ।
तत्रातियोगे मधुरैः शेषमौषधमुल्लिखेत् ॥ २४ ॥

योज्योऽति वमने रेको विरेके वमनं मृदु ।
परिषेकावगाहाद्यैः सुशीतैः स्तम्भयेच्च तम् ॥ २५ ॥

अंजनं चन्दनोशीरमज्जासृक्शर्करोदकम् ।
लाजचूर्णैः पिबेन्मन्थमतियोगहरं परम् ॥ २६ ॥

பசி எடுத்தவர், மென்மையான கோஷ்டம் உள்ளவர், ஆகியோருக்கு மிகவும் தீக்ஷ்ணமான சோதன மருந்துப் பொருள் கொடுக்கப்படின் மலம், பித்தம், கபம் ஆகிய வற்றை விரைவில் வெளியேற்றி பிறகு திரவமான தாதுக்களை வெளியேற்றும். இத்தகைய அதியோகத்தில் (உள்ளே தங்கிய) மிகுந்துள்ள விரேசன திரவியத்தை இனிப்பான பொருள்களால் மேல் நோக்கிப் படுத்த வேண்டும். அதிக வாந்தி ஏற்படின் விரேசனமும், அதிக மான விரேசனம் ஏற்படின் மிருதுவான வாந்தியும் செய் விக்க வேண்டும். குளிர்ச்சியான நீர் ஊற்றல், மூழ்கச் செய்தல் முதலியவற்றால் சோதனமருந்தை தம்பிக்கச் செய்விக்கவேண்டும். அஞ்சனக்கல், சந்தனம், விளா மிச்சை, ஆட்டுரத்தம், சர்க்கரை நீர் ஆகியவற்றைப் பொரிமா சூர்ணத்துடன் கலந்து சத்துமா நீர் தயாரித்துப் பருக அதியோகத்தால் உண்டாகும் தீங்கு நீங்கும்.

वमनस्यातियोगे तु शीताम्बुपरिषेचितः ।
पिबेत्फलरसैर्मन्थं सघृतक्षौद्रशर्करम् ॥ २७ ॥

அதிக வாந்தி ஏற்படின் குளிர்ந்த நீரால் உடலை நனைத்துக் கொள்வதுடன் சத்துமா நீரை நெய், தேன், சர்க்கரை ஆகியவை கலந்து *பழரஸத்துடன் பருக வேண்டும்.

குறிப்பு: *மாதுளைச்சாற்றுடன் என டல்ஹணரும், திராக்ஷை முதலானவற்றின் சாற்றுடன் என இந்துவும் கூறுகிறார்கள்.

सोद्गारायां भृशं छर्द्यां मूर्वाया धान्यमुस्तयोः ।
समधूकांजनं चूर्णं लेहयेन्मधुसंयुतम् ॥ २८ ॥

மிகவும் ஏப்பத்துடன் உண்டாகும் வாந்தியில் பெருங் குரும்பை, மல்லி, கோரைக்கிழங்கு, இலுப்பை, அஞ்சனக் கல் இவற்றைச் சூரணித்து, தேன் கலந்து லேஹமாக உட்கொள்ளவேண்டும்.

वमतोऽन्तः प्रविष्टायां जिह्वायां कवलग्रहाः ।
स्निग्धाम्ललवणा हृद्या यूषमांसरसा हिताः ॥ २९ ॥

फलान्यम्लानि खादेयुस्तस्य चान्येऽग्रतो नराः ।

வாந்தி எடுப்பவருக்கு நாக்கு உட்சென்று விட்டால் நெய்ப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகியவை பொருந்தி [1]கவள கிரஹம் மற்றும் மனதிற்குப்பிடித்தமான பருப்புக் கஞ்சி, மாம்ஸரஸம் ஆகியவை ஏற்றவையாகும், அத்தகைய நோயாளிக்கு எதிரில் உள்ளவர்கள் புளிப்பான பழங்களை குதப்ப வேண்டும்.

குறிப்பு: 1. கண்டூஷமும் செய்யும்படி ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது. கண்டூஷம் - கபள கிரஹம் ஆகியவை ஸூத்ரஸ்தானம் 22-வது அத்யாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

2. ஆட்டு மாம்ஸம் என ஸங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

निःसृतां तु तिलद्राक्षाकल्कलिप्तां प्रवेशयेत् ॥ ३० ॥

நாக்கு வெளியில் தொங்கினால் எள், திராக்ஷை இவற்றின் கல்க்கத்தை நாக்கில் பூசி உள்ளே செலுத்த வேண்டும்.

குறிப்பு: அல்லது த்ரிகடு, உப்பு இவற்றைப் பொடித்து நாக்கில் பூசி உள்ளே செலுத்தலாம் என சங்க்ரஹத் தில் கூறப்பட்டுள்ளது.

वाग्ग्रहानिलरोगेषु घृतमांसोपसाधिताम् ।
यवागूं तनुकां दद्यात्स्नेहस्वेदौ च कालवित् ॥ ३१ ॥

வாக்கிரஹம் (பேச்சுத்தடை) முதலிய வாத நோய்களில் நெய், மாமிஸம், ஆகியவை சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட கஞ்சியின் தெளிவைக் கொடுக்கவேண்டும். தக்க காலத்தை அறிந்த வைத்தியர், நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை ஆகியவற்றையும் செய்விக்கவேண்டும்.

अतियोगाच्च भैषज्यं जीवं हरति शोणितम् ।
तज्जीवादानमित्युक्तमादत्ते जीवितं यतः ॥ ३२ ॥

அதிக அளவில் கொடுக்கப்பட்ட சோதன குணமுள்ள மருந்துப்பொருள் ஜீவ ரத்தத்தைப் போக்கி மரணத்தை உண்டாக்கும். எனவே இந்த நோய் ஜீவாதானம் எனப் படும்.

शुने काकाय वा दद्यात्तेनान्नमसृजा सह ।
भुम्ते तस्मिन् वदेज्जीवम भुक्ते पित्तमदिशेत् ॥ ३३ ॥

शुक्लं वा मावितं वस्त्रमावानं कोष्णवारिणा ।
प्रक्षालितं विवर्णं स्यात्पित्ते शुद्धं तु शोणिते ॥ ३४ ॥

**ஜீவரத்த பரிசோதனை :**

இந்த ரத்தத்துடன் அன்னத்தைக் கலந்து காகம் அல்லது நாய்க்குக் கொடுக்கவேண்டும். அவை ரத்தத்துடன் கலந்த உணவை உட்கொண்டால் மருந்துப் பொருளால் வெளியேற்றப் பட்டது ஜீவரத்தம் என்றும், உட்கொள்ளாவிடில் வெளியேற்றப்பட்டது பித்தம் என்றும் அறியவேண்டும். அல்லது வெண்ணிறமான வஸ்திரத்தை அத்தகைய

திரவத்தில் (2 அல்லது 3 தடவை) ஊறவைத்துக் உலர்ந்த பின் இளஞ்சூடான வெந்நீரால் கழுவ வேண்டும். பித்தம் கலந்திருப்பின் துணியில் நிறமாற்றமும், ஜீவரத்தம் கலந்தி ருந்தால் துணி சுத்தமாகவும் இருக்கும்.

**குறிப்பு:** வெளியேறியது ஜீவரத்தமெனில், இனிப்புச் சுவை காரணமாக பிராணிகளால் விரும்பி உண்ணப்படும். வெளியேறியது பித்தமெனில், துர்நாற்றம் காரணமாக பிராணிகளால் விரும்பி உண்ணப்பட மாட்டாது.

तृष्णामूर्छामदार्तस्य कुर्यादामरणात्क्रियाम् ।
रक्तपित्तातिसारघ्नीं तस्याशु प्राणरक्षणीम् ॥ ३५ ॥

मृगगोमहिषाजानां सद्यस्कं जीवतामसृक् ।
पिबेज्जीवाभिसन्धानं जीवं तध्याशु गच्छति ॥ ३६ ॥

तदेव दर्भमृदितं रक्तं बस्तौ निषेचयेत् ।
श्यामाकाश्मर्यपधुकदूर्वोशीरैः शृतं पयः ॥ ३७ ॥

घृतमण्डाजनयुतं बस्तिं वा योजयेद्धिमम् ।
पिच्छाबस्तिं सुशीतं वा घृतमण्डनुवासनम् ॥ ३८ ॥

ஜீவரத்தம் வெளியேறுபவருக்கு தாகம், மூர்ச்சை, வெறி ஆகியவை ஏற்படின், உயிரைக் காப்பாற்றுவதற்காக உடனடியாக ரத்தபித்த, அதிசாரம் ஆகியவற்றிற்கு கூறப் பெற்ற சிகித்ஸையை உயிர் உள்ளளவும் ஏற்றவாறு செய்ய வேண்டும். உயிருடன் கூடிய மான், மாடு, எருமை, ஆடு ஆகியவற்றிலிருந்து அப்பொழுதே எடுக்கப்பட்ட *ரத்தத் தைப் பருகவேண்டும். அத்தகைய ரத்தமானது ஜீவனை நிரப்புவதாகும். (ஜீவரத்தத்துடன் விரைவில் இணைவது மாகும்.) அத்தகைய ரத்தத்தில் (புதிய) தர்ப்பத்தை

அரைத்துக் கலந்து பஸ்தி செய்விக்கவேண்டும். ஞாழல், பெருங்குமிழ், அதிமதுரம், அறுகு, விளாமிச்சை ஆகியவை சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட பாலை குளிர்ந்த பின் நெய்த்தெளிவு, அஞ்சனக்கல் ஆகியவை சேர்த்து பஸ்தி செய்விக்கவேண்டும். அல்லது பிச்சா பஸ்தியையாவது, குளிர்ந்த நெய்த் தெளிவையாவது அனுவாஸன பஸ்தி யாகப் பிரயோகிக்கவேண்டும்.

**குறிப்பு:** ⋆தேன் சேர்த்துப் பருகவேண்டுமென ஸங்க்ர ஹத்தில் கூறப்பட்டுள்ளது.

गुदं भ्रष्टं कषायैश्च स्तम्भयित्वा प्रवेशयेत् ।

குதம் நழுவியிருந்தால் துவர்ப்புப் பொருள்களால் அந்த பாகத்தை [1]தம்பிக்கச் செய்து, பின்னர் உள்ளே செலுத்த வேண்டும்.

**குறிப்பு:** துவர்ப்புப் பொருள்களாலான கஷாயங்களை ஊற்றுவதன் மூலம் தம்பிக்கச் செய்யவேண்டும் என அருணதத்தர் விளக்குகிறார்.

विसंज्ञं श्रावयेत्साम वेणुगीतादिनिस्वनम् ॥ ३९ ॥

நினைவு இழந்தவரை *ஸாமவேதம் மற்றும் புல்லாங் குழல் பாட்டு முதலியவற்றின் ஒலியை கேட்கச் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** ⋆ஸாம என்பதற்கு ஆறுதல் கூறுதல் எனவும் பொருள் கூறுவதுண்டு.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां पंचमे कल्पस्थाने वमनविरेचनव्यापत्सिद्धिर्नाम तृतीयोऽध्याय: ॥ ३ ॥

கல்பஸ்தானம் - மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## ॥ कल्पस्थानम् - கல்பஸ்தானம் ॥

## चतुर्थोऽध्यायः - அத்தியாயம் - 4

अथाऽतो बस्तिकल्पं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து பஸ்தி கல்பம் என்னும் அத்தியாயம் விவரிக்கப் படுகிறது. இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

குறிப்பு: குதத்தின் வழியாகப் பிரயோகிக்கப்படும் பஸ்தி (நிரூஹ பஸ்தி) கஷாயபஸ்தி, (அனுவாஸன பஸ்தி), நெய்ப்புப் பொருள் பஸ்தி என இரு வகைப்படும். அவற்றுள் நிரூஹ பஸ்திப் பிரயோக முறைகள் விளக்கப்படுகின்றன. அதிலும் வாயுவிற் குரிய பஸ்திகள் முதலிடம் பெறுகின்றன.

बलां गुडूचीं त्रिफलां सरास्नां द्विपंचमूलं च पलोन्मितानि ।
अष्टौ पलान्यर्धतुलां च मांसाच्छागात्पचेदप्सु चतुर्थशेषम् ॥ १ ॥

पूतो यवानीफलबिल्वकुष्ठवचाशताह्वाघनपिप्पलीनाम् ।
कल्कैर्गुडक्षौद्रघृतैः सतैलैर्युक्तः सुखोष्णो लवणान्वितश्च ॥ २ ॥

बस्तिः परं सर्वगदप्रमाथी स्वस्थे हितो जीवनबृंहणश्च ।

உடலை பருக்கச் செய்தல் :

சிற்றாமுட்டி, சீந்தில், திரிபலை, சிற்றரத்தை, தசமூலம் இவை வகைக்கு 1 பலம், மருக்காரை (எண்ணிக்கையில்) 8, [1]ஆட்டு மாம்ஸம் 50 பலம், இவற்றை [2]நீரிலிட்டுக் காய்ச்சி, நாலில் ஒன்றாய்க் குறுக்கிக் கொள்ளவேண்டும்.

வடிகட்டிய பின், ஓமம், மருக்காரை, பில்வம், கோஷ்டம், வசம்பு, சதகுப்பை, கோரைக்கிழங்கு, திப்பிலி இவற்றின் [3]கல்க்கமும், வெல்லம், [4]தேன், [5]நெய் எண்ணெய், [6]இந்துப்பு ஆகியவற்றையும் சேர்த்து, இளம் சூடு உள்ளதாக பஸ்தி பிரயோகிக்க; எல்லா நோய்களையும் போக்கும். ஆரோக்கிய நிலையில் உள்ளவருக்கும் ஏற்றது. ஜீவ சக்தியை அதிகரித்தல், உடலைப் பருக்கச் செய்தல் என்ற குணங்களைக் கொண்டது.

குறிப்பு: *1. மாம்ஸம், 16 பலம் என டல்ஹணர் கூறுகிறார்.*

*2. நீர், 16 மடங்கு என ஹேமாத்ரியும், நான்கு மடங்கு என அருணதத்தர் முதலியோரும் கூறு கிறார்கள்.*

*3. கல்க்கச் சரக்குகள் மொத்தம் 2 பலம் என அருணதத்தர் விளக்குகிறார்.*

*4. கஷாயம் அதிகத்தெளிவு, அல்லது அதிகத் தடிப்பு ஏற்படாதவாறு தேன், இந்துப்பு ஆகியவற்றை சேர்க்கவேண்டும்.*

*5. வாத-பித்த கப நோய்களில் முறையே நாலில் ஒன்று, ஆறில் ஒன்று, எட்டில் ஒன்று என்ற அளவில் நெய்ப்புப் பொருள் சேர்க்கவேண்டும்.*

*சுச்ருத ஸம்ஹிதையில் இந்த யோகத்தின் கஷாயத் திரவியங்களில் மலங்காரை இடம் பெறவில்லை. கல்க்க திரவியங்களுடன் ஞாழலும் காணப்படு கிறது.*

बस्तौ च यस्मिन् पठितो न कल्कः सर्वत्र दद्यादमुमेव तत्र ॥ ३॥

பஸ்தி யோகங்களில் கல்க்கம் கூறப்படாத எல்லா இடங்களிலும் இங்கு கூறப்பெற்ற கல்க்கத்தையே சேர்க்க வேண்டும்.

द्विपंचमूलस्य रसोऽम्लयुक्तः सच्छागमांसस्य स पूर्वपेष्यः ।
त्रिस्नेहयुक्तः प्रवरो निरूहः सर्वानिलव्याधिहरः प्रदिष्टः ॥ ४॥

[1]ஆட்டு மாம்ஸம், தசமூலம் இவற்றின் [2]ரஸத்துடன் (காடி முதலிய) புளிப்புப் பொருள்களும், முன் யோகத்தில் கூறப்பட்ட கல்க்கமும், [3]மூவகை நெய்ப்பும் சேர்த்து நிரூஹ பஸ்தி பிரயோகிக்க; எல்லாவிதமான வாத நோய்களும் நீங்கும்.

குறிப்பு: 1. மாமிஸத்தின் அளவு தஸமூலத்திற்கு ஸமம்.

2. தஸமூல கஷாயம் தனித்துத் தயாரிக்கப்பட்ட வேண்டும் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

3. தோஷம் முதலியவற்றிற்கேற்ப மூவித நெய்ப்புப் பொருள் என இந்து கூறுகிறார். நெய், எலும்புச்சத்து, மாம்ஸ எண்ணெய், ஆகியவை குறிப்பிடப்படுவதாக அருணதத்தர் கூறுகிறார். பஸ்திக்கான நெய்ப்புப் பொருள்களில் எலும்புச் சத்துக்கு இடமில்லையாதலால் நெய், எண்ணெய், மாம்ஸ எண்ணெய் ஆகிய மூன்றும் குறிப் பிடப்படும் என்பது சக்ரபாணி முதலியவர்களின் கருத்தாகும்.

बलापटोलीलघुपंचमूलत्रायन्तिकै रण्डयवात्सुसिद्धात् ।
प्रस्थो रसाच्छागरसार्धयुक्तः साध्यः पुनः प्रस्थसमः स यावत् ॥ ५ ॥

प्रियंगुकृष्णाघनकल्कयुक्तः सतैलसर्पिर्मधुसैन्धवश्च ।
स्याद्दीपनो मांसबलप्रदश्च चर्क्षुर्बलं चोपदधाति सद्यः ॥ ६ ॥

சிற்றாமுட்டி, பேய்ப்புடல், சிறுபஞ்சமூலம், துராய்ப் பூண்டு, ஆமணக்கு, யவை இவற்றின் 1 பிரஸ்த கஷாயத் துடன் ½ பிரஸ்தம் ஆட்டு மாம்ஸ ரஸம் சேர்த்துக் காய்ச்சி 1 பிரஸ்தமாக சுண்டியவுடன் ஞாழல், திப்பிலி, கோரைக் கிழங்கு இவற்றின் கல்க்கமும், எண்ணெய், நெய், தேன், இந்துப்பு ஆகியவற்றையும் சேர்த்து பஸ்தி பிரயோகிக்க; பசியைத் தூண்டும். உடலில் மாமிஸமும், பலமும் உண்டாகும். உடனடியாக கண்களுக்கும் பலம் உண்டாக்கும்.

एरण्डमूलात्त्रिपलं पलाशात्तथा पलांशं लघुपंचमूलम् ।
रास्नाबलाछिन्नरुहाश्वगन्धापुनर्नवारग्वधदेवदारु ॥ ७ ॥

फलानि चाष्टौ सलिलाढकाभ्यां विपाचयेदष्टमशेषितेऽस्मिन् ।
वचाशताह्वाहपुषाप्रियगुंयष्टीकणावत्सकबीजमुस्तम् ॥ ८ ॥

दद्यात्सुपिष्टं सहतार्क्ष्यशैलमक्षप्रमाणं लवणांशयुक्तम् ।
समाक्षिकस्तैलयुतः समूत्रो बस्तिर्जयेल्लेखनदीपनोऽसौ ॥ ९ ॥

जंघोरुपादत्रिकपृष्ठकोष्ठहृद्गुह्यशूलं गुरुतां विवन्धम् ।
गुल्माश्मवर्ध्मग्रहणीगुदोत्थां स्तांस्तांश्च रोगान् कफवातजातान् ॥१०॥

ஆமணக்கு வேர் 3 பலம், பூலாங்கிழங்கு 3 பலம், சிறுபஞ்சமூலம், சிற்றரத்தை, சிற்றாமுட்டி, சீந்தில், அமுக்கராக்கிழங்கு, மூக்கிரட்டை, கொன்றை, தேவதாரு ஆகியவை வகைக்கு 1 பலம், மருக்காரை (எண்ணிக்கை யில்) 8, இவற்றை 8 பிரஸ்த நீரிலிட்டு, எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவேண்டும். வசம்பு, சதகுப்பை,

கொட்டக்கரந்தை, ஞாழல், அதிமதுரம், திப்பிலி, வெட்பாலையரிசி, கோரைக்கிழங்கு, அஞ்சனக்கல் இவை வகைக்கு ¼ பலம் எடுத்து, அவற்றின் கல்க்கத்தையும், இந்துப்பு ¼ பலம் மற்றும் தேன், எண்ணெய், பசு நீர் ஆகியவற்றையும் கஷாயத்துடன் சேர்த்து, பஸ்தி பிரயோகிக்க; தோஷங்களைக் குடைந்து வெளியேற்றும். பசியைத் தூண்டும். முழங்கால், தொடை, கால், முள்ளந்தண்டு, புட்டம், வயிறு, இருதயம், குஹ்யம் ஆகியவற்றில் உண்டாகும் வலி, வயிறு கனத்தல், மலத்தடை, குன்மம், கல்லடைப்பு, விருத்தி, கிராணி, மூலம் மற்றும் வாத கபத்தால் உண்டாகும் நோய்கள் ஆகியவை நீங்கும்.

**குறிப்பு:** இந்த யோகத்தை ஏரண்டபஸ்தி என்றே சரகர் குறிப்பிடுகிறார். இதுவரையில் காறும் வாயுவிற்கான நிரூஹபஸ்தி விளக்கப்பட்டது. அடுத்து பித்தத்திற்கான நிரூஹபஸ்திகள் கூறப்படுகின்றன.

यष्ट्याह्वरोध्राभयचन्दनैश्च शृतं पयोऽग्र्यं कमलोत्पलैश्च ।
सशर्कराक्षौद्रघृतं सुशीतं पित्तामयान् हन्ति सजीवनीयम् ॥ ११ ॥

அதிமதுரம், லோத்தி, விளாமிச்சை, சந்தனம், தாமரை, நீலோத்பலம், ஆகியவற்றைச் சேர்த்து [1]பசும்பாலைக் காய்ச்சி ஆறிய நிலையில் சர்க்கரை, தேன், [2]நெய், ஆகியவற்றையும், [3]ஜீவனீய கணச்சரக்குகளின் கல்கமும் சேர்த்து பஸ்தி பிரயோகிக்க பித்த நோய்களும் நீங்கும்.

**குறிப்பு:** 1. சரக்குகளுக்கு 8 மடங்கு பாலும், பாலுக்கு 4 மடங்கு நீரும் சேர்த்து (நீர் சுண்டி) பால் அளவுக்கு இருக்கும்படி காய்ச்சி வடிக்கட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. சரகத்தில் இந்த யோகத்தில் நெய் கூறப்பட வில்லை.

3. ஜீவனீய கணம் ஸூத்ரஸ்தானம். அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

रास्नां वृषं लोहितकामनन्तां बलां कनीयस्तृणपंचमूल्यौ ।
गोपांगनाचन्दनपद्मकर्द्धियष्टयाह्वरोध्राणि पलार्धकानि ॥ १२ ॥

निःक्वाथ्य तोयेन रसेन तेन भृतं पयोऽर्धाढकमम्बुहीनम् ।
जीवन्तिमेदर्द्धिवरीविदारीवीराद्विकाकोलिकसेरुकाभिः ॥ १३ ॥

सितोपलाजीवकपद्मरेणुप्रपौण्डरीकोत्पलपुंडरीकैः ।
रोध्रात्मगुप्तामधुयष्टिकाभिर्नागाह्वमुंजातकचन्दनैश्च ॥ १४ ॥

पिष्टैर्घृतक्षौद्रयुतैर्निरूहं ससैन्धवं शीतलमेव दद्यात् ।
प्रत्यागते धन्वरसेन शालीन् क्षीरेण वाऽद्यात्परिषिक्तगात्रः ॥ १५॥

दाहातिसारप्रदरास्रपित्तहृत्पाण्डुरोगान् विषमज्वरं च ।
सगुल्ममूत्रग्रहकामलादीन् सर्वामयान् पित्तकृतान्निहन्ति ॥ १६ ॥

அரத்தை, ஆடாதோடை, மஞ்சிட்டி, அறுகு, சிற்றா முட்டி, [1]சிறுபஞ்சமூலம், த்ருணபஞ்சமூலம், நன்னாரி, சந்தனம், பதிமுகம், ருத்தி, அதிமதுரம், லோத்தி இவை வகைக்கு ½ பலம் எடுத்து, (16 பங்கு) ஜலத்திலிட்டு (நாலில் ஒன்றாய் குறுகக் காய்ச்சி (வடிகட்டி) அத்துடன் 2 பிரஸ்தம் [2]பால் சேர்த்து, கஷாய நீர் சுண்டுமளவுக்குக் காய்ச்சி, கீரிப்பாலை, மேதா, ருத்தி, தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பூசணி, கோவை, காகோலீ, க்ஷீரகாகோலீ, முத்தக்காசு, கற்கண்டு, ஜீவகம், பத்மகேஸரம், வறள் தாமரை, நீலோத்பலம், தாமரை, லோத்தி, பூனைக்காலி,

அதிமதுரம், சிறுநாகப் பூ, முஞ்சிப்புல், சந்தனம் இவற்றின் கல்க்கமும் நெய், தேன், இந்துப்பு ஆகியவற்றையும் கலந்து குளிர வைத்து நிரூஹ பஸ்தி செய்விக்கவேண்டும். நிரூஹம் வெளியேறியவுடன் ஸ்னானம் செய்து வறண்ட பிரதேசப் பிராணியின் ரஸம் அல்லது பால் சேர்த்து சாலியன்னம் உட்கொள்ளவேண்டும். இது எரிச்சல், அதிஸாரம், பெரும் பாடு, ரத்தபித்தம், இருதய நோய், பாண்டு, முறை ஜ்வரம், குன்மம், சிறுநீர்க்கட்டு, காமாலை முதலிய பித்த நோய்கள் யாவற்றையும் போக்கும்.

**குறிப்பு:** 1. சிறு பஞ்சமூலம், 2. த்ருணபஞ்சமூலம் இவ்விரண்டும் ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 6-ல் விளக்கப்பட்டுள்ளன.

2. பாலின் அளவு 64 பலம் (4 பிரஸ்தம்) என ஹேமாத்ரி குறிப்பிடுகிறார்.

कोशातकारग्वधदेवदारुमूर्वाश्वदंष्ट्राकुटजार्कपाठाः ।
पक्त्वा कुलत्थान्बृहतीं च तोये रसस्य तस्य प्रसृता दश स्युः ॥१७॥

तान् सर्षपैलामदनैः सकुष्ठैः रक्षप्रमाणैः प्रसृतेश्चयुक्तान् ।
क्षौद्रस्य तैलस्य फलाह्वयस्य क्षारस्य तैलस्य च सार्षपस्य* ॥ १८॥

दद्यान्निरूहं कफरोगिताय मन्दाग्नये चाशनविद्विषे च ।

*ससर्पिषश्च- என்ற பாடத்தில் நெய் சேர்க்கவேண்டும் என்று அருணதத்தர் கூறுகிறார்.

### கப நோய்களுக்கு நிரூஹம் :

[1]பீர்க்கு, சரக்கொன்றை, தேவதாரு, பெருங்குரும்பை, [2]நெருஞ்சில், வெட்பாலை, எருக்கு, வட்டத்திருப்பி, கொள், கண்டங்கத்திரி இவற்றை [3]நீரிலிட்டு (முறைப்படி)

கஷாயமாக்கி, 20 பலம் எடுத்துக் கொள்ளவேண்டும். அதனுடன் கடுகு, ஏலம், மருக்காரை, கோஷ்டம் ஆகியவை வகைக்கு ¼ பலம். தேன், [4] மலங்காரை எண்ணெய், யவக்ஷாரம், கடுகு எண்ணெய் ஆகியவை வகைக்கு 2 பலம் ஆகியவற்றைக் கலந்து கப நோயாளி, அக்னி மந்திக்கப் பெற்றவர், உணவு வேண்டாதவர் ஆகியோருக்கு நிரூஹம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: 1. பீர்க்கு முதலான திரவியங்களின் அளவு கூறப் படாவிடினும், ஸாமான்ய பரிபாஷைபடி வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. சரகத்தில் शार्ङ्गेष्टा குன்றி என்றே கூறப்பட்டுள் ளது.

3. 16 மடங்கு நீர் விட்டு எட்டில் ஒன்றாய் காய்ச்சிக் கொள்ளவேண்டும்.

4. மலங்காரைக் கல்க்கத்துடன் புளிப்புப் பொருள் சேர்த்துக் காய்ச்சிய தைலம் என அருணதத்தர் கூறுகிறார்.

वक्ष्ये मृदून् स्नेहकृतो निरूहान् सुखोचितानां प्रसृतैः पृथक् तु ॥१९॥

மிருது குணம் வாய்ந்தவையும், நெய்ப்பு உண்டாக்கு பவையும், (பிரஸ்ருத) இரண்டு பலக் கணக்கில் கூறப்பட்ட பொருள்களை உடையவையுமான பஸ்தி முறைகளை சுகவாசிகளுக்குத் தனியாக விளக்குகிறேன்.

குறிப்பு: இதே கருத்துடன் அடுத்துக் கூறப்படும் சுலோகம் காணப்படுவதால், இந்தப் பகுதி மூலத்தில் சேர்ந்த தல்ல என சிலர் கூறுவர்.

अथेमान् सुकुमाराणां निरूहान् स्नेहनान् मृदून् ।
कर्मणा विप्लुतानां च वक्ष्यामि प्रसृतैः पृथक् ॥ २० ॥

நளினமான உடல் உடையவர்களுக்கும், வாந்தி முதலிய வற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நெய்ப்பு உண்டாக்கக் கூடியவையும், மிருதுகுணமுள்ளவையும் (ப்ரஸ்ருத) இரண்டு பல அளவில் பொருள்கள் கொண்டவைகளுமான நிரூஹபஸ்திகளை இனி கூறுகிறேன்.

क्षीराद् द्वौ प्रसृतौ कार्यौ मधुतैलघृतात्त्रयः ।
खजेन मथितो बस्तिर्वातघ्नो बलवर्णकृत् ॥ २१ ॥

பால் இரண்டு பிரஸ்ருதம், தேன், எண்ணெய், நெய் இவை வகைக்கு 1 பிரஸ்ருதம், இவற்றைக் (கலந்து) மத்தினால் கடைந்து, பஸ்தி செய்விக்க; வாயு நீங்கும். பலமும், நிறமும் உண்டாகும்.

**குறிப்பு:** இங்கு கல்கம் கூறப்படாததால், இரண்டாவது சுலோகத்தில் கூறப்பட்ட கல்க்கத்தைச் சேர்க்க வேண்டும்.

एकैकः प्रसृतस्तैलप्रसन्नाक्षौद्रसर्पिषाम् ।
बिल्वादिमूलक्वाथाद् द्वौ कौलत्थाद् द्वौ स वातजित् ॥ २२॥

எண்ணெய், கள் தெளிவு, தேன், நெய் ஆகியவை வகைக்கு 1 பிரஸ்ருதம், பில்வாதி பஞ்சமூலத்தின் கஷாயம் 2 பிரஸ்ருதம், கொள் கஷாயம் 2 பிரஸ்ருதம், இவற்றைக் கலந்து பஸ்தியை பிரயோகிக்க; வாத தோஷம் நீங்கும்.

पटोलनिम्बभूतीकरास्नासप्तच्छदाम्भसः ।
प्रसृतः पृथगाज्याच्च बस्तिः सर्षपकल्कवान् ॥ २३ ॥

स पञ्चतिक्तोऽभिष्यन्दकृमिकुष्ठप्रमेहहा ।

பேய்ப்புடல், வேம்பு, ஓமம், அரத்தை, ஏழிலம்பாலை இவற்றின் கஷாயம் வகைக்கு 1 பிரஸ்ருதம், நெய் 1 பிரஸ் ருதம் இவற்றுடன் கடுகுக் கல்க்கம் சேர்த்து பஸ்தி செய்விக்க (கண்ணோய்), அபிஷ்யந்தம், க்ருமி குஷ்டம், பிரமியம் ஆகியவை நீங்கும். இது பஞ்சதிக்தம் எனப் படும்.

குறிப்பு: भूतीक - என்ற மூலச்சொல்லுக்கு பதிலாக पूतीक என்ற பாடத்தில் ஆவில்புங்கு எனப் பொருள் கொள்ள வேண்டும்.

भूनिम्ब - என்ற பாடத்தில் நிலவேம்பு எனப் பொருள் கொள்ளவேண்டும். பஞ்சதிக்த என்ற மூலச்சொல் இந்த யோகத்தின் பெயரைக் குறிப் பிடுவதாகக் கொள்ளப்படுகிறது.

सपञ्चतिक्त - என்ற மூலச் சொல்லுக்கு ஐந்து வகை கசப்புப் பொருள்களாலான வேம்பு, சீந்தில் ஆடாதோடை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி ஆகிய வற்றின் கல்கமும் சேர்த்து தயாரிக்கவேண்டும் என; இந்து கூறுகிறார். ஆனால் இவற்றுள் பேய்ப்புடலும், வேம்பும் முன்னரே இடம் பெற்றிருப்பதாலும், சரகரின் கருத்தை ஒத்திருப் பதாலும் முன்னர் கூறிய உரையே சிறந்தாகும்.

चत्वारस्तैलगोमूत्रदधिमण्डाम्लकांजिकात् ॥ २४ ॥

प्रसृताः सर्षपैः पिष्टैर्विट्संगानाहभेदनः ।

எண்ணெய், பசுநீர், தயிர்த்தெளிவு, புளித்தகாடி இவை வகைக்கு 1 பிரஸ்ருதம் எடுத்து, கடுகுக் கல்க்கம் சேர்த்து

பஸ்தி, செய்விக்க; மலத்தடை, வயிற்றுப் பொமல் ஆகியவை நீங்கும்.

पयस्येक्षुस्थिरारास्नाविदारीक्षौद्रसर्पिषाम् ॥ २५ ॥

एकेकः प्रसृतो बस्तिः कृष्णाकल्को वृषत्वकृत् ।

க்ஷீரகாகோலீ, கரும்பு, ஓரிலை, சிற்றரத்தை, நிலப் பூசணி, இவற்றின் கஷாயம் வகைக்கு 1 பிரஸ்ருதம், அதனுடன் தேன், நெய் ஆகியவை வகைக்கு 1 பிரஸ்ருதமும், திப்பிலிக் கல்க்கமும் சேர்த்துப் பஸ்தி செய்விக்க; ஆண்மையை உண்டாக்கும்.

सिद्धबस्तीनतो वक्ष्ये सर्वदा यान् प्रयोजयेत् ॥ २६ ॥
निर्व्यापदो बहुफलान् बलपुष्टिकरान् सुखान् ।

இனி விபத்துக்கள் அற்றவையும், பலவகைகளில் பலனளிப்பவையும், பலம், புஷ்டி ஆகியவற்றைக் கொடுப்பவையும், சுகமளிப்பவையும், எக்காலத்தும் பிரயோகிக்க ஏற்றவையுமான ஸித்த *பஸ்திகளைக் கூறுகிறேன்.

குறிப்பு: *பிரயோகித்த அளவில் பலனளிப்பது உறுதி என்ற காரணத்தால், இவை ஸித்த பஸ்திகள் எனப்படும்.

मधुतैले समे कर्षः सैन्धवाद्द्विपिचुर्मिसिः ॥ २७ ॥

एरण्डमूलकाथेन निरूहो माधुतैलिकः ।
रसायनं प्रमेहार्शःकृमिगुल्मान्त्रवृद्धिनुत् ॥ २८ ॥

**மாது தைலிகம் :**

தேன், எண்ணெய் ஆகியவை சம அளவு, இந்துப்பு 1/4 பலம், சதகுப்பை 1/2 பலம், இவற்றுடன் ஆமணக்கு

வேர்க் கஷாயம் சேர்த்து நிரூஹபஸ்தி பிரயோகிக்க; இளமை நீடிக்கும். பிரமியம், மூலம், க்ருமி, குன்மம், குடல்வாதம் ஆகியவை நீங்கும். இது மாது தைலிகம் எனப்படும்.

**குறிப்பு:** 1. ஒரு மருக்காரையும் சேர்க்கும்படி சுச்ருத ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

2. மது தேனும் தைலம் எண்ணெயும் இந்த யோகத்தில் பிரதானமானவையாக இருப்பதால், இதற்கு மாது தைலிகம் எனப் பெயர்.

स यष्टिमधुकश्चैष चक्षुष्यो रक्तपित्तजित् ।

இவற்றுடன் *அதிமதுரத்தையும் சேர்த்து பஸ்தி செய்விக்க; கண்களுக்கு நல்லது. ரத்தபித்தம் நீங்கும்.

**குறிப்பு:** *அதிமதுரத்தை கஷாயமாக்கிச் சேர்க்க வேண்டுமென்பது ஹேமாத்ரியின் கருத்து.

यापनो घनकल्केन मधुतैलरसाज्यवान् ॥ २९ ॥

पायुजानूरुवृषणबस्तिमेहनशूलजित् ।

**[1]யாபன பஸ்தி :**

தேன், எண்ணெய், [2]மாம்ஸ ரஸம், நெய் இவற்றுடன் கோரைக்கிழங்குக் கல்க்கம் சேர்த்து பஸ்தி பிரயோகிக்க அபானம், முழங்கால், தொடை, அண்டகோசம், சிறுநீர்ப்பை, ஆண்குறி ஆகியவற்றில் உண்டாகும் வலி நீங்கும். இதற்கு யாபனம் எனப் பெயர்.

**குறிப்பு:** 1. உயிரை வாழ வைப்பதால் இதற்கு யாபனம் என்று பெயர்.

2. கஷாயத்திற்குப் பதிலாக மாம்ஸ ரஸம் சேர்க்க வேண்டுமென ஹேமாத்திரி விளக்குகிறார்.

प्रसृतांशैर्घृतक्षौद्रवसातैलैः प्रकल्पयेत् ॥ ३० ॥

यापनं सैन्धवार्धाक्षहपुषार्धपलान्वितम् ।

நெய், தேன், மாம்ஸ எண்ணெய், எண்ணெய் இவை வகைக்கு 1 பிரஸ்ருதம், இந்துப்பு 1/8 பலம், கொட்டக் கரந்தை 1/2 பலம், ஆகியவற்றைக் சேர்த்தும் யாபன பஸ்தி பிரயோகிக்கலாம்.

एरण्डमूलनिःक्वाथो मधुतैलं ससैन्धवम् ॥ ३१ ॥

एष युक्तरथो बस्तिः सवचापिप्पलीफलः ।

**யுக்தரத பஸ்தி :**

ஆமணக்கு வேர்க் கஷாயத்துடன், தேன், எண்ணெய், இந்துப்பு, வசம்பு, திப்பிலி, மருக்காரை ஆகியவற்றைச் சேர்த்து பஸ்தி பிரயோகிக்க வேண்டும். இது யுக்தரதம் எனப்படும்.

**குறிப்பு:** யுக்தம் முதலியவற்றிற்கு, செல்லத் தயாராக தேர், குதிரை, யானை முதலியவை தயாராயிருக்கும் நிலையிலும் கூட, இந்த பஸ்தியை பிரயோகித்துக் கொள்ளலாம். பத்தியம் முதலிய நிர்பந்தங்கள் யாவும் இல்லை என்பது கருத்து.

स क्वाथो मधुषड्ग्रन्थाशताह्वाहिंगुसैन्धवम् ॥ ३२ ॥

सुरदारु* च रास्ना च बस्तिर्दोषहरः शिवः ।

* वचा रास्ना

## தோஷஹர பஸ்தி :

முற்கூறப்பெற்ற (ஆமணக்கு) கஷாயத்துடன் தேன், வசம்பு, சதகுப்பை, காயம், இந்துப்பு, தேவதாரு, *சிற்றரத்தை இவற்றைக் கலந்து பஸ்தி பிரயோகிக்க; தோஷங்கள் நீங்கும். மங்களம் உண்டாகும்.

குறிப்பு: *ஸுச்ருதத்தில் திரிபலையும் சேர்க்கும்படி கூறப்பட்டுள்ளது.

पंचमूलस्य निःकाथस्तैलं मागथिका मधु ॥ ३३ ॥

ससैन्धवः समधुकः सिद्धबस्तिरिति स्मृतः ।

பஞ்சமூல கஷாயம், எண்ணெய், திப்பிலி, தேன், இந்துப்பு, அதிமதுரம் ஆகியவற்றை சேர்த்து பஸ்தி செய்விக்கலாம். இது ஸித்தபஸ்தி எனப்படும்.

குறிப்பு: ஸுச்ருதத்தில் இந்த யோகத்தில் சதகுப்பையும் காணப்படுகிறது. அதிமதுரம் இடம் பெற வில்லை.

द्विपञ्चमूलत्रिफलाफलबिल्वानि पाचयेत् ॥ ३४ ॥

गोमूत्रे तेन पिष्टैश्च पाठावत्सकतोयदैः ।
सफलैः क्षौद्रतैलाभ्यां क्षारेण लवणेन च ॥ ३५ ॥

युक्तो बस्तिः कफव्याधिपाण्डुरोगविषूचिषु ।
शुक्रानिलविबन्धेषु बस्त्याटोपे च पूजितः ॥ ३६ ॥

தசமூலம், த்ரிபலை, மருக்காரை, பில்வம் இவற்றை பசு மூத்திரத்திலிட்டு, பாகம் செய்யவேண்டும். அந்தக் கஷாயத்துடன் வட்டத்திருப்பி, வெட்பாலையரிசி, கோரைக் கிழங்கு, மருக்காரை இவற்றின் கல்கத்தையும், தேன்,

எண்ணெய், யவக்ஷாரம், இந்துப்பு ஆகியவற்றையும் சேர்த்து பஸ்தி செய்விப்பது; கப நோய்கள், பாண்டு நோய், வாந்தி, பேதி, சுக்ரத்தடை, வாயுத்தடை, சிறுநீர்ப் பைப் பொருமல் ஆகியவற்றில் சிறந்ததாகும்.

मुस्तापाठामृतैरण्डबलारास्नापुनर्नवाः ।
मंजिष्ठारग्वधोशीरत्रायमाणाक्षरोहिणीः ॥ ३७ ॥

कनीयः पञ्चमूलं च पालिकं मदनाष्टकम् ।
जलाढके पचेतच्च पादशेषं परिस्रुतम् ॥ ३८ ॥

क्षीरद्विप्रस्थसम्युक्तं क्षीरशेषं पुनः पचेत् ।
सपादजांगलरसः ससर्पिर्मधुसैन्धवः ॥ ३९ ॥

पिष्टैर्यष्टिमिसिश्यामाकलिंगकरसांञ्जनैः ।
बस्तिः सुखोष्णोमांसाग्निबलशुक्रविबर्द्धनः ॥ ४० ॥

वातासृङ्मोहमेहार्शोगुल्मविण्मूत्रसंग्रहान् ।
विषमज्वरवीसर्पवर्ध्माध्मानप्रवाहिकाः ॥ ४१ ॥

वङ्क्षणोरुकटीकुक्षिमन्याश्रोत्रशिरोरुजः ।
हन्यादसृग्दरोन्मादशोफकासाश्मकुण्डलान् ॥ ४२ ॥

चक्षुष्यः पुत्रदो राजा यापनानां रसायनम् ।

***யாபன ராஜ பஸ்தி :***

கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, சீந்தில், ஆமணக்கு, சிற்றாமுட்டி, சிற்றரத்தை, மூக்கிரட்டை, மஞ்சிட்டி, சரக்கொன்றை, விளாமிச்சை, துராய், தான்றிக்காய், கடுகரோஹிணீ, சிறுபஞ்சமூலம் ஆகியவை வகைக்கு

1 பலம், மருக்காரை (எண்ணிக்கையில்) 8, இவற்றை 4 பிரஸ்த ஜலத்திலிட்டுக் காய்ச்சி, நாலில் ஒன்றாய் குறுக்கிக் கொள்ளவேண்டும். பின்னர் வடிக்கட்டி இரண்டு பிரஸ்தம் பால் சேர்த்து, பாலளவு வரும்வரைக் மறுபடியும் காய்ச்ச வேண்டும். 1/4 பங்கு ஜாங்கல [1]மாம்ஸ ரஸமும், (ஏற்றவாறு) நெய், தேன், இந்துப்பு ஆகியவற்றையும்; அதிமதுரம், சதகுப்பை, ஞாழல், வெட்பாலையரிசி, ரஸாஞ்சனம், இவற்றின் கல்க்கத்தை யும் கலந்து, இளஞ்சூடாக இருக்கையில் பஸ்தி பிர யோகிக்க; மாம்ஸம், ஜாடராக்னி, உடல் பலம், சுக்ரம் ஆகியவை விருத்தியடையும். வாதரத்தம், மயக்கம், பிரமியம், மூலம், குன்மம், மலத்தடை, சிறுநீர்த்தடை, முறை ஜுரம், விஸர்ப்பம், விருத்தி பொருமல், வயிற்றுக் கடுப்பு ஆகியவற்றையும்; தொடைச்சந்தி, தொடை, இடுப்பு, வயிறு, மென்னி, காது, தலை ஆகிய பகுதிகளில் உண்டாகும் வலியையும்; பெரும்பாடு, பைத்தியம், வீக்கம், இருமல், கல்லடைப்பு, [2]வாதகுண்டலிகா ஆகிய நோய்களையும் போக்கும். கண்களுக்கு நல்லது. ஆண் மகனைக் கொடுக்கும். இளமை உண்டாக்கும். யாபன பஸ்திகளுக்குள் இது அரசாகும்.

குறிப்பு: 1. பிரயோகிக்கப் படவேண்டிய பஸ்திப் பொருளின் அளவு 24 பலம். ஆகையால் 6 பலம் மாம்ஸ ரஸம் எனக் கொள்ளவேண்டும்.

2. வாதகுண்டலிகா நிதானஸ்தானம் 9-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

3. ஸுச்ருதத்தில் இந்த யோகத்தில் நெருஞ்சிலும் இடம் பெறுகிறது. ஆனால் கஷாய சரக்குகளில் ஆமணக்கு, தான்றி ஆகியவை இடம் பெற வில்லை.

मृगाणां लघुबभ्रू(डा)णां दशमूलस्य चाम्भसा ॥ ४३ ॥

हपुषामिसिगांगेयीकल्कै र्वातहरः परम् ।
निरूहोऽत्यर्थवृष्यश्च महास्नेहसमन्वितः ॥ ४४ ॥

சிறியவை, பெரியவை ஆகிய இருவகை மிருகங்களின் மாமிஸம், தசமூலம் இவற்றின் கஷாயத்தில் கொட்டக் கரந்தை, சதகுப்பை, கோரைக்கிழங்கு, இவற்றின் கல்க்கமும் *மகாஸ்னேஹமும் கலந்து பஸ்தி செய்விக்க; வாயு விசேஷமாக நீங்கும். ஆண்மை மிக அதிகரிக்கும்.

குறிப்பு: *நெய், தைலம், மாம்ஸ எண்ணெய், எலும்புச் சத்து ஆகியவை சேர்ந்தது மகாஸ்னேஹம் எனப்படும். முன்னர் கூறப்பட்டவாறு பஸ்திப் பிரயோகத்தில் பொதுவாக எலும்புச் சத்துக்கு இடமில்லை என்னும் இதை, விசேஷ விதியாகக் கொள்ளவேண்டும்.

मयूरं पक्षपित्तान्त्रपादविट्तुण्डवर्जितम् ।
लघुना पञ्चमूलेन पालिकेन समन्वितम् ॥ ४५ ॥

पक्त्वा क्षीरजले क्षीरशेषं सघृतमाक्षिकम् ।
तद्विदारीकणायष्टिशताह्वाफलकल्कवत् ॥ ४६ ॥

बस्तिरीषत्पटुयुतः परमं बलशुक्रकृत् ।

இறக்கை, பித்தம், குடல், கால்கள், மலம், மூக்கு ஆகியவை நீக்கப்பட்ட ஒரு மயிலுடன், சிறுபஞ்சமூலம் வகைக்கு 1 பலம் சேர்த்து, நீர் கலந்த பாலிலிட்டு, பால் அளவு மிகுதியிருக்கும்படி காய்ச்சவேண்டும். அதனுடன் நெய், தேன், ஆகியவற்றையும், நிலப்பூசனி, திப்பிலி, அதிமதுரம், சதகுப்பை, மருக்காரை இவற்றின் கல்க்கத்

தையும், சிறிது உப்பையும் கலந்து பஸ்தி செய்விக்க பலமும் சுக்ரமும் அதிகரிக்கும்.

குறிப்பு: 1. மேற்கண்ட உறுப்புக்கள் நீக்கப்பட்ட மயிலின் எடை, 10 பலம் என அருணதத்தர் கூறுகிறார்.

2. பால் 2 பிரஸ்தம், நீர் 2 பிரஸ்தம் என அருண தத்தர் கூறுகிறார்.

कल्पनेयं पृथक् कार्या तित्तिरिप्रभृतिष्वपि ॥ ४७ ॥

विष्किरेषु समस्तेषु प्रतुदप्रसहेषु च ।
जलचारिषु तद्वच्च मत्स्येषु क्षीरवर्जिता ॥ ४८ ॥

இம்முறையிலேயே [1]விஷ்கிரங்களுள் தித்திரி முதலிய பறவைகள், மற்றும் [2]பிரதுதங்கள், [3]பிரஸஹங்கள், ஜலப் பிராணிகள் இவற்றைக் கொண்டும் பஸ்தி செய்விக்கலாம். மீனுடன் கலந்து செய்யும் பஸ்தியில், பால் [4]சேர்ப்பதைத் தவிர்க்கவேண்டும்.

குறிப்பு: 1, 2, 3 - ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் - 6-ல் விளக்கப்பட்டுள்ளன.

4. பாலுடன் மீன்களைச் சேர்த்தல், பொருத்தா உணவு என ஸூத்ரஸ்தானத்தில் கூறப்பட்டது கவனிக்கத்தக்கது.

गोधानकुलमार्जारशल्यकोन्दुरजं पलम् ।
पृथक् दशपलं क्षीरे पचंमूलं च साधयेत् ॥ ४९ ॥

तत्पयः फलवैदेहीकल्कद्विलवणान्वितम् ।
ससितातैलमध्वाज्यो बस्तिर्योज्यो रसायनम् ॥ ५० ॥

व्यायाममथितोरस्कक्षीणेन्द्रियबलौजसाम् ।
विबद्धशुक्रविण्मूत्रखुडवातविकारिणाम् ॥ ५१ ॥

गजवाजिरथक्षोभभग्नजर्जरितात्मनाम् ।
पुनर्नवत्वं कुरुते वाजीकरणमुत्तमम् ॥ ५२ ॥

உடும்பு, கீரி, பூனை, முள்ளம்பன்றி, மூஞ்சூறு இவற்றின் மாமிஸம் வகைக்கு 10 பலம், *பஞ்சமூலம் 10 பலம் ஆகியவற்றைப் பாலில் இட்டு பக்குவம் செய்யவேண்டும். அந்தப் பாலுடன் மருக்காரை, திப்பிலி ஆகியவற்றின் கல்க்கம், இந்துப்பு, ஸௌவர்ச்சல உப்பு, சர்க்கரை, தைலம், தேன், நெய் ஆகியவற்றைச் சேர்த்து பஸ்தி செய்விக்க; இளமை உண்டாகும். தேகப்பயிற்சி செய் பவர், நெஞ்சுப்புண் உள்ளவர், புலன்களின் சக்தி குறைந்த வர், பலங்குன்றியவர், ஓஜஸ் குன்றியவர் ஆகியோருக்கு இது ஏற்றதாகும்: சுக்ரம், மலம், சிறுநீர் இவை தடைப் பட்டவர், வாதரக்த நோயாளி, வாத நோயாளி, மற்றும் யானை, குதிரை, ரதம் இவற்றில் சவாரி செய்பவர், எலும்பு முறிந்தவர், உடல் தளர்ந்தவர் ஆகியோருக்கு இந்த பஸ்தி பிரயோகிக்க; இளமை உண்டாகும். ஆண்மை அதிகரிக்கும்.

குறிப்பு: *இந்த பஸ்தி யோகத்தில் சரக்குகளின் அளவு 60 பலத்துக்கு அதிகமாவதாலும், மாம்ஸ வகைகள் கலந்திருப்பதால் அவ்வப்பொழுது உபயோகத் திற்கே ஏற்றதெனக் கருதப்படுவதாலும், இங்கு கூறப்பட்ட 10 பலம் என்ற சொல்லை, உடும்பு முதலியவற்றிற்கு தனித்தனி அளவு என்க் கொள்ளாமல், அவற்றின் மொத்த அளவு (உடும்பு முதலிய ஐந்து பிராணிகளின் மாம்ஸம் மொத்தம்) 10 பலம், பஞ்சமூலம் 10 பலம் என்று கொள்ளலாம்.

பृथक् என்ற மூலச் சொல்லை அனுஸரித்து, பஞ்ச மூலத்தை தனியாகப் பக்குவம் செய்ய வேண்டு மெனக் கொள்ளலாம்.

सिद्धेन पयसा भोज्यमात्मगुप्तोच्चटेक्षुरैः ।

பூனைக்காலி, *வெண்குன்றி, நீர்முள்ளி இவற்றைச் சேர்த்துக் காய்ச்சப் பெற்ற பாலுடன் உணவு கொள்ள வேண்டும்.

குறிப்பு: *ஸோமவல்லி என இந்து உரை கூறுகிறார்.

स्नेहांश्चायन्त्रणान् सिद्धान् सिद्धद्रव्यैः प्रकल्पयेत् ॥ ५३॥

கட்டுப்பாடற்றவையும், கைகண்ட பலனுள்ளவையும், தீங்கு விளைவிக்காத பொருள் சேர்ந்தவையுமான ஸ்னேஹ பஸ்திகளை பிரயோகிக்கவேண்டும்.

குறிப்பு: இங்கு கூறப்பட்ட ஸித்த பஸ்திக் திரவியங் களாலேயே ஸ்னேஹ பஸ்திகள் தயாரிக்க வேண்டும். ஸ்னேஹ பஸ்திகள் அடுத்துக் கூறப் படுகின்றன.

दोषघ्नाः सपरीहारा वक्ष्यन्ते स्नेहबस्तयः ।

தோஷங்களைப் போக்குபவையும், கட்டுப்பாட்டு நியமம் உள்ளவையுமான ஸ்னேஹ பஸ்திகள் கூறப் படுகின்றன.

दशमूलं बलां रास्नामश्वगन्धां पुनर्नवाम् ॥ ५४ ॥

गडूच्यैरण्डभूतीकभार्गीवृषकरोहिषम् ।
शतावरीं सहचरं काकनासां पलाशकम् ॥ ५५ ॥

यवमाषातसीकोलकुलत्थान् प्रसृतोन्मितान् ।

वहे विपाच्य तोयस्य द्रोणशेषण तेन च ॥ ५६ ॥

पचेत्तैलाढकं पेष्यैर्जीवनीयैः पलोन्मितैः ।
अनुवासनमित्येतत्सर्ववातविकारनुत् ॥ ५७ ॥

தசமூலம், சிற்றாமுட்டி, சிற்றரத்தை, அமுக்கிராக் கிழங்கு, மூக்கிரட்டை, சீந்தில், ஆமணக்கு, ஓமம் (அல்லது வாசனைப்புல்), சிறுதேக்கு, சிறுபூளை (அல்லது ஆடாதோடை) நான்முகப் புல், தண்ணீர்விட்டான் கிழங்கு, கருங்குறிஞ்சி, கோவை ஆகியவை வகைக்கு 1 பலம், யவை, உளுந்து, ஆளிவிதை, இலந்தை, கொள் ஆகியவை, வகைக்கு 2 பலம். இவற்றை 64 பிரஸ்த ஜலத்திலிட்டு காய்ச்சி நாலில் ஒன்றாய் குறுக்கிக் கொள்ள வேண்டும். இந்தக் கஷாயத்துடன் எண்ணெய் 4 பிரஸ்தம், வகைக்கு 1 பலம் வீதம் ஜீவனீயகணச் சரக்குகளின் கல்க்கம் ஆகியவற்றைக் கலந்து பக்குவம் செய்து, அனுவாஸனம் பிரயோகிக்க; எல்லாவித வாத நோய்களும் நீங்கும்.

**குறிப்பு:** ஜீவனீயகணச் சரக்குகள், ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளன.

आनूपानां वसा तद्वज्जीवनीयोपसाधिता ।

[1] ஆநூப பிராணிகளின் மாம்ஸ எண்ணெயுடன் ஜீவனீய கணச்சரக்குகளின் கல்க்கம் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க; முற்கூறப்பெற்ற பலன் கிடைக்கும்.

**குறிப்பு:** 1. ஸூத்ரஸ்தானம், அத்தியாயம் 6-ல் விளக்கப்பட்டுள்ளன. தேவையான அளவு நீரில் பக்குவம் செய்யவேண்டும்.

शताह्वाचिरिबिल्वाम्लैस्तैलं सिद्धं समीरणे ॥ ५८ ॥

சதகுப்பை, ஆவில், புங்கு, புளிப்பு வகை, இவை சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலம், வாயுவைப் போக்கும்.

குறிப்பு: சதகுப்பை, யவை, பில்வம், புளிப்புவகை என்ற பாடம் சரகத்தில் காணப்படுகிறது.

सैन्धवेनाग्निवर्णेन तप्तं चानिलजिद् घृतम् ।

இந்துப்பை பழுக்கக் காய்ச்சி நெய்யில் விட்டு பிரயோகிக்க; வாயு நீங்கும்.

जीवन्तीं मदनं मेदां श्रावणीं मधुकं बलाम् ॥ ५९ ॥

शताह्वर्षभकौ कृष्णां काकनासां शतावरीम् ।
स्वगुप्तां क्षीरकाकोलीं कर्कटाख्यां शठीं वचाम् ॥ ६० ॥

पिष्ट्वा तैलघृतं क्षीरे साधयेत्तच्चतुर्गुणे ।
बृंहणं वातपित्तघ्नं बलशुक्राग्निवर्धनम् ॥ ६१ ॥

रजःशुक्रामयहरं पुत्रीयमनुवासनम् ।

கீரிப்பாலை, மருக்காரை, மேதா, கொட்டக்கரந்தை, அதிமதுரம், சிற்றாமுட்டி, சதகுப்பை, ருஷபகம், திப்பிலி, கோவை, தண்ணீர்விட்டான் கிழங்கு, பூனைக்காலி, க்ஷீரகாகோலீ, கர்க்கடசிருங்கி, பூலாங்கிழங்கு, வசம்பு இவற்றின் கல்க்கம், தைலம், நெய், நெய்ப்புப் பொருளுக்கு 4 பங்கு பால் ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இது அனுவாஸனம் செய்விக்க ஏற்றது. உடலை பருக்கச் செய்யும். வாத பித்தங்களைக் கண்டிக்கும். பலம், சுக்ரம், ஜாடராக்னி ஆகியவற்றை அதிகரிக்கச்

செய்யும். ருதுசோணித நோய், சுக்ர நோய் ஆகியவை நீங்கும். மகப்பேற்றை உண்டாக்கும்.

குறிப்பு: சிறுநீர், சுக்ரம், ருதுசோணிதம் இவற்றின் தோஷம் நீங்கும் என சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

सैन्धवं मदनं कुष्ठं शताह्वा निचुलो वचा ॥ ६२ ॥

ह्रीबेरं मधुकं भार्गी देवदारु सकट्फलम् ।
नागरं पुष्करं मेदा चविका चित्रकः शठी ॥ ६३ ॥

विडंगातिविषा श्यामा हरेणुर्नीलिनी स्थिरा ।
बिल्वाजमोदचपला दन्ती रास्नाचतैः समैः ॥ ६४ ॥

साध्यमेरण्डतैलं वा तैलं वा कफरोगनुत् ।
वर्ध्मोदावर्तगुल्मार्शः प्लीहमेहाढ्यमारुतान् ॥ ६५ ॥

आनाहमश्मरीं चाशु हन्यात्तदनुवासनम् ।

இந்துப்பு, மருக்காரை, கோஷ்டம், சதகுப்பை, ஆற்று நொச்சி, வசம்பு, வெட்டிவேர், அதிமதுரம், சிறுதேக்கு, தேவதாரு, சிறுகுமிழ், சுக்கு, புஷ்கரமூலம், மேதா, செவ்விலியம், கொடிவேலி, பூலாங்கிழங்கு, வாய் விளங்கம், அதிவிடயம், சிவதை, அரேணுகம், அவுரி, ஓரிலை, பில்வம், ஓமம், திப்பிலி, நாகதந்தீ, சிற்றரத்தை ஆகியவை சம அளவு. அவற்றுடன் ஆமணக்கு எண்ணெய், அல்லது எண்ணெய் சேர்த்து பக்குவம் செய்து அனு வாசனமாக உபயோகிக்க; கப நோய்கள் நீங்கும். மேலும் விதை வீக்கம், உதாவர்த்தம், குன்மம், மூலம், மண்ணீரல் நோய், பிரமியம், தொடைத் தம்பிதம், பொருமல், கல் அடைப்பு ஆகிய நோய்களும் விரைவில் நீங்கும்.

குறிப்பு: ஆமணக்கு எண்ணெய் 1/2 பங்கும், எண்ணெய் 1/2 பங்கும் சேர்க்கவேண்டும் என்று சிலர் கூறுவதாக அருணதத்தர் கூறுகிறார்.

साधितं पञ्चमूलेन तैलं बिल्वादिनाऽथवा ॥ ६६ ॥

कफघ्नं कल्पयेत्-

அல்லது பில்வாதி பஞ்சமூலம் சேர்த்து காய்ச்சப் பட்ட தைலத்தாலாவது அனுவாஸனம் செய்விக்க கபம் நீங்கும்.

-तैलं द्रव्यैर्वा कफघातिभिः ।
फलैरष्टगुणैश्चाम्लैः सिद्धमन्वासनं कफे ॥ ६७ ॥

கபத்தை நீக்கும் பொருள்களுடன் மருக்காரையும், எட்டுப் பங்கு புளிப்புத் திரவியங்களும் சேர்த்து தைலம் காய்ச்சி அனுவாஸனம் செய்விக்க; கப நோய்கள் நீங்கும்.

मृदुबस्तिजडीभूते तीक्ष्णोन्यो बस्तिरिष्यते ।
तीक्ष्णैर्विकर्षितः स्निग्धो मधुरः शिशिरो मृदुः ॥ ६८ ॥

மிருதுத் தன்மை காரணமாக பஸ்தி செயலாற்றாவிடில் தீக்ஷ்ணத்தன்மை கொண்ட மற்றொரு பஸ்தி பிரயோகிக்க வேண்டும். தீக்ஷ்ணத்தன்மை கொண்ட பஸ்தியால், வயிற்றில் தீங்கு ஏற்படின் நெய்ப்பு, இனிப்பு, குளிர்ச்சி ஆகியவை பொருந்திய மிருதுவான பஸ்தி பிரயோகிக்க வேண்டும்.

तीक्ष्णत्वं मूत्रपील्वग्निलवणक्षारसर्षपैः ।
प्राप्तकालं विधातव्यं क्षीराज्याद्यैस्तु मार्दवम् ॥ ६९ ॥

*घृतक्षीरैस्तु

பசுநீர், *உகாய், கொடிவேலி, இந்துப்பு, யவக்ஷாரம், கடுகு, ஆகியவற்றால் தீக்ஷ்ணத் தன்மையையும், பால், நெய் முதலியவற்றால் மிருதுத் தன்மையையும் காலத்திற் கேற்ப அமைத்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு: *பில்வம் என்றும் பாடல் உண்டு.

बलकालरोगदोषप्रकृतीः प्रविभज्य योजितो बस्तिः ।
स्वैः स्वैरौषधवर्गैः स्वान् स्वान् रोगान्निवर्तयति ॥ ७० ॥

பலம், காலம், நோய், தோஷங்கள், உடல் இயல்பு இவற்றை நன்கு கவனித்து, ஏற்ற மருந்துப் பொருள் களைச் சேர்த்து செய்விக்கப்பட்ட பஸ்தி உரிய நோய் களைப் போக்கும்.

उष्णार्तानां शीतांऽश्छीतार्तानां तथा सुखोष्णांश्च ।
तद्योग्यौषधयुक्तान् बस्तीन् संतर्क्य युंजीत ॥ ७१ ॥

உஷ்ணத்தால் துன்புறுபவர்களுக்கு குளிர்ச்சியான வையும், குளிர்ச்சியால் துன்புறுபவருக்கு பொறுக்கக்கூடிய உஷ்ணமுள்ளவையுமான பஸ்திகளை, ஏற்ற மருந்துப் பொருள் சேர்த்து பிரித்தறிந்து பிரயோகிக்கவேண்டும்.

बस्तीन्न बृंहणीयान् दद्याद्व्याधिषु विशोधनीयेषु ।
मेदस्विनो विशोध्या ये च नराः कुष्ठमेहार्ताः ॥ ७२ ॥

சோதனம் செய்யப்பட வேண்டியவர்களுக்கு ப்ரும்ஹன மான (பருக்கச் செய்யும், பஸ்திகளை பிரயோகிக்கக் கூடாது. கொழுப்பு அதிகரிக்கப்பெற்றவர் குஷ்ட நோயாளி, பிரமிய நோயாளி ஆகியோர் சோதனத்திற்கு ஏற்றவராவர்.

न क्षीणक्षतदुर्वलमूर्च्छितकृशशुष्कशुद्धदेहानाम्
दद्याद्विशोधनीयान् दोषनिबद्धायुषो ये च ॥ ७३ ॥

தாதுக்கள் குறைந்தவர், நெஞ்சுப்புண் உள்ளவர், பலங் குன்றியவர், மயக்கமடைந்தவர், இளைத்தவர், உடல் வற்றியவர், சோதனம் செய்து கொண்டவர், மற்றும் தோஷங் களாலேயே உயிர் *வாழ்பவர் ஆகியோருக்கு சோதன சிகித்ஸை செய்விக்கக் கூடாது.

குறிப்பு: *க்ஷய நோயாளி முதலியோர் மலத்தின் பலத் தாலேயே வாழ்பவராவர். மற்ற தாதுக்கள் குன்றி யதே இதன் காரணமாகும். ஆதலால் சோதனம் இவர்களுக்கு ஏற்றதல்ல என்று முன்பே கூறப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

इति वैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां पंचमे कल्पस्थाने वस्तिकल्पो नाम चतुर्थोऽध्यायः ॥ ४ ॥

கல்பஸ்தானம் - நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ कल्पस्थानम् - கல்பஸ்தானம் ॥

## पंचमोऽध्यायः - அத்தியாயம் - 5

अथाऽतो बस्तिव्यापत्सिद्धिं व्याख्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து முறைகேடான பஸ்திப் பிரயோகத்தால் உண்டாகும் *தீங்குகளுக்கு, சிகித்ஸை என்னும் அத்தியாயம் விளக்கப்படுகிறது.

**குறிப்பு:** *நடை, உடல் பாரமாயிருத்தல், வயிற்றுப் பொருமல், தலைவலி, கடுப்பு, மேல்நோக்கல், குறைவுற்ற பஸ்தியாலும், வயிற்றுவலி, உறுப்பு வலி, விக்கல், இருதயவலி, கத்தரிப்பது போன்ற வலி, ரத்தம் முதலியவை கசிதல் ஆகியவை பஸ்தியின் மிகையாலும் உண்டாகும் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

अस्निग्धस्विन्नदेहस्य गुरुकोष्ठस्य योजितः ।
शीतोऽल्पस्नेहलवणद्रव्यमात्रो धनोऽपि वा ॥ १ ॥

बस्तिः सङ्क्षोभ्य तं दोषं दुर्बलत्वादनिर्हरन् ।
करोत्ययोगं तेन स्याद्वातमूत्रशकृद्ग्रहः ॥ २ ॥

नाभिबस्तिरुजा दाहो हृल्लेपः श्वयथुर्गुदे ।
कण्डूर्गण्डानि वैवर्ण्यमरतिर्वह्निमार्दवम् ॥ ३ ॥

நெய்ப்பு சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை, ஆகியவற்றைச் செய்து கொள்ளாதவர், கனத்த கோஷ்டமுள்ளவர் ஆகியோருக்கு உபயோகிக்கப்பட்டது. குளிர்ச்சியானது. நெய்ப்பு, உவர்ப்பு பொருள்கள் அளவு ஆகியவை

குறைவாகச் சேர்க்கப்பட்டது. அல்லது தடிப்புள்ள (திரவங்கள் கொண்ட) இத்தகைய பஸ்தியானது தோஷங்களைக் கிளர்ச்சியுறச் செய்திருப்பினும், பலங்குன்றியது காரணமாக, தோஷங்களை வெளியேற்றாமல், அயோகத்தைச் செய்கிறது. அதனால் வாயு, சிறுநீர், மலம் இவற்றிற்குத் தடை, நாபி, சிறுநீர்ப்பை ஆகியவற்றில் வலி, எரிச்சல், நெஞ்சில் பூசியது போன்ற உணர்ச்சி, குதத்தில் வீக்கம், அரிப்பு, கட்டிகள், நிற மாற்றம், நிலை கொள்ளாமை, ஜாடராக்னியின் பலக் குறைவு ஆகியவற்றை உண்டாக்கும்.

क्वाथद्वयं प्राग्विहितं मध्यदोषेऽतिसारिणि ।
उष्णस्य तस्मादेकस्य तत्र पानं प्रशस्यते ॥ ४ ॥

फलवर्त्यस्तथा स्वेदाः कालं ज्ञात्वा विरेचनम् ।
बिल्वमूलत्रिवृद्दारुयवकोलकु लत्थवान् ॥ ५ ॥

सुरादिमूत्रवान् बस्तिः स प्राक्पेष्यस्तमानयेत् ।

நடுத்தர தோஷமுள்ள அதிசார நோயாளிக்கு, முன்னர் கூறப்பட்ட இரண்டு [1]யோகங்களுள் ஒன்றின் கஷாயத்தைச் சூடாக பருகுவது சிறந்தாகும். [2]பலவர்த்திகள், வியர்வை உண்டாக்குதல் ஆகியவற்றையும் பிரயோகிக்கலாம். சமயத்திற்கேற்ப விரேசனமும் செய்விக்கலாம். பில்வவேர், சிவதை, தேவதாரு, யவை, இலந்தை, கொள் இவற்றுடன், ஸுரை என்னும் மது முதலியவையும், சிறுநீரும், முற்கூறிய [4]கல்க்கமும் கலந்து பஸ்தி செய்வித்து, உள்தங்கிய பஸ்திப் பொருளை வெளியே கொண்டுவர வேண்டும்.

குறிப்பு: 1. இரு வகையான கஷாயங்களும் சிகித்ஸா ஸ்தானம், அத்தியாயம் 9-ல் சுலோகம் 6-ல் கூறப்பட்டுள்ளன.

2. பலவர்த்தி - மருக்காரை முதலியவற்றை சேர்த்து, குதவாயில் இடுவதற்கு ஏற்ப தடித்த திரிபோல் தயாரிக்கப்படுவது.

3. ஸுரை முதலிய என்பதால் மற்ற புளிப்புத் திரவங்கள் கூறப்படுகின்றன.

4. கல்கம், கல்பஸ்தானம். அத்தியாயம் 4-ல் 'சுலோகம் 1-ல் விளக்கப்பட்டுள்ளது.

युक्तौऽल्पवीर्यो दोपाढ्ये रूक्षे क्रूराशयेऽथवा ॥ ६ ॥

बस्तिर्दोषावृतो रुद्धमार्गो रुन्ध्यात्समीरणम् ।
स विमार्गोऽनिलः कुर्यादाध्मानं मर्मपीडनम् ॥ ७ ॥

विदाहं गुदकोष्ठस्य मुष्कवङ्क्षणवेदनाम् ।
रुणद्धि हृदयं शूलैरितश्चेतश्च धावति ॥ ८ ॥

தோஷம் மிகுந்தவர், வறட்சி உள்ளவர், அல்லது க்ரூரகோஷ்டம் உள்ளவர் ஆகியோருக்கு, குறைந்த வீர்யமுள்ளவற்றால் பஸ்தி செய்வித்தால் (வாயு முதலிய) தோஷங்களால் சூழப்படுவது காரணமாக (கீழ்) மார்க்கம் தடைப்படுவதால் வாயுவைத் தடைசெய்யும். வழித் தடை உண்டானதால், வாயுவானது பொருமல், மர்மங் களைப் பிடித்தல், குதத்திலும் கோஷ்டத்திலும் எரிச்சல், அண்ட கோசத்திலும் தொடையிடுக்கிலும் வலி, இருதயத் தடை ஆகியவற்றை உண்டாக்கும். வலி உண்டாக்குவ துடன், வாயு இங்குமங்கும் சஞ்சரிக்கும்.

स्वभ्यक्तस्विन्नगात्रस्य तत्र वर्तिं प्रयोजयेत् ।
बिल्वादिश्च निरूहः स्यात्पीलुसर्षपमूत्रवान् ॥ ९ ॥

सरलामरदारुभ्यां साधितं चानुवासनम् ।

இந்த நிலையில் அப்யங்கம், வியர்வை உண்டாக்குதல் ஆகியவற்றைச் செய்வித்து, பலவர்த்தியைப் பிரயோகிக்க வேண்டும். *பில்வவேர் முதலிய பொருள்களில் கஷாயத்துடன் உகாய்(ப்பழம்), கடுகு, பசுநீர் ஆகியவை சேர்த்து பஸ்தி செய்விக்கவேண்டும். சரளதேவதாருவும், தேவ தாருவும் சேர்த்து தயாரித்த தைலத்தால் அனுவாஸனமும் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: *பில்வவேர் முதலிய என்பதால், பஸ்தி கல்ப அத்தியாயத்தில் கூறப்பட்ட தசமூலாதி நிரூஹச் சரக்குகள் கூறப்படுகின்றன. இந்த அத்தியாயத்தில் ஐந்தாம் சுலோகத்தில் கூறப்பட்ட பொருள்களை குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

कुर्वतो वेगसंरोधं पीडितो वाऽतिमात्रया ॥ १० ॥

अस्निग्धलवणोष्णो वा बस्तिरल्पोऽल्पभेषजः ।
मृदुर्वा मारुतेनोर्ध्वं विक्षिप्तो मुखनासिकात् ॥ ११ ॥

निरेति मूर्च्छाहृल्लासतृड्दाहादीन् प्रवर्तयन् ।
मूर्च्छाविकारं दृष्ट्वास्य सिंचेच्छीताम्बुना मुखम् ॥ १२ ॥

व्यजेदाक्रमनाशाच प्राणायामं च कारयेत् ।
पृष्टपार्श्वोदरं मृज्यात् करैरुष्णैरधोमुखम् ॥ १३ ॥

केशेपूत्क्षिप्य धुन्वीत भीषयेद्व्यालदंष्ट्रिभिः ।
शस्त्रोल्काराजपुरुषैर्बस्तिरेति तथा ह्यधः ॥ १४ ॥

पाणिवस्त्रैर्गलापीडं कुर्यान्न म्रियते यथा ।
प्राणोदाननिरोधाद्धि सुप्रसिद्धतरायनः ॥ १५ ॥

अपानः पवनो बस्तिं तमाश्वेवापकर्षति ।
कुष्ठक्रमुककल्कं च पाययेताम्लसंयुतम् ॥ १६ ॥

औष्ण्यात्तैक्ष्ण्यात्सरत्वाच्च बस्तिं सोऽस्यानुलोमयेत् ।
गोमूत्रेण त्रिवृत्पथ्याकल्कं वाऽथोनुलोमनम् ॥ १७ ॥

पक्वाशयस्थिते स्विन्ने निरूहो दशमूलिकः ।
यवकोलकुलत्थैश्च विधेयो मूत्रसाधितैः ॥ १८ ॥

बस्तिर्गोमूत्रसिद्धैर्वा सामृतावंशपल्लवैः ।
पूतीकरंजत्वक्पत्रशठीदेवाह्वरोहिषैः ॥ १९ ॥

सतैलगुडसिन्धूत्थो विरेकौषधकल्कवान् ।
बिल्वादिपंचमूलेन सिद्धो बस्तिरुरः स्थिते ॥ २० ॥

शिरः स्थे नावनं धूमः प्रच्छाद्यं सर्षपैः शिरः ।

வேகத்தை அடக்குபவருக்கு செய்யப்பட்டது, அல்லது அதிக அளவு செலுத்தப்பட்டது, அல்லது நெய்ப்பு, உவர்ப்பு, உஷ்ணம் ஆகியவை குறைந்தது, அல்லது அளவில் குறைந்தது, அல்லது குறைந்த மருந்துப்பொருள் கலந்தது, அல்லது மிருதுத்தன்மை உள்ளது, இத்தகைய பஸ்தியானது வாயுவால் மேல்நோக்கித் தள்ளப்பட்டு, வாய், நாசி ஆகியவற்றின் வழியாக வெளியேறும். மூர்ச்சை, குமட்டல், தாகம், எரிச்சல் முதலியவற்றை உண்டாக்கும். மூர்ச்சை உபத்ரவத்தைக் கண்ட அளவில் அவரது முகத்தை குளிர்ந்த நீரால் நனைக்கவேண்டும். ஓய்ச்சல் நீங்கும் வரை விசிறவேண்டும். [1]பிராணாயாமம் செய்யச் சொல்லவேண்டும். சூடாக்கப்பட்ட கையினால் புட்டம், பக்கங்கள், வயிறு ஆகிய பாகங்களில் கீழ்

நோக்கித் தடவவேண்டும். நோயாளியின் கூந்தலைப் பிடித்து உலுக்கவேண்டும். புலி, பாம்பு, சஸ்திரங்கள், கொள்ளிக்கட்டை, ஆகியவற்றால் பயமுண்டாக்க வேண்டும்.

பஸ்தி செய்விக்கப்பட்ட பொருள் இவற்றால் கீழ்நோக்குகிறது. உயிர் நீங்காதவாறு கை அல்லது துணி யால் தொண்டையைப் பிடிக்கவேண்டும். இவ்வாறு பிராணவாயு, உதானவாயு ஆகியவற்றை தடுப்பதால் அபான வாயு நன்கு அமைந்த வழியைக் கொண்டதாகி பஸ்திப் பொருளை விரைவில் கீழே இழுக்கிறது. கோஷ்டம், [2]பாச்சோற்றி இவற்றின் [3]கல்க்கத்தை புளிப்புப் பொருளுடன் பருகச் செய்யவேண்டும். உஷ்ணத்தன்மை, தீக்ஷ்ணம், மலத்தை இளக்குதல் ஆகிய குணங்கள் காரணமாக இது பஸ்திப் பொருள்களை கீழ்நோக்கச் செய்யும். அல்லது சிவதை, கடுக்காய் இவற்றின் கல்க்கத்தை பசு நீருடன் உட்கொள்ள; பஸ்திப் பொருள்கள் கீழ்நோக்கும். பஸ்திப் பொருளாவது பக்குவாசயத்தில் தங்கியிருந்தால், வியர்வை உண்டாக்கி தசமூலப் பொருள் களில் கஷாயத்தால் நிரூஹம் செய்வித்தல் ஏற்றதாகும். யவை, இலந்தை, கொள் இவற்றை பசு மூத்ரத்தில் பக்குவம் செய்து, நிரூஹம் செய்விக்கலாம். சீந்தில், மூங்கில் குருத்து, ஆவில், புங்கின் பட்டையும், தளிரும், பூலாங் கிழங்கு, தேவதாரு, நான்முகப்புல் ஆகியவற்றை, பசுநீர் விட்டு காய்ச்சி, எண்ணெய், வெல்லம், இந்துப்பு ஆகியவற்றையும், விரேசனம் உண்டாக்கும் பொருள்களின் கல்க்கமும் சேர்த்து பஸ்தி செய்விக்க வேண்டும். பஸ்திப் பொருள் மார்பில் இருந்தால் பில்வாதி பஞ்சமூலச் சரக்குகளைச் சேர்த்துப் பக்குவம் செய்த [4]திரவத்தால் பஸ்தி செய்விக்கவேண்டும். பஸ்திப் பொருள்கள் தலையில்

இருந்தால் நஸ்யம், தூமபானம் ஆகியவை ஏற்றவையாகும். கடுகை அரைத்து தலையில் பூசவேண்டும்.

குறிப்பு: 1. மூச்சை அடக்குவதால் வாயு கீழ்நோக்க வசதி ஏற்படுகிறது.

2. பாக்கு என்று ஹேமாத்ரி, சக்ரபாணி முதலியோர் கூறுகிறார்கள்.

3. கல்கத்தின் அளவு 1/4 பலம் எனச் சரகத்தில் கூறப்படுகிறது. இதில் கோஷ்டம் இடம் பெற வில்லை.

4. எண்ணெய், வெல்லம், இந்துப்பு ஆகியவையும் விரேசன முண்டாக்கும் பொருள்களின் கல்க்கத் தையும் இந்த யோகத்திலும் சேர்க்கவேண்டு மென்று ஹேமாத்திரி கூறுகிறார்.

வலுக்குன்றிய அமைப்பு அயோகமெனப்படும். முறைமீறி அதிக வலுவுள்ளதாக அமைந்தால் அதியோக மெனப்படும்.

बस्तिरत्युष्णतीक्ष्णाम्लघनोऽतिस्वेदितस्य वा ॥ २१ ॥

अल्पे दोषे मृदौ कोष्ठे प्रयुक्तो वा पुनः पुनः ।
अतियोगत्वमापन्नो भवेत्कुक्षिरुजाकरः ॥ २२ ॥

विरेचनातियोगेन स तुल्याकृतिसाधनः ।

உஷ்ணம், தீக்ஷ்ணம், புளிப்பு, தடிப்பு ஆகிய குணங் களை மிகுதியாகக் கொண்டது, அல்லது மிகவும் வியர்வை உண்டாக்கப்பட்டவருக்குச் செய்யப்பட்டது, அல்லது குறைந்த தோஷங்கள் மிருதுகோஷ்டம் ஆகி யவை உள்ளவருக்குப் பிரயோகிக்கப்பட்டது, அல்லது

அடிக்கடி பிரயோகிக்கப்பட்டது, ஆகிய பஸ்தி அதி யோகத்தை அடையும். வயிற்றில் வலி உண்டாக்கும். அதிக விரேசனம் செய்வித்தலால் உண்டாகும் குறிகள் காணப்படும். அதிக விரேசனத்திற்கு கூறிய *சிகித்ஸையைச் செய்யவேண்டும்.

குறிப்பு: *விரேசனத்தின் அதியோகக் குறிகளும் காணப்படும் என்று கூறியதால் எரிச்சலும் ஏற்படும் என்று கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டுமென ஹேமாத்ரி கூறுகிறார். அந்த எரிச்சல் நிலையில் பிரயோகிக்க ஓரிலை மூவிலை முதலியவற்றால், தயாரிக்கவேண்டிய பஸ்தியோகமும் ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

बस्तिः क्षाराम्लतीक्ष्णोष्णलवणः पैत्तिकस्य वा ॥ २३ ॥

गुदं दहन् लिखन् क्षिण्वन् करोत्यस्य परिस्रवम् ।
स विदग्धं स्रवत्यस्रं वर्णैः पित्तं च भूरिभिः ॥ २४ ॥

द्बहुशश्चातिवेगेन मोहं गच्छति सोऽसकृत् ।
रक्तपित्तातिसारघ्नी क्रिया तत्र प्रशस्यते ॥ २५ ॥

दाहादिषु त्रिवृत्कल्कं मृद्वीकावारिणा पिबेत् ।
तद्धि पित्तशकृद्वातान् हृत्वा दाहादिकान् जयेत् ॥ २६ ॥

विशुद्धश्च पिबेच्छीतां यवागूं शर्करायुताम् ।
युंज्याद्वाऽतिविरिक्तस्य क्षीणविट्कस्य भोजनम् ॥ २७ ॥

माषयूपेण कुल्माषान् पानं दध्यथवा सुराम् ।
सिद्धिर्बस्त्यापदामेवं-

க்ஷாரம், புளிப்பு, தீக்ஷ்ணத்தன்மை, உஷ்ணம், உவர்ப்பு ஆகியவை சேர்ந்தது, அல்லது பித்தநோயாளிக்கு செய்விக்கப்பட்டது ஆகிய பஸ்தி, குதத்தில் எரிச்சலை உண்டாக்கும். கீறும்/புண் செய்யும். கசிவு உண்டாக்கும். நன்கு பக்குவமாகாத ரத்தத்தையும், பல நிறங்களுடன் பித்தத்தையும் பல தடவைகளில் அதிக வேகமாக வெளியேற்றும். அடிக்கடி மயக்கம் உண்டாகும். இந் நிலையில் ரத்தபித்த சிகித்ஸை, அல்லது ரத்தாதிஸார சிகித்ஸை சிறந்தது. எரிச்சல் முதலிய உபத்ரவங்கள் ஏற்படின், சிவதைக் கல்க்கத்தை திராக்ஷை நீருடன் பருகவேண்டும். இது பித்தம், மலம், வாயு ஆகியவற்றை அகற்றி எரிச்சல் முதலியவற்றை வெல்லும். (இவ்வாறு) சோதனம் செய்து கொண்டபிறகு, சர்க்கரை கலந்ததும் குளிர்ந்ததுமான கஞ்சியைப் பருகவேண்டும். அல்லது அதிக மலம் வெளியேறியதால் உடலில் மலம் குறைந்தவருக்கு பயற்றம் சுண்டல் வகையை உளுந்துக் கஞ்சியுடன் உட்கொள்ள செய்யவேண்டும். தயிர் அல்லது சுரை என்னும் மது பருகவேண்டும். முறை கேடான (நிரூஹ) பஸ்திப் பிரயோகத்தால் உண்டாகும் உபத்ரவங்களுக்கு இவ்வாறு சிகித்ஸை செய்யவேண்டும்.

-स्नेहबस्तेस्तु वक्ष्यते ॥ २८ ॥

முறைகேடான அனுவாஸனப் பிரயோகத்தால் உண்டாகும் உபத்ரவங்களுக்கு, சிகித்ஸை அடுத்துச் சொல்லப் படுகிறது.

शीतोऽल्पो वाऽधिके वाते पित्तेऽत्युष्णः कफे मृदुः ।
अतिभुक्ते गुरुर्वर्चः संचयेऽल्पबलस्तथा ॥ २९ ॥

दत्तस्तैरावृतः स्नेहो नायात्यभिभवादपि ।

வாயு அதிகரித்த நிலையில் குளிர்ந்தது அல்லது குறைந்த அளவுள்ளது, பித்தம் அதிகரித்த நிலையில் அதிக உஷ்ணமுள்ளது, கபம் அதிகரித்த நிலையில் மிருதுத் தன்மையுள்ளது, அதிக அளவில் உண்ட நிலையில் எளிதில் ஜீரணிக்காதது, மலம் அதிகரித்துள்ள நிலையில் வலுக்குறைந்தது, இத்தகைய பஸ்தி பிர யோகிக்கப்பட்டால், அந்தந்த காரணங்களால் சூழப் பட்டு தாக்கப்படுவதால் 'பஸ்திப் பொருள் வெளியேறு வதில்லை.

(இவை அடுத்து விளக்கப்படுகின்றன.)

स्तम्भोरुसदनाध्मानज्वरशूलांगमर्दनैः ॥ ३० ॥

पाश्वर्रुग्वेष्टनैर्विद्याद्वायुना स्नेहमावृतम् ।
स्निग्धाम्ललवणोष्णैस्तं रास्नापीतद्रुतैलिकैः ॥ ३१ ॥

सौवीरकसुराकोलकुलत्थयवसाधितैः ।
निरूहैर्निर्हरेत्सम्यक् समूत्रैः पांचमूलिकैः ॥ ३२ ॥

ताभ्यामेव च तैलाभ्यां सायं भुक्तेऽनुवासयेत् ।

வாயுவினால், நெய்ப்புப் பொருள் சூழப்பட்டிருப்பதை தம்பிதம், தொடை ஓய்ச்சல், பொருமல், ஜுரம், சூலை, உறுப்புகளில் கடுப்புவலி, பக்கவலி, முறுக்கிக் கொள்ளு தல் ஆகிய குறிகளால் அறியவேண்டும். இந்த நிலையில் நெய்ப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகியவை பொருந்திய பொருள்கள் சேர்ந்தவையும், சிற்றரத்தைத் தைலம், ஸரளதேவதாரு தைலம் கலந்தவையும், உமி நீக்கிய யவை, காடி, இலந்தை, கொள், யவை ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்டவையும், பசு நீர், பஞ்சமூல கஷாயம் ஆகியவை கலந்தவையும், உஷ்ண

மானவையுமான நிரூஹ பஸ்திகளை பிரயோகித்து, தோஷத்தை வெளியேற்றவேண்டும். மாலை வேளையில், உண்ட பிறகு, சிற்றரத்தைத் தைலம், *சரளதேவதாருத் தைலம் ஆகிய வற்றால் அனுவாசனம் செய்விக்கவேண்டும்.

**குறிப்பு:** *पीतद्रुः என்பது மஞ்சளைக் குறிப்பிடுவதாக அருணதத்தர் உரையில் காணப்படுகிறது.

तृड्दाहरागसम्मोहवैवर्ण्यतमकज्वरैः ॥ ३३ ॥

विद्यात्पित्तावृतं स्वादुतिक्तैस्तं बस्तिभिर्हरेत् ।

ஸ்னேஹ பஸ்திப் பொருளானது பித்தத்தால் சூழப் பட்டிருப்பதை விடாய், எரிச்சல், செந்நிறம், மயக்கம், நிறமாற்றம், கண் இருளல், ஜ்வரம் ஆகிய குறிகளால் அறியவேண்டும். இதை இனிப்பும், கசப்பும் பொருந்திய பஸ்தி பிரயோகங்களால் வெளியேற்றவேண்டும்.

तन्द्राशीतज्वरालस्यप्रसेकारुचिगौरवैः ॥ ३४ ॥

सम्मूर्च्छाग्लानिभिर्विद्याच्छ्लेष्मणा स्नेहमावृतम् ।
कषायतिक्तकटुकैः सुरामूत्रोपसाधितैः ॥ ३५ ॥

फलतैलयुतैः साम्लैर्बस्तिभिस्तं विनिर्हरेत् ।

ஸ்னேஹ பஸ்திப் பொருளானது கபத்தால் சூழப்பட்டி ருப்பதை சோம்பல், குளிர் ஜ்வரம், உற்சாகமின்மை, வாயில் நீர் சுரத்தல், ருசியின்மை, உடல் கனம், மூர்ச்சை, களைப்பு ஆகிய குறிகளால் அறியவேண்டும். துவர்ப்பு, கசப்பு, காரம் ஆகியவை உள்ளவையும், ஸுரை என்னும் மது, பசுநீர் ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப் பெற்றவையும், பல தைலமும், காடி, முதலிய புளிப்புப் பொருள்களும் கலக்கப் பெற்றவையுமான நிரூஹ

பஸ்திகளால் ஸ்னேஹ பஸ்திப் பொருளை வெளியேற்ற வேண்டும்.

குறிப்பு: *பல தைலம் - பலம் என்பதால் (அழிஞ்சில் முதலிய உஷ்ணவீர்யமான) பழங்கள் சேர்த்து தயாரித்த தைலம் எனவும்,

முன்னர், (கல்ப. 4. 67)-ல் கூறியவாறு மருக்காரை சேர்த்துப் பக்குவம் செய்த தைலம் எனவும்,

மருக்காரையும் - நல்லெண்ணெயும் எனவும் உரை கொள்வதுண்டு.

छर्दिमूर्च्छारुचिग्लानिशूलनिद्रांगमर्दनैः ॥ ३६ ॥

आमलिङ्गैः सदाहैस्तं विद्यादत्यशनावृतम् ।
कटूनां लवणानां च क्वाथैश्चूर्णैश्च पाचनम् ॥ ३७ ॥

मृदुर्विरेकः सर्वं च तत्रामविहितं हितम् ।

அதிகமாக உட்கொண்ட உணவால் பஸ்திப் பொருள் ஆக்ரமிக்கப்பட்டதை வாந்தி, மூர்ச்சை, ருசியின்மை, இளைப்பு, சூலை, தூக்கம், உடல்வலி, எரிச்சல் ஆகிய வற்றால் ஆமக் *குறிகளாலும் ஸூத்ரஸ்தானத்தில் குறிப் பிட்டவாறு அறிய வேண்டும். காரப்பொருளின் கஷாயத் தாலும் உவர்ப்பு, காரம் ஆகிய சுவை கொண்டவற்றின் சூர்ணத்தாலும், உணவை ஜீரணிக்கச் செய்யவேண்டும். மிருது குணம் உள்ளவற்றால் விரேசனம் செய்விக்க வேண்டும். மற்றும் ஆம அஜீர்ணத்தில் கூறிய மருந்து களையும் உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: *ஆமாதிசாரம் முதலியவற்றிற்கு கூறப்பட்ட சிகித்ஸை செய்யவேண்டும் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

विण्मूत्रानिलसंगार्तिगुरुत्वाध्मानहृद्ग्रहैः ॥ ३८ ॥

स्नेहं विडावृतं ज्ञात्वा स्नेहस्वेदैः सवर्तिभिः ।
श्यामाबिल्वादिसिद्धैश्च निरूहैः सानुवासनैः ॥ ३९ ॥

निर्हैर्विधिना सम्यगुदावर्तहरेण च ।

நெய்ப்பு பஸ்திப் பொருள் மலத்தால் சூழப்பட்டிருப்பதை மலம், சிறுநீர், வாயு இவற்றின் தடை, வலி, உடல்கனம், பொருமல், இருதயப்பிடிப்பு ஆகிய குறிகளால் அறிய வேண்டும். நெய்ப்பு உண்டாக்கும் சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை, பலவர்த்திகள் ஆகியவற்றாலும், [1]சிவதை முதலியவற்றின் கஷாயம், பில்வம் முதலியவற்றின் கஷாயம் ஆகியவற்றாலும், நிரூஹங்களாலும், அனுவாசன பஸ்திகளாலும், உதாவர்த்த [3]சிகித்ஸையாலும், அதை வெளியேற்றவேண்டும்.

குறிப்பு: 1. சிவதை முதலிய என்பதால் கல்ப்பஸ்தானத்தில் கூறப்பட்ட சிவதை முதலிய விரேசனப் பொருள்கள் குறிப்பிடப்படுவதாக, சக்ரதத்தர் கூறுகிறார். ஸூத்ரஸ்தானம் 15-ம் அத்தியாயத்தில் கூறப்பட்ட, ச்யமாதிகணப் பொருள் கூறப்படுகின்றன எனவும் கொள்ளலாம்.

2. பில்வம் முதலியவை என்பதால் ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 6-ல் கூறப்பட்ட மகா பஞ்சமூலப் பொருள்கள் குறிப்பிடப் படுகின்றன என ஹேமாத்ரி கூறுகிறார். தசமூலம் என சக்ரதத்தர் கூறுகிறார்.

3. உதாவர்த்த நோய் சிகித்ஸை, சிகித்ஸாஸ்தானம், அத்தியாயம் 8-ல் விளக்கப்பட்டுள்ளது.

अभुक्ते शूनपायौ वा पेयामात्राशितस्य वा ॥ ४० ॥

गुदे प्रणिहितः स्नेहो वेगाद्धावत्यनावृतः ॥
ऊर्ध्वं कायं ततः कण्ठादूर्ध्वेभ्यः खेभ्य एत्यपि ॥ ४१ ॥

मूत्रश्यामात्रिवृत्सिद्धो यवकोलकुलत्थवान् ।
तत्सिद्धतैलो देयः स्यान्निरूहः सानुवासनः ॥ ४२ ॥

कण्ठादागच्छतः स्तम्भकण्ठग्रहविरेचनैः ।
छर्दिघ्नीभिः क्रियाभिश्च तस्य कुर्यान्निबर्हणम् ॥ ४३ ॥

உணவு உட்கொள்ளாத நிலை, அல்லது குதம் வீக்கங் கண்டிருத்தல், அல்லது கஞ்சி மட்டும் உண்டிருத்தல் ஆகிய நிலைகளில் பிரயோகிக்கப்பட்ட ஸ்னேஹ பஸ்தியானது தடை இல்லாமை காரணமாக விரைவாக உடலின் மேற்பாகத்துக்குச் செல்லுகிறது. அங்கிருந்து தொண்டைக்கு மேலுள்ள (வாய், நாசி முதலிய) த்வாரங்கள் வழியாக வெளிப்படுகிறது. பசு நீர், கருஞ்சிவதை, சிவதை, இவற்றால் தயாரிக்கப்பட்டதும்; யவை, இலந்தை, கொள் ஆகியவைகளிலும் இவை கலந்து தயாரிக்கப்பட்ட தைலம் கலந்துமான நிரூஹபஸ்தியும் (அந்த தைலத்தால்) அனு வாஸன பஸ்தியும் செய்விப்பது ஏற்றதாகும். தொண்டை மூலமாக ஸ்னேஹ பஸ்திப் பொருள் வரும் நிலையில் (அதை) தம்பிதம் செய்தல், *கழுத்தைப் பிடித்தல், விரேசனம் செய்வித்தல், வாந்தியை நிறுத்தும் சிகித்ஸை முறைகள் ஆகியவற்றால் தடுக்க வேண்டும்.

குறிப்பு: *உயிருக்கு தீங்கு ஏற்படாதவாறு கழுத்தைப் பிடிக்கவேண்டும்.

नापक्वं प्रणयेत्स्नेहं गुदं स ह्युपलिम्पति ।
ततः कुर्यात्सरुङ्मोहकण्डूशोफान् क्रियाऽत्र च ॥ ४४ ॥

तीक्ष्णो बस्तिस्तथा तैलमर्कपत्ररसे शृतम् ।

பக்குவம் செய்யப்படாத நெய்ப்புப் பொருளை பஸ்தி செய்விக்க உபயோகிக்கக் கூடாது. பக்குவமாகாத நெய்ப்புப் பொருள் குதத்தில் ஒட்டி பூசிநின்ற உணர்வைக் கொடுக்கும். அதனால் வலி, மயக்கம், அரிப்பு, வீக்கம் ஆகியவை உண்டாகும். இந்நிலையில் தீக்ஷ்ணமான பஸ்தி, மற்றும் எருக்கு இலை சேர்த்துப் பக்குவம் செய்த தைலத்தால் அனுவாஸனம் ஆகியவற்றை உபயோகிக்கவேண்டும்.

**குறிப்பு:** குறுகியது, நீண்டது, மெல்லியது, தடித்தது, பழையது, கட்டுத் தளர்ந்தது, பக்கங்களில் த்வாரம் உள்ளது, கோணலானது என பஸ்தி யந்திரத்தின் எட்டு வகைத் தோஷங்களும் இதனால் ஏற்படும். தனித்தனி விபத்துக்களும் மற்றும் பஸ்திப் பையின் தோஷங்களும், படுக்கையின் தோஷங்களும், பிரயோகித்தலில் உள்ள தோஷங்களும், அவற்றிற்கு தனித்தனி சிகித்ஸைகளும் சரகம், ஸங்க்ரஹம் முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

अनुच्छ्वास्य तु बद्धे वा दत्ते निःशेष एव वा ॥ ४५ ॥

प्रविश्य क्षुभितो वायुः शूलतोदकरो भवेत् ।
तत्राभ्यङ्गो गुदे स्वेदो वातघ्नान्यशनानि च ॥ ४६ ॥

வாயுவை வெளியேற்றாமல் பஸ்தி முகத்தை கட்டிய நிலையிலாவது, பொருள் எஞ்சியில்லாமல் முற்றிலும் உட்செல்லும்படியாகவாவது, பஸ்தி பிரயோகிக்கப் பட்டால், வாயு உட்புகுந்து கலக்கமடைந்து, சூலை, குத்து வலி ஆகியவற்றை உண்டாக்கும். அந்த நிலையில் குதப்

பகுதியில் நெய்ப்புப் பொருள் தடவி வியர்வை உண்டாக்க வேண்டும். வாயுவைப் போக்கும் உணவு கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** பஸ்தி யந்திரத்தில் உள்ள வாயுவை முதலில் வெளியேற்றுவதன் அவசியமும், முழுப்பொருள் களையும் உள்ளே செலுத்தாமல் சிறிதளவு மிகுதி வைத்துக் கொள்வதும், இந்த சிகித்ஸையில் முக்கியமாகக் கைக்கொள்ளப்படுகின்றன. இந்த விவரங்கள் ஸூத்ரஸ்தானம் 19-வது அத்தி யாயத்தில் விளக்கப்பட்டன. இந்த வழக்கம் இஞ்சக்ஷன் (ஊசி குத்துதல் மூலம் மருந்தை உடலிற் செலுத்துதல்) விஷயத்திலும் பின்பற்றப் படுகிறது என்பது யாவரும் அறிந்ததே.

दुतं प्रणीते निष्कृष्टे सहसोत्क्षिप्त एव वा ।
स्यात् कटीगुदजंघोरुबस्तिस्तम्भार्तिभेदनम् ॥ ४७ ॥

भोजनं तत्र वातघ्नं स्वेदाभ्यंगाः सबस्तयः ।

பஸ்தி நேத்ரம் விரைவாகச் செலுத்தப்பட்டாலும், எடுக்கப்பட்டாலும், விரைவாக மேல் தூக்கிய நிலையில் செலுத்தப்பட்டாலும், இடுப்பு, மலத்துவராம், கணுக்கால், தொடை, சிறுநீர்ப்பை ஆகியவற்றில் தம்பிதம், வலி, பிளத்தல் போன்ற உணர்ச்சி ஆகியவை காணப்படும். இந்த நிலையில் வாயுவைப் போக்கும் உணவு, வியர்வை உண்டாக்குதல், அப்பியங்கம், பஸ்தி பிரயோகம் ஆகியவை ஏற்றவையாகும்.

पीड्यमानेऽन्तरा मुक्ते गुदे प्रतिहतोऽनिलः ॥ ४८ ॥

उरःशिरोरुजं सादमूर्वोश्च जनयेद्बली ।
बस्तिः स्यात्तत्र बिल्वादिफलैश्यामादिमूत्रवान् ॥ ४९ ॥

பஸ்திப் பையை அமுக்கும்பொழுது இடையில் நிறுத்தப்பட்டால் பலமுள்ள வாயு குதத்தில் தடுக்கப் பட்டு, மார்பு வலி, தலைவலி, தொடை ஓய்ச்சல், ஆகிய வற்றைத் தோற்றுவிக்கும். இந்த நிலையில் பில்வாதி (தசமூலம்) மருக்காரை, கருஞ்சிவதை முதலிய விரேசனப் பொருள்கள் பசு நீர் ஆகியவற்றைச் சேர்த்துப் நிரூஹ பஸ்தி உபயோகிக்க வேண்டும்.

अतिप्रपीडितः कोष्ठे तिष्ठत्यायाति वा गलम् ।
तत्र बस्तिर्विरेकश्च गलपीडादि कर्म च ॥ ५० ॥

பஸ்தியை அதிகமாக அமுக்கினால் திரவமானது கோஷ்டத்தில் நிற்கும். அல்லது தொண்டைக்கு வரும். இந்த நிலையில் பஸ்தி செய்வித்தல், விரேசனம் செய் வித்தல், தொண்டையை அமுக்குதல் முதலிய சிகித்ஸை ஆகியவை ஏற்றவையாகும்.

वमनाद्यैर्विशुद्धं च क्षामदेहबलानलम् ।
यथाऽण्डं तरुणं पूर्णं तैलपात्रं यथातथा ॥ ५१ ॥

भिषक् प्रयत्नतो रक्षेत्सर्वस्मादपवादतः ।

வமனம் முதலிய சோதன சிகித்ஸை செய்து கொண்ட வருக்கு, பலக்குறைவு, ஜாடராக்கினி மந்தித்தல் ஆகியவை காணப்படுமாதலால், அவரை, (எவ்விதத்திலும் தீங்கு ஏற்படாதவாறு) இளம் முட்டையையும், தைலம் நிரம்பிய பாத்திரத்தையும் காப்பதுபோல, எல்லா தவறுகளிலிருந்தும் மிக்க கவனத்துடன் காக்கவேண்டும்.

दद्यान्मधुरहृद्यानि ततोऽम्ललवणौ रसौ ॥ ५२ ॥

स्वादुतिक्तौ ततो भूयः कषायकटुकौ ततः ।

अन्योन्यप्रत्यनीकानां रसानां स्निग्धरूक्षयोः ॥ ५३ ॥

व्यत्यासादुपयोगेन क्रमात्तं प्रकृतिं नयेत् ।
सर्वसहः स्थिरबलो विज्ञेयः प्रकृतिं गतः ॥ ५४ ॥

இனிப்புப் பொருள் இருதயத்துக்கு ஏற்ற, மனதிற்குப் பிடித்த பொருள் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். பிறகு புளிப்பு, உவர்ப்புப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். பிறகு இனிப்பு, கசப்பு பொருள்களைக் கொடுக்க வேண்டும். அடுத்து துவர்ப்பு, காரம் ஆகிய பொருள்களைக் கொடுக்க வேண்டும். எதிரிடையான சுவையுள்ளவற்றையும், வறட்சி, நெய்ப்பு உள்ளவற்றையும் மாற்றி மாற்றி உபயோகித்து இயற்கை நிலையை அடைவிக்கவேண்டும். எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளக் கூடியவனாகவும், நிலையான பலம் உடையவனாகவும் இருப்பின், சுயநிலையை (ஆரோக்கிய நிலை) அடைந்ததாகக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** உரக்கப் பேசுதல், அதிக நேரம் அமர்ந்திருத்தல், தகுதியற்ற வாகனங்களில் செல்லுதல், அதிகமாக அலைதல், அஜீர்ண நிலையில் உண்ணுதல், ஏற்காத உணவு, பகல் தூக்கம், தேகப்பயிற்சி ஆகிய எட்டையும் தவிர்க்கவேண்டும் என்றும், அவற்றால் ஏற்படும் தீங்குகளும், அவற்றிற்குப் பரிகாரங்களும் ஸங்க்ரஹத்தில் விளக்கப்பட்டுள் ளன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसुनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां पचंमे कल्पस्थाने बस्तिव्यापत्सिद्धिर्नाम पंचमोऽध्यायः ॥ ५ ॥

கல்பஸ்தானம் - ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## ।। क्लपस्थानम् - கல்பஸ்தானம் ।।

### षष्ठोऽध्यायः - அத்தியாயம் - 6

முறைகேடாக பிரயோகிக்கப்பட்ட பஸ்திகளால் உண்டாகும் நோய்களும், பொதுவாக எல்லா நோய்களும் நல்ல மருந்துப் பொருள்களின் உபயோகத்தாலேயே நீங்குகின்றன. ஆதலால் மருந்துப் பொருள்களில் கல்பம் அடுத்து விளக்கப்படுகிறது.

अथाऽतो भेषजकल्पं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து திரவியங்கள் கல்பம் விளக்கப்படுகிறது.

குறிப்பு: 'கல்பம்' என்பதற்கு கல்பனை அல்லது அமைத்தல் என்பது பொருள்.

धन्वे साधारणे देशे समे सन्मृत्तिके शुचौ ।
श्मशानचैत्यायतनश्वभ्रवल्मीकवर्जिते ॥ १ ॥

मृदो प्रदक्षिणजले कुशरोहिषसंस्तृते ।
अफालकृष्टेऽनाक्रान्ते पादपैर्बलवत्तरैः ॥ २ ॥

शस्यते भेषजं जातं युक्तं वर्णरसादिभिः ।
जन्त्वजग्ध दवादग्धमविदग्धं च वैकृतैः ॥ ३ ॥

भूतैश्च्छायातपाम्ब्वाद्यैर्यथाकालं च सेवितम् ।
अवगाढमहामूलमुदीचीं दिशमाश्रितम् ॥ ४ ॥

வறண்டபிரதேசம், ஸாதாரண தேசம், ஸமமான தேசம், மண்வளம் உடையது, சுத்தமானது ஆகிய குணமுள்ளதும்,

மயானம், கிருஹங்களில் வளர்க்கும் அரசு முதலிய மரங்கள், கொலைக்களம், பள்ளம், புற்று ஆகியவை நீங்கலாகவும்; மிருதுவானதும், வலமாக ஓடுகின்ற நீரை உடையதும், தர்ப்பை, வாசனைப் புல் ஆகியவை பரவியதும், கலப்பையினால் உழப்படாததும், பலமுள்ள பெரிய மரங்களால் குழப்படாததுமான பிரசேதத்தில் உண்டான மூலிகை சிறந்ததாகும், மற்றும் நிறம், சுவை [1]முதலிய வற்றுடன் கூடியதும், கிருமிகளால் உண்ணப்படாததும், காட்டுத்தீயால் எரிக்கப்படாததும், அகாலக் காற்று, அகால மழை முதலியவற்றால் கெடுக்கப்படாததாகவும் உள்ள மூலிகை சிறந்ததாகும். காலத்திற்கேற்ப நிழல், வெயில், நீர் முதலியவற்றால் சேவிக்கப்பட்டதும், ஆழ்ந்துச் சென்று பருத்தவேர் உள்ளதும், [2]வடக்குப்புறம் உள்ளதுமான மூலிகை சிறந்ததாகும்.

குறிப்பு: 1. சுவை முதலிய என்பதால் மணம், தக்க அளவு ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

2. கிழக்குப்புறம் உள்ளதையும் எடுத்துக் கொள்ளலாம்.

3. பருவங்களுக்கேற்ப சேகரிக்கப்படவேண்டி யவை ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளன.

अथ कल्याणचरितः श्राद्धः शुचिरुपोषितः ।
गृह्णीयादौषधं सुस्थं स्थितं काले च कल्पयेत् ॥ ५ ॥

सक्षीरं तदसम्पत्तावनतिक्रान्तवत्सरम् ।
ऋते गुडघृतक्षौद्रधान्यकृष्णाविडङ्गतः ॥ ६ ॥

पयो बाष्कायणं ग्राह्यं विण्मूत्रं तच्च नीरुजाम् ।
वयोबलवतां धातुपिच्छशृंगखुरादिकम् ॥ ७ ॥

நன்னடத்தை, மூலிகைகளைச் சேகரிப்பதில் ஊக்கம், சுத்தம், ஆகியவற்றைக் கொண்டவர், உபவாஸமிருந்து கொண்டு மூலிகைகளைச் சேகரிக்கவேண்டும். இவற்றை நன்கு பாதுகாப்புடன் [1]வைத்திருந்து தேவையான காலத்தில் உபயோகிக்கவேண்டும். மூலிகைகளை பசுமையாகவே உபயோகிக்க வேண்டும். பசுமையாக கிடைக்காவிடில், ஓராண்டு காலத்திற்குமேல் பழையதாக இல்லாததைப் பயன்படுத்தலாம். வெல்லம், நெய், தேன், (சாலி முதலிய) தான்ய வகை, திப்பிலி, வாய்விடங்கம் ஆகியவை இதற்கு விதி விலக்காகும். முதிய கன்றை உடைய பசுவின் பால் ஏற்றது. நோயுற்ற பிராணிகளிடமிருந்து மலம், நீர், [2]பால் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும். நடு வயதும், பலமும் உள்ள பிராணிகளின் தாதுக்கள் தோகை, கொம்புகள், குளம்புகள் முதலியவற்றைச் சேகரிக்க வேண்டும்.

குறிப்பு: 1. ஏற்ற குணமுள்ள பாத்திரத்திலிட்டு, நன்கு மூடி, உரியில் வைக்கவேண்டும் என சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

2. பிராணியின் உணவு ஜீரணித்த நிலையில் இவற்றை சேகரிக்கவேணடும்.

3. குளம்பு முதலிய என்பதால் உரோமம், தோல், நகம், ஆகியவை கூறப்படுகின்றன.

कषाययोनयः पञ्च रसा लवणवर्जिताः ।
रसः कल्कः शृतः शीतः फाण्टश्चेति प्रकल्पना ॥ ८॥

पञ्चधैव कषायाणां पूर्वं पूर्वं बलाधिका ।

**கஷாய கல்பனைகள் :**

[1]உவர்ப்புச் சுவை நீங்கலாக மற்ற ஐவகைச் சுவையுள்ள பொருள்கள், [2]கஷாயம் என்ற செய்முறைக்கு

ஏற்றவையாகும். சாறு, கல்கம், க்ருதம், சீதம், பாண்டம் என கஷாய கல்பனை ஐந்து வகைகள் ஆகும். இவற்றுள் பிந்தியவற்றைக் காட்டிலும் முந்தியவை அதிக பலம் உள்ளவையாகும்.

**குறிப்பு:** 1. திரவியங்கள் சாரமான பகுதியை எடுத்து தயாரிக்கும் முறை கஷாயம் எனப்படும். அத்தகைய தன்மை உப்புக்கு இல்லை. ஆதலால் அது கஷாயத்திற்கு மூலப்பொருளாகாது.

உப்பிலிருந்து ஸ்வரசமோ மற்ற கஷாய வகைகளோ தயாரிக்க முடியாது.

2. சாறு முதலிய ஐவகை கல்பனைகளுக்கும் கஷாயம் என்பது பொதுப் பெயராகும். சூர்ணமும் கல்கப் பிரிவில் அடங்குவதாகும்.

3. லேஹ்யம் முதலிய கல்பனைகளும் இவற்றுள்ளேயே அடங்கும் என்பது கருத்து.

सद्यः समुद्धृतात् क्षुण्णाद्यः स्रवेत्पटपीडितात् ॥ ९ ॥

स्वरसः स समुद्दिष्टः-

**(ஸ்வரசம்) சாறு :**

அப்பொழுதே எடுக்கப்பட்ட மூலிகையை இடித்து துணியில் வடிக்கட்டி எடுக்கப்படும் சாறு, ஸ்வரசம் எனப்படும்.

**குறிப்பு:** மூலிகை சேகரிக்கப்பட்ட அன்றே கழுவி, இடித்து துணியில் வடிகட்டி எடுத்த சாறு ஸ்வரசம் எனப்படும் என; ஹேமாத்ரி கூறுகிறார்.

-कल्कः पिष्टो द्रवाप्लुतः ।

चूर्णोऽप्लुतः-

**கல்க்கமும், சூர்ணமும் :**

திரவியத்துடன் நீர் விட்டரைத்தது கல்க்கம் எனப்படும். திரவப்பொருள் சேர்க்காமல் அரைத்தது (இடித்தது) சூர்ணம் எனப்படும்.

**குறிப்பு:** கல்க்கத்தில் போல் சூர்ண நிலையிலும் பொருளின் முழுப்பகுதியும் எடுத்துக் கொள்ளப் படுவதால் சூர்ணம் என்பது கல்க்கத்தின் இனத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

-शृतः क्वाथः

**க்வாதம் :**

திரவியத்துடன், திரவம் சேர்த்துக் காய்ச்சி எடுக்கப் பட்டது க்வாதம் எனப்படும்.

**குறிப்பு:** நீர்யூஹம், ச்ருதம், கஷாயம் முதலிய பெயர்களும் இதற்கு உண்டு. கஷாயம் என்னும் சொல் பொது வாக ஐந்து வகை கல்பனைகளையும், தனித்து இந்த கல்பனையையும் குறிப்பிடும்.

-शीतो रात्रिं द्रवे स्थितः ॥ १० ॥

**சீத கஷாயம் :**

திரவியத்தை ஒரு இரவு முழுவதும் நீரிலிட்டு, காலை யில் எடுக்கப்படும் திரவம், சீத கஷாயம் எனப்படும்.

**குறிப்பு:** கொதிக்க வைத்தலின்றி என்று ஹேமாத்ரி கூறுகிறார்.

सद्योऽभिषुतपूतस्तु फाण्टः -

(கொதித்த நிலையிலுள்ள) நீரிலிட்டு அப்பொழுது வடிக்கட்டியது பாண்டம் எனப்படும்.

குறிப்பு: இக்காலத்தில் தயாரிக்கப்படுகிற தேயிலைப் பானம் முதலியன இவ்வகையைச் சேர்ந்தவை யாகும்.

-तन्मानकल्पने ।
युंज्याद्व्याध्यादिबलतस्तथा च वचनं मुनेः ॥ ११ ॥

मात्राया न व्यवस्थाऽस्ति व्याधिं कोष्ठं बलं वयः ।
आलोच्य देशकालौ च योज्या तद्वच्च कल्पना ॥ १२ ॥

*வியாதி முதலியவற்றின் பலத்திற்கேற்ப ஔஷதத்தின் அளவையும் கல்பனையையும், கொள்ளவேண்டும். ''அளவுக்கு ஒரு நிலையான நியதி கிடையாது. நோய், கோஷ்டம், பலம், வயது, தேசம், காலம் ஆகியவற்றை அறிந்து அளவை நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறே இங்கு கூறிய கஷாயம் முதலிய கல்பனைகளையும் தீர்மானிக்க வேண்டும்'' என முனிவர் கூறுகிறார்.

குறிப்பு: *வியாதி முதலியவற்றின் என்பதால் கோஷ்டம், தேகபலம், ரஸம், வீர்யம் ஆகியவற்றையும், தோஷங்கள், தாதுக்கள் ஆகியவற்றையும் நன்கு ஆலோசிக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது.

मध्यं तु मानं निर्दिष्टं स्वरसस्य चतुष्पलम् ।

ஸ்வரசத்தின் நடுத்தர உபயோக அளவு 4 பலம் ஆகும்.

குறிப்பு: பசுமையுள்ள திரவியத்திலிருந்து எடுத்து அக்னி சம்பந்தம் இன்றி உபயோகிப்பதால், ஸ்வரச

மானது எளிதில் ஜீரணிக்காது. எனவே 1/2 பலம் அளவாகக் கொள்ளவேண்டும். நீரிலிட்டு எடுக்கும் இரண்டாந்தர ஸ்வரசத்தின் அளவு 1 பலமாகும் என சாரங்கதர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

पेष्यस्य कर्षमालोड्यं तद्द्रवस्य पलत्रये ॥ १३ ॥

1/4 பலம் கல்க்கம் அல்லது சூர்ணத்தை 3 பல திரவத்தில் கலக்கி உபயோகிப்பது கல்க்கத்தின் நடுத்தர அளவாகும்.

क्वाथं द्रव्यपले कुर्यात्प्रस्थार्धं पादशेषितम् ।

ஒரு பல அளவுள்ள திரவியத்தை அரைப் பிரஸ்த நீரிலிட்டு பக்குவம் செய்து நாலில் ஒன்றாக ஆகுமாறு குறுக்கிக்கொள்வது க்வாதத்தின் நடுத்தர அளவாகும்.

குறிப்பு: இங்கு 1/2 பிரஸ்தம் என்பதற்கு 16 பலம் என ஹேமாத்ரி உரை கூறுகிறார்.

शीतं पले पलैः षड्भिः-

ஒரு பலம் திரவியத்தை 6 பலம் நீரிலிட்டு எடுத்துக் கொள்வது சீத கஷாயத்தின் நடுத்தர அளவாகும்.

-चतुर्भिस्तु ततोऽपरम् ॥ १४ ॥

ஒரு பலம் திரவியத்தை 4 பலம் நீரிலிட்டு எடுத்துக் கொள்வது பாண்ட கஷாயத்தின் நடுத்தர அளவாகும்.

स्नेहपाके त्वमानोक्तौ चतुर्गुणविवर्धितम् ।
कल्कस्नेहद्रवं योज्यम्-

நெய்ப்புப்பொருள் (தைலம், க்ருதம் ஆகியவை) பக்குவம் செய்யும்படி கூறப்பட்ட இடங்களில் கல்க்கம்,

ஸ்னேஹம் (தைலம் அல்லது க்ருதம் முதலிய) திரவப் பொருள் ஆகியவற்றிற்கு அளவு கூறப்படாவிடின், அவற்றை அடுத்தடுத்து 4 மடங்கு அதிகரித்த அளவிலேயே சேர்க்கவேண்டும்.

**குறிப்பு:** கல்க்கம் 1 பங்கு, நெய்ப்புப் பொருள் 4 பங்கு, திரவம் 16 பங்கு.

-अधीते शौनकः पुनः ॥ १५ ॥

स्नेहे सिध्यति शुद्धाम्बुनिःक्वाथस्वरसैः क्रमात् ।
कल्कस्य योजयेदंशंचतुर्थं षष्ठमष्टमम् ॥ १६ ॥

நீர், கஷாயம், ஸ்வரஸம் ஆகியவற்றுடன் நெய்ப்புப் பொருள் பக்குவம் செய்யும் பொழுது முறையே நெய்ப்புப் பொருளுக்கு நாலில் ஒன்று, ஆறில் ஒன்று, எட்டில் ஒன்று என்ற அளவில் கல்க்கம் சேர்க்கவேண்டும் என சௌனகர் கூறுகிறார்.

पृथक् स्नेहसमं दद्यात्पञ्चप्रभृति तु द्रवम् ।

*ஐவகை முதலிய திரவங்கள் கூறப்பட்டால் அவை ஒவ்வொன்றையும் நெய்ப்புப் பொருளுக்கு சமமாக சேர்க்கவேண்டும்.

**குறிப்பு:** *ஐந்து, ஆறு, ஏழு முதலியவாறு திரவங்கள் கூறப்பட்ட இடங்கள் குறிப்பிடப்படுகின்றன.

नांगुलिग्राहिता कल्के न स्नेहेऽग्नौ सशब्दता ॥ १७ ॥

वर्णादिसम्पच्च यदा तदैनं शीघ्रमाहरेत् ।
घृतस्य फेनोपशमस्तैलस्य तु तदुद्भवः ॥ १८ ॥

## நெய்ப்புப் பொருள் பக்குவ நிலைக் குறி :

கல்க்கம் விரலில் ஒட்டாமை, நெய்ப்புப் பொருளை தணலில் இட, சப்தமின்றியும் இருத்தல், *நிறம் முதலி யவை நன்கு அமைதல் ஆகியவை காணப்பட்டால், உடனே நெய்ப்புப் பொருளை இறக்கிவிடவேண்டும். நெய் பக்குவமான நிலையில் கொப்புளங்கள் அடங்கும். தைலம் பக்குவமான நிலையில் கொப்புளங்கள் உண்டாகும்.

குறிப்பு: ⋆நிறம் முதலிய என்பதால் மணம், சுவை, பரிஸம் ஆகியவை கூறப்படுகின்றன.

लेहस्य तन्तुमत्ताऽप्सु मज्जनं शरणं न च ।

லேஹம்; பக்குவமான நிலையில், அதை கட்டை விரல், ஆள்காட்டி விரல், ஆகியவற்றின் இடையில் இட்டு இழுத்தால் கம்பி போன்று இழுபடும். நீரில் இடப் பட்டால் மூழ்கும். கரையாது.

पाकस्तु त्रिविधे मन्दश्चिक्कणः खरचिक्कणः ॥ १९ ॥

मन्दः कल्कसमे किंचिच्चिक्कणो मदनोपमे ।
किंचित्सीदति कृष्णे च वर्त्यमाने च पश्चिमः ॥ २० ॥

दग्धोऽत ऊर्ध्वं निष्कार्यः स्यादामस्त्वग्निसादकृत् ।

## நெய்ப்புப் பொருளின் மூவகைப் பாகம் : (பக்குவ நிலை)

மந்தம், சிக்கனம், கரசிக்கனம் என பாகம் மூவகைப் படும். கிட்டமானது (விரலிடையில் இட்டுத் திரிக்க மிருதுவாக) கல்க்கம் போல் இருந்தால் மந்தபாகம் எனப் படும். கிட்டம், தேன் மெழுகுபோல் இருந்தால் சிக்கன

பாகம் எனப்படும். கிட்டம் விரல் இடையிட்டுத் திரிக்க சிறிது உதிருவதுடன் கறுப்பு நிறமும் உள்ளதாய் இருந்தால், கரசிக்கனபாகம் எனப்படும். இதற்கு மேலும் பாகம் செய்தால் தக்த(காந்திய)பாகம் எனப்படும். இது உரிய காரியத்தைச் செய்யாது. பக்குவமாகாத ஸ்னேஹமானது ஜாடராக்னிக்கு பலக் குறைவை உண்டாக்கும்.

मृदुर्नस्ये खरोऽभ्यंगे पाने बस्तौ च चिक्कणः ।। २१ ।।

நசியமிடுவதற்கு, மிருது (மந்த) பாகமுள்ளதும், அப்யங்கத்திற்கு கரசிக்கனபாகமுள்ளதும், பருகுவதற்கும் பஸ்தி செய்விக்கவும், சிக்கன பாகமுள்ளதும் ஏற்றவை யாகும்.

शाणं पाणितलं मुष्टिः कुडवं प्रस्थमाढकम् ।
द्रोणं वहं च क्रमशो विजानीयाच्चतुर्गुणम् ।। २२ ।।

**அளவை :**

*சாணம் (1/16 பலம்), பாணிதலம் (1/4 பலம்), முஷ்டி (1 பலம்), குடவம் (4 பலம்), பிரஸ்தம் (16 பலம்), ஆடகம் (64 பலம்), த்ரோணம் (256 பலம்), வஹம் (1024 பலம்) ஆகியவை அடுத்தடுத்து நான்கு மடங்கு அளவுள்ள வையாகும்.*

द्विगुणं योजयेदार्द्रं कुडवादि तथा द्रवम् ।

பசுமையான மூலிகைகளை *இரு மடங்கு சேர்க்க வேண்டும். குடவம் முதலான அளவுகளில் கூறப்பட்ட திரவங்களையும் இருமடங்கு சேர்க்கவேண்டும்.

குறிப்பு: இதுவே இரட்டித்தல் பரிபாஷை எனப்படும்.

ஆடாதோடை, வெட்பாலை, பூசணி, சதகுப்பை, குறிஞ்சி, அமுக்கறா, தண்ணீர்விட்டான், முதியார் கூந்தல், ஆகியவை எக்காலத்திலும் பசுமை யாகவே பிரயோகிக்க ஏற்றவையாகும். இங்கு இரட்டிப்பு பரிபாஷை கிடையாது.

பொதுவாக திரவங்கள் விஷயத்தில் பலம் என்ற பெயரில் அளவு கூறப்பட்டால் அங்கு இரட்டித்தல் கிடையாது. குடவ முதலிய பெயரில் அளவு குறிப்பிடப்பட்டால் அவற்றை இரட்டித்துக் கொள்ள வேண்டும்.

துலாம் (100 பலம்) என்று அளவு கூறப்பட்ட இடத்தில் இரட்டித்தல் கிடையாது.

पेषणालोडने वारि स्नेहपाके च निर्द्रवे ॥ २३ ॥

कल्पयेत्सदृशान् भागान् प्रमाणं यत्र नोदितम् ।
कल्कीकुर्याच्च भैषज्यमनिरूपितकल्पनम् ॥ २४ ॥

(अंगानुक्तो तु मूलं स्यादप्रसिद्धो तदेव तु ।)

## நெய்ப்புப் பொருள் பக்குவம் செய்யும் விதம்:

நெய்ப்புப்பொருள் பக்குவம் செய்வதற்கு திரவப் பொருளானது தனித்து கூறப்படாவிடின், அரைத்தல், கரைத்தல் ஆகியவற்றிற்கு நீரை உபயோகிக்கவேண்டும். பொருள்களுக்கு தனித்து அளவு கூறப்படாத இடங்களில் சம அளவு என்று கொள்ளவேண்டும். செய்முறை கூறப் படாத இடங்களில் மருந்துப் பொருள்களை கல்க்க மாக்கிக் கொள்ள வேண்டும். மருந்துப் பொருளின் பகுதி கூறப்படாத இடங்களில் வேரையே எடுத்துக் கொள்ள

வேண்டும். வேரை உபயோகிப்பது வழக்கத்தில் இல்லாத பொருள்களின் விஷயத்தில் (கடுக்காய் முதலியவற்றை) உலக வழக்கை அனுசரித்து உபயோகிக்கவேண்டும்.

**குறிப்பு:** தடித்த வேருள்ளவற்றின் விஷயத்தில், வேர்ப்பட்டையையும், மெல்லிய வேர்களின் விஷயத்தில் வேர் முழுவதையும், ஆல் முதலியவற்றின் மரப்பட்டையையும், வேங்கை முதலியவற்றில் வைரத்தையும், தாளீசம் முதலியவற்றில் இலையையும், திரிபலை முதலியவற்றில் காய்களையும், காட்டாத்தி முதலியவற்றில் மலர்களையும், கள்ளி முதலியவற்றில் பாலையும் எடுத்துக் கொள்வது வழக்கம்.

द्वौ शाणौ वटकः कोलं बदरं द्रंक्षणश्च तौ ॥ २९ ॥

अक्षं पिचुः पाणितलं सुवर्णं कवलग्रहः ।
कर्षो बिडालपदकं तिन्दुकः पाणिमानिका ॥ २६ ॥

शब्दान्यत्वमभिन्नेऽर्थे शुक्तिरष्टमिका पिचू ।
पलं प्रकुंचो बिल्वं च मुष्टिराम्रं चतुर्थिका ॥ २७ ॥

द्वे पले प्रसृतस्तौ द्वावंजलिस्तौ तु मानिका ।
आढकं भाजनं कंसो द्रोणः कुम्भो घटोऽर्मणम् ॥ २८॥

तूला पलशतं तानि विंशतिर्भार उच्यते ।

**அளவு விவரம் :**

இரண்டு [1] சாணம் கொண்டது வடகம், கோலம், பதரம் அல்லது த்ரம்க்ஷணம் எனப்படும். இரண்டு வடகம் கொண்டது அக்ஷம் எனப்படும். அக்ஷம் [2] பிசுபாதலம்

சுவர்ணம், [3]கபளக்கரஹம், கர்ஷம், [4]பிடாலபதகம், [5]திந்துகம், [2]பாணிமாணிகா என்னும் சொற்கள் ஒரே பொருள் கொண்டவை. இரண்டு பிசுக்கள் கொண்டது. சுத்தி அல்லது [6]அஷ்டமிகா எனப்படும். பலம், [7]பிரகுஞ்சம், [8]பில்வம், [7]முஷ்டி, [9]ஆம்ரம், [10]சதுர்த்திகா ஆகியவை ஒரே பொருள் கொண்டவையாகும். இரண்டு பலம் கொண்டது [11]ப்ரஸ்ருதம் எனப்படும். இரண்டு ப்ரஸ்ருதம் கொண்டது அஞ்ஜலி எனப்படும். இரண்டு [12]அஞ்ஜலி கொண்டது மானிகா எனப்படும். ஆடகம் (64 பலம்) பாஜனம், கம்ஸம் ஆகியவை ஒரே பொருள் கொண்டவை. திரோணம், கும்பம், கடம், அர்மணம் ஆகியவை ஒருபொருள் கொண்டவை. 100 பலம் கொரண்டது துலா எனப்படும். இருபது துலா கொண்டது பாரம் எனப்படும்.

குறிப்பு: 1. சாணம் - 1/16 பலம்.

2. பாணிதலம் - பாணிமாணிகா - உள்ளங்கை அளவு.

3. கபளக்ரஹம் வாய் கொப்பளிக்கும் முறைக்கு ஏற்ற அளவு.

4. பிடாலபதகம் - பூனையின் கால் அடி, வெருகடி எனத் தமிழில் கூறுவதுண்டு (வெருகு = பூனை)

5. திந்துகம் - பனச்சிக்காயின் அளவு.

6. அஷ்டமிகா - குடவத்தின் எட்டில் ஒரு பங்கு.

7. பிரகுஞ்சம் முஷ்டி - மூடிய கை.

8. பில்வம் - பில்வப்பழத்தின் அளவு.

9. ஆம்ரம் - மாம்பழ அளவு

10. சதுர்த்திகா - குடவத்தில் நாலில் ஒருபங்கு.

11. ப்ரஸ்ருதம் - விரித்த கையளவு

12. அஞ்சலி - விரித்த இருகை கூப்பிய அளவு

हिमवद्विन्ध्यशैलाभ्यां प्रायो व्याप्ता वसुन्धरा ॥ २९ ॥

सौम्यं पथ्यं च तत्राद्यमाग्नेयं वैन्ध्यमौषधम् ॥

இமயமலை, விந்தியமலை, ஆகிய இருமலைகளாலும் (மலையின் வீர்யத்தாலும்) பூமியானது பெரும்பாலும் பரவப்பெற்றுள்ளது. அவற்றுள் இமயமலையால் பரவப் பெற்ற பகுதியின் ஔஷதம் சீதவீர்யமுள்ளதும் பத்யமும் ஆகும். விந்திய மலையால் பரவப்பெற்ற பகுதியின் ஔஷதம் உஷ்ண வீர்யமுள்ளதாகும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां पंचमे कल्पस्थाने भेषजकल्पो नाम षष्ठोऽध्यायः ॥ ६ ॥

கல்பஸ்தானம் - ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

கல்பஸ்தானம் இத்துடன் முடிவடைந்தது.

★★★★★

# Index - அட்டவணை

## சிகித்ஸாஸ்தானம் - இரண்டாவது பாகம்

### அத்தியாயம் - 12


| | ஸ்லோகம் | பக்கம் |
|---|---|---|
| பிரமிய நோயாளி பலசாலியாயின் நெய்ப்பு உண்டாக்கிய பின் வாந்தி செய்வித்தல் முதலியன | 1 | 403 |
| பித்தப்ரமேக நோயாளிக்கு நியக்ரோதாதிகண கஷாயத்தால் பஸ்தி செய்தல் | 3 | 403 |
| சோதனத்திற்குப் பின் மாம்ஸரஸத்தில் திருப்தி உண்டாக்கல் | 3 | 403 |
| இளைப்பதற்காகச் செய்யப்படும் சிகித்ஸையால் சிறுநீர்த்தடை முதலியவை உண்டாதல் | 4 | 404 |
| நோய் தொடர்பிலிருந்து காக்க சமன ஔஷதங்களைப் பிரயோகித்தல் | 4 | 404 |
| சோதனை சிகித்ஸைக்கு தகாதவர்களுக்கு சமன ஔஷதமே ஏற்றது | 5 | 405 |
| பருக ஏற்றவை (நெல்லிக்காய் சாற்றில் மஞ்சள்பொடி கலந்து உபயோகித்தல் முதலியன) | 5 | 405 |
| கபப் பிரமியத்தில் வெள்ளிலோத்தி முதலியவற்றின் கஷாய பானம் (முதலிய 3 யோகங்கள்) | 7 | 406 |
| பித்தப்ரமியத்தில் இலாமிச்சை முதலியவற்றின் கஷாயபானம் (முதலிய 3 யோகங்கள்) | 8 | 406 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 12 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| வாயு அதிகரித்த நிலையில் இப்பொருள்களால் யவையும் கோதுமையும் பாவனை செய்தல், பானம் முதலியவற்றை அமைத்துக் கொள்ளுதல் | 9 | 407 |
| உணவு வகை | 10 | 407 |
| திரிபலா கஷாயத்தில் ஊறவைத்த யவைச் சத்துமா உபயோகம் | 15 | 408 |
| கபப்ரமிய நோயாளி தேக்கு முதலியவற்றின் புஷ்ப சூர்ணத்தை உபயோகித்தல் | 16 | 409 |
| நெருஞ்சில் முதலியவற்றின் கல்கம் சேர்த்து தோஷத்திற்கு ஏற்ப நெய்ப்புப்பொருள் பக்குவம் செய்து உபயோகித்தல் | 17 | 409 |
| தான்வந்த்ர கிருதம் | 19 | 410 |
| லோத்ராஸவம் | 25 | 411 |
| அயஸ்க்ருதி | 29 | 412 |
| வறட்சியான பொருள்களால் உடம்பை அழுத்தித் தேய்த்தல் முதலியன | 33 | 414 |
| வேங்கை வைரக்கட்டையின் கஷாயத்தில் பாவனை செய்த சிலாஜது உபயோகம் | 34 | 414 |
| வசதியற்றவர் முனி வாழ்க்கையை மேற்கொள்ளுதல், நடத்தல் | 36 | 414 |
| இளைத்த பிரமிய நோயாளியை கொழுப்பையும் மூத்ரத்தையும் அதிகரிக்கச் செய்யாத மருந்து முதலியவற்றால் பருக்கச் செய்தல் | 38 | 415 |
| பிரமியக் கட்டிகளுக்கு சிகித்ஸை | 38 | 415 |

| | | |
|---|---|---|
| கட்டிகள் பழுக்காத நிலையில் வீக்கத்தின் சிகித்ஸை | 38 | 415 |
| பழுத்த நிலையில் விரண சிகித்ஸை | 39 | 415 |
| முற்குறிகள் கண்டநிலையில் பால்மரப் பட்டைக் கஷாயம் உபயோகித்தல் முதலியன | 39 | 415 |
| ஏலாதிகணச் சரக்குகள் சேர்த்து தைலம் காய்ச்சி விரணத்தை ஆற்றுதல் | 40 | 415 |
| ஆரக்வதாகணச் சரக்குகளின் கஷாயத்தால் தேய்த்து குளித்தல் | 41 | 415 |
| அஸனாதிகணச் சரக்குகளின் கஷாயத்தால் உடல் நனைத்தல் | 41 | 416 |
| வத்ஸகாதிகணச் சரக்குகளின் கஷாயத்தை பருகுவதற்கும் உணவு பக்குவம் செய்யவும் உபயோகித்தல் | 41 | 416 |
| வட்டத்திருப்பி முதலியவற்றின் சூர்ணம் உபயோகம் | 42 | 416 |
| நவாயஸ சூர்ண உபயோகம் | 43 | 416 |
| சிலாஜது உபயோகத்தின் சிறப்பு | 43 | 417 |


## அத்தியாயம் -13


| | | |
|---|---|---|
| ஆமநிலையில் எல்லா வித்ருதிக் கட்டிகளிலும் வீக்க சிகித்ஸையும் ரத்தவெளியேற்றமும் செய்வித்தல் | 1 | 418 |
| பக்குவமான நிலையில் விரண சிகித்ஸை | 1 | 418 |

வாதவித்ருதி விரணத்தில் பஞ்சமூல நீரால் கழுவுதல் 2 418

பத்ரதார்வாதிகணச் சரக்குகள் முதலியவற்றின் கல்கத்தால் பூசுதல் 2 418

விரேசனப் பொருள் சேர்த்த திருவிருதத்தால் சோதனமும் விதாரிகணச் சரக்குகள் சேர்த்த திருவிருதத்தால் ஆறச் செய்தலும் 3 418

## பித்த வித்ருதி விரணத்திற்கு சிகித்ஸை

பால்மரக் கஷாயத்தால் அலம்பி அதிமதுரம் முதலியவற்றின் கல்கத்தைப் பூசுதல் 4 419

மஞ்சட்டி முதலியவற்றால் பக்குவம் செய்த கிருதத்தால் ஆற்றுதல் 4 419

அல்லது நியக்ரோததாதிகணச் சரக்குகளின் துளிர் முதலியவற்றால் பக்குவம் செய்த கிருதத்தால் ஆற்றுதல் 5 419

## கப வித்ருதி விரணத்திற்கு சிகித்ஸை

ஆரக்வாதிகணச் சரக்குகளின் கஷாயத்தால் அலம்பி ஸத்துமா முதலியவற்றால் பூசுதல் 5 420

கொள் முதலியவற்றைச் சேர்த்து காய்ச்சிய தைலத்தால் ஆற்றுதல் 6 420

ரத்தம், வெளிக்காரணம் ஆகியவற்றால் உண்டான வித்ருதியில் பித்தவித்ருதி சிகித்ஸை செய்தல், உட்புறக்கட்டிக்கு சிகித்ஸை, பழுக்காத நிலையில் கஷாயபானம் 8 421

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கிருதபானம் | 9 | 421 |
| நிரூஹ பஸ்தியும் அனுவாஸன பஸ்தியும் செய்வித்தல் | 9 | 421 |
| பக்குவமடையாத வித்ருதி நீங்க செம்முருங் கையை பானம் முதலியவற்றில் உபயோகித்தல் | 10 | 422 |
| திராயந்த்யாதி கஷாயம் | 11 | 422 |
| திராயந்த்யாதி கிருதம் | 13 | 423 |
| திராக்ஷை முதலியவை சேர்த்து தயாரித்த கிருத உபயோகம் | 16 | 423 |
| ரத்தத்தை வெளியேற்றுதல் | 18 | 424 |
| கோஷ்டத்திலுண்டான வித்ருதி கட்டிக்கு சிகித்ஸை | 18 | 424 |
| வெளிப்புறச் கட்டிகள் பாகமடையும் பொழுது மாவுப்பண்டத்தை வைத்து கட்டுதல் | 18 | 424 |
| பாகமடைந்ததை கோஷ்டத்தில் வலியின்மை முதலியவற்றால் அறிந்து விரண சிகித்ஸை செய்தல் | 19 | 424 |
| இவ்வாறே உட்புறம் உண்டாகும் கட்டிகள் பழுத்த நிலையையும் அறிதல் | 20 | 425 |
| உட்புறக்கட்டி பழுத்து தோஷம் வெளியேறும் நிலையில் ஏற்ற உணவை உட்கொண்டு உபத்ரவத்திற்கு மட்டும் சிகித்ஸை செய்து கொள்ளுதல் | 21 | 425 |
| சீழ் உரிய முறையில் வெளியேறாவிடில் சிகித்ஸை | 22 | 425 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| 10 நாட்களுக்குப்பின் பலத்திற்கேற்ப சோதனமும், சோதனத்திற்குப்பின் திக்தக்ருத உபயோகமும் | 24 | 426 |
| தோஷங்களுக்குக்கேற்ப குன்ம சிகித்ஸையும் செய்வித்தல் | 25 | 426 |
| எல்லா வித்ருதிகளிலும் எல்லா நிலைகளிலும் கஷாயங்களுடன் குக்கில் உபயோகித்தல் | 25 | 427 |
| அவ்வாறே சிலாஜதுவையும் உபயோகித்தல் | 26 | 427 |
| கட்டி பாகமடைவதை கவனமாகத் தவிர்த்தல் | 26 | 427 |
| வித்ருதி பெயர் விளக்கம் | 27 | 427 |
| வித்ருதியுடன் பிரமேக நோயுமிருப்பின், பிரமேக சிகித்ஸையையும் செய்வித்தல் | 27 | 427 |
| (ஸ்தன வித்ருதி) மார்பக வித்ருதி ஸ்தன வித்ருதியில் கட்டுப்போடுதல் நீங்கலாக விரண சிகித்ஸை செய்தல் | 28 | 428 |
| ஸ்தன வித்ருதியை பிளக்கும்பொழுது காப்பாற்றப்பட வேண்டியவை | 28 | 428 |
| எல்லா நிலைகளிலும் பாலை வெளியேற்றுதல் | 29 | 428 |
| வாயுவால் உண்டான அண்டவிருத்தியில் நெய்ப்பு உண்டாக்கியபின் விரேசனம் செய்வித்தல் | 29 | 428 |
| சோதனத்துக்குப்பின் நிரூஹ பஸ்தியும் அனுவாஸனமும் | 31 | 429 |
| பக்குவமான நிலையில் அண்ட விருத்தியைக் கீறியபின் விரண சிகித்ஸை | 31 | 429 |

| | | |
|---|---|---|
| பித்தம் ரத்தம் இவற்றாலான அண்ட விருத்திக்கு சிகித்ஸை | 32 | 429 |
| கபத்தாலுண்டான அண்டவிருத்திக்கு சிகித்ஸை | 33 | 430 |
| கொழுப்பாலுண்டான அண்ட விருத்திக்கு சிகித்ஸை | 35 | 431 |
| சிறுநீரால் உண்டான அண்ட விருத்திக்கு சிகித்ஸை | 39 | 431 |
| குடல் இறக்கம் காரணமாக உண்டான அண்டவிருத்திக்கு சிகித்ஸை | 40 | 432 |
| சுகுமார கிருதம் | 41 | 432 |
| நெய்ப்புப் பொருள் பருகுதல் முதலியவற்றால் விருத்தி நீங்காவிடில் சூடு இடுதல் | 48 | 434 |
| கட்டைவிரல் தசைநாரை வெட்டியபின் சூடுஇடுதல் | 49 | 434 |
| மற்ற ஆசாரியர்களின் கருத்து | 50 | 435 |
| வாத-கப குன்மத்திலும், மண்ணீரல் வீக்கத்திலும் இவ்வாறே சூடு இடல் | 51 | 435 |
| விச்வாசி நோயில் சூடு இட வேண்டிய இடம் | 51 | 435 |

## அத்தியாயம் - 14

| | | |
|---|---|---|
| வாதகுன்ம சிகித்ஸை | 1 | 436 |
| இடத்திற்கேற்ப சிகித்ஸை | 4 | 437 |
| குன்ம நோயில் பஸ்தியின் சிறப்பு | 7 | 438 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 14 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ஹிங்க்வாதி கிருதம் | 9 | 438 |
| ஹபுஷாதி கிருதம் | 11 | 439 |
| தாதிகக் கிருதம் | 13 | 439 |
| திரிகடு முதலியவை சேர்த்து நெய்பக்குவம் செய்து உபயோகித்தல் | 21 | 441 |
| லசுனாதி கிருதம் | 22 | 442 |
| ஷட்பல கிருதம் | 26 | 443 |
| வாதகுன்மத்தால் வாந்தி செய்வித்தல் | 27 | 443 |
| சூலை முதலியவை ஏற்படின் முற்கூறிய கிருதயோக சரக்குகளின் கஷாயம் முதலியவை செய்து உட்கொள்ளல் | 28 | 444 |
| மேற்படி சரக்குகளின் சூர்ணங்களை வடகம் செய்து கப-வாத குன்மங்களில் உபயோகித்தல் | 30 | 444 |
| ஹிங்குவசாதி சூர்ணம் | 31 | 444 |
| வைச்வாநர சூர்ணம் | 34 | 445 |
| ஹிங்க்வஷ்டக சூர்ணம் | 35 | 446 |
| சார்தூல சூர்ணம் | 37 | 447 |
| மணிப்புங்கு இலை முதலியவற்றின் பிரயோகம் | 38 | 447 |
| காயத்துடன் மூன்று பங்கு இந்துப்பு முதலியவை கலந்து உபயோகித்தல் | 39 | 448 |
| துருஞ்சிச்சாறு முதலியவற்றை சுரைத் தெளிவுடன் பருகுதல் | 40 | 448 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 14 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| சுக்கு முதலியவற்றின் சூர்ண உபயோகம் | 41 | 448 |
| வாதகுன்மத்தில் தொடர் தோஷத்திற்கேற்ப ஆமணக்கெண்ணெயை உபயோகித்தல் | 43 | 449 |
| பித்தத்தால் எரிச்சல் உண்டாயின் விரேசனம் செய்வித்தல் | 44 | 449 |
| எரிச்சல் தொடரின், ரத்த வெளியேற்றம் | 45 | 449 |
| வாதகுன்மம் முதலியவற்றில் உள்ளியை பாலிலிட்டு பக்குவம் செய்து உபயோகித்தல் | 45 | 449 |
| தைலம் சுரைத் தெளிவு முதலியவற்றைக் கலந்து பருகுதல் | 47 | 450 |
| கொடிவேலி முதலியவற்றின் கஷாயம் | 48 | 450 |
| புஷ்கரமூலம் முதலியவற்றின் கஷாயம் | 49 | 451 |
| சிற்றாமுட்டி முதலியவற்றின் கஷாயம் | 50 | 451 |
| பஞ்சமூலம் சேர்த்துக் காய்ச்சிய பாலுடன் சிலாஜது உபயோகம் | 51 | 451 |
| உதாவர்த்தத்தில் யவைக்கஞ்சி உபயோகம் | 52 | 451 |
| மலத்தடை முதலியவை ஏற்படின் உணவு | 53 | 452 |
| மலம் அதிகரிக்கப் பெற்றவருக்கு அவுரி முதலியன | 54 | 452 |
| (நீலினீ கிருதம்) அவுரி நெய் | 55 | 452 |
| வாதகுன்ம நோயாளிக்கு கோழி மாம்ஸம் முதலியவை ஏற்றவை | 59 | 453 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 14 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| உணவும் - பானமும் | 60 | 453 |
| பித்த குன்மத்தில் விரேசனம் | 61 | 454 |
| வறட்சியால் உண்டான பித்த குன்மத்தில் தித்தக கிருதம்- வாஸா கிருதத்தால் சமனம் செய்தல் | 62 | 454 |
| திருணபஞ்சமூல கஷாயம், அல்லது ஜீவனீய கணம்சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் முதலியன | 63 | 454 |
| பித்த குன்மத்தில் ஆபத்தான நிலை ஏற்படின் சோதனம் செய்வித்தல் | 64 | 455 |
| நெல்லிக்காய்ச்சாறு முதலியவை சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 65 | 455 |
| பித்த-வித்ருதியில் கூறப்பட்ட கிருதங்களையும் தில்வக கிருதத்தையும் பிரயோகித்தல் | 66 | 455 |
| திராட்சை முதலியவற்றின் சூர்ணம் | 66 | 456 |
| துராய்ப்பூண்டை நீரிலிட்டு பக்குவம் செய்து உபயோகித்தல் | 67 | 456 |
| பித்த-குன்மத்தில் எரிச்சல் காணப்படின், குளிர்ச்சியான கிருதங்களால் அப்யங்கம் முதலியன | 69 | 457 |
| பாகமடைவதன் முற்குறிகள் ஏற்படின் ரத்தத்தை வெளியேற்றுதல் | 70 | 457 |
| தோஷ வெளியேற்றத்துக்குப்பின் மாம்ஸ ரஸத்தால் திருப்தி உண்டாக்கல் | 72 | 458 |

| | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| குன்மம் பாகமடைய ஆரம்பித்தால் பித்தவித்ருதி சிகித்ஸை செய்தல் | 73 | 458 |
| பித்தகுன்மத்தில் உணவும் - பானமும் | 74 | 458 |
| கபகுன்மத்தில் வாந்தி செய்வித்தல் முதலியன | 76 | 459 |
| ஆழத்திலிருப்பதுபோன்ற நிலைகளில் வியர்ப்பித்து சமனம் செய்தல் | 77 | 459 |
| கப குன்மத்தில் திரிகடு முதலியவை கலந்து நெய்பக்குவம் செய்து உபயோகித்தல் | 79 | 460 |
| பல்லாதக கிருதம் - சேங்கொட்டை நெய் | 80 | 460 |
| நெய் பருகியபின் வியர்ப்பித்தல் | 83 | 461 |
| எல்லா குன்மங்களிலும் நெய்ப்பு உண்டாக்குதல் வியர்ப்பித்தல் ஆகியவற்றிற்கு பின்னரே மற்ற சிகித்ஸை | 84 | 461 |
| குடயந்த்ரத்தை உபயோகித்து குன்மத்தை பிடித்துக்கொண்டு பிளத்தல் | 85 | 461 |
| கபகுன்மத்தில் எள் முதலியவற்றின் கல்க்கத்தை பூசுவதுடன் வியர்ப்பித்தல் | 87 | 462 |
| மிச்ரக ஸ்னேஹம் | 89 | 462 |
| பருக ஏற்றமற்ற கிருதங்கள் | 91 | 463 |
| தந்தீ ஹரீதகி லேஹம் | 92 | 463 |
| சிவதைச் சூரணத்தை கள்ளிப்பாலில் பாவனை செய்து உபயோகித்தல் | 98 | 465 |
| கோஷ்டம் முதலியவற்றை பசு நீருடன் பருகுதல் | 99 | 465 |

| | | |
|---|---|---|
| குன்மத்தைப் போக்கும் நிரூஹ பஸ்திகளை பிரயோகித்தல் | 100 | 465 |
| நிலமைக்கேற்ப க்ஷாரம், அரிஷ்டம், சூடு இடல் | 100 | 465 |
| மூலம் முதலியவற்றிற்கு கூறப்பட்ட க்ஷாரத்தை உபயோகித்தல் | 102 | 466 |
| க்ஷாராகதம் | 103 | 466 |
| க்ஷாரத்தின் பெருமை | 107 | 467 |
| அக்னிமந்தமும் அருசியும் ஏற்படின், ஆஸவாரிஷ்டப் பிரயோகம் | 108 | 468 |
| உணவு - பானம் | 109 | 468 |
| திப்பிலி முதலியன கலந்து சுரையை உபயோகித்தல் முதலியன | 113 | 469 |
| கபகுன்மம் மற்ற சிகித்ஸைகளால் நீங்கா விடில் சுடுதல் | 114 | 469 |
| சுடவேண்டிய முறையும் அடுத்து செய்ய வேண்டியதும் | 116 | 470 |
| ஆமங்கலந்திருப்பின் சிகித்ஸை முறை | 118 | 470 |
| ரத்த குன்மம் | 119 | 471 |
| ரத்த குன்மத்திலும் மாதவிடாய்க் குறைவிலும் எள் கஷாயத்தை நெய் முதலியவை கலந்து உபயோகித்தல் | 120 | 471 |
| குன்ம வேதனை நீங்க சிறுதேக்கு முதலிய வற்றின் சூரணம் | 121 | 471 |

| | | |
|---|---|---|
| புரசக்ஷார நீர் முதலியவை சேர்த்து நெய் பக்குவம் செய்து பருக குன்மம் தளர்ச்சியடையும் | 122 | 472 |
| மேற்பட்டவாறு சிகித்ஸை செய்தும் ரத்தகுன்மம் உடையாவிடில், யோனி மார்க்க சோதனம் செய்தல் | 123 | 472 |
| யோனிமார்க்கம் சுத்தியடைய, யோனியில் வைக்க வேண்டியவை முதலியன | 124 | 472 |
| ரத்தபெருக்கு உண்டாகாவிடில் குன்மத்தைக் கீறவேண்டும் | 127 | 473 |
| ரத்தம் வெளியேறும் நிலையில் வாளா விருத்தல், மாம்ஸ உணவு | 128 | 473 |
| ரத்தம் அதிகம் வெளியேறினால் ரத்த பித்த சிகித்ஸை செய்தல் | 129 | 474 |
| வாயுவால் வலி ஏற்படின் வாயுவைப் போக்கும் சிகித்ஸை செய்தல் | 129 | 474 |
| பொருமல் முதலியவற்றில் உரிய உதாவர்த்த சிகித்ஸை முதலியவற்றைச் செய்தல் | 129 | 474 |

## அத்தியாயம் - 15

| | | |
|---|---|---|
| உதரநோயாளிக்கு எப்பொழுதும் விரேசனம் செய்வித்தலின் அவசியம் | 1 | 475 |
| விரேசனங்கள் | 2 | 475 |
| கிருதபானம் | 4 | 476 |
| கிருதயோகங்கள் | 5 | 477 |

அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 15 | ஸ்லோ. | பக்.

| | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கிருதபானத்தால் உடலில் நெய்ப்பும் பலமும் உண்டான நிலையில் விரேசனங்களை உபயோகித்தல் | 9 | 478 |
| படோலாதி சூர்ணம் | 10 | 478 |
| பேய்க்கொம்மட்டி முதலியவற்றின் சூர்ணம் | 13 | 479 |
| நாராயண சூர்ணம் | 14 | 479 |
| ஹபுஷாதி சூர்ணம் | 22 | 481 |
| அவுரி முதலியவற்றின் சூரணம் | 26 | 482 |
| விரேசனத்தால் இளைத்தவர், இடையிடையே ஒட்டகப்பால் முதலியவற்றுள் ஒன்றைப் பருகுதல் | 27 | 482 |
| அபாயமான நோயிலும் இளைத்தவருக்கும் விரேசனத்திற்காக நெய்ப்புப் பொருள் கொடுத்தல் | 27 | 483 |
| கடுக்காய்த் தூள் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் முதலியன | 28 | 483 |
| அனுபானமாக கஞ்சி முதலியன | 34 | 485 |
| கிருதம் ஜீரணித்த நிலையில் பருக ஏற்றவை | 35 | 485 |
| 3 நாட்கள் வறட்சியாக இருந்து, மீண்டும் கிருதபானம் செய்தல் | 36 | 485 |
| பொருமலில் உகாகல்கம் சேர்த்து காய்ச்சிய நெய் | 38 | 485 |
| தோஷம் நீங்கியபின் எளிதில் ஜீரணிக்கும் உணவு கொள்ளல் | 39 | 486 |

அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 15 ஸ்லோ. பக்.

எஞ்சிய தோஷங்கள் நீங்க பாவனஹரீதகீ, கள்ளிப்பாலில் ஊறவைத்த திப்பிலி, வர்த்தமான பிப்பிலி உபயோகம் 39 486

கள்ளிப்பால் சேர்த்து பக்குவம் செய்த நெய்யுடன் உணவு கொள்ளல் 44 487

கள்ளிப்பாலில் பாவனை செய்து கடுக்காய் திப்பிலி உத்காரிகை 44 487

வாயுவால் பக்கவலி முதலியவை ஏற்படின் சிகித்ஸை 45 487

தோஷத்தால் ஆவரணம் ஏற்பட்ட நிலையில் ஆமணக்கு எண்ணெய் பருகுதல் 47 488

உதர நோயில் மேல் பூச்சு 48 489

(ஸேகம்) நனைத்தல் 49 489

வயிறு வாடிய நிலையில் வஸ்திரத்தால் கட்டுதல் 50 489

நன்கு விரேசனமான பின்பும் வயிறு பருத்தால் கஷாய பஸ்தி செய்வித்தல் 51 490

ஆவரணம் செய்யப்பட்ட நிலையில் பொருமல் உண்டாயின் தீக்ஷ்ண பஸ்தி செய்வித்தல் 52 490

வாதோதர சிகித்ஸை 53 490

கஞ்சி தொடங்கிய உணவு வரிசைக்குப்பின் பலம் உண்டாக பால் பருகுதலும், படிப்படியாக நிறுத்தலும் 55 491

உதாவர்த்தம் உள்ள நிலையில் சிகித்ஸை 56 491

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 15 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வறட்சியுள்ளவர் முதலியோருக்கு அனுவாஸனம் செய்தல் | 57 | 492 |
| விரேசனம் செய்யத்தகாத நிலையில் பஸ்தி முதலியவை | 59 | 492 |
| பித்த உதர சிகித்ஸை | 59 | 493 |
| பித்த உதர நோயாளி பலங்குன்றியவராயின் அனுவாசனத்துக்குப் பின், பால் கலந்த பஸ்தி பிரயோகித்தல் | 61 | 493 |
| அக்னிபலம் ஏற்பட்டதும் நெய்ப்பு உண்டாக்கிய பின் விரேசனம் | 62 | 494 |
| கபத்துடன் கூடிய பித்த உதர நோய்க்கு சிகித்ஸை | 63 | 494 |
| பால் சேர்த்து பக்குவம் செய்த அன்னத்தை வயிற்றின் மீது கட்டுதல் | 64 | 494 |
| பித்த உதர நோயில் மீண்டும் பால், மீண்டும் பஸ்தி முதலிய வரிசை | 65 | 495 |
| கப உதர சிகித்ஸை | 66 | 495 |
| முஷ்ககாதி கஷாயம் சேர்த்து நிரூஹம் | 67 | 495 |
| முஷ்ககாதி சேர்த்து பக்குவம் செய்த ஸ்னேஹத்தால் அனுவாஸனம் | 68 | 496 |
| இறுக்கமும், அசைவின்மையும் காணப்படின், பழக்கமுள்ளவராயின் அரிஷ்டம் முதலியவற்றைக் கொடுத்தல் | 69 | 496 |
| ஹிங்க்வாதி க்ஷாரம் | 70 | 496 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 15 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பலங்குன்றியவருக்கு கப உதர நோயில் அரிஷ்டம் முதலியவற்றுள் சிகித்ஸை | 74 | 498 |
| கடுகு கல்கம் முதலியவற்றை வயிற்றில் கட்டுதலும், வியர்ப்பித்தலும் | 75 | 498 |
| ஸன்னிபாத உதரசிகித்ஸை | 76 | 498 |
| நாகதந்தி விதை எண்ணெய் முதலியன பருக ஏற்றவை | 77 | 498 |
| சிகித்ஸையைக் கடந்த நிலையில் எல்லா உதர நோயிலும் ஸன்னிபாத உதரத்திலும் உறவினர் அனுமதி பெற்றபின் செய்வது | 77 | 499 |
| தோஷம் நீங்கிய பின் ஸ்னானம் செய்வித்தல் உணவு கட்டுப்பாடு முதலியன | 81 | 500 |
| தோஷம் நீங்கியபின் ஒட்டகப் பால் பருகுதல் | 84 | 500 |
| மண்ணீரல் உதர சிகித்ஸை (ஸ்னேஹ சிகித்ஸை முதலியவற்றையடுத்து, இடது புஜத்தில் ஸிரையைக் குத்துதல்) | 85 | 501 |
| சமுத்ரக் கிளிஞ்சலின் கூரை (பொடி) உபயோகம் | 86 | 501 |
| ஆவில் புங்கின் க்ஷார உபயோகம் | 87 | 502 |
| இந்துப்பு முதலியவற்றுள் முருங்கைக் கஷாயம் பருகுதல் முதலியன | 87 | 502 |
| திப்பிலி முதலியவற்றின் சூரணம் | 88 | 502 |
| வாய்விளங்கம் முதலியவற்றை எரித்து பாலுடன் பருகுதல் | 89 | 503 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 15 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| இலந்தை இலையை தைலம் விட்டரைத்து வயிற்றில் கட்டியபின் உலக்கையால் அமுக்குதல் | 90 | 503 |
| செம்மரத்தின் இளங்கிளையை நீர் அல்லது பசு நீரில் ஊறவைத்து பருகுதல் | 91 | 503 |
| செம்மரப்பட்டை முதலியவை சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 93 | 504 |
| வாத-கப மண்ணீரலில் வாழை முதலிய வற்றின் க்ஷார உபயோகம் | 95 | 505 |
| முற்கூறிய சிகித்ஸையால் மண்ணீரலில் உதரம் நீங்காவிடில், குன்மத்தில் கூறியவாறு சூடு இடுதல் | 96 | 505 |
| பித்ததோஷம் அதிகரித்த மண்ணீரல் உதரத்தில் ஜீவனீய கிருதம் முதலியவை ஏற்றவை | 97 | 506 |
| கல்லீரல் விருத்தியால் உண்டான உதர நோய்க்கு சிகித்ஸை | 98 | 506 |
| (பித்தோதர சிகித்ஸை) மல வழித்தடை உதர சிகித்ஸை | 99 | 506 |
| குடல் துளைக்கப்பட்டதால் உண்டான உதர நோய் சிகித்ஸை | 101 | 507 |
| ஜலோதர சிகித்ஸை (பசுநீர், க்ஷாரம் ஆகியவை கலந்த மருந்துகள் உபயோகம்) | 102 | 508 |
| ஆட்டுப் புழுக்கையின் க்ஷாரத்தை பக்குவம் செய்து பிரயோகித்தல் | 103 | 508 |

| | | |
|---|---|---|
| மலவழித்தடை முதலியவை ஔஷதங்களால் நீங்காவிடில் உறவினர் முதலியோரின் கோரிக்கையின்பேரில் சஸ்திர பிரயோகம் | 107 | 509 |
| மலவழித்தடை உதரம், க்ஷதோதரம் ஆகிய வற்றைப் பிளக்கும் முறை | 108 | 509 |
| சித்ரோதரத்தில் பிளக்கும் முறை | 110 | 510 |
| பிளந்தபின் செய்யவேண்டியவை | 111 | 510 |
| ஜலோதர நோயில் குத்தவேண்டிய முறையும் அடுத்துச் செய்ய வேண்டியவையும் | 113 | 511 |
| அடுத்த 1 வருடத்திற்கு உணவில் கட்டுப்பாடு முதலியன | 118 | 512 |
| எல்லா உதரங்களிலும் வாயு முதலான தோஷங்களுக்கு ஏற்ற சிகித்ஸை செய்தல் | 120 | 513 |
| ஜாடராக்னீயைத் தூண்டக்கூடிய உணவு ஏற்றது | 121 | 513 |
| அறுபதாங்குறுவை அரிசியின் பால் கஞ்சி பருகியபின், கருப்பஞ்சாற்றைப் பருக; தோஷங்கள் உரிய இடங்களை அடையும் | 123 | 514 |
| உதர நோயாளி நீக்கவேண்டியவை | 125 | 514 |
| உதர நோயில் மோர் பருகும் முறை | 126 | 515 |
| மோரின் தன்மை | 130 | 516 |
| பால் பிரயோகமும் பாலின் சிறுப்பும் | 131 | 516 |

## அத்தியாயம் -16


| | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பாண்டு நோயில் முதலில் பருக ஏற்ற கிருதங்கள் | 1 | 517 |
| மாதுளை, மல்லி முதலியவை சேர்த்து தயாரித்த கிருதம் | 2 | 518 |
| நெய்ப்பு உண்டானபின் வாந்தி செய்வித்தல் முதலியன | 5 | 518 |
| நீர்வாள கஷாயத்தில் குமிழ் சேர்த்து உபயோகம் முதலியன | 6 | 519 |
| கடுக்காயை பசுநீர் விட்டரைத்து உபயோகித்தல் முதலியன | 7 | 519 |
| எருமைக்கள்ளி முதலியவற்றை வேக வைத்து உபயோகித்தல் | 7 | 519 |
| அயப்பொடி உபயோகமும் அடுத்த செய்ய வேண்டியவையும் | 9 | 519 |
| பேய்த்தும்மட்டி முதலியவற்றின் பூர்ண உபயோகம் | 10 | 520 |
| ஆடாதோடை முதலியவற்றில் கஷாயம் பருகுதல் | 13 | 520 |
| நவாயஸம் | 14 | 521 |
| வெல்லம், சுக்கு முதலியவற்றின் வடகம் | 15 | 521 |
| மண்டூர வடகம் | 16 | 521 |
| யோகராஜ வடகம் | 20 | 522 |

| | | |
|---|---|---|
| வஜ்ரவடகம் - சிலாஜது வடகம் | 23 | 524 |
| திராக்ஷா லேஹம் | 29 | 526 |
| பாண்டு நோயாளிக்கு பானம், உணவு தயாரிக்க சிறுபஞ்சமூலம் சேர்த்து காய்ச்சிய நீர் உபயோகம் | 32 | 527 |
| காமாலை நோயாளிக்கு பானம், உணவு தயாரிக்க திராக்ஷைச்சாறு, நெல்லிச்சாறு ஏற்றவை | 32 | 527 |
| தனித்தனி தோஷத்தால் உண்டான பாண்டு நோய்க்கு சிகித்ஸை செய்யவேண்டிய முறை | 34 | 527 |
| மண் உண்டதால் ஏற்பட்ட பாண்டு நோயில் மண்ணை வெளியேற்றியபின் நெய் பருகச் செய்தல் | 35 | 528 |
| மண் தின்றதால் உண்டான எல்லா நோய் களிலும் திரிகடு முதலியவை சேர்த்து பக்குவம் செய்த நெய் | 36 | 528 |
| மேற்படி நோயில் சிறுநாகப்பூ முதலியவை சேர்த்துக் காய்ச்சிய கிருதம் | 38 | 529 |
| மண் தின்பதில் வெறுப்பு உண்டாக்க | 38 | 529 |
| மண்ணின் பிரிவிற்கேற்ப கோபமடைந்த தோஷத்திற்கு தக்க மருந்து பிரயோகம் | 39 | 529 |
| காமாலையில் பித்தத்தை போக்கக் கூடியதும், பாண்டுவுக்கு விரதமில்லாததுமான மருந்து பிரயோகித்தல் | 40 | 530 |
| பத்யா கிருதம் | 40 | 530 |

| | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| சரக்கொன்றையுடன் திரிகடு கலந்து பாலுடன் பருகுதல் | 41 | 530 |
| நாகதந்தீ கல்க்கம் | 42 | 531 |
| திருவிருதக் சூரணம் | 43 | 531 |
| திரிபலா முதலியவற்றுள் ஒன்றின் கஷாயம் | 43 | 531 |
| காமாலைக்கு அஞ்சனம் | 44 | 532 |
| காமாலை நோயாளி எள் கல்க நிறத்தில் மலம் வெளியேற்றும் நிலையில் | 45 | 532 |
| காமாலை நோயின் நிதானம் விளக்கம் சிகித்ஸை முதலியன | 46 | 532 |
| கும்பகாமாலைக்கு சிகித்ஸை | 52 | 534 |
| ஹலீமக சிகித்ஸை | 53 | 534 |
| பாண்டு நோயில் வீக்கத்தின் சிகித்ஸையும் ஏற்றதும் | 57 | 535 |


## அத்தியாயம் -17


| | | |
|---|---|---|
| எல்லா வீக்கங்களிலும் உடலை இளைக்கச் செய்து கொள்ளும், எளிதில் ஜீரணிக்கும் உணவு கொள்ளலும் | 1 | 536 |
| சுக்கு முதலியவற்றின் சூரண உபயோகம் | 2 | 536 |
| தோஷம் அதிகரிக்கப் பெற்றவருக்கு நவாயஸம் | 3 | 536 |
| உடல் சுத்தியடைய பசுநீருடன் கடுக்காய் உபயோகம் | 3 | 536 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 17 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| அக்னி மந்தித்து பேதியாகும் நிலையில் சிகித்ஸை (ஸௌவர்ச்சல உப்பு முதலியவற்றை மோருடன் பருகுதல் முதலியன) | 4 | 538 |
| இஞ்சியை சம அளவு வெல்லத்துடன் உட்கொள்ளல் முதலியவை | 6 | 538 |
| இஞ்சிச்சாறு முதலியன கலந்து நெய் பக்குவம் செய்து பருக வீக்கம் நீங்கும் | 8 | 539 |
| வீக்கம் உள்ளவர்க்கு ஆமதோஷம் நீங்கிய நிலையில் மலத்தடை கொண்டிருப்பின் திரிகடு முதலியவை சேர்த்து பால் பாயஸம் செய்து பருகுதல் | 9 | 540 |
| ஓமம் முதலியவற்றின் கஷாயம் சேர்த்து நெய் பக்குவம் செய்து பருக; வீக்கம் முதலியன நீங்கும் | 11 | 540 |
| கொடிவேலிச் சூரணம் கலந்து பாலைக் காய்ச்சி நெய் எடுத்து உபயோகித்தல் | 13 | 541 |
| காலம் முதலியவற்றிற்கேற்ப தான்வந்த்ர கிருதம் முதலியவற்றை உட்கொள்ளல் | 13 | 541 |
| தஸமூலஹரீதகீ | 14 | 542 |
| உணவும் - பானமும் | 17 | 543 |
| ஜீரகம் முதலியவை சேர்த்து கஞ்சி தயாரித்து உத்தியாக பருகுதல், வீக்கம் முதலியவற்றில் ஏற்றது | 20 | 544 |
| வட்டத்திருப்பி அல்லது பஞ்சகோலம் கலந்த கஞ்சி முற்கூறிய குணம் உள்ளது | 22 | 544 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 17 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கடற்பாசி முதலியவற்றால் அப்யங்கத்திற்கு தைலம் பூச்சு முதலியன | 22 | 545 |
| வேம்பு முதலியவை சேர்த்து காய்ச்சிய நீரால் ஸ்னானம் | 25 | 545 |
| தனி உறுப்பு சம்பந்தப்பட்ட வீக்கத்திற்கு சிகித்ஸை | 25 | 546 |
| வாயுவால் உண்டான வீக்கத்திற்கு சிகித்ஸை | 28 | 546 |
| பித்தத்தால் உண்டான வீக்கத்திற்கு சிகித்ஸை | 30 | 547 |
| கப வீக்கத்திற்கு சிகித்ஸை | 33 | 549 |
| ஸ்ரோதஸ் தடை முதலியவை ஏற்படின், க்ஷாரம் முதலியவற்றை உபயோகித்தல் | 34 | 549 |
| திப்பிலி முதலியவற்றை கல்கமாக்கி பூசி மர்த்தித்தல் | 35 | 549 |
| கோஷ்டம் முதலியவை சேர்த்து காய்ச்சிய நீரால் ஸ்னானம் செய்தல் | 36 | 549 |
| சண்டக்கிழங்கு அகில் ஆகியவற்றைப் பூசுதல் | 36 | 549 |
| தனி உறுப்பு வீக்கத்திற்கு சிகித்ஸை | 37 | 550 |
| அருகிலுள்ள மார்க்கத்தை அனுசரித்து தோஷங்களுக்கேற்ப சோதனமும் ரத்த வெளியேற்றமும் | 38 | 550 |
| தோஷக்கூட்டால் உண்டான வீக்கத்தில் தோஷத்தின் பலத்திற்கேற்ப சிகித்ஸை | 38 | 550 |
| ஸன்னிபாத வீக்கத்திற்கு சிகித்ஸை | 39 | 551 |

| | | |
|---|---|---|
| கடுக்காய் முதலியவற்றை பசு நீருடன் பருக வீக்கம் முதலியவை நீங்கும் | 40 | 551 |
| வெளிக்காரணத்தால் உண்டான வீக்கத்தில் ரத்த வெளியேற்றம் முதலியன | 41 | 551 |
| விஷத்தால் உண்டான வீக்கத்தில் விஷ சிகித்ஸை செய்தல் | 41 | 551 |
| வீக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை | 42 | 552 |

## அத்தியாயம் - 18

| | | |
|---|---|---|
| விஸர்ப்ப நோயில் முதலில் உபவாஸம் முதலியன ஏற்றவை (நெய்ப்பு சிகித்ஸை கூடாது) | 1 | 553 |
| வாந்தி செய்வித்தல் | 2 | 553 |
| விரேசனம் செய்வித்தல் | 3 | 554 |
| சமன ஔஷதம் | 4 | 554 |
| விஸர்ப்ப நோயாளிக்கு விடாய் ஏற்படின் பருக ஏற்றவை | 6 | 555 |
| ரத்த வெளியேற்றம் | 8 | 555 |
| நெய் உபயோகம் | 9 | 556 |
| உட்புறம் சுத்தமாயிருக்கையில் சருமம் முதலியவற்றில் தோஷம் தங்கிய நிலையில் வெளிப்புற சிகித்ஸை | 10 | 556 |
| வாத விஸர்ப்பத்துக்கு லேபம் | 11 | 557 |
| பித்த விஸர்ப்பத்தில் லேபம் | 12 | 558 |

| | | |
|---|---|---|
| கப விஸர்ப்பத்தில் லேபம் | 14 | 558 |
| ஞம விருக்ஷம் முதலியவை சேர்த்து நனைத் தலுக்கு, நீர் முதலியன தயாரித்து உபயோகித்தல் | 15 | 559 |
| வாத விஸர்ப்பத்தில் மருந்துப் பொருள் களுடன் அதிக அளவு நெய் கலந்தே உபயோகிக்கவேண்டும் | 18 | 559 |
| கப அல்லது பித்த ஸ்தானத்தில் ஆமதோஷங் கலந்த வாயு இருக்கயில் ஏற்பட்ட விஸர்ப்பத்துக்கு சிகித்ஸை | 18 | 560 |
| ரத்தம்பித்தம் ஆகியவை அதிகரித்த விஸர்ப் பத்தில் சிகித்ஸை | 19 | 560 |
| கூட்டு தோஷங்களால் உண்டான விஸர்ப்பத் தில் கூறப்பெற்ற முறைகளைக் கலந்து செய்தல் | 20 | 560 |
| அக்னி விஸர்ப்ப சிகித்ஸை | 21 | 561 |
| கிரந்தி விஸர்ப்ப சிகித்ஸை | 23 | 561 |
| கிரந்தி விஸர்ப்பத்தில் சூலையும் ஏற்படின், தைலம் முதலியவற்றால் நனைத்தல் | 24 | 562 |
| முருங்கைப்பட்டை முதலியவற்றுள் ஒன்றை அரைத்துப் பூசுதல் | 25 | 562 |
| வெளிமார்கத்தில் உண்டான கப விஸர்ப் பத்தில் நாகநந்தீ முதலியவற்றால் பூச்சு | 26 | 562 |
| கிரந்தி விஸர்ப்பதில் முள்ளங்கிக் கஞ்சி உட்கொள்ளல் முதலியன | 27 | 563 |

| | | |
|---|---|---|
| முற்கூறிய சிகித்ஸை செய்தும் கிரந்தி விஸர்ப்பம் கல் போலிருப்பின், சூடு இடல் அல்லது பருக்கச் செய்து பிளத்தல் | 32 | 564 |
| கிளர்ச்சியுள்ள ரத்தத்தை வெளியேற்றுதலும் அடுத்து உபயோகிக்க வேண்டியதும் | 34 | 564 |
| கசிவு உண்டான நிலையில் விரண சிகித்ஸை செய்தல் | 35 | 564 |
| விரணத்திற்கு மரமஞ்சள் சேர்த்து தயாரித்த தைலம் | 35 | 565 |
| கப அல்லது பித்தம் அதிகரித்த விஸர்ப் பத்திற்கு அறுகம்புல் சேர்த்து பக்குவம் செய்த நெய் | 36 | 565 |
| ரத்த வெளியேற்றம் ஒன்றே மற்ற எல்லா சிகித்ஸைகளுக்கும் சமம் | 36 | 565 |
| பல தடவைகளில் ரத்தத்தை வெளி யேற்றலின் அவசியம் | 37 | 565 |
| தோஷம் அதிகரித்தவருக்கு விரேசனம் செய்விக்கும் தன்மையற்ற நெய்யைக் கொடுக்கக் கூடாது. | 38 | 566 |

## அத்தியாயம் -19

| | | |
|---|---|---|
| எல்லா குஷ்ட நோயாளிகளையும் முதலில் நெய்ப்புப் பொருளால் உபசரித்தல் | 1 | 567 |
| வாத குஷ்டத்திற்கு சிகித்ஸை | 1 | 567 |
| திக்தக கிருதம் | 2 | 568 |
| மகாதிக்தம் | 8 | 569 |

| அட்டவணை, சிகித். 2-ம் பா. அத். - 19 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கப குஷ்ட சிகித்ஸை | 12 | 570 |
| எல்லா குஷ்ட நோயிலும் சேங்கொட்டை எண்ணெய் முதலியவற்றுள் ஒன்றைப் பருகுதல் | 12 | 571 |
| சரக்கொன்றைவேர் சேர்த்து பாகம் செய்த நெய் | 13 | 571 |
| மேற்படி ஸ்னேஹப் பொருளால் அப்பியங்கமும் செய்தல் | 14 | 571 |
| நெய்ப்பு உண்டாக்கப் பெற்றவருக்கு சோதன சிகித்ஸை செய்தல் | 15 | 571 |
| ஸிரையைக் குத்த வேண்டிய இடங்கள் | 15 | 572 |
| மிகக்குறைந்த தோஷமுள்ள குஷ்டத்தில் பொளிதல் முதலியவற்றால் ரத்தம் வெளியேறுதல் | 16 | 572 |
| நெய்ப்புப் பொருளால் பலமுண்டாக்குதல் | 16 | 572 |
| வஜ்ர கிருதம் | 18 | 573 |
| மஹாவஜ்ர கிருதம் | 19 | 573 |
| நாகதந்தீ கஷாயம் சேர்த்து பாகம் செய்த நெய் | 21 | 574 |
| கடைச்சியின் கஷாயமும் கல்க்கமும் சேர்த்து பாகம் செய்த நெய் | 22 | 574 |
| பெண் சேர்க்கையின்றி இருப்பதுடன் மலைப் பாம்பின் மாம்ஸ எண்ணெய் உட்கொள்ளல் | 24 | 575 |
| ஏற்ற உணவும் - ஏற்கா உணவும் | 25 | 575 |

| | | |
|---|---|---|
| பேய்ப்புடல் வேர் முதலியவை சேர்த்து தயாரித்த கஷாய பானம் | 28 | 576 |
| மாணிபத்ரம் | 31 | 577 |
| நிலவேம்பு முதலியவற்றின் சூரணம் | 33 | 578 |
| திரிபலை முதலியவற்றை எண்ணெய் முதலியவற்றுடன் உட்கொள்ளல் | 35 | 578 |
| எல்லா சரும நோய்களிலும் வெட்பாலைக் கஷாயத்தை பேயத்தி முதலியவற்றின் கல்கம் கலந்து உட்கொள்ளல் | 36 | 578 |
| கடுக்காயை வெட்பாலை முதலியவற்றின் கஷாயத்தில் வேகவைத்து உட்கொள்ளல் | 37 | 578 |
| மரமஞ்சள் முதலியவற்றின் பட்டைக் கஷாயம் | 37 | 578 |
| நீசோத்தமாதி கஷாயம் | 38 | 579 |
| வட்டத்திருப்பி முதலியவற்றின் உபயோகம் | 40 | 580 |
| அரக்கு முதலியவற்றின் சூரண உபயோகம் | 41 | 580 |
| மஞ்சள் முதலியவற்றை பசுநீருடன் கலந்து உபயோகித்தல் | 42 | 580 |
| ஸப்தஸம குளிகை | 43 | 581 |
| சந்த்ரகலாவதி வடகம் | 44 | 581 |
| வாய்விளங்கம் முதலியவற்றாலான வடகம் | 45 | 582 |
| கார்போகு அரிசி உபயோகம் | 46 | 582 |
| சேங்கொட்டையுடன் கடுக்காய் முதலியவை கலந்து உட்கொள்ளல் | 47 | 582 |

| | | |
|---|---|---|
| வெல்லம், சேங்கொட்டை முதலிய வற்றாலான வடகம் | 47 | 582 |
| கருங்காவித்தூளுடன் வாய்விளங்கம் முதலியன சேர்த்து உட்கொள்ளல் | 48 | 583 |
| எல்லா குஷ்டங்களிலும் சர்க்கரை, எண்ணெய் முதலியவற்றைக் கலந்து உட்கொள்ளல் | 49 | 583 |
| கோரைக்கிழங்கு முதலியவற்றின் சூர்ணத் துடன், 9 பங்கு யவைச் சத்துமா கலந்து உட்கொள்ளல் | 50 | 583 |
| நீரடிமுத்து முதலியவற்றை ரசாயன முறைப்படி உட்கொள்ளல் | 53 | 584 |
| உட்புற தோஷம் ஜெயிக்கப்பட்டபின் வெளிப்புற சிகித்ஸை | 54 | 584 |
| நிலைபெற்ற குஷ்டம் முதலியவற்றில் பொட்டலங்களால் வியர்ப்பித்தலும் அடுத்து செய்ய வேண்டியதும் | 55 | 585 |
| சஸ்திர ப்ரயோகத்திற்கு தகாத குஷ்டத்திற்கு சிகித்ஸை முறை | 56 | 585 |
| மிக கடினத் தன்மையுள்ள குஷ்டம் முதலிய வற்றில் விஷப் பொருளைப் பூசுவதும் அடுத்து செய்ய வேண்டியதும் | 57 | 585 |
| தம்பிதம் முதலியவையுள்ள குஷ்டத்திற்கு சிகித்ஸை | 58 | 586 |
| ஸித்தார்த்தகம் என்னும் ஸ்னானப் பொடி | 59 | 586 |
| அலரிவேர் முதலியவற்றை பசுநீரில் கொதிக்கவைத்துப் பூசுதல் | 61 | 587 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 19 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வெள்ளை அலரிவேர் முதலியவற்றாலான பூச்சு | 62 | 587 |
| குஷ்டத்தைப்போக்க வாகைப்பட்டையாலான பூச்சு முதலியன | 63 | 587 |
| திரிகடு முதலியவை சேர்த்து தயாரித்த குளிகை | 64 | 588 |
| நிம்பாதி சூர்ணம் | 65 | 588 |
| தைலம் தடவிக்கொண்டவர் கோரைக் கிழங்கு முதலியவற்றின் சூர்ணத்தை தூவிக்கொள்ளல் | 67 | 589 |
| கடுகையரைத்து கள்ளித்தண்டில் வைத்து பாகம் செய்து பூசுதல் | 69 | 589 |
| மனோசிலை முதலியவற்றாலான பூச்சு | 70 | 589 |
| சக்ர தைலத்துடன் குகில் முதலியவற்றின் சூர்ணம் கலந்து சூரிய கிரணங்களால் சூடாக்கி தேய்த்தல் | 71 | 590 |
| ஸித்ம குஷ்டம் நீங்க மிளகு முதலிய வற்றாலான பூச்சு | 73 | 591 |
| ஸித்மகுஷ்டம் நீங்க நாயுருவி க்ஷார நீர் கலந்து வாலுளுவைத் தைலம் பாகம் செய்து உபயோகித்தல் | 75 | 591 |
| ஸித்ம குஷ்டத்தில் செவ்வாய்க்கிழமையன்று குன்றிவேர் முதலியவற்றின் பூச்சை உபயோகித்தல் | 76 | 591 |
| க்ஷீரிப்பாலை முதலியவற்றுடன் நெய்யும் தைலமும் கலந்து பாகம் செய்து விபாதிகாகுஷ்டம் முதலியவற்றில் உபயோகித்தல் | 77 | 592 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 19 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வஜ்ரக தைலம் | 79 | 592 |
| மகாவஜ்ரக தைலம் | 81 | 593 |
| கோஷ்டம் முதலியவை சேர்த்து எண்ணெய் காய்ச்சி அப்பியங்கம் செய்தல் | 83 | 594 |
| கச்சு குஷ்டம் முதலியவற்றில் கடுகெண்ணெயுடன் தேன்மெழுகு முதலியவை கலந்து உபயோகித்தல் | 84 | 594 |
| தத்ரு குஷ்டத்தில் அரக்கு முதலியவற்றின் பூச்சு | 85 | 594 |
| தத்ரு குஷ்டத்தில் முள்ளங்கி விதையை அரைத்துப் பூசுதல் | 85 | 595 |
| வாத கபங்களால் உண்டான குஷ்டத்திற்கு பூச்சுக்கள் | 86 | 595 |
| பித்த கபங்களாலான குஷ்டத்தில் வெட்டிவேர் முதலியவற்றாலான பூச்சு | 88 | 595 |
| எரிச்சல் உள்ள குஷ்டத்திற்கு அப்பியங்கம் செய்வித்தல் | 89 | 595 |
| கசிவு, உறுப்புச் சிதைவு முதலியவற்றில் குளிர்ச்சியான பூச்சு முதலியவை ஏற்றவை | 90 | 596 |
| கிருமியுடன் கூடிய குஷ்டத்தில் கருங்காலி முதலியவற்றை பசு நீருடன் உபயோகம் | 91 | 597 |
| தனித்த தோஷத்தால் ஏற்பட்ட குஷ்டத்தில் முதலில் செய்ய வேண்டியது | 92 | 597 |
| பூச்சுக்கள் உடன் பலனைக் கொடுக்கும் நிலை | 93 | 598 |

ஸாத்ய நிலையில் உள்ள குஷ்டம் தோஷங்களை நீக்குதல் முதலியவற்றால் சிகித்ஸைக்கு அடங்குதல் 94 598

தோஷம் அதிகமுள்ள குஷ்ட நோயாளிக்கு பல தடவைகளில் சோதனம் செய்தல் 95 598

குஷ்ட நோயில் முறையாகச் செய்து கொள்ள வேண்டியவை 15 நாட்களுக்கு ஒரு முறை வாந்தி சிகித்ஸை முதலியன 96 598

முறைகேடான வாந்தி - விரேசன சிகித்ஸையால் குஷ்ட நோயாளி பீடிக்கப்படுவர் 97 599

விரதமிருத்தல் முதலியன குஷ்ட நோயை வேரறுக்கின்றன. 98 599

## அத்தியாயம் -20

வெண்குட்ட நோயில் விரைந்து சிகித்ஸை செய்ய வேண்டியதன் அவசியம் 1 600

வெண்குஷ்ட நோயில் முதலில் சோதனம் செய்வித்தல் 2 601

கள்ளிப்பால் கலந்து பேயத்திக் கஷாயம் பருகிய பின் தைலம் தடவிக்கொண்டு வெயில் காய்தல் 3 601

உண்டாகும் கொப்புளங்களை முட்களால் பிளத்தல், கசிவு வெளியேறிய பின் பேயத்தி முதலியவற்றின் கஷாயத்தை பருகுதல் 4 601

| | | |
|---|---|---|
| கார்போகு அரிசிக் கல்கத்தை பேயத்திப்பட்டை முதலியவற்றின் கஷாயத்துடன் பருகிய பின் வெயிலில் இருத்தல் | 6 | 602 |
| கொப்புளம் உண்டான பின் உப்பின்றி மோரன்னம் உட்கொள்ளல் | 6 | 602 |
| நெய் தடவிய பானையில் பசு நீருடன் கொடிவேலி முதலியன இட்டு வைத்திருந்து பருகுதல் | 7 | 602 |
| குஷ்ட சிகித்ஸையும் செய்தல் | 7 | 602 |
| கரிசாலையை நல்லெண்ணெயில் பொரித்து உட்கொள்ளல் | 8 | 603 |
| வெண்குட்டம் முதலியவற்றுக்கு ஆவில், புங்கு முதலியவற்றின் பூச்சு | 9 | 603 |
| சிறுத்தை அல்லது யானையின் தோலை எரித்து நல்லெண்ணெயுடன் கலந்து பூசுதல் | 10 | 604 |
| பூதி கீட கிருமியை சரக்கொன்றை க்ஷாரத்துடன் பூசுதல் சிறந்தது | 10 | 604 |
| சேங்கொட்டையை பசுநீரில் ஊறவைத்து கள்ளிப்பால் விட்டரைத்து பூசுதல் | 11 | 604 |
| கருநாகத்தின் சாம்பலை தான்றியெண்ணெயில் கலந்து பூசுதல் முதலியன | 12 | 604 |
| சருமம் சுயநிறமடைய கார்போகு அரிசி, தாளகம் இவற்றை பசுநீர் விட்டரைத்துப் பூசுதல் | 13 | 605 |
| யானை மலத்தின் க்ஷாரத்தை, யானையின் சிறுநீரில் பாகம் செய்து பூசுதல் | 14 | 605 |

| | | |
|---|---|---|
| சேங்கொட்டை முதலியவற்றுடன் கள்ளிப் பால் முதலியன சேர்த்து பக்குவம் செய்து சலாகையால் பூசுதல் | 16 | 605 |
| பாபம் குறைந்தவருக்கே சோதனம் முதலிய வற்றால் வெண்குட்டம் நீங்கும் | 18 | 606 |


## கிருமி நோய்க்கு சிகித்ஸை


| | | |
|---|---|---|
| வயிற்றில் கிருமி உள்ளவருக்கு சிகித்ஸை | 19 | 607 |
| தலையில் கிருமி உள்ளவருக்கு சிகித்ஸை | 24 | 608 |
| மோர்க் கஞ்சியில் வாய்விளங்கம் முதலியவை சேர்த்துப் பருகுதல் | 25 | 608 |
| வாகை முதலியவற்றுள் ஒன்றின் ரஸத்தை தேனுடன் பருகுதல் | 26 | 609 |
| சுரஸாதிகணச் சரக்குகளை தனித்தனியே தேனுடன் லேஹமாக உட்கொள்ளல் | 27 | 609 |
| கிருமி நோயாளிக் குதிரைச் சாணத்தூளை வாய்விளங்க கஷாயத்தில் 100 தடவை ஊறவைத்து தேன் கலந்து கொடுத்தல் | 27 | 609 |
| தலையில் கிருமியுள்ளவருக்கு இதையே நசியமிடுதல் | 28 | 609 |
| எலிச்செவித் துளிரும் சாலி அரிசிமாவும் கலந்து வடைசெய்து உட்கொண்டு காடி பருகுதல் | 29 | 610 |
| கடம்பு முதலியவற்றின் துளிரையும் இவ்வாறே உபயோகித்தல் | 30 | 610 |
| வாய்விளங்கம் சேர்த்து பணியாரங்கள் ஏற்றவை | 31 | 610 |

| | | |
|---|---|---|
| பாதியளவு வாய்விளங்கச் சூரணம் கலந்து சேங்கொட்டைத் தைலம் முதலியவற்றை பருகுதல் முதலியன | 31 | 611 |
| மலத்தில் கிருமி இருப்பின் பஸ்தியும் விரேசனமும் ஏற்றவை | 33 | 611 |
| கபத்தால் கிருமி உண்டாயின், சிரோவிரேசனம் முதலியவை செய்வித்தல் | 33 | 611 |
| ரத்தத்தில் கிருமி உண்டாயிருப்பின் குஷ்ட சிகித்ஸை செய்தல் | 34 | 611 |
| உரோமத்தை உண்ணும் கிருமிகள் ரத்தத்தில் இருப்பின் இந்த்ரலுப்த சிகித்ஸை செய்தல் | 34 | 612 |
| கிருமி நோயாளி தவிர்க்க வேண்டியவை | 34 | 612 |

## அத்தியாயம் - 21

| | | |
|---|---|---|
| வாத நோய் சிகித்ஸை (தனித்த வாயு தோஷமுள்ள நிலையில் நெய் முதலியவற்றைப் பருகச் செய்தல் | 1 | 613 |
| நெய்ப்புச் சிகித்ஸையால் இளைத்தவரை பால் பருகச் செய்து காப்பாற்றவேண்டும். | 1 | 613 |
| பிறகு பருப்புக்கஞ்சி முதலியவற்றால் நெய்ப்பு உண்டாக்கி வியர்ப்பிக்க வேண்டும் | 2 | 613 |
| நெய்ப்பு உண்டாக்கிய பின் விஸர்ப்பித்தலின் சிறப்பு | 4 | 614 |
| வியர்ப்பித்தலின் குணம் | 6 | 615 |
| நெய்ப்புச் சிகித்ஸையின் குணம் | 7 | 615 |

| | | |
|---|---|---|
| வாத நோயாளிக்கு நெய்ப்பு சிகித்ஸை, வியர்ப்பித்தல் ஆகியவற்றை மீண்டும் மீண்டும் செய்வதன் பயன் | 8 | 616 |
| மேற்கூறிய சிகித்ஸை செய்தும் தோஷச் சேர்க்கை காரணமாக நோய் நீங்காவிடில் மிருது குணமுள்ள விரேசனம் கொடுத்தல் | 9 | 616 |
| தோஷம் நீங்க பாச்சோற்றி சேர்த்து பக்குவம் செய்த கிருதம் முதலியவற்றுள் ஒன்றைப் பருகுதல் | 10 | 617 |
| விரேசனத்திற்கு தகாத நிலையில் செய்ய வேண்டியவை | 12 | 617 |
| வாயு ஆமாசயத்தில் கோபமடைந்திருப்பின் | 14 | 618 |
| நாபியில் வாயு கோபமடைந்திருந்தால் | 15 | 619 |
| கோஷ்டத்தில் வாயு கோபமடைந்திருந்தால் | 16 | 619 |
| இருதயத்தில் வாயு கோபமடைந்திருந்தால் | 17 | 619 |
| சருமத்தில் வாயு கோபமடைந்திருந்தால் | 18 | 620 |
| ரத்தத்தில் வாயு கோபமடைந்திருந்தால் | 18 | 620 |
| மாம்ஸம் கொழுப்பு ஆகியவற்றில் வாயு கோபமடைந்திருந்தால் | 19 | 620 |
| எலும்பு, எலும்புச் சத்து ஆகியவற்றில் வாயு கோபமடைந்திருந்தால் | 19 | 620 |
| சுக்லத்தில் வாயு கோபமடைந்திருந்தால் | 20 | 621 |
| சுக்லம் தடையுற்றிருந்தால் | 21 | 621 |
| வாயு காரணமாக கர்ப்பமும், பாலரும் வளர்ச்சியற்றிருந்தால் | 21 | 621 |

| | | |
|---|---|---|
| தசைநார் முதலியவற்றில் வாயு கோபம் அடைந்திருந்தால் | 22 | 621 |
| உறுப்புக்கள் சுறுக்க நோயில் | 23 | 622 |
| உறுப்பு உணர்ச்சியற்றிருந்தால் | 23 | 622 |
| (அபதானக சிகித்ஸை) கண்கள் இடம் பெயர்ச்சி அற்ற நிலை முதலியவை காணின் விரைந்து சிகித்ஸை செய்தல் | 24 | 622 |
| அபதானக நோயாளிக்கு நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை சிகித்ஸை, நஸ்யம் முதலியவை செய்வித்தல் | 26 | 623 |
| கொள் முதலியவை சேர்த்து மகாஸ்னேஹம் பக்குவம் செய்து நனைத்தல் முதலிய வற்றில் உபயோகித்தல் | 28 | 624 |
| வேகங்களுக்கு இடையில் சிரோ விரேசனம் செய்வித்தல் | 30 | 625 |
| தில்வக கிருதம் (பாச்சோற்றி நெய்) | 32 | 626 |
| பாச்சோற்றி போலவே பெருவேம்பு அசோகம் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 34 | 627 |
| இரு தோஷங்களில் கூட்டால் உண்டான அபதானக நோயில், அவ்விரு தோஷங் களுக்கேற்ப சிகித்ஸை | 35 | 627 |
| கபத்துடன் கூடிய அபதானகத்தில் இருதய வலியும், பக்க சூலையும் காணப்படும் நிலையில் சிகித்ஸை | 35 | 627 |
| ஆயாம சிகித்ஸை | 38 | 628 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 21 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| (ஹனுஸ்ரம்ஸம்) தாடை நழுவிய நோய் சிகித்ஸை | 41 | 629 |
| நாக்கு தம்பித்திருப்பின் நிலைமைக்கேற்ப வாத சிகித்ஸை | 42 | 629 |
| அர்த்தித நோயில் நஸ்யம் முதலியவை ஏற்றவை | 43 | 630 |
| வீக்கமிருப்பின் வாந்தி செய்வித்தல் | 43 | 630 |
| எரிச்சல், செந்நிறம் காணப்படின் ரத்தத்தை வெளியேற்றுதல் | 43 | 630 |
| பக்ஷவாத நோயில் நெய்ப்பு உண்டாக்குதலும் நெய்ப்பு கலந்த விரேசனமும் | 44 | 630 |
| அபபாஹுக நோயில் | 44 | 630 |
| (ஊருஸ்தம்பம்) தொடைத்தம்பித நோயில் வறண்ட சிகித்ஸை ஏற்றது | 44 | 630 |
| திரிபலை முதலியவற்றின் அல்லது சவ்வியம் முதலியவற்றின் கல்க உபயோகம் | 48 | 632 |
| பசுநீருடன் கடுக்காய் உபயோகம் முதலியன | 49 | 632 |
| திரிகடு முதலியவற்றின் சூரணத்துடன் சம அளவு குக்கில் சேர்த்து உபயோகித்தல் | 50 | 632 |
| கருங்குறிஞ்சி முதலியவற்றின் கஷாயத்துடன் தைலம் கலந்து பருகுதல் | 56 | 634 |
| ராஸ்னாதி கிருதம் | 57 | 634 |
| குக்குலு திக்தகிருதம் | 58 | 635 |
| தலையில் வாயு அதிகரித்த நிலையில் | 62 | 637 |
| தணித்த வாத தோஷத்தில் | 63 | 637 |

| | | |
|---|---|---|
| பிண்ணாக்கு பஞ்சமூலம் ஆகியவற்றின் கஷாயத்துடன் தைலமும், பாலும் கலந்து பக்குவம் செய்து பருகுதல் | 64 | 637 |
| பிரஸாரிணீ தைலம் | 65 | 638 |
| ஸஹச்ராதி தைலம் | 67 | 639 |
| ஸஹச்ராதி தைலம் மற்றொன்று | 70 | 640 |
| பலா தைலம் | 73 | 641 |
| மேற்படி தைலங்களை பருகுதல் முதலிய வற்றில் உபயோகிக்க வாத நோய்கள் | 82 | 643 |

## அத்தியாயம் -22

| | | |
|---|---|---|
| வாதரக்த நோயில் நெய்ப்பு சிகித்ஸைக்குபின் சிறிது சிறிதாக ரத்தத்தை வெளியேற்றுதல் | 1 | 644 |
| நிலைமைக்கேற்ப ரத்தத்தை வெளி யேற்றும் முறை | 2 | 645 |
| ரத்த வெளியேற்றம் தவிர்க்கவேண்டிய நிலை | 3 | 645 |
| ரத்தம் குறைவதால் உண்டாகும் தீங்குகள் | 4 | 646 |
| நோயாளி விரேசனத்திற்குத் தகுந்தவராயின் விரேசனம் செய்வித்தல் | 5 | 646 |
| வாயு அதிகம் கேடடைந்த வாதரத்த நோயில் நாட்பட்ட நெய்யைப் பருகுதல் | 5 | 646 |
| கொட்டைக்கரந்தை முதலியவை சேர்த்து பாகம் செய்த நெய் | 6 | 646 |
| திராக்ஷை கஷாயம் முதலியவை சேர்த்து பாகம் செய்த நெய் முதலியவை | 7 | 647 |
| எண்ணெய், பால், சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து பருகுதல் | 8 | 647 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 22 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வலி நீங்க சிற்றாமுட்டி முதலியவை சேர்த்து பால் பக்குவம் செய்து பருகுதல் | 8 | 647 |
| கறந்த அளவில் சூடான பாலுடன் பசுநீர் கலந்து பருகுதல் | 9 | 648 |
| பித்த வாதரக்த சிகித்ஸை | 10 | 648 |
| இனிப்பு வர்க்கம் முதலியன சேர்த்து பாகம் செய்த நெய், பால் | 10 | 648 |
| அதிகரித்த தோஷமுள்ளவருக்கு விரேசனத்திற் காக பாலுடன் ஆமணக்கெண்ணெய் பருகுதல் முதலியன | 11 | 649 |
| வாதசோணித நோயில் பஸ்திப்ரயோகமே சிறந்தது | 13 | 649 |
| புட்டத்தில் வலி முதலியவற்றில் முக்யமாக பஸ்தி செய்வித்தல் | 14 | 649 |
| கபம் அதிகரித்த வாதரக்த நோய் சிகித்ஸை | 14 | 650 |
| எல்லா தோஷங்களாலும் உண்டான வாதரத்த நோய் முதலியவற்றில் திரிபலை முதலியவற்றின் கல்க உபயோகம் | 16 | 650 |
| நீர் முள்ளியின் கறியும் கஷாயமும் | 18 | 651 |
| கந்தகத்தை பஞ்சமூல கஷாயத்துடன் உட்கொள்ளல் முதலியன | 19 | 651 |
| ஆரனான தைலம் | 21 | 652 |
| பிண்ட தைலம் | 22 | 652 |
| வாயு அதிகரித்த வாதசோணித நோயில் ஸேகங்கள் | 23 | 654 |

| | | |
|---|---|---|
| தம்பிதம் முதலியவற்றிலும் எரிச்சலிலும் 4 வகை நெய்ப்புப் பொருள் பக்குவம் செய்து நிலமைக்கேற்ப ஊற்றுதல் | 24 | 654 |
| பசுவின் பால் முதலியவற்றுடன் தைலம் கலந்து ஊற்றுதல் | 25 | 654 |
| தம்பிதம் முதலியவற்றில் ஜீவனீயகணச் சரக்குகளின் கஷாயத்தை ஊற்றுதல் முதலியன | 25 | 654 |
| திராக்ஷைச்சாறு முதலியவை உடலை நனைக்க ஏற்றவை | 26 | 655 |
| ஸ்த்ரீகளும் எரிச்சலை போக்குவர் | 27 | 655 |
| செந்நிறம் முதலியவற்றுடன் எரிச்சல் காணப் பட்டால், ரத்தத்தை வெளியேற்றியபின் பூச்சு | 28 | 655 |
| கிருஸரம், முதலியவற்றை வைத்துக் கட்டுதல் | 30 | 656 |
| மாமிஸப் பொடித்தூவலை வைத்துக் கட்டுதல் முதலியன | 31 | 656 |
| கருங்குறிஞ்சி முதலியவற்றாலான பூச்சு | 33 | 657 |
| எள் பூச்சு | 33 | 657 |
| ஆளிவிதைப் பூச்சு | 34 | 657 |
| அதிகரித்த வாயுவில் சதகுப்பைப் பூச்சு | 34 | 657 |
| பசுநீர் முதலியவற்றுடன் நெய்பாகம் செய்து அப்பியங்கம் | 35 | 657 |
| கபமதிகரித்த வாத நோயில் காடி சேர்த்து பாகம் செய்து நெய் உபயோகம் | 35 | 658 |

| | | |
|---|---|---|
| வாத-கபமதிகரித்த, வாதரத்த நோயில் ஒட்டடை முதலியவற்றால் பூச்சு முதலியன | 36 | 658 |
| சருமம், மாம்ஸம் ஆகியவற்றில் மட்டும் பரவிய வாதரத்த நோயில் சிகித்ஸை | 38 | 659 |
| மற்ற தாதுக்களில் பரவிய வாதரத்தநோய் உள்ளவருக்கு | 38 | 659 |
| வாயு கபம் அதிகரித்த வாதரத்தத்தில் சிறிது சூடான பூச்சு | 39 | 659 |
| பித்தம் ரத்தம் அதிகரித்த வாதரத்தத்தில் குளிர்ச்சியான பூச்சு | 40 | 659 |
| மதுயஷ்டி தைலம் | 41 | 660 |
| பலா தைலம் | 45 | 661 |
| வழித்தடையால் வாயு கோபமடைந்திருப்பின் சிகித்ஸை முறை | 47 | 662 |
| பிராணன் முதலிய ஐந்து வாயுக்களும் கோபமடைந்திருப்பின் | 49 | 662 |
| ஆமத்துடன் கூடிய வாத நோயில் | 50 | 663 |
| உடல் வற்றுதல் முதலியவை முயற்சியின் பேரில் நீங்கும் | 51 | 663 |
| ஆவரண சிகித்ஸை | 53 | 664 |
| பால் கலந்த பஸ்திப் பிரயோகம் முதலியவை ஏற்றவை | 55 | 664 |
| மதுயஷ்டி தைலம் முதலியவற்றால் உடலை நனைத்தல் முதலியன | 56 | 665 |
| வாயுவானது கபத்தால் சூழப்பட்டிருப்பின் | 57 | 665 |

| அட்டவணை சிகித். 2-ம் பா. அத். - 22 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வாயுவானது கப-பித்தங்களால் சூழப் பட்டிருப்பின் | 58 | 666 |
| வாயுவானது ரத்தத்துடன் கலந்திருந்தால் | 59 | 666 |
| வாயு, மாம்ஸத்தால் சூழப்பட்டிருந்தால் | 59 | 666 |
| (ஆட்ய வாதம்) தொடைத் தம்பித்ததில் பிரமேக சிகித்ஸை முதலியவற்றை செய்தல் | 60 | 666 |
| எலும்பு, எலும்புச்சத்து ஆகியவற்றால் வாயு சூழப்பட்டிருப்பின் | 60 | 667 |
| வாயு சுக்ரத்தால் சூழப்பட்டிருப்பின் | 60 | 667 |
| வாயு அன்னத்தால் சூழப்பட்டிருப்பின் | 61 | 667 |
| வாயு சிறுநீரால் சூழப்பட்டிருந்தால் | 61 | 667 |
| வாயு மலத்தால் சூழப்பட்டிருந்தால் | 62 | 668 |
| எல்லா ஸ்தானங்களிலும் வாயு சூழப் பட்டிருந்தால் | 62 | 668 |
| நோயாளி பலம் அதிகரித்தவராயின் | 64 | 669 |
| அபான வாயு சூழப்பட்டிருந்தால் | 66 | 669 |
| பிராணன் முதலியவற்றிற்கு உண்டாகும் ஆவரணங்களில் ஊகித்து சிகித்ஸை செய்தல் | 68 | 670 |
| பிராணன் முக்யமாகக் காப்பாற்றப்படவேண்டும் | 69 | 670 |
| உள்ளிப் பிரயோகம் | 70 | 671 |
| பித்தத்தால் வாயு ஆவரணம் செய்யப் பட்டிருப்பின் | 71 | 671 |
| ரத்தத்தால் ஆவரணம் செய்யப்பட்டிருந்தால் | 72 | 671 |
| சிகித்ஸையின் வேறு பெயர்கள். | 72 | 671 |


★★★★★

# Index - அட்டவணை

## கல்பஸ்தானம்

### அத்தியாயம் - 1 (வமன கல்பம்)


| | ஸ்லோகம் | பக்கம் |
|---|---|---|
| எல்லா நோய்களிலும் சமனத்திற்கு மலங் காரையும் விரேசனத்திற்கு சிவதைவேரும் | 1 | 674 |
| மலங்காரையை சேமித்தல் | 2 | 675 |
| பிரயோக முறை | 2 | 675 |
| விசேஷமாக வாந்தி செய்விக்க வேண்டிய நோய்கள் | 6 | 676 |
| ஜுரம் முதலியவற்றில் மருக்காரைப் பழச்சத்து உபயோகிக்க வேண்டிய முறை | 9 | 677 |
| கபஸ்தானத்தில் பித்தம் வந்திருந்தால் மருக்காரையை பீர்க்கு கஷாயம் முதலியவற்றுடன் உபயோகித்தல் | 10 | 678 |
| நெஞ்செரிவு, கீழ்நோக்கிய ரத்தபித்தம் ஆகிய வற்றில் பால் அல்லது பால் கஞ்சியுடன் மருக்காரைப் பழச்சத்து | 12 | 679 |
| கபம் முதலியவற்றில் மருக்காரைப் பழச்சத்து சேர்த்து பாகம் செய்த பாலின் தயிர் உபயோகம் முதலியன | 13 | 679 |
| கபத்தால் ஜாடராக்னீ ஆரம்பிக்கப்பட்ட நிலை முதலியவற்றில் வாந்தியுண்டாக்குதல் (பழச்சத்து சேர்த்து பாகம் செய்த பாலின் நெய் உபயோகம் முதலியன) | 14 | 679 |

| அட்டவணை கல்ப. அத். - 1 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| உடலைப்பருக்கச் செய்யும் சிகித்ஸையால் உண்டான நோய்களில் மருக்காரைச் சத்துக் கஷாயம் | *16* | *680* |
| சுகசாலிக்கு வாந்தி ஏற்பட | *18* | *681* |
| மருக்காரை கிடைக்காவிடில் அதன் மலர் முதலியவற்றை உபயோகிக்கலாம் | *19* | *681* |
| ஜ்வரம் முதலியவற்றில் தேவதாளிப் பீர்க்கு உபயோகம் | *19* | *682* |
| தேவதாளியின் பூ உண்டான நிலையில் பூ சேர்த்து காய்ச்சிய பால் என்றவாறு பலமுறைகள் | *20* | *682* |
| தேவதாளியைப் போன்றே சுரைக்காய், பேய்ப்பீர்க்கை உபயோகித்தல் | *23* | *683* |
| வாயு, பித்தம் இவற்றால் பீடிக்கப்பட்டவருக்கு தேவதாளிபீர்க்கின் சூரணம் | *23* | *683* |
| பித்த - கப ஜ்வரத்தில் தேவதாளிப் பீர்க்கை உபயோகிக்க வேண்டியமுறை | *24* | *683* |
| பித்த ஜ்வரம் முதலியவற்றில் தேவதாளியை உபயோகிக்க வேண்டிய முறை | *26* | *684* |
| இருமல் முதலியவற்றில் கசப்புச் சுரை ஏற்றது | *27* | *684* |
| பித்தம் அதிகரித்த பித்த கப ஜ்வரத்தில் கசப்புச் சுரையின் துளிரை உபயோகிக்கும் முறை | *28* | *684* |
| கபத்தாலுண்டான இருமல் முதலியவற்றில் வாந்தி செய்விக்கும் முறை | *29* | *684* |

| அட்டவணை கல்ப. அத். - 1 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| பாண்டு நோய் முதலியவற்றில் கசப்புச்சுரையில் மத்ய பாகத்தை உபயோகிக்கும் முறை | 30 | 685 |
| விஷம் முதலியவற்றில் கசப்புச் சுரையின் விதையை உபயோகிக்கும் முறை | 31 | 685 |
| கபத்தாலுண்டான ஜ்வரம் முதலியவற்றில் கசப்புச் சுரையின் சாற்றில் ஊறிய யவையின் சத்துமா உபயோகித்தல் | 32 | 686 |
| குன்மத்திலும், நாட்பட்ட ஜ்வரத்திலும் கசப்புச் சுரையின் கல்கத்தை உபயோகித்தல் | 33 | 686 |
| நல்ல மணத்திற்கே பழகியவர் கசப்புச் சுரையை உபயோகிக்க வேண்டிய முறை | 34 | 686 |
| இருமல் குன்மம் முதலியவற்றில் யானைப் பீர்க்கு ஏற்றது | 35 | 687 |
| இருமலிலும் இருதய எரிச்சலிலும் யானைப் பீர்க்குச் சூரணத்தை லேஹமாக்கி உபயோகிக்கும் முறை | 36 | 687 |
| பித்த உஷ்ணத்துடன் கூடிய கப நோயில் முற் கூறிய லேஹத்தை உபயோகிக்கும் முறை | 38 | 687 |
| விஷத்தில் யானைப் பீர்க்கு கல்க்கத்தை உபயோகிக்கும் முறை | 39 | 688 |
| மன நோயில் யானைப்பீர்க்கை உபயோகிக்க வேண்டிய முறை | 39 | 688 |
| கசப்புப் பீர்க்கின் குணங்கள் | 41 | 688 |
| வேரூன்றிய குஷ்டம் முதலியவற்றில் கசப்புப் பீர்க்கு ஏற்றது | 41 | 688 |

மருக்காரைக் கஷாயம் முதலியவற்றுள் ஒன்றுடன் மாம்ஸம் பக்குவம் செய்து உபயோகிக்கும் முறை 42 689

மருக்காரைப் பழச்சத்து முதலியவற்றுள் ஒன்றுடன் மாம்ஸம் பக்குவம் செய்து உபயோகிக்கும் முறை 43 689

கருப்பஞ்சாற்றுடன் கசப்பு பீர்க்கு கஷாயம் உபயோகித்தல் 43 689

மென்மையான உடற்கூறு உள்ளவருக்கும் பித்தம் அதிகரித்த நிலை முதலிய வற்றிலும் வெட்பாலையரிசி சிறந்தது 44 690

வெட்பாலையரிசியை உபயோகிக்கும் முறை 45 690

எருக்கம்பாலில் ஊறவைத்த வெட்பாலையரிசிச் சூரணத்தை உபயோகிக்கும் முறை 46 690

அறிவாளி இவ்வாறே மற்ற கல்பங்களை அமைத்துக் கொள்ளல் 47 691

## அத்தியாயம் - 2 (விரேசன கல்பம்)

சிவதை - அதன் சுவைகள், குணங்கள் தன்மை 1 692

கல்பனைக்கேற்ப எல்லா நோய்களையும் போக்கவல்லது 2 692

சிவதையின் இரு வகைகள் 3 693

வெண்சிவதை அபாயமற்றது பாலர் முதலியோருக்கு ஏற்றது 3 693

| அட்டவணை கல்ப. அத். - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கருஞ்சிவதை - இதன் குணங்களும் செயல்களும் (கற்குடல் உள்ளவர் முதலியோருக்கு ஏற்றது | 4 | 693 |
| சேகரிக்கும் முறை | 6 | 693 |
| வாத நோயில் உபயோகிக்கும் முறை | 7 | 694 |
| பித்த நோயில் உபயோகிக்கும் முறை | 7 | 694 |
| கப நோயில் உபயோகிக்கும் முறை | 8 | 695 |
| சிவதை லேஹம் | 9 | 695 |
| ஸன்னிபாத ஜ்வரம் முதலியவற்றில் சிவதை சூரணத்தை உபயோகிக்கும் முறை | 12 | 696 |
| கரும்புத்துண்டைப் பிளந்து சிவதைச் சூரணம் தூவி உபயோகிக்கும் முறை | 12 | 696 |
| வாத நோய் முதலியவற்றில் சிவதையை உபயோகிக்கும் முறை | 13 | 697 |
| குன்மம் முதலியவற்றில் வாய்விளங்கம் முதலிய வற்றின் சூர்ணத்துடன் பாதி சிவதைச் சூர்ணம் கலந்து உபயோகிக்கும் முறை | 15 | 697 |
| கல்யாண குடம் | 17 | 698 |
| அவிபத்தி குளிகை | 21 | 699 |
| மழைக் காலத்தில் உபயோகிக்கும் முறை | 24 | 700 |
| இலையுதிர்க் காலத்தில் உபயோகிக்கும் முறை | 25 | 700 |
| முன்பனிக் காலத்தில் உபயோகிக்கும் முறை | 26 | 700 |
| முதுவேனிற் காலத்தில் உபயோகிக்கும் முறை | 27 | 700 |

| அட்டவணை கல்ப. அத். - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற விரேசனம் | 27 | 701 |
| வறட்சியுள்ளவருக்கு விரேசனம் | 29 | 701 |
| கொன்றைக்கல்பம் கொன்றை ஜ்வரம் முதலியவற்றில் ஏற்றது | 30 | 702 |
| கொன்றையின் குணங்கள் | 31 | 702 |
| கொன்றை பாலர் முதலியோருக்கு விசேஷமாக ஏற்றது | 32 | 702 |
| சரக்கொன்றையைச் சேகரிக்கும் முறை | 32 | 702 |
| கொன்றைப் பழச்சத்தின் சீத கஷாயத்தை பருகும் முறை | 35 | 703 |
| கொன்றைப்புளியை நாகதந்தீகஷாயத்திலிட்டு தயாரான அரிஷ்ட உபயோகம் | 37 | 704 |
| லோத்திக் கல்பம் (லோத்தியின் உபயோகம்) | 38 | 704 |
| லோத்தியின் கஷாயமும் கல்க்கமும் சேர்த்து லேஹம் தயாரித்து உபயோகித்தல் | 41 | 705 |
| கள்ளியின் தன்மை | 42 | 705 |
| மிருதுகோஷ்டம் உள்ளவர் முதலியோருக்கு கள்ளியை பிரயோகிக்கக்கூடாது | 43 | 705 |
| குன்மம் முதலியவற்றில் ஏற்றது | 43 | 705 |
| சிறந்த கள்ளி - கள்ளிப்பாலைச் சேகரிக்கும் காலம் முதலியன | 44 | 705 |
| கள்ளிப்பாலில் 7 நாட்கள் ஊறவைத்த சிவதை முதலிய திரவங்களை உபயோகித்தல் முதலியன | 47 | 706 |

| அட்டவணை கல்ப. அத். - 3 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| சங்கு வெள்ளி - துராய் இவற்றின் கல்பம் | 49 | 707 |
| நாகதந்தி - எலியால் இவற்றின் கல்பம் | 51 | 708 |
| விரேசனம் உண்டாக்குவதில் சிவதை முதலிய 9 திரவியங்களும் சிறந்தன | 57 | 710 |
| கடுக்காய் கல்கம் | 58 | 710 |
| அபயா மோதகம் | 58 | 710 |
| கல்பனையின் சிறப்பு | 61 | 711 |
| விரேசன மருந்துகளை லவங்கப்பட்டை முதலியவற்றுடன் கலந்தே கொடுக்க வேண்டும் | 62 | 711 |

## அத்தியாயம் - 3

| | | |
|---|---|---|
| வாந்திப்பொருள் கீழ்நோக்கிச் செல்லுதலும், அந்நிலையில் செய்ய வேண்டியதும் | 1 | 712 |
| விரேசன ஔஷதம் மேல் நோக்கி வாந்தி யாதலும், செய்ய வேண்டியதும் | 3 | 713 |
| மூன்றாம் முறை விரேசன ஔஷதம் கொடுக்கக்கூடாது | 4 | 713 |
| (அயோகம்) செயல்திறன் போதாமை | 5 | 714 |
| அயோக நிலையில் செய்ய வேண்டியவை (அப்பியங்கம் செய்வித்து வியர்ப்பித்தல் முதலியன) | 9 | 715 |
| தோஷம் அதிகரிக்கப் பெற்றவர்களுக்கு குறைந்த அளவு ஔஷதத்தால் ஏற்படும் தீங்குகளும், அந்நிலையில் ஏற்ற சிகித்ஸை முறையும் | 11 | 716 |

| அட்டவணை கல்ப. அத். - 3 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| வயிற்றுக்கடுப்பு முதலியவற்றில் திப்பிலி முதலியவற்றை உபயோகித்தல் | 15 | 717 |
| சோதன ஔஷதம் உட்கொண்டவர் வேகங்களை தடுப்பின், உண்டாகும் தீங்கும் அதற்கு சிகித்ஸையும் | 16 | 717 |
| அதிக வாந்தி உண்டானவருக்கு வாயுவால் இருதயம் பீடிக்கப்படின், கொடுக்கத் தக்க பொருள்கள் | 20 | 718 |
| அதிக வாந்தி உண்டானவருக்குப் பித்தம் கபம் இவற்றால் இருதயம் பீடிக்கப்படின், கொடுக்கத்தக்க பொருள் | 21 | 718 |
| மருந்து உட்கொண்டவருக்கு வேகத்தடுப்பால் வாயு கோபமடைந்து உண்டாகும் தீங்கும், அதற்கு சிகித்ஸையும் | 21 | 719 |
| பசி எடுத்தவருக்கு, ம்ருது கோஷ்டம் உள்ளவருக்கும் தீக்ஷ்ணமான சோதன ஔஷதத்தால் ஏற்படும் தீங்கு-அந்நிலையில் சிகித்ஸை | 23 | 719 |
| அதிக வாந்தி ஏற்படின் அதற்கு சிகித்ஸை | 27 | 720 |
| மிகவும் ஏப்பத்துடன் உண்டாகும் வாந்தியில் பெருங்குறும்பை முதலியவற்றின் சூர்ண உபயோகம் | 28 | 720 |
| வாந்தி எடுப்பவருக்கு நாக்கு உட்சென்று விட்டால் | 29 | 721 |
| நாக்கு வெளியில் தொங்கினால் | 30 | 721 |
| (வாக்கிரஹம்) பேச்சுத்தடை முதலிய வாத நோய்களில் | 31 | 722 |

| | | |
|---|---|---|
| ஜீவாதானம் | 32 | 722 |
| ஜீவரத்த பரிசோதனை | 33 | 722 |
| ஜீவரத்தம் வெளியேறுபவருக்கு விடாய் முதலியவை ஏற்பட்ட நிலையில் ஏற்ற சிகித்ஸை | 35 | 723 |
| குதம் நழுவியிருப்பின் தம்பிக்கச் செய்து உள்ளே செலுத்துதல் | 39 | 724 |
| நினைவிழந்தவரை ஸாமவேதம் முதலியவற்றைக் கேட்கச் செய்தல் | 39 | 724 |

## அத்தியாயம் - 4 (பஸ்தி கல்பம்)

### வாத நோயில் பிரயோகிக்க நிரூஹ பஸ்தி

| | | |
|---|---|---|
| சிற்றாமுட்டி, சீந்தில் முதலியவற்றின் கஷாயம் ஓமம் முதலியவற்றின் கல்க்கம் சேர்த்து தயாரிக்கப்படும் நிரூஹம் | 1 | 725 |
| பஸ்தி யோகத்தில் கல்கம் கூறப்படாவிடில், முற்கூறிய ஓமம் முதலியவற்றின் கல்க்கம் சேர்த்தல் | 3 | 727 |
| தசமூலம், ஆட்டு மாம்ஸம் முதலியவை சேர்த்து தயாரிக்கப்படும் நிரூஹ பஸ்தி | 4 | 727 |
| சிற்றாமுட்டி, பேய்ப்புடல் முதலியவை சேர்த்து தயாரிக்கும் நிரூஹ பஸ்தி | 5 | 727 |
| ஆமணக்குவேர், பூலாங்கிழங்கு முதலியவை சேர்த்து தயாரிக்கப்படும் நிரூஹ பஸ்தி | 7 | 728 |

| அட்டவணை கல்ப. அத். - 4 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பித்த நோய்களில் பிரயோகிக்கத்தக்க அதிமதுரம், லோத்தி முதலியவை சேர்த்து தயாரிக்கப்படும் நிரூஹ பஸ்தி | 11 | 729 |
| அரத்தை, ஆடாதோடை முதலியவை சேர்த்து தயாரிக்கப்படும் நிரூஹ பஸ்தி | 12 | 730 |
| கபநோய்களில் பிரயோகிக்க ஏற்ற நிரூஹ பஸ்தி, பீர்க்கு, சரக்கொன்றை முதலியவை சேர்த்து தயாரிக்கப்படும் நிரூஹ பஸ்தி | 17 | 731 |
| நளினமான உடல் உடையவர்களுக்கு பிரயோகிக்கத் தகுந்த நிரூஹ பஸ்தி முறைகள் | 19 | 732 |
| இரண்டு ப்ருஸ்ருத அளவில் பால் தேன், முதலியவை கலக்கப்பட்ட நிரூஹபஸ்தி (வாத நோய்களில் சிறந்தது) | 21 | 733 |
| எண்ணெய், கள் தெளிவு முதலியவை சேர்த்து தயாரிக்கப்பட்ட நிரூஹம் வாத நோயில் சிறந்தது | 22 | 733 |
| பஞ்சதிக்த நிரூஹம் (அபிஷ்யந்தம் முதலியவற்றில் பிரயோகிக்க ஏற்றது | 23 | 733 |
| எண்ணெய் பசுநீர் முதலியவை சேர்த்து பஸ்தி செய்வித்தல் | 24 | 734 |
| க்ஷீரகாகோலீ, கரும்பு முதலியவை சேர்த்து பஸ்தி செய்வித்தல் | 25 | 735 |
| ஸித்த பஸ்தியின் விளக்கம் | 26 | 735 |
| மாதுதைலிகம் என்ற (தேன், எண்ணெய் முதலியவை கலந்த) நிரூஹ பஸ்தி | 27 | 735 |

| அட்டவணை கல்ப. அத். - 4 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| முற்கூறியவற்றுடன் அதிமதுரம் கலந்து பிரயோகிக்க; கண்களுக்கு நல்லது, ரத்தபித்தம் நீங்கும் | 29 | 736 |
| யாபன பஸ்தி (தேன், எண்ணெய், முதலியவை கலந்தது | 29 | 736 |
| மற்றொரு யாபன பஸ்தி (நெய், தேன் முதலியவை கலந்தது | 30 | 737 |
| யுக்தரத பஸ்தி (ஆமணக்கு வேர்க் கஷாயத்துடன் தேன் முதலியவை கலந்தது | 31 | 737 |
| தோஷஹர பஸ்தி (ஆமணக்கு வேர்க் கஷாயத் துடன் தேன், வசம்பு முதலியவை கலந்தது | 32 | 737 |
| ஸித்தபஸ்தி (பஞ்சமூல கஷாயம், எண்ணெய் முதலியவை கலந்து பிரயோகித்தல் | 33 | 737 |
| கோ மூத்ர பஸ்தி (பசுநீரில் தசமூலம் முதலியவை சேர்த்து பக்குவம் செய்து பிரயோகித்தல்) | 33 | 738 |
| கோ மூத்ர பஸ்தி (பசுநீரில் தசமூலம் முதலியவை சேர்த்து பக்குவம் செய்து பிரயோகித்தல்) | 34 | 738 |
| யாபன ராஜபஸ்தி (கோரை, வட்டத்திருப்பி முதலியவை சேர்க்கப்பட்டது | 37 | 739 |
| ஆண்மையை அதிகரிக்கச் செய்யும் நிரூஹம் (மாம்ஸம், தசமூலம் முதலியனவும், காஸ ஸ்னேஹமும் சேர்ந்தது) | 43 | 741 |
| இறக்கை முதலியவை நீக்கப்பட்ட மயிலையும், சிறுபஞ்சமூலம் முதலியவற்றையும், நீர் கலந்த பாலில் பக்குவம் செய்து பஸ்தி செய்விக்க; பலமும் சுக்ரமும் அதிகரிக்கும் | 45 | 741 |

| அட்டவணை கல்ப. அத். - 4 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| இவ்வாறே தித்திரி முதலியவற்றை உபயோகித்தல் | 47 | 742 |
| மீனுடன் கலந்து பஸ்தி செய்விக்கும் பொழுது பால் சேர்க்கக்கூடாது | 48 | 742 |
| உடும்பு, கீரி முதலியவற்றின் மாம்ஸம், பஞ்சமூலம் இவற்றை பாலில் இட்டு பக்குவம் செய்து பஸ்தி பிரயோகிக்க, இளமையும் ஆண்மையும் உண்டாகும் | 49 | 742 |
| ஆண்மை அதிகரிக்கச் செய்யும் பஸ்தி பிரயோகித்துக் கொள்பவர், பூனைக் கலி, வெண்குன்றி முதலியவை சேர்த்து காய்ச்சிய பாலுடன் உணவு கொள்ளல் | 53 | 744 |
| ஸ்னேஹ பஸ்தியின் லக்ஷணங்கள் | 53 | 744 |
| கட்டுப்பாட்டு நியமமுள்ள ஸ்னேஹ பஸ்திகள் | 54 | 744 |
| தசமூலம், சிற்றாமுட்டி முதலியவை சேர்த்து அனுவாஸனம் செய்தல், வாத நோய்களில் சிறந்தது | 54 | 744 |
| ஆநூபப் பிரணிகளின் மாம்ஸ எண்ணெயுடன் ஜீவனீயகணச் சரக்குகள் சேர்த்து பிரயோகித்தல் | 58 | 745 |
| சதகுப்பை, ஆவில்புங்கு முதலியவை சேர்த்து தைலம் பக்குவம் செய்து பிரயோகித்தல் | 58 | 745 |
| இந்துப்பைப் பழுக்ககாய்ச்சி நெய்யிலிட்டு பிரயோகித்தல் | 59 | 746 |
| கீரிப்பாலை, மருக்காரை முதலியவற்றுடன் தைலமும், நெய்யும் கலந்து பக்குவம் செய்து அனுவாஸனம் செய்தல் | 59 | 746 |

| அட்டவணை கல்ப. அத். - 4 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| இந்துப்பு மருக்காரை முதலியவற்றுடன் ஆமணக்கு எண்ணெய் அல்லது தைலம் கலந்து பக்குவம் செய்து அனுவாஸனம் செய்வித்தல் | 62 | 747 |
| பில்வாதி, பஞ்சமூலம் சேர்த்து காய்ச்சிய தைலத்தை, கப நோயில் அனுவாஸனம் செய்வித்தல் | 66 | 748 |
| (கபத்தை நீக்கும் பொருள்கள்: மருக்காரை யுடன் எட்டுப் பங்கு பால் இவற்றைச் சேர்த்து தைலம் காய்ச்சி) கப நோய்களில் அனுவாஸனம் செய்யலாம். | 67 | 748 |
| மருந்துத் தன்மை காரணமாக பஸ்தி செயலாற்றாவிடில், மீண்டும் தீக்ஷ்ண பஸ்தி பிரயோகித்தல் | 68 | 748 |
| தீக்ஷ்ணமான பஸ்தியால் வயிற்றில் தீங்கு ஏற்படின் நெய்ப்பு, இனிப்பு முதலியவை பொருந்திய மிருது பஸ்தி பிரயோகித்தல் | 68 | 748 |
| பசுநீர் உகாய் முதலிய பஸ்திப் பொருளுக்கு தீக்ஷ்ணத் தன்மை உண்டாக்குதல் | 69 | 748 |
| பால் நெய் முதலியவற்றால் பஸ்திப் பொருளுக்கு மிருதுத்தன்மை உண்டாக்குதல் | 69 | 748 |
| பலம், காலம், நோய் இவற்றிற்கேற்ப பஸ்தி செய்விக்க நோய்கள் நீங்கும் | 70 | 749 |
| உஷ்ணத்தால் பீடிக்கப்பட்டவருக்கு குளிர்ச்சி யாயும், குளிர்ச்சியால் பீடிக்கப்பட்டவருக்கு பொறுக்கும் உஷ்ணமுள்ளதாயும் பஸ்தி பிரயோகித்தல் | 71 | 749 |

சோதன சிகித்ஸைக்கு ஏற்றவர்களுக்கு ப்ரும்ஹணபஸ்தி தவிர்க்கப்படவேண்டும் 72 749

(கொழுப்பு அதிகரித்தவர், குஷ்ட நோயாளி, பிரமிய நோயாளி ஆகியோர்) சோதன சிகித்ஸைக்கு ஏற்றவராவர் 72 749

தாதுக்கள் குறைந்தவர், நெஞ்சுப்புண் உள்ளவர் களுக்கும் சோதனசிகித்ஸை கூடாது 73 750

## அத்தியாயம் -5

நெய்ப்பு சிகித்ஸை செய்து கொள்ளாதவர் முதலியோருக்கு குளிர்ச்சியாவதும், நெய்ப்புப் பொருள் முதலியவை குறைவாக சேர்க்கப்பட்டதுமான நிரூஹ பஸ்தி பலனளிக்காமை 1 751

இதன் காரணமாக வாயுத் தடைப்படுதல் முதலியன 2 751

நடுத்தர தோஷமுள்ள அதிசால நோயாளிக்கு கஷாயம் பருகுதல் முதலியன ஏற்றவை 4 752

பில்வவேர், சிவதை முதலியவை, மதுவகை, சிறுநீர், முற்கூறிய கல்க்கம் இவற்றைக் கலந்து பஸ்தி பிரயோகித்து உள் தங்கிய நிரூஹப் பஸ்திப் பொருளை வெளியேற்றல் 5 752

தோஷம் மிகுந்தவர் முதலியோர்க்கு குறைந்த வீர்யமுள்ள நிரூஹ பஸ்தி செய்வித்ததால், வாயு தடைப்பட்டு பொருமல் முதலிய வற்றை உண்டாக்குதல் 6 753

| அட்டவணை கல்ப. அத். - 5 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| இந்நிலையில் அப்யங்கம், வியர்ப்பித்தல், பலவர்த்தி, நிரூஹம், அனுவாஸனம் ஆகியவை ஏற்றவை | 9 | 753 |
| (வேகத்தை அடக்குபவருக்கு பிரயோகிக்கப் பட்டது முதலியவை காரணங்களால்) நிரூஹ பஸ்திப் பொருள் மேல் முகமாக வெளியேறுதலும் மூர்ச்சை முதலியவை உண்டாதலும் | 10 | 754 |
| மூர்ச்சை உண்டான நிலையில் செய்ய வேண்டிய சிகித்ஸை | 12 | 754 |
| பஸ்திப்பொருள் பக்குவாஸயத்தில் தங்கி யிருப்பின் செய்ய வேண்டியது | 18 | 755 |
| பஸ்திப்பொருள் மார்பு முதலியவற்றில் இருந்தால் செய்யவேண்டியது | 18 | 755 |
| பஸ்தி அதியோக லக்ஷணம்: இவற்றில் அதிக விரேசனத்துக்குக் கூறிய சிகித்ஸை செய்தல் | 23 | 757 |
| நிரூஹபஸ்தியின் அதியோகங் காரணமாக வயிற்று வலியும் அதிவிரேசனக் குறிக்கும் உண்டாதல் | 23 | 757 |
| இந்த நிலையில் அதிக விரேசனத்திற்குக் கூறிய சிகித்ஸை செய்தல் | 23 | 758 |
| க்ஷாரம் முதலியவை காரணமாக நிரூஹ பஸ்தி குதத்தில் எரிச்சலை உண்டாக்கு வதுடன், கசிவு முதலியவற்றை உண்டாக்குதல். இந்த நிலையில் ஏற்ற சிகித்ஸை | 23 | 758 |

| அட்டவணை கல்ப. அத். - 5 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| முறை கேடான அனுவாஸனத்தால் உண்டாகும் கேடு | 28 | 759 |
| அனுவாஸன பஸ்திப் பொருள் வெளியேறா மலிருப்பதன் காரணம் (வாயு அதிகரித்த நில குளிர்ச்சி பொருந்தியதாக அனுவாஸனம் செய்தல் முதலியன) | 29 | 759 |
| தம்பிதம், தொடை ஓய்ச்சல் முதலியவற்றால் நெய்ப்புப் பொருள் வாயுவால் தடைப் பட்டிருப்பதை அறிதலும் அடுத்துச் செய்யவேண்டிய சிகித்ஸையும் | 30 | 760 |
| விடாய் முதலியவற்றால் நெய்ப்புப் பொருள் பித்தத்தால் சூழப்பட்டிருப்பதை அறிதலும் அதற்கு ஏற்ற சிகித்ஸையும் | 33 | 761 |
| சோம்பல் முதலியவற்றால் நெய்ப்புப் பொருள் கபத்தால் சூழப்பட்டிருப்பதை அறிதலும் அதற்கு சிகித்ஸையும் | 34 | 761 |
| வாந்தி முதலியவற்றால், நெய்ப்புப் பொருள் உணவால் சூழப்பட்டிருப்பதை அறிதலும் அதற்கு ஏற்ற சிகித்ஸையும் | 36 | 762 |
| மலத்தடை முதலியவற்றால் நெய்ப்புப் பொருள் மலத்தால் சூழப்பட்டிருப்பதை அறிதலும், அவற்றிக்கு சிகித்ஸையும் | 38 | 763 |
| உணவு உட்கொள்ளாத நிலை முதலியவற்றில் பிரயோகிக்கப்பட்ட அனுவாஸன பஸ்தி மேல் முகமாக வெளியேற்றுதலும், இந்த நிலையில் ஏற்ற சிகித்ஸையும் | 40 | 764 |

பக்குவம் செய்யப்படாத நெய்ப்புப் பொருளை பஸ்தி செய்விப்பதால் உண்டாகும் தீங்கும் அதற்கு சிகித்ஸையும் 44 764

அனுவாஸன பஸ்திப்பொருளுடன் வாயு உட்சென்ற நிலையில் உண்டாகும் தீங்கும் அதற்கு சிகித்ஸையும் 45 765

பஸ்தி நேத்ரம் விரைவாகச் செலுத்தப்படுதல் முதலியவற்றால் உண்டாகும் தீங்கும் அதற்கு சிகித்ஸையும் 47 766

அனுவாஸன பஸ்திப் பொருளை உட்செலுத்தும் பொழுது இடையில் நிறுத்தப்படுவதால் உண்டாகும் தீங்கும் அதற்கு சிகித்ஸையும் 48 766

அனுவாஸன பஸ்திப் பொருளை வேகமாக அழுத்திச் செலுத்துவதால் உண்டாகும் தீங்கும் அதற்கு சிகித்ஸையும் 50 767

வமனம் முதலிய சோதன சிகித்ஸை செய்து கொண்டவரை கவனமாகப் பாதுகாத்தல் 51 767

சோதன சிகித்ஸை செய்து கொண்டவருக்கு இனிப்புப் பொருள், இருதயத்துக்கு ஏற்ற பொருள் முதலியவற்றைக் கொடுத்தல் 52 767

## அத்தியாயம் - 6

வறண்டபிரதேசம் முதலிய இடங்களிலிருந்து மூலிகைகளைச் சேர்த்தல் 1 769

மயானம் முதலிய இடங்களிலிருந்து மூலிகைகளை சேகரிப்பதைத் தவிர்த்தல் 1 769

| அட்டவணை கல்ப. அத். - 6 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| மிருதுவான பிரதேசம் முதலியவற்றிலிருந்து மூலிகைகளைச் சேகரித்தல் முதலியன | 2 | 769 |
| சேகரித்த மூலிகைகளை பாதுகாத்து, காலத்தில் உபயோகித்தல் | 5 | 770 |
| பசுமையாகக் கிடைக்காவிடில் ஒரு வருடத் துக்குள் சேகரிக்கப்பட்டதை உபயோகித்தல் | 6 | 770 |
| விதி விலக்கு (வெல்லம் நெய் முதலிய வற்றை ஒரு வருடம் கடந்ததாயினும் உபயோகித்தல்) | 6 | 770 |
| முதிய கன்றையுடைய பசுவின் பால் ஏற்றது | 7 | 770 |
| நோயற்ற பிராணிகளின் மலம் முதலிய வற்றை சேகரித்தல் | 7 | 770 |
| உவர்ப்பு நீங்கலாக உள்ள மற்ற சுவையுள்ள பொருள்கள் கஷாய கல்பனைக்கு ஏற்றவை | 8 | 771 |
| கஷாய வகைகள் | 8 | 771 |
| ஸ்வரஸம் சாறு | 9 | 772 |
| கல்கமும், சூர்ணமும் | 10 | 772 |
| குவாதம் | 10 | 773 |
| சீதகஷாயம் | 10 | 773 |
| பாண்டம் | 11 | 774 |
| வியாதி கோஷ்டம் முதலியவற்றிற்கேற்ப கஷாயம் முதலிய கல்பனைகளையும் மருந்தின் அளவையும் தீர்மானித்தல் | 11 | 774 |
| ஸ்வரஸ உபயோகத்தின் நடுத்தர அளவு | 13 | 774 |

| அட்டவணை கல்ப. அத். - 6 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கல்க்கம்-சூர்ணம் ஆகியவற்றின் உபயோகத்தில் நடுத்தர அளவு | 13 | 775 |
| குவாத உபயோகத்தில் நடுத்தர அளவு | 14 | 775 |
| பாண்ட கஷாய உபயோகத்தில் நடுத்தர அளவு | 14 | 775 |
| நெய்ப்புப் பொருள் பக்குவமுறையில் கல்க்கம், ஸ்னேஹம், திரவம் முதலியவற்றிக்கு அளவு கூறப்படாவிடில் இவற்றை அடுத்தடுத்து 4 மடங்கு அளவில் சேர்த்தல் | 15 | 775 |
| நீர் முதலியவை சேர்த்து நெய்ப்புப்பொருள் பக்குவம் செய்யும் பொழுது கல்க்கப் பிரயோக அளவில் சௌனகரின் மதம் | 15 | 776 |
| நெய்ப்புப்பொருள் பக்குவ முறையில் சம அளவில் திரவத்தை சேர்க்க வேண்டியவை | 17 | 776 |
| நெய்ப்புப் பொருள் பக்குவமடைந்த நிலையில் காணப்படும் குறிகள் | 17 | 776 |
| லேஹம் பக்குவமான நிலையில் குறிகள் | 19 | 777 |
| நெய்ப்புப் பொருள்களின் மூவகைப் பாகம் (மந்தபாகம், சிக்கனபாகம், கரசிக்கணபாகம்) | 19 | 777 |
| நசியமிட; மிருதுபாகமுள்ள நெய்ப்புப் பொருள் ஏற்றது அப்யங்கத்திற்கு கரசிக்கன பாகமுள்ள நெய்ப்புப் பொருள் ஏற்றது. பஸ்தி செய்விக்க சிக்கன பாகமுள்ள நெய்ப்புப் பொருள் ஏற்றது | 21 | 778 |
| சாணம் முதலிய அளவு முறைகள் | 22 | 778 |

| அட்டவணை கல்ப. அத். - 6 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| இரட்டித்தல் பரிபாஷை பசுமையான மூலிகைகளையும் குடவம் முதலிய பெயர்களில், அளவு கூறப்பட்ட பொருள் களையும் (குறிப்பிட்ட அளவுக்கு) இருமடங்கு சேர்த்தல் | 23 | 778 |
| நெய்ப்புப்பொருள் பக்குவமுறைகள் திரவப் பொருள் கூறப்படாத இடங்களில் அரைத்தல் முதலியவற்றிக்கு நீரை உபயோகித்தல் | 23 | 779 |
| நெய்ப்புப்பொருள் பக்குவ முறையில் அளவு கூறப்படாத இடங்களில் சம அளவு எனக்கொள்ளல் | 24 | 779 |
| நெய்ப்புப்பொருள் பக்குவ முறையில் உபயோக முறை கூறப்படாத இடங்களில் கல்க்கமாக்கிச் சேர்த்தல் | 24 | 779 |
| ஓஷதியின் பகுதி கூறப்படாத இடத்தில் வேரைக் கொள்ளுதல் | 25 | 779 |
| வேரை உபயோகிப்பது பழக்கமில்லாவிடில் உலக வழக்கத்தை ஒட்டி உபயோகித்தல் | 25 | 779 |
| அளவு விபரம் | 25 | 780 |
| இமயமலையில் உண்டான மூலிகைகள் | | |
| சீதவீர்யமுள்ளவை | 29 | 780 |
| விந்திய மலையில் உண்டான மூலிகைகள் உஷ்ணவீர்யமுள்ளவை | 29 | 782 |


★★★★★

## ABOUT THIS BOOK

Ayurveda, reveals to us a glimpse of pristine glory of India in the field of Medicine. Vāgbhata's Aṣṭāñga Hṛdaya - quintessence of the eight branches (of Ayurveda) is one of the authoritative treatises on ancient Indian Medicine. This Sanskrit work has been translated in many Indian languages. In 1935, this work was translated into Tamil by the great Scholar Sri Doraisamy Iyengar without Sanskrit slokas.

This book will fulfill a need long felt by the students of Ayurveda by giving the original Sanskrit verse and its Tamil translation with notes, references and illustrations wherever necessary.

The present work will prove useful not only for students and teachers, but also for all those who want to be acquainted with principles and practice of Ayurveda.

**CENTRAL COUNCIL FOR RESEARCH IN AYURVEDA AND SIDDHA**

(Dept. of ISM & H) Ministry of Health & Family Welfare

(Govt. of India) New Delhi.